# பாரதி நூல்கள்

## நான்காம் பகுதி

### வசனம்

(அரசியல்)

சி. சுப்பிரமணிய பாரதி

©
தமிழ்நாடு அரசாங்கம்
1963

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூட மேற்பார்வையாளரால்
அச்சிடப்பட்டது.
1963

[விலை ரூ. 5

# முன்னுரை

பாரதியார் வசனத்தின் நான்காவது பகுதியை அரசியல் என்ற தலைப்பில் வெளியிடுகிறோம். மகாகவி பாரதியார் அவ்வப்போது பத்திரிகைக்கு எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இது. எனவே அரசியல் அல்லாத ஏனைய கருத்துக்களையும் இங்கு ஓரளவு காணலாம். ‘தராசு’, ‘சித்தக்கடல்’, என்பவற்றையும் இறுதியில் இத் தொகுப்பில் சேர்த்திருக்கிறோம்.

# உள்ளுறை

**அரசியல்**

பக்கம்

செல்வம் 1 .. .. .. .. 1

செல்வம் 2 .. .. .. .. 4

தொழிலாளர் .. .. .. .. 18

குணமது கைவிடேல் .. .. .. 29

தொழிற் கக்ஷியின் உதவி .. .. .. 32

* தெலுங்க மஹாசபை .. .. .. 34

தமிழ் .. .. .. .. .. 38

* சிறிதும் பெரிதும் .. .. .. .. 40

* ஜப்பானுடைய ஆவி .. .. .. 68

*ஸ்வராஜ்யம் .. .. .. .. 91

* நேசக் கக்ஷியாரின் மூடபக்தி .. .. 94

* பூகோள மஹாயுத்தம் .. .. .. 98

பொழுது போக்கு.. .. .. .. 101

ரங்கூன் ஸர்வகலா ஸங்க பஹிஷ்காரம் .. 104

சென்னை வாசிகளின் நிதானமும் விபின சந்திர பாலரின் சந்நிதானமும்.. .. .. 107

கிச்சடி .. .. .. .. .. 108

உல்லாச சபை .. .. .. .. 111

*இக்குறியுள்ளவை திரு. பெ. தூரன் அவர்கள் தொகுத்த "பாரதி தமிழ்" எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.

பக்கம்

| | |
|---|---|
| திருவல்லிக்கேணி சுதேசிய கிருஹியம் .. | 115 |
| * வந்தேமாதரம் .. .. .. .. | 116 |
| * ஐர்லாந்துக்கு ஸ்வதந்த்ரம் கொடுக்கமாட்டோம் | 117 |
| * ஐர்லாந்தும் இந்தியாவும் .. .. .. | 123 |
| * சுதேசமித்திரன் பத்திரிகையும் தமிழ்நாடும் .. | 126 |
| சுய ஆட்சியைப்பற்றி ஒரு யோசனை .. .. | 129 |
| * ஒரு கோடி ரூபாய் .. .. .. | 129 |
| * விடுதலை .. .. .. .. | 132 |
| குழு .. .. .. .. .. | 135 |
| நகரம் .. .. .. .. .. | 135 |
| * தாதாபாய் நௌரோஜி .. .. .. | 137 |
| குடிப்பாங்கு .. .. .. .. | 140 |
| * சோவியத் ருஷ்யாவில் பணம் தொலைந்தது .. | 142 |
| * ராஜாங்கப் பணம் தொலைதல் கமிஷன் .. | 142 |
| * ஆரம்பங்கள் .. .. .. .. | 143 |
| * ஸெண்ட் நிஹல்ஸிங் சொல்வது .. .. | 144 |
| * எளிதாக ஸம்ஸ்க்ருதம் படிக்கும் வழி .. | 145 |
| * ரஸத் திரட்டு .. .. .. .. | 146 |
| * குறிப்புகள் .. .. .. .. | 157 |
| * ஹாஸ்யம் .. .. .. .. | 160 |
| * சில குறிப்புகள் .. .. .. .. | 164 |
| * மணித்திரள் .. .. — .. | 168 |
| * தீப்பொறிகள் .. .. .. .. | 172 |

| | பக்கம் |
|---|---|
| * புதுமைகள் .. .. .. .. | 176 |
| * ஷை .. .. .. .. | 181 |
| * உலக நிலை .. .. .. .. | 185 |
| * கால விளக்கு .. .. .. .. | 188 |
| விநோதத் திரட்டு .. .. .. | 191 |
| * கிரேக்க தேசத்தின் ஸ்திதி .. .. | 197 |
| * விநோதக் கொத்து .. .. .. | 199 |
| * விநோத விஷயங்கள் .. .. .. | 206 |
| * உலக விநோதங்கள் .. .. .. | 211 |
| பருந்துப் பார்வை.. .. .. .. | 221 |

கலை

| | |
|---|---|
| பெண்ணின் பாட்டு .. .. .. | 223 |
| ஸங்கீத விஷயம் .. .. .. .. | 227 |
| ஷை .. .. .. .. | 238 |
| அபிநயம்.. .. .. .. .. | 240 |
| * உள்ளருத்த கலை விளக்கம்.. .. .. | 244 |
| இந்தியப் பத்திரிகைத் தலையங்கம் .. .. | 246 |
| விண்ணப்பம் .. .. .. .. | 248 |
| * தமிழ்நாட்டில் நாடகம் .. .. .. | 249 |
| பெண்.. .. .. .. .. | 251 |
| ஷை .. .. .. .. | 255 |
| தமிழ் நாட்டின் விழிப்பு .. .. .. | 261 |
| பதிவிரதை .. .. .. . | 264 |

| | பக்கம் |
|---|---|
| பெண் விடுதலை (1) .. .. .. | 267 |
| ஷை (2) .. .. .. | 271 |
| தமிழ்நாட்டு மாதருக்கு .. .. .. | 279 |
| தமிழ்நாட்டு நாகரீகம் .. .. .. | 291 |
| பெண்கள் ஸம்பாஷணைக் கூட்டம் .. .. | 299 |
| சியூசீன் என்ற சீனத்து ஸ்திரீயின் கதை .. | 301 |
| பெண் விடுதலை (3) .. .. .. | 306 |
| திருவிளக்கு .. .. .. .. | 307 |
| ரெயில்வேஸ்தானம் .. .. .. | 309 |
| நவீன ருஷ்யாவில் விவாக விதிகள்.. .. | 320 |
| தென் ஆப்பிரிக்காவில் பெண்கள் விடுதலை .. | 323 |
| இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமான நிலைமை .. .. .. .. | 325 |
| ஸ்வர்ணகுமாரி .. .. .. .. | 328 |
| தராசு .. .. .. .. .. | 338 |
| சித்தக்கடல் .. .. .. .. | 387 |

# அரசியல்

## செல்வம் (1)

ருஷ்யாவில் 'சோஷலிஸ்ட்' கட்சியார் ஏறக்குறைய தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றிவிடக்கூடுமென்று தோன்றுகிறது. சோஷலிஸ்ட் கட்சியென்பதைத் தமிழில் ஸமத்துவக்கட்டு என்று சொல்லலாம். அதுகூடச் சரியான மொழிபெயர்ப்பாகாது. சொத்து விபாகம் செய்திருப்பதில், இப்போது சிலர் செல்வரென்றும் பலர் ஏழைகளென்றும் ஏற்பட்டிருப்பதை மாற்றி, உலகத்திலுள்ள சொத்தை அதாவது பூமியை உலகத்து ஜனங்களுக்கு ஸமமாகப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும் என்பதும், தொழில் விஷயத்தில் இப்போது போட்டிமுறை இருப்பதை மாற்றிக் கூடியுழைக்கும் முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதும் மேற்படி கட்சியாருடைய முக்கியமான கோட்பாடு. ஆதலால் இந்தக் கட்சிக்கு ஐக்கியக் கட்சி என்று பெயர் சொல்வது பொருந்தும் என்று தோன்றுகிறது. இதை "அபேதக் கட்சி" என்று சொல்வாருமுளர்.

இந்தக் கட்சி இந்தியாவில் என் இதுவரை ஏற்பட்டு விருத்தியடையவில்லை என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். முதலாவது காரணம் ஹிந்து ஜன ஸமூக அமைப்பில் ஐரோப்பாவில் இருப்பதுபோலே அத்தனை அதிகமான தாரதம்மியம் இல்லை. முதலாளி, தொழிலாளி, செல்வன், ஏழை இவர்களுக்கிடையே ஐரோப்பாவில் உள்ள பிரிவும் விரோதமும் நம் தேசத்தில் இல்லை. ஏழைகளை அங்குள்ள செல்வர் அவமதிப்பதுபோலே நமது நாட்டுச் செல்வர் அவமதிப்பது கிடையாது. ஏழைகளுக்குத் தானம் கொடுப்பது என்ற வழக்கம் நமது தேசத்தில் இருக்குமளவு அந்தக் கண்டத்தில் கிடையாது. லண்டன் நகரத்தில் பிச்சைக்காரனைப் போலீஸ்காரன் பிடித்துக்கொண்டு போவான். பிச்சைக் குற்றத்திற்காக மாஜிஸ்டிரேட் தண்டனை விதிப்பார். நமது தேசத்தில் 'தேஹி' என்று கேட்டவனுக்கு 'நாஸ்தி' என்று சொல்லுகிறவனை எல்லோரும் சண்டாளன் என்று தூஷிப்பார்கள்.

இங்கிலீஷ் நாகரீகம் நமது தேசத்தில் நுழையத் தொடங்கியதிலிருந்து, இங்கும் சில மூடர் பிச்சைக்காரரை வேட்டையாடுவது புத்திகூர்மைக்கு அடையாளமென்று

நினைக்கிறார்கள். பிச்சைக்காரன் வந்தால் "எண்டா தடி போலிருக்கிறாயே! பிச்சை கேட்க ஏன் வந்தாய்? உழைத்து ஜீவனம் பண்ணு" என்று வைது துரத்துவார்கள். "உழைத்து ஜீவனம் பண்ணு" என்று வாயினால் சொல்லி விடுதல் எளிது. உழைக்கத் தயாராக இருந்தாலும், வேலை அகப்படாமல் எத்தனை லக்ஷலக்ஷம் பேர் கஷ்டப்படுகிறார்கள் என்ற விஷயம் மேற்படி நாகரீக வேட்டை நாய்களுக்குத் தெரியாது.

சோம்பேறியாக இருப்பது குற்றந்தான். பிச்சைக்கு வருவோரில் பலர் மிகவும் கெட்ட சோம்பேறிகள் என்பதும் உண்மைதான். இதையெல்லாம் நான் மறுக்கவில்லை. ஆனாலும், பிச்சையென்று கேட்டவனுக்கு ஒரு பிடி அரிசி போடுவதே மேன்மை; வைது துரத்துதல் கீழ்மை. இதில் சந்தேகமில்லை.

சோம்பேறி! பிச்சைக்காரன் மாத்திரம் தானா சோம்பேறி? பணம் வைத்துக்கொண்டு வயிறு நிறையத் தின்று தின்று யாதொரு தொழிலும் செய்யாமல் தூங்குவோரை நாம் சீர்திருத்திவிட்டு அதன் பிறகு ஏழைச் சோம்பேறிகளைச் சீர்திருத்தப் போவது விசேஷம். பொறாமையும், தன் வயிறு நிரப்பிப் பிறவயிற்றைக் கவனியாதிருத்தலும், திருட்டும், கொள்ளையும் அதிகாரமுடையவர்களும் பணக்காரர் களும் அதிகமாகச் செய்கிறார்கள். ஏழைகள் செய்யும் அநியாயம் குறைவு. செல்வர் செய்யும் அநியாயம் அதிகம். இதைக் கருதியே ப்ரூதோம் என்ற பிரஞ்சு தேசத்து வித்து வான் "உடைமையாவது களவு" என்றார்.

ஏழைகளே இல்லாமற் செய்வது உசிதம். ஒரு வயிற்று ஜீவனத்துக்கு வழியில்லாமல் யாருமே இருக்கலாகாது. அறிவுடையவர்கள் இப்போது பெரும்பாலும் அந்த அறிவை ஏழைகளை நசுக்குவதிலும், கொள்ளையிடுவதிலும் உபயோகப் படுத்துகிறார்கள். ஐரோப்பிய யந்திரத் தொழிற்சாலைகள் ஏற்பட்டதிலிருந்து ஏழைகளுக்கு முன்னைக் காட்டிலும் அதிகத் துன்பம் ஏற்பட்டு இருக்கின்றனவேயன்றி ஏழை களின் கஷ்டம் குறையவில்லை.

ஏழைகளைக் கவனியாமல் இருப்பது பெரிய ஆபத்தாக முடியும். கிறிஸ்துவ வேதத்தில் பழைய ஏற்பாட்டில் ஆதியாகமத்தில் முதல் மனிதனாகிய ஆதாம் என்பவனுக்கும்

அவனுடைய பத்தினியாகிய ஏவாளுக்கும் இரண்டு புத்திரர் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது. மூத்த குமாரன் பெயர் காயீன். இளையவன் பெயர் ஆபேல். காயீன் ஆபேலிடம் விரோதமாய் ஆபேலைக் கொன்று விட்டானும். அப்போது கடவுள் காயீனை நோக்கி—"உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே?" என்று கேட்டாராம். அதற்குக் காயீன் "எனக்குத் தெரியாது. சகோதரனுக்கு நான் காவலாளியோ?" என்று னும்.

அதுபோல உலகத்துக்குச் செல்வர் ஸகல ஜனங்களுக்கும் பொதுவாகிய பூமியைத் தங்களுக்குள்ளே பங்கிட்டெடுத்துக் கொண்டு பெரும் பகுதியார் சோறின்றி மாளும்படி விடுகிறார்கள். ஏழைகளைக் காப்பாற்ற வேண்டாமா என்று கேட்டால், "அவர்களுடைய கர்மத்தினால் அவர்கள் ஏழையா யிருக்கிறார்கள். அதற்கு நாங்களா பொறுப்பு? நாங்க ளென்ன ஏழைகளுக்குக் காவலாளிகளா?" என்று கேட்கிறார்கள். உலகம் மாறுகிறது. ஏழைகளுக்கு நியாயம் செய்யவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் பொருளாளிகள் ஒரு சபை கூடி அந்தக் கிராமத்திலுள்ள ஏழைகளின் கஷ்டங்களை...நிவர்த்தி செய்ய யோசனைகள் பண்ணி நிறை வேற்ற வேண்டும். அன்பினால் உலகத்தின் துயரங்களை எளிதாகமாற்றி விடலாம். அங்ஙனம் செய்யாமல் அஜாக் கிரதையாக இருந்தால், ஐரோப்பாவைப் போல் இங்கும், ஏழை செல்வர் என்ற பிரிவு பலமடைந்து விரோதம் முற்றி, அங்கு ஜனக்கட்டுச் சிதறும் நிலைமையிலிருப்பது போல், இங்கும் ஜன ஸமூஹம் சிதறி மஹத்தான விபத்துக்கள் நேரிட இடமுண்டாகும்.

பொருளாளிகள் இடைவிடாத உழைப்பையும், அன்பையும், ஸமத்துவ நினைப்பையும் கைக்கொண்டால், உலகத்தில் அநியாயமாக உத்பாதங்கள் நேரிட்டு உலகை மழியாமல் காப்பாற்ற முடியும். பராசக்தி மனுஷ்ய ஜாதியை அன்பிலும் ஸமத்துவத்திலும் சேர்த்து நலம் செய்க.

# செல்வம் (2)

"பணமில்லாதவன் பிணம்" என்று பழமொழி சொல்கிறது. இதன் கருத்தைத்தான் திருவள்ளுவர் வேறொரு வகையில் 'பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை' என்று சொல்லியிருக்கிறார்.

இந்த உலகிலுள்ள எல்லாத் துன்பங்களைக் காட்டிலும் வறுமைத் துன்பம் கொடியது. இவ்வுலகத்தில் எல்லாச் சிறுமைகளைக் காட்டிலும் ஏழ்மையே அதிகச் சிறுமையாவது. "இன்மையின் இன்னாததில்" என்றும் "இல்லானை இல்லாளும் வேண்டாள்; மற்றீன் றெடுத்த தாய் வேண்டாள்; செல்லாதவன்வாயிற் சொல்" என்றும் முன்னோர் சொல்லியிருக்கிறார்கள்.

இங்ஙனமே, ஏழ்மையின் நிகரற்ற இகழ்ச்சியையும், துன்பத்தையும் விளக்குவனவாய்த் தமிழ்ப் பண்டை நூல்களிலும், காவியங்கள் முதலியவற்றிலும் காணப்படும் வசனங்களையும் உதாரணங்களையும் எடுத்துக்காட்ட முயன்றால், அத்தொகுதி ஆயிரம் சுவடிகளுக்கு மேலாய்விடும். இவ்விஷயமாக இதர பாஷைகளிலுள்ள நூல்களிலும் இவ்வாறே செறிந்து கிடக்கும் வாக்கியங்களும் திருஷ்டாந்தங்களும் கணக்கில்லாதனவாம்.

எல்லாத் தேசங்களிலும் எல்லாப் பாஷைகளிலும் அறிஞரெல்லாரும் ஒருங்கே வறுமைதான் எல்லா நரகங்களைக் காட்டிலும் மிகக் கொடிது என்பதை அங்கிகாரம் செய்திருக்கிறார்கள். ஆதலால், இந்த விஷயத்துக்கு நாம் மேற்கோளாதாரங்களை அதிகமாகக் காட்டவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் வறுமை மிகமிகப் பெரிய இகழ்ச்சியும், துன்பமுமாகும் என்பது கற்றோர்க்கு மட்டுமேயல்லாது கல்லாதார்க்கும் நன்கு தெரிந்த விஷயமேயாம்.

எல்லா உயிர்களும் மரணத்துக்கு அஞ்சுகின்றன. ஆனால், வறுமை மரணத்திலும் பெரிய துன்பமென்றுணர்ந்த ஏழைகள் மாத்திரமே "தெய்வமே எனக்கொரு சாவு வராதா" என்று சில சமயங்களில் வேண்டுவது காண்கிறோம்.

இந்த ஏழ்மை இத்தனை கொடிதாக ஏற்பட்ட காரணந் தான் யாதெனில் சொல்லுகிறேன். உணவுதான் ஜீவ ஜந்துக்களின் அவசரங்களனைத்திலும் பெரிய அவசரமானது.

" மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் முயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்துபோம்."

எனவே, இவ்வுலக இன்பங்கள், பெருமைகள் எல்லா வற்றிற்கும் அஸ்திவாரபலம் உணவு. உணவு இல்லாத இடத்தில் அவை நிற்க வழியில்லை. மேலும், வெறுமே உயிர் தரித்திருப்பதற்குக்கூட ஆஹாரம் அவசியமாயிருக் கிறது. சோறில்லாவிட்டால் உயிரில்லை. இது கொண்டே, பெரும்பான்மையோருக்கு அன்றடம் உணவு கிடைக்கு மென்ற உறுதியில்லாமலும், பலருக்கு உணவே கிடையா தென்பது உறுதியாகவும் ஏற்படுத்திவைக்கும் வறுமையை இத்தனை பெரிய கொடும் பகையாகக் கருதி மனிதர்கள் அஞ்சுகின்றனர்.

இந்த விஷயத்தில் மனித ஜாதியாரின் நிலைமை மற்ற மிருகங்கள், பக்ஷிகள் நிலைமையைக் காட்டிலும் அதிகப் பரிதாபகரமாகவும் இழிவாகவும் ஏற்பட்டிருக்கிறது. திருஷ் டாந்தமாக, பன்றி ஜாதி அல்லது நாய் ஜாதியை எடுத்துக் கொள்ளுங்கள். பலஹீனமான நாயொன்று ஏதேனும் ஆஹாரம் தின்றுகொண்டிருக்கும்போது அகஸ்மாத்தாக அங்கே பலசாலி நாயொன்று வருமாயின் அந்தச் சமயத்தில் மாத்திரம் பலமில்லாத நாய் அவ்வுணவைப் பலசாலி நாய்க்குக் கொடுத்துவிட்டுத் தான் ஓடிப்போய்விடும்படி நேரு கிறது. ஆனல், சில சில சமயங்களில் மாத்திரம் இந்த ஸம்பவம் நிகழ்வதல்லாமல், எப்போதுமே (மனித ஜாதியி லிருப்பது போல்) இஃது நியதமாக நடைபெறுவதில்லை.

மேலும், நான்கு பன்றிகள் அல்லது நான்கு நாய்கள் கூடி யாதேனும் ஒரு ஊரில் அல்லது ஒரு காட்டில் கிடைக்கக்கூடிய ஆஹார முழுதும் தங்களுக்கே தஸ்தாவேஜுப்படிச் சொந்தம் என்றும் தங்களாக இஷ்டப்பட்டு தாங்கள் திட்டம் செய்து கொடுக்கும் அளவுப்படிதான் மற்றெல்லாப் பன்றிகள் அல்லது எல்லா நாய்களும் உண்ணக்கூடுமென்றும் விதி போடுகிற வழக்கம் (மனிதருக்குள் இருப்பதுபோல்) அந்த ஜந்துக்களிடையே காணப்படுவதில்லை. சிறு தொகையான

மனிதருக்கு அடுத்தவேளை ஆஹாரம் கிடைப்பது நிச்சயமாக வும் பெருந் தொகையோர்க்கு அடுத்த வேளை சோறு நிச்சய மில்லாமலும் ஏற்பட்டிருக்கும் ஸம்பிரதாயம் மனிதரைத் தவிர வேறெந்த ஜாதி ஜீவர்களிடத்திலும் கிடையாது. "காக முறவு கலந்துண்ணக் கண்டீரே ?"

எனவே, மிகவும் முக்கியமானதும் ஜீவஜாதிகளுக்குப் பரம அவசியமானதுமாகிய இந்த அம்சத்தில், மனிதருடைய நாகரீக நிலை மற்றெல்லா மிருகங்கள், பக்ஷிகள் முதலிய வற்றின் நாகரீக நிலையைக் காட்டிலும் தாழ்வானது என்ப தில் சிறிதேனும் ஸந்தேஹமில்லை. இதில் வேறொரு விஷயம் யாதெனில், மனித ஜாதிக்குள்ளேகூட மற்றெல்லா வகுப்பினரைக் காட்டிலும் ஹிந்துக்கள் அதிக இகழ்ச்சி யடைந்து அதிகப் பரிதாபகரமான ஸ்திதியிலிருக்கிறார்கள்.

முற்காலத்திலே இந்தியா செல்வத்துக்கும், கல்விக்கும், ஞானத்துக்கும், தியானத்துக்கும், பக்திக்கும், வீரத்துக்கும், பராக்கிரமத்துக்கும், சாஸ்திரங்களுக்கும், பலவிதமான கைத் தொழில்களுக்கும் விசேஷ ஸ்தலமாக விளங்கி வந்தது. இக்காலத்திலே, இந்தியா பஞ்சத்துக்கும், பசி மரணத்துக் கும், வறுமைக்கும், சிறுமைக்கும், தொத்து நோய்களுக் கும் சாசுவத ஸ்தலமாயிருக்கிறது. இந்திய தேசத்தார் அழி வுறுவதுபோல் மற்றப்படி பூமண்டல முழுதிலும் எந்த நாட்டிலும் மனிதர் இவ்வாறு வருஷந் தவறாமல் வேறு காரணம் யாதொன்றுமில்லாமல் சுத்தமான பஞ்சங் காரண மாக பதினாயிரம் லக்ஷக் கணக்கில் மடிந்துபோகும் ஆச்சர் யத்தைக் காணமுடியாது. மனித ஜாதியார்களுக்குள்ளேயே இப்படியென்றால், மற்ற மிருகங்கள், பட்சிகள், பூச்சிகள், புழுக்கள் முதலிய ஜந்துக்களுக்குள்ளே ஹிந்துக்களைப்போல் வருஷந் தவறாமல் கூட்டங் கூட்டமாக வெறுமே சுத்தமான பட்டினியால் மடியும் அநியாயம் கிடையாதென்பது சொல்லா மலே விளங்கும்.

இங்ஙனம், மனித ஜாதிக்கே பொது இகழ்ச்சியாகவும், பொதுக் கஷ்டமாகவும், ஹிந்துக்களுக்கு விசேஷ அவமான மாகவும் விசேஷக் கஷ்டமாகவும் மூண்டிருக்கும் இந்த வறுமையாகிய நோய்க்கு ஒரு மருந்து கண்டுபிடித்து அந்த நோயை நீக்கி இந்தியாவிலும் பூமண்டலத்திலும் ஸகல ஜனங்களுக்கும் ஆஹார சம்பந்தமாகப் பயமில்லாதபடி அரை வயிற்றுக் கஞ்சியேனும் நிச்சயமாகக் கிடைப்பதற்கு வழிகள் எவை என்பதைப்பற்றி ஒவ்வொரு புத்திமானும் ஆராய்ச்சி

செய்தல் இவ்வுலகத்திலுள்ள எல்லா அவசரங்களைக்காட்டி லும் பெரிய அவசரமென்று நான் கருதுகிறேன். இந்தக் காரியத்தை நிறைவேற்றுவதற்குரிய ஸாதனங்களாக எனக்குத் தோன்றும் உபாயங்களை எழுதுகிறேன். இவ் விஷயத்தைக் குறித்துத் தமிழ் நாட்டு மக்களின் வேறு பலரும் தத்தமக்குப் புலப்படும் உபாயங்களை நமது "மித்திர" னுக்கெழுதி யனுப்பும்படி வேண்டுகிறேன்.

பூ மண்டலத்தில் அபார நலத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ந்த முக்கியமான கருவிகளில் ஒன்றாக நிற்கும் பெருமை யும் புகழும் 'சுதேசமித்திர'னுக் கெய்துக. மனித ஜாதி முழுமைக்கும் பேரவசியமான இந்த மஹாமஹோபகாரத்தை நடத்துவதற்கு உறுதியான தந்திரங்களைக் காட்டிக்கொடுப்ப தாகிய நிகரற்ற மஹிமை தமிழ்நாட்டு மேதாவிகளுக்கெய்துக.

உலகத்தில் செல்வத்தின் சம்பந்தமான ஏற்றத் தாழ்ச்சி கள் மற்ற எல்லாக் காரணங்களில் ஏற்படும் ஏற்றத் தாழ்வு களைக் காட்டிலும் மிகக் கொடியனவாக மூண்டிருக்கின்றன.

மனுஷ்ய நாகரீகம் தோன்றியகால முதலாக எல்லா ஜனங்களும் ஸமானமாக வாழவேண்டும் என்ற கருத்து ஞானிகளாலும் பண்டிதர்களாலும் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், ஒருவன் மிகவும் பலசாலியாக இருக்கிறான். அவனைப் பலமில்லாதவர்கள் மேன்மை யுடையோனாகக் கருதுகிறார்கள். அவனும் இதில் மகிழ்ச்சி கொண்டவனாய் பலமில்லாதவர்களை வேறு சிருஷ்டியாக நினைத்து மிகவும் இழிவாக நடத்தத் தொடங்குகிறான்.

இங்ஙனமே அழகுடையவன் அழகில்லாதவர்களைத் தாழ் வாக நினைக்கிறான். கல்வியுடையோர் கல்லாத மக்களிடம் வைத்திருக்கும் இகழ்ச்சியோ சொல்லுந் தரமன்று. "விலங்கொடு மக்களனையர் இலங்குநூல் கற்றாரோடேனைய வர்." அதாவது, மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் எத்தகைய பேதமிருக்கிறது, அத்தனை பேதம் கற்றாருக்கும் கல்லாதாருக்கு மிடையே உளது. இந்தக் குறள் கல்விப் பெருமை யுடையோர் அஃதில்லாதாரின் விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தை நன்கு விளக்குகிறது. இங் ஙனமே, பாடத் தெரிந்தவன் அது தெரியாதவரைக் குறை வாக எண்ணி நடத்துகிறான். நெட்டையாக இருப்பவன் குள்ளனைக் குறைந்த ஜாதியாக எண்ணுகிறான். மேற்குலத்திற்

பிறந்தவன் தாழ்ந்த குலத்தானை இகழ்ச்சி செய்கிறான். சுருங்கச் சொல்லுமிடத்தே, யாதேனுமொருவித விசேஷ அநுகூலம் படைத்தோர் அஃது படையாதவரை இழிவாக எண்ணி நடத்துகிறார்கள். இங்ஙனம் கோடிவிதமான காரணங்களை உத்தேசித்து மனிதருக்குள்ளே எண்ணற்ற பேதங்கள் ஏற்பட்டுவிட்டன. இந்தப் பேதங்களால் ஏற்படும் கஷ்டங்களும் மனஸ்தாபங்களும் பொறாமைகளும் கர்வங்களும் போராட்டங்களும் எண்ணற்றனவாகின்றன. இதனால் இவ்வுலகத்தில் மனித வாழ்க்கை நரக வாழ்க்கைபோல தீராத் துன்பமாக முடிந்திருக்கிறது.

ஏனென்றால், ஒருவன் எத்தனை விசேஷ அனுகூலங்கள் படைத்திருந்த போதிலும், ஏதேனும் ஒரு விஷயத்தில் அவன் வேறு சிலருக்குக் குறைந்தவனாகவே இருக்கும்படி இயற்கையமைப்பு இருக்கின்றது.

அளவிறந்த கல்வியுடையவன் கொஞ்சம் குள்ளனாக இருந்தால் போதும். பிடித்தது சனி! நெட்டை மனிதரைக் கண்டு அவன் பொறாமை கொள்வதினின்றும் நெட்டையாட்கள் அவனை இகழ்ச்சி செய்வதினின்றும் அவனுக்குப் பலவித அனர்த்தங்களும் கவலைகளும் ஏற்படுகின்றன. அவன்தான் குள்ளனாகப் பிறந்ததைப் பற்றி ஓயாமல் மனம் நொந்து சாகிறான்.

மிகுந்த செல்வமுடையவன் கொஞ்சம் கருநிறமுடையவனாக இருந்தால் போதும். வந்தது வினை! செந்நிறமுடையவர்களாலே அவனுடைய வாழ்க்கை நரகத்தைப் போல் ஆக்கப்படுகின்றது.

இங்ஙனம் எத்தனையோ பேதங்களால் மனிதனுக்குப் பல தொல்லைகள் விளைகின்றன. எனினும், நான் தொடக்கத்திலே கூறியபடி செல்வத்தால் ஏற்படும் வேற்றுமைகளே சால மிகக்கொடியன. செல்வ முடையவன் செல்வ மில்லாதவரிடத்துக் கொண்டிருக்கும் இகழ்ச்சியும், செல்வமில்லாதவன் செல்வமுடையோரிடத்தே கொண்டிருக்கும் பொறாமையும் வேறெந்த மூகாந்திரத்தைக் கருதியும் மனிதருக்குள்ளே ஏற்படுவதில்லை.

> " கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
> புண்ணுடையர் கல்லாதவர் "

என்று வள்ளுவர் சொல்லியபடி, படித்தவன் படியாதவனை வெறுமே குருடனாகக் கருதி நடத்துகிறான். பணமுடையவனோ பணமில்லாதவனைப் பிணமாக நினைக்கின்றான்.

இதனிடையே மனித ஜாதி நாகரீகத்தில் முற்ற முற்ற, ஸமத்வம் அவசிய மென்ற கொள்கை ஒரு புறத்தே பரவிக் கொண்டே வருகிறது. எத்தனை வேற்றுமைகள் குணத்தாலும் செய்கையாலும் பிறப்பாலும் மற்ற வீண் நியமங்களாலும் மானிடருக்குள் ஏற்பட்டிருந்தபோதிலும், அந்த வேற்றுமைகளை யெல்லாம் புறக்கணித்துவிட்டு எல்லாரும் ஈசனுடைய மக்கள் அல்லது அம்சங்கள் என்ற பரம ஸத்யத்தை மனதில் தரித்து எல்லாரையும் நிகராகப் பாவிக்க வேண்டும் என்ற கருத்து வேதரிஷிகளாலும், கிருஸ்து, புத்தர் முதலிய அவதார புருஷர்களாலும் மனிதருக்கு வற்புறுத்திக் கூறப்பட்டது. அவர்களை ஒட்டி எண்ணிறந்த ஞானிகளும் பண்டிதர்களும் அக் கொள்கையைப் பல வகையாலே பரவச் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள்.

இங்ஙனம், பரமார்த்த ஞான முடையோர். ஆதி காலம் தொட்டு ஸமத்வக் கொள்கையைப் பரப்பி வருதல் ஒரு புறத்தே நிகழவும், சென்ற சில நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் பல வித்வான்கள் தெய்வத்தைப் பற்றி யோசனை செய்யாமல் வெறுமே மானிட வாழ்க்கை ஸுக மாகவும் ஸமாதானமாகவும் நடைபெற வேண்டும் என்கிற லௌகீக காரணத்தைக் கருதி ஸகல ஜனங்களும் ஸமான மாகவே நடத்தப்படவேண்டும் என்கிற கருத்தைப் பிரசாரஞ் செய்துகொண்டு வருகிறார்கள். இக் கொள்கை, நாட்பட நாட்பட, ஐரோப்பாவிலும், அதன் கிளைகளாகிய அமெரிக்கா, ஆஸ்திரேலியாக் கண்டங்களிலும் ஐரோப்பிய நாகரீகத்தை அநுசரிக்க விரும்பும் ஜப்பான் இந்தியா முதலிய தேசங்களிலும் மிக விருத்தியடைந்து வருகிறது.

ஒற்றைக் குடும்பத்தில் ஒரு பிள்ளை புத்திமானாகவும் கல்வி யுடையவனாகவுமிருக்கிறான் ; மற்றொரு பிள்ளை கல்வி யறிவற்ற மூடனாகவே இருக்கிறான். ஒருவன் சிவப்பாக இருக்கிறான்; மற்றொருவன் கருநிறமுடையவனாக இருக்கிறான். ஒருவன் பலசாலியாக இருக்கிறான் ; மற்றொருவன் பலஹீனனாக இருக்கிறான். ஒருவன் தைர்யஸ்தனாக இருக்கிறான் ; மற்றொருவன் கோழையாக இருக்கிறான். ஒருவன் நெட்டை ;

மற்றொருவன் குட்டை. ஒருவன் அழகுடையவன்; மற்றொருவன் முகமெல்லாம் அம்மைத் தழும்புடையவனாய் ஒரு கண் பொட்டையாக இருக்கிறான். எனினும், அறிவுடைய தாய் தந்தையர் இந்த மக்களுக்குள்ளே எவ் விஷயத்திலும் வேற்றுமை பாராட்டாமல் இவர்களை ஸகல விதங்களிலும் ஸமான அன்புடன் நடத்தி வருகிறார்கள்.

அதுபோலவே, மனிதஜாதி முழுவதையும் ஒரே குடும்பமாகக் கருதி மானிடருக்குள்ள இயற்கையாலும் மானிடர் தாமாகவே ஏற்படுத்திக் கொண்ட அர்த்தமில்லாத கட்டுப்பாடுகளாலும் எத்தனை வேறுபாடுகள் காணப்பட்டபோதிலும், இந்த வேறுபாடுகளைக் கருதிச் சிலருக்கு அதிக ஸௌகரியங்களும், பலருக்குக் குறைந்த ஸௌகரியங்களும், சிலருக்கு மதிப்பும், பலருக்கு அவமதிப்பும், சிலருக்கு லாபங்களும், பலருக்கு நஷ்டங்களும் ஏற்படுத்தியிருப்பது தவறு என்பதும், ஒவ்வொருவரும் சகோதரரைப்போல் பரஸ்பர அன்புடனும், மரியாதையுடனும் வாழ்வதே நியாயம் என்பதும், நவீன ஐரோப்பிய ஸித்தாந்தங்களிலே மிகவும் முக்கியமான ஸித்தாந்தமாகும். இந்தக் கொள்கைக்கு எல்லா மதங்களும் சார்பாக இருப்பதை உத்தேசிக்குமிடத்தே, இது நாளடைவில் ஐரோப்பாவில் மாத்திர மன்றி உலக முழுமை பரிபூர்ணமாக வெற்றிபெறும் என்பதில் ஸந்தேகமில்லை.

இந்த ஸித்தாந்தம் பரிபூர்ண ஜயமடைந்து மனிதருக்குள்ளே ஸஹஜ தர்மமாக ஏற்பட்ட பிறகுதான், மானிடர் உண்மையான நாகரீகம் உடையோராவர்.

மேலும், மானிடருக்குள்ளே இயற்கையால் ஏற்பட்டிருக்கும் வர்ண வேற்றுமைகள், உயர வேற்றுமைகள், சரீர பல வேற்றுமைகள் முதலியனவே மாற்ற முடியாதவை. செயற்கையால் உண்டாகிய கல்வி வேற்றுமைகள், செல்வ வேற்றுமைகள், ஜாதி பேதங்கள் முதலியன எளிதாக மாற்றிக்கொள்ளக் கூடியன.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பல தேசங்களிலும் ஏற்கெனவே பிற்கூறிய வேற்றுமைகளை நீக்குவதற்குப் பலயான முயற்சிகள் நடைபெற்றுவந்து நல்லபயன்களும் ஏற்பட்டு விட்டன. எல்லாருக்கும் கல்வி கற்பித்துக்கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் முக்கியமாக வலிமையடைந்து வருகிறது. தேசத்து மக்கள் அத்தனை பேருக்கும் கட்டாயமாகவும் இனமாகவும் கல்வி கற்பித்துக் கொடுக்க முயற்சி

செய்துவருகிறார்கள். இந்த முயற்சி இன்னும் அதிக பலம் அடையும். நாளுக்கு நாள் இந்த முயற்சியில் சக்தியும் வேகமும் அதிகரித்து வருகின்றன. இதனின்றும் இன்னும் முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளில் ஐரோப்பா முழுதும் அந்த முறையைக் கைப்பற்றி நடக்கும். இந்தியா, ஜப்பான் முதலிய தேசங்களிலும் படிப்புத் தெரியாதவர் ஒருவர் கூட இல்லாமற்போய் விடுவார்கள் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஜாதி பேதங்கள் இந்தியாவிலேயே சிதறுண்டு வருகின்றனவெனில் மற்ற நாடுகளைப்பற்றிப் பேசவேண்டியதில்லை.

இதுபோலவே, செல்வத்தைக் குறித்த வேற்றுமைகளையும் இல்லாமற் பண்ணிவிடவேண்டும் என்ற கொள்கையும் உலகத்தில் மிகத் தீவிரமாகப் பரவிவருகிறது. ஐரோப்பாவிலேதான் இந்த முயற்சி வெகு மும்முரமாக நடந்து வருகிறது. ஒரு தேசத்தில் பிறந்த மக்கள் அனைவருக்கும் அந்தத் தேசத்தின் இயற்கைச் செல்வமுழுவதையும் பொது உடைமையாக்கிவிட வெண்டுமென்ற கொள்கைக்கு இங்கிலீஷில் "சோஷலிஸ்ட்" கொள்கையென்று பெயர். அதாவது, "கூட்டுறவுக் கொள்கை." இந்தக் "கூட்டுறவு வாழ்வு"-க் கொள்கை (சோஷலிஸ்ட்) ஐரோப்பாவில் தோன்றியபோது இதை அங்கு முதலாளிகளும் மற்றப்படி பொதுஜனங்களும் மிக ஆத்திரத்துடனும், ஆக்ரஹத்துடனும் எதிர்த்து வந்தார்கள். நாளடைவில் இக்கொள்கையின் நல்லியல்பு அந்தக் கண்டத்தாருக்கு மேன்மேலும் தெளிவுபட்டு வரலாயிற்று. எனவே, இதன்மீது ஜனங்கள் கொண்டிருக்கும் விரோதம் குறைபட்டுக் கொண்டுவரவே, இக்கொள்கை மேன்மேலும் பலமடைந்து வருகிறது. ஏற்கெனவே ருஷ்யாவில் ஸ்ரீமான் லெனின், ஸ்ரீமான் மின்த்ரோத்ஸ்கி முதலியவர்களின் அதிகாரத்தின்கீழ் ஏற்பட்டிருக்கும் குடியரசில் தேசத்து விளைநிலமும் பிறசெல்வங்களும் தேசத்தில் பிறந்த அத்தனை ஜனங்களுக்கும் பொது உடைமையாகிவிட்டன. இக் கொள்கை ஜர்மனியிலும், ஆஸ்திரேலியாவிலும், துருக்கியிலும் அளவற்ற வன்மை கொண்டு வருகிறது. ருஷ்யாவிலிருந்து இது ஆசியாவிலும் தாண்டிவிட்டது. வடஆசியாவில் பிரம்மாண்டமான பகுதியாக நிற்கும் ஸைபீரியா தேசம் ருஷியாவின் ஆதிக்கத்தைச் சேர்ந்ததாதலால், அங்கும் இந்த முறைமை அனுஷ்டானத்திற்கு வந்துவிட்டது. அங்கிருந்து இக் கொள்கை மத்திய ஆசியாவிலும் பரவிவருகிறது. ஐரோப்பாவிலுள்ள பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய வல்லரசுகள் இந்த

முறைமை தம் நாடுகளுக்குள்ளும் பிரவேசித்து வரக்கூடும் என்று பயந்து அதன் பரவுதலைத் தடுக்குமாறு பலவிதங் களில் பிரயத்தனங்கள் புரிந்து வருகிறார்கள்.

ஆனால், இந்த முறைமை போர், கொலை, பலாத்காரங் களின் மூலமாக உலகத்தில் பரவிவருவது எனக்குச் சம்மதம் இல்லை. எந்தக் காரணத்தைக் குறித்தும் மனிதருக்குளளே சண்டைகளும் கொலைகளும் நடக்கக்கூடாதென்பது என்னு டைய கருத்து. அப்படியிருக்க ஸமத்வம், ஸஹோதரத்வம் என்ற தெய்வீக தர்மங்களைக் கொண்டோர், அவற்றைக் குத்து வெட்டு, பீரங்கி துப்பாக்கிகளினால் பரவச்செய்யும்படி முயற்சி செய்தல் மிகவும் பொருந்தாத செய்கையென்று நான் நினைக்கிறேன். பலாத்காரமாக முதலாளிகளின் உடைமைகளையும், நிலஸ்வான்களின் பூமியையும் பிடுங்கி தேசத்திற்குப் பொதுவாகச் செய்யவேண்டும் என்ற கொள்கை ருஷ்யாவில் வெற்றி பெற்றதற்குப் பல பூர்வ காரணங்களிருக்கின்றன. நெடுங்காலமாகவே, ருஷியா தேசத்தில் ஆட்சி புரிவோரின் நிகரற்ற கொடுங்கோன்மை யாலும், அநீதங்களாலும், செல்வர்களின் குரூரத் தன்மை யாலும் பல ராஜாங்கப் புரட்சிகள் நடந்து வந்திருக்கின்றபடி யால், இந்த மாறுதல் அங்கு அமைப்பது ஸுலபமாயிற்று. மற்ற ஐரோப்பிய தேசங்களில் முதலாளிகளும் செல்வர் களும் இன்னும் முற்றிலும் பலஹீனமடைந்து போகவில்லை. பெரும்பாலும் அவர்களிடத்திலேயே எல்லாப் பலங்களும் சக்திகளும் அமைந்திருக்கின்றன. அங்கெல்லாம் 'சோஷ லிஸ்ட்' கூட்டுறவு வாழ்க்கைக் கட்சி ருஷ்யாவிலுள்ள சக்தி யும் பராக்கிரமும் பெற்றுவிடவில்லை. அங்ஙனம் பெறுவதற்கு இன்னும் பல வருஷங்கள் செல்லும் என்றே தோன்று கிறது. தவிரவும், அங்ஙனம் 'சோஷலிஸ்ட்' கட்சியார் பல மடைந்திருந்தபோதிலும், அந்தப் பலத்தை உபயோகிப்பது நியாயமில்லையென்று நான் சொல்லுகிறேன். ஏனென்றால், பிறருடைமையைத் தாம் அபகரித்து வாழவேண்டும் என்கிற கெட்ட எண்ணமுடையவர்களும் ஸர்வ ஜனங்களும் ஸமான ஸௌகர்யங்களுடன் வாழவேண்டும் என்ற கருத்து இல்லாத பாவிகளும் தம்முடைய கொள்ளை விருப்பங்களை நிறை வேற்றும் பொருட்டு, வாள், பீரங்கி, துப்பாக்கிகளால் அநே கரைக் கொலை செய்தும், ஊர்களையும் வீடுகளையும் கொளுத் தியும் அநியாயங்கள் செய்வது நமக்கு அர்த்தமாகக்கூடிய விஷயம். அங்ஙனமின்றி, எல்லா மனிதரும் உடன் பிறந்த

சகோதரரைப்போல் ஆவார்கள் என்றும், ஆதலால் எல்லாரையும் ஸமமாகவும் அன்புடனும் நடத்தவேண்டும் என்றும் கருதுகிற தர்மிஷ்டர்கள் தம்முடைய கருணைதர்மத்தை நிலை நிறுத்த கொலை முதலிய மஹா பாதகங்கள் செய்வது நமக்குச் சிறிதேனும் அர்த்தமாகக் கூடாத விஷயம். கொலையாலும் கொள்ளையாலும், அன்பையும் சமத்துவத்தையும் ஸ்தாபிக்கப்போகிறோம் என்று சொல்வோர் தம்மைத் தாம் உணராத பரம மூடர்கள் என்று நான் கருதுகிறேன். "இதற்கு நாம் என்ன செய்வோம்! கொலையாளிகளை அழிக்கக் கொலையைத் தானே கைக்கொள்ளும்படி நேருகிறது; அநியாயம் செய்வோரை அநியாயத்தாலேதான அடக்கும்படி நேரிடுகிறது" என்று ஸ்ரீமான் லெனின் சொல்லுகிறார். இது முற்றிலும் தவறான கொள்கை. கொலை கொலையை வளர்க்குமே ஒழிய, அதை நீக்க வல்லதாகாது. அநியாயம் அநியாயத்தை விருத்தி பண்ணுமேயொழியக் குறைக்காது. பாபத்தைப் புண்ணியத்தாலேதான் வெல்லவேண்டும். பாபத்தைப் பாபத்தாலே வெல்லுவோம் என்பது அறியாதவர் கொள்கை. அதர்மத்தைத் தர்மத்தால் வெல்ல வேண்டும்; தீமையை நன்மையாலேதான் வெல்ல முடியும். கொலையையும் கொள்ளையையும் அன்பினாலும் ஈகையாலும் தான் மாற்றமுடியும். இதுதான் கடைசிவரைக் கைகூடிவரக்கூடிய மருந்து. மற்றது போலி மருந்து. சிறிதுகாலத்திற்கு நோயை அடக்கிவைக்கும். பிறகு, அந்நோய் முன்னைக்காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிக வலிமையுடையதாய் ஓங்கிவிடும். ஒரு கொலையாளிக் கூட்டம் இன்று தன்னிடமுள்ள சேனை பலத்தாலும், ஆயுத பலத்தாலும் மற்றொரு கொலையாளிக் கூட்டத்தை அடக்கி விடக்கூடும். இதனாலே தோற்ற கூட்டம் நாளைக்குப் பகைம் அதிகப்பட்டு முந்திய கூட்டத்தை வென்றுவிடும். பிறகு, இதைப் பழிவாங்க முயன்று, மற்றது பலவித வேலைகள் செய்து பலமடைந்து இந்தக் கூட்டத்தை அழிக்கும். இது மறுபடி தலைதூக்கி அதை அடக்கும். இங்ஙனம் தலைமுறை தலைமுறையாக இவ்விரண்டு கூட்டங்களும் ஒன்றுக்கொன்று தீமை செய்து கொண்டே வரும். இதற்கு ஓய்வே கிடையாது. தர்மத்தாலும் கருணையாலும் எய்தப்படும் வெற்றியே நிலை பெற்று நிற்கவல்லதாகும். இதனை அறியாதார் உலக சரித்திரத்தையும் இயற்கையின் விதிகளையும் அறியாதார் ஆவர்.

மேலும், ருஷ்யாவிலுங்கூட இப்போது ஏற்பட்டிருக்கும் "ஸோஷலிஸ்ட்" ராஜ்யம் எக்காலமும் நீடித்து நிற்கும் இயல்புடையதென்று கருத வழியில்லை. சமீபத்தில் நடந்த மஹாயுத்தத்தால் ஐரோப்பிய வல்லரசுகள் ஆள்பலமும், பணபலமும், ஆயுதபலமும் ஒரே அடியாகக் குறைந்துபோய் மஹாபலஹீனமான நிலையில் நிற்பதை ஒட்டி மிஸ்டர் லெனின் முதலியோர் ஏற்படுத்தியிருக்கும் "கூட்டு வாழ்க்கை" குடியரசை அழிக்க மனமிருந்தும் வலிமையற்றோராகி நிற்கின்றனர். நாளை இந்த வல்லரசுகள் கொஞ்சம் சக்தி யேறிய மாத்திரத்திலே ருஷ்யாவின் மீது பாய்வார்கள். அங்கு உடைமை இழந்த முதலாளிகளும் நிலஸ்வான்களும் இந்த அரசுகளுக்குத் துணையாக நிற்பர். இதினின்றும் இன்னும் கோரமான யுத்தங்களும் கொலைகளும் கொள்ளை களும் ரத்தப்பிரவாகங்களும் ஏற்பட இடமுண்டாகும். லெனின் வழி சரியான வழியில்லை. முக்கியமாக நாம் இந்தியாவிலே இருக்கிறோமாதலால், இந்தியாவின் ஸாத்யா ஸாத்யங்களைக் கருதியே நாம் யோஜனை செய்யவேண்டும். முதலாவது, இந்தியாவிலுள்ள நிலஸ்வான்களும் முதலாளி களும் ஐரோப்பிய முதலாளிகள் நிலஸ்வான்களைப்போல் ஏழைகளின் விஷயத்தில் அத்தனை அவமதிப்பும், குரூர சித்தமும் பூண்டோரல்லர். இவர்களுடைய உடைமைகளைப் பிடுங்கவேண்டுமென்றால் நியாயமாகாது. அதற்கு நம் தேசத்திலுள்ள ஏழைகள் அதிகமாக விரும்பவும் மாட்டார் கள். எனவே, கொள்ளைகளும் கொலைகளும் சண்டைகளும் பலாத்காரங்களுமில்லாமல் ஏழைகளுடைய பசி தீர்ப்பதற் குரிய வழியைத்தான் நாம் தேடிக் கண்டுபிடித்து அனுஷ் டிக்க முயலவேண்டும். செல்வர்களுடைய உடைமைகளைப் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ள முயலுதல் இந்நாட்டிலே, நான் மேற்கூறியபடி பொருந்தவும் செய்யாது, ஸாத்திய மும் இல்லை.

ஆனால், கோடிக்கணக்கான ஜனங்கள் வயிறு நிறைய உணவு கிடைக்குமென்ற நிச்சயமில்லாமலும், லக்ஷக்கணக் கான ஜனங்கள் ஒருவேளைக் கஞ்சி கிடைக்காமலே சுத்தப் பட்டினியால் கோரமரண மெய்தும்படியாகவும் நேர்ந்திருக் கும் தற்கால நிலைமையை நாம் ஒருக்ஷணங்கூடச் சகித்திருப் பது நியாயமில்லை என்பது சொல்லாமலே போதரும்.

எனவே, உலகத் துன்பங்கள் அனைத்திலும் கொடிதான இந்த ஏழ்மைத் துன்பத்தை ஸமாதான நெறியாலும் மாற்றக்கூடிய உபாயமொன்றை நாம் கண்டு பிடித்து நடத்து

வோமானுல், அதினின்றும் நமது நாடு பயனுறுவது மட்டுமே யன்றி, உலகத்தாரெல்லாரும் நம்முடைய வழியை அனுஷ்டித்து நன்மை அடைவார்கள்.

'அப்படிப்பட்ட உபாயமொன்று கிடைக்குமா' என்பதைப் பற்றி இங்கே ஆராய்ச்சி செய்வோம்.

ஜனங்களுக்குள்ளே கலகங்களும் யுத்தங்களும் கொலைச் செயல்களும் நேரிடாத வண்ணம் ஸமாதான நெறியிலே உலகத்தின் ஏழ்மையைத் தொலைப்பதற்குத் தகுந்த உபாயமாக எனக்குத் தோன்றுவதை இங்குத் தெரிவிக்கிறேன்.

உலகம் தேசங்களால் அமைக்கப்பட்டது. தேசம் மாகாணங்களின் தொகுதியாம். மாகாணங்கள் ஜில்லாக்களின் சேர்க்கையாகும். ஜில்லா ஒரு சில நகரங்களும் பெரும்பான்மைக் கிராமங்களும் கூடிய தொகுதியாகும். எனவே, ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு அதில் வறுமையே இல்லாமல் செய்வதற்குரிய வழி கண்டு பிடிப்போமாயின், பிறகு அந்த உபாயமே பூமண்டலத்தின் வறுமையைத் தொலைப்பதற்குப் பொருந்தியதாய் விடுமென்பது சொல்லாமலே விளங்கும். திருஷ்டாந்தமாக, நான் இப்பொழுது வாசம் புரிந்து வரும் கடையம் கிராமத்தை எடுத்துக்கொள்வோம். இவ்வூரைச் சூழ்ந்திருக்கும் வயல்களெல்லாம் சுமார் 30 பெரிய மிராசுதார்களுக்கும் பல சில்லரை நிலஸ்வான்களுக்கும் உரியன.

இந்த நிலஸ்வான்கள் எல்லாரும் சேர்ந்த ஒரு ஸபை அமைக்கப்பட வேண்டும். இந்த ஸபையார் கோயில் வாயிலிலே கூட்டம் கூடியிருந்துகொண்டு ஊர் ஜனங்கள் அத்தனை பேரையும் பறை சாற்றுவித்துத் தம் முன்னே வரவழைக்கவேண்டும். அப்போது, நிலஸ்வான்கள் எல்லாருடைய ஸம்மதப்படி, அவர்களின் பிரதிநிதியாகிய ஒருவர் எழுந்து நின்று கிராமத்தாரிடம் பின்வருமாறு பிரமாணம் செய்து கொடுக்கவேண்டும்.

எப்படி என்றுல் :—

"கஞ்சியாவது கிடைத்து வருகிறதெனினும் அது நியாயமாக எப்போதும் கிடைத்துவரும் என்ற நிச்சயம் இல்லாதபடியால் நீங்கள் எண்ணில்லாத மனக் கவலைகளுக்கும், மனஸ்தாபங்களுக்கும், பொறாமைகளுக்கும், வஞ்சனை

களுக்கும், ஏமாற்றங்களுக்கும், கலகங்களுக்கும் இரையாகி மடிகிறீர்கள். "அன்ன விசாரம் அதுவே விசாரம்" என்று பட்டினத்துப் பிள்ளை சொல்லியதுபோல், உங்களுக்கு இந்த ஆகார விசாரம் தீராத பெரு விசாரமாக வந்து மூண்டிருக்கிறது. நியாயமான உழைப்பாலோ அல்லது ப்ரூதோம் என்ற பிரான்ஸ் தேசத்து சாஸ்திரி, "உடைமையாவது களவு" என்று சொல்லியபடி வஞ்சனைத் தொழில்களாலோ, இந்த ஊரிலுள்ள வயல்கள், தோட்டங்கள் எல்லாவற்றையும் எங்கள் சிலருக்கு மாத்திரம் உரிமையாகும்படி ஏற்பாடு செய்து விட்டார்கள். பூஸ்திதி எங்களிடம் இருப்பது எங்களுடைய குற்றமாகமாட்டாது. எனினும், உங்களுடைய ஒத்துழைப்பும், ஆதரவும், ஸ்நேஹமும் இல்லாவிட்டால் எங்களுக்கு இந்த நிலங்கள் எவ்விதமான பயனும் தரமாட்டா. மேலும் நீங்கள் அத்தனை பேரும் ஆகார விஷயத்தில் ஒருவித நிச்சயமில்லாமையால் படும் கஷ்டங்களும் அதினின்றும் உங்களுக்குள் ஏற்படும் போராட்டங்களும் எங்களையும் சூழ்ந்து தீராத துன்பத்துக்கு உள்ளாக்குகின்றன. நாங்கள் பொருளுடைமை விஷயத்தில் மாத்திரம் உங்களினின்றும் வேறுபட்டிருப்பினும், மற்றெல்லா அம்சங்களிலும் உங்களைப் போன்ற மனிதர்களே ; ஆதலாலும், உங்களுடனே எப்போதும் ஊடாடிப் பழகுவதும் விவஹரிப்பதும் எங்களுக்கு மிகவும் இன்றியமையாததாலும், நீங்கள் தீராத வறுமை நரகத்தில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கையில் நாங்கள் மாத்திரம் சந்தோஷமாக இருத்தல் சாத்தியப்படவில்லை. எங்களுடைய காரியங்களெல்லாம் உங்களாலே ஆகவேண்டியிருக்கிறது. எங்களுக்கு உங்களைத் தவிர வேறு கதியில்லை. உங்களுடைய வறுமை தீர எங்களை நானுவிதங்களிலும் சாபம் போல எரிக்கிறது. எங்களுக்குள் சிறிதேனும் ஒற்றுமையில்லாமல் செய்துவருகிறது. எங்களுக்குள் மேன் மேலும் பொறாமையை வளர்க்கிறது. பூமி எல்லோருக்கும் பொதுவான தாய் போலாகும். அதில், நாங்கள் மாத்திரம் உரிமை கொண்டாடுதல் அநியாயம் என்று எங்களுக்கு அர்த்தமாகின்றது. அதினின்றும், பூர்வீக காலம் முதல் பரம்பரை பரம்பரையாக வழங்கிவரும் சொத்தை, ருஷ்யா முதலிய தேசங்களில் நடப்பதுபோல், நீங்கள் பலாத்காரமாக எங்களைக் கொன்றும் சிறையிலிட்டும் எங்களிடமிருந்து பறித்துக் கொள்வது நியாயம் இல்லை. ஏனென்றால், உடைமை பொது நாகரீகத்திற்கு ஹேதுவாகும். எந்தக் காரணம் பற்றியும் கொள்ளையிடுவது சரியில்லை. நிலமில்

லாத நீங்கள் எங்களுடைய நிலத்தைக் கொள்ளையிட்டுப் பறித்துக்கொள்ளலாமெனில், துணியில்லாதவர்கள் உங்களுடைய துணிகளைப் பறித்துக்கொள்ளலாமன்றோ? வீடில்லாதவர்கள் பிறர் வீடுகளைக் கைப்பற்றிக் கொள்ளலாம். ஒரு சிறிதேனும் உடைமையில்லாதவர்கள் மலைக்குறவர் இடையே கூடக் காணப்படுவதில்லை. பூஸ்திதி மாத்திரம் தானா உடைமை? துணி, மணி, வீடு, பாத்திரம், பண்டம், பாய், தலையணை—எல்லாம் உடைமைகளே. மலைப் பழிஞர் நாட்டுக்குள் பிரவேசித்து உங்களுடைய வீடு பாத்திரங்களெல்லாம் அபகரித்துக் கொள்ளுதல் நியாயமென்று உங்களுக்குத் தோன்றுகிறதா?

எனவே, எங்களுடைய பூஸ்திதிகளை நீங்கள் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ளுதல் நியாயமன்று. ஆனாலும், பூமித் தாய் எல்லாருக்கும் பொதுவாகத் தரும் விளை பொருள்களை நாங்கள் சிலபேர் மாத்திரம் பங்கிட்டெடுத்துக் கொண்டு, " உங்களுக்கு எங்களுடைய தயவு இருந்தால்தான் ஆகாரம், எங்களை தயவில்லாவிட்டால் பட்டினி " என்ற நிலையில் உங்களை வைத்து, அதினின்றும் உங்களை அடிமைகளாக்கி நடத்திவரும் மஹா பாவத்திற்கு இன்னும் ஆளாயிருக்க எங்களுக்குச் சம்மதமில்லை. " இன்றும் வருவது கொல்லோ நெருநலுங் கொன்றது போலும் நிரப்பு " என்று திருவள்ளுவர் சொல்லியது போல (அதாவது, ' நேற்று முழுவதும் நம்மைக் கொலை செய்வது போலவே வருத்திக் கொண்டிருந்த வறுமை இன்றைக்கும் வந்து விடுமோ ' என்று) பரிதபித்து எங்கும் நிலைமையில் நீங்கள் உயிர் வாழ்க்கை நடத்தி வருகிறீர்கள். உங்களை இந்த உணவு நிச்சயமில்லாத நிலையில் வைத்திருக்கும் பாவத்தை இனிச் சுமந்து கொண்டிருப்பதில் எங்களுக்குச் சம்மதமில்லை. எனவே, உங்களில் ஆண், பெண், குழந்தை எவருக்கும் என்றைக்கும் ஆகார விஷயமாகப் பயமில்லாதபடிச் செய்து விட வேண்டும் என்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். அதற்கு, பின்வரும் வழியை அனுசரிக்க வேண்டும் என்று நிச்சயித்து இருக்கிறோம்:— அதாவது, எங்களில் சிலரும் உங்களில் சிலரும் கூடி " தொழில் நிர்வாக சங்கம் " என்றொரு சங்கம் அமைக்கப்படும். பயிர்த் தொழில், கிராம சுத்தி, கல்வி, கோயில் (மதப்பயிற்சி), உணவு, துணிகள், பாத்திரங்கள், இரும்பு, செம்பு, பொன் முதலியன சம்பந்தமாகிய நானாவகைப்பட்ட கைத்தொழில்கள்—இதை இந்தக்

கிராமத்துக்கு மொத்தம் இவ்வளவு நடைபெறவேண்டுமென்றும், அத்தொழில்களில் இன்னின்ன தொழிலிற்கு இன்னார் தகுதி உடையவர் என்றும் மேற்படித் தொழில் நிர்வாக சங்கத்தார் தீர்மானம் செய்வார்கள். அந்தப்படிக் கிராமத்திலுள்ள நாம் அத்தனை பேரும் தொழில் செய்ய வேண்டும். அந்தத் தொழில்களுக்குத் தக்கபடியாக ஆண், பெண், குழந்தை முதலியோர் இளைஞர் அத்தனை பேரினும் ஒருவர் தவறாமல் எல்லாருக்கும் வயிறு நிறைய நல்ல ஆகாரம் கொடுத்து விடுகிறோம். நாங்கள் பிள்ளை பிள்ளை தலை முறையாக இந்த ஒப்பந்தம் தவறமாட்டோம். இந்தப்படிக்கு இந்த ஆலயத்தில் தெய்வ சந்நிதியில் எங்கள் குழந்தைகளின் மேல் ஆணையிட்டுப் பிரதிக்ஞை செய்து கொடுக்கிறோம். இங்ஙனம் நமக்குள் ஒப்பந்தம் ஏற்பட்ட விஷயத்தை எங்களில் முக்கியஸ்தர் கையெழுத்திட்டுச் செப்புப்பட்டையம் எழுதி இந்தக் கோயிலில் அடித்து வைக்கிறோம். இங்ஙனம் பிரதிக்ஞை செய்து, இதில் கண்ட கொள்கைகளின்படிக் கிராம வாழ்க்கை நடத்தப்படுமாயின் கிராமத்தில் வறுமையாவது அதைக்காட்டிலும் கொடிதாகிய வறுமை யச்சமாவது தோன்ற இடமில்லாமல் ஒற்றுமையும் பரஸ்பர நட்பும் ஏற்பட்டு, அற்பாயுள், நோய் முதலிய பிசாசுகளின் பயந்தொலைந்து, பரிபூர்ண க்ஷேமம் உண்டாகும். ஒரு கிராமத்தில் இந்த ஏற்பாடு நடந்து வெற்றி காணுமிடத்து, பின்னர் அதனை உலகத்தாரெல்லாரும் கைக்கொண்டு நன்மையடைவார்கள். தமிழ் நாட்டு மக்களே, இங்ஙனம் உலகத்தில் வறுமையைத் தீர்க்கும் பெருந் தர்மத்தில் வழிகாட்டுவோராக நிற்கும் மஹிமை உங்களைச் சார்வதாகுக.

---

# 2

## தொழிலாளர்

### தொழிலுக்கும் செல்வத்துக்குமுள்ள சம்பந்தம்

கைத்தொழிலாலே செல்வம் விளைகிறது. அறிவுத் தொழிலால் அது சேகரிக்கப்படுகிறது. கைத்தொழில் செல்வத்தை ஏற்படுத்துகிறது. அறிவுத்தொழில் கைத்தொழிலை

நடத்துகிறது. 'புத்தியில்லாத மூடர்கள் சக்கரவர்த்திகளாகவும், ராஜாக்களாகவும், பெரிய நிலஸ்வான்களாகவும், முதலாளிகளாகவும் இருந்து பெருஞ் செல்வங்களைக் கையாளுதல் காண்கிறோமே! எனவே, அறிவுத்திறமையாலும், அறிவு முயற்சியாலும் பெருஞ்செல்வம் திரட்டப்படுகிறதென்று சொல்லுதல் எங்ஙனம் பொருந்தும்?' என்று கேட்பீர்களாயின், அதற்கு உத்தரம் சொல்லுகிறேன்.

பல இடங்களில் இப்போது மூடர்களிடம் செல்வமிருப்பது காண்கிறோமாயினும், இவர்களுக்கு இந்தச் செல்வம் ஏற்படுத்திக்கொடுத்த இவர்களுடைய முன்னோர்களில் அநேகர் அல்லது ஒருவனாயினும் மிகுந்த புத்திசாலியும், அந்தப் புத்தியைக்கொண்டு சோம்பலின்றி விடாமுயற்சியுடன் உழைப்பவனாகவும் இருந்திருக்கவேண்டும். புத்தி மாத்திரம் இருந்தால் போதாது. அதைக்கொண்டு சோம்பலில்லாமல் விடாமுயற்சியுடன் உழைக்கவேண்டும். அப்போதுதான் செல்வம் சேர இடமுண்டாகும். "வெறுமே மிருகபலத்தால் ராஜாக்கள் ஸைந்யங்களின் மிகுதி காரணமாகப் பிற நாடுகளைக் கொள்ளையிட்டு அளவிறந்த பூமியும் செல்வங்களும் சேர்த்ததாகச் சரித்திரங்களில் படித்திருக்கிறோமே. அப்படியிருக்கையில், புத்தி நுட்பத்தால் செல்வம் சேர்வதாகச் சொல்லுதல் தகுமோ?" என்று கேட்பீர்களானால், அதற்கு விடை கூறுகிறேன். யுத்தம் மிருகத் தொழிலாக இருந்த போதிலும், நல்லோர்களால் எவ்வகையாலும் வெறுக்கத் தக்க இழிதொழிலாக இருந்தாலும், அதற்கு மிருகபலம் மாத்திரம் இருந்தால் போதும் என்று நினைப்பது தவறு. யுத்த சாஸ்திரம் என்பது ஒரு பெரிய சாஸ்திரம். அதில் மிருக பலம் கருவி; அறிவு கர்த்தா. ஸாதாரணக் கொள்ளைக் கூட்டங்களிலே கூடத் தலைவனாக இருப்பவன் சிறந்த புத்திநுட்ப முடையவனாக இருத்தல் இன்றியமையாதது. எத்தனையோ விதமான அறிவுப்பயிற்சிகள் ஆதிகால முதலாகவே யுத்தத்துக்கு அவசியமாக ஏற்பட்டிருக்கின்றன. அதிலும், தற்கால யுத்தங்களோ பல பல துறைகளில் மிகச் சிறந்த அறிவுத் தேர்ச்சிகொண்ட பண்டிதர்களாலே நடத்தப் படுகின்றன.

வியாபாரம், கைத்தொழில் முதலிய ஸமாதான நெறிகளில் செல்வம் சேர்ப்பதற்கு மிக உயர்ந்த புத்தி நுட்பம் எக்காலத்திலும் இன்றியமையாததாக நிகழ்ந்து

வந்திருக்கிறது. இக்காலத்தில் இவை புத்தித்திறமை யில்லாமல்போனால் ஒரு க்ஷணங்கூடத் தரித்து நிற்க மாட்டா.

இந்தச் செய்தியை உணர்ந்தே ஆதிகால முதல் அறிவுப் பயிற்சியுடைய வகுப்பினர் கைத்தொழிலாளிகளுக்குக் கல்வி ஏற்படாதபடியாக வேலை செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். "எழுத்துத் தெரிந்த சூத்திரனை மிகவும் தொலையில் விலக்கி விடவேண்டும்" என்ற விநோத விதியொன்று மனுஸ்ம்ருதி யிலே காணப்படுகிறது. நம்முடைய தேசத்தில் மட்டுமே யன்று, உலக முழுமையிலும் எல்லா நாடுகளிலும் கைத் தொழிலாளருக்குக் கல்விப் பயிற்சி உண்டாகாத வண்ண மாகவே ஜனக்கட்டுகள் நடைபெற்று வந்திருக்கின்றன.

ஆனால், இந்தச் சூழ்ச்சியை மீறி, எல்லா நாடுகளிலும், முக்கியமாக, நமது பாரததேசத்தில், கைத்தொழில் புரியும் கூட்டங்களைச் சேர்ந்தோரில் பற்பலர் கல்வித் தேர்ச்சி யடைந்து வந்திருக்கிறார்கள். ஆனால், இங்ஙனம் கல்விப் பயிற்சி வாய்ந்தோர் பெரும்பாலும் தம்முடைய பரம்பரைத் தொழில்களில் இறங்காமல், சுத்த இலக்கிய பயிற்சியிலேயே வாழ்நாள் கழிப்பாராயினர்.

எனினும், சென்ற ஓரிரண்டு நூற்றாண்டுக்குள்ளே ஐரோப் பாவில் எல்லா வகுப்பினருக்கும் கல்வி பயிற்றும் முறைமை தொடங்கி வந்திருக்கிறது. இந்த ஸர்வ ஜனக்கல்வி யென்னும் கொள்கை ஐரோப்பாவிலிருந்து உலகத்தின் பிற்பகுதிகளிலும் தாவிவிட்டது. இக்கொள்கையை நமது நாட்டில் நிறைவேற்றிவிட வேண்டுமென்று பல புண்ணிய வான்கள் பெருமுயற்சி செய்துவருகிறார்கள். இங்ஙனம் எல்லா வகுப்புக்களையும் சேர்ந்த எல்லா மனிதரிடையேயும் கல்வியும் அதன் விளைவுகளாகிய பலவகைப்பட்ட அறிவுப் பயிற்சிகளும் பரவிவிடுமானால், அதினின்றும், கைத்தொழி லாளிகள் கல்விப் பயனைக் காவியங்கள் இயற்றுவதிலும் படிப்பதிலும் மாத்திரமே செலவிடும் வழக்கம் மாறிப்போய், அவரவர் தத்தமக்கு உரிய தொழில்களிலும் கல்வி யறிவைப் பயன்படுத்தத் தொடங்குவார்கள். இதினின்றும் இதுவரை உலகத்தில் கைத்தொழிலாளர் பரம ஏழைகளாக இருந்து வரும் நிலைமை நீங்கி மேன்மேலும் கைத்தொழிலாளருக் குள்ளே செல்வம் வளர்ச்சி பெற்றுவர ஹேதுவுண்டாகும்.

இப்போது நமது நாட்டில் அங்கங்கே பல தொழிற் சங்கங்கள் ஸ்தாபனம் செய்யப்பட்டு வருகின்றன. இச்சங்கத்தார்கள் சம்பள ஏற்றத்துக்கும் வேலை நேரத்தைக் குறைப்பதற்கும் வேண்டிய யத்தனங்கள் பல செய்துகொண்டு வருகிறார்கள். இந்தப் பிரயத்தனங்களெல்லாம் முற்றிலும் நியாயமே. இதில் ஐயமில்லை.

ஆனால், இச் சங்கத்தார்கள் மேற்கூறிய வழிகளிலே முயற்சி செய்வதுடன் தமது கார்யங்களை நிறுத்திவிடாமல், அங்கங்கே பள்ளிக்கூடங்கள் ஆயிரக்கணக்காக ஏற்படுத்தி அவற்றில் தம்முடைய மக்களுக்கு நிறைந்த கல்வியூட்டுவதற்குரிய முயற்சிகள் செய்யவேண்டும். மேலும், பகற் பள்ளிக்கூடங்கள் மாத்திரமேயன்றி இராப்பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தி அவற்றில் தொழிலாளிகள்—எல்லாப் பிராயத்தினரும்—சென்று படிப்பதற்குரிய காரியங்களை நடத்த வேண்டும்.

அறிவே வலிமை. கல்வியே செல்வத்தின் தாய். ஸரஸ்வதியும், லக்ஷ்மியும் மாமியும், மருமகளும் போல்வர் என்றும், கல்வியுள்ள இடத்தில் செல்வமும் செல்வமுள்ள இடத்தில் கல்வியும் ஏற்படுதல் மிகவும் அரிது என்றும் நமது நாட்டில் பரம மூடத்தனமான கொள்கையொன்று பரவி நிற்கிறது. வெறுமே வர்ணனைகளும், கற்பனைகளும் சமைத்து, யாருக்கும் எளிதில் புலப்படாத வலிய நடையில் காவியங்கள் எழுதுவதிலே படித்த படிப்பையெல்லாம் செலவிடுவோருக்கு அதிகச் செல்வம் சேர மார்க்கமில்லையென்பது ப்ரத்யக்ஷம். இந்த அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டே மேற்படிக் கொள்கை ஆதிகாலத்தில் உற்பத்தியாயிற்று. ஆனால், அது இக்காலத்துக்குப் பொருந்தாது. காவியங்களைக்கூட எளிய நடையில் எழுதினால் அச்சுத் தொழிலும் பொதுஜனக் கல்வியும் பரவிவரும் இக் காலத்தில் ஆசிரியர்களுக்கு ஏராளமான லாபம் கிடைக்கும். காவியங்கள் எழுதுவதற்கு மாத்திரம் படிக்காமல், பலவகை வியாபாரங்களுக்கும், தொழில்களுக்கும் வேண்டிய படிப்புகள் படித்து, அவற்றை ஊக்கத்துடன் கையாளுவோருக்கு, மேன்மேலும் செல்வம் பெருகும். ஆதலால், தொழிலாளிகளே, கல்விப் பயிற்சி செய்யுங்கள். உங்களுக்கும் உங்கள் மக்களுக்கும் கல்வியறிவு மிகுவதற்குள்ள வழி செய்யுங்கள்.

## தொழிலாளர்க்குச் சில வார்த்தை

சென்ற செவ்வாய்க்கிழமையன்று "சுதேசமித்திரன்" தலையங்கத்தில் தொழிலாளர் இயக்கத்தைப்பற்றி மிக நேர்த்தியான வ்யாஸமொன்று எழுதப்பட்டிருந்தது.

அதன் ஆசிரியர் அதே விஷயத்தைக் குறித்து இன்னும் தொடர்ச்சியாக பல வ்யாஸங்கள் எழுதுவதாகத் தெரிவித்திருப்பது தொழில் விஷயத்தில் சிரத்தையுடைய என் போன்றோருக்கெல்லாம் மிக மகிழ்ச்சி தரத் தக்கதொரு செய்தியாம்.

தொழிலாளிகள் என்போர் சரீரத்தால் உழைத்து வேலை செய்கிறவர்களே என்று சிலருக்கு எண்ணமிருக்கலாம். அது தப்பு. சரீரத்தாலாகட்டும், புத்தியாலாகட்டும், முதலாளிக் குட்பட்டு வேலை செய்கிறவர்கள் எல்லாருமே தொழிலாளிகள் என்று அந்த வ்யாஸம் எழுதியவர் சொல்லுகிறார். இது நம்முடைய தேசத்தார் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். ஏனென்றால், நம்மவருடைய மனதில் இந்த விஷயம் பதிவு பெறுதல், மிகவும் சிரமம்.

குமாஸ்தாக்கள், உபாத்தியாயர்கள் முதலியவர்களும் தொழிலாளிகளே என்று அந்த வ்யாஸ மெழுதியவர் சொல்கிறார். எனவே, என்போன்ற நூலாசிரியர்களும் தொழிலாளிகளே. முதலாளிகள்கூட, ஆள் நியமித்தல், வேலையை மேற்பார்த்தல்' வியாபார சம்பந்தமான கணக்குகளைக் கவனித்தல் முதலிய செய்கைகளால் தொழிலாளி ஆகிறார்கள்.

முதலாளி, தொழிலாளி என்னும் இந்தக் கக்ஷி பேதமே நமது நாட்டுக்குப் புதிது. நூலாசிரியரும், வீதி பெருக்குவோரும் ஓரினமாகச் சேர்ந்து வைசியருக்கு விரோதமாகப் போராடுதல் நமது தேசத்தில் நேற்றுவரை நினைக்கொணாததோர் செய்தியாக இருந்தது ; இன்று ஸாத்யமாகிவிட்டது. இது ஐரோப்பியத் தொழில் முறைமைகளும் கொள்கைகளும் நம்முடைய தேசத்தில் பரவுவதால் ஏற்படும் இன்றியமையாத விளைவாகும்.

நம்முடைய தேசத்தில் நெடுங்காலமாக நடைபெற்று வரும் அனுஷ்டானப்படி நூலாசிரியரும், உபாத்தியாயரும் தலைமை வர்ணம். அரசர் அதற்கடுத்தபடி. முதலாளிகள் எனப்படும் வைசியர் மூன்றும் ஜாதி. சரீரபலத்தால் மாத்திரமே செய்தற்குரிய தொழில்களைச் செய்வோர் நான்காம் வர்ணம். மற்றத் தேசங்களில் நமது நாட்டைப்போல் இந்த வகுப்புக்குக் குறிப்பிட்ட நாமங்களும் விதிகளும் இல்லையெனினும், உலக முழுமையிலும் ஒருவாறு இந்த 'சாதுர்வர்ண்யம்' (அதாவது, நான்கு வர்ணங்களென்ற வகுப்பு) நெடுங்காலமாக நடைபெற்றுக்கொண்டு வந்திருக்கிறது. சில இடங்களில் மாத்திரம் குருக்களைக் காட்டிலும் அரசர் உயர்ந்த வகுப்பினராகக் கருதப்பட்டனர்; சில நாடுகளில் அரசரே குருக்களாகவுமிருந்தனர். மற்றப்படி உலகமுழுமையிலும் குருக்களும், சாஸ்திரிகளும் தலைமைப் பகுதியாகவும், அரசர், வணிகர், கைத்தொழில் செய்வோர் என்பார் முறையே தனித்த பகுதிகளாகவுமே கருதப்பட்டு வந்தனர்.

ஆனால், சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் ஸகல ஜனங்களும் ஸமானமென்றும், ஆதலால் பிறப்புப் பற்றியேனும், உடைமைபற்றியேனும், தொழில் பற்றியேனும் மனிதருக்குள்ளே எவ்வித மேன்மை தாழ்வுகளேனும் உணவு, உடை முதலிய அவசியப் பொருள்களின் அனுபவத்தில் வேற்றுமைகளேனும் பாராட்டக் கூடாதென்றும் ஒரு புதிய கொள்கை தலைப்பட்டு நடந்துவருகிறது. சென்ற சில வருஷங்களாக இக்கொள்கை அந்தக் கண்டத்தில் மிகவும் வலிமையுடையதாய் விட்டது. ஆரம்ப முதலாகவே இக்கொள்கை ஐரோப்பாவில் தொழிலாளருக்குள்ளே அதிகம் செல்வாக்குப் பெற்றுவந்தது.

நூலாசிரியர்களும், உபாத்தியாயர்களும், மாஸம் 1,000 ரூபாய் வாங்கும் குமாஸ்தாக்களும், மாஸம் 2,000 ரூபாய் ஸம்பாதிக்கும் பத்திராதிபர்களும், இவர்களைப் போன்ற பிறரும் தொழிலாளிகளுடன் சேர்த்துக் கணக்கிடுவதற்குரியரென்ற கொள்கை ஐரோப்பாவிலேயே ஆரம்ப முதல் கிடையாது. இது சமீப காலத்திலே நேர்ந்ததொரு புதிய கொள்கை. ஆதியில், தொழிலாளரின் கிளர்ச்சி ஐரோப்பாவில் வேரூன்றியது முக்கியமாக யந்திரசாலைகளின் ஸ்தாபனமதினாலேயாம்.

அதற்கு முன்னர், அங்குள்ள தொழிலாளர் பெரும்பாலும் ஜமீன்தார்களிடமும் எண்ணற்ற சிறு சிறு தொழிற் கூடங்கள் வைத்து வேலை செய்த தொழிலாளியிடமும், சிறு சிறு முதலாளிகளிடமுமே வேலை செய்து கொண்டிருந்தனர். தத்தம் வீட்டிலேயே தறி முதலியன வைத்துத் தாமே முதலாளிகளாகவும் தொழிலாளிகளாகவும் வேலை செய்தோர் பலர். இப்படியிருக்கையிலே, துணி நெய்யவும், இரும்பு தறிக்கவும், மரமறுக்கவும், எண்ணெயாட்டவும், பாத்திரங்கள் செய்யவும் முக்கியமான தொழில்களுக்கெல்லாம் யந்திரங்கள் ஏற்பட்டன. அதாவது மனித சக்தியால் செய்துகொண்டு வந்த காரியங்கள் நீராவியின் சக்தியாலும், மின்சார சக்தியாலும் செய்யப்படலாயின. நீராவியும் மின்சாரமுமோ அபார வலிமை கொண்ட பூத சக்திகள், அவற்றின் திறமைக்கு வரம்பே கிடையாது. ஆயிர மனிதர் சேர்ந்து ஆயிரம் நாட்களிலே செய்தற்குரிய தொழிலை இந்த இயந்திரங்கள் ஒரு தினத்தில் செய்துமுடிக்கத் தொடங்கின. எனவே, பெருஞ் செல்வமுடையோர் தம்முள்ளே கூட்டுகள் கூட்டிக்கொண்டு யந்திரங்களை ஏராளமாகத் தயார்செய்து அவற்றின் மூலமாக நெசவு முதலிய தொழில்களைச் செய்யத் தலைப்பட்டனர். இதனால் ஏக காலத்தில் பதினாயிரம் லக்ஷக் கணக்கான தொழிலாளருக்குத் தொழிலில்லாமற் போய்ப் பட்டினி கிடக்க நேர்ந்தது. இதுதான் ஐரோப்பாவிலே தொழிலாளர் கக்ஷி வேரூன்றிப் பலப்படத் தொடங்கியதின் காரணம்.

அதற்கு முன்பு தனித்தனி ஜமீன்தார்களிடத்திலும் சிறு சிறு முதலாளிகளிடத்திலும் வேலை செய்த தொழிலாளிகள் தத்தமக்கு நேரும் குறைகளைத் தத்தம் இடத்துக்கும் ஸ்திதிக்கும் தக்கபடி கெஞ்சியும் முணுமுணுத்தும் சில ஸமயங்களில் சிறு கலகங்கள் நடத்தியும் தீர்த்துக்கொண்டார்கள். 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேதான் யந்திரங்களின் சக்தியால் தொழில் செய்யும் முறைமை மிகுதியுற்றது. அப்போதுதான் அங்குள்ள தொழிலாளிகள் முதலாளிகளுக்கெதிராகக் கிளர்ச்சி நடத்தும் வழக்கத்தைக் கைக்கொள்ளலாயினர். நாட்பட நாட்பட, யந்திரங்களில் உற்பத்தி செய்யப்பட்ட துணி முதலியன ஐரோப்பாவினின்றும் ஆசியா முதலிய

இதர கண்டத்து ஜனங்களினிடையே அதிகமாக விற்கப்படலாயின. இங்கிலாந்து முதலிய தேசத்தார் தம் நாடுகளுக்கு வேண்டிய துணிகள் முதலியனவே யன்றி உலக முழுமையிலும் கொண்டு விற்கவேண்டுமென்ற நோக்கத்துடன் தாம் புதுமையாய்க் கண்டு பிடித்த பூதசக்திகளாகிய நீராவியையும், மின்சாரத்தையும் கொண்டு வேலை செய்வாராயினர். இதனால் உலகத்துச் செல்வம் மேன்மேலும் ஐரோப்பாவிற்குச் செல்ல இடமுண்டாயிற்று. அதினின்றும் ஆரம்பத்திலே பல தொழிலாளிகள் வேலையிழந்து அங்குப் பட்டினி கிடக்க நேர்ந்த துன்பத்துக்குத் தக்க நிவாரண முண்டாய் அந்த நிவர்த்தி மேன்மேலும் மிகுதிப்பட்டு வந்தது.

அதற்கு முன் இருந்த ஜன சமூக வரம்புகளும் நியதிகளும் சிதறிப் போய்விட்டனவே யெனினும், பெரும்பாலும் தொழிற் கூட்டத்தாருக்கு வேலை கிடைத்துவிட்டது. ஆசியாவிலும் பிற கண்டங்களிலும் லக்ஷம் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு ஐரோப்பியத் துணி முதலியன ஏற்றுமதியாகத் தலைப்பட்டதினின்றும் ஐரோப்பிய தொழிற் கூட்டத்தாரிடையே தொழிலற்றவராய் வருந்திய ஜனங்களின் தொகை மேன்மேலும் குறையலாயிற்று. எனினும், தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட கக்ஷி பேதங்கள் தீரவில்லை; அவை மிகுதிப்பட்டுக் கொண்டே வந்தன. இதற்குக் காரணம் அங்குத் தொழிலாளருக்குள்ளே சங்க சக்தி அபாரமாக அதிகப்பட்டுவிட்டது. ஒவ்வொரு ஆலையிலும் பதினாயிரம் லக்ஷக்கணக்கான தொழிலாளிகள் வேலை செய்தனர். இவர்களுக்குள்ளே பலர் கல்வி கற்றோர் ஆயினர்.

இதனிடையே மேற்கூறப்பட்ட ஸமத்துவக்கொள்கை, அதாவது, குற்றங்களுக்குத் தண்டனை விதிப்பதில், செல்வருக்கும் எளியோருக்கும், மேற்குலத்தாருக்கும் கீழ்க் குலத்தாருக்கும் சட்டம் ஸமானமாக வேலை செய்யவேண்டுமென்றும், உணவு முதலிய ஸௌகரியங்களிலும் லௌகிக மரியாதைகளிலும் மானிடருக்குள்ளே எக் காரணம் பற்றியேனும் யாதொரு வேற்றுமையும் நடைபெறக்கூடாதென்றும், உலகத்தில் எல்லா மனிதரும் எல்லா வகைகளிலும் ஸமானமாவாரென்றும் ப்ரான்ஸ் தேசத்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் எழுச்சிபெற்று நாட்பட நாட்பட ஐரோப்பா முழுவதிலும் வியாபித்துக்கொண்டு வந்ததொரு கொள்கை தொழிலாளரிடையே மிகுதியாகப் பரவலாயிற்று.

அதன் மேல் இத் தொழிலாளர் “ நாம் பாடுபட்டு உற்பத்தி செய்யும் பொருள்களை விற்று இந்த முதலாளிகள் இத்தனை பணம் ஸம்பாதிக்கிறார்கள். நாமோ பெரும்பாலும் குடியிருக்கக் குடிசைகளும் சாக்கடைகளும், தின்பதற்குப் பழைய ரொட்டியும் பழைய மீனுமாக வாழ்ந்து வருகிறோம். இவர்கள் மாளிகைகளில் வாழ்ந்து குபேரஸம்பத்தை அனுபவிக்கிறார்கள். இது ஸமத்துவக் கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது. இவர்கள் முதல் போட்டார்களேயெனில், நாம் பாடுபட்டோம். எல்லோருக்கும் லாபம் ஸமானமாகவே இருக்கவேண்டும் ” என்று விரும்பலாயினர். எனினும், திடீரென்று, சமபாகம் கேட்கத் துணியாமலும் அதனைப் பெறுதல் சாத்தியமில்லை யென்று நிச்சயமாகத் தெரிந்தபடியாலும் சிறிது சிறிதாகக் கூலி உயர்வுக்குக் கலகம் பண்ணிக்கொண்டு வந்தார்கள்.

வாஸத்திற்கு ஸௌகரியமான வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்கிறார்கள். தொழிலாளிகள் கிழவரான இடத்திலும் நோயாளிகளான இடத்திலும் இனும் சம்பளம் கொடுக்கவேண்டு மென்றார்கள். தங்களுக்கும் தம்முடைய மக்களுக்கும் படிப்புச் சொல்லிவைப்பதற்குரிய சாதனங்கள் செய்யவேண்டுமென்றார்கள். தொழில் நேரத்தைக் குறைக்க வேண்டுமென்றார்கள். படிப்படியாக இவ்வேண்டுதல்களை முதலாளிகள் தெரிந்து கொண்டே வந்திருக்கிறார்கள். எனினும் இத்தகைப் போராட்டங்களில் இன்றுவரை தொழிலாளிகளே வெற்றியடைந்துகொண்டு வருகிறார்கள். இதற்குரிய காரணங்கள் பல. இவற்றைக் குறித்துப் பிந்திய பகுதிகளில் விஸ்தாரமாக எழுதுகிறேன்.

## தொழிலாளர் பெருமை

ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட வேற்றுமைகள் இப்போது மிகவும் முற்றிப்போய்விட்டன. இந்நிலையில் அவ்விரண்டு கக்ஷியாருக்குமுள்ள மனஸ்தாபங்களையெல்லாம் தீர்த்து அவர்களில் ஒரு திறத்தாரால் மற்றொரு திறத்தாருக்கு விளையும் பரஸ்பரமான கஷ்ட நஷ்டங்களைப் போக்கி அவர்களுக்குள்ளே ஸமாதானமும் ஒற்றுமை யுணர்வும் ஏற்படுத்துதல் மிகவும் சிரமமான காரியம். இஃது வெறுமே சாதாரண மனித யத்தனத்தால் நிறைவேறக்கூடியதாகத் தோன்றவில்லை. உலகத்தில்

இதுவரையில்லாத புதிய தெய்வீக சக்திகள் கொண்ட அவதார புருஷர்கள் தோன்றினால் அவர்களே ஐரோப்பாவில் மூண்டிருக்கும் இந்தப் பெரிய விபத்துக்கு ஸமாதான வழிகளிலே நிவர்த்தி செய்யக்கூடும். "சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் ஐரோப்பியத் தொழிலாளர் சிறிது சிறிதாகச் சம்பாதித்துக்கொண்டு வந்திருக்கும் உரிமைகளுடனே அவர்கள் திருப்திகொண்டு இருக்கவேண்டும். இதுவரை அவர்களுக்குக் கிடைத்திருக்கும் உரிமைகளே மிகவும் அதிகம். இவற்றைக்கூட இன்னும் குறைத்தால் நல்லது. இப்படியிருக்க, தொழிலாளர் இன்னும் அதிகமான உரிமைகள் கேட்பதற்கு நாம் கொஞ்சமேனும் செவி சாய்க்கக்கூடாது" என்று பெரும்பான்மையான முதலாளிகள் நினைக்கிறார்கள். தொழிலாளரோ, அந்த ராஜாங்க அதிகாரத்தைத் தமது வசமாகச் செய்து கொண்டாலன்றி, அதாவது, தங்கள் இஷ்டப்படிச் சட்டம் போட்டு, முதலாளிகளினுடைய பணத்தைத் தங்கள் இஷ்டப்படி விநியோகிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டாலன்றி, தங்களுக்கு முதலாளிகளிடமிருந்து நியாயம் கிடைக்க இடமில்லை என்று நினைக்கிறார்கள்.

எனவே, இங்கிலாந்து முதலிய தேசங்களிலுள்ள தொழிலாளிகள் பார்லிமெண்ட் சபையில் தாம் ஆதிக்யம் பெற்று, அதன் மூலமாக தம்முடைய கட்சியாரே மந்திரிகளாகும்படியான நிலைமையை ஏற்பாடு செய்துகொண்டு, இவ்வழியாலே ராஜ்யாதிகாரத்தையும் தம்முடையதாகச் செய்துகொள்ளும்படி மும்முரமான முயற்சிகள் செய்து வருகின்றனர். ஆனால், மேற்படி தேசங்களில் ராஜ்யாதிகாரம் இப்போது பெரும்பாலும் முதலாளிகளுக்குச் சார்பாக இருப்பதால், அந்த முதலாளிகள் தம்மால் இயன்ற வழிகளிலெல்லாம் தொழிலாளிகளைத் தலை தூக்க ஒட்டாமல் அழுத்திவிட முயற்சி செய்து வருகிறார்கள். இதனால் அவ்விரு திறத்தாருக்குள்ளே சமாதானமும் சிநேகத் தன்மையும் ஏற்படுவதற்கு வழியில்லாமல், நாளுக்கு நாள் மனஸ்தாபங்களும் அவநம்பிக்கையும் வயிற்றெரிச்சல்களும் மிகுதிப்பட்டு கொண்டுதான் வருகின்றன.

இந்தியாவில் இந்த விபரீதமான நிலைமை ஏற்படவேண்டுமென்பது நம்முடைய விருப்பமன்று. ஐரோப்பாவில் ஆரம்ப முதலாகவே தொழிலாளரும் முதலாளிகளும் தொழிலின் பெருமையையும் அவசியத்தன்மையையும் நன்கு கருதி

யிருப்பார்களாயின், இப்போது அங்கே இவ்வளவு பயங்கர மான நிலைமை ஏற்பட்டிராது. எனவே, இந்தியாவில் முதல் முதலாகத் தொழிலாளர் கிளர்ச்சி தோன்றியிருக்கும் இந்தச் சமயத்திலே, நம்முடைய ஜனத் தலைவர்கள் முதலாளிகள், தொழிலாளிகள் என்று இரு திறத்தாரையும் ஆதரவுடன் கலந்து புத்தி சொல்லி மனஸ்தாபங்களை ஏறவொட்டாதபடி முளையிலேயே கிள்ளிவிட முயற்சி செய்ய வேண்டும். தொழிலாளரை முதலாளிகள் இகழ்ச்சியுடன் கருதி நடத்துவதை உடனே நிறுத்துவதற்குரிய உபாயங்கள் செய்யவேண்டும். தொழிலின் மஹிமையையும் இன்றிய மையாத் தன்மையையும் எல்லா ஜனங்களும் அறியுமாறு செய்யவேண்டும்.

ஆரம்பத்திலேயே நாம் இதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யாவிடின், நாளடைவில் ருஷ்யாவிலுள்ள குழப்பங் களெல்லாம் இங்கு வந்துசேர ஹேது உண்டாய்விடும்.

ருஷ்யாவில் சமீபத்திலே அடுக்கடுக்காக நிகழ்ந்துவரும் பல புரட்சிகளின் காரணத்தால் அவ்விடத்துச் சைனியங்களில் பெரும் பகுதியார் தொழிற் கட்சியையும் அபேதக்கொள்கை களையும் சார்ந்தோராய் விட்டனர். இதினின்றும் அங்கு ராஜ்யாதிகாரம் தொழிற் கட்சிக்குக் கிடைத்து விட்டது. தேசத்து நிதியனைத்தையும் சகல ஜனங்களுக்கும் பொதுவாகச் செய்து, எல்லாரும் தொழில் செய்து ஜீவிக்கும்படி விதித் திருக்கிறார்கள். தேசத்துப் பிறந்த ஸர்வ ஜனங்களுக்கும் தேசத்துச் செல்வம் பொது என்பது உண்மையாய்விடின், ஏழைகள் செல்வர் என்ற வேற்றுமையினால் உண்டாகும் தீமைகள் இல்லாமற் போகும்படி ஸகலரும் தொழில் செய்து தான் ஜீவிக்கவேண்டும் என்ற விதி வழங்குமானால், தேசத்துத் தொழில் மிகவும் அபிவிருத்தியடைந்து ஜனங் களின் க்ஷேமமும் சுகங்களும் மேன்மேலும் மிகுதியுறும்.

எனவே, ருஷ்யாவிலுள்ள அபேதவாதிகளுடைய கொள் கைகள் அவ்வளவு தீங்குடையனவல்ல. ஆனால், அவற்றை வழக்கப்படுத்தும் பொருட்டு அவர்கள் நாட்டில் ஏற்படுத்தி யிருக்கும் தீராச் சண்டையும் அல்லலுமே தீங்கு தருவனவாம். ருஷ்யக் கொள்கைகளை இப்போது அனுஷ்டிக்கப்படும் ருஷ்ய முறைகளின்படி உலகத்தில் ஸ்தாபனம் பெற்று வெற்றி பெற வேண்டுமானால், அதற்குள்ளே முக்காற்பங்கு ஜனம் கொலை

யுண்டு மடிந்து போவார்கள். வெளிநாட்டுப் போர் அத்தனை பெரிய விபத்து அன்று. நாட்டுக்குள்ளேயே செல்வர்களும், ஏழைகளும் ஒருவரை ஒருவர் வெடிக் குண்டுகளாலும், துப்பாக்கிகளாலும், பீரங்கிகளாலும், தூக்கு மரங்களாலும் கொல்லத் தொடங்குவார்களாயின் அது தீராத தொல்லையாய் விடுமன்றோ ?

இந்தியாவில் இந்த நிலைமை நேரிடாத வண்ணம், ஜனத் தலைவர்கள் இப்போதே தீவிரமாகவும் பலமாகவும் வேலை செய்யத் தொடங்கவேண்டும். தொழிலாளரிடம் பொது ஜனங்களும் முதலாளிகளும் மிகுந்த மதிப்புச் செலுத்தும்படி ஏற்பாடு செய்வதே இந்த வேலையில் முதற்படியாம். 'தம் முடைய காரியத்தைச் செய்யவேண்டியதே தொழிலாளியின் ஆத்மாவுக்கு ஈசனால் விதிக்கப்பட்ட புருஷார்த்தம்' என்று முதலாளிகளில் பலர் நினைக்கிறார்கள். யந்திரங்களைப் போலவே இவர்கள் மனிதரையும் மதிக்கிறார்கள். பொது வாக, ஏழைகளிடம் செல்வருக்கு உள்ள அவமதிப்பு அள விடும் தரம் அன்று. இவ்விதமான எண்ணம் நம்முடைய தேசத்திலும் செல்வர்களிடத்து மிகுதியாகக் காணப்படு கின்றது. இவ் வெண்ணத்தை உடனே மாற்றி தொழிலாளி களையும் மற்ற ஏழைகளையும் நாம் ஸாதாரண, மனிதராக நடத்தவேண்டும். அதிலும், தொழிலாளிகளின் விஷயத்தில் நாம் உயர்ந்த மதிப்புச் செலுத்த வேண்டும். இவ்வித மதிப் பினால் நாம் தொழிலாளிகளின் விஷயத்தில் என்னென்ன கடமைகள் செலுத்த நேரும் என்பதைப் பின்னொரு வியாசத்தில் பேசுகிறேன்.

---

## 3

## குணமது கைவிடேல்

சுதேசிய முயற்சி நாட்டிலே தோன்றிய பிறகு பல விஷயங் களில் குணங் கண்டிருக்கிறோம். கைத்தொழில் அபிவிருத்தி, தேசீய வர்த்தகம், ஜனஐக்கியம், சுயபாஷைகளின் வளர்ச்சி முதலிய பல அம்சங்களிலே கைகண்ட பலன் பார்த்திருக்

கிறோம். இதை நாம் இன்னும் எத்தனைக்கெத்தனை ஆவலுடன் பரிபாலித்து வருகிறோமோ அத்தனைக் கத்தனை நாடு பல விதங்களிலேயும் க்ஷேமப்பட்டு வரும்.

ஆனால், சென்ற சில வருடங்களாக ஆங்கிலேய அதிகாரி களிலே சில சில்லரை உத்தியோகஸ்தர்கள் தம்மவர்களாகிய ஆங்கிலேய வர்த்தகர்களுக்கு இதனால் நஷ்டமும் தமக்கே சில அசௌகரியங்களும் உண்டாவது கருதி, இதைச் சில தப்பான வியாஜ்ஜியங்களைச் சொல்லி அடக்கிவிடப் பார்க்கிறார்கள். ஆட்டுக்குட்டியைத் தின்ன விரும்பிய ஓநாய், "ஏ ஆட்டுக் குட்டியே, நீ என்னைத் திட்டினாயாமே" என்று கேட்ட கதை போல, இந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள், நம்மை இராஜத் துரோகிகளென்று பொய்க்குற்றஞ் சார்த்தித் தண்டனைகள் செய்து நமது காரியத்தைக் கெடுத்துவிடப் பார்க்கிறார்கள். இங்ஙனம் ஆங்கிலேய அதிகாரிகளிலே பலர் பொய்யான கோப நடிப்பு நடித்துக்கொண்டு நம்மவர்களிலே சில முதல்வர்களுக்கு மிருகத்தனமான தண்டனைகள் விதித்து விட்டதினின்றும், கிராமந்தரங்களிலே சாமான்ய ஜனங்கள் சிலர் சுதேசியம் என்று சொன்னாலே ராஜாங்கத்தாருக்கு விரோதமாகலாம் என்றெண்ணி நடுநடுங்கி, தமது மனத்திற் குள்ளே நமது தர்மத்தில் அபிமானங் கொண்டவர்களா யிருந்தாலும் அச்சத்தினால் வெளிக்கு அசிரத்தை காண்பிக் கிறார்கள்.

இது நிஷ்காரணமான பயம். அவசியமற்ற மூடத்தனம். "வந்தே மாதரம்" (தாயை வணங்குகிறேன்) என்பது எந் தச் சட்டத்திற்கு விரோதம்? உள் நாட்டுச் சாமான்களையே கிரயத்துக்கு வாங்குவேன் என்ற விரதம் செய்துகொண்டால் எவனுடைய சட்டத்திற்கு விரோதம்? என் பணம், அதைக் கொடுத்து எனக்கு இஷ்டமான சாமான் வாங்கிக்கொள்ளு கிறேன். இதில் ராஜாங்கத்தார் ஏன் தலையிட வேண்டும்? கள், சாராயம் நாட்டிலே பரவாமல் தடுப்பதற்கு, ஆங்கி லேய ராஜாங்கத்தார் யாதொரு உதவியுஞ் செய்யாமல் தீர்வை லாபத்தைக் கருதி மதுபானத்தைப் பரவச் செய்து கொண்டு வருகிறார்கள். எத்தனையோ சீர்திருத்தச் சங்கத் தார்கள் (சுதேசிகள் மட்டுமல்ல, மாக்னிக்கல், சாமுவேல், ஸ்மித் முதலிய பல ஆங்கிலேயர்களுங்கூட) இது கூடாதென்று முட்டி முட்டிப் பார்த்தும், ஆங்கிலேய கவர்ன்மெண்டார் சிறிதேனும் கவனிக்காமலிருக்கிறார்கள்.

இப்படியிருக்க, என் தேசத்துக் கைக்கோளர்கள் செய்த துணிகளை நான் எனது நாட்டிலே பரவச்செய்வேன் என்றால், இது ராஜாங்கத்தாருக்குப் பெரிய விரோதமாகவா போய் விடும் ? எனது குழந்தைகள் எனது மூதாதைகளைப்பற்றியும் எனது தேச சரித்திரத்தைப் பற்றியும் ஒன்றுமே தெரியாமல், நான் நம்பும் வேதங்கள், சாஸ்திரங்கள் முதலியவற்றின் பெருமையை அறியாமல், ஜீவனத்திற்கு வேண்டிய கைத் தொழில்களைப் பற்றி ஏதுமே கற்றுக்கொள்ளாமல், மனிதர் களைப் " போனகிராப் " பெட்டிகளாகச் செய்யும் நாசகரமான கல்வி கற்கும்படிச்செய்து அவர்களைக் கெடுக்கமாட்டேன். ஜாதீயப் பாடசாலைகளுக்கு அனுப்பி ஐரோப்பியக் கல்வியிலே பிரயோஜனகரமான அம்சத்தை மட்டும் கற்றுக்கொள்ளும் படிச் செய்து எனது தேசத்து ஞானமும் என் குழந்தை களுக்கு ஏற்படும்படிச் செய்வேன். இதில் சட்டத்திற்கு என்ன கஷ்டம் சம்பவித்து விட்டது ?

இனிப் பணச்செலவு மிகுதியாவதை உத்தேசித்து எங்கள் வியாஜ்ஜியங்களைப் பஞ்சாயத்துக்கள் மூலமாகத் தீர்த்துக் கொண்டால் எந்தச் சட்டத்திற்கு விரோதம் ?

எனது தகப்பன் காலத்தில் எங்களவர்களுக்கு இருந்த தேக பலமும், சௌகரியமும், தீர்க்காயுளும் இந்தத் தலை முறையிலே ஏன் இல்லை ? நாளுக்கு நாள் எனது தேசத்தார் கள் குறுகி, மெலிந்து துர்பல மடைந்து, க்ஷீணித்து அற்பாயுஸாக ஏன் மடிகிறார்கள் ? இதை நீக்கும் பொருட்டு ஊருக்கு ஊர் சரீரபலத்திற்குரிய கர்லா, சிலம்பு, கஸரத் இவை பழக்கும் பயிற்சிக் கூடங்கள் ஏற்படுத்துவேன்.

நான் இப்படிச் செய்வதினால் எந்தச் சட்டம் முறிந்து போகிறது ? இங்கிலீஷ் பாடசாலைகளிலேகூட நமது பிள்ளை களுக்கு ஒருவிதமான சரீரப் பயிற்சி கொடுக்கவில்லையா ? இங்கிலீஷ்ப் பள்ளிக்கூடத்தில் போய்ப் படிக்கத்தகுந்த சொத்தில்லாத பிள்ளைகள் எங்கள் தேசத்தில் கோடிக் கணக்காக இருக்கிறார்கள். அவர்களுடைய சரீரம் பலமடையக் கூடாதென்று எங்கேனும் சாஸ்திரமேனும், சட்டமேனும் உண்டா ? அதற்குரிய முயற்சிகளை நான் செய்தால் அதினின்று சட்டத்திற்குத் தலைநோவு கண்டுவிடுமா ? சீச்சீ ! சுதேசியம் சட்ட விரோதம் என்று சொல்லுகிறவர்கள் பொய் சொல்லுகிறார்கள். அவர்கள் நம்மைக் கெடுக்க

வேண்டும் என்ற எண்ணத்துடன் பேசுகிறார்கள். அவர்கள் பேச்சைக்கேட்டு மயங்குபவர்கள் தேசநலம் அறியாத களிமண் அறிவு கொண்ட மூடர்கள்.

அந்நிய-வஸ்து-வர்ஜனம், ஜாதீயக் கல்வி, பஞ்சாயத்து, சரீரப் பயிற்சி—இந்த நான்குமே சுதேசியம் என்ற புண்ணிய பலத்தைத் தாங்குகின்ற நான்கு தூண்களாகும்.

இவற்றை ஆதரிப்பது நமது கடமை. இதில் சட்டத்திற்கு எவ்விதமான விரோதமும் கிடையாது. இவற்றை ஆதரிக்காமலிருப்பவர்கள் தேசத் துரோகிகள் ஆவார்கள்.

---

## 4

## தொழிற் கக்ஷியின் உதவி

"ஹிந்து" பத்திரிகையில் சாந்த நிஹாள ஸிங் எழுதியிருக்கும் வ்யாஸ மொன்றில், இந்தியா விடுதலை பெறும் விஷயத்தில் ப்ரிட்டிஷ் தொழிற் கக்ஷியாரின் ஸஹாயத்தை எத்தனை தூரம் எதிர்பார்க்கக்கூடுமென்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறார். இவ்விஷயமாக இவர் நேரே தொழிற் கக்ஷித் தலைவருள்ளே முக்யஸ்தரைக்கண்டு ஸம்பாஷணை செய்திருக்கிறார். ஸ்ரீ நிஹாள ஸிங் சொல்லியிருப்பதன் சுருக்கமான கருத்துப் பின்வருமாறு :—தொழிற் கக்ஷியில் இரண்டு பகுதிகளிருக்கின்றன. இப்போதுள்ள கவர்ன்மெண்ட் மாறித் தொழிற் கக்ஷி கவர்ன்மெண்ட் ஏற்பட்டால் மந்திரி ஸ்தானங்களெய்தக்கூடிய மிஸ்டர் க்ளைன்ஸ் (பொதுத் தொழிலாளிகளின் தேசீய ஐக்ய ஸங்கத் தலைவர்), மிஸ்டர் ஆர்தா ஹெண்டர்ஸன் (தொழிற் கக்ஷியின் கார்யதரிசி), மிஸ்டர் ஆடம்ஸன் (பார்லிமெண்ட் தொழில் ஸமிதியின் அதிபர்) முதலியவர்களும் இவர்களைச் சேர்ந்தோரும் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கிடைக்க வேண்டுமென்றும், அதில் தொழிற் கக்ஷியார் இயன்றமட்டுந் துணைபுரிய வேண்டுமென்றும் கருதுவோரே யாவார். ஆனால் அதற்கு மாண்டேகு செம்ஸ்போர்ட் திருத்தங்களை அங்கீகாரம் செய்துகொண்டு, அதனால் எய்தக்கூடிய நலங்களை யெல்லாம் பாடுபட்டெய்தி, அப்பால் அதிக உரிமைகள் கேட்பதே தக்கவழி யென்பது இவர்

களுடைய கருத்து. இந்தக் கருத்தையொட்டி இந்தியர் நடந்து கொண்டால் மாத்திரமே மேற்கூறிய தொழிற் கக்ஷித் தலைவர்கள் நமக்குத் துணைபுரிவார்களென்றும், நம்மவர் ஒத்துழையாமையைக் கைப்பற்றினால் பிறகு, அவர்களுடைய உதவியை எதிர்பார்க்கவேண்டியதில்லையென்றும் ஸ்ரீமான் நிஹறள ஸிங் சொல்லுகிறார். ஆனால் மேற்கூறிய தலைவர்கள் சேர்ந்த பகுதியைத் தவிர ஆங்கிலத் தொழிற் கக்ஷிக்குள்ளேயே மற்றொரு பகுதியிருக்கிறது. அந்த மற்றொரு பகுதியார், பார்லிமெண்ட் அனுஷ்டானங்களைக் கடைப்பிடித்தொழுகி, அவற்றின் மூலமாகத் தொழிற் கக்ஷியின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளாமல், பலாத்காரமான புரட்சி முறையாலே தொழிலரசு ஸ்தாபிக்கவேண்டுமென்ற நோக்கமுடையவர்கள். இந்தியா ஒத்துழையாமையைக் கைக்கொள்ளுமிடத்தே, பிற்கூறிய தொழிற் பகுதியினரின் ஆதரவை மட்டுமே எதிர்பார்க்கலாமென்று ஸ்ரீ நிஹறள ஸிங் தெரிவிக்கிறார். இங்ஙனம் ஸ்ரீ நிஹறள ஸிங் வரையறுத்துப் பாகுபாடு செய்திருப்பதில் ஒரு சிறிதுண்மையிருத்தல் மெய்யேயெனினும், இது முற்றிலும் சரியென்று நாம் நினைக்க இடமில்லை. ஏனென்றால், ஒத்துழையாமை முறை பலாத்காரச் செயல்களை மறுக்குமியல்புடையது; புரட்சி மார்க்கத்தைச் சார்ந்ததன்று. எனவே, ஆங்கிலத் தொழிலாளிகளில் மனுஷ்ய ஜாதியின் ஸமத்வத்தையும், ஸ்வாதீனத்தையும் வேண்டும் இயல்புடையோர், பலாத்கார முறைகளை வேண்டாத ஸமாதானப் பிரியராகிய போதிலும், இந்தியர் ஒத்துழையாமையைக் கைக் கொண்டதுபற்றி மன வருத்த மெய்த மாட்டார்கள். தம்மால் இந்தியாவுக்குச் செய்யக்கூடிய உதவியை அவர்கள் எப்போதும் செய்வார்கள். திருஷ்டாந்தமாகக் கர்னல் வெட்ஜ்வுட் தொழிற் கக்ஷித் தலைவருள்ளே புரட்சி வகுப்பைச் சேராதவரென்றே கொள்ளவேண்டும். மேலும், இவர் நம் நாட்டில் எழுந்திருக்கும் ஒத்துழையாமைக் கிளர்ச்சியில் அபிமான மில்லாதவர். புதிய சட்ட சபைகளை நாம் உபயோகப்படுத்தியே விடுதலைக்கு வழிதேட வேண்டுமென்ற கருத்துடையவர்.

அப்படியிருந்தும், காங்கிரஸ் ஸபையில் இவரை நோக்கி, ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி அய்யர் :—"ருஷியாவுக்கும், ஐர்லாந்துக்கும் பரிந்து பேசும் தாங்கள் இந்தியா ஒத்துழையாமையைக் கைக்கொண்ட போதிலும் பார்லிமெண்டில் எங்கள் சார்பாக நின்று போராட மாட்டீர்களோ?" என்று கேட்டபோது, என்ன மறு மொழி சொன்னார்?

“ இந்தியா ஒத்துழையாமையைக் கைக்கொண்டாலும், வேறென்ன செய்தாலும் நான் இந்தியர் விடுதலை பெறும் பொருட்டு வேலை செய்வதை நிறுத்த மாட்டேன் ” என்று விடையளித்தார்.

தொழிற்கக்ஷியில் புரட்சிக்காரரல்லாதாரிடையேயும் இந்தக் கர்னல் வெட்ஜ்வுட் போன்றோர் பலர் இருக்கக்கூடுமென்றே எதிர் பார்க்கிறோம்.

---

# 5

## தெலுங்க மஹா சபை

சென்ற வெள்ளிக்கிழமை (ஜூன் 1) யன்று நெல்லூரில் கூடிய ஆந்திர மஹாசபையில் சபாநாயகர் ஸ்ரீ வெங்கடப்பய்ய பந்தலு செய்த உபந்யாஸம் கவனிக்கத்தக்கது. ராஜநீதி சாஸ்த்திரத்தில் தெலுங்கர் நெடுங்காலத்துப் பெருமையுடையார். பாடலீபுத்ர நகரத்தில் நடந்த ஆந்திர ராஜ்யமும் பிற்காலத்தில் தமிழ் நாட்டைக் கட்டியாண்ட விஜய நகரத்து ராஜ்யமும் கீர்த்தி மிகுந்தனவன்றோ ! தெலுங்கர் தமிழரை ஆண்ட அடையாளங்கள் நமது பாஷையிலும் ஆகாராதிகளிலும் அழிக்க முடியாதபடி பதிந்து கிடக்கின்றன. நமது ஸங்கீதமும் நாட்டியமும் தெலுங்கிலேயே இன்றுவரை முழுகிக் கிடக்கின்றன. பாடகர்கள் பாடும் கீர்த்தனங்களில் உயர்தரமெல்லாம் தெலுங்குக் கீர்த்தனங்கள். தாசிகள் ஆட்டத்தில் பாடும் வர்ணங்கள் ஜாவளிகள் முதலியவற்றில் நல்ல உருப்படியெல்லாம் தெலுங்கு. நமது கிராமங்களிலுள்ள தெலுங்க ரெட்டிகளும், நாயுடுமாரும், ஆந்த்ரபிராமணப் புரோகிதர்களும், தெலுங்க தாசிகளும் ராயர் சமஸ்தான காலத்தில் இங்கே உறுதி பெற்றவர்கள். நமது விவாக காலங்களில் பாடும் பத்யம், லாலி முதலானதெல்லாம் தெலுங்குமுறை. நமது பாஷையில் “ கவனம் ” (ஆழ்ந்து நோக்குதல்), “ ஜொகுஸு ” “ எச்சரிக்கை ”, “ துரை ”, “ வாடிக்கை, ” “ கொஞ்சம் ” முதலிய நூற்றுக்கணக்கான தெலுங்குச் சொற்கள் சேர்ந்திருக்கின்றன. தெலுங்கர் தமிழ் நாட்டை ஆண்டபோது, அநீதியே கிடையாது, தமிழருக்கு வேறு நீதி

தெலுங்கருக்கு வேறு நீதி என்ற பேதம் கிடையாது. தெலுங்கு ஜாதி, ராஜ நீதியிலே நிபுணத்தன்மை உடையது.

மேற்படி கொள்கைக்கு நல்ல திருஷ்டாந்தமாக, இக்காலத்திலும்கூடத் தெலுங்கு தேசத்தார் தமிழரைக் காட்டிலும் ராஜாங்க வ்யவஹாரங்களில் தீவ்ர புத்தி செலுத்துகிறார்கள். ஆனால் நமக்குள் ஜாதி பேதமிருக்கிறதே என்றால் ஜாதிபேதம் இந்தியாவில் மாத்திரமில்லை, உலகத்தில் எல்லாத் தேசங்களிலும் இருக்கிறது. இந்தியாவில் கொஞ்சம் தீவ்ரமாகவும், விநோதமாகவும், மாற்றுவது கஷ்டமாகவும் இருக்கிறது. இப்போது பூமி முழுவதிலும் நடந்துவரும் மஹாப்ரளயத்தில் இந்த ஜாதிபேதம் தவிடு பொடியாய்ப் போய்ப் புதிய மாதிரி உண்டாகும். இது வெல்லாம் ஏன் சொல்ல வந்தேனென்றால், தமிழ் நாட்டு ஜனங்கள் வீண் சண்டைகளிலே பொழுது போக்குகிறார்கள். தெலுங்கர் ஜனாபி விருத்திக்கு வழியாகிய நல்ல உபாயங்களிலே புத்தி செலுத்தி வருகிறார்கள். சுதேசிய விஷயத்தில் இப்போது தெலுங்கருக்குள் இருக்கும் பக்தி சிரத்தையிலே நாலிலொரு பங்கு கூடத் தமிழ் ஜனங்களிடம் இல்லை. சென்ற வெள்ளிக் கிழமையன்றுகூட மேற்படி நெல்லூர் ஆந்த்ர மஹாசபைப் பந்தலில் வந்தேமாதரம் என்ற கோஷம் அபரிமிதமாக இருந்ததென்று தந்தி சொல்லுகிறது. கொஞ்ச காலத்துக்கு முன்பு கூடலூரில் கூடிய மாஹாஜனசபையில் "வந்தே மாதரம்" பாட்டுக்கூடப் பாடவில்லை யென்று கேள்விப்பட்டேன். தெலுங்கு ஜில்லாக்களில் ஒரு சபைகூட அப்படி நடந்திராது. இது நிற்க,

மேற்படி சபையில் ஸ்ரீ வேங்கடப்பய்யா சபா நாயகராகப் பேசிய வார்த்தைகளின் ஸாரம் பின் வருமாறு :—

1. தெலுங்கு தேசத்தைத் தனி மாகாணமாகப் பிரிக்க வேண்டும்.

2. இந்தியாவுக்குத் தன்னாட்சி கொடுக்கவேண்டும்.

3. இயன்றவரை இந்தியா முழுவதையும், பாஷைகளுக்குத் தக்கபடி வெவ்வேறு மாகாணமாக்க வேண்டும். அதாவது, மதராஸ், பம்பாய், ஐக்ய மாகாணம், மத்ய மாகாணம், பஞ்சாப், வங்காளம் என்ற பிரிவுகளை மாற்றித் தமிழ்

நாடு, தெலுங்கு நாடு, மராட்டிய நாடு, கன்னட நாடு, ஹிந்துஸ்தானம், வங்க நாடு என்று பாஷைக்கிரமப்படி வகுக்கவேண்டும்.

4. ஸ்வபாஷைகளில் கல்விப் பயிற்சி செய்விக்க வேண்டும். ராஜ்ய காரியங்களும் இயன்றவரை ஸ்வபாஷையில் நடக்க வேண்டும்.

மேற்படி நாலம்சங்களில் முதலாவது, மூன்ருவது நாலாவது இம்மூன்றும் ஒரு பகுதி; இரண்டாவது மற்ருெரு பகுதி. இரண்டாவது தாய்ப் பகுதி; மற்றவை கிளைப் பகுதிகளாகும்.

என்னுடைய அபிப்ராயத்தில் மேற்கண்ட கொள்கையெல்லாம் நியாயமென்றே தோன்றுகிறது. ஆனாலும், இந்த ஸமயத்தில் ஆந்திரரைத் தனிப் பிரிவாக ருஜுப்படுத்துவதைக் காட்டிலும், ஆஸேது ஹிமாசல பர்யந்தம் உள்ள ஹிந்துக்களெல்லாம் ஒன்று என்ற மூல மந்திரத்தை நிலைநாட்டுவதே அவசியமென்று என் புத்திக்குத் தோன்றுகிறது. ஹிந்துக்களெல்லாம் ஒரே கூட்டம். வேதத்தை நம்புவோரெல்லாம் ஸஹோதரர். பாரத பூமியின் மக்களெல்லாம் ஒரே தாய்வயிற்றுக் குழந்தைகள். நமக்குள் மதபேதம், ஜாதிபேதம், குலபேதம், பாஷைபேதம் ஒன்றுமே கிடையாது. இந்தக் கொள்கைதான் இந்தக் காலத்துக்கு யுக்தமானது. ஹிந்து மதத்தை உண்மையாக நம்புவோரெல்லாம் ஒரே ஆத்மா, ஒரே உயிர், ஒரே உடம்பு, ஒரே ரத்தம், ஒரே சுடர், ஒன்று.

ஹிந்துக்கள் உயர்ந்த நிலைமைக்கு வரவேண்டுமானல் ஐக்ய நெறியை உடனே அனுசரிக்கவேண்டும். போன வருஷம் கீழ்க்கடலோரத்திலே பெரிய புயற்காற்றடித்தது. ஒன்றியிருந்த வீடுகள் பிழைத்தன. தனிக் குடில்களெல்லாம் காற்றிலே பறந்து போயின. உலகத்தில் புதிய ஞானம், புதிய வாழ்க்கை, புதிய அறம், புதிய நெறி தோன்றக்கூடிய காலம் பிறந்து விட்டதென்று மேதாவிகளெல்லாரும் ஒருங்கே சொல்லுகிருர்கள். இங்ஙனம் புதிய ஞானம் பிறக்க வேண்டுமானல் அதற்கு ஹிந்து மதமே முக்ய ஸாதனமென்று நாம் சொல்லுகிறோம். ஸ்வாமி விவேகாநந்தர், ரவீந்த்ரநாத டாகுர், ஜகதீச சந்திரவஸு முதலிய பெரியோர்களும் அங்ஙனமே சொல்லுகின்றனர்கள். இந்த ஸமயத்தில்

ஹிந்துக்கள் பிரிவு பேசலாமோ ? ஹிந்துக்கள் பிரிந்து கிடந்தால், ஹிந்து தர்மத்தின் மஹிமையை உலகத்தார் காண்பதெப்படி ?

ஹிந்து தர்மம் பெருமாள் கோயிலைப் போலே; நிற்பது எங்கே நின்றாலும் அத்தனை பேருக்கும் ப்ரஸாத முண்டு. பகவத் ஸந்நிதியில் ஜாதிபேதமில்லை. அத்தனைபேரும் கலந்து நிற்கலாம். ஹிந்து தர்மம் சிதம்பரத்தைப் போலே. அதனுள்ளே, பறையரும் ஒளியில் கலந்து விடலாம். மேலும் தெலுங்கருக்குத் தெலுங்கு பாஷையில் பிறந்திருக்கும் உண்மையான அபிமானம் தமிழருக்குத் தமிழினிடமில்லை. தமிழிலிருந்து பூமண்டலத்திலுள்ள பாஷைகளெல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்தாலே ஒருவன் தமிழபிமானியாகமாட்டான். பள்ளிக்கூடத்துச் சாஸ்திரங்களெல்லாம் தமிழ் பாஷையில் கற்றுக் கொடுக்கும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழராகப் பிறந்தோர் கூடியிருக்கும் சபைகளிலேயும், தமிழராகப் பிறந்தோர் ஒருவருக்கொருவர் பேசும்போதும், இதர பாஷைகள் பேசாமல் தமிழே பேசும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழில் புதிய கலைகள், புதியகாவியங்கள், புதிய உயிர், தோன்றும்படி செய்வோன் தமிழபிமானி. தமிழபிமான முள்ளவன் ஹிந்து தர்மத்தைக் கைக்கொண்டு நிற்பவன். அதுவே தமிழபிமானியைச் சோதிக்கும் வழி. ஏனென்றால் தேவாரத்திலும், திருவாசகத்திலும், திருவாய் மொழியிலும், திருக்குறளிலும், கம்பராமாயணத்திலும் அன்பு கொள்ளாதவனுக்குத் தமிழபிமானம் உண்மையிலே பிறக்க நியாயமில்லை. மேற்படி நூல்களை நன்றாக உணர்ந்தவன் ஹிந்து தர்மத்தாலேயே இந்த உலகம் நிலைபெற்று நிற்குமென்பதை அறிவான். ஸர்வ தர்மங்களுக்கும் ஹிந்து தர்மமே வழி காட்டி யென்பதைக் காண்பான். ஹிந்து தர்மத்தை நிலை நிறுத்தினால் ஆந்திரர், கன்னடர், மராட்டியர், ஹிந்துஸ்தானிகள், குஜராத்திகள், வங்காளிகள், தமிழர், மலையாளர் எல்லாருக்கும் நல்ல காலம் பிறக்கும். ஆதேசம் சொல்லுகிறது :—"வேத வழியே வழி. வேறு வழியில்லை."

"மஹான்கள் கவிகளாயினும், சாஸ்திரக்காரராயினும், வேறு எவ்வகையிலே தேசத்துக்கு உபகாரம் செய்திருந்த போதிலும், அவருடைய ஜன்மதினத்தைக் கொண்டாடி சபைகள் நடத்தி, ஆராய்ச்சிகள் செய்வது தேசத்தின் அறிவு வளர்ச்சிக்குப் பெருந்துணையாகும்."

**கவி** என்ற கட்டுரையிலே திருவள்ளுவர், இளங்கோ என்பவர்களைப் பற்றி அவர்கள் பிறந்த ஊர், அவர்கள் ஜன்ம தினத்தைக் கண்டறிய வழி ஆகிய விஷயங்கள் பேசப்படுகின்றன. ஆனால் கம்பரைப் பற்றி இவ்விதக் குறிப்புக் காணப்பெறவில்லை. அது **சில கவியரசர்** என்ற கட்டுரையிலே திருவள்ளுவரைப் பற்றிய குறிப்புக்குப் பின் கீழ்க்கண்டவாறு ஒரு பத்தியாக உள்ளது :—

"கம்பநாடர் மாயவரத்துக்கு ஸமீபத்திலுள்ள திருவெழுந்தூரில் பிறந்தவர். அந்த ஊரிலே அவருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டுமென்று சில வருஷங்களின் முன்பு ஒருவர் முயற்சி செய்தார். ஊக்கமில்லாமையால் அம்முயற்சி நிறைவேறவில்லை. கம்பனுடைய ஜன்ம திதி நிச்சயமாகத் தெரியவில்லை."

---

# 6

## தமிழ்

கல்கத்தாவிலிருந்து வெளிப்படும் 'மாடன் ரெவ்யூ' என்ற மாதப் பத்திரிகையின் தை—மாசி ஸஞ்சிகையை நேற்றுப் பொழுது போக்கின் பொருட்டாகத் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதிலே திருநெல்வேலி ஹிந்து காலேஜ் சரித்திர பண்டிதர் ஸ்ரீ நீலகண்டையர் ஒரு சிறிய கடிதமெழுதியிருக்கிறார். ஏற்கனவே மேற்படி பத்திரிகையில் ஸ்ரீ யதுநாத ஸர்க்கார் என்ற வித்வான் எழுதியிருந்த சில வார்த்தைகளைக் குறித்து ஸ்ரீ ஐயர் தமது கருத்துக்களை வெளியிடுகிறார்.

கலாசாலையிலே சரித்திரப் பாடங்களை இங்கிலீஷில் கற்றுகொடுப்பது பயனில்லாத வீண் தொல்லையாக முடிகிறதென்றும் தேச பாஷைகளிலே கற்றுக் கொடுத்தால் நல்ல பயன் விளையுமென்றும் ஸ்ரீ ஸர்க்கார் தமது அனுபவத்திலே கண்ட செய்தியைச் சொன்னார். அதற்கு நமது திருநெல்வேலிப் பண்டிதர் சொல்லுகிறார் : "பாஷைத் தொல்லை பெருந் தொல்லையாகவே இருக்கிறது. ஆனால் எனது ஜில்லா, எனது காலேஜ் சம்பந்தப்பட்ட வரையிலே பிள்ளைகளுக்குச் சரித்திரப் பாடம் இங்கிலீஷிலே கற்றுக்கொடுப்பதைக்

காட்டிலும் தேச பாஷையில் கற்றுக்கொடுப்பது அதிக பயன் படுமென்று சொல்வதற்கில்லை. எனது மாணாக்கர்களிலே பெரும்பாலோர் இங்கிலீஷ் இலக்கணப் பிழைகளும் வழக்குப் பிழைகளும் நிறையச் செய்தபோதிலும் மொத்தத்திலே தமிழைக் காட்டிலும் இங்கிலீஷை நன்றாக எழுதுகிறார்கள். சரித்திர விஷயங்களை வியவஹரிக்கும்போது எனக்கும் இங்கிலீஷ்தான் தமிழைக் காட்டிலும் நன்றாகச் சொல்ல வருகிறது."

இங்ஙனம் எழுதுகிற ஸ்ரீ நீலகண்டையரின் நிலைமையை நினைத்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். சொந்த பாஷையை நேரே பேசத் தெரியாதவர்கள் சாஸ்திர பாடங்கள் நடத்தும் விநோதத்தை இந்தத் தேசத்திலேதான் பார்த்தோம். புதுமை! புதுமை!! புதுமை!!!

மேலும் இவர் தமக்குத் தாய் மொழி தெரியாதென்ற செய்தியை வங்கப் பத்திரிகைக்கு என் எழுதப் போனார் என்பது எனக்கு அர்த்தமாகவில்லை. ஜப்பானியர், சீனர், நார்வேக்காரர், ஸ்விஸ் ஜாதியார், இத்தாலி தேசத்தார், ஹாலந்துக்காரர் முதலிய உலகத்து ஜாதியாரெல்லாம் நம்மை அறிவிலும் சாஸ்திரங்களிலும் பாஷைத் திறமையிலும் தாழ்வென்று நினைத்து வந்தார்கள். இப்போதுதான் ஹிந்து ஜாதியாராகிய நாம் காட்டு மனிதரில்லை, வாலில்லாத குரங்குகளில்லை, நமக்குப் பாஷைகள் இருக்கின்றன; நமக்குள்ளே சாஸ்திர விற்பன்னர்கள் இருக்கிறார்கள்; கவிகள் இருக்கிறார்கள் என்று நம்மவரிலே சிலர் வெளியுலகத்தார் தெரிந்துகொள்ளும்படி செய்து வருகிறார்கள். இதற்குள்ளே தமிழ் வகுப்பு மற்ற ஹிந்துஸ்தான வகுப்புக்களைக் காட்டிலும் குறைவுபட்டதென்று நம்மீது சிலர் முரசடிக்கத் தொடங்குவது எனக்கு நகைப்புண்டாக்குகிறது.

என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கொஞ்சம் சொல்லிவிடுகிறேன்.

உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம்போல் விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப் போல வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமேயில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நானறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை. நாளை வரப்போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள். அதுவரையில் இங்குப் பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச் சொல் நேரே வராவிட்டால் வாயை மூடிக்கொண்டு வெறுமே இருக்க வேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தைகள் சொல்லாதிருக்க வேண்டும், இவ்வளவுதான் என்னுடைய வேண்டுகோள்.

குறிப்பு.—பாரதியாரின் அளவு கடந்த தாய் மொழிப் பக்திக்கு இக் கட்டுரை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. தாழ்வு மனப்பான்மையுற்றுச் சோர்ந்து கிடந்த தமிழரைப் பாரதியார் இது போன்ற வசனங்களாலும், "யாமறிந்த மொழிகளிலே" என்று தொடங்குவது போன்ற பல பாடல்களாலுந் தலை நிமிர்ந்து நிற்கச் செய்ததோடு தமிழினிடத்தே மிகுந்த பற்றும் பெருமையும் கொள்ளுமாறு செய்தார்.

---

## 7

## சிறிதும் பெரிதும்

ராஜரீகப் பஞ்சத்தில் நெடுங்காலம் கஷ்டப்பட்டு பாரத தேவி வானத்தை நோக்கிக்கொண்டிருந்தாள். ராஜாங்கச் சோதிடர் ஒரு பலமான ஸ்வராஜ்ய மழைக் காற்று அராபிக் கடலைக் கடந்து விட்டதென்றும் பெரிய மழை பெய்யுமென்றும் சோதிடங் கூறினர். அப்போது பார்த்தாலோ பேஹாரில் மஹமதியர் மேலே ஹிந்துக்கள் கலஹ மழை தொடுத்தார்கள்—கனத்த மழை !

பிற தேசங்களிலும் மதக் கலஹங்கள் உள. அவை லௌகிகப் போட்டியாலும் விரோதத்தாலும் ஏற்படும். நமது தேசத்திலேதான் கேவலம் மதத்துக்கே சண்டை ! இந்த உலகத்தில் நாமே அன்ய மத ஆதரவில் சிரேஷ்டரென்று வாயினாலே பிதற்றுகிறோம். நவீன ஐரோப்பாவில்

கலகங்கள் சோற்றுக் காரணமாக விளேவன. அங்கு நிலக் கரிக் கூலிக்காரரும், கப்பல் கட்டுந் துறைமுகத்து வேலைக் காரரும், ரயில்வே கூலிக்காரரும் இடையிடையே பெரிய கலகம் பண்ணுகிருர்கள். அதிலிருந்து படிப்படியாக புதுச் சட்டங்கள் பண்ணுதல், பழஞ் சட்டங்களே ரத்து செய்து வைத் தல், சிப்பாய்களே அழைத்தல்—ரத்தச் சேதம் இத்தனையும் நடக்கும். அங்கே இந்த மாதிரிச் சண்டைகளில் கக்ஷி இரண்டே. ஒரு கக்ஷி சண்டை நடத்துகிறது. மற்ருெரு கக்ஷி அடக்குகிறது. நமது தேசத்தில் இருப்பதுபோல் வேடிக்கை பார்க்க ஒரு மூன்ரும் கக்ஷி கிடையாது.

இங்கிலாந்தில் முன்ஞெரு காலத்தில், அதன் ராஜாங்க யந்திரம் சரியானபடி செம்மைப்படாமலிருந்தபோது, ப்ரோ தஸ்தாந்துக் கக்ஷியாருக்கும் ரோமான் கத்தோலிக்க மதஸ் தருக்கும் கொடுமையான சண்டைகள் நடந்தன. அந்தப் போராட்டத்தில் ஒரு கக்ஷிக்கு மற்ருெரு கக்ஷி செலுத்திய அநியாயங்கள் பல. நெடுங்காலம் வரை கத்தோலிக்கக் கிறிஸ்தவர் மிகவும் கஷ்டப்படும்படி நேர்ந்தது. இன்றும் அங்கு ப்ரோதஸ்தாந்து மதமே ராஜாங்க மதமென்று வைத் திருப்பது கத்தோலிக்கருக்கு நிலேத்த அநியாயமேயெனினும், கலகமும் அதிருப்தியும் வெளிப்படாமல் செய்துவிட்ட காரணங்கள் எவை ?

எல்லாரும் ஒன்று சேர்ந்து ஸ்வராஜ்யம் பண்ணுகிருர்கள். அதனுல் கலகங்கள் நின்றன. ஸ்காட் ஜாதியும் இங்கிலிஷ் ஜாதியும் ஜன வகுப்பிலும், பாஷையிலும், ரஸஞானத் திலும், சரித்திரத்திலும் வெவ்வேறு ஜாதிகள். கடைசியாக இங்கிலாந்துக்காரரும் ஸ்காட்டுகளும் ஒன்றுகூடி ஸ்வராஜ்யம் ஏற்படுத்திஞர்கள். அதிலிருந்து ஒற்றுமையுண்டாய் அவர் களுக்குள் நெடுநாள் இருந்த கொடிய பழைய விரோதப் புண் களெல்லாம் தீர்ந்து க்ஷேமலாபங்கள் ஒன்ருயின. அப்படி ஒற்றுமை இங்கிலாந்துக்கும் ஐர்லாந்துக்குமிடையே உண்டா காத காரணம் யாது ? ராஜரீக உரிமைகளில் ஸமத்வம் இல்லாமையே காரணம். வேறென்ன ?

நமது தேசத்தில் இந்த ஹிந்து மஹமதிய விரோதம் ஒரு ஸங்கடமான அம்சம். முழு உண்மையினின்றும் விலகு தல் பாவம், பாவமுள்ள இடத்தில் தண்டனேயுண்டு. மதக் கொள்கை பரவ ஒரு ஆத்ம விளக்காக இருப்பதைவிட்டுப்

புராணங்களையும் புறக் கிரியைகளையும் ப்ரதானமாகக் காட்டுமிடத்தே மற்றெதனைக் காட்டிலும் அது பெரிய கலஹாஸ்பதமாகிறது. மதக் கொள்கைக்காகச் சிந்தப்பட்ட ரத்தத்தால் ஐரோப்பிய சரித்திரம் செவ்விய கறைப்பட்டிருக்கிறது. " அஹிம்ஸா : பரமோ தர்ம : " என்பது உங்கள் கொள்கையாயின், அது அஸாத்யமானதாயினும் சிறிது சிறிது அதை நோக்கிச் செல்ல முயலக்கூடாதா ? மதக்கொள்கையென்ற பெயர் வைத்துக்கொண்டு நீங்கள் ஒருவித மிருகத்தைக் கொல்லவும், பிறர் தங்கள் மதக்கொள்கைபற்றி மற்றொரு மிருகத்தைக் கொல்லவும், அது காரணமாக மீண்டும் மதக்கொள்கை என்று நீங்கள் அந்த மனிதரைக் கொல்லத் தலைப்படுதல் கொடுமையன்றோ ? நமது மதம் எப்போதும் சடங்கு மயமாகவே இருந்துவிடாதென்று நம்புகிறோம். ஹிந்துவும் மகமதியனும் ஒரே ராஜரீக ஆதர்சமுடையவர்களாய், நமது ராஜரீக வாழ்க்கை உண்மை பெறுமாயின் வெளி வேற்றுமைகளைத் துச்சமாகக் கருதக்கூடிய மன ஒற்றுமை வந்துவிடுமென்றும் நம்புகிறோம். நமது சொந்த துக்கங்களையும் நம்பிக்கைகளையும் பற்றின கதை அம்மட்டிலிருக்க, இதில் மூன்றாவது கக்ஷியாருக்கு என்ன வேலை ?

சில தினங்களுக்கு முன்பு ரயில் வண்டியில் நானும் ஒரு ஆங்கிலேயனும் சந்தித்தோம். ஸ்வராஜ்யத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். பேஹாரில் ஒரு ஹிந்துஸ்தானி ஜமீந்தாரை நோக்கி ஓர் ஆங்கிலேய தளகர்த்தன், " உங்கள் குடித்தனக்காரரை அடக்கியாள உங்களால் முடியவில்லையே உங்களுக்கு ஸ்வராஜ்யம் தகுமா ?" என்று கேட்டதாக அந்த ஆங்கிலப் பிரயாணி என்னிடம் சொன்னான். இங்ஙனம் அந்த ஆங்கிலேயன் சொல்லிய கதையில் ஷை தளகர்த்தனுக்கு ஜமீந்தார் என்ன மறுமொழி யுரைத்தானென்பதையும் தெரிவிக்கவில்லை. அநேகமாக ஜமீந்தார் தாழ்ந்த ஸலாம் போட்டு :—" துரையே, நாங்கள் தகுதியற்றோர். இந்தக் குடியானவரிடமிருந்து என்னைக் காப்பாற்றினால் போதும். எங்களுக்கு ஸ்வராஜ்யம் அவசியமில்லை " என்றான் போலும். ஸ்வராஜ்யம் கனவுலகத்திலிருக்கிறது. எதிரே தளகர்த்தன் நிற்கிறான். குடியானவர் பின்னே பெருங் கலகம் பண்ணுகிறார்கள். அந்த ஜமீந்தார் வேறென்ன சொல்வான் ? நான் என்னுடன் ரயில் வண்டியில் யாத்திரை புரிந்த ஆங்கிலேயனுக்குரைத்த மறுமொழி யாதெனில் :— " முன்பு எங்களவர் ஸ்வராஜ்யம் நடத்தியபோது இந்த

மாதிரி ஹிந்து மஹமதியச் சண்டைகள் நடந்ததில்லே. மேலும், பேஹாரில் தளகர்த்தனிடம் படையிருந்தது. அதை ஏழை ஜமீன்தார் மிகவும் ஆவலுடன் நோக்கி யிருப்பான். ஒருவன் கையிலே படைகளிருக்க மற்ருெரு வன் சண்டையிடுதல் எப்படி இயலும்? முன்பு சுதேசியக் குழப்பத்தின் நாட்களில் ஜாமல்பூர் முதலிய தூர ஸ்தலங் களில் மாத்திரமேயன்றி கல்கத்தாவின் நடு மத்தியில் பெரிய பஜாரில் மஹமதியர் ஹிந்துக்களை ஹிம்சிக்க ஸர்க்கார் இடம் கொடுத்தது. இது ஆளபபடுவோருக்கு மாத்திரமே யன்றி ஆள்வோருக்கும் ஒரு வசை. இந்த மாதிரி மைஸூர் ராஜ்யத்திலேனும், ஹைதராபாத் ராஜ்யத்திலேனும், நடந்திருந்தால் ஷ தளகர்த்தருக்கு மறுமொழி யுரைத்தல் அதிக சிரமமாகலாம்" என்றேன்.

நமது குறை அதுவே. நமக்கு அதிகாரப் பொறுப் பில்லே. நம்மை வெளிநின்று காக்கும் கடமையை நம்மை ஆள்வோர் மேற்கொண்டனர். அதனுல் நாம் நமக்குள்ளே உதவியற்றவர்களாய் மேன்மேலும் கெடுகிறேம். அதனுல் அதிகாரிகள் நம்மிடம் அதிக இகழ்ச்சி காட்டும்போது நாம் எதிர்த்து மறுமொழி சொல்லத் துணிவில்லேயாயினும் மனதுக்குள்ளே வைகிறேம். நம்மிடம் அதிகாரம் இருந்தால், அதைக் காப்பது ஹிந்துவுக்கும் மஹமதியருக்கும் ஒருங்கே கடமையாம். கலகம் நேரிடாமல் இருதிறத்தாரும் ஜாக்ரதையாக இருப்பார்கள். இங்ஙனம் இந்தியாவில் ப்ரிடிஷ் ராஜ்யம் சிறிது காலத்துக்கு மாத்திரமேயன்றி என்றும் ஸ்திரமாகும்.

ஆனுல் ஒரு வேளை சரித்திரத்தின் அடுத்த பக்கத்தை நாம் திருப்பும்போது, ப்ரிடிஷ் ஜாதியானது தனது 'நல்லரசாட்சி'யின் பின்னப்பட்ட குறைகளுக்கிடையே, நம்மை பலஹீனராய், தற்சார்பு தெரியாதவராய், தற்காப்புக்குத் தகுதியற்றவராய் உண்மையான தன்னலமறியாதவர்களாய், நமது நாட்டுக் கோடானுகோடி ஜனங்களே உயிருடன் அடங்கா மல் தலேயெடுத்திருக்கும் இதர ஆசியா தேசத்துக்கிடையே விட்டுவிட்டால் இந்த நிராதரவான ஆண்களும், பெண் களும், குழந்தைகளும் தமக்கு முடிவின்றி நேரும் துன்பங் களுக்கு யாரை நோவர்? அல்லது எப்போதும் மாறுகிற பூலோக சரித்திரத்தில், இந்தியாவின் ப்ரிடிஷ் ராஜ்ய சரித்தி ரம் மாத்திரம் எக்காலத்திலும் மாருமலிருக்குமென்று

வைத்துக்கொண்டபோதிலும் நாம் என்றும் பிரிந்தவராய் தேச உழைப்பில் பொதுக் கட்டில்லாதவர்களாய், சாசுவதச் சிறுமையில் பிணிப்புண்ட மனத்தினராய், அதிகாரமின்றி, குறுகி, நமது வருங்காலத்தைச் சூழ அன்னியரின் இச்சை யென்ற பெருஞ்சுவர் வளர்ந்து நிற்க விதியா ?

நாம் ஒரே ஆட்சியின் கீழிருக்கிறோம். ஒரே பொறுப்பின் கீழில்லை. எனவே நமதொற்றுமை புறத்தோற்றம். நம்மை அது சேர்க்கவில்லை. ஒரு வரிசையாக நிறுத்தி வைத்தது. எங்கேனும் லேசாக அடி விழுந்தால் ஒருவர் மேலே ஒருவர் முட்டுகிறோம். இந்த ஐக்யம் உயிர் உடைய தன்று ; விழித்துக்கொண்டு ஒரே பாதையில் நடக்கும் மனிதரின் ஒற்றுமை போன்ற ஒற்றுமை. ஒரே தரையின் மீது தூங்குவோர் மாதிரி ஒற்றுமை. இந்த ஒற்றுமையில் கர்வப்பட இடமில்லை. மகிழ்ச்சி கொள்ளவும் இடமில்லை. ஒன்றுகூடி ஸ்தோத்ரப் பாட்டுகள் பாடவும், ஒன்றுகூடித் தலை குனியவும் இடங்கொடுக்கும். நம்மைத் தூக்கிவிடாது.

பழைய காலத்தில் ஜாதிக் கட்டினால் நாம் ஸ்வ ஜனங் களுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளில் தவறாமலிருந் தோம். அது குறுகின களம். நாம் பிறந்த கிராமமே ஸ்வதேசமென்று நினைத்துக் கொண்டிருந்தோம். இருந் தாலும், அதன் வரம்புகளுக்குள், செல்வர் தமது செல்வப் பொறுப்பையும், புலவர் தமது புலமைக் கடமையையும் உணர்ந்திருந்தனர். ஒருவன் எவ்விதமான அதிகாரம் கொண்டிருந்தாலும், அவனைச் சூழ நின்றோர் அதனை மாற்றுதல் இயலும். முயற்சியும், பொறுப்புமுள்ள அவ்வித வாழ்க்கையில் மனிதர் மகிழ்ச்சியுறவும், பெருமை கொள்ள வும் இடமிருந்தது.

ஆனால் நம் பொறுப்புக்கள் ஜாதிக்கட்டிலிருந்து விலகி விட்டன. இப்போது நமக்கு நியாயம் செலுத்துவதும் ஸர்க் கார்; காப்பாற்றுவதும் ஸர்க்கார் ; வைத்தியம் செய்வதும் ஸர்க்கார்; தண்டிப்பதும் ஸர்க்கார் ; எது ஹிந்து தர்மத்துக் கடுத்தது, எது அடுக்காதது என்பதை ஷெ ஸர்க்கார்தான் தீர்மானம் பண்ணுகிறது. நமக்கு லாகிரி வஸ்துக்கள் தயார் செய்து கொடுக்கும் பொருட்டாகச் சாராயம் வடிக்குங் கடமையும் அதுவே செய்கிறது. கிராமத்தான் ஒருவனைப் புலி தின்றுவிட்டால், மாஜிஸ்த்ரேட்டுக்கும், அவருடைய

ஸ்நேஹிதர்களுக்கும் வேட்டைக்குப் போக ஸௌகர்யம் ஏற் படுத்திக் கொடுக்கிறது. நமது ஜாதிக் கட்டின் விதிகள் நம்மால் பொறுக்கமுடியாதபடிப் பாரமாய் விட்டன என்பது மெய்யே. பிராமணன் தக்ஷிணை வாங்கிக் கொள்ளுகிறான்; படிப்புக் கற்றுக் கொடுப்பதை விட்டுவிட்டான்; ஜமீன்தார் குடித்தனக்காரரைக் கசக்கிப் பிழிகிறான்; ப்ரதியுபகாரம் கிடையாது. மேற்குலத்தார் பொது ஜனங்களின் மதிப்பை வேண்டுகின்றனர்; அதற்குக் கைம்மாறாகக் காப்பில்லை. நமது சடங்குகள் வீண் செலவு மிகுந்தும் ஸ்நேஹ வழி குறைந்தும் வேஷமாத்ரமாயின. இடையே ஜாதி முட்டுதல். பல குருக்களின் கொள்ளை தீவிரம். ஜாதிப் பசுவுக்கு நாம் தீவனம் போடுகிறோம். அது நமக்குப் பால் கொடுப்பதை நிறுத்தி முட்டுவதை நிறுத்தவில்லை.

நம்மவர் முன்பு நாடு நடத்திய திறமையைக் காட்டிலும் வெளியார் நடத்தும் நாடு செவ்விதா அன்றா என்பது விசாரணையன்று. மனிதர்கள் மரங் கல்லாக இருந்தால் அடக்கி வைப்பதே சிறந்த தொழில். ஆனால் மனிதர் ஜீவ ஜந்துக்கள். உயிரும், விருத்தியும், முன்னேற்றமும் நாடுவோர் தேசக் காரியங்களினின்று பிரித்து நம்மவரை மன மேங்க விடுதல் குரூரம்; சுதந்திரத்துக்கு விரோதம்.

நாம் அதிகாரம் கேட்பது தற்புகழ்ச்சிக்கன்று. பிறரைத் துன்புறுத்த அன்று. பிறர் செல்வத்தைப் பறிக்க அன்று. பெருந் தொகையான ஜனங்களைக் கொல்லப் பெருமடங்கான சக்தி ஸம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கத்தாலன்று. 'ஸமாதான ஹிந்து' என்று பிறர் நம்மைக் குறிக்கும் எளனச் சொல்லை நாம் மகுடமாகத் தரிப்போம். நாம் ஆத்ம சாஸ்த்ரவாதிகளாக இருப்பது பற்றிப் பிறர் நம்மை நகைப்பதைப் பொறுத்துக் கொள்வோம். ஸ்வதேசத்துக்கு ஸேவை பண்ண வலிமை வேண்டுகிறோம். தேசப் பொறுப் புக்களை வஹிக்கும் இயற்கையுரிமை யில்லாமையால், முழுப் பயன் கேடாகிய இகழ்ச்சியின் துன்பங்கள் நம் நெஞ்சைத் தின்னுகின்றன.

இதனாலே நம் இளைஞர் சிறிது காலமாக 'ஜன ஸேவை' யைக் கைக்கொண்டிருப்பது காண்கிறோம். உயிரற்ற ஸமா தானமென்ற அறைக்குள் மனிதன் எக்காலத்திலும் திருப்தி யுடன் அடைபட்டிருக்கமாட்டான். அபிவிருத்திக்குப்

பாடுபடுதல் அவனுடைய அத்யந்த அவஸரம். தான் துன்பப் பட்டும் ஒரு கொள்கையைத் தூக்கி நிறுத்துதல் அதன் அடையாளம். எல்லாப் பெரிய தேசத்தாரின் சாத்திரத்திலும் இந்தப் போராட்டத்தின் எதிர்க்க முடியாத நதி நுரை வீசி, உறுமி, ஜயாபஜயங்களாகிய மேடு பள்ளங்களினூடே தடைகளை யெல்லாம் உடைத்துக்கொண்டு போகிறது. நம்மைப் போல் ராஜரீகப் பக்கவாத நோயுடையவர்களின் கண்ணிலும் சரித்திரத்தின் மஹத்தான இந்திர ஜாலம் படாதவாறு தடுத்தல் ஸாத்யமில்லை. பெரியோர் வாக்கியங்களால் ஊக்க மெய்திச் சரித்திரத்தின் பாடங்களை நன்கு கற்றவனாய் உயிரின் வேகம் நிரம்பியிருக்குமோனிளைஞன், பிறர் கட்டாயத்தால் வேலையற்றிருப்பதைக் காட்டிலும் சாதல் நன்றெனக் கருதுவான். 'பந்தோபஸ்த்' வைக்கப்பட்ட ஸசீந்த்ரநாத தாஸ குப்தன் தற்கொலை செய்துகொள்ளுமுன் எழுதிய மன முருகும்படியான கடிதத்தினால் இது தெளிவாகிறது.

ஆனால் வெள்ளத்திலும் பஞ்சத்திலும் ஜனங்களுக்குதவி செய்ய இடமிருப்பது கொண்டிட மனுஷ்ய ஹிருதயத்தின் நானாவித இச்சைகளும் திருப்தியடைந்துவிடமாட்டா. நாடோறும் மனித வாழ்க்கையில் சேரும் எல்லாவிதத் தொழில்களும் செய்ய இடங்கொடுத்தால்தான் திருப்திபெறும். இல்லாவிட்டால் அந்த இச்சைகள் நெஞ்சுக்குள்ளேயே அமுங்கி விஷமுடையனவாய்த் தேசத்தைத் துயர்ப்படுத்தும் ரஹஸ்ய யத்தனங்களாகின்றன. ஆதலால் ஆதர்சத்தை அனுபவமாக விரும்புவோரின்மீதே ஸர்க்காரின் ஸம்சயம் மிகத் தீவிரமாகச் செல்லுகிறது. தன்னலமே வேண்டுவோர், தருமங் கருதாதார், சோம்பேறிகள், உதாஸீனக்காரர், இவர்களுக்குத்தான் இப்போது நடைபெறும் ரஹஸ்யப் போலீஸ் தர்பாரில் பயம் குறைவு. இவர்களே பிறருக்குழைக்கப்போனால் அதற்கு முகாந்தரம் காட்டுதல் மிகவும் சிரமமாய் விடுகிறது. அதிகாரிகள் பெரிய தோரணையுடன்:—" நீங்களேன் பெரிய காரியங்களில் தலையிடுகிறீர்கள்? தின்னவும், குடிக்கவும், கூலி வேலை செய்து கூலிக்குத் தக்கபடி ஸௌக்யமாகக் குடியிருக்கவும் இடம் கொடுத்திருக்கிறபோது அதோடு திருப்தியடையாமல் ஆகாசவேட்டைக்கேன் புறப்படுகிறீர்கள் ?" என்று நம்மை நோக்கிக் கேட்கையில் நாம் என்ன உத்தரம் கூறுவோம் ? ஆனால் அவர்கள் என்ன சொல்லியபோதிலும் விசாரணையில்லாமல் மனிதரை "பந்தோபஸ்த்" பண்ணும் இருட்டுக் குகைத் தந்திரத்தில் ஒளியில்லை; நீதியில்லை;

சத்தியமில்லை; அதிலிருந்து தப்ப வழியுமில்லை. அதனை கவர்ன்மெண்டார் அனுசரிப்பது நியாயமில்லை. தேசத்தில் மிகச் சிறந்த யத்தனத்தை யெல்லாம் இப்படி விசாரணை யில்லாமல் மண்ணுக்குள்ளே புதைத்தல் எளிதாம். அவற்றினின்றெழக்கூடிய பிசாசுகளைத் தூங்கப் பண்ணுதல் கஷ்டம். உள்ளே பசியைத் தண்டனையாலே மாற்ற முயலுதல் மதியுடைமையன்று.

இந்தக் குகைத் தந்திரம் இங்கு மும்முரமாக அனுசரிக்கப்பட்டு வருகையிலே, இங்கிலாந்திலிருந்து செய்தி வருவதைப் பார்த்தால் ஸ்வராஜ்யம் கொடுக்க மசோதா செய்ய யோசித்திருப்பதாகத் தெரிகிறது. தொல்லைப் பேயைத் தொலைக்கக் கொடுமை வழி நேர்மையன்று. ஜனங்களை நலம் செய்ய வேண்டுமென்பதையும் அதிகாரிகள் காணத் தொடங்கிவிட்டார்களென்று நம்புகிறேன். "நான் இதில் பிறந்த காரணத்தால் மாத்திரமேயன்றி, எனது யத்தனங்களும், ஐயங்களும், இதற்கே ஸமர்ப்பணம் செய்யத்தகுந்தன. ஆதலாலும் இது என் தேசம்" என்று ஜனங்களில் ஒவ்வொருவனும் தெரிந்து கொள்ளும்படி அதிகாரிகள் உதவி புரிந்தால் மாத்திரமே பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யம் இந்தியாவில் நிலைபெறும். இத்தனை பெரிய தேசத்து ஜனங்களைப் பலஹீனராகவும், சக்திஹீனராகவும், ராஜ்ய விஷயத்தில் சிரத்தாஹீனராகவும் வைத்திருந்தால், ஆபத்துக் காலத்தில் இவர்களால் உதவிபெற இடமில்லாது போய்விடும். அவர்களுடைய ஜடத்தன்மையின் பாரம் பொறுக்க முடியாததாய்விடும். மேலும், மிகவும் பலஹீனமாக இருப்போரையும் நமக்கெப்போதும் எதிர் ஸ்தானத்தில் வைப்பது தோணியடியில் சிறு தொளைபோலாம். காற்று சரியாக இருக்கும் வரை ஜலத்தை இறைத்திறைத்து விட்டுத் தோணியைச் செலுத்தலாம். ஆனால், புயற் காற்றில் எல்லோரும் தண்டையும், சுக்கானையும், பாயையும் கவனித்துக் கொண்டிருக்கையில் சிறிய தொளை பெருங்கேடாம். அப்போது கோபங்கொண்டு மேற்படி தொளையைப் போலீஸ் சட்டத்தடி—அல்லது சட்டமில்லாத்தடி—கொண்டு புடைப்பதில் லாபமில்லை. சிறு செலவுக்குப் பயந்து சரியான காலத்தில் இந்த ஒட்டையை அடைக்காதிருந்தால் பின்பு பெரிய செலவு நேரும். இதைப் பிரிட்டிஷ் மந்திரிகள் அறிந்திருப்பதாகவே தோன்றுகிறது. அதனால்தான் ஸ்வராஜ்யத்தைப்பற்றின வார்த்தைகள் புறப்பட்டிருக்கின்றன.

ஆனால் மனித இயல்பில் தாழ்ந்த பகுதிக்குக் கண்ணில்லை. அது நிகழ் காலத்தை மாத்திரமே கவனிக்கும்; வருங்காலத்தைக் கவனியாது. உண்மையையும், தர்மத்தையும் நம்பி வார்த்தை சொல்லுதல் ஆண்மையற்ற சித்த பலக்குறைவென்று கருதும். இது பிரிட்டிஷ் ராஜ்யத்துக்குப் பகை. உயர்ந்த ஆசைகளால் தூக்கிய இறகுகளையுடையவளாய் பாரததேவி இப்பகையைப் புறக்கணிக்கிறாள். இங்குள்ள ஆங்கிலோ-இந்தியன் ஸர்க்கார் உத்தியோகஸ்தனானாலும், வர்த்தகனானாலும் தன் லாபத்தையும் அதிகாரத்தையும் விரும்புவோனாதலால், அவனுக்கு இவ்விடத்து நிலைமை கண் தெரியவில்லை. மிகவும் நெருக்கத்திலே கண் மங்கல் ஏற்படும். அவனுடைய குறுகிய பார்வையில் அவனதிகாரமே பெரிதாகவும், இங்குள்ள முப்பது கோடி மனிதரும், இவர்களுடைய சுக துக்கங்களும் துச்சமாகவும் தோன்றுகின்றன. இதனால் இந்தியாவின் ஆண்மையை உறுதி செய்யத் தகுந்த சீர்திருத்தம் இங்கிலாந்து நமக்குக் கொடுத்தாலும் அது இங்கு வருமுன் வெட்டுண்டு துண்டு துண்டாய் ரத்தமில்லாமல் வருமோ ? அல்லது வரும் வழியிலே செத்துப்போகுமோ ? இந்தியாவின் விதியாகிய பாலைவனப் பாதையிலே சிதறுண்டு கிடக்கும் பயனற்ற நல்லெண்ணங்களின் எலும்புகளுடனே இதன் எலும்புகளும் சேருமோ ? என்று கருதி அஞ்சுகிறேன்.

நம்மைத் தடுக்கப் படைதரித்த ஆங்கிலோ-இந்தியன் அதிகார வெறியுடையவன்; அதிகார மாமூல் என்ற பல தட்டுக்களாலே இந்தியாவின் உயிர்த் தீண்டுதலினின்று பிரிந்தவன். அவனுக்கு இந்தியா ஒரு கச்சேரி, ஒரு கடை. இங்கிலாந்தில் நமது விதிக்குத் தலைவராகிய ஆங்கிலேயருக்கு இவன் ரக்தபந்து. அவன் கை அவர்களுடைய கையுடன் கோக்கப்பட்டிருக்கிறது ; அவனிதழ்கள் அவர்களுடைய செவிப்புறத்தே இருக்கின்றன. அவர்களுடைய மந்திர ஸபைகளில் அவனுக்கு ஸ்தானமுண்டு. ராஜ்ய சங்கத்தின் பின்னே அந்தரங்க அறைக்குள் அவன் போக அனுமதியுண்டு. இவன் அடிக்கடி இங்கிலாந்துக்குப்போய் அந்தத் தேசத்தின் எண்ணங்களையும் மன இயல்பையும் மாற்றுகிறான். அவன் தனது நரைத்த மயிரையும், அனுபவ நீட்சியையும் காட்டித் தானே ஸாம்ராஜ்யத்தை இவ்வளவு உச்சஸ்தானத்துக்குக்கொண்டு வந்ததாகக் கூறித் தன் இஷ்டப்படி எல்லோரும் நடக்க வேண்டுமென்கிறான். இந்தக் கோபுரம் போன்ற கக்ஷிக்குப்

பின்னே நமது சொற்களையும், ஆவல்களையும், நமது வாழ்வையும் யார் கணிக்கப்போகிறார்கள் ? இந்த முப்பது கோடி ஜனங்களும் மனதரென்ற விஷயத்தை அதிகாரிகளாகிய கோட்டைச் சுவரையும் மீறிப் பார்க்கத்தகுந்த அத்தனை காட்சிக் கூர்மை நாம் எந்த ஆங்கிலேயனிடத்திலும் எங்ஙனம் எதிர்பார்க்கலாம் ?

தூரத்திலே இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயன், ஐரோப்பின் விடுதலைக் காற்றில் தன்னலக்குருட்டுத் தனத்தின் மோஹங்களில்லாமல், இந்தியாவை விசாலக் காட்சியுடன் காணுகிறான். அப்படிச் சுத்தமான மேற்காற்றின் தூரப் பார்வைகளை யொத்த காட்சி தவறென்றும், புழுதி படிந்த தரையோரப் பார்வையே சரியென்றும் அவனை ஆங்கிலோ-இந்தியன் எச்சரிக்கை செய்கிறான். தூரத்து ஆங்கிலேயன் இந்தியா விஷயங்களில் சிரத்தையெடுப்பது மானங்கெட்ட அதிகப்ரஸங்கித்தனமென்று ஆங்கிலோ-இந்தியன் நினைக்கிறான். நம்மை ஆள்வது நாம் கேள்விப்பட்ட மஹத்தான இங்கிலீஷ் ஜாதியன்று ; நாம் ஒரு உத்தியோகஸ்தக் கூட்டத்திற்குக் குடிகள் என்பதை நம்மவர் அறிந்திருக்கவேண்டும். அந்தக் கூட்டம் ஸர்க்கார் கச்சேரி என்ற திராவகத்தில் ஊறப் போட்டு வைத்தமையால் நைந்துபோன இயல்புடையது. மனதிலும் ஹ்ருதயத்திலும், உயிரிலும் உண்மையான மனிதத்தன்மையுடைய மனிதர் நம்மை ஆளவில்லை. ஒரு விசேஷ நோக்கத்தின் பொருட்டுக் கத்தரித்து முத்திரை போட்டு வைக்கப்பட்ட மனிதர் ஆளுகிறார்கள்.

புகைப்படம் பிடிக்கும் காமிரா ஒரு கருவி, அது தெளிவாகப் பார்க்கும். ஆனால், முழுவதையும் பார்க்காது. நேராக முன்னே இருப்பதை மாத்திரந்தான் பார்க்கும். எனவே, அது குருட்டுத்தனமாகப் பார்க்கிறதென்று கூறலாம். ஜீவக் கண்ணோ எனில் யாதேனுமொரு குறித்த நோக்கத்துக்கு முழுதும் பயன்படாவிடினும், பொதுப்படையாக மனுஷ்யரின் பரஸ்பர விவகாரங்களுக்கு இதமானது. எனவே, நமக்குக் கடவுள் காமிராக் கண்ணடி கொடுக்காமல் கண் கொடுத்தாரே என்று நாம் நன்றி செலுத்தக்கடவோம். இந்தியா கவர்ன்மெண்ட் விஷயத்தில் அவர் நமக்கென்ன வஸ்துவைக் கொடுத்துவிட்டாரென்பதைப் பார்ப்போம்.

பெரிய இங்கிலிஷ்காரன் நமது விதி வசத்தால் கடலுக்கப் பாலே இருக்கிறான். இங்கு வருமுன்னே அவனை 'ராஜ்ய தந்திரம்' என்ற கத்திரியால் கத்தரித்து விடுகிறார்கள். தானும் வளர்ந்து பிறரையும் வளரச் செய்வதாகிய அம்சத்தைத் துண்டித்து அவனுடைய ஆண்மையில் முக்காற் பங்கைக் கொய்து விடுகிறார்கள். இந்தச் சிதைவுண்ட மனிதர் தமது விலை மிகுந்த காமிராக்கள் நேரே பார்க்கவில்லை என்று பிறர் சொல்லக்கேட்டுப் பிரமிக்கிறார்கள். கற்பனா சக்தியையும் இவர்கள் தமது நாட்டில் வைத்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் ஏழைத் தொழிற் சத்திரங்களில் உள்ள ஏழைகள் ஏன் திருப்தியில்லாமல் ஓடிப்போக முயற்சி பண்ணுகிறார்கள்? அந்தத் தொழிற் சத்திரம் வீட்டோடுச் சேரவில்லை. வீடில்லாத நிலைறவுமில்லை. அது நிழலை அளந்து கொடுக்கிறது. நிழல் முக்கியமான வஸ்துவே. எனினும் மனுஷ்யர் மனுஷ்யராகையால், வீடு கேட்கிறார்கள். அதாவது பூர்ணவசியமான வஸ்துக்கள் மாத்திரமேயன்றி அநவஸரமான வஸ்துக்களும் சில அவர்களுக்கு அவசியம். அவை கிடையாவிட்டால் தப்பியோட வழி தேடுகிறார்கள். அந்தத் தொழில் சத்திரத்து 'தர்மகர்த்தா'வுக்குக் கோபம் வருகிறது. அவன் முழுத் திருஷ்டியுடைய முழு மனுஷ்யனல்லன். ஏழைகளின் நன்றிகெட்ட தனத்தைச் சொல்லி வியக்கிறான். ஜீவனைச் சலிப்பிக்கும் வரம்பில்லாத ஆசையை விற்றுத் தன் சத்திரத்து நிழலில் கிடைக்கும் மைதானத்தை இந்த ஏழைகள் கொள்ள விரும்பாதிருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுகிறான். அவர்களுடைய துக்கத்தைத் தண்டனையால் அடக்க முயலுகிறான்.

பெரிய ஆங்கிலேயனுக்கும் இந்தியாவுக்கும் நேர் ஸம்பந்தமில்லை. இரண்டுக்குமிடையே சின்ன ஆங்கிலேயன் இடை நிலையாக விளங்குகிறான். எனவே, பெரிய ஆங்கிலேயன், நமக்குச் சரித்திரத்திலும், இலக்கியத்திலும்தான் காணப்படுகிறான். அவனுக்கு இந்தியா நீலப் புஸ்தகங்களிலும் கச்சேரிகளிலும் உளது. அதாவது அவனுக்கு இந்தியா ஒரு கணக்கு ஜாபிதா, அதில் இறக்குமதிகள், ஏற்றுமதிகள், வரவு-செலவு, ஜனன மரணத்தொகை; ஸமாதானத்தைப் பாதுகாக்கும் போலீஸ்காரரின் தொகை; கலகக் குணமுடையவர்களைத் தண்டிக்கச் சிறைச்சாலைகளின் தொகை; ரயில் பாதை நீளம், பள்ளிக்கூடங்களின் உயரம்—இவற்றின் கணக்குக் காணப்படும்.

நம்மவருக்கு நம்புதல் கஷ்டமாகத் தோன்றினாலும், யதார்த்தமாகவே பூமியில் ஒரு பிரதேசத்தில் மஹத்தான பிரிட்டிஷ் ஜாதி என்று நியாயப் பெயர் பூண்ட ஜாதியொன்று வாஸம் செய்கிறதென்பதை அறியும்படி எனது தேசத்தாரை வேண்டுகிறேன். பலஹீனர் பல்வான்களைப் பற்றி அநியாயம் பேசுதல் அதிக பலஹீனத்துக்கடையாளம். நாம் அவ்வித பலஹீனத்தை விலக்குதல் நமக்கொரு கீர்த்தியாம். இந்தப் பெரிய ஆங்கிலேயர் எல்லா விதங்களிலும் உண்மையான மனிதர் என்று நான் ஸத்யமாகச் சொல்லுகிறேன். மற்றப் பெரிய ஜாதியாருக்கு மஹிமை தந்த குணப் பெருமையே இந்தப் பெரிய ஆங்கிலேயருக்கும் மஹிமை தருவது. கேவலம் வாள் வலியாலும் அல்லது பணப்பைகளைக் குவித்ததனாலும் இந்த நிலைமைக்கு வந்து விட்டார்களென்று நாம் கோபத்திலே சொல்லுதல் சரியில்லை. சண்டை அல்லது பணம் சேர்க்கும் தொழிலில் மாத்திரமே வலிமை யிருந்தது கொண்டு மஹிமை பெற்ற ஜாதியார் உலகில் இல்லை. தர்ம மஹிமையாலேதான் ஜாதி மஹிமை உண்டாகிறது. வேறு விதத்தில் உண்டாகுமென்ற வார்த்தையை மேலே ருஜுக் கேட்காமல் திரஸ்காரம் புரிந்து விடலாம். இந்தப் பெரிய ஆங்கிலேயர் நியாயம், உண்மை, விடுதலை என்ற ஆதர்சங்களை யதார்த்தமாக நம்புகிறார்கள். அவர்களுடைய இலக்கியத்திலும் இதிஹாஸத்திலும் அவை பல வகைகளில் காட்டப் படுகின்றன. இப்போது நடக்கும் போரில் இந்த ஆதர்சங்களே அவர்களுக்குப் பலம் தருகின்றன.

இந்தப் பெரிய ஆங்கிலேயர் ஸ்தம்பித்து நிற்கவில்லை, முன்னேறுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைகள் தமது சரித்திரத்தின் மூலமாக மாறியும் விசாலமெய்தியும் வருகின்றன. அவர்கள் ராஜ்யத்தையும் வியாபாரத்தையும் மாத்திரம் கவனிக்கவில்லை. அவர்களுடைய ஜாதீய ஜீவன் இலக்கியம், சாஸ்த்ரம், கலை, ஊர்க்குடித்தனம், மதம் இவை முழு வெள்ளமாகப் பாய்ந்து செல்லுகிறது. அவர்கள் படைப்புவல்லார். ஐரோப்பிய மஹா யாகத்தில் புரோஹிதர். யுத்தத்தின் பாடங்களை அவர்கள் புறக்கணிக்கவில்லை. தமது சித்தத்தை ஆத்ம பலியென்ற ஒளியினால் துழாவி அவ்வொளியால் மனுஷ்ய சரித்திரத்தைப் புதுமாதிரி வாசிக்கப் பழகுகிறார்கள். மனுஷ்ய ஜாதியை அவமானப்படுத்தி அதற்கெதிரே பொய்த் தேசாபிமான கர்வத்தை ஓயாமல் நிறுத்துவதனால் பேராபத்து வருமென்பதை அவர்கள் கண்டறிந்தனர். நமது தேசத்துக் கடவுளே ஸகல தேசங்களுக்கும்

கடவுள். அவனுக்கு மனுஷிய பசுக்களைப் பலியிட்டால் கோப முண்டாகுமென்பதைப் புத்தி பூர்வமாகவோ, தம்மையறி யாமலோ கற்றுக் கொள்ளுகிறார்கள். இன்றறியாவிடினும் சிறிது காலத்துள்ளே தெரிந்து கொள்வர். யாதெனில் காற்று மிகவும் மெலிவாக இருக்குமிடமே சூறாவளிக்கு ஆரம்பம். உலகத்து ஜனங்களிலே மிகவும் பலஹீனப்பட்டோர் எங்குளரோ, அங்குத்தான் பல தேசத்தார் சண்டை போய் இழையும். கொள்ளையின் ஆசையினால் அவ்விடத்தே தான் மனிதனுடைய பொறாமை வெளிப்படும். மனிதன் அங்கு மேன்மேலும் சக்தி ஹீனனாய், அஜாக்ரதையால் ஆண்மையை நழுவ விட்டுவிடுவான். அங்குச் சாத்தான் ஓராஸனம் போட்டுக்கொண்டு கடவுளை நோக்கிச் சக்தியற்றவ னென்று சொல்லி இகழத் துணிவு பெறுவான்! ஆனால் அந்தப் பெரிய இங்கிலிஷ்காரன் மணலிலே கோபுரம் கட்ட முடியா தென்பதையும் மற்றவர்களுடைய பலக் குறைவின் மீது தமது பலத்தை நிறுத்தமுடியாதென்றும் அறிவான்.

சிறிய இங்கிலிஷ்காரன் முன்னே அசைய மாட்டான். அவன் பல நூற்றாண்டுகளாக இந்நாட்டுடன் கட்டுண்டு இது அழுகக்கடவதென்று நிச்சயித்தவன். அவன் வாழ்க்கையிலே ஒரு முகம் கச்சேரி முத்திரை போட்டது; மற்றொரு முகம் இன்ப முத்திரை. முதல் முகம் இந்தியாவை எட்ட நிறுத்து கிறது—அதிகாரக் கோலோ அல்லது வியாபாரக் கோலோ கொண்டு. மற்றொரு முகம் சந்திரனுடைய முதுகுபோலே, நமது கண்ணுக்குப் புலப்படாது. அப்படியிருந்தும் அவன் உத்யோக வருஷங்களை எண்ணிக் காட்டித் தனக்கு அனுபவம் நீளமென்று சொல்லுகிறான். பிரிட்டிஷ் இந்திய சரித்திரத் தின் ஆரம்பத்தில் அவன் கொஞ்சம் உபகாரமான தொழில் செய்தான். பிறகு சும்மா பார்த்துக்கொண்டு ராஜ்யத்திலும் வியாபாரத்திலும் நன்கு ஸ்திரப்பட்ட மேன்மையின் சுகங்களை அனுபவித்துக்கொண்டு வருகிறான். மாமூலாகிய செக்கைச் சுற்றிச் சுற்றி அதிலே மஹத்தான லௌகிக பாண்டித்ய மடைந்து விட்டான். தன் கச்சேரி வேலையை ஸாமர்த்திய மாகச் செய்வதே உலகத்தில் பெரிய செய்தியென்று நினைத்துக் கொள்ளுகிறான். எப்போதும் தன்னிலும் பலக் குறைவான ஜாதியுடன் பழகுவதால் தானே நிகழ்காலத் துக்கு நாதனென்றும், வருங்காலத்துக்குப் பிரமதேவ னென்றும் நினைத்துக் கொள்ளுகிறான். இப்போது தான் இங்கேயிருப்பதாகச் சொல்வது மாத்திரமேயன்றி எப்போதும் இங்கே இருக்கப் போவதாகவும் சொல்லுகிறான்.

பெரிய இங்கிலிஷ்காரனுடைய தயாள குணத்தை நம்பி நமது தேசத்தார் இந்தச் சின்ன இங்கிலீஷ்கார்ரனுடைய பலத்தைச் சட்டை பண்ணுமல் இவனை எதிர்த்துப் பேசத் தொடங்கி யிருக்கிறுர்கள். கடவுள் கொடுக்கும் வரத்துக்குள்ள கிரயத்தைக் காட்டிலும் நாம் பூசாரிக்குக் கொடுக்கும் பரிதானத்தின்கிரயம் சிலசமயங்களில் அதிகப்படலாமென்பதையும் மறக்கலாகாது. இந்தப் பூசாரியின் பலத்திற்கும் குணத்துக்கும் ஸமீபத்தில் வெளிப்பட்ட சில திருஷ்டாந்தங்களை ஆராய்ச்சி செய்வோம். அனி பெஸண்ட் மேலே குற்றமிருந்ததாகவே வைத்துக் கொள்வோம். ஆனுல் பெரிய இங்கிலிஷ்காரன் அவளை மன்னித்து விட்டான். இதைக் கண்டு சின்ன இங்கிலிஷ்காரன் சில பூகம்பங்களை ஸ்ருஷ்டித்தான். அவை போய்ப் பார்லிமெண்ட் சபைகளை அசைத்தன. க்ஷமை என்ற குற்றத்தைச் சின்ன இங்கிலிஷ்காரன் க்ஷமிக்கமாட்டான. சரியற்ற தண்டனைகளுக்கு முகாந்தரங் கேட்கவேண்டுமானுல் மறந்துபோவான். தண்டனை ஏற்பட்டால் அதில் ஒட்டுவதற்கு அங்கே ஒரு குற்றம் இருக்கவேண்டும் என்கிறுன். இதை ஒப்புக்கொள்ளாவிட்டால் அமிதவாதி என்று சொல்லுகிறுன். வைஸ்ராய் சட்ட சபையில் பஞ்சாப் உதவி கவர்னர் ஹிந்து தேசத்து ஜனங்களைத் தாறுமாறுக நிந்தனை செய்தபோது, வைஸ்ராய் உதவி கவர்னரை லேசாக மட்டந்தட்டிவிட்டார். சின்ன இங்கிலிஷ்காரனுக்கு அப்போதுண்டான ஜ்வரம் இன்னும் தீரவில்லை. மிஸ்டர் மான்டேகு தமது உத்யோகத்தை வஹிக்குமுன்னே இந்தியாவின் அதிகாரி வர்க்கத்தைப் பற்றிக் கொஞ்சம் வெளிப்படையான வார்த்தை சொன்னதாகப் பெரிய தூஷணையாகிய புயற்காற்றெழுந்து மிஸ்டர் மான்டேகுவின் அதிகாரம். செய்கை, சுவாதீனம் என்னும் ஸ்தூபிகளை அடித்துக்கொண்டு போய்விட்டது. லார்டு ரிப்பன் காலத்திலும், லார்டு ஹார்டிஞ்ச் காலத்திலும் இந்தச் சின்ன இங்கிலிஷ்காரனுடைய பலத்தை நாம் பார்த்திருப்பது மாத்திரமேயல்லாமல், நெடுநாளைக்கு முன்பு லார்டு காணிங், லார்டு பெண்டிங்க் காலங்களிலேகூடப் பார்த்திருக்கிறேம்.

இது கொண்டே நான் அடிக்கடி என் தேசத்தாரை எச்சரிக்கிறேன்.

"இவ்வளவு துணிவு எங்ஙனம் பெற்றீர்? உங்கள் பலத்தாலா? அன்று, உங்களுக்குப் பலமில்லை. உங்கள் வாக்கிறைலா? அன்று. அது நீங்கள் நினைக்கிற அளவு பெரிய

ஒலியில்லை. உங்களுக்குப் பக்கபலமுண்டா? கிடையாது. உங்கள் கக்ஷி தர்மமா? ஆம். அதை நம்புங்கள். வேண்டுமென்று நாம் துன்பப்படுவதை யாவராலும் தடுக்கமுடியாது. கற்பாதையின் முடிவில் ஸத்ய, தர்மங்களுக்கு ஆத்ம ஸமர்ப்பணம் செய்து கொள்ளும் மஹிமை உங்களுக்குக் கிடைக்கும். கடைசியாக உங்களுக்கேதேனும் ராஜ்யவரம் கிடைத்தால் அது உங்கள் அந்தக்கரணத்தினின்று கிடைக்கும். உங்களுக்குள்ளேயிருக்கும் ஈசனிடமிருந்து கிடைக்கும்." ஏற்கெனவே இந்தியாவுக்கு ஏதோ சீர்திருத்தம் கொடுக்கவேண்டுமென்ற வார்த்தையில் இந்தியா கவர்ன்மெண்டாரும் உடந்தைப் பட்டிருப்பதாக ஸந்தேகபட்டு, ஆங்கிலோ-இந்தியன் கோபச் சிரிப்புடன். "ஹோ ஹோ, இந்தக் கவர்ன்மெண்ட் ஏன் இப்படி மலைக்கிறது? இடியினாகா மழை பெய்யும் தொழிலில் இறங்கத்தக்கதாக என்ன பெரிய விபத்து நேரிட்டது?" என்று விசாரணை செய்கிறான். எனினும், "வெறும் பள்ளிப் பிள்ளைகளைச் சட்டவிரோதமாகிய இருட்டுக் குகைகளில் அடைத்து வைப்பது தகுமோ" என்று கேட்டால் இதே ஆங்கிலோ-இந்தியன், "நாங்களென்ன செய்வோம்? இவ்விடத்து விவகாரங்களின் நிலைமை பயங்கரமாக இருக்கிறது. ப்ரிடிஷ் நீதி இங்கே தோல்வி ஒப்புக் கொள்கிறது; நாங்கள் தர்த்தாரிய உபாயங்களை அனுஸரித்தல் அவசியமாகிறது" என்று சத்துகிறான். ஆகவே தான் அடிக்கும்போது நாட்டில் பயத்துக்கு ஹேது உண்டென்று ஒப்புக்கொள்வோன் அந்த அடியினால் விழுந்த காயத்தை நீக்க மருந்துத் தைலம் போடவேண்டுமென்றால் காசு செலவாகுமென்பதை உத்தேசித்து, பயத்துக்கு நாட்டில் ஹேதுவில்லாமல் இருக்கையில் வீணாக ஏன் சீர்திருத்தம் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறான். அடிக்கிற தொழில் மருந்து போடுகிற தொழிலைக் காட்டிலும் அதிகச் செலவிலே கொண்டுவந்து விடுமென்று நான் சொல்லுகிறேன். உன் பலத்தை உறுதியாக நம்பி நீ ஹிந்து தேசத்தாரின் சரித்திரம் முன்னேற வில்லையென்றும் சுழித்துச் சுழித்துக் கீழே போகிறதென்றும் நினைக்கிறாய். ஒரு நாள் நீ கச்சேரியை விட்டு வெளியேறி வருகையிலே நீ போட்ட கோட்டை அது கடந்து பாய்வது கண்டு, "அதைக் கட்டு, தடு, அணைபோடு" என்று கத்துகிறாய். அப்போது அந்த ஓடை மண்ணுக்குள்ளே ஒளிந்து கொள்ளுகிறது. அதன் மறைவான ஓட்டத்தைத் தடுக்கவேண்டுமென்று நீ செய்கிற வெறி கொண்ட யத்சனங்களிலே எங்கள் தாய்ப் பூமியின் மார்பு முழுதும் கிழிபடுகின்றது.

ஸமீப காலத்தில் நானே சின்ன இங்கிலிஷ்காரனுடைய தூஷணைகளைப் பேச நேர்ந்தது. நூற்றுக்கணக்கான இளைஞரை விசாரணையில்லாமல் சிறைப்படுத்தும் கொடுமையைக் குறித்துச் சில தினங்களின் முன்னே ஒரு சிறு கடிதம் எழுதினேன். உடனே நான் பொய்கள் பரப்புவதாகச் சொல்லி ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகைகள் எனக்கு அமிதவாதி என்ற பட்டம் சூட்டின. அந்தப் பத்திராதிபர்கள் கேவலம் சாமான்ய உடை தரித்த கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தரே யாதலால், அவர்கள் சூட்டும் அடைமொழிகளை க்ஷமிக்கிறேன். எனது கவிதையில் பொருளில்லையென்றும் என் வசனத்தில் ஸாரமில்லையென்றும் கருதுகிற என் ஸ்வதேசத்தார்கூட எனது லிகிதங்களைப் படித்திருப்பின், முன்பு ஸ்வதேசியக் கலகத்தின் கால முதலாக இன்றுவரை நான் அமிதவாதத்தைக் கண்டிக்கிறேன் என்பதை அறிவார்கள். நான் எப்போதும் இந்த ஒரு வார்த்தை இடை விடாமல் சொல்லிக் கொண்டு வருகிறேன். யாதெனில், பாவம் பண்ணின கூலி கடைசிவரை நற்பலன் தராது. பாவக் கடன் நாளாக நாளாக அதிகச் சுமையாய்விடும். தவிரவும், எழுதுமை கொட்டி வைவோர் இந்தியராயினும், ஆங்கிலேயராயினும் அவர்களுக்கு நான் பயப்படுகிற வழக்கம் கிடையாது. யோக்யதையுமின்றிச் சட்டத்துக்கும் விரோதமாய்ப் பகிரங்கமில்லாமல் ஒரு காரியத்தைச் சீக்கிரத்திலே ஸாதனை செய்துவிட வேண்டுமென்று ரஹஸ்யக் கோணல் வழிகளிலே நேர் வழியை விட்டுப் புகுதலாகிய அமிதவாதத்தை நான் எப்போதுமே கண்டனம் புரிவேன். இதை நான் முழு நம்பிக்கையுடன் மாறாமல் சொல்லி வருகிறபடியால், அதற்கு ஸமானமான உறுதியுடன் கவர்ன்மெண்டார் இந்த அமிதவாதக் கொள்கையை ஒரு ராஜ்ய தந்திரமாக அனுஸரித்தலும் பெரிய குற்றமென்பதை உரைக்கிறேன். ஒரு நோக்கத்தை அடைவதற்குச் சட்ட ரஸ்தா குறுக்கு வழியில்லாமல் சுற்று வழியாகப் புலப்படலாம். ஆனால் பெல்ஜியம் தேசத்தின் ஸ்வதந்திரங்களின் மேல் இரும்புச் செருப்பு மாட்டி நடப்பதுபோலே நேர் வழியைக் குறுக்கும் அமிதவாதம் எப்போதும் கண்யமன்று.

புராதன சரித்திரத்தில் குறுக்கு வழி ஸஹஜ அனுஷ்டானத்திலிருந்தது. விவகாரங்களைச் சிக்கறுக்க வேண்டுமானால் :—'இன்னானுடைய தலையைக் கொண்டுவா' என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் சிரமமான முடிச்சை அறுப்பதைக் காட்டிலும் அவிழ்ப்பது நல்லதென்றும் அறுப்பதில்

நஷ்டங்களுண்டாகுமென்றும் தான் கண்டுபிடித்திருப்பதாக ஐரோப்பா தற்புகழ்ச்சி பேசிக்கொள்ளுகிறது. தொல்லையும் கலகமுமாக இருக்கும் காலங்களிலும் நாகரிகமானது செலுத்தவேண்டிய கடமைகள் உள. அவற்றைப் புறக் கணிக்கக்கூடாது. எல்லா விதமான தண்டனையிலும் மிருகத்தனம் இருக்கத்தான் செய்கிறது. அதை நாகரிக ஜனக் கூட்டத்தில் கையாளுமுன்னே சட்டம் என்ற சல்லடை யால் வடிகட்டி எல்லாவிதமான கோபம், பகைமை, பக்ஷபாதம் இல்லாதபடிச் செய்தல் மரபு. இல்லாவிட்டால் நியாயாதிபதியின் கோலுக்கும் திருடன் தடிக்கும் சரியானபடி வேற்றுமை தெரியாமல் போய்விடும். இந்தக் காலம் சிரம மான காலமென்பதை நான் அங்கீகரிக்கிறேன். தேசம் அபிவிருத்தியாவதில் ஏற்படும் தடைகளை நீக்க நமது வாலிபரில் சிலர் அனுஷ்டிக்கும் முறைமை நமக்கு வெட்கந் தருகிறது. மேற்குத் திசையாரிடமிருந்தே நியாயத்தையும், ஸௌகர்யத்தையும் பிரிக்கும் வழி நாம் கற்றுக் கொண்டோம். ஆதலால் மேற்படிக் காரியத்தில் அதிக வெட்கப்படுகிறோம். ராஜ்ய தந்திரத்தின் பஹிரங்கப் பொய் களும், ரஹஸ்யப் பொய்களும், பஹிரங்கக் கொள்ளைகளும், ரஹஸ்யக் கொள்ளைகளும் "பொன்னில் மாற்றுக் கலப்பது போலே பொன்னுக்குப் பலமென்று மேற்குத் திசையார் கருதுகின்றனர். ஆதலால தேசபக்தியில் ஸ்வார்த்தம் ஒரு வழி காட்டும்போது தர்மம் வந்து அதைத் தடுத்துத் தொந்தரவு செய்ய இடங்கொடுத்தல் மடமை யென்றும், பலஹீனத்துக்கு அடையாளமென்றும் நமக்குக் கற்றுக் கொடுத்தனர். மேலும் நியாயத்தை ஸௌகர்யத்தால் பெருகு பண்ணிக்கொள்ள வேண்டுமென்றும் நாகரிகத்தை அநாகரிகத்தால் கொஞ்சம் கெட்டியாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் நமக்கு நம்பிக்கை உண்டாயிற்று. இதனால் நாம் அதர்மத்தை ஸஹிப்பது வழக்கமாய்விட்டது மாத்திரமேயன்றி நம்மையாள்வோரின் அனுசித அம்சங்களைக் கண்டு வணங்கும்படியாகவும் நேர்ந்துவிட்டது. நமது வாத்தியார்களுடைய படிக்கு மேற்படியிலே நின்று :— அதர்மத்தால் மனிதன் ஏறுகின்றான் ; அதனால் நலங்கள் காண்கிறான் ; அதனால் எதிரிகளை அழிக்கிறான் ; அதனால் பின்பு தானே வேருடன் கெடுகிறான்" என்று முழங்கும் தைரியத்தை இழந்துவிட்டோம்.

மேற்குத் திசையின் உபதேசங்களுக்கு முன்னே நம்முடைய ஆதர்சங்கள் இத்தனை பரிபூர்ணமாகத் தோல்வியொத்துக்கொண்டது தவறென்று நான் சொல்லுகிறேன். தேச பக்தியாகிய விளக்கு நம்முள் எரியத் தொடங்கிய காலத்தில் நம்முள்ளே இருக்கும் அதிக உத்தம அம்சங்கள் ஜோதி பெற்றுத் திகழும் என்ற உயர்ந்த ஆசைகள் கொண்டிருந்தோம். பல நூற்றாண்டுகளாக நம்மிடையே சேர்ந்த பிழைக் கூட்டம் இருள் மூலையை விட்டோடிப்போமென்றும், நமது நிராசையின் கற்றரையில் ஆசையூற்றுத் தோன்றுமென்றும், நம் எதிர் காலத்தின் நிராசை வெளியில் நம் ஊக்க விழிப்புக்களால் ஒரு பாதை புலப்படுமென்றும், நம்முடைய ஆண்மையை நசுக்கிப் பழிக்கிடமாக்கிய குரூரமான ஜாதியாசாரங்களினின்றும், பரஸ்பர அன்பினால் விடுபட்டு முடி தூக்கித் தோள் கோத்து நிற்போமென்றும் எதிர்பார்த்தோம்.

ஆனால் விதி நம்மைப் பரிஹாஸம் செய்கிறது. தேசபக்தி விளக்குக் கொளுத்துண்டது. ஆனால் அதில் களவும், கொள்ளையும், ரஹஸ்யக் கொலையுமாகிய இதுவென்ன காட்சி! நாம் புகழ்ந்து பாடின தெய்வம் வந்து முன்னே நின்றால் அதற்குப் பாவத்தை நைவேத்யம் பண்ணலாமோ? ஆரம்பத்தில் ராஜ்யப் பிச்சை கேட்பதே ஸர்வ க்ஷேமத்துக்கும் ஆதாரமென்று நம்பி நம்மை விண்ணப்பம் எழுதும் தொழிலில் ஸமர்த்தர்களாகச் செய்து கொள்வோமென்று நினைக்கும்படித் தூண்டிய சக்திஹீனமும், சோம்பலும், நம்பிக்கைக் குறையுமே இப்போது கிருத யுகத்தை விரைவுபடுத்த நாடி ராஜ்யக் குற்றம் செய்யும்படித் தூண்டுகின்றன அன்றோ? கொள்ளையும் வீரமும் சந்திக்கமாட்டா. ஐரோப்பாவில் அப்படிப்பட்ட சந்திகள் இருப்பதாகத் தோன்றலாம். ஆனால் தெய்வத்தின் சோதனையில் அந்த ரஸ்தா சரியானதென்று இன்னும் அங்கீகாரம் செய்யப்படவில்லை. உடனே கிடைக்கும் லாபமே ஸகல தர்மங்களிலும் பெரிதென்று பூமி முழுதும் உரைத்தாலும் இந்தியா அக் கொள்கையில் சேராதிருக்க வேண்டுமென்று தெய்வத்தை வேண்டுகிறோம். அஃதில்லாமல் நாம் ராஜ்ய விடுதலை பெறக்கூடுமாயின் நன்று. இல்லாவிடில் ராஜரீக அஸத்யங்களால் பெரிய விடுதலையின் வழியை அசைக்காமலாவது சும்மா இருப்போம்.

ஆனால் ஒரு ஸங்கதி நாம் மறக்கக்கூடாது. நமது தேச பக்தியின் உதய ஒளியில் கொள்ளையும், கொலையும் கண்டோம். வீரரையும் கண்டோம். ஆத்மபரித்யாகத்தின் தேவ சக்தி இன்று நம் இளைஞரிடத்தே சுடர்விட்டெரிவதுபோல் என்றும் எரியக் கண்டதில்லை. ஆச்சர்யமான பக்தியுடனே உலக சுகங்களையெல்லாம் உதறி யெறிந்துவிட்டு ஸ்வதேசத் தொண்டுபுரிய ஓடிவருகிறார்கள். அந்தத் தொண்டினால் அவர்களுக்குப் பண லாபம் கிடையாது ; ஸர்க்கார் தயவு கிடையாது ; சில ஸமயம் பந்து மித்திரருடைய விரோதம் உண்டாகிறது. இந்தக் குறுகிய கஷ்டமான பாதை மீதில் யௌவன யாத்ரிகர் குறைவின்றிச் செல்வதையும், வானத்திலிருந்து 'தேச பக்திக்குவா' என்று சத்தம் கேட்டவுடனே இவர்கள் தக்ஷணமே சரியென்று வந்ததையும் கண்டு என் உள்ளம் பூரிக்கிறது. தேசத்துக்கும் மனுஷ்ய ஜாதிக்கும் தொண்டுபுரியப் பல துறைகள் விரிந்து கிடக்கும் மற்ற அதிர்ஷ்டமுள்ள தேசங்களில் இந்த மாதிரி அலௌகிகமான கற்பனைசக்தியுடைய, மனவுறுதி கொண்ட தன்னலமறியாத பிள்ளைகள் தேசத்துக்குப் பெருஞ் செல்வமென்று கருதப்படுகிறார்கள். பந்தோபஸ்து வைக்கப்பட்ட ஸசீந்திரனுடைய கடைசிக் கடிதத்தை வாசித்துப் பார்த்தால் அவன் தன்னைத் தண்டனை புரிந்த ஆங்கிலேயரின் தேசமாகிய இங்கிலாந்தில் பிறந்திருந்தால் அற்புதமான வாழ்க்கை வாழ்ந்து அதனிலும் அற்புதமாக மடிந்திருப்பானென்பது விளங்கும்.

விஸ்தாரமான ஒரு தேசத்திலுள்ள இளைஞரின் ஆண்மையை முழுதுமே நசுக்கி, அந்தத் தேசத்தை நான்கெல்லையிலும் பக்கவாதநோய் கண்டது போலே செய்துவிடும் திறமை பண்டைக் காலத்திலும் இக்காலத்திலும் அரசருக்கும் அவர்களுடைய ஸேவகருக்கும் உண்டு. அது மிகவும் சுலபம். ஆனால் அது நாகரிகமில்லை ; எனக்குத் தெரிந்தவரை ஆங்கிலேயர்க்குரியதன்று. குற்றமறியாத மஹான்களை ஆயுள் முழுமைக்கும் காலை ஒடித்துப் போடுவதும், ஒரு பெரிய பக்தியின் க்ஷணிகத் தவறுதலால் வீழினும் கொஞ்சம் கைகொடுத்துதவினால் மறுபடி எழுந்து நேர் வழிக்கு வரக்கூடியவர்களை ஜன்ம முழுதுக்கும் பயன் படாதபடிச் செய்வதும் மனித உயிரைக் குரூரமாக அழித்தலாகுமன்றோ ? இப்படிப்பட்ட இளைஞரையும் பிள்ளைகளையும் ரஹஸ்யப் போலீஸாரின் தயவின் கீழே விட்டுவைக்கும் ராஜ்ய தந்திரத்தின் புத்தி இருந்தபடி என்னே ! இது மேன்மை

யான தானிய முளைகளின் மீது இரவு வேளையில் எருமைக் கூட்டத்தை மேய்ப்பதற்கு ஸமானம்; வயலின் உடையான் மார்பைப் புடைத்துக் கொள்ளுகிறான்; எருமைகளை ஓட்டுவோன் கொஞ்சம்கூடக் களை மிச்சமிராதென்று சொல்லி மகிழ்ச்சியடைகிறான்.

இந்த விபத்தை இன்னும் அதிகமாக்கும் செய்தி யாதெனிலோ, போலீஸ்கடிபட்ட செடி அப்புறம் நேரே வளராது. அதில் பூவும் கனியும் தோன்ற. போலீஸ் ஸ்பர்சத்திலே விஷம் இருக்கிறது. எனக்கொரு பையனைத் தெரியும். அவன் புத்தி மிகவும் கூர்மையானது; படிப்பில் மிகுந்த அக்கறையுள்ளவன். அவனுடைய குணமோ மிகவும் பெருந்தன்மையானது. அவனைப் போலீஸார் தொந்தரவுபண்ணிப் பின் விட்டார்கள். இப்போது அவன் தன் இளமையின் வஸந்த காலத்திலே பெர்ஹாம்பூரில் ஒரு வைத்திய சாலையில் இருக்கிறான். அவனால் ப்ரிடிஷ் கவர்ன் மெண்டாருக்கு எவ்விதமான தீங்கும் நேரிட்டிராதென்றும், நமது தேசத்துக்கு எவ்வளவோ நன்மை விளைந்திருக்குமென்றும் நான் ஸத்யம் பண்ணுவேன்.

சிறிது காலத்துக்கு முன்பு என் "சாந்தி நிகேதனம்" என்ற பாடசாலையில் படிக்கும் பிள்ளைகள் பரீக்ஷைக்காக வீரபூமி என்ற ஊரிலுள்ள ஜில்லாப் பள்ளிக்கூடத்துக்குப் போனார்கள். அப்போது போலீஸார் வந்து அவர்களுடைய பெயர்களைப் பதித்துக்கொண்டனர். அந்த இளைஞரின் மனம் சோர்வடைந்து போக அவ்வளவு செய்தால் போதாதா? போலீஸ் ரஹஸ்யப் பதிவுகளில் என்ன எழுதி வைத்தார்களோ எவன் கண்டான்? அவர்களுடைய திருட்டு விழிகளின் நோக்கத்தை யாராலே கண்டுபிடிக்க முடியும்? பாம்பு கடித்த பழத்தை யார் தின்பார்கள்? அதுபோல போலீஸ் ஸம்சயமாகிய களங்கத்துக்குட்பட்ட மனிதனுடன் எவனும் பழக விரும்புவதில்லை. விவாகமாகாத பெண்ணை வைத்துக் கொண்டு அவளை எப்படியேனும் கழித்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன், குரூபியாக இருந்தாலும், பாதகனானாலும், கிழவனானாலும், நோயாளியானாலும், எதையும் கவனியாமல் பெண்ணை யாரேனும் ஒருவனுக்குத் தள்ளிவிட ஆயத்தமாக இருக்கும்—நிராசைக்கோர் இலக்கியமாகிய—வங்காளித் தந்தைகூட அவனுக்குப் பெண் கொடுக்க உத்தேசிக்க மாட்டான். ஒரு காலத்தில் போலீஸ் ஸந்தேகத்துக்குட்

பட்டவன் வியாபாரம் செய்யப்போனால் அது தோற்றுப் போகிறது. அவன் நம்மிடத்தில் வந்து பிச்சை கேட்கும்போது நமக்கிரக்கம் உண்டாகிறது. அவனிடமுள்ள பயத்தை மாற்ற முடியவில்லை. அவன் ஏதேனும் நல்ல காரியத்திலே சேர்ந்தால், அந்தக் காரியம் அபஜயம்.

இந்தப் பயங்கர இலாகாவின் அதிகாரிகள் கேவலம் சதையும் ரத்தமுடைய மனிதர். கோபதாபாதிகளையும் அஸூயையையும் வென்ற முனிவரல்லர். நம் மனஅதிர்ச்சி பயத்திலும் நிழலை உண்மையென்று நினைப்பதுபோலே அவர்களும் நினைக்கிறார்கள். எல்லாரையும் ஸம்சயிப்பதே அவர்களுடைய தொழிலாகையால், அவநம்பிக்கை அவர் களுடைய குணத்தில் ஊறிப்போய் விடுகின்றது. சொற்ப ஸந்தேஹத்தை வைத்துக்கொண்டு வேலை செய்தல் அவர்களுக்கு இன்பமான வழியாகிறது. மேலே இருந்து அவர்களைத் தட்டி விடுவாரில்லை. அக்கம்பக்கத்தார் பதறி வாய்பேசாதிருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னே நிற்கும் சின்ன இங்கிலிஷ்காரன் கவனியாமல் இருக்கிறான்; அல்லது அவர்களைத் தூண்டிவிடுகிறான். இயற்கையன்பில்லாமை யுடன், கோபமும் பயமும் வந்து சேர, வரம்பற்ற அதிகாரமும் அதில்கூட இவற்றுடன் ரஹஸ்ய வழிகளையும், மூச்சைப் பிடிக்கும் சட்டங்களையும் கலந்தால் அந்த இடத்தில் சரியான நியாயமும் தர்மமும் கிடைக்குமென்று அந்தச் சின்ன இங்கிலிஷ்காரன் தான் எப்படி நம்பமுடியும் ? அவன் அங்ஙனம் நம்பவில்லை யென்பது எனக்கு நிச்சயம். கலகத்தை அடக்க இது சுலபமான வழியென்று நம்பியே இதுவெல்லாம் செய்கிறான். ஜெர்மனியிலும் இங்ஙனமே சின்ன ஜெர்மன் பெரிய ஜெர்மனைக் கீழே தள்ளி மேலே நிற்கிறானாகையால் உடன்படிக்கைகளைத் திரஸ்காரம் பண்ணுதலே யுத்தம் ஜயிக்கச் சுலபமான வழியென்று கணிக்கலானார்கள். "தலையைக் கொண்டுவா" என்று சொல்லும் ராஜ்ய தந்திரம் சிறிதுகாலம் உதவும். எக்காலத்துக்கும் உதவாது. எக்காலத்துக்கும் உபயோகப் படக்கூடிய உபாயம் யாதெனில் பெரிய இங்கிலிஷ்காரரால் அடிக்கடிப் போராடிக் காக்கப்படும் உபாயம். அந்த உபாயத்துக்கு மாறான எதிர்த் தந்திரத்தை இன்று ஜெர்மனியார் கையாளுவதில் மிகவும் வெறுப்பெய்தினபடியா லேதான் அனேக யௌவனமுள்ள பெரிய இங்கிலிஷ்காரர் யுத்த காலத்தில் ஆயிரக்கணக்காக உயிர்ப்பலி கொடுக்க விரைந்து செல்லுகின்றனர்.

எனது சாந்திநிகேதனப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் மனுஷ்ய ஜாதியின் சரித்திரத்தை விசாலமாகவும், ஜாதி விரோதமில்லாமலும் பொதுப்படையாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றே நான் மிகவும் ஊக்கத்துடன் பாடுபட்டு வருகிறேன். இந்த நோக்கத்தை மனதில்கொண்டு, யோக்யரான ஆங்கிலேயர் இந்தக் காரியத்தில் ஆத்ம ஸமர்ப்பணம் செய்ய முற்பட்டபோது, நான் அவர்களை யோசனையில்லாமல் ஏற்றுக்கொண்டேன். ஆனால் அந்தப் பாடசாலை நடத்தும் எங்கள் நிலைமை ஸஹஜத்துக்கு மாறுபட்டு நிற்கிறது. எங்கள் தற்கால நம்பிக்கையும் எதிர்கால நம்பிக்கைகளும் மிகவும் குறுகி நிற்கின்றன. எங்களுக்குத் தகுந்த தூண்டுதலும், ஸௌகர்யமும் இல்லாதபடியால், எங்களுக்குள்ளே உறங்கும் சக்திகளை நேரே எழுப்பிவிட வழியில்லை. எங்களுடைய தொழிற் களம் வரம்பு பட்டது. எல்லா அதிகாரமும் கவுரவமும் நாட்டிலே கொண்டு நிற்கும் அதிகாரிகள் அதில் அன்பில்லாதவராக இருக்கிறார்கள். ஆதலால் எங்கள் தொழிற் பயன்கள் குறுகி உலகத்துச் சந்தைகளில் அதிக விலைமதிப்பில்லாதுபோகின்றன. எங்களை அதிகப் பள்ளத்தில் அமுழ்த்த மறுபடி அதனையே ஒரு காரணமாகவும் கொண்டுவருகிறார்கள். இதனால் எங்களுடைய ஜீவன் சோர்ந்து போகிறது. எனவே பெரியோரால் புகழப்படுவதாகிய பெரிய விடுதலை—அதாவது, மனிதன் தனது இழிகுணங்களினின்றும் விடுபடுதல்—இந் நாட்டில் யாராலும் மதிக்கப்படவில்லை. இருந்தாலும் சாந்திநிகேதனப் பள்ளிக்கூடத்தில் நாங்கள் படும்பாடெல்லாம் முழுதும் வீணாகவில்லையென உறுதி கூறுகின்றேன். ஏனென்றால், நமது வழியிலுள்ள தடைகள் எத்தனை பெரியன ஆயினும், நமது நாட்டாரின் கண்முன்னே பரமஸத்யத்தைக் காட்டினால் அதை அவர்கள் முழுதும் புறக்கணிக்க மனங்கொள்ளார். நமது பாடசாலைப் பிள்ளைகளில் மிகவும் புதியவர்கூட அங்ஙனம் செய்யார். இந்த அம்சமொன்று நமது குணத்தில் இருப்பதைப் பஞ்சாப் லெப்டினன்ட் கவர்னரும் நானும் ஒருங்கே அங்கீகாரம் செய்துகொள்ளுகிறோம்.

ஆனால் சில ஸமயங்களில் மிகவும் பயங்கரமான சிரமம் உண்டாகிறது. வங்காளிப் பிள்ளைகளில் மஹா ஸாதுவான பிள்ளைகள்கூட உயர்ந்த போதனைகளை எதிர்த்து நடக்கும்படியாகச் செய்திகள் தோன்றுகின்றன. ஒரு பக்கத்தில் கீழ்மைக்குணம் ஏற்பட்டால் இது எதிர்ப்புறத்திலும் கீழ்மைக்

குணத்தைத் தூண்டுமன்றோ ? எங்கள் சாந்திநிகேதனப் பள்ளிக்கூடத்தில் இரண்டு சிறுவருண்டு. அவர்களுடைய தாய் தந்தையர் கொஞ்சம் பணக்காரர். சம்பளம் சரியாகச் செலுத்திக்கொண்டு வந்தனர். சிறிது காலத்துக்கு முன்பு ஒரேயடியாக அந்தக் குடும்பத்தில் மூன்று பேரைப் பிடித்துப் போலீஸார் பந்தோபஸ்த் பண்ணிவிட்டார்கள். பிள்ளைகளுக்கு மேலே வாசிப்புச் செலவுக்குப் பணமில்லை. பள்ளிக்கூட நிதியிலிருந்து பணம் கொடுத்து அவர்களைக் காப்பாற்றுகிறோம். அச் சிறுவர் தம் நிலையின் இகழ்ச்சியை உணர்கின்றனர். வீட்டாருடைய கஷ்டங்களை நினைத்தும் வருந்துகிறார்கள். தந்தைக்குப் பந்தோபஸ்திலிருக்கும் போதே முறைக் காய்ச்சல் வந்துவிட்டது. அவனைச் சற்றே ஸௌக்யமான இடத்தில் அடைத்து வைக்கும்படித் தாய் பகீரதப் பிரயத்தனம் செய்தும் பயனில்லை. இவையெல்லாம் கூடி அந்தக் குழந்தைகளின் மனதைத் தொல்லைப்படுத்துகின்றன. இதைப்பற்றி அவர்கள் வாய்திறந்து ஒன்றும் சொல்வது கிடையாது. நாங்கள் அவர்களிடம் இந்த விஷயத்தைக் குறித்துப் பேசுவதில்லை. எனினும் அவர்கள் முன்னே நியாயம், நீதி, ஸர்வஜன அன்பு முதலிய விஷயங்களைப் பேசும்போது ஏதோ என் தொண்டைக்குள்ளே வந்து அடைக்கிறது. இந்த வேதாந்தப் புரட்டுகளைப் புறக்கணிப்போராகிய பஞ்சாப் உதவி கவர்னர் போன்றவர்களின் முகங்கள் என் விழிக்கெதிரே வந்து கேலிக் கோபம் பூண்டு நிற்கின்றன. இங்ஙனம் இந்தப் போராட்டத்தில் இருதிறத்தாரின் கீழ்க் குணங்களின் தீப்பொறிகள் பறக்கின்றன. வங்காள முழுதிலும் கஷ்டத்தை உள்ளே அமுக்குகிறார்கள். உள்ளே போய் ஒழுக்கத்தை மாற்றும் சாசுவதப்பொருளாக அது பரிணமிக்கிறது. முழு முழுக் குடும்பங்களின் ஹ்ருதயத்தில் உத்யோகமாகிய மேக மண்டலத்திலிருந்து போடும் வெடிக்குண்டுகள் குழந்தைகளையும், ஸ்த்ரீகளையும் அழிக்கின்றன. அடடா ! இந்த யுத்தத்தில் குழந்தைகளையும் பெண்களையுமாவது போர் செய்யத் தகாதோர் என்று கருதி அதிகாரிகள் சும்மாவிடலாகாதா ?

இந்த விஷமமான ஸங்கடத்துக்கு மூலம் யாதென்று கேட்பீரானால் உடனே சொல்லுகிறேன் : ஸ்வராஜ்யம் நமக்கில்லாமையே மூலம். அவ்வளவு தூரம் நாம் ஆங்கிலேயருக்கு அன்னியர். ஒரு ஆங்கிலேய வித்வான் தனது யாத்திரைகளைப் பற்றி எழுதுகையிலே இந்தியா தேசத்தாரைக்

காட்டிலும் சீன ஜப்பானியர்கூட ஆங்கிலேயருக்குச் சற்றே ஸமீபம் போல் தோன்றுவதாகச் சொல்லுகிறான். நமது ஃவதாந்தம் நடுவே நிற்கிறதாம்! அந்த வியாதி தனக்கு வரவே வராதென்று பிரிடிஷ்காரன் சொல்லுகிறான். மனுஷ்யனுக்கு மனுஷ்யன் இதைக்காட்டிலும் அதிக வேற்றுமை கொள்ளுதல் அரிதன்றோ? மேலும், அவர்களுக்கு நம்முடைய பாஷை தெரியாது. அவர்கள நம்முடன் ஸாதாரண காலங்களில் பழகுவதும் கிடையாது. இருதிறத்தாருக்குமிடையே இத்தனை பெரிய தூரம் இருக்கையிலே, அதனைக் கடக்கும் புத்தியோ மிகவும் சொற்பம். ஆதலால் ஜாக்ரதையும் ஐயமுமே ஏக நீதியாக இயல்புபெறுகின்றன. கௌரவ ஒற்றத்தொழில் செய்வதனால் விரைவிலே பதவி உயரலாமென்று நினைக்கிற ஸ்வகார்ய துரந்தரரான கபடிகளாலே பரப்பப்படும் விஷம் ஆட்சி முழுதையும் புகுந்து கெடுக்கிறது. பிறர் தயவைக் காட்டிலும் தன் மதிப்பே மேலென்றும், தங்கள் நலத்திலும் தேச நலம் உயர்வென்றும் கருதுவோர் ஸர்க்கார் சம்பந்தங்களினின்றும், போலீஸ் இடங் கொடுக்குமளவு, இயன்றவரை, எட்டி நடக்கிறார்கள்.

போலீஸ் சேர்க்கையினாலே களங்கமுற்றதாயக் கால்விரல் மீது நின்றும், நிழல்களை ஐயத்துடன் நோக்கியும், மறைவில் பதுங்கியும் நடத்தல் ஸம்ப்ரதாயமான வட்டத்தில் பழகும் அதிகாரியின் வழக்கமான சந்தேகம் கடைசியில் கொடுஞ் செய்கையாகப் பரிணமிக்காதவண்ணம் தடுக்கத் தகுந்த கருவி எதனையும் காணோம்.

அவனுக்கு நாம் கேவலம் "ஆளப்படுவோர்!". எனவே நமது வீடுகளில் தாய் அழ, ஸஹோதரன் நடுங்க, மனைவி தற்கொலை செய்துகொள்ள, குழந்தைகளுக்குப் போஷணையும் கல்வியும் இல்லாமல்போக, நாம் பல வருஷங்கள் தேசாபிமானத்துடன் பாடுபட்டு வளர்த்த முயற்சிகள் ரஹஸ்யப் போலீஸாரின் செய்கையால் புழுதியாக நொறுங்கிப் போக— இங்ஙனம் நாம் கஷ்டப்படுவதனால் அந்த அதிகாரிக்குப் போஜனத்தில் ருசி குறையவுமில்லை; அவன் தூக்கத்துக்கும் ஹானி கிடையாது; சீட்டாட்டத்தில் அவனுக்குள்ள ஆவல் மாறுபடவுமில்லை. நான் இதைக் கோபத்துடன் சொல்லவில்லை. இப்போதுள்ள நிலைமைகளை உத்தேசிக்க இதுவெல்லாம் ஸஹஜந்தான். அதிகாரி வர்க்கம் மெய்யான

உலகத்துடன் விவகாரங்கள் நடத்துவது வழக்கமில்லை. தன் கற்பனை விதிகளால் ஏற்படுத்தப்பட்ட கற்பனையுலகத்துடனே தான் விவரிக்கிறார்கள். விடுதலையுள்ள தேசங்களில் அதிகாரிக் கூட்டம் இடமுழுதையும் கவரும்படி விடுவதில்லை. இடையே துவாரங்கள் உள. அவற்றின் வழியே ஜனங்கள் அபிவிருத்தி பெறமுடியும். சார்பு நாட்டில் அப்படிப்பட்ட துவாரங்கள் இல்லாதபடி அக்கூட்டத்தார் செய்துவிடுகிறார்கள்.

நாம் வெளி வானத்தில் இடம்பெற நாடி முயற்சி செய்தால், ஷை வர்க்கத்தின் கிளைகளில் சூறாவளியடித்தது போல இலைகளின் நுனி வரை சலசலப்புண்டாகிறது. அதனால் நமக்கும் அசாந்தியுண்டாய் ஷை கிளைகளின் புடைப்பில் உடைந்துபோவதைக் காட்டிலும் காற்றடிக்கும் வழியைத் தேடாதிருத்தலே நல்லதென்று கருதுகிறோம். எனினும், இங்கே எனது முதல் வார்த்தையும் கடைசி வார்த்தையும் ஆகிய முக்யமான விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். இயற்கையற்றதைத் துப்பாக்கி முனையினாலே ஸமநிலையில் நிறுத்திவைக்கும்படி அத்தனை பலமுடைய ஜாதி உலகத்தில் எதுவுமில்லை. கனம் அதிகப்படுகிறது. தசைகள் கழலுகின்றன. தூக்கி நிறுத்தப்பட்ட அஸம்பாவிதங்களையெல்லாம் பெரிய பூமியின் ஆகர்ஷண சக்தி தரைக்குக் கொண்டுவருகிறது. அரசாட்சியின் இயல்பு யாதாயினும் ஆளப்படும் ஜனங்களுக்கு அது உத்தரவாதியாக இருக்க வேண்டும். அப்போது அவர்கள் அதைத் தமதாகக் கருதி உண்மை செலுத்துவார்கள். தமக்கு ஸம்பந்தமில்லாத, பொறுப்பற்ற, புறத்து ஸர்க்காரிடம் ஜனங்களுக்குள்ள உதாஸீனம் அஸூயையாகத் தாமும் அதை வலிமையினால் அடக்க விரும்புவோர் விரோதமாக மாற்றுகிறார்கள். இங்ஙனம் விவகாரம் மிகவும் சிக்கலாகிறது.

கால சக்தியின் தூதாக ப்ரிடிஷ் ஜாதி இந்தியாவுக்கு வந்தது. ஒவ்வொரு காலத்திலும் மனுஷ்ய ஜாதி கற்றுக் கொள்ளும் பெரிய உண்மைகளாகிய செல்வம் உலகத்து நாடுகள் அனைத்திலும் யாதேனுமொரு ரூபத்தில் பாவுதல் இன்றியமையாதது. இந்தச் செல்வத்தைச் சுமப்போர் பரப்புவதிலே லோபம் காட்டுதல் நம்பிக்கைத் துரோகமாகும். அப்போது அவர்கள் தெய்வ சிந்தைக்கு விரோதம் செய்து துக்கத்தைப் பரப்புகிறார்கள். எனினும் அவர்கள் ஒளியை ஒரு மரக்காலுக்குள்ளே மூடிவைத்தல் ஸாத்யப்படாது.

அவர்கள் கொடுக்கும்படி ஆக்கினை பெற்றதைக் கொடுத்தே தீரவேண்டும், தானத்தின் கர்த்தா காலம். அவர்கள் கேவலம் காலத்தின் கருவிகள். அவர்கள் தமது சரித்திரத் தின் ஒரு பகுதிக்கு ஒளிப்பக்கத்தையும் மற்றொரு பகுதிக்கு இருட் பக்கத்தையும் திருப்புகையிலே அஸம்பாவிதம் ஜனிக் கிறது. ஆனால் அவர்கள் தமது குணத்தில் ஓரம்சம் மற்றோரம்சத்தை வஞ்சிக்க விடுதல் எக்காலத்தும் இயலாது. பெரிய இங்கிலீஷ்காரனைச் சுற்றிச் சின்ன இங்கிலீஷ்காரன் சுயநலக் கோட்டை கட்டிக்கொண்டே போவானாயின் ஆபத்தும் துயரமுமே விளையும். சரித்திரமானது தான் சீட்டாடும் போது கைச் சீட்டுக்களைக் காட்டுவது வழக்கமில்லை. பல ஸமயங்களில் மனிதருடைய முன்யோசனைகளையெல்லாம் கவிழ்த்து முடிவு திடீரென்று வந்துவிடும்.

எப்படியும், அஸம்பாவிதத்துக்கு நெடுங்காலம் ஒருவன் இடங்கொடுத்துத் தனது விதிகளே ஜகத்தின் விதியென்று பாவனை செய்தால், அப்போது திடீரென்று சரித்திரமானது ஒரு சிறிய தடையில் இடறித் தலைகீழாகக் கவிழ்ந்துவிடு மென்பதை ஒரு பொது உண்மையாகக் கூறலாம். பல நூற்றாண்டுகளாக கிழக்கும் மேற்கும் கூடியிருந்தும் தம் முள் மனுஷ்ய ஸம்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. மேற்கானது கிழக்கை ஆள ஸம்மதப்படுகிறது. பந்துவாக்க ஸம்மதமில்லை. கிழக்கின் காப்புச் சுவர்கள் இடிந்து அதன் தானியக் களஞ்சியங்களுக்கு நடுமத்தியில் மேற்கு வந்து புகுந்திருக்கிறது. ஆனால் பல்லவி மாத்திரம் தவ றாமல் பாடுகிறார்கள். "Never the twain shall meet" —"அவ்விரண்டும் இணங்டமாட்டா" என்று.

இப்படிப்பட்ட அஸம்பாவிதத்தின் செத்தபாரம் நெடுநாள் ஸ்திரமான ஸம நிலையில் இருக்குமா? இதற்கு நெறிப்படி ஒரு தீர்ப்புச் செய்யாவிடின் சரித்திரத்தின் சோக நாடகத்தில் பயங்கரமான ஐந்தாம் அங்கத்தின் முடிவிலே திரைவிழும். ஹிந்து தேசத்துப் புராதன சரித்திரமாகிய நாடகம் இப்படியே சோகமாக முடிந்தது. மனிதர்கள் ஒன்று சேர்ந்து யோசனை பண்ணித் தாம் என்றைக்கும் பிரிவுபட்டு நிற்க வழிகள் தேடியதை நமது நாட்டிலும் கண்டோம். நமக்கு மிகவும் இனிமையாகத் தோன்றிய ஸ்வதந்தரங்களைப் பிறர் அனுபவியாமல் தடுக்க நாமும் முயன்றோம். ஸர்வ ஸாதாரணமாக வழங்கத்தக்கஉரிமைகளுக்குச் சிறப்புரிமைகள்

என்று பெயர் சூட்டி மானுஷிகத்தை அவமானப் படுத்திஞேம். ஆனால் எத்தனையோ பலமான சாஸ்த்ர மூட்டைகளை வைத்துக் காத்தும் இந்த அஸம்பாவிதத்தை நம்மால் ஸ்திரமாகக் காப்பாற்ற முடியவில்லை. நமக்குப் பலமென்று கருதிய முறைமை நமக்குத் துர்ப்பலமாக மூண்டது. நம்மை நாமே புண்படுத்திக்கொண்டு பல நூற்றாண்டுகளாக மடிகிறோம்.

தற்காலத்துப் புறத் தோற்றம் யாதாயினும் கடைசி வரை கிழக்கும் மேற்கும் சந்திக்குமென்றே நான் நம்பு கிறேன். ஆனால் இது நிறைவேறுமாறு நாம் செய்யப் பல கடமைகளும் உள. நாம் சிறியராய் அஞ்சிக் கிடந்தால், இங்கிலீஷ்காரன் சிறியவனாய் நம் முன்னே பயத்தை உலாவ விடுவான். சின்ன ஆங்கிலேயனுடைய அதிகார முழுதும் நம் இயல்பிலுள்ள சிறுமையை ஆதாரமாகக்கொண்டு நிற்கிறது. ஆனால் பூமியில் இனி வரப்போகிற எதிர்காலத்தில் நிராயுத பாணிகள் ஆயுதபாணிகளை எதிர்த்து நிற்பர். அடிக்கத் தெரிந்தவனுக்கு வெற்றியில்லை. சரியானபடி சாகத் தெரிந் தவனுக்கு வெற்றியுண்டாம். துன்பம் விளைவிப்பவன் அழி வான். துன்பப்படுவோன் மஹிமையடைவான். ஆத்மா வுக்கும் மாம்ஸத்துக்கும்—ஆத்மாவுக்கும் யந்திரத்துக்கும்— நடக்கும் சண்டையின் முடிவில், மனுஷ்யன் தான் மிருக மில்லை யென்றும், “இயற்கையின் பொறுக்குதல்” (Natural Selection) என்ற ஜந்து சாஸ்த்ர விதியைத்தான் கடந்தவ னென்றும் ருஜுப்படுத்துவான். ருஜுப்படுத்தும் கடமை நம்மைச் சேர்ந்தது.

கிழக்கும் மேற்கும் சந்தித்தால் பெரிய ஆதர்சத்தில் ஸந்திக்கும். யஜமான ஸேவக ஸம்பந்தத்திலும் பெரிய பீரங்கிகள் வைத்த சண்டைக் கப்பலின் ஸம்பந்தத்திலும் ஸந்திக்கமாட்டா.

மரணத்தைத் தோழமை செய்துகொண்டால், யமன் நமக்குத் துணை செய்ய வருவான். நமக்கு நாமே வலிமை தேடிக்கொள்ளவேண்டும். அன்றி, வலிமையுடையதற்கும் வலிமையற்றதற்குமுள்ள தோழமை உண்மையாகாது. ஒரு பக்கம் மேலான ஐக்கியம் சரியான ஐக்கியமன்று. அது பிரிவு களிலே பெரிய பிரிவு.

நம்மைச் செங்கல், சுண்ணும்பாக வைத்துக் கட்டும் ஸாம்ராஜ்யம் நமதன்று. நாமும் சேர்ந்து கட்டும் ஸாம்ராஜ்யமே நமதெனலாம். அந்த மாதிரி ஸாம்ராஜ்யத்திலேதான் நாம் ப்ராண லாபம் பெறலாம். அதற்காக நாம் ப்ராணனைக் கொடுக்கவும் செய்வோம். பலவான்களுடன் நம்மைத் தோழமைப் படுத்தும் சக்தி நமக்கு யாசகத்திலும், இரவலிலும் கிடைக்காது. நம் உள்ளே நிற்கும் தர்ம சக்தியே அதனை நிறைவேற்றுவதாகுக. அந்தச் சக்தி அநந்தமான துக்கத்தையும் சிரமத்தையும் பொறுப்பது. தன்னைப் பலியிட்டுத் தான் துயரப்படும் சக்தியை விலங்குகளாலே கட்டி வைக்கும் சக்தி உலகத்தில் எதுவுமில்லை. அது தோல்வியில் வெல்லும். மரணத்தில் அமரத்தன்மை பெறும்.

## பிற் குறிப்பு

மேற்படி உபந்யாஸத்தை நான் வாசித்த பிறகு லார்ட் ரோனல்ட்ஷே (வங்காளத்து கவர்னர்) தமது சபையில் செய்த ப்ரஸங்கமொன்றில் நான் இங்கிலாந்தில் ஒரு நண்பருக்கெழுதிய கடிதத்தைப் பற்றி பேசியிருக்கிறார். அக்கடிதத்திலேனும், இந்த உபந்யாஸத்திலேனும் இந்தியா பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தண்டனைப் பட்டவர்களுடைய குற்றம் குற்றமின்மையைப்பற்றி எவ்விதமான அபிப்பிராயமும் சொல்ல ரஹஸ்யமாகத் தண்டனை புரிதலாகிய இதுவரை அனுஷ்டானத்தில் நடந்துவரும் உபாயமானது தண்டனைப்பட்டவர்களின் பலர் குற்றமில்லாதவரென்று நினைக்கும்படி என் தேசத்தாரில் பலரைத் தூண்டுகிறது. சிறைச்சாலைகளில், தனியறைகளில் அடைத்து வைக்கும் வழி முன் ஜாக்ரதையென்று பொது ஜனங்களின் மனதில் படவில்லை. பழிவாங்குவது போல் தோன்றுகிறது. மேலும் பந்தோபஸ்திலிருந்தவன் விடுதலையடைந்த பிறகும் அவனை ஓயாமல் போலீஸார் பின் தொடரும் கொடுமையைக் கொடுமையென்று அதிகாரிகள் ஒப்புக்கொள்ளாவிடினும், கஷ்டப்படுவோருக்கு அது கொடுமையென்று மிகத் தெளிவாகப் புலப்படுகிறது. இந்த வழியின் இயற்கைப் பயன் யாதெனில் இது எங்கும் பரவியதன் காரணமாகக் குற்றமில்லாத பலர் கூடத் தமது நலத்தையும் பொது நலத்தையும் கருதிச் செய்யும் தொழில்கள் தடைப்பட்டுப் போகின்றன. இந்த அஸம்பாவித நிலைமையில் புதிதாக ஒருவனைக் கண்டால் அவனுடன்

தாராளமாகப் பழக இடமில்லை. மேலும் அதிதி ஸத்காரத்திலும், தான தர்மங்களிலும், ஸர்வ வ்யாபியான ஐயம் வந்து புகுந்து கொண்டது. இது பெரிய விபத்தன்றோ ?

---

# 8

## ஜப்பானுடைய ஆவி

பழைய வழக்கங்களாகிய சுவர்களை ஒரே யிரவில் இடித்துத் தள்ளி, ஜப்பான் வெற்றிக்கோலம் பூண்டு நிற்பதை ஒரு நாட் காலையில் எழுந்தவுடன் உலக முழுதும் பார்த்து வியப் பெய்திற்று. இடமாறுதல் நம்பமுடியாதபடி அத்தனை விரைவில் நடந்தது ; உடுப்பு மாற்றுவதுபோல் இருந்ததே யன்றி, ஒரு புதிய கட்டிடத்தை மெதுவாக எழுப்புவது போலில்லை. முதிர்ச்சியால் விளையும் தன்னம்பிகையின் பலத்தையும், புதிய உயிருக்கியல்பாகிய புதுமையையும், எல்லையற்ற ஸாத்யத் தன்மைகளையும் ஜப்பான் ஏககாலத்திலே காண்பித்தாள். அப்போது சிலர் :—" இது சரித்திரத்திலே ஒரு விநோதம் ; காலதேவதையின் குழந்தை விளையாட்டு ; சவுக்காரத்தில் உண்டாகும் குமிழியைப்போலே; கோளத்திலும் வர்ணத்திலும் குறைவில்லை, ஆனால் உள்ளே ஒட்டை, ஸத்தில்லாதது" எனறெண்ணிப் பயந்தார்கள். ஆனால் ஜப்பானே, தன் எதிர்பாராத சக்திப் பிரகாசம் சிலநாள் விந்தையன்று, காலத்தில் யதிர்ச்சையாக விளைந்த விளைவன்று ; ஆழ்ந்த இருளினின்றும் வீசுண்டு மறுக்ஷணம் சூன்யக் கடலில் மோதப்படும் ஓர் பொய்ப் பொருளன்று என்பதை முடிவாக நிரூபணம் செய்துவிட்டாள்.

உண்மை யாதெனில், ஜப்பான் ஏககாலத்தில் புதியவளும், பழையவளுமாகினாள். அவளுக்குக் கிழக்கு (ஆசியாக் கண்டத்துப்) பயிற்சி முன்னோரிடமிருந்து கிடைத்தது ; அப்பயிற்சி எப்படிப்பட்டது ? மெய்யான செல்வமும் வலிமையும் வேண்டினால், நோக்கத்தைத் தன்னுள்ளே செலுத்தவேண்டுமென்று கற்பித்த பயிற்சி ; ஆபத்து வரும்போது புலனிழந்து போகாமல் காக்கும் பயிற்சி ; மரணத்தை இகழவேண்டுமென்ற பயிற்சி ; உடன் வாழும் மனிதருக்கு

நாம் எண்ணற்ற கடமைகள் செலுத்த வேண்டுமென்ற பயிற்சி; பின்ன வஸ்துக்களில் அகண்ட வஸ்துவைப் பாரென்று காட்டிய பயிற்சி; மேலும் இவ்வுலகம் உயிருடைய தென்றும், இதனுள்ளே ஒரு ஆத்மா ததும்புகிறதென்றும், இது வெறுமே யதிர்ச்சை யென்னும் பெரிய பேயினுலோ, அல்லது காரணமாத்ரமாக எங்கோ தொலையெட்டிய வான மொன்றில் மறைந்து கிடக்கும் தேவனுலோ செய்துவிடப்பட்ட யந்திரமில்லை யென்றும் விளக்கிய பயிற்சி; அநாதியாகிய கிழக்குத் திசையில் ஜப்பான் மலர்ந்தாள். தாமரைப் பூவொன்று தான் பிறந்த ஆழத்தில் பலமான பிடிப்பு வைத்துக்கொண்டு எளிய விலாஸத்துடன் மலர்வதுபோலே மலர்ந்தாள்.

பழைய கிழக்கின் (ஆசியாக் கண்டத்தின்) குழந்தையாகிய ஜப்பான் அச்சமின்றிப் புதிய காலத்தில் பேறுகளையெல்லாம் தனக்கு வேண்டுமென்று கேட்டாள். சோம்பேறிகளின் மனதில் திரளும் குப்பைகளும், பூட்டுத் திறவு கோல்களினுல் அபாயத்தை விலக்க நினைப்பனவும் ஆகிய வழக்கச் சிறைகளை உடைத்து வெளியேறித் தனது தைரியத்தைக் காண்பித்தாள். இங்ஙனம் அவள் உயிருடைய காலத்துடன் ஸ்பரிசமடைந்தாள். ஆச்சர்யத்துக்கிடமான ஆவலும் தகுதியுமுடையவளாய் நவீன நாகரிகத்தின் பொறுப்புகளை மேற்கொண்டாள்.

இதிலிருந்து ஆசியாவின் மற்றப் பகுதிகளெல்லாம் "நமக்குள் உயிரும் பலமும் உள; மேல் தோடுதான் செத்தது. அதை நீக்கி விடுவோம்" என்றெண்ணித் தைரியத்தை அடைந்தன. இளமை தருகின்ற கால வெள்ளத்தின் ஓட்டத்தில் நாம் நிர்வாணமாக முழுகி எழ வேண்டும். செத்ததை அடைக்கலம் புகுதல் சாதலேயாம். உயிரில் என்ன அபாயம் நேரினும் அஞ்சாது மேற்கொள்வதே உயிர்த்தல். இஃதெல்லாம் ஜப்பான் கற்றுக் கொடுத்த பாடம்.

மேலும் நமக்கு ஜப்பான் படிப்பித்ததென்னவென்றுல், நாசமாகாமல் பிழைக்கவேண்டுமானுல் கால சக்திக்கு—காலமாகிய காவற்காரனுக்கு—சரியான உத்தரம் சொல்ல வேண்டும். நமது காலத்தின் ஸங்கேத மொழியை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

ஜப்பான் ஆசியாக் கண்டம் முழுதும் தனது சொல்லை விடுத்தாள். எப்படியென்றால், நமது பழைய விதைக்குள் உயிர் இருக்கிறது, அந்த விதையை நவீன காலமாகிய புதிய தரையில் நடவேண்டியதைத் தவிர வேறொன்றும் வேலையில்லை.

ஜப்பான் மேற்குத் தேசத்தாரைப் போலே வெறும் புற நடிப்பு—அபிநயம் காட்டி இந்தப் பதவி யடைந்துவிட்டதாகச் சிலர் சொல்வதை நான் ஒரு போதும் நம்பமாட்டேன். உயிரை அபிநயிக்க முடியாது. வலிமையை நெடுநாள் பொய் நடிப்புக் காட்ட இயலாது. வெறும் அபிநயம் பலஹீனத்துக்கு மூலாதாரம். நம்முடைய எலும்புக்கூட்டை மற்றொருவனுடைய தோலினால் போர்த்துக் கொள்வது போலாம். அதனால் ஒவ்வொரு நிமிஷமும் தோலுக்கும் எலும்புக்கும் தீராத சண்டையாகவே இருக்கும். எனக்கு ஜப்பானுடன் நெருங்கிப் பழகி அவளியல்பு யாது? அவளுடைய பலம் எதிலேயிருக்கிறது ? அவளுக்கு விபத்துக்கள் எவை யென்பனவற்றையெல்லாம் நானாக நிச்சயப்படுத்திக்கொள்ள ஸந்தர்ப்பம் வாய்க்கவில்லை. நானும் கிழக்கைச் சேர்ந்த வனாகையாலே, அவளுடைய தற்கால விவகாரங்களையும், அவற்றை அவள் தீர்க்கும் வழிகளையும் நான் மிகவும் ஆவலுடன் கவனிக்கவேண்டியவனாகிறேன். இந்தப் பெரிய கிழக்கு ஜாதி நவீன காலத்தினிடம் பெற்ற ஸௌகர்யங்களையும், பொறுப்புகளையும் என்ன செய்யப் போகிறா ளென்பதைப் பார்க்கும்பொருட்டாக உலக முழுதும் காத்திருக்கிறது. வெறுமே மேற்கை (ஐரோப்பாவை) அபிநயிப்பாளானால் அவளைக் குறித்து நாம் எதிர்பார்த்ததெல்லாம் வீணாகிவிடும்.

மேற்கு நாகரிகம் பல ஸங்கடமான விவகாரங்களை உலகத்தின் முன்னே காட்டிற்று. ஆனால் அவற்றைத் தீர்ப்புப் பண்ணும் நெறி காட்டவில்லை. ஆளுக்கும் அரசுக்கும் போராட்டம் ; தொழிலாளிக்கும் முதலாளிக்கும் சண்டை ; ஆணுக்கும் பெண்ணுக்கும் யுத்தம் ; லௌகீக லாபத்துக்கும் ஆத்ம லாபத்துக்கும் யுத்தம் ; ஜாதிகளின் கூட்ட ஹங்காரத்துக்கும், மானுஷீக பரம தர்மங்களுக்கும் யுத்தம் ; அங்ஙனமே வர்த்தகம், அரசு எனுமிவற்றின் பிரமாண்டமான கூட்டங்களிலே ஸஹஜமாக விளையக்கூடிய குரூபமான சிக்கல்களுக்கும், அழகையும், பரிபூரண சாந்தியையும்

விரும்புகிற மனுஷ்ய ஸ்வபாவத்திற்கும் யுத்தம் ; இத்தனை குழப்பங்களுக்கும் ஸமாதானம் கண்டு பிடிக்கவேண்டும். இதுவரை கனவிலே காணாத ஒரு புது யுக்திபண்ணிக் கண்டு பிடிக்கவேண்டும்.

இந்த நாகரிகமான நதி பல வாய்க்கால்கள் வழியே தன்னுள் வந்து சேரும் குப்பை கூளங்களால் அடைப் புண்டுபோவது கண்டோம். மானுஷீகத்தில் தனக்கு மிகுந்த அன்புண்டென்று தற்புகழ்ச்சி பேசியும் அது மனிதனுக்குப் பரம சத்ருவாக மூண்டது கண்டோம். முற்காலத்தில் காடு களிலே சுற்றிய அநாகரிகக் கூட்டத்தார் திடீர் திடீர் என்று கலகம் விளைவித்த இயல்பைக் காட்டிலும் இது மிகவும் கொடிது. இந்த நாகரிகம் மிகவும் ஸ்வதந்த்ராபிமானம் இருப்பதாக டம்பம் பேசுகிறதேயொழிய, நடையில் முற் காலங்களில் வழங்கியவற்றைக் காட்டிலும் கொடுமையான அடிமைத்தன்மைகளை இது மனுஷ்ய ஸங்கத்தில் புகுத்தி யிருப்பது கண்டோம். நவீன அடிமைத்தனத்தின் விலங்குகளை உடைத்தலரிது. காரணம்—இவை கண்ணுக்குப் புலப்படவில்லை. அல்லது விடுதலையின் வேஷத்தையும் பெயர் களையும் புனைந்து கொள்ளுகின்றன. இந்த நாகரிகத்தின் அஸுர லோபத்தினால், மனிதன் தன்னைப் பெருமைப்படுத்திய வீர தர்மங்களில் நம்பிக்கை யிழப்பது கண்டோம்.

ஆதலால், ஜப்பானியராகிய நீங்கள் இலேசாக இந்த நவீன நாகரிகத்தை இதன் இச்சைகள், வழிகள், ஸங்கேதங் களுடன் அங்கீகாரம் செய்து, இவை இன்றியமையாதன என்று வீணெண்ணம் கொள்ளலாகாது. கிழக்குப் புத்தியை உபயோகப்படுத்துங்கள். ஆத்ம சக்தியை, டம்பமில்லாமையில் விருப்பத்தை, அயலாருக்குதவ வேண்டுமென்ற நம்பிக் கையை உபயோகப்படுத்திக் கிறீச்சுக் கிறீச் சென்று கத்திக் கொண்டு போகும் மனுஷ்ய அபிவிருத்தியென்ற தேருக்குப் புதிய பாதையொன்று கண்டு பிடியுங்கள். ஒவ்வோரசைப் பிலும் அத்தேர் கேட்கும் அபரிமிதமான ஜீவபலியையும் ஸ்வதந்த்ர பலியையும் இயன்ற வரை சுருக்கப்படுத்துங்கள், பல தலைமுறைகளாக நீங்கள் உங்கள் தேசத்துக்குரிய தனி வழியிலே உணர்ந்தும், எண்ணியும், தொழில் செய்தும், இன்புற்றும், தொழுதும் வந்திருக்கிறீர்கள். இதை யெல்லாம் பழங் கந்தைபோலே கழற்றி யெறிதல் இயலாது. இந்த வழி உங்கள் ரத்தத்தில் கலந்திருக்கிறது. உங்கள்

எலும்பின் மஜ்ஜைக்குள், தசைக்குள், மூளை நிணத்துக்குள் கலந்திருக்கிறது. நீங்கள் கை வைப்பதிலெல்லாம் அது தொழில் செய்யவரும். உங்களுக்குத் தெரியாமலே வரும், உங்களிச்சையை மீறியும் வரும்.

முற்காலத்தில் நீங்கள் மானுஷீக விவகாரங்களை உங்களுக்குத் திருப்தியாகவே தீர்த்துக் கொண்டீர்கள். உயிரைப் பற்றிய உங்களறிவு, வாழ்விற்கு நீங்கள் கண்ட தனி வழி இவற்றையெல்லாம் இக்கால நிலைமையிலே செலுத்திப் பாருங்கள். அதிலிருந்து சிருஷ்டி தோன்றும். அந்த ஸ்ருஷ்டி வெறும் அபிநயமன்று. அதை உங்கள் ஜாதியின் ஆத்மா தனதென்று கொண்டு, உலக க்ஷேமத்துக்கும் அதனையே தனது காணிக்கையாக இறுமாப்புடன் செலுத்தும். மேற்கேயிருந்து சேகரித்த பொருள்களை உங்களுடைய சொந்த அறிவுக்கும் அவசியத்துக்கும் தக்கபடி உபயோகித்துக் கொள்ளும் உரிமை ஆசியாக் கண்ட முழுதிலும் ஜப்பானிய ஜாதியொன்றுக்கு மாத்திரந்தானிருக்கிறது. அதிருஷ்ட வசத்தால் உங்களுக்கு அன்னியரின் தொல்லை கிடையாது. ஆனால் அதற்குத் தக்கபடி உங்களுக்குப் பொறுப்பதிகமாகிறது. மனுஷ்ய ஸபையின் முன்னே ஐரோப்பா கொண்டு வந்திருக்கும் கேள்விகளுக்கு ஆசியா உங்கள் வாக்குமூலமாகவே உத்தரங் கொடுக்கவேண்டும். நவீன நாகரிகத்தின் சில தோற்றங்களை மாற்றி, அது யந்திரம்போலச் செத்துக் கிடக்குமிடத்தில் உயிரைப் பொழிந்து, நிஷ்கருணையான அவசிய விதியினிடத்தே மனுஷ்ய ஹ்ருதயத்தைப் போட்டு, இன்னிசையும், உயிருமுள்ள வளர்ச்சியையும், உண்மையையும், அழகையும் மேலாக எண்ணி, கேவலம் கார்ய லாபத்தையும், வலிமையையும், தாழ்வாக நினைத்து, இங்ஙனம் ஆசியா நடத்திப் பார்க்கும் சில புதிய சோதனைகள் உங்கள் நாட்டிலே நடத்தப்படும்.

பழைய காலத்தில் ஆசியாவின் கீழ்ப்பகுதி முழுதும், பர்மாவிலிருந்து ஜப்பான் வரை, எல்லாம் இந்தியாவுடன் நெருங்கின ஸ்நேஹத் தளையில் கட்டுப்பட்டிருந்தது. நமக்குள் ஜீவமயமான உள்ளத் தொடர்பிருந்தது. ஒரே நாடி வலையுண்டு. அதன் வழியே மனுஷ்ய ஜாதியின் முக்யமான அவஸரங்களைப் பற்றிய சிந்தனைகள் நமக்குள்ளே பரவின. நாம் பரஸ்பரம் பயந்து நடுங்கிக்

கொண்டிருக்கவில்லை. பரஸ்பரம் அடக்கிவைக்கும் பொருட்டாக ஆயுதங்கள் தரிக்கவில்லை. சுயலாபத்தை வேண்டிப் பரஸ்பரம் சட்டைப் பையில் கை போட்டுத் திருடும் சம்பந்தம் நாம் கொண்டிருக்கவில்லை. ஆதர்சங்களையும், சிந்தனைகளையும் பண்டமாற்றிக் கொண்டோம். பரம வாத்ஸல்யத்தின் தான ப்ரதி தானங்கள் செய்து கொண்டோம். பரஸ்பரம் நமது ஹ்ருதய கீற்றுமை பாஷா பேதங்களால் தடைப்படவில்லை. ஜாதி கர்வம், உடம்பிலோ மதியிலோ நாம் வலியோமென்ற செருக்கு, நமது தொடர்பைக் கெடுக்கவில்லை.

கலைகளும், ஸாஹித்யங்களும், புதிய தழைகளும் மலர்களும் காட்டின. ஹ்ருதய ஒற்றுமை என்ற ஸௌர்யனுடைய செய்கையால் அங்ஙனம் காட்டின. நாட்டிலும், பாஷையிலும், சரித்திரத்திலும் வேறுபட்ட பல ஜாதியாராயினும் நாம் ஒருங்கே மனுஷ்ய ஜாதியின் பரம ஐக்யத்தையும், அன்பின் ஆழ்ந்த பந்தத்தையும் அங்கீகரித்தோம். சாந்தியும், தர்ம சிந்தையுமுடையதாய், மனிதர் பரமார்த்தங்களின் பொருட்டுக் காட்டில் கூடிய அந்தக் காலத்தில் உங்கள் ஜாதி அமரத் தைலம் கூட்டி வைத்தது. அது கொண்டே உங்கள் ஜாதி புதிய யுகத்தில் மறுபடி பிறக்கவும், புதிய இளைய உடல் தரிக்கவும், உலகம் பார்த்தனவற்றுள்ளே பெரு வியப்பாகிய பெரும் புரட்சியின் இடிப்பிலே காயம் படாமல் பிழைக்கவும் ஹேது உண்டாயிற்று.

பழையதைப் புதிதாகவும், பலமற்றதை பலமுடையதாகவும், அவமானத்தை மாட்சியுடைய வெற்றியாகவும் மாற்றவேண்டுமானால், அதற்கு மனிதனிடத்தில் மறைந்து நிற்கும் தேவ சக்திதான் வந்து தீரவேண்டுமென்பதை நம்பாதிருத்தல் சிரமம். அந்தத் தேவ சக்தியானது உங்கள் நாட்டிலே, இந்த அற்ப லோப நாட்களில் பிறக்கவில்லை. கீச்சிடும் யந்திரங்களும், அஸுரத்தனமான அஹங்காரமும், ராஜ்யதந்திரிகளின் பொய் முழக்கங்களும், செழிப்படைந்த கபடமும் தலையெடுத்திருக்கும் இந்த நாட்களில் அது பிறக்கவில்லை. வீர ஆண்மையின் உதய காலத்தில், வானம் மண்ணை நெருங்கி வந்த காலத்தில், மனிதன் தனதாத்மாவிலும், ஜகத்தை ப்ரகாசப்படுத்திய பரமாத்மாவினிடத்திலும் நம்பிக்கை கொண்டிருந்த புராதன காலத்தில், அது பிறந்தது.

இந்த நாட்டில் என் மனதிலே அதிகமாகப் பதிந்த விஷயம் யாதென்றால், நீங்கள் இயற்கையின் மர்மங்களைப் பகுப்பு நெறியால் அறியாமல் அனுதாபத்தாலே தெரிந்தீர்களென்ற நம்பிக்கை. இயற்கைத் தேவியின் கோடுகளிலுள்ள பாஷையையும், வர்ணங்களிலுள்ள ஸங்கீதத்தையும், கோணல்களிலுள்ள ஒழுங்கையும், விடுதலையுள்ள அசைவுகளிலே இன்னிசையையும் நீங்கள் கண்டீர்கள். அவள் தன் அபரிமிதமான வஸ்துக் கூட்டங்களை யாதொரு முட்டுதலுமின்றி நடத்திச் செல்லுகிறாள். அவளுடைய படைப்புக்களில் சண்டைகள் கூடக் கூத்தும் பாட்டும்போலே இலகின்றன. அவளுடைய கிளர்ச்சியிலே கேவலம் பகட்டு மிகுதியன்று; தன்னை மறந்த ஸம்பூர்ணத்வம் காணப்படுகிறது.

இயற்கையானவள் தனது ஸௌந்தர்ய ரூபங்களில் சக்தி சேர்த்து வைத்திருக்கிறாள். இந்த அழகுதான் அவள் மார்பின் மீது கிடக்கும் பெரிய சக்திகளைத் தாய்போலே போஷிக்கிறது. வேகத்திலும், சாந்தியிலும் அவற்றைக் காப்பாற்றுகிறது. பரிபூர்ண ஸௌந்தர்யத்தின் ஸங்கீதத்தினால் பிரகிருதியின் சக்திகள் தம்மைத் தாமே அழிவின்றிக் காத்துக்கொள்ளுகின்றன. அவள் தனது கோணல் வரிகளின் மென்மையால், பூமியின் தசைகளிலுள்ள ஆயாஸத்தை நீக்கிவிடுகிறாள். இந்த விஷயங்களையெல்லாம் நீங்கள் அறிந்துகொண்டீர்கள். இந்த மர்மங்களை வாழ்க்கையிலே கலந்துகொண்டீர்களென்றும், எல்லாவற்றிலும் தோன்றும் அழகு உங்கள் மதிக்குள்ளே பாய்ந்து விட்டதென்றும் உணர்கிறேன்.

வஸ்துக்களைப் பற்றிய புற அறிவு விரைவிலே வந்துவிடும். அகத்தைக் காண்பதே பல நூற்றாண்டு பழகித் தன்னைக் கட்டிய பின்பு கைகூடும் விஷயம். புறத்தே நின்று இயற்கையை ஆளுதல் மிகவும் எளிது. அன்பின் கனியிலே அவளைத் தனதாக்கிக் கொள்ளுதல் அரிது. அதுவே உண்மையான மேதையின் தொழில். உங்கள் ஜாதி அந்த மேதையைப் பயிற்சியாலே காட்டவில்லை, படைக்குந்திறனாலே காட்டிற்று. புறக்கோலத்தாலன்று, ஆத்மப் பிரகாசத்தால். இந்த ஸ்ருஷ்டி சக்தி எல்லா ஜாதிகளிலும் உண்டு. இதன் தொழில் மனிதரின் குணங்களைக் கவர்ந்து, தன் ஆதர்சங்களுக்குத் தக்கபடி அவற்றை உருமாற்றுதலாம். ஆனால் இங்கே அந்தச் சக்தி பலிதமாய்விட்டது. இங்கு ஜப்பானில்,

அது எல்லா மனிதரின் மனதிலும் அழுந்திவிட்டதாகத் தோன்றுகிறது. தசை, நாடிகளில் ஊறிவிட்டதாகப் புலப்படுகிறது. உங்கள் மன உணர்ச்சிகள் உண்மையாயின. புலன்கள் தீக்ஷண்யமாயின. கைகள் இயற்கைத் திறமை பெற்றன. ஐரோப்பாவின் மேதையால் அங்குள்ள ஜனங்களுக்குக் கூட்டஞ் சேர்க்கிற சக்தி ஏற்பட்டது. அந்தச் சக்தியை ராஜ்ய நீதியிலும், வியாபாரத்திலும், பௌதிக சாஸ்திர ஞானத்தை ஒருமுகப்படுத்துவதிலும் உபயோகிக்கிறார்கள். ஜப்பானுடைய மேதையோவென்றால் உங்களுக்கு ஸௌந்தர்ய தர்சனத்தையும், அதை வாழ்க்கையில் நிரூபணம் செய்யும் திறமையையும் கொடுத்தது. இதனால் நீங்கள் வேண்டியபோது கூட்டஞ் சேர்க்கிற திறமை தன்னாலே வந்துவிட்டது. ஏனெனில் அழகின் இசை அந்தராத்மாவில் உள்ளது. அதன் புறஉடல் ஸங்க-ஸ்தாபன சக்தி.

ஒவ்வொரு நாகரிகமும் ஒவ்வொருவிதமான மனுஷ்ய அனுபவத்தின் மொழிபெயர்ப்பு. உலகத்திலுள்ள வஸ்துக்களின் சண்டைப் பகுதியை மாத்திரம் ஐரோப்பா அழுத்தமாகத் தெரிந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அந்தப் போராட்டத்தை வெற்றியினாலேதான் வசப்படுத்த முடியும். ஆதலால், அவள் (ஐரோப்பா) எப்போதும் போர் செய்ய ஆயத்தமாகவே யிருக்கிறாள். அவளுடைய கவனத்தில் பெரும்பகுதி ஸைந்யங்கள் சேர்ப்பதிலே செல்வாகிறது. ஆனால் ஜப்பான் தனது லோகத்தில் ஒரு தேவ ஸந்நிதியின் ஸ்பர்சத்தை உணர்ந்தாள். ஆதலால் அவளுடைய ஆத்மாவில் பக்தியாராதனம் எழுந்தது. அவள் இயற்கையை வென்றதாகச் செருக்குரை சொல்லவில்லை. அளவில்லாத ஜாக்கிரதையுடனும், மகிழ்ச்சியுடனும் இயற்கைக்கு ப்ரேமாஞ்சலி செலுத்துகிறாள். அவளுக்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பு ஆழ்ந்த உள்ளத்தொடர்பு. இந்த அன்பாகிய உயிர்த் தளையை அவள் தனது குன்றுகளுடனும், கடல், ஆறுகள், பலவிதமான புஷ்ப விஹாரங்களும், கிளைக் காட்சிகளுமுடைய வனங்களுடனும் ஏற்படுத்திக் கொண்டாள். காடுகளின் பெருமூச்சையும், கிசு கிசுப்பையும் ஹ்ருதயத்தில் வாங்கிக் கொண்டாள். அங்ஙனமே, அலைகளின் விம்முதல்களையும், ஸூர்ய, சந்திரரின் ஒளி, நிழல்களின் ஸகல கலா பேதங்களையும் கற்றுணர்ந்தாள். சோலைகளிலும், உப வனங்களிலும், வயல்களிலும் ருதுக்களின் வரவைக் காணும்பொருட்டுக் களிப்புடன் கடைகளைச் சார்த்தினாள்.

உலகத்தின் ஆத்மாவுக்கு இங்ஙனம் நெஞ்சு திறத்தல் உங்களிலே சில செல்வர் மாத்திரம் செய்யவில்லை. இது புறத்து நாகரிகமொன்றின் பலாத்காரத்தால் ஏற்பட்டதன்று. ஜகத்தின் ஹ்ருதயத்திலே ஒரு புருஷனைக் காண்பதாகிய ஆத்மாநுபூதி உங்கள் நாகரிகத்திலும் வடிவு கொண்டது. மனிதரையெல்லாம் பந்துக்களாக நினைப்பது உங்கள் நாகரிகம். ஆதலால் உங்களில் அரசுக்குச் செலுத்தவேண்டிய கடமை தந்தைக்குச் செலுத்தவேண்டிய கடமை போலாயிற்று. உங்கள் ஜாதி ஒரு குடும்பமாயிற்று. சக்ரவர்த்தி அதற்குத் தலை. பிறரை அடித்தல், தம்மைக் காத்தல் என்ற இரண்டு நோக்கங்களுக்காக உண்டான ஆயுதக் கூட்டுறவினின்றும் உங்கள் ஜாதியொற்றுமை பிறந்ததன்று. பிற நாடுகளின்மீது படையெடுத்துக் கொள்ளைத் தொழிலின் லாப நஷ்டங்களைப் பங்கிட்டுக்கொள்ளும் கூட்டுறவிலே பிறந்ததன்று. யாதேனுமொரு பலாபேக்ஷையினால் அவசியமாகும் ஸங்கத்தில் தோன்றியதன்று. ஆனால் குடும்பத்தின் விஸ்தாரம்; ஹ்ருதய விஸ்தாரம்; விசாலமான க்ஷேத்ரத்தில், நீண்ட காலத்தில் இயல்வதான விஸ்தாரம்.

இது பற்றியே இப்போது ஜப்பானிய நாகரிகத்தைப் பயமுறுத்தும் மாறுதலை நான் எனது சரீரத்துக்கு நேரும் பயம்போலே அஞ்சுகிறேன். என்? கார்யலாபத்தையே பொதுத் தளையாக உடைய நவீன காலத்தில் வேறுபாடுகள், மௌன ஸௌந்தர்யத்துக்கும் மறைந்த சக்திகளுக்கும் எதிரே பரிதபிக்கும்படியாகத் திறந்துகிடக்கும் கோலத்தை ஜப்பானில் காண்பதுபோல் இத்தனை தெளிவாகப் பிற இடங்களிலே காண்பதரிது.

ஸங்க பலமுடைய குரூபம் மனத்தைத் தாக்கி வசப்படுத்தித் தன் கனமாத்ரத்தாலே வெற்றியடையுமாயின் அதுவே அபாயம். அதன் இடைவிடாத அடிகளினாலும், ஹ்ருதயத்தின் ஆழ்ந்த ராகங்களை அது கண்டு நகைப்பதாலும் அதனை யேறவிட்டால் அபாயமுண்டாம். அது கரேமாகவும் பலாத்காரமாகவும் வந்து நமது கண் முன்னே நிற்பதால் அதைக் கண்டு நம் புலன்கள் மயங்குகின்றன. குரூபத்தினாலே சக்தியுடையதாகத் தோன்றும் மரப் பொம்மைக்குக் காட்டு மனுஷ்யன் பூஜைகள் செய்வதுபோலே நாம் அதற்கு பலிகள் கொடுக்கிறோம். ஆதலால் அடக்கமும், ஆழமும் உயிரின் நுட்பமான மென்மையுமுடைய வஸ்துக்களுடன் அது போட்டிக்கு வரும்போது பயமுண்டாகிறது.

உங்கள் ஜாதியின் ஆதர்சங்களில் அன்பில்லாத பலர் உங்களிலே உள்ளார். அவர்களுக்கு நோக்கம் வளர்ச்சி யன்று, லாபம். அவர்கள் ஜப்பானை நாங்களே நவீனமாக்கி னேமென்று தற்புகழ்ச்சி செய்து கூவுகிறார்கள். ஒரு ஜாதியின் ஆவிக்கும் காலத்தின் சக்திக்கும் இசை தவறக் கூடாதென்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் நவீனத்தனத்துக்கும் நவீனத்துக்கும் பேதமுண்டு, கவி ராயத்தனத்துக்கும் கவித்வத்துக்கும் பேதமிருப்பதுபோலே. இதை மறக்கக்கூடாது. இந்த நடிப்பு வெறும் கேலி தவிர வேறொன்றுமில்லை. இது மூலத்தைவிட அதிக இரைச்சல்; மூலத்தின் பொருளைக் கருதாமல் எழுத்தைக் கருதுவது உண்மையான நவீன போதமுடையோர் நவீனத்தனம் பண்ணுதல் அவசியமில்லை யென்பது ஞாபகமிருக்கவேண்டும். தீரர் தைரியம் பேசமாட்டார். நவீனத்வம் ஐரோப்பியரின் உடையிலே இல்லை. அவர்களுடைய குழந்தைகள் பாடம் படிக்கும்போது அடைத்து வைக்கும் குரூபமான கட்டிடங் களில் இல்லை. தட்டையான நேர்வரிச் சுவர்களுடையனவும், ஸமதூர வரிகளில் உள்ள ஜன்னல் வரிசைகளை உடையனவு மான அந்த மனிதர் அடைபட்டுக்கிடக்கும் சதுர வீடுகளில் இல்லை. மேலும், அவர்களுடைய பெண் மக்கள் தலையிலே நாநாவிதமான கூனங்களைச் சுமத்திய தொப்பிகளிலும் நவீனத்வம் இல்லையென்று நிச்சயமாகக் கூறலாம். இவை நவீனமல்ல; கேவலம் ஐரோப்பியம். உண்மையான நவீனமானது சிறந்த விடுதலை. ருசி பேதங்களுக்கடிமைப் படுவதன்று. அறிவிலும், தொழிலிலும் விடுதலை; ஐரோப் பிய வாத்தியார்களின் கீழே பள்ளிப் பிள்ளைத்தனமன்று. நவீனமானது ஸயன்ஸ் (சாஸ்த்ரம்). அதை வாழ்க்கையிலே தவறாக ப்ரயோகித்தலன்று. சாஸ்த்ரத்தை ஒரு மூட பக்தியாக்கி, அஸங்கதமாக அதன் உதவியை எல்லா அஸாத் யங்களுக்கும் நாடுகிற நமது ஸயன்ஸ் வாத்தியார்களைப் பின்பற்றுதல் நவீனமன்று.

நவீனத் தற்காப்புக் கருவிகளை ஸம்பாதிப்பதில் ஜப்பான் அஜாக்ரதையாக இருக்கவேண்டுமென்று நான் க்ஷணமேனும் கூறவில்லை. ஆனால் ஆத்ம—ஸம்ரக்ஷணையளவுக்கு மிஞ்சி அக்கருவிகளை வேண்டலாகாது. உண்மையான சக்தி ஆயுதங் களில் இல்லை. அவற்றைக் கையாளும் மனிதனிடம் உள்ள தென்பதை அறியவேண்டும். மனிதன் பலத்தை வேண்டி,

ஆத்மாவுக்குத் தீங்கு நேருமளவு ஆயுதங்களை வளர்த்தால், அவற்றாலே அவனுடைய பகைவருக்கு நேரும் ஆபத்தைக் காட்டிலும் அவனுக்கே அதிக ஆபத்தாகிறது.

உயிருடைய வஸ்துக்களைக் காயப்படுத்துதல் எளிது. ஆதலால், அவற்றுக்கு ஸம்ரக்ஷணை வேண்டும். இயற்கையிலே உயிர் தன்னைத் தனது சொந்த வஸ்துக்களாலே செய்த போர்வைகளால் காக்கிறது. அது பற்றியே அவை உயிரின் வளர்ச்சியுடன் இசை பொருந்துகின்றன. இல்லாவிட்டால் காலம் வரும்போது அவை உடைந்துபோகும். எளிதிலே மறைந்துபோகும். உயிருள்ள மனிதனுக்கு உண்மையான கவசம் அவனுடைய ஆத்ம ஆதர்சங்களேயாம். அவை அவனுடன் ஜீவ ஸம்பந்தமுடையன. அவன் வளர்ச்சியுடனே வளர்வன. துரதிர்ஷ்டவசத்தால் அவன் தனக்குச் சில ஸமயங்களில் உருக்கினால் செய்த, செத்த, யந்த்ரதுல்யமான கவசங்களையும் உபயோகிக்க நேரிடுகிறது. அப்போது அவற்றின் கொடுமையிலிருந்து தன்னைக் காப்பதில் ஜாக்ரதையாக இருக்கவேண்டும். அவன் பலஹீனனாய், போர்வைக்குத் தக்கபடி உடம்பைக் குறுக்கிக்கொண்டு போனால், நாளடைவில் ஆத்மா சுருங்கித் தற்கொலையாக முடியும். அந்தத் தற்கொலையின் வழியை மேற்கு ஜாதியார் அனுசரிப்போராகித் தாங்கள் அதிகாரத்திலிருக்கவும், பிறரை அடக்கி வைக்கவுங் கருதித் தமது மனுஷ்யத் தன்மையை ஸங்கங்களின் பெரிய பாரத்தின் கீழே அழுத்தி மூச்சைப் பிடித்துக் கொள்ளுகிறார்களென்பதை ஜப்பான் தன் மனதில் உரக்கக் கூறிக்கொள்ளவேண்டும். தர்ம விதியிலே உறுதியான நம்பிக்கை செலுத்தவேண்டும். ஆதலால், நவீன ஜப்பானில் அதிகரித்துவரும், மேற்குத் திசையாரை அனுகரணம் (அபிநயம்) செய்வதாகிய, பழக்கம் இவளுடைய பலத்துக்கும் ஸ்திரத்தன்மைக்கும் அவசியமென்று நான் நினைக்க இடமில்லை. அது இவளுடைய உண்மையியல்புக்குப் பெருஞ் சுமையாய், பலக்குறைவை உண்டாக்குகிறது. காலமாக ஆக இந்தப் பலஹீனம் மிகுதிப்படும். நவீன ஜப்பானியர் பால்யதசை முதலாகக் கற்றுக்கொள்ளுகிற மேற்குத் திசையின் ஆசாரங்கள், அன்ய நாகரிகத்தின் வழக்கங்கள், கடைசியாக ஒருநாள் ஜப்பான் தனது சொந்த இயல்பை மறக்கும்படிச் செய்துவிடும். அப்போது ஜப்பான் மக்கள் தமது பூர்வ நிலத்தை மறந்துவிடுவர். தமது புராதன சரித்திரமாகிய

குன்றத்திலிருந்து பாய்ந்துவரும் நதியைத் தாமே தடைகளாய் நின்று அடைத்துப்போடுவார்கள். அப்போது அவளுடைய நாகரிகத்தை ஸௌந்தர்யத்தின் செழிப்பினு லும், பலச்செழிப்பாலும் மிக வளம்பெறச் செய்த ஜீவ நீர் எதிர்காலத்துக்கில்லாமல் போகும்.

இதைக் காட்டிலும் ஜப்பானுக்குப் பெரியதொரு விபத்து யாதெனில், மேற்கின் புறக் கோலங்களை அபிநயிக்கும் செய்கை மாத்திரமன்று; மேற்குத் திசை நாகரிகத்தின் உள்ளிருந்து நடத்தும் சக்தியையே தனதாக அங்கீகரித்தல். அவளுடைய ஜன ஆதர்சங்கள் ஏற்கெனவே ராஜ்ய விவகாரங் களின் முன்னே தோற்குங் குறிகளைக் காட்டுகின்றன. மனிதர் விளையாட்டில் ஜெயிக்கும் பொருட்டாக மனிதர் ஆத்மாவைப் பணயமென்று வைக்கும் ராஜ்யச் சூதில் அவளுடைய நவீன விருப்பம் சாய்ந்து வருகிறது. “தகுதி மிக்கதன் உயிர் மிஞ்சும்” என்ற ஸயன்ஸ் வாக்யத்தை அவள் தனது வாயில் மீது பெரிய எழுத்தில் எழுதி வைத்திருக்கக் காண்கிறேன். அந்த வாக்யத்தின் உள்ளர்த் தம் யாதெனில்: ‘உன் லாபத்தையே தேடு. அதனால் மற்றவர்களுக்கு எவ்வளவு நஷ்டமுண்டானாலும் கவனிக் காதே.’ இது குருடனுடைய மந்திரம். அவன் கண் தெரியாதபடியால் கையால் தீண்டக்கூடியதை மாத்திரந் தான் நம்புவான். ஆனால் மனிதரை இயற்கை மிகவும் நெருக்கமாகப் பின்னியிருப்பதால், நீ பிறரை அடித்தால் அந்த அடி உன் மீது தவறாமல் திரும்பி விழுமென்பதைக் கண்ணுடையோர் அறிவார். மனிதன் கண்டுபிடித்த உண்மை களிலே மிகப் பெரியது தர்மவிதி. அது யாதெனில் எவ்வளவு மனிதன் பிறருக்குள்ளே தன்னைக் காண்கி றானோ அவ்வளவு உண்மை நிலை யடைகிறானென்ற ஆச்சர்யமான ஸத்யத்தைக் கண்டுபிடித்த செயலேயாம். இதற்கு உள்ளத்திலே விளையும் பயன் மாத்திரமேயன்றி, நமது வாழ்வில் ஒவ்வொரு சாயையிலும் நற்பயனுண்டா கிறது. தார்மிகக் குருட்டுத்தனத்தை எந்த ஜாதியார் தேசபக்தி மதமென்று யத்தனத்தாலே பயிற்சி செய்கிறார் களோ, அவர்கள் திடீரென்று பலாத்கார மரணத்தை யடைவார்கள். முற்காலத்தில் தேசங்களை அன்னியர் படையேறி வருதல் உண்டு. குரூரமும், ரத்தச் சேதமும் இருக்கத்தான் செய்தன. பொறாமை, லோபங்களால் சூழ்ச்சிகள் செய்வதுமுண்டு. ஆனால் அவை ஜனங்களின் ஆத்மாவை

தீண்டின அல்ல. ஏனெனில் பொது ஜனங்கள் இந்தக் கேளிகளில் நேரே கலந்தது கிடையாது. சிலருடைய பேராசைகளினாலேதான் அவை உண்டாயின. இந்தத் துணிசெயல்களின் நீச, பாதகப் பகுதிகளிலே பொது ஜனங்கள் உத்தரவாதமில்லாமல், இவற்றிலுண்டாகும் வீர, மானுஷீகப் பயிற்சிகளின் லாபத்தை மாத்திரம் பெற்றனர். அதனால் பொது ஜனங்களுக்கு விளைந்த நன்மைகள் எவையெனில்: ஆபத்துக்குப் பின்வாங்காத விசுவாசமும், மானக் கடமைகளில் ஒருமனப்பட்ட பக்தியும், சரணாகதியிலே நிறைவும், மரணத்தையும் விபத்துக்களையும் பயமின்றி அங்கீகாரம் செய்யும் திறனுமென்க. ஆதலால் அரசரும் சேனாதிபதிகளும் அனுசரித்த முறைகளினின்றும், ஜனங்களின் ஹிருதயத்தில் ஆஸனமிட்டு விளங்கிய ஆதர்ஸங்கள் பிரமாதமான மாறுதலுக்குட்படவில்லை. ஆனால் மேற்கு நாகரிகத்தின் குணம் பரவிவருகிற இக் காலத்தில் எல்லா வகையாலும் விரோதங்களையும் ஆசைகளையும் வளர்க்கும்படி ஜனமுழுதும் பால்ய முதலாகவே பயிற்சி பெறுகிறது. சரித்திரத்தில் பாதியுண்மைகளையும் பொய்களையும் சிருஷ்டி செய்வதனாலும், இதர ஜாதியாரை எப்போதும் இடைவிடாமல் பழித்து அவர்களிடம் விரோத எண்ணங்களை வளரச் செய்வதனாலும், பெரும் பகுதி பொய்யும் மனிதப் பொது நலத்தைக் கருதி விரைவில் மறக்கத் தக்கனவுமாகிய சம்பவங்களுக்கு ஞாபகச் சின்னங்கள் கட்டி நிறுத்துவதனாலும், இங்ஙனம் ஒவ்வொரு ஜாதியும் தன்னைத் தவிர மற்ற ஜாதிகளுக்குத் தீய விபத்தாக மிகுந்து வருகிறது. அது மானுஷீகத்தின் ஊற்றிலேயே விஷத்தைக் கலந்ததுபோலாகிறது. நம்முள் மிகப் பெரியோரும் மிக நல்லோரும் வாழ்க்கையிலே காட்டிய ஆதர்சங்களைப் பழிப்பதுபோலாகிறது. உலகத்து ஜாதியாருக்கெல்லாம் அஸுரத்தனமான ஸ்வார்த்த நாட்டமே, சர்வ ஸாமான்யமான பெருந் தர்மமென்று காட்டுவதுபோலாகிறது. ஸயன்ஸ் (சாஸ்த்ரத்தின்) இடமிருந்து வேறெது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். தர்ம மரணம் விளைவிக்கும் இந்த மருந்தை மாத்திரம் கைக்கொள்ளவேண்டாம். பிற தேசத்துக்கு நீங்கள் விளைவிக்கும் தீமை உங்களையும் சூழாதென்று கணப்பொழுது நினையாதீர். உங்கள் மனையைச் சுற்றி நீங்கள் விதைக்கும் தீமைகள் கோட்டைகளாகுமென்றெண்ண வேண்டாம். ஒரு ஜாதி முழுதையும் தானே உயர்வென்ற அஸாதாரண கர்வ சிந்தையில் புகுத்தலும், தர்மத்துக்குருகாத கல்

நெஞ்சும், சோரத்தால் வந்த செல்வமும் பெருமையென்று கருதச் செய்தலும், போரில் வென்ற கொள்ளைகளைப் பஹிரங்க மான இடங்களில் காட்டித் தோற்ற ஜாதியாரின் அவமா னத்தை எக்காலமும் மறந்துபோகாமல் பாராட்டுவதும், அவற்றைப் பள்ளிக்கூடங்களில் வைத்துப் பிற ஜாதியார் விஷயத்திலே குழந்தைகளின் மனதில் இகழ்ச்சியைப் பயிராக்குவதும்—இக்தெல்லாம் மேற்குத் திசையை அது புண்பட்ட இடத்தில் அபிநயித்தலாம். அந்தப் புண்ணின் வீக்கம் உயிரைத் தின்னுகிற வியாதியின் வீக்கம்.

நமது ஜீவனத்துக்கவசியமான தானியப் பயிர்கள் பல நூற்றாண்டு கருத்துடன் தெரிந்தெடுத்து விளைவித்த பயன் களாம். ஆனால் உயிராக மாற்ற முடியாத களைகளை நாம் பொறுமையுடன் யோசித்து வளர்க்கவில்லை களைகளைப் பிடுங்குதல் சிரமம். கவனக் குறைவினால் பயிரைக் கெடுத்துப் பழைய காட்டு நிலைக்குச் செல்லவிடுதல் எளிது. அதுபோல் உங்கள் பூமிக்குத் தயவுடன் தன்னை இசைத்துக் கொண்ட தாகிய நாகரிகமும் முற்காலத்தில் உழுது களைபிடுங்கியது போதாமல் இன்னும் நீங்கள் உழைத்துக் கவலையுடன் காக்கும்படி வேண்டுகிறது. ஸயன்ஸ் கூட்டுறவு முதலிய சுத்த நவீனங்களை இடம் பெயர்த்து நடலாம். ஆனால் மனிதனுடைய ஜீவ குணங்கள் மிகவும் மெல்லிய நரம்புகளுடையன. நெந் தொலை பரவிய பல வேர்களையுடையன. அவற்றை இடம் பெயர்த்தால் செத்துப்போம். ஆதலால் மேற்குத் திசையின் ராஜ்ய ஆதர்சங்கள் உங்கள் ஆதர்சங்களை முரட்டுத்தனமாக அழுத்துவதை நான் அஞ்சுவேன். ராஜ்ய விஷயங்களையே முக்கியமாக உடைய நாகரிகத்தில் நாடென்பது ஒரு மானஸிக பதார்த்தம். மனிதருக்குள்ளே சம்பந்தமெல்லாம் லாபத்தைக் கருதிய ஸம்பந்தம். இந்த நாகரிகத்துக்குச் சித்தத்திலே ஆதாரமில்லையாதலால், இதை நடத்துதல் பயங்கரமானபடி சுலபம். இந்த யந்திரத்தை நீங்கள் பாதி நூற்றாண்டுக்குள்ளே வசப்படுத்தி விட்டீர்கள். உங்கள் ஜாதி யுடன் பிறந்து, உங்கள் நூற்றாண்டுகளில் வளர்ந்த உயிருள்ள ஆதர்சங்களைக் காட்டிலும் அந்த யந்திரத்தை அதிகமாக விரும்பும் மனிதர் உங்களுக்குள்ளே சிலர் உள்ளார். விளையாட்டுப் பரபரப்பில் ஒரு குழந்தை தனது தாயைக் காட்டிலும் விளையாட்டுப் பண்டங்களிடம் தனக்கதிக அன்பிருப்பதாக நினைத்துக் கொள்ளுதல்போலே.

மனுஷ்யன் மிகவும் உயர்ந்த ஸ்திதியை அடையும்போது தன்னை மறக்கிறான். மானுஷீக அன்பாகிய தளையை மூலாதாரமாகவுடைய உங்கள் நாகரீகம் தன்னைத்தானே தொளைத்துத் தொளைத்துப் பார்க்கும் குணத்தால் தீண்டப் படாதபடி உயிரின் ஆழத்திலே போஷிக்கப்பட்டது. வெறுமே ராஜ்ய விவகார சம்பந்தம் முழுதும் வேதனை; பயம், பரஹிம்ஸையே வடிவெடுத்து வீங்கிய புண்! அது வலிய உங்கள் கவனத்தைக் கவர்ந்தது. உங்கள் வாழ்விற்குறுதியாகிய உண்மையை நீங்கள் முழுதும் உணர்ந்துகொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது; பராக்காக இருக்கும்போது உங்களுக்கு விபத்து வாராமல் தடுக்கும்படி முற்காலம் உங்களுக்கு ஈசனுடைய தானம். தற்காலத்தைப்பற்றி நீங்களே சரியான தீர்மானம் செய்யவேண்டும்.

ஆதலால் உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்விகள் பின்வருமாறு :—“நாம் உலகத்தை அறிந்த நெறி பிழையா? மனித இயல்பை நேரே அறியாமல் நாம் அதனுடன் சம்பந்தங்கள் வகுத்துக்கொண்டோமா? மேற்குத் திசையின் மனவுணர்ச்சியே நேரானதா? மானுஷீகத்தின் பொது அவநம்பிக்கை யென்ற காப்புச் சுவரின் பின்னே அவள் ஜாதிக்ஷேமத்தைக் கட்டுகிற வழிதான் நேர் வழியா?”

கிழக்கு ஜாதியோன் றெழுச்சி பெறுமோ என்று ஆலோசனை பண்ணும்போதே மேற்குத் திசை எத்தனை பயம் காட்டுகிறதென்பதை நீங்கள் கண்டுபிடித்திருக்கலாம். இதன் காரணம் யாதெனில் அவள் வாழ்விற்குத் துணையாகிய சக்தி தீய சக்தி. அது அவளுடனிருக்கும் வரை அவளுக்கு (மேற்குக்கு) க்ஷேமம்; இதர லோகத்துக்கு நடுக்கம். ஐரோப்பிய நவீன நாகரிகத்தின் ஜீவ விருப்பம் யாதெனில் சாத்தானைத் தனக்கு மாத்திரம் சொந்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பது. அவளுடைய ஸகல ஆயுதங்களையும் தந்திரங்களையும் இந்த ஒரே நோக்கத்தில் செலுத்துகிறாள். சாத்தானை இங்ஙனம் கூவி நடத்தும் பூசைகள் செல்வத்தின் பாதை மூலமாக ஸர்வ நாசத்தின் கரையிலே கொண்டு சேர்க்கும். கடவுளுடைய பூமியின் மீது மேற்குத் திசை அவிழ்த்துவிட பிசாசுகள் அவளைப் பயமுறுத்து

கின்றன. அவளைக் கோலடியாலே பயங்களுக்குள்ளே துரத்து கின்றன. எனவே, அவளுக்கு ஆறுதல் இல்லை. அவள் பிறருக்கு விளைவிக்கும் அபாயங்களையும், அதனால் அவளுக் கேற்படும் அபாயங்களையும் தவிர மற்றதை யெல்லாம் மறந்து விடுகிறாள். இந்த ராஜ்ய சிந்தனைப் பேய்க்கு மற்ற நாடுகளைப் பலியிடுகிறாள். அவற்றின் பிணத்தசையை உண்டு கொழுக்கிறாள். பிணங்கள் பச்சையாக இருக்குமட்டும் அதிகக் கேடில்லை. ஆனால் அவை அழுகுவது திண்ணம். செத்தது பழிவாங்கும். எங்கும் அசுசியைப் பரப்பித் தின்போனுடம்பில் விஷமேற்றும். முன்பு, ஜப்பான் மானுஷிகச் செல்வ மெல்லாம் கொண்டிருந்தாள். வீர, ஸௌந்தர்யங்களின் இன்னிசையும் நியமத்தில் கம்பீரமும் ப்ரகாசத்தில் வளமும் பெற்று விளங்கினாள். அப்படி இருந்தும் மேற்குத் தேசங்கள் அவளை மதிக்கவில்லை. "மனுஷ்ய ரத்தத்தைக் குடிக்கும் சாத்தானுடைய நாய்கள் ஐரோப்பிய நாய்க் குகைகளிலே தான் வசிக்கலாமென்பதில்லை; ஜப்பானிலும் அவற்றைக் குடியேற்றி மனிதத்துன்பங்களை இரை போட்டு வளர்க்க முடியும்" என்பதை நிரூபணம் செய்யும்வரை ஜப்பானை அவர்கள் கவனிக்கவில்லை. அழகிய பூமியின்மீது நரகத் தீயின் வெள்ளக் கதவுகளைத் திறந்துவிடும் திறவுகோல் தன் கையிலும் இருக்கிறதென்றும், அவர்களுடைய காளத்தின் கணக்கிலேயே கொள்ளை, கொலை, அநாதைப் பெண்களைக் கற்பழித்தல் முதலியன செய்யும் பேய்க் கூத்து தனக்கும் பூமண்டலம் நாசமாகும்படி, ஆடத் தெரியுமென்றும் ஜப்பான் காட்டினவுடனே இவளைத் தமக்கு ஸமானமாக அங்கீகாரம் செய்தனர். மனிதன் தர்ம நெறியில் பக்குவப் படாத ஆரம்ப நிலையிலேதான் அஞ்சும் தெய்வத்தின் கொடுமைபற்றியே அதனிடம் பக்தி செலுத்துகிறான் என்பதை அறிவோம். ஆனால் மனிதன் இறுமாப்புடன் எதிர்நோக்கத்தக்க ஆதர்சம் இதுதானா? பல நூற்றாண்டு களான நாகரிகத்துக்கப்பால், ஜாதிகள் இரவிலே சுற்றும் காட்டுமிருகங்களைப்போலே, பரஸ்பரம் அஞ்சுவதும், உபசாரக் கதவுகளை அடைப்பதும், அடித்தல், தடுத்தல் இரண்டுக்கு மாத்திரமே கூட்டுறவு கொள்வதும், வியாபார ரஹஸ்யங் களையும் ராஜ்ய ரஹஸ்யங்களையும், ஆயுத ரஹஸ்யங்களையும், பொந்துக்குள்ளே மூடி வைப்பதும், பரஸ்பரமாக வளர்க்கும் குரை நாய்களுக்குத் தமக்குச் சொந்தமில்லாத மாம்ஸத்தைப் போட்டுச் ஸமாதானம் செய்வதும், எழுந்து நிற்க விரும்பும் வீழ்ந்த ஜாதியாரை மேலெழாதபடி அழுத்து

வதும், மனுஷ்ய ஜாதியின் மற்றப் பகுதிகளின் பலஹீனத்தையே தமக்கு க்ஷேமமாகக் கணிப்பதும்; தம்மைக் காட்டிலும் பலக்குறைவான ஜாதியாருக்கு வலது கையாலே மத ப்ரசாரம் செய்து, அவர்களை இடது கையாலே கொள்ளையடிப்பதும், இவற்றையெல்லாம் கண்டு நாம் பொறுமைப்படத் தகுமா? இந்த நாகரிகத்தின் கொள்கைக்கு நாம் முழங்கால் படியிடலாமா? இந்த நாகரிகம் பூமண்டல முழுவதிலும் பயத்தையும், லோபத்தையும், ஐயத்தையும் தன் ராஜ்ய தந்திரத்தைக் குறித்து வெட்கங்கெட்ட பொய்களையும், மனிதனுடைய ஸமாதானத்திலும், பொது ஸஹோதரத் தன்மையிலும் தனக்கு நல்லெண்ணமிருப்பது போலே பேசும் எண்ணெய் தடவின பொய்களையும், விதை தெளிப்பது போலே தெளிக்கிறது. நாம் பூர்வ ஆள்திக்குப் பதில் இந்த அன்யச் சரக்கை வாங்க நாம் மேற்குச் சந்தைக்கு விரைந்தோடிப் போகையிலே நாம் ஐயுறவுகொள்ள வேண்டாமா? தன்னைத் தான் அறிதல் சிரமமென்பதை நானறிவேன். குடிவெறியிலிருப்போன் தனக்கு வெறியில்லையென்று சத்தியம் பண்ணுவான். எனினும், மேற்குத் திசை தனது விவகாரங்களைப் பற்றித் தானே அக்கறையுடன் யோசனை பண்ணி வருகிறாள். சோதனைகள் புதிது புதிதாகச் செய்து பார்க்கிறாள். ஆனால் அவள் ஒரு பெரு வயிறுடையவள் போலாவாள். பெருவயிறன் தன் அமித போஜனத்தைக் கைவிட மனமில்லாமல் அஜீர்ணத்தால் உண்டாகி மூச்சைப் பிடிக்கும் பயங்கரக் கனவுகளை மருந்தினால் தீர்த்துக் கொள்ளலாமென்ற வீணாசையுறுவான். ஐரோப்பா தனது ராஜ்ய அமானுஷ்யத் தன்மையைக் கைவிட மனமில்லாதிருக்கிறாள். அதற்குச் சார்பான ஸகல நீசத் தரமான சித்த விருத்திகளையும் கைவிட விரும்பவில்லை. உபாயங்களை மாற்றுவதில் நம்பிக்கையுடையாள். சித்தத்தின் மாறுதலை வேண்டாள்.

அவர்களுடைய யந்திர அனுஷ்டானங்களை மூளையினால் விலைகொள்வோம்; ஹ்ருதயத்தால் கொள்ளவேண்டாம். அவற்றைச் சோதனை போடுவோம். அவற்றுக்குக் கொட்டகைகள் கட்டி வைப்போம். ஆனால் அவற்றை நமது வீடுகளிலும் கோயில்களிலும் தேவாஸனத்தில் வைக்கக்கூடாது. மிருகங்களைக் கொல்லுமுன்பு கும்பிட்டுக் கொல்லும் ஜாதிகள் உள. அவர்களிடம் நாம் பசித்தபோது மாம்ஸம் விலைக்கு வாங்குவோம். ஆனால் கொலையுடன் செய்யும்

பூஜைகளையும் கிரயத்துக்கு வாங்கமாட்டோம். வியாபாரமும், யுத்தமும், ராஜ்யமும் வெகு முக்யமாதலால் அவற்றிலே லாபம்பெற யாது வேண்டுமாயினும் செய்யலாமென்ற மூடப் பக்தியால் நமது குழந்தைகளின் புத்தி கெட்டுப்போக விட மாட்டோம். மனிதனுடைய வியாபாரம் கேவலம் வியாபார தசைக்கு மேலே செல்லவேண்டு மென்பதை அறியக் கடவோம். போரும் அப்படியே. அரசும் அப்படியே. ஜப்பானில் உங்களுடைய சொந்தக் கைத்தொழிலிருந்தது. அது எத்தனை நாணயம், எத்தனை யோக்யம், எத்தனை உண்மை யென்பதை நீங்கள் செய்த பண்டங்களாலே அறிய லாம். அவற்றின் அழகு, பலம், பிறர் கண்டுபிடிக்கக்கூடாத சில்லறை விவரங்களிலேகூட மனம் பொய்யாமை, இவற்றைக் காணலாம். வியாபாரம் ப்ரதானமென்றும், யோக்யதை கேவலம் ஒரு சிறந்த தந்திரமென்றும் கொண்ட கண்டத்தி லிருந்து பொய்மையின் வெள்ள அலை உங்கள் நாட்டின் மீது பெருகிவிட்டது. நகர முழுதிலும் பொய்யும் புளுகு மாக வியாபார விளம்பரங்களை எழுதி ஒட்டிக் கெடுத்தது போதாதென்று, உழவர் யோக்யமாக உழைக்கும் பச்சை வயற்புறங்களிலும் உநயத்தின் தெளிந்த ஒளி முதலாவது படும் மலைச் சிகரங்களிலும் ஒட்டத் தலைப்பட்டு விட்டீர்களே— உங்களுக்கு வெட்கமில்லையா? மானத்தையும், உள்ள மென்மையையும் அடிக்கடி அழித்தழித்து மழுங்கச் செய்து விடுதல் இக்காலத்தில் மிக எளிது, ஏனெனில் இப்போது பொய்கள் வர்த்தகமென்றும் அரசென்றும் தேசபக்தி யென்றும் பெயர் புனைந்து செருக்குடன் உலாவுகின்றன. எனவே அவை நமது வாழ்க்கையில் ஓயாமல் தலையிட்டுக் கொண்டிருப்பதை நாம் கண்டித்தல் உண்மையான ஆண்மைக்குத் தகாத சித்தமென்மையாகக் கருதப்படு கின்றது.

இது எப்படி வந்து முடிந்ததென்றுலோ, மரணம் வந்தாலும் சொன்னது தவருர்; அற்ப லாபத்திற்காகப் பிறரை வஞ்சித்தல் இகழ்ச்சி யென்று கொள்வார், போரிலும் மானங்கெட்ட செய்கை செய்வதிலும் தோல்வியே மேலென்று கொள்வார். அப்படிப்பட்ட வீரரின் மரபில் பிறந்த நீங்கள் பொய்களை அதிதீவிரமாக வழங்குதலும், அதனுலே லாயம் ஸம்பாதிப்பதும் இகழ்ச்சியில்லை யென்று கருதும் ஸ்திதிக்கு வந்து விட்டீர்கள். இது "நவீனம்" என்ற பதத்தின்

மோஹத்தால் உண்டானது. வெறுமே பயனைக் கருதல் நவீனமாயின் அழகைத் தேடல் ஸநாதனம். அற்பமான அஹங்காரம் நவீனமாயின் மானுஷ்ய ஆதர்சங்கள் புராதனம். உபாயத்துக்கும் யந்திரத்துக்கும் வேண்டி மனிதனை நறுக்கி நொண்டியாக்குகிற திறமை எவ்வளவு "நவீன" மாயினும் அது நெடுங்காலம் வரை சாகாமல் பிழைத்திருக்க மாட்டாது.

ஆனால் நாம் ஐரோப்பாவின் மமதாவசனங்களிலிருந்து நம் மனதை விடுவித்துக்கொள்ள முயலும்போது, அந்த மோஹத்தின் புதைமணல்களிலிருந்து நாம் தப்ப வழி தேடுங்கால்,—மேற்கின் விஷயத்தில் முழுதுமே அவநம்பிக்கைப்படும் மற்றோர் அந்தம்வரை போய்விடக் கூடாது.

மோஹாரம்பத்தில் உண்டாகும் மயக்கம் எவ்வளவு பொய்யோ அவ்வளவு மோஹந் தீரும்போதுண்டாகும் விரோதமும் போய் ஸஹஜமான மனநிலை வேண்டும். அங்குத்தான் நமக்கு வரும் விபத்துக்களைக் கண்டுவிலக முடியும். விபத்தை விளைவித்த பொருளிடம் விரோதமும் தோன்றுது. எப்போதும் இயற்கையிலே நம் மனதில் ஓரிச்சை தோன்றலாம்; ஐரோப்பாவுக்கு அது கொடுத்த காசையே திரும்பக் கொடுப்போமென; அதாவது, இகழ்ச்சிக்கிகழ்ச்சியும் தீமைக்குத் தீமையும் திருப்பிச் செலுத்துவோமென்று; அதுவும் பிழை; அதுவும் அனுகரணம். மஞ்சளென்றும் செம்மையென்றும் கருமையென்றும் கபில வர்ணமென்றும் தான் நினைக்கும் ஜாதியாரிடம் அவள் நடந்து கொள்ளுகிற மாதிரியிலிருந்து வெளிப்படும் குணத்தை அவளுடைய கெட்ட காலத்தை அனுகரணம் செய்வதாம். இந்த இடத்தில் இழக்கினராகிய நாம் நமது குற்றத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நமது பாவமும் அத்தனைபெரிது. அதனினும் பெரிதென்று கூறலாம். நாமும் மனித ஜாதியை அவமதித்தோம். குறிப்பிட்ட மதம் அல்லது நிறம் அல்லது ஜாதியைச் சேராதவர்களை நாமும் இகழ்ந்து கொடுமை செய்தோம். வலிமையைக் கண்டஞ்சும் நமது பலக்குறைவினாலே, நாம் மதி சோர்ந்து அதற்குப் பதிலாகப் பிறர் மஹிமையைக் கண்டு குருட்டுத்தனங் காட்டும் மற்றொரு பலக்குறைவிலே போய் விழுகிறோம்.

நல்லதும் பெரிதுமாகிய ஐரோப்பாவை நாம் அறிய முயலும்போது, அற்ப லோபி ஐரோப்பாவினிடமிருந்து நம்மைக் காத்துக்கொள்ளலாம். துன்பங்களை நோக்கும் போது மனிதன் தனது தீர்ப்பில் நியாயந் தவறுதல் சுலபம். மனம் கஷ்டப்படுகிறபோது கொள்கைகள் கட்டுவதிலிருந்து சூன்யவாதம் உண்டாகிறது. தோல்வி மிகவும் பெரிதாக இருக்கையிலே, நாசத்தின் ஆழத்திலிருந்து புதிய உயிரை எழுப்புகிற வலிமையைத் தனக்குக் கொண்டு தருகிற சக்தியினிடம் ஒரு ஜாதி நம்பிக்கை யிழக்கும்போது, அதற்கு மனுஷ்ய வாழ்க்கையிலேயே நிராசை தோன்றிவிடும். ஆத்ம, மானுஷ்ய விதிகளை மறக்கும், யந்திரம்போன்ற, அவஸரங்களையுடையதாய், ஆணையும், பெண்ணையும், சிசுவையும் தன் கீழே போட்டு நசுக்குகிற பெரிய கூட்டுறவுகளுக்கு விரோதமாகப் போராடும் ஜீவனென்று மேற்கின் கண்ணே இருக்கத்தான் செய்கிறது. அந்த ஜீவனுடைய புலனுணர்ச்சிகள் அதற்கன்பில்லாத ஜாதியாருடன் விவகரிக்கும்போது, அவமதிப்புக்குரிய பயங்கரமான வழக்கங்களால் முழுதும் மழுங்கிப்போவதில்லை. மேற்கின் பலம் கேவலம் மிருக, யந்திர, பலம்போலிருந்தால், இத்தனை உன்னத நிலைக்கு வந்திராது. அதன் ஹ்ருதயத்தில் தெய்வாம்சம் இருக்கத்தான் செய்கிறது. அதன் கைகள் உலகத்திற்கிழைக்கும் தீமைகளை யெண்ணி அந்த அம்சம் கஷ்டப்படுகிறது.

அதன் உன்னத இயற்கையின் அந்த நோவிலிருந்து, ஒரு ரஹஸ்ய மருந்துத் தைலம் பொழிகிறது. அது அப்புண்களை ஆற்றும். மீட்டு மீட்டும் பலமுறை மேற்கு தன்னை எதிர்த்துப் போர் செய்து வருகிறது. தன் கையால் பலங் குறைந்த வருடம்பில் கட்டிய தளைகளைத் தானே வெட்டிற்று. பண ஆசையினால் ஒரு பெரிய தேசத்தின் தொண்டையில் விஷத்தை இறக்கிப் பிறகு விழித்தவுடன் தானே அந்தத் தேசத்தினின்றும் விலகிக் கையலம்பிக்கொள்ளும். இதனால் செத்தனவும், பலமற்றனவுமாகத் தோன்றுமிடங்களிலே கூட மானுஷ்யத்தின் ரஹஸ்ய ஊற்றுக்கள் இருப்பதாக ருஜுவாகிறது. இத்தனை குரூரமான கோழைத்தனத்திற்கும் மிஞ்சியிருக்கும் அதன் ஆழ்ந்த உண்மை லோபமன்று. பரோபகார ஆதர்சங்களில் அதற்குள்ள பக்தியென்று ருஜுவாகிறது.

நவீனக் கிழக்கின் புத்தியை அது வெறும் வெளிப் பகட்டினால் மாத்திரமே மோஹிப்பித்து விட்டதென்றால் ஐரோப்பாவுக்கும், நமக்கும் ஒருங்கே அநீதி செய்தலாம்.

அதன் தர்ம ஒளி பீரங்கிப் புகை, சந்தைப் புழுதிகளை ஊடுருவியும் தெளிவுற விளங்குகிறது. அது நமக்குத் தார்மிக விடுதலையின் ஆதர்சத்தைக் கொணர்ந்து கொடுத்தது. இதன் அஸ்திவாரம் ஜன ஸங்கேதங்களுக்குக் கீழே நெடுந் தூரம் சென்றது. இதன் செய்கை மண்டலம் பூலோக விசாலம்.

தன் அருவருப்பை மீறியும், தான் ஐரோப்பாவிடம் அதிகார வழிகளைப்பற்றி மாத்திரமேயல்லாமல், மானஸிக தார்மிக லோகச் செய்திகளும் பல கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஸ்வபாவத்தினாலே தெரிந்து கொண்டது கிழக்குத் திசை. இன்னும் ஐரோப்பா நமக்குக் கற்றுக் கொடுத்தன யாவை யென்றால், குடும்ப ஜாதிகளின் நலத்தைக் காட்டிலும் உலக நன்மையின் உயர்ந்த கடமைகளே மேலென்றும், சட்டம் புனிதமென்றும் காட்டிற்று.

சட்டம் பரிசுத்தமென்பதால், ஸமூஹம் தனி மனுஷ்ய னுடைய சேஷ்டைகளைக் கடந்ததாகிறது. ஸமூஹ அபிவிருத் தியிலே தொடர்ச்சி தவறாதிருக்கிறது. எல்லா நிலைமைகளில் உள்ள எல்லா மனிதருக்கும் நியாயம் கிடைக்கிறது. இஃதனைத்திலும் விசேஷம் யாதெனில், அவள் (ஐரோப்பா) நமது கண் முன்னே, பல நூற்றாண்டுகள் வருந்தி ஸித்தி பெற்று, விடுதலையின் கொடியைத் தூக்கிக் காட்டுகிறாள். கொள்கையில் விடுதலை, யோசனையில் விடுதலை, செய்கையில் விடுதலை, கலையிலும் இலக்கியத்திலும் ஆதர்சங்களிலும் விடுதலை !

நம் ஆழ்ந்த மதிப்பை ஐரோப்பா வென்றபடியாலேதான், அவள் சண்டைக்கிடமான பலஹீனத்தையும், பொய்மையை யும் காட்டுகையில் நமக்கோரபாயமாகிறாள். மிகவும் சிறந்த உணவுடன் சேர்த்துக் கொடுக்கும் விஷத்தைப் போலாகிறாள். நமக்கோரிடத்தில் க்ஷேமமுண்டு ; அதை எப்போதும் நம்பலா மென்று நம்புகிறோம். எங்ஙனமெனில், அவள் மயக்குக்களை யும், கடுமையான ஆக்ரமணங்களையும் நாம் எதிர்ப்பதில் அவளையே துணை கூப்பிடலாம். நிறைவின் அளவொன்று தன் சொந்தமாகக் கொண்டு சுமந்து வருகிறாள். அந்த அளவு கொண்டே அவளுடைய வீழ்ச்சிகளையும், தோல்விப் படிகளையும் அளக்கலாம். அதனால் அவளை அவளுடைய சொந்த நியாய ஸ்தலத்தின் முன்னே இழுக்கலாம். வெட்கப் படுத்தலாம். அந்த வெட்கம் உண்மையான பெருந் தன்மையின் மானத்திற்கு லக்ஷணம்.

அவள் கொடுக்கும் உணவைக் காட்டிலும் விஷம் வலிதாய் விடுவதை அஞ்சுகின்றோம். இன்று அவளிடம் வலிமையாகக் காண்பது ஸௌக்யத்தின் அடையாளமன்று போலும். எதிரிடையாக, உயிரின் தராசு கவிழ்ந்தபடியால் அது சிறிது காலத்துக்கு வெளியே தோன்றுவதோர் பொருள்போலும். தீமையானது விதியைப்போலே மோஹத்தில் வீழ்த்தும்—அதன் அஸுரப் பெரு வடிவங்களிலே— என்றஞ்சுகிறோம். இறுதியில் அதன் வரம்பு கடந்த அளவுப் பிழையினால் நடுநிலை தவறி விழுந்துவிடுமென்பது மெய்யேயாயினும், அது விழுமுன் விளைக்கும் கஷ்டம் பின்பு நீக்கமுடியாததாய் விடலாம். ஆதலால் நான் உங்களைப் பிரார்த்திக்கிறேன், பக்தி வலிமையும் மனத் தெளிவும் கொண்டிருங்கள்.

"ஸாமர்த்ய" மென்னும் இரும்புத் தாழ்களால் இணைப்புண்டதும், அவா என்னும் சக்கரங்களின் மீது செல்வதும் ஆகிய "நவீன முன்னேற்றம்" என்னும் ஆபாஸ நிர்மாணம் நெடுங்காலம் ஒன்று சேர்ந்திராது. மோதல்கள் நேரிடத்தான் செய்யும். அது ஸங்கேதக் கோடுகளின் மேலே செல்லுகிறது. ஸ்வேச்சைப்படி தன் கதியை நிர்ணயித்துக் கொள்ள முடியாதபடி அத்தனை அதிக பாரமுடையது. இதனை அறிந்து கொள்ளுங்கள். தண்டவாளத்தைவிட்டு நழுவினால் அதன் எண்ணற்ற வண்டித் தொடர்கள் தடுமாறிப் போகும். ஒரு நாள் இது நாசக் குப்பையிலே சிதறி விழும் போது உலகத்தின் வியாபாரத்துக்குப் பெரிய கஷ்டமான தடையாகும். இப்போதுகூட இதன் அடையாளங்கள் தெரியவில்லையா? யுத்த முழக்கத்துக்கிடையே, பகைமையின் அலறுதல், நிராசையின் ரோதனங்கள், இந்த நாகரிகத்தின் அடியிலே பல காலமாகச் சேகரிப்புற்றுவரும் சொல்ல முடியாத மலத்தின் கடைதல், இவற்றுக்கிடையே இவற்றை ஊடுருவி நமக்கொரு வாக்கு வரவில்லையா? அந்த வாக்கு: "ஜாதி அஹங்காரமென்ற கோபுரம் தேசபக்தி என்ற புனைபெயர் கொண்டதாய்த் தன் துரோகக் கொடியை வானத்துக்கெதிரே காட்டுகிறது. இது தன்பாரம் பொறாமல் அசைந்து சடேலென்று விழும். இதன் கொடி மண்ணைத் தழுவும். இதன் ஒளி அவிந்துபோம்" என்று நமது ஜீவனுக்குக் கூறவில்லையா? எனது ஸஹோதரரே, படர்ந்தெரியும் செந்தீ வானத்து மீன்களுக்கெதிரே சலசலவென்று நகைக்கும்போது, வானத்து, மீன்களை நம்புங்கள்—நாசத் தீயை நம்பவேண்டாம். இந்தத் தீ அவிந்து தானே மடியும்

போது, அதன் ஞாபகச் சின்னம் சாம்பலிலே கிடக்கநித்யமான ஒளி கிழக்குத் திசையிலே தோன்றும். கீழ்த்திசையே மனித நாகரிகத்தின் உதய ஸ்தானம். அப்படிப்பட்ட நாள் ஏற்கெனவே பிறந்துமிருக்கலாம். யாரறிவார்? ஆசியாவின் கிழக்கோரத்து வானடியில் அந்த ஸூரியன் தோன்றி விட்டானோ? எனது முன்னோர்களாகிய ரிஷிகள் செய்தது போலே நானும் இந்தக் கீழ்த்திசை உதயத்துக்கு வந்தனம் சொல்லுகிறேன். இஃது பூமண்டல முழுதையும் ஒளியுடைய தாக்கும். இது விதி.

பேரிரைச்சலுடைய அக்காலத்தின் கூக்குரலுக்கு மேலே எனது சத்தம் பெரிதாகக் கேட்கும்படிச் செய்ய என்னால் முடியாது. என் சத்தம் ஆதிபலஹீனமென்பதை நானறி வேன். தெருவிலேபோகும் சிறுவன்கூட என்மீது "லௌகிக மறியாதவன்" என்ற அடை மொழியை வீசி யெறியலாம். அது என்னுடைய சட்டையின் வாற்புறத்தில் ஒட்டிக்கொண்டு, அழிக்கமுடியாமல் போய்விடலாம். அதனால், "மரியாதையுள்ள கிரஹஸ்தர்" களின் மதிப்புக்கு நான் பாத்திரமாகாமல் போய்விடலாம். ஸிம்ஹாஸனங்கள் மதிப் பிழந்து போகவும், தீர்க்கதரிசிகள் அகால வஸ்துக்களாகவும், ஏற்பட்ட இந்தக் காலத்தில்—எல்லா வாக்கையும் மிஞ்சிச் சந்தை யிரைச்சல் பெரிதாகக் கேட்கும் இந்த நாட்களில்—ஒருவன் "ஆதரிசி" (உத்தம தர்மத்தையே நாடுவோன்) என்று பெயர் வாங்குவதனால், தடியடிக் கூட்டத்தாரிடமிருந்து அவனுக்கு அபாயம் நேரிடக்கூடுமென்பதையும் அறிவேன்.

எனினும், ஒரு நாள் நான் நவீன விநோதங்கள் மலிந்து கிடக்கும் யோகோஹாமா பட்டணத்தின் வெளிப்புறத்தில் நின்று உங்கள் தென் கடலில் பொழுது சாய்வதைக்கண்டேன். தேவதாரு மரங்களுடுத்த குன்றுகளுக்கிடையே ஸூர்யாஸ் தமனத்தின் சாந்தியையும் மஹிமையையும் நோக்கினேன். பொன்னிறமான வானடிக்கு நேரே, பூஜியாமாவின் மலை யொளியானது தன்னொளியில் தான் மங்கும் தேவனைப் போலே மங்கலாயிற்று. மாலையின் மோகனத்திடையே நித்ய காலத்தின் ஸங்கீதம் பொங்கி வந்தது.

அப்போது கருதினேன் :—வானமும் பூமியும் உதயாஸ் தங்களாகிய கவிதைகளும் ஆதர்சிகளுக்கும் புலவர்களுக்குமே அனுகூலம் ; ஹ்ருதய ராகங்களினிடம் திடமான இகழ்ச்சி

யடைய சந்தைக்காரர் சார்பில்லே. தனது தேவத் தன்மையை மறந்து நிற்கும் காலம் மாறி மறுபடியும் மனிதன் வானம் எப்போதும் மண்ணைத் தீண்டி நிற்கிறதென்ற ஞாபகமெய்து வான். மனுஷ்ய ரத்தத்திற்கு மோப்பங்கொண்டு வானத்தை நோக்கி அவனும் நவீன காலத்து வேட்டை ஓநாய்களின் வசத்தில் மண்ணுலகம் ஸதாகாலத்துக்கு விட்டுவைக்கத் தக்க தன்று—என்ற நினைப்பு மனிதனுக்கு மீண்டு வரும்.

---

# 9

## ஸ்வராஜ்யம்

சென்னை "ஹிந்து" பத்திரிகையின் லண்டன் நிருபர் எழுதிய கடிதமொன்றில் "அமெரிக்காவும், ஐர்லாந்தும், இந்தியாவும்" என்ற மகுடத்தின் கீழே ஒரு குறிப்பெழுதி யிருக்கிறார். அதில் அமெரிக்கா ஸ்வாதீனமடைந்த திரு நாளாகிய ஜூலை நாலாந்தேதி கொண்டாட்டங்கள் ஆங்கிலே யர்களாலேயே இங்கிலாந்தில் மிகவும் விமரிசையாகக் கொண் டாடப்பட்ட செய்தியைக் குறித்துப் பேசுகிறார். [இங்கிலீஷ் ராஜ்யத்தை எதிர்த்துப் போர் புரிந்து வெற்றி பெற்று (யுனை டெட் ஸ்டேட்ஸ்) அமெரிக்க ஐக்கிய நாடுகள் 1776-ஆம் வரு ஷம் ஜூலை மாதம் நாலாந் தேதியன்று விடுதலைக் கொடி நாட்டின.] மேற்படி லண்டன் நிருபர் எழுதுகிறார்.

"இன்று ஜூலை நாலாந் தேதியன்று (ஆங்கிலேய ராகிய) நாமெல்லோரும் நம்முடைய அமெரிக்க ஸகோதரருடன் கலந்து ஐக்கிய நாடுகளின் விடுதலையை ஆவ லுடன் கொண்டாடுகிறோம்."

இன்று ஆங்கிலேயர் சொல்லும் வார்த்தைகளையும், செய்யும் செய்கைகளையும் 142 வருஷங்களுக்கு முன்பு சொல்லியும், செய்துமிருப்பார்களாயின் தேசத் துரோகிக ளென்றும் கலகக்காரரென்றும், சொல்லி மரண தண்டனை

விதிக்கப்பட்டிருக்கும். இதனைப் பல ஆங்கிலேயர் இப்போது நினைத்திருக்கக் கூட மாட்டார்கள். அதே ஆங்கிலேயரில் சிலர் இக் காலத்தில் "விடுதலைபெற நியாயமாகப் போராடும்" வேறு சில ஜாதியார் விஷயத்தில் என்ன மாதிரியான வார்த்தை சொல்லுகிறார்கள் ?

இங்கு ஒரு முக்கியமான பேதத்தை மேற்படி லண்டன் நிருபர் மறந்து விட்டார். ஐக்ய நாடுகள் விடுதலைக்காகப் படை சேர்த்துப் போர் புரிந்து ப்ரான்ஸ் தேசத்தின் உதவியால் இங்கிலாந்தை வென்றன. ஐர்லாந்து கலகங்கள் செய்து விடுதலை பெற முயன்று வருகிறது.

இந்தியாவோ அப்படியில்லை. ஆங்கிலேயரிடமிருந்து ஸமாதானமாகவே ஸ்வராஜ்யம் சட்டத்துக் கிணங்கிய முறைகளால் பெற விரும்புகிறது.

"உபாயத்தால் ஸாதிக்கக் கூடிய கார்யத்தைப் பராக்கிரமத்தால் ஸாதிக்க முடியாது" என்று பஞ்சதந்திரம் கூறுகிறது. மேலும் நமக்கு ஆங்கிலேயர் ஸமாதானமாகவே ஸ்வராஜ்யம் கொடுத்து விடுவார்கள் என்று நினைப்பதற்குக் கால் தேச வர்த்தமானங்கள் மிகவும் அனுகூலமாகவேயிருக்கின்றன.

எங்கனமெனில் மந்திரி மிஸ்டர் மான்டேகுவும், ராஜப் பிரதிநிதி லார்டு செம்ஸ்போர்டும் சேர்ந்து தயார் செய்திருக்கும் சீர்திருத்த ஆலோசனைப் புஸ்தகத்தில் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றனர். "இந்தியாவின் எதிர்கால நிலை டில்லி நகரத்திலேனும் ஸிம்லாவிலேனும் வைட்ஹாலிலேனும் நிச்சயிக்கப்படுவதன்று. ப்ரான்ஸ் தேசத்துப் போர்க்களங்களிலே நிச்சயிக்கப்படும்" என்கிறார்கள்.

இங்ஙனம் மந்திரியும் ராஜப்பிரதிநிதியும் கூறுவதன் பொருள் நமக்குத் தெளிவாக விளங்கவில்லை. எனினும் நேசக் கக்ஷியாருக்கு வெற்றி கிடைத்தால் நமக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க முடியுமென்று அவர்கள் சொல்வதாக நாம் பொருள் கொள்ள நேர்கிறது.

இதனிடையே இந்தியாவில் இந்து-மஹமதிய பேதங்களிருப்பதாகக் காட்டி அதினின்றும் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கத் தகாதென்று சொல்லும் ஆங்கிலோ—இந்தியப் பத்திராதிபர் முதலிய வெளிநாட்டு உள் நாட்டுத் துரோகிகள் எல்லார் வாயிலும் ஸ்ரீமான் ஸய்யது ஹஸேன் இமாம் நமது விசேஷ ஜனசபைக் கூட்டத்தின் அதிபதி, மண்ணைக் கொட்டிவிட்டார். "எல்லா வகுப்புகளும் இப்போது கொண்டிருக்கும் ஐக்ய புத்தியையும் எல்லார் நலமும் ஒன்றென்ற கருத்தையும் எதிர்க்க முடியாது" என்று அவர் சொல்லுகிறார்.

மேலும் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் மிகவும் அவசியமென்பதை விளக்கிக் காட்டும் பொருட்டாக நீதி நிபுண ஸய்யது ஹஸேன் இமாம் ஸாஹப் சொல்லும் பின்வரும் வாக்யங்களுக்கு ஆங்கிலோ இந்தியப் பத்திராதிபர் என்ன மறுமொழி சொல்லக் கூடும்? ஹஸேன் இமாம் கூறுகின்றார்:—

"எல்லாவிதமான அன்னியாதிபத்தியங்களைக் காட்டிலும் ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தார் மீது செலுத்தும் அன்னியாதிபத்தியம் மிகக் கொடியது என்று மக்காலே சொன்னார். இது மக்காலே காலத்தில் எத்தனை உண்மையோ அத்தனை இக்காலத்திலும் உண்மையே. அவர் வார்த்தை மற்றத் தேசங்களுக்கு எவ்வளவு பொருந்துமோ அத்தனை இந்தியாவுக்கும் பொருந்தும். அன்னிய நுகத்தடியின் கஷ்டத்தை இந்தியா உணர்கின்ற தென்பதை மறுத்தல் மூலஸத்யங்களைப் பார்க்க மாட்டோமென்று கண்ணை மூடிக் கொள்வதேயாகும். இந்தியாவில் ப்ரிடிஷ் ராஜ்யத்தை ஆதரித்துப் பேசுவோர் இந்நாட்டிற்கு ப்ரிடிஷார் பரோபகார சிந்தனை கொண்டு மட்டும் வந்ததாகச் சொல்லுகிறார்கள். இந் நாட்டு ஜனங்கள் தமக்குத் தாமே தீங்கு செய்து கொள்ளாமல் காக்கும் பொருட்டாகவும், நம்மவரின் தர்மஞானத்தை உயர்த்தும் பொருட்டாகவும, நம்மவருக்கு லௌகிகச் செல்வம் எற்படுத்திக் கொடுக்கும் பொருட்டாகவும், இது போன்ற பல காரணங்களின் பொருட்டாகவும் அவர்கள் இங்கு வந்ததாகச் சொல்லப்படுகிறது; இவையெல்லாம் பக்ஷபாதிகள் வழக்கமாகச் சொல்லும் அரைமொழிச் சொற்களேயாம். உண்மை யாதெனிலோ, ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஏற்படுத்தப்பட்டது, இந்தியாவின் நன்மைக்காக அன்று. இந்தியாவினின்றும் பணத்தை ஏராளமாய்த் திரட்டிக் கொண்டு போய் ப்ரித்தானியாவுக்கு நன்மை

செய்யும் பொருட்டாக ஏற்பட்டது. பொன்ஞைசயுடன் மண்ஞைசயும் கலந்தது. பிறகு கம்பெனியாரிடமிருந்து அரசுமகுடத்தின் கீழே கொண்டுவரப்பட்ட பின் பொருளாசையும் அதிகார ஆவலும் ஆட்சி செய்வோருக்குக் குறைவுபடவில்லை. பேதம் யாதெனில், யதேச்சாதிகாரத்தை இப்போது ஒழுங்குப்படி நடத்துகிறார்கள். அந்தக் கொள்ளை சாஸ்த்ர தோரணையில் நடந்து வருகிறது!" என்று நம்முடைய ஜனசபைத் தலைவர் சொல்லுகிறார். "இஃதெல்லாம் ஜனங்களுக்குத் தெரியும். இது அவர்கள் நெஞ்சை உறுத்துகிறது. எனவே பண்டைச் செயல்களுக்கெல்லாம் இப்போது (ஆங்கில அதிகாரிகள்) பரிகாரம் அல்லது ப்ராயச்சித்தம் செய்ய வேண்டுமென்று ஜனங்கள் கேட்கிறார்கள்" என்று கூறி ஸய்யது இமாம் முடிக்கிறார்.

இதுதான் விஷயம் முழுதும்.

இவ்வித அதிகாரிகளின் கையினின்று நம்மை மீட்டு நமக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டு மென்று மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியிடம் அழுத்தமாகப் ப்ரார்த்தனை செய்கிறோம்.

எங்களுக்கு உடனே ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமென்று வணக்கத்துடனும் எங்களுடைய பரிபூரண ஜீவ பலத்துடனும் ப்ரார்த்தனை செய்து கொள்ளுகிறோம்.

---

## 10

## நேசக்கக்ஷியாரின் "மூட பக்தி"

"ரெயிக் ஸ்தாக" என்ற ஜெர்மன் ஜனப் பிரதிநிதிகளின் ஸபையில் ஹெர் வோன் ஸிமோன்ஸ் என்ற ஜெர்மானியமந்திரி சில தினங்களின் முன்பு நேசக் கக்ஷியாரின் பரீஸ் ஸமாஜத்தில் முடிவு செய்யப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகைகளைப் பற்றிப் பேசுகையில், ஜெர்மனியுடன் ஸமரஸமான வாதங்கள் செய்து பெறக்கூடியதைக் காட்டிலும் ஜெர்மனிக்குக் "கட்டளை" பிறப்பிப்பதனால் அதிகம் பெறக்கூடுமென்ற மூட பக்தியை நேசக் கக்ஷியார் நீக்கி விடுதல் தகுமென்று

எச்சரிக்கை செய்தார். ஏற்கெனவே ப்ருஸ்ஸெல்ஸ் நகரத்தில் நடைபெற்ற அர்த்த சாஸ்த்ர நிபுணர்களின் ஸங்கத்தில் ப்ரெஞ்ச் பிரதிநிதியாகிய ஸ்ரீமான் லேதூ என்பவரால் திட்டஞ் செய்யப்பட்டு மற்ற ஆங்கில, ப்ரெஞ்ச் அதிகாரிகளாலும் அங்கீகரிக்கப் பெற்றிருக்கும் ஏற்பாட்டை நேசக் கக்ஷியார் இங்ஙனம் திடீரென்று கைவிட்டு விட்டதைக் குறித்து ஹெர் வோன்ஸிமோன்ஸ் வியப்புத் தெரிவித்தனர். லண்டனில் நடத்தப்போகிற ஸபைக்கு ஜெர்மன் பிரதிநிதிகளையும் அழைக்கப் போவதாக மிஸ்டர் லாயிட் ஜ்யார்ஜ் தெரிவித்திருந்தார். அதாவது ; பாரீஸ் ஸமாஜத்தின் தீர்மானங்களை ஜெர்மானியர் ஒப்புக் கொள்வாராயின் பிறகு லண்டன் ஸபைக்கு அவர்களைப் பிரதிநிதிகளனுப்பும்படிக்கேட்கவேண்டு மென்பது மிஸ்டர் லாயிட் ஜ்யார்ஜின் கருத்து. ஆனால் அதன் ஸம்பந்தமான அழைப்புக் கடிதம் இன்னும தங்கள் வசம் கிடைக்கவில்லையாதலால், அந்த ஸபையில் சேர்வதா அல்லது அதைப் பஹிஷ்காரம் செய்வதா என்பதைக் குறித்து இன்னும் ஜெர்மானியர் நிச்சயமுரைக்க இயலாதென்று வோன்ஸிமோன்ஸ் கூறினர் ஆயினும், நேசக் கக்ஷியாரின் தீர்மானங்களை ஆதாரமாகக் கொண்டு மேலே விவாதங்கள் நடத்துவது ஸாத்தியமில்லை யென்றும், அத்தீர்மானங்களுக் கெதிரிடையாக ஜெர்மானிய ஆலோசனைகளை வெளியிடப்போவதாகவும் அந்த மந்திரி தெரிவித்தார்.

நேசக் கக்ஷியாரின் பாரீஸ் தீர்மானங்களின்படி ஜெர்மனி நாற்பத்திரண்டு வருஷங்களில் இருபத்தீராயிரத்து அறுநூறு கோடி (2,6000,000.000) தங்க "மார்க்" அல்லது முந்நூறாயிரங் கோடி (3.000,000,000,000) காயித "மார்க்" செலுத்தவேண்டுமென்றும், அதனுடனே, இன்னும் 42 வருஷங்கள் வரை ஜெர்மனியின் ஏற்றுமதிகளின் கிரயத்தில் 100-க்கு 12 வீதம் செலுத்திக் கொண்டு வரவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. பிந்திய வகையில் இன்னும் ஓரிரண்டாயிரம் கோடி "மார்க்" அதிகமாகத் தட்டலாமென்று நேசக் கக்ஷியார் நினைப்பதாக வோன்ஸி மோன்ஸ் சொல்லியபோது ரெயிக் ஸ்தாக் அங்கத்தினர் நகைத்தார்களென்று ராய்ட்டர் தந்தி தெரிவிக்கிறது. இதினின்றும் ஜெர்மானியர் நஷ்டஈட்டுத் தொகை செலுத்தும் விஷயத்தில் நேசக் கக்ஷியாரின் கட்டளையை உடனே எதிர்ப் பேச்சில்லாமல் நிறைவேற்றுவார்களென்று நினைக்க இடமில்லாமலிருக்கிறது. இந்தத் தீர்மானங்களை ஜெர்மானியர் அங்கீகரியாவிடின் அவர்களுக்கு விதிப்பதாக எண்ணியிருக்கும் தண்டனைகளுக்

இடையே அவர்களை ஸர்வதேச ஸங்கத்தில் சேர்க்கமாட்டோ மென்ப தொன்று. ஆனால் அந்த ஸங்கத்தில் தன்னைச் சேர்த்துக் கொள்ளும்படி ஜெர்மனி இன்னும் பிரார்த்தனை யனுப்பவில்லையாதலால், அந்தத் தண்டனை அதிகமாகப் பொருட்படுத்தத் தக்கதன்றென்று வோன்ஷி மோன்ஸ் குறிப்பிட்டபோது "ரெயிக் ஸ்தாக்" அங்கத்தினர் கரகோஷம் புரிந்தார்களாம்.

அமெரிக்கப் பத்திரிகைகளிற் பெரும்பாலனவும், ராஜதந்திரிகளிற் பெரும்பாலோரும், இவ்விஷயத்தில் ஜெர்மனிக் கனுகூலமாகவே பேசுதல் குறிப்பிடத்தக்கது. ஜெர்மானியரால் இந்தப் பாரத்தைச் சுமக்க முடியாதென்றும், இந்த ஏற்பாட்டிலிருந்து அமெரிக்க வியாபாரத்துக்கு இடையூறு விளையுமென்றும் அமெரிக்காவில் பலமான நம்பிக்கை யேற்பட்டிருப்பதாக ராட்டர் தெரிவிக்கிறார். ஜனாதிபதி வில்ஸனுடைய பத்திரிகையாகிய "நியூயார்க் உலகம்" என்பது,—'ஜெர்மன் ஏற்றுமதிகளின் மீது விதிக்கும் தீர்வையால் அமெரிகாவுக்கு ஏற்றுமதியாகும் வஸ்துக்களின் அளவு குறைந்துவிடும். இதினின்றும் விளைபொருள் வாங்குவதற்கு வேண்டிய நாணயம் ஜெர்மனிக்குக் குன்றிப்போகும். எனவே ஜெர்மனி மீளவும் உத்தாரணம் பெறுதல் இயலாது போய்விடும்' என்றெழுதுகிறது.

இவ்வாறு அமெரிக்காவில் ஜெர்மனிக்குத்தக்க உபபலமிருப்பதைக் கருதுமிடத்தே, வோன்ஷி மோன்ஸ் சொல்லியபடி நேசக் கக்ஷியாரின் திட்டம் வெறும் மூடபக்தியாகத்தான் முடியுமென்ற எண்ணம் எவருக்கு முண்டாகக்கூடும். ஆனால், இங்ஙனம், மஹாயுத்தத்தால் நேசக் கக்ஷியார்களுக்கு விளைந்திருக்கும் நஷ்டங்களைச் சிரமமில்லாமல் ஜெர்மனியின் தலையில் கட்டித் தாம் தப்பிவிடலாமென்று கருதும் மூட பக்தியைக் காட்டிலும் மற்றொரு பெரிய மூட பக்தியிருக்கிறது. அதைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்லுதல் நமது கடமை என்று நினைக்கிறோம். அந்த மூட பக்தி நேசக் கக்ஷியாருக்குள்ளே பொதுவாக இருப்பினும், அவர்களுக்குள் மந்திராலோசனை முதலிய விஷயங்களில் தலைமை பூண்டிருக்கும் இங்கிலாந்தினிடம் மிகவும் விசேஷமாகக் காணப்படுகிறது. இதனை ஒரு திருஷ்டாந்த மூலமாக விளக்குகிறோம்.

ரெயிக் ஸ்தாக்கில் மேற்கூறிய ஸ்ரீஷிமேரன்ஷின் உபந்யாஸம் இந்த மாஸம் (பெப்ருவரி) முதல் தேதியன்று நடைபெற்றது. அதே முதல் தேதியன்று ஐர்லாந்தில் கார்க்

நகரத்தில் ராணுவ விசாரணைக் கொலைத் தண்டனை யொன்று நிறைவேற்றப்பட்டது. ராணுவ விசாரணையின் கீழ் இதுதான் முதலாவது கொலைத் தண்டனை யென்று ராய்ட்டர் தெரிவிக்கிறார். கொரி யென்ற கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவனிடம் அனுமதிச் சீட்டில்லாத கைத் துப்பாக்கி யொன்றிருந்ததாகக் குற்றஞ்சாற்றி, அக் குற்றத்துக்காக அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அடக்கு முறைகளால் ஐர்லாந்துக் கலகத்தை நசுக்கிவிடத் தீர்மானஞ் செய்திருக்கிறார்களென்று இதனால் நன்கு விளங்குகிறது. இதைத்தான் நாம் பரம மூடபக்தி யென்று சொல்லுகிறோம். ஜனங்கள் ஏற்கெனவே கொடுமையை எதிர்த்துக் கலகம் புரியும் போது, அந்தக் கலகத்தை அடக்க இன்னும் அதிகக் கொடுமையை வழங்குதல் உபயோகமற்ற—தீமையை மிகுதிப்படுத்தக் கூடிய—முறை யென்பதை உலக சரித்திரம் மீட்டும் மீட்டும், மீட்டும் எத்தனையோ திருஷ்டாந்தங்களால் விளக்கியிருக்கிறது. எனினும் அதே முறையைத் தான் ஸிரியாவில் ப்ரான்ஸ் தேசத்தார் கையாள முயலுகிறார்கள். மெஸபொடோமியாவிலும் அரபியாவிலும் ஆங்கிலேயர் அதைத்தான் கையாண்டு வருகிறார்கள். கிரேக்கர் துருக்கியில் அதே கிரீடை செய்து வருகிறார்கள். அச்சம், சினம் முதலிய சித்த விருத்திகள் தோன்றும் போது ஸாதாரண மனிதர் புத்தி தவறி வேலை செய்தல் ஸஹஜம். அந்த ஸமயத்தில் ஜனங்களுக்கு யுக்தி, அனுபவம், சாஸ்திரம் என்ற மூன்று வித ப்ரமாணங்களும் மறந்துபோய் விடுகின்றன. எனவே புத்தி ஹீனமான கார்யங்கள் செய்து பெரிய நஷ்டங்களுக்குள்ளாகின்றனர்.

ஆனால், இவ்விதமான கார்யங்களை ராஜாங்கத்து மந்திரிகள் செய்வாரானால், அவர்கள் ராஜ்ய பாரத்துக்குத் தகுதியற்றோராய் விடுகிறார்கள். மேலும், மனுஷ்ய ஸஹோதரத்வம் ஸமத்வம் இவை ஐர்லாந்துக்குண்டா, இல்லையா ? அரபியாவுக்கும் மெஸபொடோமியாவுக்கும், இந்தியாவுக்கும் எகிப்துக்கும் அவை உண்டா, இல்லையா ? இல்லையெனில், என் இல்லை ? தெய்வ விதிகளுக்கு மாற்றில்லை. கொடுமையும் அநீதியும் செய்வோர் கொடுமைக்கும் அநீதிக்கும் இரையாவர். பிறரை அடிமைப்படுத்துவோர் தாம் அடிமைகளாக்கப்படுவர். அநியாயம், ஸமத்வ விரோதம் முதலியவற்றால் ஐரோப்பிய மஹாயுத்தத்தில் அபாரமான கஷ்டங்களுக்குட்பட்டும், ஐரோப்பிய ராஜதந்திரிகளுக்கு இன்னும் புத்தி தெளியாமலிருப்பது பற்றி விசனப்படுகிறோம்.

# 11

## பூகோள மஹா யுத்தம்

ஐரோப்பாவைப் பிடித்த சனி இன்னும் முற்றிலும் நீங்கிய தாகத் தெரியவில்லை. சென்ற நான்கு நூற்றுண்டுகளில் ஐரோப்பா கல்வித் தேர்ச்சி, இயற்கை யறிவு முதலியவற்றில் எவ்வளவோ மேன்மை யடைந்திருக்கிறது. ஆனுல் அதை அக்கல்வி முதலியவற்றுல் எய்தக் கூடிய முழு நலத்தையும் எய்தாதபடி தடுத்து, ஏறக் குறைய ஸ்மசான நிலைமையில் கொண்டு சேர்த்தது யாதெனில், அதன் ஓயாத போர் நினைவு! ஐரோப்பாவில் ஸதா ஏதேனு மோர் யுத்தம் நடந்து கொண்டிருக்கும். அல்லது விரைவில் ஒரு யுத்தம் வரப் போவதாகப் பேசிக்கொண்டிருப்பார்கள்.

அந்தக் கண்டத்தாரின் மனதிலிருந்து யுத்த பயம் முற்றி லும் நீங்கியிருந்த ஒற்றை க்ஷண மேனும் பல நூற்றுண்டு களாகக் கிடையாது.

இதனிடையே, சென்ற நான்கு நூற்றுண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவின் ஒரு பாகத்தினுள்ளே ஒதுங்கி வாழ்ந்த வெள்ளை ஜாதியர்கள் இன்றைக்கு ஐரோப்பா முழுதையும், அமெரிக்காக் கண்ட முழுதையும், ஆஸ்திரேலியாவையும் ஆப்ரிகாவில் முக்காலே யரைக்காற் பங்கையும், ஆசியாவில் பாதிக்கு மேற் பகுதியையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டு விட்டார்கள்.

இங்ஙனம் இந்த நான்கு நூற்றுண்டுகளுக்குள்ளே பல கண்டங்களை வெல்லும் சக்தி இவர்களுக் கேற்பட்டதன் கார ணம் வெடி மருந்து, துப்பாக்கி, பீரங்கிகள். இந்த ஆயுதங் கள் மற்றக் கண்டத்தாரின் வசப்படு முன்பு வெள்ளை ஜாதி யாருக்கு வசப்பட்டன. அதனுல் பூமண்டலம் அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழே வீழ்ந்தது.

ஆனுல், இங்ஙனம் உலக முழுதையும் வென்று அங்கெல் லாம் தங்களுடைய வியாபாரத்தையும் நிலைநிறுத்தி ஏராள மான செல்வங்கள் திரட்டி ஐரோப்பாவுக்குக் கொணர்ந்த

ஐரோப்பியர் அந்தக் குவை குவையான திரவியங்களையும், அவர்களுக்கு "ஸயன்ஸ்" ஞானத்தால் இயற்கையின் மீது கிடைத்த புதிய சக்திகளையும் யுத்தத்தில் உபயோகப்படுத்து வதே முதற் கடமையாகக் கருதினர்.

திருஷ்டாந்தமாக, வான விமானம் பறக்கத் தொடங்குவ தற்கு முன்னதாகவே ஐரோப்பியர் அதைப் போரில் உபயோ கப்படுத்துவ தெப்படி என்பதைக் குறித்து யோசனை செய்யத் தொடங்கி விட்டார்கள்.

இந்தக் குணத்திலிருந்து கடைசிப் பயனாக விளைந்த ஐரோப் பிய மஹா யுத்தத்தினால் தாம் எய்திய கஷ்டங்களை உணர்ந்த பின்னராவது அவர்களுக்கு இந்தக் குணம் அடியோடு தொலைந்துவிட்டதென்று நினைத்தோம். ஆனால் பிறவிக் குணத்துக்கு மட்டை வைத்துக் கட்டினால் போதுமா? இத்தனை கஷ்டங்களுக்குப் பிறகும் இந்தக் குணம் அவர்களைக் கொஞ்சம் ஒட்டிக் கொண்டுதான் இருக்கிறது.

உள் நாட்டுக் குழப்பத்தை அடக்குவதற்கு வேறு நியாய மான வழி தெரியாமல், பிற நாடுகளுடன் போர் தொடுத்து, அதினின்றும் ஸ்வஜனங்கள் ஏராளமாக மடிந்து தொலை வார்களாதலால் அங்ஙனம் உள்நாட்டுக் கலகம் தானே சாந்தி பெற்று விடுமென்று எதிர்பார்த்துப் பிற தேசங்க ளோடு போர் தொடங்குதல் சக்தியற்ற ராஜதந்திரிகளின் ஹீனமார்க்கங்களில் ஒன்று.

அதை முன்பு ருஷியா தேசத்துச் சக்ரவர்த்தி அனுசரித் தார். அவர் அதனால் எய்திய முடிவைக் கண்டும் புத்தி தெளியாமல், இன்று வேறு சில ஐரோப்பிய தேசங்களின் ராஜ தந்திரிகள் அந்த வழியை அனுசரிக்க எண்ணுகிறார்க ளென்று நினைக்கப் பலமான ஹேதுக்கள் இருக்கின்றன.

ஆனால் இனி ஐரோப்பாவில் அல்லது மேற்கு ஐரோப்பா வில், குறைந்த பக்ஷம் இன்னும் 30 வருஷங்களுக்கு ஜனங்கள் யுத்தத்தின் பெயரையே ஸ்மரிக்கமாட்டார்களென்பது திண்ணம். சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை அணுகாது.

எனினும் ஐரோப்பிய தேசத்தார்களுக்குள்ளே ஏற்பட் டிருக்கும் விரோதங்களை மூடும் பொருட்டு ஐரோப்பா முழு வதையும் அல்லது வெள்ளை ஜாதியார் அனைவரையும் ஆசியா, ஆப்பிரிக்கா ஜனங்களின் மீது போருக்கு விடலா மென்று சில மதிகேடர் யோசனை செய்கிறார்கள்!

லண்டன் " டைம்ஸ் " பத்திரிக்கை பொறுப்புத் தன்மை யுடையதாகத் தன்னை மிகவும் கணித்துக் கொள்ளுகிறது. இங்கிலாந்து தேசத்து மந்திரிகளைக் காட்டிலும் தனக்கு ப்ரிடிஷ் பரிபாலன விஷயத்தில் ஆயிரம் பங்கு அதிகப் பொறுப்புணர்ச்சியிருப்பதாக நடிக்கிறது. அந்தப் பத்திரிகை (தனது 1921 ஜனவரி 15-ம் தேதிப் பதிப்பில்) மிஸ்டர் மக்ளூர் என்ற அமெரிக்காப் பத்திரிகாசிரியரொருவர் எழுதிய " மேற்கும் கிழக்கும் விரோதம் " என்ற வ்யாஸத்தை ப்ரசுரம் செய்திருப்பதுடன், அதைக் குறித்து ஒரு தலையங்கக் குறிப் பும் வரைந்திருக்கிறது.

அந்த வியாஸத்தின் கருத்து யாதெனில் எதிர் காலத் தில் ஸமீபத்திலே (ஏற்கெனவே நடந்த ஐரோப்பிய மஹா யுத்தத்தைக் காட்டிலும் பன் மடங்கு கொடிய) பூகோள மஹாயுத்தமொன்று நடக்கப்போகிறதென்பது. இந்த யுத்தம் வெள்ளை ஜாதியாருக்கும் இதர வர்ணத்தாருக்குமிடையே நடக்குமாம். ஜப்பானியரையும் சீனரையும் அமெரிக்காவும் ஆஸ்திரேலியாவும் தம்முள்ளே பிரவேசிக்கக் கூடாதென்று தடுப்பதை உத்தேசித்து மஞ்சள் வர்ணத்தாருக்கும் வெள்ளை யருக்கும் சண்டை வருமாம். ஜப்பானில் பூமி கொஞ்சம்; ஜனத்தொகை அதிகம். அதற்கு அதிசமீபத்தில் வட அமெரிக்கா இருக்கிறது. அங்கு விஸ்தாரமான பூமிகளிருக் கின்றன. ஜனத் தொகை மிக சொற்பம். இன்னும் மிக வளமார்ந்த மைதானங்கள் ஆயிரக் கணக்கான மைல்களில் பரவிக் கிடக்கின்றன. கனடாவிலுள்ள நிலங்களை நன்றாக முழுமையும் பண்படுத்தினால் அதில் விளையக் கூடிய கோதுமை மனிதக் கூட்டத்தில் பாதிக்குப் போதிய உணவாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

உலகத்திலுள்ள பூமியையெல்லாம் இங்ஙனம் ஐரோப் பியர் சூழ்ந்துகொண்டு, நிலத்துக்குத் தவிக்கும் ஜனங் களைத் தம் சூழல்களுக்குள் ப்ரவேசிக்கக்கூடாதென்று தடுப் பதை ஜப்பான் ஆக்ஷேபிக்கிறது. வலியவன் பேச்சு இறுதி யில் வெல்லுமென்ற ஐரோப்பியக் கொள்கையைச் சாதக மாக எண்ணி ஜப்பான் தன் சண்டைக் கப்பல்களை அதிகப் படுத்திக் கொண்டு வருகிறது. தன் பீரங்கிகளைப் பெருக்கு கிறது. தன் படைகளைப் பலப்படுத்துகிறது.

இதைக் கண்டு அமெரிக்காவுக்கு நடுக்க மேற்பட்டிருக் கிறது. அமெரிக்காவுக்கு இங்கிலாந்து கழுத்து வரை கடன் போட்டிருக்கிறது. இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்கும் நட்புடன்

பாடு செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் ஜப்பானுடன் சேர்ந்துகொண்டு இங்கிலாந்து அமெரிக்காவுடன் போர் செய்யாதென்று மிஸ்டர் மக்ளூர் ப்ரமாணம் பண்ணுகிறார். அதை லண்டன் "டைம்ஸ்" பத்திராதிபர் மனப் பூர்வமாக ஆமோதிக்கிறார்.

மேலும் தென் ஆசியாவிலும் ஆப்ரிகாவிலுமுள்ள ஜனங்கள் ஐரோப்பாவின் ஆட்சியைத் தள்ளிவிடப் போகிறார்களாம். அவர்களிடம் ஆயுதங்கள் இல்லையே யெனில், அவர்கள் அவற்றை மிக விரைவில் செய்து கொள்வார்களென்று மிஸ்டர் மக்ளூர் சொல்லுகிறார்.

இந்த யுத்தத்தில் சில ஐரோப்பிய தேசத்தார் ஆசியாக் கண்டத்தாரின் பக்கத்திலே சேர்ந்து கொள்ளக்கூடுமென்று மிஸ்டர் மக்ளூர் சொல்லுகிறார்.

எனவே, வெள்ளை ஜாதியாருக்குப் பெரிய ஆபத்து வரப் போகிறதென்று மிஸ்டர் மக்ளூர் பலமாக எச்சரிக்கிறார். ஆனால் ஆசியா இந்தியாவின் தலைமைக்குட்பட்டது. இந்தியா ஐரோப்பியரைக் கூடக் கொல்ல விரும்புவதில்லை. திருத்த விரும்புகிறது. எனவே, ஐரோப்பியர் இந்தப் புதிய பயத் திற்கிரையாதல் அவசியமில்லை. அது வெறும் பேதை அச்சம். ஆனால் நம்முடைய சொல் ஐரோப்பாவில் எட்டுவதைக் காட்டிலும் லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் சொல் அதிகமாகவும் விரைவாகவும் எட்டுமே; அதற்கென்ன செய்யலாம்?

---

## 12

## பொழுதுபோக்கு

(காளிதாஸனுக்கும் ஸந்தோஷராயருக்கும் நடந்த சம்பாஷணை)

**ஸந்தோஷராயர்:**—காளிதாஸரே, பத்திரிகைகளில் ஏதேனும் இன்று புது விசேஷங்களுண்டா?

**காளிதாஸன்:**—ஒன்றுமில்லை.

**ஸந்:**—ருஷியாவில் ராஜ்யம் புரண்டு போனதாகவும், இரண்டே சில்லரை ஜார் ராஜிநாமாக் கொடுத்ததாகவும் போட்டிருந்ததே; அதற்கப்பால் என்னவாயிற்று?

**காளி** :—இரண்டே சில்லரை ஜார் என்கிறீரே அதென்ன ?

**ஸந்** :—பழைய ஜார் நிக்கொலஸ் ஒன்று ; அவருடைய ரகஸ்யப் பிள்ளைதான் சில்லரை ; ஆக ஒன்றே சில்லரை. பின்பு சக்கரவர்த்தியின் தம்பியாகிய மைக்கேல் ; ஆக இரண்டே சில்லரை.

**காளி** :—சரிதான்.

**ஸந்** :—ருஷியாவில் நிரங்குசமாகப் பத்திரிகைச் சுதந்திரமில்லாமலும், பேச்சுச் சுதந்திரமில்லாமலும், தம்மிஷ்டப்படி அரசாண்டு வந்த ஜார் சக்ரவர்த்திகளின் அதிகாரம் தொலைந்து ஜனங்களின் அதிகாரம் ஏற்பட்டதைப்பற்றி உமக்குச் சந்தோஷமுண்டாகவில்லையா ?

**காளி** :—வாஸ்தவந்தான்.

**ஸந்** :—என்ன ஓய் வாஸ்தவந்தானென்று இலேசாகச் சொல்லுகிறீரே ? ஜனாதிகாரத்துக்குத்தானே ஐரோப்பாவில் இத்தனை பெரிய சண்டை நடக்கிறது ? அதற்காகத்தானே நம்முடைய பிரிட்டிஷ் சிநேகிதர்களும் மற்றத் தேச ராஜ்யத்தாரும் கோடி கோடியாகப் பணத்தை வாரி இறைக்கிறார்கள்? லக்ஷக்கணக்கான மனிதர்களைப் பலியிடுகிறார்கள் ? பூமண்டல முழுதும் ஜனாதிகாரமும், விடுதலையும் நிலைபெறும். அப்போதுதான் நம்முடைய நேச ராஜ்யங்களின் நோக்கம் முழுதும் நிறைவேறி, இவர்களுடைய கீர்த்தி எக்காலத்திலும் அழியாமலிருக்கும். ருஷியாவில் பழைய ராஜாங்கத்தை எதிர்த்து, அதன் பொருட்டாகச் சிறைப்பட்டிருந்த தேசாபிமானிகளை யெல்லாம் விடுவித்துவிட்டு, அவர்களுக்குப் பதிலாக ரஹஸ்யப் போலீஸாரைச் சிறைக்குள்ளே தள்ளி விட்டார்களென்று பத்திரிகையில் வாசித்தேன். இதில் எனக்குண்டான ஸந்தோஷம் சொல்லி முடியாது.

**காளி** :—சரிதான்.

**ஸந்** :—ருஷியாவிலே இதுவரை தேசாபிமானிகள் பட்டுவந்த கஷ்டங்களை ஆதிசேஷனாலேகூட வர்ணிக்க முடியாது. போலீஸ்காரரின் சந்தேகத்துக்குட்பட்டவர்கள் ஸைபீரியாக் காடுகளிலும், உள்நாட்டுச் சிறைகளிலும் துன்பப்பட்டு மடிந்த கொடுமைகளை யெல்லாம் நீர் சரியாகக் கேள்விப்பட்டதில்லை யென்று நினைக்கிறேன். கேள்விப்பட்டிருந்தால் இப்போது நீர் அதிகமாக ஸந்தோஷமடைவீர்.

**காளி** :—சரிதான். ஆனால் நீர் போன மாஸம் என்னைப் பார்த்தபோது ஜார் சக்ரவர்த்தியையும் அவருடைய மந்திரிகளையும் புகழ்ந்து பேசினதாக ஞாபகமிருக்கிறது.

**ஸந்** :—ஓயாமல், ஹிந்துக்களைப் புகழ்ந்துகொண்டிருந்தால் நீர் மகிழ்ச்சியுடன் கேட்டுக்கொண்டிருப்பீர். போன மாஸம் நான் ஜார் சக்ரவர்த்தியைப் புகழ்ந்த காரணம் வேறு. ராஜ்யத்தில் எத்தனை கஷ்டங்களிருந்தபோதிலும், ரஸ்புதீன் முதலிய துர்மந்திரிகளின் வார்த்தையைக் கேளாமல், அவர் நம்முடைய நேச ராஜ்யங்களின் விஷயத்தில் உண்மை செலுத்தி வந்ததன் பொருட்டாக அவரைப் புகழ்ந்தேன். இப்போது........

**காளி** :—சரி; சரி; நிறுத்தும். வேறேதேனும் கதை சொல்லும் கேட்கிறேன்.

**ஸந்** :—எழெட்டு நாளைக்கு முன்பு நம்மூருக்கடுத்த பிள்ளைப்பட்டி யென்ற கிராமத்தில் ஒருவன் கோபத்தால் தன் மனைவி வயிற்றில் மிதித்தானாம். அவள் செத்துப் போய் விட்டாளாம். அந்த விஷயம் போலீஸ் விசாரணையி லிருக்கிறதாம். நீர் கேள்விப்பட்டீரா ?

**காளி** :—ஆம்.

**ஸந்** :—அதிலிருந்து, அந்தக் கிராமத்து ஜனங்களெல்லாம் ஆலமரத்தடியில் ஒரு கூட்டம்கூடி இனிமேல் யாரும் பெண்டாட்டியை அடிக்கக் கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டார்களாம். அது கிடக்கட்டும், காளிதாஸரே, உம்மிடம் நான் ஒரு முக்கியமான விஷயம் கலந்து பேசவில்லையே ?

**காளி** :—சங்கதி என்ன ?

**ஸந்** :—எப்ரல் மாதம் 22-ந் தேதி ஒரு வால் நக்ஷத்திரம் எரிநக்ஷத்திரம் ஒன்றைத் தன் வாலில் கவ்விக்கொண்டு வந்து பூமியின்மேல் மோதப் போவதாகவும் அதனால் இந்தப் பூமண்டலம் தூள் தூளாக நொறுங்கிவிடப் போவதாகவும் சொல்லுகிறார்களே ? அது வாஸ்தவமாக இருக்குமா ?

**காளி**:—பொய்க் கதை.

**ஸந் :**—உமக்கெப்படித் தெரியும்? அமெரிக்கா தேசத்தில் யாரோ ஒரு பெரிய வான சாஸ்திரப் பண்டிதர் சொல்லியிருக்கிறாராமே? அது பொய்யென்று நீர் எப்படிக் கண்டீர்?

**காளி :**—பொய்க் கதைதான், எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஏப்ரல் மாதம் 23-ம் தேதி நீர் என்னிடம் வந்து சேரும். அப்போது காரணம் சொல்லுகிறேன்.

**ஸந் :**—பூமி தூளாய்ப்போன பிறகு நான் உம்மிடம் வந்து கேட்பதெப்படி? நீர் விடை சொல்வதெப்படி?

**காளி :**—இந்தப் பூமியில் இன்னும் நாமே நெடுநாளிருந்து பலவித நியாயங்கள் நடந்து நிறைவேறுவதைப் பார்க்கப் போகிறோம். பூமியில் நல்ல யுகம் தோன்றப் போகிறது. மனித ஜாதி முழுமைக்கும் விடுதலை யுண்டாகப்போகிறது. நீர் சொல்லிய ருஷ்ய ராஜ்யப் புரட்சியானது இனி வரப் போகிற நற்காலத்தின் முன்னடையாளங்களில் ஒன்று. பூமி தூளாகாது. மனிதர் ஒருவருக்கொருவர் செய்யும் அநீதி தூளாகும்.

**ஸந் :**—சரி; சரி; உம்முடைய ஞான மூட்டையை நம்மிடம் அவிழ்க்கத் தொடங்கிவிட்டீர்....எனக்குக் காப்பி சாப்பிட நேரமாகிறது. நான் போய் வருகிறேன்.

இவ்வாறு சொல்லி ஸந்தோஷராயர் எழுந்து போய் விட்டார். ஸந்தோஷராயர் வெளிக்கு எப்படிப் பேசிய போதிலும் மனதுக்குள் தெய்வபக்தியுடையவர். மனுஷ்ய ஜாதியின் முதுகின் மேலே பல்லாயிர வருஷங்களாகச் சுமந்து போயிருக்கும் அநீதியாகிய மலை சிதறிப்போக வேண்டுமென்பதே அவருடைய கருத்து.

---

## 13

## ரங்கூன் ஸர்வகலா ஸங்க பஹிஷ்காரம்

ரங்கூன் ஸர்வகலா சங்கத்தையும், ராஜாங்க உதவி பெற்ற மற்றப் பாடசாலைகளையும், மாணாக்கர் பஹிஷ்காரம் செய்யும்படி நேர்ந்த விருத்தாந்தங்களைக் குறித்து, மிஸ்டர்

மோங் தின் மோங் விடுத்திருக்கும் அறிக்கையை நோக்கு மிடத்தே, ஸர்க்கார் அறிக்கை பக்ஷபாதமுடையதென்பது வெளிப்படுகிறது. ரங்கூன் ஸர்வகலா ஸங்கத்தின் நிர்மாண நிபந்தனைகள் ஆக்ஷேபத்துக்கிடமானவையென்று ஜனங்கள் கூக்குரலிட்டதை அதிகாரிகள் சிறிதேனும் பொருட்படுத் தாமல் நிராகரித்துவிட்டு, அந்த நிர்மாணத்தை மிதமிஞ்சிய விரைவுடன் சட்டமாக்கினார்கள்.

இந்த விஷயத்தில் பர்மிய அறிவாளிகள் செலுத்திய ஆத்திரத்தை அதிகாரிகள் கவனிக்கவேயில்லை. இவ்வித அசிரத்தையைப் பர்மிய அறிவாளிகள் முன்னைப் போல, ஆட்டுக் குட்டித்தனமாகப் பொறுத்துக் கொண்டிருப்பார் களென்று, "ஆகாசத்திலிருந்து நேராக இறங்கி வந்த" ஆங்கிலேய அதிகாரிகள் தீர்மானம் செய்து கொண்டனர். ஜெர்மனியிலும், ருஷியாவிலுந்தான் காலச் சக்கரம் சுழலுகிற தென்றும் பர்மாவில் சுழலவில்லை யென்றும் ஸ்தம்பித்து நிற்கிறதென்றும், மேற்படி ஆகாச குமாரர்கள் எண்ணினார்கள். ஆனால், பர்மாவில், காலச்சக்கரம் இங்கி லாந்தைக் காட்டிலும் அதிக வேகமாகச் சுழன்று வந்திருக் கிறது. இந்த விஷயந் தெரியாமல் வழக்கம் போலே அதிகாரிகள் மஹாத்மா காந்தியின் மீது பழி சுமத்தி அவரைத் தூற்றுகிறார்கள்.

பர்மியப் படிப்பாளிகளுக்கும், அதிகாரிகளுக்குமிடையே நிகழ்ச்சி பெற்றிருக்கும் மனஸ்தாபத்தின் ஆதாரம் பின் வருமாறு :—பம்பாய் மாகாணத்தைப்போல் பர்மா ஒன்றரை மடங்கு பெரிது. ஆயினும் பர்மா முழுமைக்கும், ரங்கூன் நகரமொன்றிலுள்ள இரண்டே முதல்தரக் கலாசாலைகளிருக் கின்றன. பர்மா முழுமைக்கும் உயர்தரப் பாடசாலைகள் 23 ; ஆரம்பப் பாடசாலைகள் சுமார் 8,000 (எண்ணாயிரம்) பம்பாய் மாகாணத்திலோ 200 (இருநூறு) உயர்தரப் பாட சாலைகளுக்கதிகமே யுள்ளன. ஏறக்குறைய 15,000 (பதினை யாயிரம்) ஆரம்பப் பாடசாலைகளிருக்கின்றன.

இந்த நிலைமையில், பர்மா கவர்ண்மெண்டார் ரங்கூன் யூனிவர்ஸிடியை மாகாணத்துக்குப் பொதுவாக்காமல், வஸதி ஸஹிதமாக, (ரங்கூன் நகரத்தில் வந்து வஸிப் போருக்கு மாத்திரம் பயன்படும்படி) வைக்க வேண்டு மென்று தீர்மானித்தபோது, ஜனங்களுக்கு வருத்த முண்டாயிற்று. ஏனென்றால், ஸர்வகலா ஸங்கம் மாகா ணத்துக்குப் பொதுவாக இருக்குமாயின், அதன் மூலமாக

அதிகப் பிள்ளைகள் கடைத்தேற முடியும். இப்போதுள்ள சட்டப்படி, அதன் கட்டிடத்தில் ஏராளமான பணம் செலவு செய்து கொண்டு வாஸம் செய்யக்கூடிய மிகச் சில மாணுக்கருக்கே அது பயன்படும். வஸதி ஸஹிதமான ஸர்வகலா ஸங்கத்தால் விளையக்கூடிய விசேஷ நன்மைகளை மாணுக்கர் எய்தும்படிச் செய்வதே நோக்கமெனின், அப்போது மாகாண முழுமைக்கும் போதியவாறு ஐம்பது அல்லது நூறு ஸங்கங்கள் ஸ்தாபனம் செய்வதற்குரிய பணச் செலவை ராஜாங்கத்தார் பொறுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

மேலும், அந்த ஸர்வகலா ஸங்கத்துடன் ரங்கூன் நகரத்திலுள்ள பாடசாலைகளை மாத்திரமே சேர்க்கலாமென்று சட்டம் செய்திருக்கிருர்கள். எனவே, மற்ற எவ்விடத்திலும் முதல்தரக் கலாசாலை ஏற்படுத்தக்கூட வழியில்லாமற் போய்விடும். ஸர்வகலா ஸங்க ஸம்பந்தமில்லை யெனில் முதல்தரக் கலாசாலை ஸ்தாபித்தல் பயன் படாதன்றே ?

ராஜாங்கத்தார் ஜனங்களுக்குக் கல்வியளிக்க வேண்டுமென்ற விருப்பம் உண்மையாகவே உடையோரென்று காண்பிக்க வேண்டுமாயின், மாகாணமெங்கும் ஆயிரக் கணக்கான பாடசாலைகளையும் கலாசாலைகளையும் ஸ்தாபித்து, அங்கங்கே முக்ய நகரங்களில் வஸதி ஸஹிதமான ஸர்வ கலா ஸங்கங்களை அமைத்தல் இயலும்படிச் செய்யவேண்டும்.

இதையன்றி, ஒரு வருஷ ஆரம்பப் பயிற்சி அதிகமாக வைத்திருந்தால், "ஸெனேட்" ஸபையில் பிரதிநிதித் தன்மையின்மை, என்ற வேறு சில அம்சங்களிலும் பர்மியப் படிப்பாளிகளின் கொள்கை ஸர்க்கார்க் கொள்கையினின்றும் மாறுபட்டிருக்கிறது.

இந்த அம்சங்களனைத்திலும் பொது ஜனங்களின் நன்மைக்கும் தீர்மானத்துக்கும் தக்கபடி தம்முடைய சட்டத்தை மாற்றிக்கொள்வதே ஜனங்களிடையே கொழுந்து விட்டெரியும் அதிருப்திக் கனலை அவிக்க வழியாகுமன்றி, மஹாத்மா காந்தியைத் தூஷணை செய்வதில் அதிகப் பயன் விளையாதென்பதைப் பர்மா கவர்னர் தெரிவாராகுக.

# 14

## சென்னை வாசிகளின் நிதானமும் விபின சந்திரபாலரின் சந்நிதானமும்

சென்னை வாசிகளின் நிதானமெல்லாம் சந்திரபாலரின் சந்நிதானத்திலே பறந்து காற்றாய்ப் போய்விட்டது. நேற்று மாலை விக்டோரியா நகர மண்டபத்தில் லாலா லஜபதிராய் தீபாந்தரத்திற் கேற்றி அனுப்பப்பட்ட விஷயமாக மஹாஜன சபையாரால் கூட்டப்பெற்ற பெருங் கூட்டத்தில் நடந்த செய்திகளை நேரே வந்து கண்டவர்களெல்லாம் இனி மயிலாப்பூர் வக்கீல்கள் ஜனத் தலைவர்களென்று மூச்சுவிடக் கூட இடமில்லை யென்பதை நன்றாக அறிந்திருப்பார்கள்.

நேற்று மாலை மீட்டிங்கிலே முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பின் வருவனவாகும் :—

1. இதுவரை பழைய கட்சிக்காரருக்கு முக்கிய தர்மமாக இருந்த விண்ணப்ப முறைமையை நேற்று அவர்கள் தாமாகவே பேதமையாகுமென்று நிறுத்திவிட்டனர்.

2. அப்படி அவர்கள் விண்ணப்பம் செய்ய விரும்பாத போதிலும் வெறுமே இந்தியா மந்திரிக்கு மீட்டிங்கைப் பற்றித் தகவல் கொடுக்கவேண்டுமென்று மிஸ்டர் பி. ஆர். சுந்தரய்யர் சொன்னதைக்கூட ஜனங்கள் அங்கீகரிக்காமல் கோபமடைந்தார்கள்.

3. மயிலாப்பூர் வக்கீல்கள் தாம் ஜனத் தலைவர்கள் என்று கனவு கண்டு கொண்டிருந்தது பொய்க் கனவென்பதை அறிந்து கொண்டார்கள்.

4. ஸர்க்காரிலே ஸர் என்றும் கூர் என்றும் பட்டம் பெற்றுத் திரிந்தவர்களை யெல்லாம் ஜனங்கள் மதிப்புடன் நடத்திய காலம் போய் இப்போது அவர்களைப் பகிரங்க ஸ்தானங்களிலே பேசவொட்டாத நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள்.

5. இங்கிலீஷிலே பேசக்கூடாது. தமிழ்நாட்டிலே ஜனத் தலைவர்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு வருவோர் பொது விஷயங்களைப்பற்றித் தமிழிலேயே பேசவேண்டுமென்று ஜனங்கள் வற்புறுத்தினார்கள்.

6. ஸர். வி. சி. தேசிகாச்சாரியாருக்கும் மிஸ்டர் பி.ஆர். சுந்தரய்யருக்கும் ஜனங்கள் சரியான பாடம் சொல்லிக் கொடுத்தார்கள். சென்னை மாணுக்கர்களிலே பெரும்பாலார் வெளியூருக்குச் சென்றிருந்தபடியால் பழைய கட்சியார் இம்மட்டோடு பிழைத்தார்கள். ஒரு வாரத்திற்குமுன் இந்தப் பொதுக்கூட்டம் நடந்திருக்குமானால் நமது மயிலாப்பூர் நண்பர்களின் ஸ்திதி இன்னும் வேடிக்கையாக முடிந்திருக்கும். லாலா லஜபதிராய் தீபாந்திரத்துக்குப் போனதைப் பற்றி ஜனங்கள் மனது கொதித்துக்கொண்டிருக்கும் போது கூட இவர்கள் சர்க்காரை ஸஹஸ்ரநாமம் சொல்லி அர்ச்சனை செய்வதுதான் சரியான பாதையென்று நினைப்பது விநோதமாயிருக்கிறது.

இவர்கள் என்ன நினைத்தாலும் சரியே; இனி அதைப் பகிரங்கமாக வெளியிட்டுக் கூறத் துணியமாட்டார்கள் என்று நேற்றே தெளிவாய்விட்டது.

---

# 15

## கிச்சடி

சமீபத்திலே, பம்பாயில் கூடிய காங்கிரஸ் சபை, முஸ்லீம் சங்கம், முதலியவற்றில் நடந்த உபந்நியாசங்களை வாசித்துப் பார்த்தேன். பெரும்பாலும் ரஸமாகத்தான் இருந்தது. இவை போன்ற பிரசங்கங்களை யெல்லாம் தமிழில் தெளிவாக மொழி பெயர்த்து அப்போதைக்கப்போது குட்டிப் புத்தகங்கள் போட்டால் நல்லது. இந்த விஷயத்தில் ஸ்ரத்தை யெடுத்தால் தமிழ் நாட்டுக்கும் உபகாரம்; அவர்களுக்கும் நல்ல லாப மேற்படும். சபைகளிலே இரண்டு விதமுண்டு. சபை முடிந்த வுடனே செய்கை தொடங்குவதற்கு ஆகவேண்டிய விஷயங்களை முடிவு செய்யும் சபை ஒரு வகை. பொதுப்படையாக நியாய நிர்ணயங்கள் செய்துவிட்டுக் கலையும் சபை மற்றொரு வகை.

முதல் வகுப்பில் சேர்ந்த சபைகளில் மேற்கோள் எடுத்துக் காட்டுதல் குறைவாக இருக்கும். இரண்டாவது வகுப்புச் சபைகளில், அந்தப் பண்டிதர் இப்படிச் சொன்னார் ; இந்தப் பண்டிதர் அப்படி எழுதியிருக்கிறார் என்று மேற்கோள் வசனங்கள் மிகவும் அதிகமாக நடைபெறும். பம்பாயில் நடந்த சபைகள் பெரும்பாலும் ஷெ இரண்டு லக்ஷணங்களும் சேர்ந்தவையாதலால் அங்கே பழையவரும் புதியவருமாகிய இங்கிலீஷ்ப் பண்டிதரின் வசனங்களை அடிக்கடி மேற்கோள் காட்டிப் பேசினார்கள். திருஷ்டாந்தமாக :—

" ஸ்வதந்திரமே மனிதனை ஸ்வதந்திரத்திற்குத் தகுதியாக்குகிறது" (அதாவது நீரிலே இறங்கித்தான் ஒருவன் நீச்சுப் படிக்க முடியும் ; இல்லாவிட்டால் முடியாது என்பது போல).

இந்த வாக்கியம் மகா கீர்த்தியுடன் நெடுங்காலம் இங்கிலாந்தில் முதல் மந்திரியாக இருந்த க்ளாட்ஸ்டன் என்பவர் சொல்லியது. நல்ல ராஜ்யத்தைக் காட்டிலும் ஸ்வராஜ்யம் நல்லது ; இது கூறிய பானர்மான் என்பவரும் இங்கிலீஷ் முதல் மந்திரி ஸ்தானம் வகித்தவரேயாம். ஸம்ஸ்கிருதம் முதலிய புராதன பாஷைகள் படித்த வைதிகப் பண்டிதர்களைப் போலவே, நமது தேசத்தில் இங்கிலீஷ் படித்த வித்வான்களும் பெரும்பான்மையாகப் புத்தகப் பழக்கம் அதிகமாகவும் லௌகிகப் பழக்கம் குறைவாகவும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாம் நாளடைவில் சீர்ப்படுமென்று நம்புகிறேன்.

ஓகோ ! இந்த மேற்கோள் சங்கதி எடுத்ததிலிருந்து என்னையும் இன்று அந்தக் குணம் பலமாகப் பிடித்துக் கொண்டது.

லார்ட் ஹால்டேன் என்று ஒரு இங்கிலீஷ் மந்திரி இப்போது பென்ஷன் வாங்கிக்கொண்டிருக்கிறார். இவர் நல்ல மேதாவி. இவர் சொல்லுகிறார் :—

" இந்த யுத்தம் முடிந்தவுடனே ஜனாதிகாரம் வந்து நம் முன்னே நிற்கும். (அதாவது பொது ஜனங்கள் கையிலே அதிகாரம் வந்து தங்கும்.) நம்முடைய யஜமான்கள் பொது ஜனங்கள் நம்மீது அதிகாரம் செலுத்த வருமுன்பாகவே அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதற்கு நம்மால் இயன்ற அளவு பாடுபடவேண்டும்." பள்ளிக்கூடம் என்ற வார்த்தை எடுத்ததிலிருந்து ஆஸ்திரேலியா தேசத்துப் பெண் பள்ளிக்

கூடம் ஒன்றைப் பற்றிய கதை ஞாபகத்துக்கு வருகிறது. அதில் வாசித்துக் கொண்டிருந்த ஒரு ஆஸ்திரேலியப் பெண் இன்ஸ்பெக்டர் வந்து பரீக்ஷை நடத்தியபோது பின் வரும் கேள்வி கேட்டாராம் :—

இந்தியா தேசத்து ஜனங்களின் சாதாரண போஜனம் எது ?

அந்தப் பெண் சொல்லிய மறுமொழி:—" பஞ்சம். " வேடிக்கையான கதை.

கல்வி சம்பந்தமாக இன்னுமொரு மேற்கோள் இன்று கிச்சடியே. " மேற்கோள் கிச்சடி " தானே ? மிஸ்டர் ஆர்ச்சேர் என்ற ஒரு ஆங்கிலேயர் சில தினங்களின் முன்பு லண்டன் பத்திரிகை யொன்றில் கல்வியைப் பற்றி எழுதிக்கொண்டு வரும்போது, " இங்கிலாந்திலே இப்போது கல்விக்கு மூலாதாரமாக வசன காவியங்களையும், செய்யுட் காவியங் களையும், வைத்திருப்பது சரியில்லை. ஸையன்ஸ் (இயற்கை நூல்) படிப்புத்தான் மூலாதாரமாக நிற்கவேண்டும் " என்கிறார்.

இவருடைய கொள்கை பலவித ஆக்ஷேபங்களுக்கிட மானது. ஆனால், தனிப் பள்ளிக்கூடங்கள் எந்த முறைமையை அனுசரித்த போதிலும், ராஜாங்கப் பள்ளிக்கூடத்தார் இவருடைய கொள்கையைத் தழுவியே படிப்பு நடத்த வேண்டு மென்று நான் நினைக்கிறேன். கற்பனையும் அலங்காரமும் எனக்குக்கூட மிகவும் பிரியந்தான். ஆனால், " நெல் எப்படி விளைகிறது ?" என்பதைக் கற்றுக் கொடுக்காமல், " அன் மொழித் தொகையாவது யாது ?" என்று படிப்புச் சொல்லிக் கொடுப்பதை நினைக்கும் போது கொஞ்சம் சிரிப்புண்டாகிறது. அன்மொழித் தொகை சிலரைக் காப்பாற்றும், ஊர் முழுதையும் காப்பாற்றாது. நெல்லுத்தான் ஊர் முழுதையும் காப்பாற்றும். அன்மொழித் தொகையைத் தள்ளிவிடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் அன்மொழித் தொகையைப் பயிர் செய்து நெல்லை மறந்து விடுவது சரியான படிப்பில்லையென்று சொல்லுகிறேன் ; அவ்வளவுதான்.

# 16

## உல்லாச சபை

[ராக்ஷஸ வருஷம் பங்குனி மாதம் 10 தேதி புதன்கிழமையன்று மாலை வேதபுரம் உல்லாஸ சபையில் நடந்த செய்தி.]

சபைக்கு வந்திருந்த பேர் :—

(1) ஜிந்தாமியான் சேட், (2) வெங்கட்டராவ், (3) குண்டுராயர், (4) குமாரசாமி வாத்தியார், (5) எலிக்குஞ்சு செட்டியார், (6) காளிதாசன், (7) மணவாளன் செட்டியார்.

**வராத பேர் :** கோமதி நாயகம் பிள்ளை, மாசப்ப முதலியார்.

**எலிக்குஞ்சு செட்டியார் :**—இன்று சபாநாயகராக இருக்கும்படிக் காளிதாசரை வேண்டுகிறேன்.

**காளிதாஸன் :**—எனக்குச் சம்மதமில்லை. வெங்கட்டராவைப் போடுங்கள்.

**எலிக்குஞ்சு செட்டியார் :**—காளிதாசரே சபாநாயகராக வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**ஜிந்தாமியான் சேட் :**—எனக்கு அதுவே சம்மதம்.

சபையாரின் வேண்டுகோளின்படி காளிதாசன் அக்கிராசனம் வகித்தார்.

**எலிக்குஞ்சு செட்டியார் :**—சபாநாயகரே, விவகாரம் ஆரம்பிக்கலாமா ?

**சபாநாயகர் :**—அப்படியே செய்யலாம்.

**எலிக்குஞ்சு செட்டியார் :**—இந்தக் காளிதாசரை நமது சபையைவிட்டு நீக்கிவிடவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இதைச் சபையார் அங்கீகாரம் செய்யவேண்டும்.

**குமாரசாமி வாத்தியார் :**—என் காணும், செட்டியாரே என்ன காரணம் ?

**ஜிந்தாமியான் சேட் :**—செட்டியார் மனத்தில் இந்தக் கருத்திருக்கும்போது அவர் காளிதாசரை இன்று சபா

நாயகராக இருக்கும்படி கேட்டது கேலிதானே? நமது சபையில் இப்படி நாணயக் குறைவான கேலிகள் செய்வதைப் பார்த்தால் எனக்கு அருவருப்புண்டாகிறது.

**எலிக்குஞ்சு செட்டியார்:**—நாணயக் குறைவா? யாருக்குக் காணும் நாணயக் குறைவு? சாஹப், உம்முடைய மஹம்மதிய குணங்களை நம்மிடம் காட்டவேண்டாம் தெரியுமா?

**ஜிந்தாமியான் சேட்:**—செட்டியாரே, அதிக வார்த்தை பேசிவிட்டீர். ஒரு தரம் பொறுத்தேன். ஹோஷ்யார்! (ஜாக்கிரதை!)

**எலிக்குஞ்சு செட்டியார்:**—என்ன ஸாஹப், தாடியை உருவுகிறீரே, அடித்துப் போடுவீரோ?

**ஜிந்தாமியான் சேட்:**—ஹோஷ்யார்!

**எலிக்குஞ்சு செட்டியார்:**—நம்முடைய கடையிலே உம்மைப் போலவே நாலு முரடர் வேலைக்கு வைத்திருக்கிறேன். ஞாபகமிருக்கட்டும்.

**ஜிந்தாமியான் சேட்:**—ஹோஷ்யார்! ஹோஷ்யார்!!

**எலிக்குஞ்சு செட்டியார்:**—என்ன காணும், வெகு பயமுறுத்துகிறீரே. யாரென்று நினைத்தீர் நம்மை? (என்று சொல்லிக்கொண்டு எலிக்குஞ்சு செட்டியார் எழுந்து நின்று கையை ஓங்கினார்.)

சபையார் கலீரென்று சிரித்தார்கள். ஏனென்றால், எலிக்குஞ்சுச் செட்டியார் $4\frac{3}{4}$ அடி உயரம். ஜிந்தாமியான் சேட் $6\frac{1}{8}$ அடி உயரம். செட்டியார் $1\frac{1}{4}$ அடி அகலம். சேட் $3\frac{1}{4}$ அடி அகலம். செட்டியாருக்கு வயது 55. சேட்டுக்கு வயது 33.

இந்தச் சமயத்தில் காளிதாசன் எழுந்து "உல்லாசத்திற்கு ஒரு அளவிருக்கவேணும். வரை கடந்து போகலாகாது. செட்டியாரே உட்காரும்....என்னைச் சபையிலிருந்து நீக்கவேண்டும் என்று பிரேரணை செய்தீர். முகாந்தரங்கள் சொல்லும்" என்றார்.

**குமாரசாமி வாத்தியார்:**—ஆமாம், காரணம் சொல்லும். காரணம்.

**எலிக்குஞ்சு செட்டியார் :**—நமது சபையின் காரியங்களை வாரந்தோறும் சென்னப்பட்டணத்துப் பத்திரிகையில் பிரசுரம் செய்யும்படி நாம் காளிதாசரை நியமித்தோம். அதன் படியே அவர் முதலாவது கூட்டத்து விவகாரங்களைச் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு எழுதினார். அதற்கப்பால், நடந்த கூட்டங்களில் ஒன்றைப்பற்றியேனும் எழுதவில்லை. இன்று நடப்பது ஆறாவது அல்லது ஏழாவது கூட்டமென்று நினைக்கிறேன். இவர் இத்தனை அஜாக்கிரதையுடன் நமது சபையாருக்கு வாக்குத் தவறியதுபற்றி இவரை நீக்கிவிட வேண்டுமென்று சொல்லுகிறேன்.

**காளிதாசன் :**—சபையார் என்னை மன்னிக்கவேண்டும். நமது சபை விவகாரங்கள் ரஸமாக இருக்கும் சமயங்களில் பத்திரிகைக்கு எழுதலாம். அப்படி விசேஷமொன்றும் சென்ற கூட்டங்களில் நடக்கவில்லை. ஆகையால் எழுதவில்லை.

**எலிக்குஞ்சு செட்டியார் :**—ரஸம், ரஸமில்லை. அதெல்லாம் நீர் சொல்லவேண்டிய அவசியமில்லை. சபையில் நடக்கும் விஷயங்களை நீர் அப்படியே எழுதிவிடவேண்டும். பத்திரிகைக்காரர் போடாவிட்டால் நீர் ஜவாப்தாரி இல்லை.

(இங்ஙனம் சிறிது நேரம் வாதங்கள் நடந்த பின் கடைசியாகச் சபையார் செய்த முடிவு :—காளிதாஸரை நீக்கிவிட வேண்டுமென்று செட்டியார் சொல்லியது பிழை. சபையில் என்ன நடந்த போதிலும் அதை அப்படியே காளிதாஸர் பத்திரிகைக்கு எழுதிவிடவேண்டும். கொஞ்சங்கூட ரஸமில்லாத வார்த்தைகள் ஒரு கூட்டத்தில் பேசப்பட்டதாகக் காளிதாஸருக்குத் தோன்றுமானால் அவர் சபையாரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு எழுதாமலிருக்கலாம்.)

**குமாரசாமி வாத்தியார் :**—மேலே விசாரணைகள் செய்வோம்.

**குண்டுராயர் :**—பெல்ஜியம் தேசத்திலே எமீல் வெர்ஹேரன் (Emile Verhaeren) என்று ஒரு கவி இருக்கிறார். அவருடைய கவிதை புது வழியாக இருக்கிறதென்று ஒரு பத்திரிகையில் வாசித்தேன். எப்படியென்றால், இதுவரை உலகத்துக் கவிகள் நமது நவீன நகரங்களிலேயுள்ள யந்திர ஆலைகள், மோட்டார் வண்டிகள் முதலிய வஸ்துக்களைத் தமது கவிதையிலே சேர்ப்பதில்லை. இந்த வஸ்துக்களிலே அழகில்லையாதலால் கவிதையிலே சேர்க்கத் தகாதன என்று

நினைத்துக்கொண்டிருந்தார்கள். வானம், காற்று, நீர், வனம், மலை, பெண், செல்வம், மது, தெய்வம், தவம், குழந்தை முதலிய அழகுடைய வஸ்துக்களையே கவிகள் வர்ணிப்பது வழக்கம். எமீல் வெர்ஹேரன் என்பவருடைய கொள்கை யாதென்றால் :—"வலிமையே அழகு. ஒரு பொருளின் வெளியுருவத்தைப் பார்த்து அது அழகா இல்லையா என்று தீர்மானம் செய்யலாகாது. யந்திரங்களிலே வலிமை நிகழ்கின்றது. ஆதலால் அவை அழகுடையன. அவற்றைக் கவி புகழ்ச்சி செய்தல் தகும்."

**காளிதாசன் :**—வலிமை ஓர் அழகு. அழகு ஒரு வலிமை. யந்திர ஆலை, நீராவி வண்டி, நீராவிக் கப்பல், வானத் தேர், பெரிய பீரங்கி எல்லாம் அழகுதான். உயர்ந்த கவிகள் வலிமையுடைய பொருள்களை அவ்வக் காலத்தில் வழங்கிய வரையிலே வர்ணனை செய்துதான் இருக்கிறார்கள். இதிலே புதுமையொன்றுமில்லை. வலிமைக் கருவிகள் இப்போது சில புதுமையாகத் தோன்றியிருக்கின்றன. இவற்றை ஐரோப்பியக் கவிகள் விலக்கி வைத்தது பிழை. ஆனால் பழைய தெய்வத்தையும், இயற்கையையும் மறந்து யந்திரங்களைப் பாடத் தொடங்கினால் கவிதை செத்துப் போய்விடும்.

**எலிக்குஞ்சு செட்டியார் :**—அது கிடக்கட்டும். நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதை ஆலோசனை பண்ணுங்கள். காக்கைக்கு 100 வயதென்று சொல்லுகிறார்கள். அது வாஸ்தவமானால், தெய்வத்துக்குப் புத்தியில்லையென்று நான் சொல்லுகிறேன். காக்கைக்கும் 100 வயது, மனிதனுக்கும் 100 வயதா ? அதிலேகூட மனிதனைவிடக் காக்கையின் வயது கொஞ்சம் அதிகமென நிச்சயமாகத் தோன்றுகிறது. இதென்ன படைப்பு ?

**குமாரசாமி வாத்தியார் :**—எலிக்குஞ்சு செட்டியாரே, உமக்கு இப்போது வயசு 55 ஆகிறது. இதனால் என்ன பிரயோஜனம் ? காக்கை ஊரிலுள்ள அசுத்தங்களையெல்லாம் நீக்கி இயன்றவரை வியாதிகளைக் குறைத்து மனிதருக்கும் மற்ற ஜந்துக்களுக்கும் நன்மை செய்கிறது. நீர் பை, பையாகப் பணத்தை உள்ளே போட்டு மூடி வைத்திருக்கிறீர். போன மாதம் ஒரு அவசரத்துக்காக 50 ரூபாய் கடன் கேட்டேன். பொய் முகாந்தரம் சொல்லி மழுப்பிவிட்டீர். உம்மால் யாருக்கென்ன பிரயோஜனம் ?

**எலிக்குஞ்சு செட்டியார் :**—உம்மாலே உலகத்துக்கு என்ன நன்மை காணும், குமாரசாமி வாத்தியாரே ? அதை முதலாவது சொல்லும்......

இப்படி வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கும்போது, எலிக்குஞ்சு செட்டியார் வீட்டு வேலைக்காரன் ஒருவன் வாயில் நுரை தள்ளும்படி ஓடிவந்து, "ஐயா, நம்ம வீட்டு வைக்கோல் போரிலே நெருப்புப் பற்றிக்கொண்டு எரிகிறது" என்று சொன்னான்.

"நெருப்பா ?" என்று செட்டியார் உடனே எழுந்து ஓடினார். சபையைக் கலைத்துவிட்டு நாங்களெல்லோரும் செட்டியாருக்கு உதவி செய்யும் பொருட்டு அவர் வீட்டுக்குப் போனோம். அங்கே போய்ப் பார்க்கும்போது......அது மற்றொரு நாட் கதை. இன்று கதை இத்துடன் முடிகிறது.

**குறிப்பு.**—பாரதியாரின் நகைச்சுவையையும், நேருக்கு நேர் பேசுவது போன்ற உயிருள்ள வசன நடையையும் இம்மாதிரியான கட்டுரைகளிலே நன்கு காணலாம்.

எலிக்குஞ்சு செட்டியார், விளக்கெண்ணெய் செட்டியார்; வெல்லச்சு செட்டியார், பிரமராய ஐயர் எல்லாம் பாரதியார் தமது புதுவை நண்பருக்குக் கொடுத்த செல்வப் பெயர்கள்.

---

## திருவல்லிக்கேணி சுதேசிய கிருஹியம்

சூரத்தில் நடக்கிற காங்கிரசுக்கு நாங்கள் எல்லோரும் இவ்விடமிருந்து நாளது டிசம்பர் மாதம் 20-ஆந் தேதி வெள்ளிக்கிழமை மாலையில் ரிசர்வ் வண்டிகள் மூலமாய்ச் செல்லுகிறபடியால் இந்த ராஜதானியிலிருந்து காங்கிரசுக்குச் செல்லும் பிரதிநிதி (டெலிகேட்ஸ்)களும் பார்ப்பவர்களும் (விசிட்டர்ஸ்) இது பார்த்தவுடன் அவர்கள் புறப்படும் விவரத்தைத் திருவல்லிக்கேணி, துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு 87-வது நம்பர் சுதேசிய கிருஹத்தாருக்குத் தெரிவிக்கும்படிக்கும் நாளது மாதம் 20-ம் தேதி காலையில் மேற்படி கிருஹத்திற்கு வந்து சேரும்படிக்கும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**சி. சுப்பிரமணிய பாரதி.**

---

# 17

## வந்தேமாதரம்

இப்போது பெங்காள மாகாணத்திலிருக்கும் ஒவ்வொரு ஹிந்துவாலும் ஸாம வேதத்தைப் போல அத்தனை பக்தியுடன் பாடப்பட்டு வருகின்ற வந்தேமாதரம் என்ற திவ்ய கீதத்தை நான் மொழி பெயர்க்கத் துணிந்தமை, கர்வங் கொண்ட செய்கை யென்று பலர் கருதக்கூடும். ஷை கீத மெழுதிய பெங்காளி வித்வானாகிய பங்கிம் சந்திர பாபுவின் தைவிகச் சொற்களைத் தமிழ்ப்படுத்த எனக்குப் போதிய வன்மை யில்லாவிடினும் தமிழ்நாட்டாருக்கு அச் செய்யுளின் பொருளுணர்த்த வேண்டுமென்ற ஆசைப் பெருக்காலேயே யான் இதனைத் துணிந்திருக்கிறேன். இவ் வந்தேமாதரம் என்ற கீதம் பங்கிம் சந்திர சாடர்ஜியின் நூல்களிலே மிகச் சிறப்புக் கொண்டதாகிய ஆனந்த மடம் என்ற நாவல் கதையினிடையே அமைக்கப்பட்டிருக்கின்றது.

ஆனந்த மடம் என்ற கதையானது உண்மையாகவே நடந்த சரித்திரத்தைத் தழுவியது. வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர்-ஜெனரலாயிருந்த காலத்தில் சந்நியாசிகள் சேர்ந்து நடத்திய ஓர் பெருங் கலகத்தைப் பற்றியே ஷை நூல் விரித்துக் கூறுகின்றது. பெங்காளத்தில் 1774–5 வருஷத்தில் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. அதற்கப்பால் அனேக ஆயிரம் சந்நியாசிகள் ஒன்றாய்க் கூடி அந்நியர்களைத் தமது தாய்ப் பூமியிலிருந்து ஒழித்துவிட வேண்டுமென்னும் ஒரே நோக்கத்துடன் கலகஞ் செய்யத் தொடங்கினார்கள்.

இவர்கள் ரகசியமாகச் சந்திக்கும் பொருட்டு ஆள் நுழையக் கூடாத கருங்காட்டில் ஆனந்த மடம் என்பதோர் இடம் வைத்திருந்தார்கள். இவர்கள் மகமதியப் படைகளைப் பல இடங்களில் தோல்வி செய்ததுமன்றி ஓர் ஆங்கிலேயப் பட்டாளத்தையும் முறியடித்தார்கள். எனினும் பிரிட்டிஷார் விடாமல் தாக்கியதன்பேரில் இந்த வீர சந்நியாசிக் கூட்டத்தார் கடைசியாகப் பிரிந்து போயினர். இந்த வீரத் துறவிகளில் ஒருவராகிய பவாநந்தர் வந்தேமாதரம் என்ற ஆரம்பங் கொண்ட அரிய கீதத்தைப் பாடியதாகப் பங்கிம் புலவர் தமது நூலில் அமைத்திருக்கிறார்.

25 வருஷங்களுக்கு முன் இவர் இந்தப் பெரு நூலைப் பிரசுரித்தபோது அந்தக் கீதத்தின் கண்ணே பெரும் பகுதி சம்ஸ்கிருதமாகவே யிருந்தபடியால் அவருடைய நேயர்கள் பலர் அதைக் குறை கூறினார்கள். ஆனால் அம்மகான் அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பொருட்டாக்கவில்லை. எழுதி 25 வருஷங்களுக்குள்ளாக மேற்படி திவ்ய கீதம் பெங்காளத்து ஜனங்கள் எல்லோருடைய நாவிலுமிருக்கு மென்பதை அந்தக் கவியரசர் அறிந்திருந்தார் போலும். அதிலிருக்கும் சம்ஸ்கிருதம் வெகு எளிதாயிருப்பதால் எந்தப் பெங்காளிக்கும் வெகு சுலபமாகப் பொருள் விளங்கி விடும். அதுவுமின்றி அந்தக் கீதமானது பழமையில் முன்னோர்களால் வழங்கப்பட்டு வந்ததும் ஒப்பற்றதுமான சம்ஸ்கிருத பாஷையோடு தற்காலப் பாஷை கலப்புற்று அமைக்கப் பெற்றிருப்பதால் பூர்வ காலத்துடன் தற்காலத்தை இணைப்பதாக இருக்கின்றது. தாய்த் தேசத்தை அந்தப் பாடலில் தாயென்று வழங்கி யிருப்பது மிகவும் பொருத்தமுடைத்தே.

பலரால் இக்கீதத்திற்கு எழுதப்பட்டிருக்கும் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பானது பெங்காளி கீதத்திலிருந்து சில இடங்களில் மாறுபடுகின்றது. அவ்வாறு மாறுபட்ட இடங்களில் என்றால் கூடிய அளவு பெங்காளிச் சொற்களை அநுசரித்தே தமிழ் மொழிபெயர்ப் பெழுதி யிருக்கிறேன். எனது தமிழ் எத்தனை குறைவுபட்டிருந்த போதிலும் தெய்வப் புலவராகிய பங்கிம்பாபுவின் மதிப்பைக் கருதித் தமிழுலகத்தார் இதனை நன்கு ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

வந்தேமாதரம்

---

# 18

## "ஐர்லாந்துக்கு ஸ்வதந்த்ரம் கொடுக்க மாட்டோம்"

இந்த மாதிரி தர்ம ஸமாசாரங்களைக் கொஞ்சம் மறை பொருளாக மூடின பாஷையில், சற்றே இரண்டர்த்தம் தோன்றும்படியாகப் பேசுவது இது வரை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் போன்ற "ராடிகல்" (வேர்த்திருந்த) ராஜ தந்திரி

களின் வழக்கமாக இருந்தது. அதிலும், அமெரிக்காவிடம் யுத்த ஸமயத்தில் ஏராளமாகப் பணம் கடன் வாங்கவேண்டி யிருந்தபடியாலும், மற்றப்படி ஆஹார வஸ்த்துக்கள், ஸேனைக்கு வேண்டிய பண்டங்கள், மனித பலம் முதலிய வேறுபல உதவிகளும் அவசியமாக இருந்தபடியாலும், விடுதலை விஷயத்தில் ஏராளமான பக்தி, ஆவேசம் காட்டு வதும், விடுதலை மறுப்புக் கொள்கைகளை மிகவும் ஜாக்கிரதை யான, இரண்டு பொருளுடைய, மொழிகளில் மறைத்துச் சொல்வதும் ஆங்கில மந்திரிகளுக்கு அவஸரமாகவும் இன்றி யமையாதன ஆகவும் ஏற்பட்டன. இப்போது சண்டை முடிந்துவிட்டது. அமெரிக்கா மேலே கடன் கொடுக்ககூடிய மனமில்லாது போய்விட்டதுமல்லாமல் ஜெர்மானியருக்காக ஓதப்பட்ட தர்ம ஸூத்ரங்களையெல்லாம் இங்கிலாந்தும் அனுஸரித்து ஐர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கவேண்டு மென்று பல அமெரிக்கத் தலைவர் வற்புறுத்துகிறார்கள். கடன் கொடுக்கவும் மாட்டானும். நம் கீழேயிருக்கும் தேசத்தைவேறு வெட்டிவிடவேண்டுமென்று வற்புறுத்த வருவானும். தர்ம ஸூத்ரங்களாம்! தர்ம ஸூத்ரங்கள் நம்முடைய எதிரிகளிடமுள்ள குற்றங்களை உலகத்தாருக் கெடுத்துக் காட்டுவதற்கு உதவியாகப் பாதிரிகளாலும் பண்டிதர்களாலும் அமைக்கப்பட்டன. நாம் செய்யும் அநியாயங்கள் நம்முடைய ஸௌகர்யத்துக்கு அவசிய மானவை. ஸௌகர்யத்தைக் குறைத்துக்கொண்டு தர்ம ஸூத்ரங்களைக் கவனிப்பது நமக்குப் பொருந்தாது. இங் ஙனம் பர்யாலோசனை செய்து ஆங்கிலேய மந்திரிகள் விடுதலை மறுப்பு விஷயத்தை முன்போல் இன்பமான பாஷையால் மறைத்துவைக்கும் சடங்கைக்கூடக் கைவிட்டு விட்டு முரட்டுப் பாஷையில் கெட்டியாக, ஐர்லாந்துக்கு விடுதலை கிடையா தென்று ஸாதிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஐர்லாந்து விஷய மான ரஸமிகுந்த லண்டன் ராய்ட்டர் தந்தியொன்று நேற்று வந்தது. அதன் விவரமான வடிவத்தை நேற்றை மித்திரன் தந்திப் பக்கங்களிலே காணலாம். மிஸ்டர் ஆஸ்க்வித் (மாஜி ப்ரதம மந்திரி) இங்கிலாந்துக்கு ராணுவ விபத்துக்கள் ஏற்படாதபடி தடைகளேற்படுத்திக்கொண்டு மற்றப்படி ஸம்பூர்ணமான ஸ்வராஜ்யம் கொடுக்கவேண்டுமென்று பார்லிமெண்ட் ஸபையில் சொன்னார்.

எழுந்தார் லாய்ட் ஜ்யார்ஜ் மந்திரி. கத்தியைச் சுழற்றத் தொடங்கிவிட்டார். மெய்யான உருக்குக் கத்தி யன்று; பாஷைக் கத்தி; வாக்கு வாள். ஐர்லாந்துக்கு ஸ்வாதீனம்

கொடுத்தபிறகும் கூடப் பழைய புண்களை மறந்து ஐர்லாந்து இங்கிலாந்திடம் நட்புச் செலுத்துமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் நம்பவில்லை. அவரால் நம்பமுடியவில்லை. குற்ற முள்ள நெஞ்சு குறு குறு குறு குறு என்னுமாம். அவருடைய இனத்தார் பண்ணிய பிழைகளெல்லாம் அவருக்குத் தெரியாதா ? எனினும், ஆங்கிலேயர் தம்மைப் போலப் பிறரையும் நினைத்து ஸித்தாந்தங்கள் ஏற்படுத்துவது தவறென்றும் ஐரிஷ் ஜாதியாருடைய சரித்திரத்தை நோக்கு மிடத்தே, அவர்கள் நெடுங்காலமாகக் கஷ்டப்பட்டுப் பரிசுத்த மடைந்த கூட்டத்தாராதலால், அவர்களுடைய மனம் கல் மனதாக இராமல் நன்ருகக் குழைந்து, பக்குவப்பட்டு, தெய்வ பக்திக்கு வசப்படுவதாகச் சமைந்திருத்தல் விளங்கு கிறதென்றும், ஆதலால், ஐர்லாந்து தனக்கு ஸ்வாதீனம் கிடைத்தால், விரைவிலே இங்கிலாந்தின் பழைய பிழைகளை மறந்து, இங்கிலாந்துடன் உண்மையான நட்புப் பாராட்டியே வருமென்றும் நான் நினைக்கிறேன். ஐர்லாந்துக்கு ஸ்வா தீனம் கொடுத்தால், அந்நாட்டிற்கும், இங்கிலாந்துக்குக் கேடு சூழும் பிற நாடுகளுக்கும் அஃதோர் தூண்டுதலாகுமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லுகிருர். ஐரிஷ் துறைமுகங் களின் பரிபாலனம் இங்கிலாந்தின் கையினின்றும் நழுவு மாயின், அதனுல் இங்கிலாந்தின் ராணுவ சக்திக்குப் பங்கம் நேருமென்கிருர். அங்ஙனம் நேரும்படி செய்யக்கூடிய எந்த ஏற்பாட்டையும் இங்கிலாந்து அங்கீகரிக்க முடியாதென் கிருர்.

மற்றக் குடியரசு நாடுகளுக்குள்ள ஸ்தானம் ஐர்லாந்துக்குக் கொடுக்கவேண்டுமென்று மிஸ்டர் ஆஸ்க்வித் வாயினுல் சொல்லியபோதிலும், அவருடைய உட்கருத்து அப்படியில்லை யென்பதை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் எடுத்துக்காட்டுகிருர். ஏனென்ருல், ஐர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுப்பதில் கடற் சண்டைத் தயாரிப்புக்களுக்கு ஸ்தலங்களாகக் கூடிய துறை முகங்களின் மேற்பார்வை ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரிடம் வைத்துக் கொள்ளலாமென்று மிஸ்டர் ஆஸ்க்வித் சொல்லு கிருர். அப்படியானுல், கனடா, ஆஸ்திரேலியா முதலிய குடியேற்ற அரசுகளின் ஸ்தானத்தை ஐர்லாந்துக்குக் கொடுப்பதாக மாட்டாது. ஏனென்ருல், கனடா, ஆஸ்த்தி ரேலியா முதலிய குடியேற்ற நாடுகள் தம் துறைமுகங்களின் மீது பரிபூர்ணமான, வகுக்கப்படாத தனியதிகாரம் செலுத்தி வருகின்றன.

மேலும், 1918-ம் வருஷத்தில் ஐர்லாந்து தேசத்து "ஸின்பீன்" கக்ஷியார் ஜெர்மனியுடன் கலந்து ப்ரிடிஷ் அரசாட்சிக்கு விரோதமாக நடத்திய சூழ்ச்சிலையப்பற்றிய அறிக்கையொன்று சீக்கிரத்தில் ஸர்க்காரால் ப்ரசுரம் செய்யப் படுமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தெரிவித்தார்.

ஐர்லாந்து தேசத்துக் கடல் துறைகள் ப்ரிடனுக்கு எத்தனை விபத்தாக மாற்றத்தக்கன வென்பதும், "ஸின்பீன்"கள் அவற்றை எங்ஙனம் பயன்படுத்தச் சதியாலோசனை நடத்தி னார்களென்பதும், அவர்கள் அங்ஙனம் பயன் படுத்த முடியாமற்போயின தெப்படியென்பதும், அவர்களை இங்கி லாந்து தன் கைக்குள் இறுகப் பிடித்துக்கொண்டிராவிட்டால் இன்னும் அப்படியே வேலை செய்வார்களென்பதும் ஸர்க்கார் ப்ரசுரம் செய்யப்போகிற அறிக்கையில் நன்ருக விளங்குமாம். ஆதலால், ஐர்லாந்தை இறுகப் பிடித்துக்கொண்டிருக்கும் கைப்பிடியை நெகிழவிடப் போவதில்லையென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லுகிருர்.

இங்கு,

"மீ தெழும் மொக்குளன்ன யாக்கையை
விடுவ தல்லால்
சீதையை விடுவ துண்டோ, இருபது திண் தோள்
உண்டா(க) ?"

(நீர்மீதெழும் குமிழி போன்ற இந்தச் சரீரத்தை விட்டா லும் விடுவேனேயல்லாமல், என் உறுதியான தோள் இருபது மிருக்கையிலே, நான் ஸீதையை விடுவேனென்று நினைக்கவும் செய்யலாமோ ?)

என்று ராவணன் சொல்லியதாகக் கம்பர் எழுதியிருக்கிற வரிகள் எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றன. ராவண னுடைய கதி மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கும் வரக்கூடாதென்று நான் மனப்பூர்வமாகக் கடவுளை வேண்டுகிறேன். ஐர்லாந்து தன் கடற் படையையும் நிலப்படையையும் தன் இஷ்டப்படி சமைத்து நடத்துவதென்ற அம்சம் சேர்ந்த எந்த ஏற்பாட் டையும் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் எந்தக் காலத்திலும் ஒப்புக்கொள்ள முடியாதென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தெரிவிக்கிருர். இந்த விஷயத்தை ஐயந்திரிபற, மிகத் தெளிவாக, எல்லோரும் உணரும்படி அழுத்திச் சொல்ல விரும்புவதாகவும் அவர் தெரிவிக்கிருர். எந்தக் காலத்

துக்குமா ? அதாவது, யுகாந்தம் வரைக்குமா ? உலக முடிவுவரை, எப்போதுமே, ஐர்லாந்துக்குத் தன் இஷ்டப்படி படை சமைத்துப் பராமரிப்பதாகிய, மற்றக் குடியேற்ற நாடுகளுக்குள்ள, உரிமை கிடைக்கக்கூடாதென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லுவது எனக்கு ஒரு பக்கத்தில் வருத்தத்தையும் மற்றொரு பக்கத்தில் நகைப்பையும் விளைவிக்கிறது. விரைவில் ஐர்லாந்தின் விஷயத்துக்கு ஒரு முடிவேற்பட வழியில்லாமலிருப்பது பற்றி வருத்தமும், இப்படிப்பட்ட மந்திரிகள் வசம் இங்கிலாந்து அகப்பட்டுக்கொண்டு தாழ்வடைகிறதென்று வருத்தமும், மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் உலக முடிவுவரை ஐர்லாந்தை அடிமைப்படுத்தி ஆளமுடியுமென்று நம்புவதை எண்ணுமிடத்தே பெரு நகைப்பும் தோன்றுகின்றன. இரும்புருளையா, நம் இஷ்டமானவரை நமது காலடியிலே போட்டிருப்பதற்கு ! மனிதர் கூட்டமன்றோ ? உலகமெங்கும் ஸமத்வ ஞானத்தை வற்புறுத்துவதாகிய கல்வித் தீ ஓங்கிக்கொண்டிருக்கையிலே ஒரு கூட்டத்தார் மற்றொரு பிரமாண்டமான லக்ஷக்கணக்கான ஜனக் கூட்டத்தை எத்தனை காலம் தாழ்ந்த நிலையிலே அழுத்தி வைத்துக்கொண்டிருத்தல் ஸாத்யப்படும் ?

குடியேற்ற நாடுகளைப்போன்ற ஸ்தானம் ஐர்லாந்துக்குக் கொடுத்தால் உடனே மிகவும் எளிதாக, ஆறு லக்ஷத்துக்கு மேல் ஏழு லக்ஷம் வரை கட்டாய ராணுவ ஸேவகம் விதித்து ஐர்லாந்தியர் பெரிய ஸேனை அமைத்துக்கொள்வார்களென்றும், அதினின்றும் இங்கிலாந்திலும் கட்டாய ராணுவ ஸேவகம் விதிக்க நேருமென்பதைத் தொழிற் கக்ஷியார் உணர்ந்துகொள்ள வேண்டுமென்றும் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் எச்சரித்தார். இதில், மிகவும் ரசமான உபகதையொன்று கிளைக்கிறது. அதாவது, கட்டாய ஸேவகம் வருமென்று பயமுறுத்துவதில் மிஸ்டர் ல்லாய்ட் ஜ்யார்ஜ் தொழிற் கக்ஷியாரை மட்டும் பெயர் குறிப்பிட்டுப் பேசியதின் நியாயமென்ன ? ஐர்லாந்துக்கு விடுதலை வேண்டுமென்பதில் அனுதாபமுடையோர், இங்கிலாந்தில் தொழிற் கக்ஷியாரிடையே மாத்திரந்தானா இருக்கிறார்கள் ? மற்றக் கக்ஷியாரிடையே கிடையாதா ? திருஷ்டாந்தமாக, ஸர்க்கார் உத்தியோகம் கிடைக்கும்வரை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தாமே, ஐர்லாந்தின் விடுதலைக்காக மனமுருகிக் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கவில்லையா ? எனவே, தொழிற் கக்ஷியாரைப் பெயர் சொல்லிக் குறிப்பிட்டதன் காரணம் யாதென்றால், கட்டாய ராணுவ ஸேவகம் சட்டமாகும் பக்ஷத்தில் அது மற்றத் திரவியவந்தர்,

வியாபாரிகள், உபாத்தியாயர், மந்திரிகள் முதலிய வகுப்பி னரைத் தீண்டுவதைக் காட்டிலும் ஏழைத் தொழிலாளி களையே அதிகமாகத் தீண்டுமென்ற விஷயம் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜின் மனதிலிருந்தது. அது அவரை மீறியே, வேறொரு விஷயத்தைப் பற்றிப் பேசுகையில், அவர் நாவிற்கு வந்து விட்டது. இது நிற்க, ஐர்லாந்தின் விஷயமாக மந்திரி லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லும் விஷயங்களை மீட்டும் கவனிப்போம்.

மேலும், ஐர்லாந்திலேயே, (ப்ராடஸ்டெண்ட்) வர்க்கத் தாரின் தொகையும் செல்வாக்கும் மிகுதிப்பட்டதுவும், இங்கிலிஷ் ஆட்சிக்குச் சார்பாக நின்று பொது ஐரிஷ் விடுதலையை எதிர்ப்பதுவுமாகிய அல்ஸ்டர் மாகாணத்தை அதன் ஸம்மதத்துக்கு மாறாக எந்தப் பார்லிமெண்டுக்கும் (அதாவது, ஐரிஷ் பார்லிமெண்டுக்கு) உட்படுத்துவதாக உத் தேசங் கிடையாதென்பதை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் அழுத்திக் கூறினார். அல்ஸ்டர் மாகாணத்துக்குத் தனிப் பார்லி மெண்ட் கொடுப்பதே, ஒற்றுமையை நிலை நிறுத்துவதற்குத் தக்க உபாயமென்று தெரிவித்தார். எந்த ஒற்றுமையை? ஐரிஷ் ஒற்றுமையையா! ஒரு தேசத்துக்கு இரண்டு பார்லி மெண்ட் கொடுத்து, அந்தத் தேசத்தை ஒற்றுமைப்படுத்துவது விநோதமான வழிதான். லண்டனில் ஒரு பார்லிமெண்ட், மாஞ்செஸ்டரில் ஒரு பார்லிமெண்ட் வைத்து இங்கிலிஷ் ஒற்றுமையை அதிகப்படுத்தலாமென்ற யோசனையை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் அங்கீகாரம் செய்வாரா? ஐரிஷ் சுங்கத் தீர்வையும் வருமான வரியும் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரின் ஆதிக்கத்தின் கீழேதான் வைத்துக்கொள்ளப் போகிறார் களாம். அதுவும் இன்றியமையாததுதானென்பதற்கு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஏதேதோ நொண்டி முகாந்தரம் சொல்லுகிறார்.

இந்தக் கொள்கைகளுடனே இவர்கள் செய்யப்போகிற ஸ்வராஜ்யச் சட்டத்தை ஐர்லாந்துவாஸிகள் தடி முனையாலே கூடத் தீண்டமாட்டார்கள். இதை ஐர்லாந்தில் யாரும் சிறி தேனும் அங்கீகாரம் செய்து கொள்ள மாட்டார்களென்பதை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தாமே அங்கீகரிக்கிறார். அங்ஙனம் அவர் அங்கீகாரம் புரிந்தும், அவரும் அவருடைய கூட்டத் தாரும் பார்லிமெண்டில் ஸ்வராஜ்ய மசோதா வொன்றைக் கொண்டு விட்டுக் கொண்டு, முதல் வாதம், இரண்டாம் வாதம் முதலிய விளையாட்டுகளில் ஏன் வீணாக நேரத்தைச்

செலவிடுகிருர்களென்ற விஷயம் எனக்கர்த்தமாகவில்லை, ஒரு வேளை ஒரு நிஷ்ப்ரயோஜனச் சட்டத்தை மிகவும் படாடோபங்களுடன் செய்து முடித்துக் கையில் வைத்துக் கொண்டே :—“ நாங்களென்ன செய்வோம் ? ஐர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கப் போனேம். அவர்கள் வாங்கிக் கொள்ள மறுக்கிருர்கள். எனவே எங்கள் பொறுப்புக் கழிந்தது ” என்று சொல்லித் தங்கள் மனஸாக்ஷிக்கும் அமெரிகர் முதலியவர்களின் கூக்குரலுக்கும் ஒரு கழிப்புக் கழித்து விடலாமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜும் அவருடைய நண்பர்களும் நினைப்பதாகத் தோன்றுகிறது.

ஆனல், இங்ஙனம் நாடகம் காட்டுவதிலிருந்து ஐர்லாந்து வாஸிகள் ஸமாதான மெய்த மாட்டார்களென்பதையும், ஐர்லாந்தில் ஸமாதானமேற்படும்வரை, இங்கிலாந்திற்கு ஸமாதானம் ஏற்பட வழியில்லை யென்பதையும் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஒருங்கே மறந்து விட்டது பற்றி வருத்தப்படுகிறேன்.

---

## 19

## ஐர்லாந்தும் இந்தியாவும்

மஹாயுத்தம் நடக்கும் காலத்தில், எடிஸன் என்ற அமெரிக்க மின்ஸார சாஸ்திரியின் விலையுயர்ந்த ஆராய்ச்சிக் கூடமொன்று தீப்பட்டெரிந்து போயிற்று.

அதுபற்றிச் சில நண்பர்கள் அவரிடம் துக்க விசாரணை புரிந்து கடிதமெழுதியிருந்தார்கள். அதற்கவர் சொன்னர்:— “ என் கஷ்டம் ஒரு கஷ்டமா ! அதோ ! ஜெர்மனியில் கைஸர் சக்கரவர்த்தி இருக்கிருர், பாருங்கள். அவர் ஒருவரையும், அவருடைய பலமற்ற துணைவர் ஓரிருவரையும் எத்தனையோ அரசுகள்கூடி எத்தனையோ வகைகளால் போர் புரிகின்றன. அந்த ஒரு மனிதர் என்ன செய்வார், பாவம் ! எனவே எனக்கு ஏதேனும் ஸங்கடம் நேரும் போதெல்லாம் நான் நம்மைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிக பயங்கரமான விபத்துக்களாலே சூழப்பட்டிருக்கும் கைஸரை நினைத்து மனந்தேறுகிறேன் ” என்ருராம்.

அக்காலத்தில் இக்கதை வெளியிடப்பட்டிருந்தது தொடர்ச்சியாகப் பத்திரிகை படித்து வரும் நண்பர்களிலே பலருக்கு ஞாபகமிருக்கலாம். அதுபோல், இந்தக் காலத்தில் நாம் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜைச் சூழ்ந்திருக்கும் ஸங்கடங்களின் தொகையையும் அளவையுங் கருதி நம்முடைய கஷ்டங்களை மறக்க முடியுமென்று தோன்றுகிறது.

ஐர்லாந்துக்கு ஏறக்குறைய இந்த முறை ஸ்வராஜ்யம் கொடுத்துத்தான் தீரவேண்டுமென்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் அமெரிக்கா சும்மாவிடாது. கனடா சும்மா விடாது. ஆஸ்திரேலியா, தென் ஆபிரிகா, நியூஜிலாந்து முதலிய குடியேற்ற நாடுகள் பொறுத்திருக்க மாட்டா. ப்ரான்ஸிடம் விடுதலைப் ப்ரஸங்கங்களை விரிக்க இங்கிலாந்துக்குச் சிறிதேனும் இடமில்லாமற் போய்விடும். உலக முழுமையிலும் அபகீர்த்தி முற்றும். இங்கிலாந்தின் சத்துருக்கள் பெருமகிழ்ச்சியடைய ஹேதுவுண்டாகும். இத்தனை உதவிகளுமில்லாது போயினும் இப்போது ஸ்வராஜ்யம் கொடுக்காவிட்டால், ஐர்லாந்து சும்மா இராது. ஸ்வராஜ்யத்தை வற்புறுத்தும் பொருட்டு ஐர்லாந்தியர் ஐர்லாந்திலும், லண்டன், மான்செஸ்டர் முதலிய நகரங்களிலும் என்ன கார்யங்கள் செய்து வந்தன ரென்பதும், அதனால் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் முதலியோருக்கு நேர்ந்த அஸௌகர்யங்கள் எவையென்பதும் நேயர்களுக்குத் தெரிந்த சங்கதிகளேயாம்.

இத்தனைப் பலாத்காரங்களைக் கருதி ஸ்வராஜ்யம் கொடுத்துத் தொலைப்போம் எனிலோ, வட ஐர்லாந்து முதல் மந்திரியாகச் சில தினங்களின் முன்னே முளைத்திருக்கும் ஸர் ஜேம்ஸ் க்ரேக் ஏற்கனவே போர்க் கொடியைத் தூக்கி விட்டார். அல்ஸ்டர் மாகாணத்துக்குத் தனிப் பார்லிமெண்ட் சாசுவதமாக இருக்குமெனில், பிறகு ஐரிஷ் ஸ்வராஜ்யம் என்பதற்கு அர்த்தமே கிடையாது. ஐர்லாந்தை இரண்டாக வெட்டிப் பிறகு ஸ்வராஜ்யம் கொடுப்பதென்றால், என்ன செய்கை அது !

அஃதொருவனை இரண்டாக வெட்டிக் கொன்ற பின்னர் அவனுக்கு மணம் புரிவிப்பதாகக் கூறுதல் போலும். எனவே, அல்ஸ்டர் என்றொரு பதார்த்தம் இருப்பதன் உண்மையை நன்குணர்ந்த ஸ்ரீமான் தெவலேரா, தாம் தமது குடியரசுக் கொள்கையை விட்டு "ஸ்மட்ஸ்" ஸ்வராஜ்யத்தை அங்கீகரிக்க ஆயத்தமாக இருப்பதாகவும், ஆனால் அல்ஸ்டர் தனது தனிப் பார்லிமெண்டை விட்டுவிட வேண்டு

மென்றும் வற்புறுத்தினர். இங்ஙனமிருக்க, முன்பு யூனியனிஸ்ட் தலைவராக இருந்து இங்கிலீஷ் கவர்ன்மெண்டி னிடமுள்ள அளவிறந்த பக்தியால், அதனை எதிர்த்துப் போர் செய்யப் படைகள் தயார் செய்தவராகிய ஸர் எட்வர்ட் கார்ஸனுடைய பட்டத்தில் இப்போதிருக்கும் அல்ஸ்டர் ப்ரதம மந்திரியான ஸர் ஜேம்ஸ் க்ரேக் லண்டன் சமாதான ஸங்கத் திற்குத் தம்மை ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் அழைத்திருப்ப தைக் குறித்துப் பேசிய உதாஸீன மொழிகளை ராய்ட்டர் தந்திரிகளினிடையே காணலாம்.

இங்கிலாந்திலும் லார்ட் டெர்பி முதலியவர்கள் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜைக் கடலில் கவிழ்த்து விடுவதற்குரிய யோசனைகள் இப்போது தீவிரமாகப் புரிவதன் காரணம் ஐர்லாந்திற்கு அவர் ஸ்வராஜ்யங் கொடுத்து விடுவாரோ என்ற பயத்தாலே யன்றிப் பிறிதில்லை.

கான்ஸர்வடிவ் கக்ஷியார் கைவிட்டால் பிறகு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்குப் பஸிபிக் சமுத்திரந்தான் கதி.

இங்ஙனம் ஐர்லாந்து விஷயத்தில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் இருதலைக் கொள்ளி எறும்புபோல இடர்ப்படுதல் ஒரு புறமிருக்க, இந்தச் சமயத்தில் இந்தியராகிய நாமும் அவரிடம் ஒரு செய்தியை மிக நன்கு வற்புறுத்திக் கூறவிரும்புகிறோம்.

அதாவது, ஐர்லாந்தைச் சென்ற பல நூற்றாண்டுகளாக மீட்டும் மீட்டும் போரில் அடக்கி, அதன் விடுதலை வேட்கையை மறுத்து வந்தீர்கள். ஐர்லாந்து மிகச் சிறிய நாடு. உண்மை யில், இப்போது கூட இங்கிலாந்திலே ஐர்லாந்தைப் போரில் மடக்கிவிட முடியும்.

அப்படியிருந்தும், உலக முழுமையிலும் எழுச்சிபெற்றிருப்ப தாகிய, பெரியதோர் தர்மக் கிளர்ச்சியை முன்னிட்டு, ஐர்லாந் துக்குக்கூட இனி ஸ்வராஜ்யமில்லை என்று மறுத்தால் இங்கிலாந்துக்கு ஸாத்யப்படாதென்று தீர்ந்து போய்விட்டது.

அப்படியிருக்க, 5,000 வருஷங்களுக்கு முன்னே வேதாந்தப் பயிற்சி செய்தது; முப்பது கோடி ஜனங்களுடையது; இன்றைக்கும் ஜகதீச் சந்திரர் முதலியவர்களின் மூலமாக உலகத்தாருக்கு நாகரிகப் பாதையிலே வழிகாட்டுவது; பூமண்டல சரித்திரத்திலே வீர்ய முதலிய ராஜ குணங்களில் நிகரற்றதாகிய இந்தியாவுக்கு விடுதலை எப்போது தரப் போகிறீர்கள்?

# 20

## சுதேசமித்திரன் பத்திரிகையும் தமிழ் நாடும்

வடக்கே, ஸ்ரீ காசியினின்றும், தெற்கே தென்காசியினின்றும், இரண்டு தினங்களின் முன்னே, இரண்டு கடிதங்கள் என் கையில் சேர்ந்து கிடைத்தன. அவை யிரண்டும் சிறந்த நண்பர்களால் எழுதப்பட்டன. அவற்றுள் ஒன்று " பஹிரங்கக் கடிதம் ". மற்றது ஸாதாரணக் கடிதம். ஆனால் இரண்டிலும் ஒரே விஷயந்தான் எழுதப்பட்டிருக்கிறது. ஒரே விதமான கேள்விதான் கேட்கப்பட்டிருக்கிறது. அதே கேள்வியைச் சென்னையிலுள்ள வேறு சில நண்பர்கள் என்னிடம் நேராகவும் கேட்டனர். இந்த நண்பர்களுக் கெல்லாம் இங்குப் பொதுவாக மறு மொழி யெழுதிவிடுதல் பொருந்து மென்றும், அவர்களுக்கு இஃது திருப்திகரு மென்றும் நினைக்கிறேன். இவர்களெல்லாரும் என்னிடம் கேட்கும் கேள்வியின் சுருக்கம் பின்வருமாறு :—

" ஒத்துழையாமை விஷயத்தில் உம்முடைய முடிவான கொள்கை யாது ? சுதேசமித்திரன் பத்திரிகை ஒத்துழையாமையைப் பகிரங்கமாகவும் முடிவாகவும் எதிர்க்காவிடினும், அதில் உள்ளூர அபிமான மில்லாதது போல் காணப்படுகிறதே? அப்படியிருக்க, நெடுங்காலத்துத் தேசாபிமானியாகிய நீர் இந்த ஸமயத்தில் அப்பத்திரிகையில் வேலை செய்ய அமர்ந்தது நியாயமா ? " என்று கேட்கிறார்கள்.

இவர்களுக்கு நான் தெரிவிக்கும் உத்தரம் பின்வருமாறு. தென் இந்தியாவில் தேசியக் கக்ஷிக்கு மூலபலமாகச் சுதேசமித்திரன் பத்திரிகையொன்றுதான். ஆரம்பமுதல் இன்று வரை, ஒரே நெறியாக, நிலை தவறாமல் நின்று, வேலை செய்துகொண்டு வருகிற தென்ற செய்தியைத் தமிழ் நாட்டில் யாரும் அறியாதாரில்லை. ஸமீபத்தில் நடந்த கல்கத்தா விசேஷ காங்கிரஸ் தீர்மானங்களில் ஒன்றின் விஷயத்தில் மாத்திரம் ஸ்ரீமான் சுதேசமித்திரன் பத்திராதிபர், பெரும் பகுதியாரின் தீர்மானம் இப்போது கார்யத்தில் நிறைவேற்ற முடியாதென்று சொல்லும் ஸ்ரீயுத விபின சந்த்ரபாலர், சித்த ரஞ்ஜனதாஸர் முதலிய பழுத்த தேசாபிமானத் தலைவர்களின் கொள்கையை ஆமோதிக்கிறார். ஒத்துழையாமையைத் தவிர தேச விடுதலைக்குச் சரித்திர பூர்வாங்கமான வேறு வழிகள் இருக்கின்றன. இந்த ஒத்துழையாமை முறையையே மிகவும் உக்ரமாகவும், ' தீர்வை மறுத்தல் ' முதலிய

அதன் இறுதிப் படிகளை உடனே உட்படுத்தியும், அனுஷ்டித்தால், ஒரு வேளை அன்ய ராஜாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்வதாகிய பயன் அதனால் விளையக்கூடும்.

எனினும் இப்போது காண்பிக்கப்பட்டிருப்பதாகிய முதற் படியின் முறைகளால் அந்தப் பயன் எய்துவது ஸாத்தியமில்லை. தேசாபிமானிகள் மாத்திரமே சட்டசபை ஸ்தாபனங்களைப் பகிஷ்காரம் செய்ய மற்ற வகுப்பினர் அந்த ஸ்தானங்களை யெல்லாம் பிடித்துக்கொள்வதினின்றும் இந்தியாவில் ஆங்கில ஆட்சியை ஸ்தம்பிக்கச் செய்தல் அரிதென்று தோன்றுகிறது. இங்ஙனமே வக்கீல்கள் தம் உத்தியோகங்களையும், பிள்ளைகள் படிப்பையும் விடும்படிச் செய்தல் இப்போது நம்மால் முற்றிலும் ஸாதிக்க முடியாத விஷயமாகத் தோன்றுவதுடன், அதனால் குறிப்பிட்ட பயனெய்திவிடுமென்று தீர்மானிக்கவும் இடமில்லை.

என்னுடைய சொந்த அபிப்பிராயப்படி, ஸ்வதேசியக் கொள்கைகளை மேன் மேலும் தெளிவாகவும், உறுதியாகவும் ஜனங்களுக்குள்ளே பிரசாரம் புரிவதும், ராஜரீகச் சதுரங்க விளையாட்டில் ஸமாதானமாகவே, எதிரி கலங்கும்படியானதோர் ஆட்டமாடி, ஸரியான சமயத்தில் ஸ்வராஜ்யத்தைக் கட்டியெடுத்துக்கொள்ள முயற்சி புரிவதுமே—சரித்திர சம்மதமான உபாயங்களாகும். இந்த முறையில் ஜனங்கள் சட்டத்தையுடைக்கவும், அதிகாரிகள் யந்திர பீரங்கிகளை வைத்துக்கொண்டு ஜனங்களைச் சூறையாடுவதும் நேருமென்ற ஸம்சயத்துக் கிடமில்லாமலே வேலை செய்யமுடியும். ஏனைய முறைகள் நாட்டைக் குழப்பத்திலே கொண்டு சேர்க்கவும் கூடும். ராஜ வீதி இருக்கையிலே சந்து, பொந்துகளின் வழியாக ஏன் செல்லவேண்டும்? குழப்பம் சிறிதேனும் நேராதபடிக்கே, நமக்கு ஸ்வராஜ்யம் கிடைக்கும்படி காலதேச வர்த்தமானங்களும், தெய்வ சக்தியும் நமக்கனுகூலமாக இருப்பது வெளிப்படையாகவும் நிச்சயமாகவும் தெரியும் போது, பல இந்தியருக்குப் பிராணச் சேதமும் மற்றப் பெருஞ் சேதங்களும் விளைக்கக்கூடிய குழப்ப வழியில் நாமேன் போகவேண்டும்? ஸ்ரீமான் காந்தியின் கூட்டத்தாரும் உண்மையாகவே தேச நலத்தை விரும்புகிறார்களாதலால் சுதேசமித்திரன் பத்திரிகை அவர்களை எவ்வகையிலும் புண்படுத்த மனமில்லாமல், ஸ்வ ஜனங்களென்ற அன்பு மிகுதியால் அவர்களை இயன்ற வரை ஆதரித்துக்கொண்டும் வருகிறது. அபிப்பிராய பேதமுடையவர்களும் தேசாபி

மானிகளாக இருப்பாராயின், அவர்களை நாம் மிக மதிப்புடன் நடத்த வேண்டுமென்ற நியாயத்துக்கு, இத்தருணத்தில், சுதேசமித்திரன் பத்திரிகை ஓரிலக்கியமாகத் திகழ்ந்து வருகிறது. இங்ஙனம் பெருந்தன்மை பாராட்டும் பத்திரிகையைக்கூட மஹாத்மா காந்தியின் புது முறையை முற்றிலும் அனுஷ்டித்துத் தீரவேண்டுமென்ற கருத்துடைய என் நண்பர் சிலர் பொதுமையும், தீர்க்காலோசனையுமின்றிப் பல வழிகளிலே பழி கூறி வருவதைக் காணுமிடத்து எனக்கு மிகுந்த மன வருத்த முண்டாகிறது. தேச பக்தர்களுக்குள்ளே முடிவான கொள்கைகளைப் பற்றியன்று; வெறுமே தற்கால அனுஷ்டானங்களைப்பற்றி அபிப்பிராய பேத முண்டாகும்போது, உடனே பரஸ்பரம் ஸம்சயப் படுதலும் பழி தூற்றுதலும் மிகக் கொடிய வழக்கங்களென்று நான் நிச்சயமாகவே கூற வல்லேன். இந்த நிலைமை என் மனதில் சில வைஷ்ணவர்களுக்குள்ளே வடகலை, தென்கலைச் சண்டைகள் நடப்பதையும், வீடு வெள்ளை பூசுதல் விஷயமான ஓரபிப்பிராய பேதத்தைக் கொண்டு தமக்குள்ளே சண்டை செய்து பிரியும் மதி கெட்ட ஸ்திரீ புருஷரின் நடையையும் நினைப்புறுத்துகிறது.

இந்தக் குணத்தை நம்மவர் அறவே விட்டொழித்தாலன்றித் தற்காலம் இந்தியா இருக்கும் நிலையில் நாம், விடுதலைக்காகப் பொது முயற்சி செய்வதில் பல இடுக்கண்கள் விளையக்கூடும். எடுத்ததற்கெல்லாம் ஜாதிப்பிரஷ்டம் செய்யத் தீர்மானிக்கும் குணத்தை நாம் ராஜாங்க விஷயங்களில் செலுத்தினால், பெருங் கேடுகள் வந்து குறுக்கிடும். "உன் வழி உனக்கு; என் வழி எனக்கு" இந்தியாவுக்கு உடனே ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற லக்ஷ்யத்தில் நீயும் நானும் ஒன்று பட்டிருக்கிறோம். எனவே, நாம் பரஸ்பரம் இயன்ற வரையிலெல்லாம் உதவி செய்து கொள்ளக் கடவோம். உதவி புரிதல் இயலாத இடத்தே வெறுமே இருப்போம். ஆனால், எக்காரணம் பற்றியும், நம்முள் பகைக்கவேனும், பழி கூறவேனும், ஸம்சயப்படவேனும், வேறெவ்வகையிலும் இடுக்கண் புரியவேனும் ஒரு போதும், மாட்டோம்" என்ற பரஸ்பர உணர்ச்சி தேச பக்தர்களுக்குள் எப்போதும் குன்றாதிருக்க வேண்டும்.

இவ்வித உணர்ச்சி நம்மவருள் பலப்பட்டுச் சுதேசமித்திரன் முதலிய மேன்மையார்ந்த கருவிகளைப் போற்றிக் கையாண்டு நம்மவரெல்லாம் கூடி முயன்று, பாரதமாதாவின் ராஜரீக

விலங்குகளை நீக்கி, விடுதலை ஏற்படுத்திக் கொடுக்கப்போகிற ஸுதினம்—நல்ல நாள்—எப்போது வரப்போகிறதென்பதை ஒவ்வொரு நிமிஷமும் மிக ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறேன்.

## 21

## சுய ஆட்சியைப் பற்றி ஒரு யோசனை

பாரத நாட்டுக்கு உடனே சுய ஆட்சி கொடுக்கவேண்டுமென்ற கருத்துடன் ஒரு பெரும் விண்ணப்பம் தயார் செய்து, அதில் மாகாணந்தோறும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் கையெழுத்துப் போட்டு இந்த க்ஷணமே ப்ரிடிஷ் பார்லிமெண்டுக்கு அனுப்பவேண்டும்.

ஐரோப்பாவில் நடக்கும் யுத்த நெருக்கடியிலே நாம் உள்நாட்டுத் திருத்தங்களுக்கு மன்றாடுவதனால் நாம் ப்ரிடிஷ் ராஜாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய கடமை தவறிப் போகுமென்று சொல்லி நமது முன்னேற்றத்தைத் தடுக்க விரும்புவோரின் அர்த்தமில்லாத வார்த்தையைக் கருதி இக்காரியத்தை நிறுத்தி வைக்கலாகாது.

அயர்லாந்து, போலந்து என்ற தேசங்களின் திருஷ்டாந்தத்தைக் காட்டலாம்.

புதுச்சேரி,<br>அநலம் வைகாசி 7 } சி. சுப்பிரமணிய பாரதி.

**குறிப்பு.**—முதல் உலகயுத்தம் நடந்து கொண்டிருந்தபோது பாரதியார் இந்த யோசனையைக் கூறியிருக்கிறார். அயர்லாந்து, போலந்து தேசங்கள் தங்கள் விடுதலைக்காக அந்தச் சமயத்திலும் முயற்சி செய்து கொண்டிருந்தன. யுத்தம் நடப்பதால் இம் முயற்சியை அவை நிறுத்தி வைக்கவில்லை.

---

## ஒரு கோடி ரூபாய்

ஸெப்டம்பர் மாஸத்துக்குள் ஸ்வராஜ்யம் கிடைப்பதற்கு ஒரு கோடி ரூபாய் இன்றியமையாததென்றும், அது கொடுக்கா விட்டால் இந்தியா தேசத்து ஜனங்கள் ஸ்வராஜ்யத்தில் விருப்ப மில்லாத தேசத் துரோகிகளே யாவர்களென்றும் ஸ்ரீமான் காந்தி முதலியவர்கள் சொல்லிக் கொண்டு வந்தனர்.

ஜனங்கள் ஒரு கோடி ரூபாய் கொடுத்து விட்டார்கள். அந்தத் தொகை எங்ஙனம் செலவிடப்படுகிறது ? எப்போது செலவு தொடங்கப் போகிறார்கள் ? ஒரு மாஸத்திலோ,

இரண்டு மாஸங்களிலோ, அன்றி இன்னும் ஒரு வருஷத்துக்குள்ளேயோ, ஸ்வராஜ்யம் கிடைக்கவேண்டுமாயின், அந்தத் தொகை ஏற்கெனவே செலவு தொடங்கியிருக்க வேண்டு மன்றோ ?

" ஒரு கோடி ரூபாய் கிடைத்தால்தான் ஸ்வராஜ்யம் வரும் " என்று சொல்லப்பட்ட வார்த்தைக்கு ஒரு பொருள்தான் உண்டு. அதாவது, அந்தப் பணம் ப்ரசாரத் தொழிலிலே செலவிடப் படவேண்டும். நாமோ பலாத்கார முறையை அனுஸரிக்கவில்லை. எனவே, அந்தக் கோடி ரூபாயை ஸைந்யச் செலவுக்கு உபயோகப் படுத்துவதென்ற ஆலோசனைக்கு இடமில்லை. எனவே, ப்ரசாரத் தொழில் ஒன்று தான் கதி. மேற்படித் தொகையில் ஒரு பகுதிக்கு ராட்டினங்கள் வாங்கி ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கருதினால் அங்ஙனம் தாராளமாகச் செய்யலாம். வேறு எத்தனை வகைகளில் செலவு செய்ய விரும்பினாலும் செய்யலாம். ஆனால் அத்தனைக்கும் ஆதாரமான மூலவழி ப்ரசாரந்தான் என்பதை மறந்துவிடக் கூடாது,

ஏற்கெனவே, ப்ரசாரத்தில் இத் தொகையை எங்ஙனம் செலவு செய்யலா மென்பதைக் குறித்துச் சில வழிகள் இப்பத்திரிகையிலே குறிப்பிட்டிருக்கிறேன். ஜில்லாவுக்கு 4 பேருக்குக் குறையாமல் மஹா நிபுணரான ஸ்வதேசீய ப்ரசாரகர் ஏற்படவேண்டும்.

ஆனால், ப்ரசாரத் தொழில் இதுவரை தொடக்கமுறாமல் இருப்பதன் காரணம் யாதென்பது துலங்கவில்லை.

இந்த விஷயத்தைக் குறித்துச் சென்னை மாகாணத்தில் வசூல் தொழிலை முக்கியஸ்தராக இருந்து நடத்திய என் நண்பர் ஸ்ரீ சேலம் ராஜகோபாலாசார்யரும் பிறரும் ஸ்ரீமான் மஹாத்மா காந்திக்கெழுதி வேண்டியன செய்வார்களென்று நம்புகிறேன்.

மற்றப்படியுள்ள காங்கிரஸ் ஸங்கங்களின் அங்கத்தினரும் அனுதாபிகளும் மிகவும் சிரமப்பட்டு வசூல் செய்யப்பட்ட மேற்படித் தொகை வீணாய் விடாதபடிக் கவனிக்க வேண்டும். உலக சரித்திரத்தில் இந்தச் சந்தர்ப்பம் மிக முக்கியமானது. இதில் உலக முழுமையிலும் பல அற்புதமான மாறுதல்கள் தோன்றிவருவது மாத்திரமே யன்றி, உலகத்திலுள்ள தேசங்களுக் கெல்லாம் விடுதலை பொதுவாகி விடுமென்றும் புலப்படுகிறது. இத்தருணத்தில் விரைவிலே இந்தியா எங்ஙனமேனும் தன் ஸ்வதந்த்ரத்தை உறுதி செய்து கொள்ளுதல்

அதன கடமையாம். இதுவே, நமது தேசத்தில் பொது ஜனங்களின் மனதில் எப்போதும் விடாமற் பற்றியிருக்கும் பேராவலாகி விட்டது. அது பற்றியே, மஹாத்மா காந்தி கேட்ட போது, ஜனங்கள் சிறிதேனும் லோபத்தன்மை யின்றித் தங்கள் அளவிறந்த வறுமையையும் பாராட்டாமல், பணத்தை யதேஷ்டமாகவும் விரைவாகவும் கொடுத்துத் தங்கள் மீது பழிச் சொல்லுக்குச் சிறிதேனும் இடமின்றிச் செய்து கொண்டார்கள்.

ஒப்பந்தத்தில் ஒரு பாதி நிறைவேறிப் போய் விட்டது. அதாவது ஜனங்கள் பக்கத்திலே விதிக்கப்பட்ட கடமை நிறைவேறி விட்டது. இனித் தலைவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டியதைத் தவிர வேறொன்றும் இல்லை.

நாம் இங்ஙனம் எழுதிக் கொண்டு வருகையிலே, ஸ்ரீமான் ராஜகோபாலாசார்யர் ஒரு கணக்கு ப்ரசுரம் செய்திருக்கிறார். அதில் சென்னை மாகாணத்து வசூல் எவ்வளவென்பதையும் அதில் செலவம்சங்கள் எவையென்பதையும் விவரித்துக் கணக்குகள் தெரிவிக்கிறார். அதில் மிகவும் சொற்பமான தொகை யொன்று சுமார் (50,000 ரூபா என்று நினைக்கிறேன்) ப்ரசாரச் செலவுக்காகப் போடப்பட்டிருக்கிறது. இந்த ரூபாய் போதாதென்பது என்னுடைய அபிப்ராயம். ப்ரசார விஷயத்தில் இந்தியா முழுதையும் ஒன்றாகப் பாராட்ட வேண்டும். இந்தியா முழுமைக்கும் ஒரே திட்டம், ஒரே முறைமை, ஒரே ப்ரசார ஸங்கம் தலைமையாக இருந்து இந்த ஸ்வராஜ்ய ப்ரசாரத்தை நடத்தி வராவிட்டால் நமக்கு எண்ணிறந்த ஸங்கடங்கள் விளையும். "கர்மம் உனக்குரியது; நீ பயனைக் கருதுதல் வேண்டா" என்று கண்ணபெருமான் பகவத்கீதையில் சொல்லி யிருப்பதற்கு இக்காலத்தில பலர் பொருளுணர்ந்து கொள்ளமாட்டாதவர்களாக இருக்கின்றனர்.

பயனே மனிதருக்குக் கிடைக்காத நிலைமையில் தொழில் புரிய வேண்டுமென்பது கீதையில் சொல்லப் பட்டதாகச் சிலர் நினைக்கிறார்கள். அந்த அர்த்தத்தில் பகவான் அந்த வசனத்தை வழங்கவில்லை என்பது கீதை முற்றிலும் வாசித்துப் பார்த்தவர்களுக்கு மிகவும் நன்றாகத் தெரியும்.

தொழில் புரிந்துவிட்டு வெற்றி அகப்படுமோ அகப்படாதோ என்று எவரும் மனம் புழுங்குதல் வேண்டா. பயனுடைய தொழிலென்று புத்தியாலே நிச்சயிக்கப்பட்ட தொழிலை, ஒருவேளை அது பயன் தாராதோ என்ற பேதை ஸம்சயத்தால் நாம் நிறுத்தி வைத்தல் தகாது. தொழிலுக்குப் பயன

நிச்சயமாக உண்டு. கடவுள் பின்னொரு பகுதியிலே சொல்லுகிறார் :—" பார்த்தா, தொழிலுக்கு வெற்றி இந்த உலகத்தில் மிகவும் விரைவாகவே எய்தப்படும் " என்று. தவிரவும் " மகனே, நற்றொழில் புரிந்த எவனும் இவ்வுலகத்தோடு தீ நெறி எய்துவதில்லை " என்று பின்னே கடவுள் மற்றோரிடத்தில் விளக்கியிருக்கிறார்.

எனவே வெற்றியைக் கடவுளின் ஆணையாகக் கண்டு பயனைப் பற்றி யோசனையே புரியாமல், நம்மவர் ஸ்வராஜ்யத்துக்குரிய தொழில்களை இடைவிடாமல் செய்துகொண்டு வரக்கடவர்.

அதனை உடனே தொடங்கவும் கடவர். அதில் திரிகரணங்களை மீட்சியின்றி வீழ்த்தி விடவும் கடவர்.

## விடுதலை

திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்கிற மூன்று புருஷார்த்தங்களையும் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறளுக்குள் பாடிக் காட்டிய திறமையைக் கண்டு வியந்து சிலர் ஔவையாரிடம் சொன்னார்களாம். ஔவையார் நான்கு புருஷார்த்தங்களையும் ஒரே வெண்பாவுக்குள் பாடிக் காட்டினாளாம்.

> ஈதல் அறம் தீவினை விட்டீட்டல் பொருள் ; எஞ்ஞான்றும்
> காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
> பட்டதே யின்பம் ; பரனைநினைந் திம்மூன்றும்
> விட்டதே பேரின்ப வீடு.

கொடுப்பது தருமம்.

பாட்டைக் கொடுத்தாலும் சரி ; நாட்டைக் கொடுத்தாலும் சரி ; பணம், கல்வி, மருந்து, தைரியம், ஏதேனுமொரு நல்ல பொருளை உடையவன் வேண்டியவனுக்குக் கொடுத்தால் அஃதறம். உலகத்தில் ஸாமான்ய மனிதனைச் சூழ்ந்து மிக்கோர், ஸமானஸ்தர், தாழ்ந்தோர் என மனிதர் மூன்று வகையாகக் காணப்படுகிறார்கள். இந்த மூன்று திறத்தாருக்கும் அவன் கொடுக்க வேண்டிய கொடைகள் காலம், தேசம், இவற்றுக்குத் தக்கபடி அந்தந்த விதமாக மாறி

நிற்கும். இன்னின்ன காலத்தில் இன்னின்னாருக்கு இன்னின்ன பொருள் கொடுக்க வேண்டுமென்பது தார்மிஷ்டனுக்கு ஸ்வபாவத்திலேயே தெரியும். சேர்க்கப்படுவது செல்வம். மனிதனுக்கு இன்பம் தரும் பண்டங்களையும் அவற்றைக் கொள்வதற்கு நல்ல கருவியாகிய பொன்னையும் சேகரித்து வைக்க வேண்டும். இடைவிடாமல் சேர்க்க வேண்டும். கை பற்றினபடியாகவே இருக்க வேண்டும்; ஆனால் தீயகாரியம் செய்து கெட்ட தொழில் செய்து சேர்த்த செல்வம் நிற்காது. செல்வம் சேர்ந்த பிறகு அதன் உரத்தால் பிறருக்குத் தீங்கு செய்வாரும் விரைவிலே கெடுவார். "அல்லற் பட்டாற்றாது அழுதகண்ணீ ரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை" என்று திருவள்ளுவரும் சொன்னார். துன்பப்பட்டார் அது பொறுக்காமல் அழும் கண்ணீரானது, அந்தத் துன்ப முண்டாக்கியவனுடைய ஐசுவரியத்தை அறுத்தெறியும் ஆயுதமாகும். செல்வம் இனிது. அது முயற்சியினால் சேர்க்கப்படுவது. பயனுள்ள தொழிலே மேன்மேலும் ஊக்கத்துடனும் அறிவுடனும் செய்வதால் பொருள் பெருகும். தீயது செய்தாலன்றிப் பொருள் தேடமுடியாதென்று மூடர் நினைக்கிறார்கள். தீயது செய்யாத படி சேகரிப்பதே பொருளென்றும், மற்றையது பல துன்ப முண்டாக்கி விரைவிலே அழிந்து போவதோர் மருளென்றும் ஔவை சொல்லுகிறாள்.

பெண்ணும், ஆணும் அன்பு கொண்டு வாழ்வது இன்பங்களிலெல்லாம் சிறந்த இன்பம். உணவும், ஸ்நானமும், பூவும், சந்தனமும் முதலிய இன்பங்களெல்லாவற்றைக் காட்டிலும் காதலின்பமே சிறந்தது. காதலுடைய இருவர் கருத்திலே ஒன்றுபட்டவராய் ஆதரவு கொள்ளும் நிலையை மனிதர் கட்டுப்பாடுகளாலும், பணச் செருக்காலும், அநீதியாலும் பெற விரும்புகிறார்கள். ஆண் பெண் உறவினால் வரும் துன்பந்தான் மனிதருக்கு இவ்வுலகத்தில் மற்றெல்லாத் துன்பங்களைக் காட்டிலும் அதிகமாக ஏற்பட்டு விட்டது. விவாக முறையைச் சில தேசங்களில் நரகம்போலே செய்து விட்டார்கள். தெய்வம் கொடுக்கும் இன்பத்தை மனிதர் அறியாமையாலும், பாபசிந்தையாலும் துன்பமாக மாற்றிக் கொள்ளுகிறார்கள்.

தெய்வத்தை நம்பி மேற்படி மூன்றனுள் எதுவும் இன்றியமையாததில்லையென்று கொண்டு, வருவதுதானே வருமென்று சொல்லி, எல்லாம் தெய்வத்தின் செய்கை

யாதலால் நமக்கெவ்விதமான பொறுப்புமில்லையென்று நடப்பதே விடுதலை இன்பம். துன்பம் எது நேர்ந்தாலும் சரியென்று மனக்கவலையை ஒரேயடியாக நெருப்பிலே போட்டுக் கொளுத்தி விட்டு தெய்வத்தின் நினைப்பே கதி யென்று நிற்பது விடுதலை. "எல்லாத் தருமங்களையும் விட்டு என்னையே சரணடைக" என்று கீதையும் சொல்லிற்று.

இந்த விடுதலை பெற்றவன் பண்டாரமாகிக் கந்தையுடுத்தும் பிச்சை வாங்கித் தின்பானென்று சில பாமர ஜனங்கள் நினைக்கிறார்கள். அது முற்றிலும் தவறு. ஆயிரத்திலொரு ஜீவன் முக்தன் பண்டார வழியிலே சென்றாலும் செல்லக் கூடும். ஆனால் அதுவே மார்க்கமென்று நினைத்துவிடக் கூடாது. ஜனகன் ஜீவன் முக்தி பெற்று ராஜ்யமாண்டான். அர்ஜுனனும் அப்படியே ரிஷிகளெல்லாரும், பெண்டு பிள்ளைகளுடன் சுகமாக வாழ்ந்தார்கள். விடுதலை பெற்றவர் எந்தத் தொழில் செய்தாலும் செய்வார்கள். ஆனால் அந்தரங்க நம்பிக்கை தெய்வமொன்றினிடத்தேயே செலுத்தி வாழ்வார்கள். "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முக்தர் மனமிருக்கு மோனத்தே" என்பது முன்னோர் வாக்கு. பரனை நினைந்து முன் மூன்றையும் விட்டு விடுதல் இன்பமென்று ஔவை கூறினாள். பற்று விட்டிருப்பதே விடுதலை. உள்ளத் துறவே துறவு. உள்ளத் துறவுடைய மனிதனை நாம் என்ன அடையாளத்தாலே கண்டு பிடிக்கலாம்? பக்தி முதிர்ச்சிக்கு எது தவறாத லக்ஷணம்? "அஞ்சாதே!" என்றது வேதம். பயம் நீங்கி யிருப்பதே விடுதலைக்கு லக்ஷணம். ஒருவன் உண்மையாகவே தெய்வத்தை நம்பினானா வீணுக்குச் சொல்லுகிறானா என்பதை அறிய வேண்டுமானால் ஆபத்து வேளையிலே பார்க்க வேண்டும். ஆபத்து நேரும் போது நெஞ்சு நடுங்காம லிருப்பவன் ஞானி, பக்தன், முக்தன், மரணத்துக் கஞ்சாதவன் தெய்வத்தை உண்மையாகச் சரணமடைந்தவன். தெய்வத்தை நம்பினால் தீமை நமக்கு வாராதென்பதை ப்ரத்யக்ஷ ஞானமாகக் கொண்டு ஜீவன் முக்தர் எந்தப் பதவியிலிருந்த போதிலும் நிகரற்ற வீரராக விளங்குவார்.

# 22

## ஏன் ?

### குழு

'குழு' என்ற பழைய தமிழ்ச் சொல்லுக்குக் 'கூட்டம்' என்று அர்த்தம். இப்போது மஹாஸபை என்று சொல்வதைப் பழைய தமிழர் குழு என்றனர். தமிழரசர் காலத்தில் ஐந்து குழுக்கள் உண்டு :—

(1) குடிகள் குழு, (2) குருக்கள் குழு, (3) ஜோதிடர் குழு, (4) வைத்தியர் குழு, (5) மந்திரிகள் குழு.

ராஜா செய்யும் விதிகள் இந்த ஐந்து குழுக்களின் அனுமதி பெற்ற பிறகுதான் உறுதிப்படும். குடிகளின் குழுவிலே ஜனங்களின் பிரதிநிதிகள் இருந்தனர். குருக்கள் ஸபையிலே மதத்தலைவரும், சோதிடர் ஸபையிலே கணிதக்காரரும் இருந்து அரசியலானது சாஸ்திரக் கருத்தையும், ஐதுசாரங்களையும் தழுவி நடக்கும்படி ஆலோசனை சொல்லினர். வைத்தியர் குழு நாட்டிலே நோய்கள் பரவாதபடி அரசன் செய்ய வேண்டிய சுத்தி முறைகளைக் கவனிப்பது. மந்திரிகளின் குழு அரசியலின் மூல தர்மங்களிலே தவறு நேரிடாமல் அரசனை நியாய வழியில் நடத்துவது. இந்த விஷயமெல்லாம் நமது நாட்டுப் பழைய சாஸனங்களை ஆராய்ச்சி செய்யும் புராதன பரிசோதனைப் பண்டிதர்கள் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். மணிமேகலை முதலிய பழைய நூல்களிலும் காணலாம். இது நிற்க, 'ஜனங்களுடைய ஸம்மதப்படி ஆட்சி செய்ய வேண்டும்' என்ற கருத்துடன் ஏற்படும் ஸபைகள் இங்கிலாந்து முதலிய தேசங்களில் நாளுக்கு நாள் நாகரீகமும் சீர்திருத்தமும் பெற்று மேன்மேலும் அதிக வலிமையுடன் ஏறி வந்திருப்பதாகச் சரித்திரங்களிலே தெரிகிறது. நமது நாட்டில் இவை விருத்தியடையவில்லை. ஏன் ? எதனாலே ?

---

### நகரம்

வால்ட் விட்மான் என்பவர் சமீபகாலத்தில் வாழ்ந்த அமெரிக்கா (யுனைட்டெட் ஸ்டேட்ஸ்) தேசத்துக் கவி. இவருடைய பாட்டில் ஒரு புதுமை என்னவென்றால், அது

வசனநடை போலேதான் இருக்கும். எதுகை, மோனை, தளை ஒன்றுமே கிடையாது. எதுகை மோனையில்லாத கவிதை தான் உலகத்திலே பெரிய பாஷைகளில் பெரும் பகுதியாகும். ஆனால், தளையும் சந்தமும் இல்லாத கவிதை வழக்கமில்லை. 'வால்ட் விட்மான், கவிதையைப் பொருளில் காட்டவேண்டுமே யல்லாது சொல்லடுக்கில் காட்டுவது பிரயோஜனமில்லை' யென்று கருதி ஆழ்ந்த ஓசைமாத்திரம் உடையதாய் மற்றப்படி வசனமாகவே எழுதிவிட்டார். இவரை, ஐரோப்பியர் காளிதாஸன், கம்பன், ஷேக்ஸ்பியர், மில்டன், தான்தே கெத்தே முதலிய மகாகவிகளுக்கு ஸமான பதவியுடையவராக மதிக்கிறார்கள்.

குடியாட்சி, ஜனாதிகாரம் என்ற கொள்கைக்கு மந்திர ரிஷிகளில் ஒருவராக இந்த வால்ட் விட்மானை ஐரோப்பிய ஜாதியார் நினைக்கிறார்கள்.

எல்லா மனிதரும், ஆணும் பெண்ணும் குழந்தைகளும், எல்லாரும் ஸமானம் என்ற ஸத்யத்தை பறையடித்த மஹான்களில் இவர் தலைமையானவர்.

ஸர்வ ஜகத்தும் ஒரே சக்தியை உயிராக உடையது. ஆதலால், எல்லாம் ஒன்று. ஆதலால் பயத்தை விடு. பிறருக்குத் தீங்கு செய்யாதே. மற்றபடி யெல்லாம் உன் சொந்த இஷ்டப் படி நடந்துகொள். எல்லாரும் ஸமானம். யாருக்கும் பயப்படாதே. கடவுள் ஒருவருக்கே பயப்படவேண்டும். மனிதர் கடவுளைத் தவிர வேறொன்றுக்கும் பயப்படக்கூடாது. இது தான் அவருடைய மதத்தின் முக்கியமான கொள்கை. "எல்லாரும் பரஸ்பரம் அன்பு செய்யுங்கள்" என்ற கிறிஸ்துவின் போதனையை அவர் கவிதையாகப் பலவகைளில் சொல்லியிருக்கிறார். இந்த மஹான் ஒரு நகரம் கற்பனை பண்ணுகிறார். அந்த நகரத்தில் ஆணும் பெண்ணும் சபதத்தில் துஞ்சார். அங்கே, அடிமையில்லை, ஆண்டையுமில்லை, அங்கே ஸ்தானிகர்களின் முடிவற்ற செருக்கைப் பொதுஜனம் உடனே சினந்து எதிர்க்கிறது. அங்கே, நகரத்தான் தலை நகரத்தான் பிரமாணம்; அவனுடைய சம்பளக்காரரே பிரஸிடெண்டு, மேயர், கவர்னர் எல்லாரும். அங்கே குழந்தைகள் தமக்குத் தாமே பதி செய்துகொள்ளவும் தம்மைத் தாமே காத்துக்கொள்ளவும் பயிற்சி பெறுகிறார்கள். அங்கே, பெண்கள் வீதிகளில் ஆண்களைப் போலவே கூட்டங்கூடி ஊர்வலம் வருகிறார்கள். அங்கே பொதுக் கட்டிடங்களில் பெண்கள் ஆண்களுக்கு நிகரான இடம் பெறுகிறார்கள்.

இவ்வாறு வால்ட் விட்மான் கற்பனை பண்ணின நகரத்தைக் கண்முன்னே பார்க்கவேண்டும் என்ற நோக்கத்துடன் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இப்போதுகூட பல ராஜ்ய தந்திரிகளும் மந்திரிகளும் சாஸ்திரிகளும் முயற்சி செய்துகொண்டு வருகிறார்கள்.

பணக்காரன், ஏழை ; உத்யோகஸ்தன், கூலிக்காரன் ; குடி, படை ; ஆண், பெண் ; மூத்தது, இளையது—எல்லாரும் ஒருவர்க்கொருவர் வஞ்சனை, துரோகம், அநியாயம், கொள்ளை, கர்வம், ஹிம்சை, அவமதிப்பு, கொலை முதலிய தீமைகள் செய்யாமல், பரஸ்பரம் அன்புடனும் மதிப்புடனும் நடந்து, எல்லாருக்கும் விடுதலையும் ஸமத்வமும் உள்ளதாகிய நகரம் கண்முன்னே தோன்றுவதை விரும்பாத மனிதனும் உண்டோ ?

## 23

## தாதாபாய் நெளரோஜி

தாதாபாய் நெளரோஜி ஜீவதசைமாறி ஆத்ம தசையடைந்து விட்டார். 92 வருஷம் இந்த உலக வெள்ளத்திலே ஏற்றுண்டு பயன் மாறிப் போன மண் தோணியைக் களைந்து போய்விட்டார். அவருடைய புகழுடம்பிலிருந்து ஹிந்துஸ்தானத்தின் கார்யங்களை ஆத்ம ஸ்வரூபியாகி நடத்தி வருவார். "தாதாபாய் நெளரோஜி இறந்து போனார். தாதாபாய் நெளரோஜி நீடூழி வாழ்க."

*   *   *

தாதாபாய் நெளரோஜி இறந்து போகவில்லை, அதனாலேயேதான் நீடூழி வாழ்கவென்று சொல்ல இடம் உண்டாகிறது. நம்பிக்கைக்குப் பெயர் தாதாபாய் நெளரோஜி. அதற்கு மரணம் இல்லை. நம்பின காரியம் கைகூடும் என்ற வசனத்தை ஹிந்துக்கள் நம்பும்படிச் செய்வதற்காகத் தோன்றிய பெரியோர்களில் தாதாபாய் ஒருவர். தன்னை மறந்து குற்றுயிரோடு கிடந்த ஹிந்து தேசம் மறுபடியும் உயிர்கொண்டு, ஸ்மரணைபெற்று வலிமை காட்டும் என்று தாதாபாய் ஒரு நாளா இரண்டு நாளா 70 வருஷம் இடைவிடாது நம்பினார்.

அவர் சாகுமுன்னே ஹிந்துஸ்தானம் பிழைத்துவிட்டது. ஹிந்துக்களுடைய சக்தி ஏறுவதைக் கண்ணாலே பார்த்த பிறகுதான் அந்தக் கிழவனுருடைய பிராணன் பிரிந்தது. ஹிந்துக்களுக்கு இந்தியாவில் அதிகாரம் கிடைக்கவேண்டு மென்று 70 வருஷங்களுக்கு முன்னே தாதாபாய் நௌரோஜி கண்டுபிடித்தார். 11 வருஷங்களுக்கு முன்னே கல்கத்தா காங்கிரஸ் சபையில் ஹிந்துக்களுக்கு ஸ்வராஜ்யம் வேண்டும் என்று தாதாபாய் முரசடித்தார். இந்தியா முழுதும் அந்த வார்த்தை பரவி அசைக்க முடியாமல் நிலை பெற்றதைக் கண்டபின் உயிர் துறந்தார். 1905-ம்வருஷத்தில் சென்னபட்டணத்தில் சுதேசமித்திரன் ஜி. சுப்ரமணிய அய்யர் என்னிடம் ஒரு நாள தாதாபாய் நௌரோஜியின் 80-வது பிறந்த நாள் விசேஷம் கொண்டாடவேண்டும் என்று சொன்னார். "பார்லிமெண்ட் சபைக்கும், மந்திரிகளுக்கும் அதிகாரிகளுக்கும் மூச்சு விடாமல் விண்ணப்பம் எழுதி, தாதாபாய் ஒரு பயனும் அறியாமல் கிழத் தன்மை முற்றிக் கிடக்கிருர். இவருக்குப் பிறந்த நாள் கொண்டாடி நாம் என்ன பயன் பெறப்போகிறோம் ?" என்று கேட்டேன்.

அப்போது ஜி. சுப்ரமணிய அய்யர் சொன்னார் :

"தாதாபாய் உறுதியுடைய மனிதன். அவர் நினைத்த காரியங்கள் கடைசிவரை ஈடேறத்தான் செய்யும். ஹிந்து ஜனங்கள் பசியாலும் பிணியாலும் அழிந்து போகாமல் காக்கவேண்டு மென்றும் அதற்கு ஆங்கிலேயர் நமக்குத் தன்னுட்சி கொடுப்பதே உபாயம்" என்றும் தாதாபாய் நௌரோஜி சொல்லிக் கொடுத்தார். "நமக்கெல்லாம் தேசபக்தி அவர் கொடுத்த பிச்சை. அவரை நாம் ஆசார்யராகக் கொண்டாடவேண்டும்" என்று சொன்னார்.

* * *

பல வருஷங்கள் கடந்தன. இன்று தாதாபாய் நௌரோஜியை உயிர் பெற்ற ஹிந்துஸ்தானம் ஆசாரிய ஸ்தானத்தில் கொண்டாடி ஊரூராகப் புகழ்ச்சி பேசுவதைக் காணும்போது ஜி. சுப்ரமண்ய அய்யர் போட்ட மதிப்பு சரியென்று விளங்குகிறது. வைஸ்ராய்களும் கவர்னர்களும் இப்போது நௌரோஜிக்குப் பெருமை சொல்லுகிருர்கள். உயிரோடிருக்கும்போதே அவரை ராஜாங்கத்தார் மிகவும் மேன்மைப்படுத்தி உபசரிக்கத் தொடங்கி விட்டார்கள். ஸ்வராஜ்யக் கொள்கைக்கு மேன்மையும் வெற்றியும் உண்டென்பதைத் தாதாபாய் பல விதங்களிலே காண்பித்தார்.

* * *

தாதாபாய் நௌரோஜியினுடைய விண்ணப்ப உபாயம் நமக்குக் கைகூடி வருமோ என்பது ஒரு சந்தேகம். நாமே பல விண்ணப்பங்கள் ராஜாங்கத்தாருக்கு எழுதிப் பயனை இதுவரை பெறாமல் இன்றும் எதிர்பார்த்த நிலைமையில் இருக்கிறோம். நம்முடைய விண்ணப்பங்களை அதிகாரிகள் உடனுக்குடனே கவனித்தால் நமக்கும் நல்லது; அவர்களுக்கும் நல்லது. ஜனங்களுக்குள்ளே அதிருப்தி பரவாமல் நம்முடைய நோக்கம் நிறைவேறும். தாதாபாய் போன்ற ஸ்வராஜ்யத் தலைவர்களிடம் அதிகாரிகள் நேருக்கு நேராக மந்திராலோசனை செய்தால் நல்லது. நம்மிடத்திலே தோன்றியிருக்கும் புதிய சக்தியை அதிகாரிகள் கண் திறந்து பார்க்காமல் புறக்கணித்திருப்பது தந்திர சாஸ்திரத்துக்குப் பொருந்திய செய்கையன்று.

தாதாபாய் தெய்வ பக்தியுடையவர். அதனாலேதான் நான் அவருக்கு ஷை புகழ்ச்சியுரை எழுதத் துணிந்தேன். ராஜ்ய விஷயங்களிலே கலந்து காங்கிரஸ் சபைக்குப்போன மாத்திரத்திலேயே ஒருவன் மதிப்புக்கிடமாக மாட்டான். தெய்வ பக்தியை மூலபலமாகக் கொண்டதனாலேயே தாதாபாய் கார்யஸித்தி பெற்றார். ஆதலால் பக்தியே தாரகம். ஒவ்வொருவனும் தெய்வபக்தி பண்ணலாம். வியாபாரி, தச்சன், அம்பட்டன், ராஜா, மந்திரி, பிராமணன், பறையன் எல்லோரும் தெய்வ பக்தியாலே மேன்மை பெறுவார்கள். எந்தத் தொழிலும் தெய்வ பக்தியால் வெற்றியடையும். தாதாபாயினுடைய பூத சரீரத்திலிருந்த சக்தியைக் காட்டிலும் ஆயிரமடங்கு அதிக சக்தி அவருடைய நாமத்தில் புகுந்து, அப்பெயர் நினைப்பினாலே ஹிந்து ஜாதி மேன்மை பெறும்படி நேரிடலாம். பராசக்தியின் இஷ்டப்படி உலகம் அசைகிறது. பராசக்தி இப்போது நம்பிக்கையை உலகம் முழுதும் பரப்புகிறாள். சில தினங்களின் முன்பு ஒரு இங்கிலீஷ் சாஸ்திரி கடவுளைப்பற்றி எழுதியிருக்கும் புஸ்தக மொன்றை வாசித்துக்கொண்டிருந்தேன். சரணாகதி தர்மத்தை அந்த நூல், நமது விசிஷ்டாத்வைதிகளைப்போல் அத்தனை தெளிவாகச் சொல்லுகிறது. ஹிந்து மதம் உலக முழுமையும் வியாபித்துக்கொண்டுவருகிறது.

நம்பிக்கையின் ஸஹஸ்ரநாமங்களில் தாதாபாய் நௌரோஜி என்பதொன்று. நம்பிக்கை வெற்றி பெறும். நம்பிக்கை நீடூழி வாழ்க.

குறிப்பு.—தாதாபாய் நௌரோஜி 1917-ம் ஸு ஜூன்மீ 30உ-யில் காலமானார்.

அவரைப் புகழ்ந்து அவருடைய எண்பதாவது ஆண்டு நிறைவுக் காலத்தில் பாரதியார் தாதாபாய் நவுரோஜி என்ற பாடல் பாடியிருக்கிறார்.

---

## 24

## குடிப் பாங்கு.

இங்கிலாந்திலுள்ள "ந்யூ ஸ்டேட்ஸ்மன்" என்ற பத்திரிகையில் ஷை தேசத்துக் குடியுரிமைக் காப்பு மஹா சபையின் கிளையாகச் சேர்ந்த வியாபார ஐக்யப் பகுதிச் சங்கத்தின் கௌரவ காரியதரிசி ஒரு கடிதமெழுதியிருக்கிறார். அதில் ஒரு பகுதி இங்கு மொழிபெயர்க்கப் படுகிறது. ஷை மஹாசபையின் நோக்கங்கள் என்னவென்றால் :—

1. 1916-ம் வருஷத்து ராணுவச் சேவக விதிகளை நீக்கி விடும்படி வேலை செய்வதும், நமது (ஆங்லேய) ஜாதிக்கு ராணுவச் சேவகம் எப்போதும் கட்டாயமாகாதபடி தடுப்பதும் ;

2. சொல்லுரிமை, குடிவிசாரணை (படை விசாரணையல்லாதது) முதலிய ப்ரிடிஷ் ஜாதியாரின் மற்றக் குடியுரிமைகளையும் காப்பாற்றிக் கொள்ளுதல் ;

3. குடி விடுதலைக்கு இடர் விளைவிக்கக்கூடிய ராணுவச் சேவகச் சட்டம், பூமி ரக்ஷணைச் சட்டம் முதலிய சட்டங்களின் அமுலைக் கவனித்துக்கொண்டு வருதல் ;

4. ஷை சட்டங்களின் குண காரியங்களை வளர விடாதபடி எதிர்த்தல் என்பன.

உள்நாட்டு மந்திரியாகிய மிஸ்டர் ஸாமுயெல் ஷை சபையின் நோக்கங்களைக் குறிக்குமிடத்தே தாம் விரோதப்படுவதாகவும், ஷை சபையின் காரியம் தேச நன்மைக்குக் கேடு விளைவிக்குமென்றும் சொல்லுகிறார். ஆனால் இந்தச் சபையின் தலைவரோ ராபர்ட் ஸ்மில்லி, பண்டித க்ளிபோர்டு, மாஸிங்ஹாம், ப்ரெய்ல்ஸ் போர்டு முதலிய கீர்த்தியுள்ள பண்டிதர். இவர்களுடைய கார்டிப் நகரத்துக் கூட்டத்திற்குக் கிரயச் சீட்டு வாங்கி வந்த ஜனங்களைத் தவிர்த்து மற்றப் பிரதிநிதிகளின் விவரம் பின்வருமாறு :—

வியாபார ஐக்கியக் கிளைகள் 220 பிரதிநிதி. வியாபார சபைகளும் ஸ்தலத் தொழிற் சங்கங்களும் அனுப்பிய பிரதிநிதிகள் 37.

ஸமூஹ (ஸோஷலிஸ்ட்) கக்ஷி சபைகளும் ஸமாதான சபைகளும் அனுப்பிய பிரதிநிதிகள் 100. மதாபிமான சங்கத்தார்களின் பிரதிநிதிகள் 13. கூட்டுறவு சபையார்களின் பிரதிநிதிகள் 16. ஸ்திரீ சபையாரின் பிரதிநிதிகள் 29. பகுதிப் படாதோர் 34.

இந்த மஹா சபையுடன் 500 சபைகள் வரை சேர்ந்திருக் கின்றன.

மேற்படிக் காரியதரிசி சொல்லியிருப்பதிலிருந்து ஷை சபையின் காரியங்கள் உள்நாட்டு மந்திரிக்கு ஸம்மதமில்லை யென்று தெரிகிறது. அப்படியிருந்தும், உள்நாட்டு மந்திரி அவர்களுடைய கூட்டத்தைத் தடுக்காமலிருந்தது அவருடைய பெருந்தன்மையை விளக்குகிறது. ஜனங்களின் உரிமைகளை எதிர்த்தால் பிரமாத முண்டாகுமென்ற தீர்மானத்தினால் உள்நாட்டு மந்திரி ஷை கூட்டத்தை அதிகாரிகள் தடுக்காதபடி நியமித்திருக்கலாமென்று ஷை காரியதரிசி தமது கடிதத்தில் சொல்லுகிறார். அதை நாம் நம்பவில்லை. ப்ரிடிஷ் மந்திரிகள் இயற்கையிலேயே குடியுரிமைகளைத் தடுக்க மனதில்லாதவர்கள். இது நிற்க. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்று திருவள்ளுவர் சொல்லுகிறார்.

ஆதலால், ஷை குடியுரிமைக் காப்புச் சபையார் தேசப் பொதுமைக்கு விபத்து நேர்ந்திருப்பதைத் தடுத்து வெற்றி பெறுவதாகிய ஒரே நோக்கத்துடன் எல்லாக் காரியங்களும் செய்யாதபடி சில்லரைச் சட்டங்களின் மெதுவான ப்ரயோகங் களைக் கண்டனம் பண்ணிக்கொண்டிருப்பது லௌகிகமில்லை யென்றாலும், இந்த விஷயத்தில் அவர்களுடைய செய்கை விபரீதமென்பது மெய்யேயானாலும், அவர்களுடைய வார்த்தையில் எத்தனை குன்றுமணி உண்மை சேர்ந்திருக்கிற தென்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

யுத்தம் நடப்பது காரணமாக ஜனங்களுடைய ஸாதாரண உரிமைகளை அதிகாரிகள் புறக்கணிப்பது சில ஸமயங்களில் அவசியமாக ஏற்பட்ட போதிலும், ஒரேயடியாக ஜன தர்மங்களைப் படுகுழியிலே கொண்டு அமிழ்த்து விடும்படி

ஜனத் தலைவர் பார்த்துக்கொண்டிருக்கலாமா? யுத்த காலத்தில் ஜன உரிமை எவ்வளவு தூரம் வளைய இடங் கொடுக்கலாம்? அதை எல்லைப்படுத்த வேண்டிய காரியம் இப்போது ஐரோப்பியப் பண்டிதர்களை வந்து சூழ்ந்திருக் கிறது.

## சோவியத் ருஷ்யாவில் பணம் தொலைந்தது

லாரின் என்பவருடைய அறிக்கையின் மீது ஸோவியட் கவர்மெண்டார் (ருஷ்யக் குடியரசு ராஜாங்கத்தார்) ஓர் தீர்மானம் பிறப்பித்திருக்கிறார்கள். அதன்படி அரசிறை யாட்சித் தலைவர் தகுந்த உத்தியோகஸ்தர்களுடனே கலந்து கொண்டு இன்னும் ஒரு மாஸ காலத்திற்குள்ளே ஒரு நகர் சட்டம் தயார் செய்து பிரதிநிதி ஸபையாருக்குத் தெரிவிக்க வேண்டும். அந்தச் சட்டத்தின் கருத்து யாதென்றால், தொழிலாளருக்கும், வேலையாட்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் உணவிலாகாவில் கொடுக்கப்பட்ட முதல் இரண்டாந் தரத்து ஆஹாரச் சீட்டுகளுக்குத் தரப்படுவன உட்பட்ட எல்லாச் சாமான்களுக்கும் பணம் கொடுக்கும் முறையை ஒழித்துவிட வேண்டும் என்பது. ராஜாங்கத்துக் குரிய அல்லது நகர சபைகளுக்குரிய வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர், வேலையாட்கள், அவர்களுடைய குடும்பத்தார் களிடமிருந்து பண வாடகை வாங்குவதை நிறுத்திவிடுவதும் அந்தச் சட்டத்தின் நோக்கம். இங்ஙனமே தொழிலாள ருக்கும் வேலையாட்களுக்கும் ஸங்க ஸ்தாபனங்களுக்கும் முடிய ஷை இலாகாவால் கொடுக்கப்படும் அடுப்புக்கரி வகைகளனைத்திற்கும் பணக் கிரயம் கொடுக்க வேண்டிய தில்லை யென்றும், வாயு, மின்ஸாரம், டெலிபோன், நீர், சாக்கடை முதலியவற்றுக்கும் பணம் கொடுக்க வேண்டிய தில்லை யென்றும் அச்சட்டம் நியமிக்கும்.

## ராஜாங்கப் "பணந் தொலைதல்" கமிஷன்

இதனிடையே ருஷிய ராஜாங்கத்தார் ஒரு விசேஷ ஸமிதி யேற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஸமிதியில் ஒரு மாஸ காலத்திற்குள்ளே பணக் கிரயங்கள் என்ற ஏற்பாட்டையே

அழித்துவிடுவதற்குரிய விஸ்தாரமான திட்ட மொன்று சமைத்துக் கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. இவற்றுள், பாங்க் கணக்கு, ஸோவியட் தொழிற் சாலைகளி னிடையேயும் ஸோவியட் ஸங்கங்களினிடையேயும் பரஸ்பரம் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல் முதலியனவும் அடங்கும். இந்த ஏற்பாடுகளெல்லாம் விரைவாக அநுஷ்டானத்திற்கு வந்து விடுமென்று மேலே கூறிய ஸ்ரீமான் லாரின் என்பவரே அமெரிக்கப் பத்திரிகை யொன்றில் எழுதியிருக்கிறார். இதே காலத்தில் ஸ்ரீமான் லாரினால் சொல்லப்பட்ட மற்றொரு யோசனையும் நிறைவேற்றப்படு மென்று தெரிகிறது. இந்த யோசனையை ஏற்கெனவே ராஜாங்கத்தார் அங்கீகாரம் புரிந்து விட்டனர். அதாவது, ரயில் பாதை வழியாகப் போகும் ஸாமான்களுக்குத் தீர்வைப் பணம் வசூல் செய்யாமை, ஏறக்குறையப் பெரும்பான்மை ரயில்வே யாத்திரைக் கட்டணங்கள் வாங்குவதை நிறுத்திவிடுதல் முதலியவற்றைக் குறித்தது.

## ஆரம்பங்கள்

1918-ம் வருஷத்தில் மாஸ்கோவில் நடைபெற்ற "ஸோஷலிஸ்ட்" ஸமாஜத்தில் குழந்தைகளுக்குக் கொடுக்கும் ஆஹாரம் முதலியவற்றுக்கும், தொழிலாளருக்குக் கொடுக்கும் ஆஹாரம், துணி, வாஸஸ்தலம் முதலியவற்றுக்கும் பணம் வாங்கக்கூடாதென்ற யோசனை ஸ்ரீமான் லாரினாலே சொல்லப்பட்டது. அதை ஸமாஜத்தார் ஒரு மனதுடன் அங்கீகாரம் செய்து கொண்டனர். அவ்வருஷ ஏப்ரல் மாஸத்தில் குழந்தைகளுக்கெல்லாம் ருஷியாவில் இனும் ஆஹாரம் போடுவதாக ராஜாங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. குழந்தைகளின் வயதளவு 14-ஆக வைத்திருந்தது. பின்பு 16-ஆக உயர்த்தப்பட்டது. சிறிது காலத்திற்குப் பிறகு, வேலையாட்களுக்கெல்லாம் இனமாகத் துணி கொடுக்கப்பட்டது. அப்பால் சவர்க்காரம் எல்லாத் தொழிலாளருக்கும் விநியோகம் செய்யப்பட்டது. அப்பால் சாதாரணக் கடிதங் களுக்குத் தபால் கிரயமாகப் பணம் செலுத்தும் வழக்கம் நிறுத்தப்பட்டது. அப்பால் வேலையாட்களின் கூலிக்குப் பணம் கொடுப்பதனிடத்தில் ஸாமான் கொடுப்பதென்றேற் பட்டது. இப்போது மேற்கூறியவற்றை யெல்லாந் திரட்டி, ஒரேயடியாக ஸர்வ விஷயங்களிலும் பணமில்லாதபடி செய்து விடத் தீர்மானித்திருக்கிறார்கள்.

## உண்மையான புதுமை

மனுஷ்ய நாகரிகத்தின் ஆரம்பகாலந் தொட்டே பணப் பழக்கமிருந்து வருகிறது. இதனால் விளைந்த துன்பங்கள் எண்ணற்றன. அந்தப் பழக்கத்தை இப்போது மனித ஜாதியில் பத்திலொரு பங்கு ஜனத் தொகையை ஆளும் ராஜாங்கத்தார் திடீரென்று நிறுத்த உத்தேசிக்கிறார்கள். இதனால் புதிய ஸௌகர்யங்களேற்படுவதுடனே, பணப் பழக்கத்தால் இயன்று வரும் பழைய ஸௌகர்யங்களுக்கு இடையூறில்லாமல் செய்துவிடக் கூடுமானால், ருஷியாவை இவ்விஷயத்தில் உலகத்தார் பின்பற்ற முயல்வார்களென்பதில் ஸந்தேஹமில்லை.

## ஸெண்ட் நிஹல்ஸிங் சொல்வது

ஸ்ரீமான் ஸெண்ட் நிஹல்ஸிங் "பால் மால்" கெஜெட்டின் தலையங்கப் பக்கத்தில் எழுதியிருக்கும் வ்யாஸமொன்றில் நம் எதிர்கால வைஸ்ராயாகிய லார்டு ரீடிங்குக்குச் சில புத்தி வசனங்கள் சொல்லியிருக்கிறார். ப்ரிடிஷார் மீட்டு மீட்டும் வாக்குறுதிகள் செய்து அவற்றை உடைப்பதினின்றும் இந்தியாவில் அமைதி ஏற்படாதென்று ஸ்ரீமான் ஸிங் எச்சரிக்கிறார். இந்தியச் சட்டப் புஸ்தகத்திலுள்ள அடக்கு முறைச் சட்டங்களையும், உத்தரவுகளையும் அறவே ஒழித்து விடுவதாக லார்ட் ரீடிங் இந்தியாவில் இறங்கியவுடனே உறுதி மொழி கொடுக்க வேண்டுமென்று ஸ்ரீமான் ஸிங் விரும்புகிறார். அவ்வுறுதி மொழியை விரைவில் நிறைவேற்றவும் வேண்டுமென்கிறார். ரௌலட் சட்டத்தையும், இந்தியாவில் பேச்சு ஸ்வதந்தரத்தையும், பத்திரிகை ஸ்வதந்தரத்தையும் சுருக்கக்கூடிய மற்றச் சட்டங்களையும் அழிக்கும்படி சிபாரிசு செய்கிறார். இந்தியர்களின் ஸம்மதத்தின் மீது இந்தியாவை ஆளுவதாக ப்ரிடிஷார் ஒருபுறம் கதை சொல்லிக் கொண்டு மற்றொரு பக்கத்தில் அடக்கு முறைகளை நடத்திக் கொண்டிருந்தால், ப்ரிட்டிஷ் வாக்குறுதிகளை இந்தியா நம்புதல் ஸாத்யப்படாமற் போகுமென்பதைக் குறிப்பிடுகிறார். இவ் விஷயம் ராய்ட்டர் தந்தி மூலமாக இந்தியாவுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஸ்ரீமான் ஸிங் சொல்வதை இங்கிலாந்திலுள்ள சிலர் ஆதரிக்கக் கூடுமெனினும், இங்குள்ள அதிகாரிகள் அவர் விருப்பத்தைத் தாமும் ஆதரிக்கமாட்டார்கள்; லார்ட் ரீடிங் ஆதரிக்க இடம் கொடுக்கவும் மாட்டார்களென்று தோன்றுகிறது. இங்குள்ள

அதிகாரி வர்க்கத்தார் பாக்ய ஹீனராகிய [ப்ரான்ஸ் தேசத்து (a) பூர் (b) போன் ராஜ] குடும்பத்தாரைப் போலவே எதனையும் புதிதாகத் தெரிந்துகொள்வதுமில்லை, எதனையும் மறப்பதுமில்லை என்று "ஹிந்து" பத்திராதிபர் எடுத்துக் காட்டியிருப்பது மெய்யேயாம். இவர்களைச் சீர்திருத்து முன் இந்தியாவுக்கு ப்ரிடன் வேறென்ன சீர்திருத்தங்கொடுத்த போதிலும் இந்தியாவில் அமைதி யேற்படாதென்பது திண்ணம். பரிபூரண ஸ்வராஜ்யங் கொடுப்பதே இந்தியா, ப்ரிடன் இரண்டு தேசங்களுக்கும் ஹிதமானவழி; அதுதான் சரியான சீர்திருத்தம். மற்ற எவ்விதமான சீர்திருத்தங்களையும் இங்குள்ள அதிகாரிகள் குட்டிச்சுவராக்கி விடுவார்கள்.

---

## 25

## எளிதாக ஸம்ஸ்க்ருதம் படிக்கும் வழி

1921 ஜனவரி 11-ஆந் தேதி சுதேசமித்திரனில் 'ஒளிர்மணிக் கோவை' என்ற மகுடத்தின் கீழே எழுதப்பட்டிருந்த குறிப்புக்களில் "இந்தியாவுக்கொரு பொதுப் பாஷை" என்ற தலைப்பின் கீழுள்ள குறிப்பைப் பார்த்துவிட்டு, நம் சந்தாதார் ஒருவர்:—(1) பண்டாரகரால் வெளியிடப்பட்டுத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட புஸ்தகம், (2) பஞ்ச தந்திரம் தமிழ் மொழிபெயர்ப்புடன்—ஆகிய இவ்விரண்டும் எங்கே கிடைக்கும்?" என்று நம்மைக் கேட்கிறார். வடமொழியும் இங்கிலீஷும் கலந்து பண்டாரகர் வெளிப்படுத்தியிருக்கும் மூல நூல் சென்னையில் பெரிய பாடசாலைப் புஸ்தக வியாபாரி எவரிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம். அதன் தமிழ் மொழி பெயர்ப்பு, திருவண்ணாமலை டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதருக்கெழுதினால் கிடைக்குமென்று தெரிகிறது. பஞ்ச தந்திரம், வடமொழியிலுள்ள மூல நூலுக்கு நேரான தமிழ் மொழி பெயர்ப்பு இதுவரை எவராலும் செய்யப்பட வில்லையென்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள் கிறோம். தாண்டவராய முதலியார் எழுதியிருக்கும் தமிழ்ப் பஞ்ச தந்தரம் ஸம்ஸ்க்ருதத்திலிருந்து நேராக மொழி பெயர்க்கப்பட்டதன்று. மஹாராஷ்ட்ர பாஷையில் பஞ்ச தந்திரக் கதைகளை மட்டும் ஒருவாறு தொகுத்திருந்ததொரு நூலினின்றும் கதைகளைத் திரட்டித் தமிழில் அந்த முதலியார் வெளிப்படுத்திவிட்டாரென்று தெரியவருகிறது.

எனவே பூமண்டல முழுமையிலும் தனக்கோரு நிகரில்லாத ராஜ்ய நீதி சாஸ்த்ரமும், ஹிந்துக்களின் அறிவு நுட்பத்துக்குப் பெரும் புகழுமாகி விளங்கும் ஸம்ஸ்க்ருத பஞ்ச தந்தரம் தமிழில் இயற்கையாக மொழி பெயர்க்கபபடவில்லே. அதன் அழகான நீதி வசனங்களில் பெரும்பான்மை தமிழ் மொழி பெயர்ப்பிலேயில்லே. மேலும், தமிழ்ப் பஞ்ச தந்தரத்தைப் படித்தால், இஃதொரு ஸாமான்யமான கதைப் புஸ்தக மென்று தோன்றுகிறதேயன்றி உலகத்து ராஜ்ய தந்தர சாஸ்த்ரங்களுள்ளே இது சிரோமணியென்பது துலங்கவில்லே. இப்போது தமிழ் நாட்டில் புதியதோர் அறிவுக் கிளர்ச்சி எழுச்சி கொண்டிருப்பதினின்றும், இனி, விரைவிலே அந் நூல் தமிழில் நேராக மொழிபெயர்க்கப்படுமென்பது நிச்சயந்தான். ஆயினும் தற்காலத்தில் அவ்வித மொழி பெயர்ப்பில்லே. எனினும், இதுபற்றி மனஞ்சலிக்கவேண்டாம். அன்றைக் குறிப்பில் எழுதியிருந்தபடி, முதல் நூல், (பஞ்ச தந்த்ரம்) வடமொழியில் மிக மிக எளிய, மிக ஸரளமான, மிகத் தெளிந்த, ஸாமான்ய நடையில் அமைந்திருககிறது. அதன் பொருள் எத்தனே அபூர்வமாகவும், ஆழமாகவும், நுட்பமாகவும், ஆச்சரியமாகவும் அமைந்திருக்கிறதோ அத்தனே எளிமையாகவும் ஸாதாரணமாகவும் அதன் வாக்ய நடை அமைந்துளது. எனவே, அன்று தெரிவித்தபடி, பண்டாரகர் முதற்பாட புஸ்தகத்தையும், இரண்டாம் பாட புஸ்தகத்தில் ஒரு பகுதியையும் எமெட்டு மாதங்களுக்குள் படித்துணர்ந்து கொண்டால், பிறகு பஞ்ச தந்த்ரத்தை மூலத்திலேயே, பிறருதவி வேண்டாமல் வாசித்து யாரும் பொருளறிந்து கொள்ளலாம்.

---

## 26

## ரஸத் திரட்டு

### நிறவேற்றுமை

அமெரிக்காவில் செந்நிற இந்தியர் என்ற ஜாதியாருடன் அங்குப் புதிதாக ஐரோப்பாவினின்றும் குடியேறிய வெண்ணிற மனிதர் ஒத்துவாழ முடியாமல் அவர்களேச் சுட்டழித்த செய்தி, ஆஸ்த்ரேலியாவின் புராதனக் குடிகளே வெள்ளேயர் அழித்து முடித்த செய்தி, ஒரு நீகிரோவன் ஒரு வெள்ளே ஸ்திரீயை விரும்பினல் அவனேச் சட்டப்படி விசாரணே செய்யாமல் ஜனங்கள் அடித்தும் கல்லெறிந்தும் கொல்வதாகிய—

இன்றைக்கும் அமெரிக்காவில் உள்ள அனுஷ்டானம், ஐரோப்பியரின் ஆட்சிக்குட்பட்ட இந்தியா முதலிய இதர நிறத்தாருடை நாடுகளில் நிறவேற்றுமை காரணமாக ஏற்படும் அநீதிகள், அமெரிக்காவிலும், கனடாவிலும், ஜப்பானியரும், இந்தியரும் குடியேறியிருப்பதால் அங்குள்ளவருக்குண்டாகும் பொருமை. குடியேற்ற நாடுகளில் ஆசியாக்காரருக்குச் செய்யப்படும் கொடுமைகள் இவற்றுலெல்லாம் நிறவேற்றுமை பற்றிய பேத உணர்ச்சிகள் சில நூற்றுண்டுகளாக வெள்ளையரிடம் ததும்பிக்கிடப்பதாக நிச்சயப்படுவதை முகாந்தரமாகக் கொண்டு ஹிந்து பத்திரிகையில் நிறவேற்றுமை உணர்ச்சி மனித இயற்கைக்கே சகஜமென்றும், இது சமீபத்தில் இவ்வுலகை விட்டுப் பெயராதென்றும் எழுதப்பட்டிருந்த அபிப்பிராயத்தை ஏற்கெனவே சில தினங்களின் முன்பு மறுத்தெழுதியிருக்கிருேம். அங்ஙனம் மறுத்தெழுதுகையில் ஆசியாக் கண்டத்தாருக்கு இந்த உணர்ச்சி எப்போதுமே கிடையாதென்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிருேம்.

அங்ஙனம் நாம் சொல்லியதற்கு வேறெரு நேர்த்தியான உப பலம் அகப்பட்டிருக்கிறது. அதனை நம் நேயர்களுக்குத் தெரிவித்தல் பயனுடையதாகும் என்று நினைக்கிருேம்.

சுக்ர நீதியிலுள்ள பிரமாணம் 1921 ஜனவரி மாஸத்து 'மாடர்ன் ரிவ்யூ' பத்திரிகையிலே சரித்திர ஆராய்ச்சியில் கீர்த்தி மிகுந்தவராகிய ஸ்ரீ விநயகுமார சர்க்கார் என்பவர் சுக்ர நீதியின்படி ராஜ்யத்தின் செல்வ ஆதாரங்கள் என்ற மகுடத்தின் கீழ் எழுதிவரும் சிறந்த வியாசத்தின் 5-ம் பகுதி வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் ஸ்ரீ சர்க்கார் சுக்ர நீதியினின்றும் பலமான மேற்கோள் எடுத்துக் காட்டிப் பூர்வீக இந்தியாவில் சேனுதிபதி வேலை, மந்திரி வேலை முதலாக ஸகல ஸ்தாபனங்களுக்கும் இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியாரையும் நியமிக்கலாமென்ற ஏற்பாடிருந்ததுடன் மிலேச்சர், யவனர் முதலிய மத்திய ஆசியாவாசிகளையும் தென் ஐரோப்பாவைச் சேர்ந்த வெள்ளை மனிதர்களையும் இந்தியாவில் எந்த உத்தியோகத்துக்கும் நியமிக்கலாமென்ற ஏற்பாடு இருந்ததென்று உள்ளங்கை நெல்லிக்கனி போல மிகத் தெளிவாக விளங்கும்படி ருசுப்படுத்துகிறுர். இங்குள்ள ஜாதிபேதங்களைக்கூட நாம் சீர்திருத்த இடமிருப்பினும் வெள்ளையர் கற்பிப்பது போல் இதனை உலகெங்குமில்லாத

பெருங் கொடுமையாகப் பாவித்தல் சிறிதேனும் நியாயமில்லை. இந்த விஷயமும் ஸ்ரீமான் சர்க்காரின் வியாசத்தில் தெளிவுப் படுகிறது.

எல்லா மனிதரும் சமமென்ற கொள்கையை ஸமூஹ வாழ்க்கையில் ஸ்தாபனம் செய்யும்வரை மானிடருள்ளே இகல், பொறாமை, வஞ்சனை, போர் முதலிய ஏற்பாடுகள் நீங்கமாட்டாவாதலால் அக்கொள்கையை எப்படியேனும் அனுஷ்டானத்துக்குக் கொணர்ந்து விடவேண்டுமென்று ஐரோப்பிய ஞானிகள் பேராவல் கொண்டிருக்கின்றனர். இந்தியா ராஜாங்க விடுதலை பெற்றுவிடுமானால் தன் அனுஷ்டானத்தாலே உலகத்தாருக்கு இக் கொள்கையின் நலங்களை விளக்கிக் காட்டி உலகமுழுவதும் இதனைப் பரவச் செய்தல் ஸாத்யப்படும்.

### ஸமத்துவக் கொள்கையின் லோககுரு பாரதமாதா

வெறுமே ஐரோப்பிய வித்வான்கள் செய்வதுபோல் இவ் விஷயமாக நூல்களும், பத்திரிகை வியாசங்களும் பிரசுரிப்பதனாலும் உபந்யாசங்கள் செய்வதாலும் அதிகப் பயனேற்படாது. தன் உபதேசப்படி தானே நடக்காத ஐரோப்பாவின் உபதேசங்களில் வெளியுலகத்தாருக்கு நம்பிக்கை பிறப்பதெப்படி? எத்தனையோ நூற்றாண்டுகளாக இந்தியாவின் நெஞ்சில் வேதாந்தக் கொள்கை ஊறிக்கிடக்கிறது. இந்த வேதாந்தம் லௌகிகமான அனுஷ்டானத்தில் பரிபூரணமான ஸம்பூர்ணமான ஸமத்துவம் ஏற்படுத்தும் இயல்புடையது. ஆனால் நமக்கும் ஐரோப்பியரின் உறவாலேதான் இக்கொள்கையில் உறுதி ஏற்பட்டது. எனினும், ஐரோப்பியர் அதை நடத்திக்காட்டக்கூடிய அளவு தெளிவு பெறவில்லை. இக்கொள்கை அவர்களுக்குப் புதிது. புதிய கொள்கை உண்மையென்று நிச்சயப்பட்ட மாத்திரத்தில் அதை அனுஷ்டித்துத் தீர்க்க வேண்டுமென்பதில் இந்தியாவுக்குள்ள துணிவு ஐரோப்பாவுக்குக் கிடையாது. ஆனால் நாம் இக் கொள்கையை முற்றிலும் அனுஷ்டித்தல் அன்ய ராஜ்யத்தின் கீழே ஸாத்யப்படவில்லை. ஆதலால் நமக்கு ஸ்வராஜ்யம் இன்றியமையாதது. இந்தியா ஸ்வராஜ்யம் பெறுவதே மனித உலகம் அழியாது காக்கும் வழி.

## வெண்மை நிறத்தோரின் ஆட்சி விஸ்தாரம்

பூமண்டலத்தின் தரையளவு சுமார் 5,30,00,000 (ஐந்து கோடியே முப்பது லட்சம் சதுரமைல். இதில் 4,70,00,000 (நான்கு கோடியே எழுபது லட்சம்) சதுரமைல் விஸ்தார முள்ள பூமி வெண்மை நிறத்தோரின் ஆதிக்கத்திலிருக் கிறது. இங்ஙனம் உலகம் ஒரு சிறு கூட்டத்தாரின் கீழே அகப்பட்டிருப்பதில் அச்சிறு கூடடத்தார் தங்களுடைய வயிற்றையும் தமக்கு வேண்டிய இன்பங்களையும் மாத்திரமே கவனிப்பதுடன் மற்ற உலகத்தாரெல்லாரும் தங்களைக் காட்டிலும தாழ்வென்றும் நினைத்துக்கொண்டிருக்குமிடத்தே ஸமத்வக் கொள்கையின் கதி என்னுகிறது ?

## ஜாதி

ஜனவகுப்புக்கள் தனித்தனி கூடவங்களுடைய வெவ் வேறு ஜீவன்களாம். ஆனல் "ஜாதி"கள் வெறுமே வலி மைக்காகச் சேர்ந்த கூட்டங்களைத் தவிர வேறில்லை. அது பற்றியே இவற்றின் உட்குணங்களும், புறச்செய்கைகளும் எங்கும் ஒரே சந்தமாக ஒரே மாதிரியாக இருக்கின்றன. இவற்றுள்ளே வேற்றுமைகளிலிருந்தாலும் அவை தொழில் வலிமையைப் பற்றின வேற்றுமைகளேயன்றிக் குணபேதங் களல்ல. நவீன உலகத்தில் ஜனத்தின் ஜீவசக்திக்கும், ஜாதியின் நிபந்தனைகளுக்கும் போர் நடக்கிறது.

ஆசியா கண்டத்தின் மத்தியில் முன்பு மனிதர் குடியிருந்த நாட்டுக்கும், அதன்மேல் இடைவிடாமல் ஏறிக்கொண்டு வந்த பாலைவனத்து மணலுக்கும் சண்டை நடந்தது. உயிரும் அழகும் கொண்ட நாட்டை மணல் அழித்து விட்டது. அது போல் ஜாதி ஜனத்தை அழிக்கிறது. மனுஷ்யப் பொது ஜன உத்தம லக்ஷணங்களைப் பரவச் செய்தல் முக்யமில்லை என்ற எண்ணத்திலிருந்து ஜாதியின் திறமை வளர்ப்பதாகிய கல் நெஞ்சு ஸம்ப்ரதாயம் பலமடைகிறது. ஸான்ப்ரான்ஸிஸ்கோ நகரத்திலிருந்து லண்டன்வரை, லண்டனிலிருந்து டோக்யோ வரை ஜாதியெண்ணம் ஆதிக்கம் பெற்றிருக்கும் நகரங் களனைத்திலும் ஒரேமாதிரியான இயல்பைக் காணலாம். அவற்றின் முகங்களைக் காட்டுவதில்லை. முகமூடிகளையே காண்பிக்கின்றன. ஜனம் ஜீவனுதலால் அதற்கும் ஆத்மப் பிரகாசம் வேண்டும். அது ஸ்ருஷ்டி செய்யும் கல்வி, கலை, கோயில் முதலியன ஜனத்தின் ஸ்ருஷ்டிகளாம். இவை ஒரே விருந்தில் பலவித உணவுகள் போலே உண்மையை அறிந்து

இன்பமடைவதில் வெவ்வேறு சுவை தருகின்றன. மனுஷ்ய லோகத்தை உயிர் வளமுடைய தாக்கிப் பலவிதங்களில் அழகு படுத்துகின்றன. ஆனால் ஜாதிகள் ஸ்ருஷ்டி செய்வதில்லை. அவை பெருக்குகின்றன, அழிக்கின்றன, பெருக்குதலாவது சோறு, துணி சேர்த்தல் போன்ற தொழில் வகை. பெருக்கும் கூட்டங்கள் அவசியமே. அழிக்குங் கூட்டங்களும் அவசியமாக இருக்கக்கூடும். ஆனால் இவை பேராசையும், விரோதமும் சேரும்போது, மனுஷ்ய ஜீவனை ஒரு மூலையில் ஒதுக்கி விடுகின்றன. இதனால் இசை தவறுவது, ஜனங்களின் சரித்திரம் அழிவை நோக்கிக் கழுத்தொடியும் வேகத்துடன் செல்லுகிறது.

மனுஷ்ய ஜாதி உயிருடனிருக்குமிடத்தே ஆதர்சங்களை, உத்தம தர்மங்களைப் பின்பற்றுகிறது. செத்த கட்டுப்பாடாகி விடும்போது ஆதர்சங்களுக்கு இடங்கொடுப்பதில்லை. அதன் கட்டமெல்லாம் புறத்தொழிலாகவே நடைபெறுகிறது. உள்ளிருக்கும் தர்மக் காட்சிக்கு அதன் உத்தரம் நேரில்லை. பல வளையாத முரட்டுத் தடைகளைக் கடந்து சொல்லவேண்டியதாகிறது.

மனுஷ்ய ஜீவனுக்குத் தனிமைக் குணமொன்றிருக்கிறது. தனிமையாகிய களத்திலேதான் அவனுடைய ஆத்மா தன்னைப் பிரகாசப்படுத்திக் கொள்ளவும் வளரவும் ஸ்வாதீனமடைகிறது. மனிதன் பொது நிலையைவிட்டு ஒரு 'தொழிலாளி' அதாவது யாதேனுமோர் வியாபாரம், அல்லது விவகாரத்தால் கட்டுப்பட்டவன் ஆகும்போது அவனைச் சுற்றி இறுகலான ஓடு தோன்றுகிறது. இந்தத் தொழிலாளித்தனம் என்ற களத்திலே மனிதர் தத்தம் அறிவுக்குத் தனி வழிகள் காட்டித் தமது பலத்தை ஒருமுகமாக்கித் தாம் முற்பட வேண்டுமென்று பரஸ்பரம் முழங்கைகளால் எற்றித் தள்ளுகிறார்கள். தொழிலாளித்தனம் அவசியந்தான். ஆனால் அதை ஆரோக்கிய வரம்புகடந்து செல்லவிடக் கூடாது. அது மனிதனை அடிமைப்படுத்தவும், குறுக்கவும், கடினமாக்கவும், ஆதர்சங்களில் நம்பிக்கையிழந்து லௌகிக லாபந் தேடுவோனாகச் செய்யவும் இடங்கொடுக்கக் கூடாது.

புராதன ஹிந்து தேசத்தில் ஸ்மிருதியால் தொழில்கள் வரம்புகடவாமல் நிறுத்தப்பட்டன. அவை முதலாவது ஜனங்களின் பொதுத் தேவைகளாகவும, பிறகு அவரவருக்கு ஜீவனோபாயங்களாகவும் கருதப்பட்டன. எனவே எல்லை

யில்லாத போட்டியின் தூண்டுதலுக்குட்படாமல், தனித் தனித் தனது பரிபூரணத் தன்மையைப் பரீக்ஷை செய்ய நேரமிருந்தது.

ஜனங்களுடைய பொதுவான தொழிலாளித் தனத்துக்கு ஜாதியென்று பெயர். அது ஜனங்களுக்குப் பெரிய விபத்தாய்க் கொண்டுவருகிறது. ஏனெனில் அதில் மிகுந்த லாபமுண்டாகிறது; எனவே உயர்ந்த ஆதர்ஸங்களின் நியதிகளிலே மனிதருக்குப் பொறுமையில்லாது போகிறது. லாபம் எவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவு ஸ்வார்த்தம் பொறாமை, விரோதம், இவற்றின் அல்லல் பலமடைகிறது. இவை மனிதர்களின் மனதில் லாபத்தால் விளைகின்றன.

உயிருள்ள ஜனங்கள் ஜாதிகளாக இறுகுதல் மேன்மேலும் அவசியமாகிறது. ஜாதியக் கொள்கையின் வளர்ச்சியால் மனிதனுக்கு மனிதன் பெரிய விபத்தாய் விட்டான். அக் கொள்கை தீராத பயத்தை விளைவிப்பதனால், மென்மேலும் பெரிய ஆபத்தாக மூண்டுவருகிறது.

கூட்டத்தின் புத்தி ஒரு குருட்டு சக்தி. நீராவி முதலிய பூத சக்திகளைப் போலவே அதையும் பிரமாண்டமான பலம் சேர்க்க உபயோகப்படுத்தலாம். ஆதலால் லோபத்தாலும் பயத்தாலும் தமது ஜனங்களை வலிமைக் கருவிகளாக்க விரும்பும் அரசர் இந்தக் கூட்டப் புத்தியைத் தமக்கு வேண்டிய வழியில் பயிற்சி செய்கிறார்கள். ஜனங்களுடைய மனதில் எங்கும் பயமும், ஸ்வஜாதிக் கர்வமும், பிற ஜாதிகளிடம் விரோதமும் வளர்த்தல் கடமையென்று நினைக்கிறார்கள். பத்திரிகைகளும் பள்ளிக்கூடப் புத்தகங்களும் கோயில் ஆராதனைகளையுங்கூட இந்த நோக்கத்துக்குப் பயன்படுத்துகிறார்கள்.

தெய்வ விரோதமான இந்தக் குருட்டுக் கொள்கையைத் தைரியத்துடன் எதிர்த்துப் பேசுவோரை நியாயஸ்தலங்களில் தண்டிக்கிறார்கள் அல்லது கூட்டத்திலிருந்து விலக்குகிறார்கள்.

தனி மனிதன் (லோபதாப முதலிய) உணர்ச்சிகளின் சமயத்திலும் யோசனை பண்ணுவதுண்டு. ஆனால் ஒரு கூட்டத்தின் உணர்ச்சியுடன் கலக்கும் போது சோதனை செய்வதில்லை. இதனுடைய தர்மப்புலன் மழுங்கிப்போகிறது. கூட்ட மனங்களில் மனிதத் தன்மையை நசுக்கிவிடுவதனால் மிகுந்த பயமுண்டாகிறது. ஏனென்றால் கூட்டப்புத்தி இயல்பில் அநாகரிக

மானது. அதன் சக்திகள் பூத சக்திகளைப் போன்றன. இருளின் பெரிய வலியை ஜாதி தனக்குப் பயன்படுத்திக் கொள்வதால் ஜாக்கிரதையாக இருக்கிறது.

சங்கட காலங்களில் ஒரு ஜனத்தின் தற்காப்புச் சிந்தையை ஆதிக்கமுடையதாகச் செய்தல் அவசியமே. அப்போது அதன் ஒற்றுமையுணர்ச்சி கடுமையான விழிப்பெய்துகிறது. இந்த மிகையுணர்ச்சி ஜாதியில் எப்போதும் சாகாதபடிச் செயற்கையுபாயங்களால் காக்கப்படுகிறது. ஒருவனுடைய வீட்டைத் திருடர் வந்து கொள்ளையிடும்போது அவன் போலீஸ் சேவகனுடைய தொழிலை மேற்கொள்ள வேண்டும்.

ஆனால் அவனுடைய சாதாரண ஸ்திதியே அப்படியாய் விட்டால் அவனுடைய வீட்டுச் சிந்தை மிகையாகி வீட்டாகே போவார் வருவோர் மேலெல்லாம் பாய்ந்து விழும்படிச் செய்கிறது.

இந்த மிகையுணர்ச்சி ஒருவன் கர்வப்படத்தக்க உடைமையன்று. அது மெய்யாகவே ஆரோக்கியத்துக்கு லக்ஷணமன்று. அது போலவே ஒரு ஜாதியின் தீராத தற்போதமும் ஜனங்களுக்கு மிகுந்த தீங்கு விளைவிக்கும். அதனால் தற்காலத்துக்குப் பயன் உண்டாவது போலே தோன்றினாலும் மனிதனுடைய நித்ய ஜீவனுக்கு நஷ்டமுண்டாகும்.

ஒரு கூட்டமும் சேர்ந்து யாதேனுமொரு குறுகிய நோக்கத்துக்குத் தம்மைப் பயிற்சி செய்து கொள்ளுமானால் பிறகு அதையே தளராமல் காத்து அதற்கு மரியாதை செலுத்த வேண்டுமென்று போதனை செய்தல் அந்தக் கூட்டத்திற்கு லாபகரமாகிறது.

ஒரு ஜன முழுவதையும் குறுகின ஆதர்ஸப்படி பயிற்சி செய்வதே ஜாதியக் கொள்கை. அது ஜனங்களுடைய உள்ளத்தைக் கவரும்போது தர்மக் குறைவையும் குருட்டறிவையும் விளைப்பது நிச்சயம். இந்த ஜாதியக் கொள்கையின் காலம் பிரமாண்டமான ஸ்வார்த்தமும் செருக்கும் தலைப்பட்ட காலம். இது நாகரிகத்தில் அசாசுவதமான ஓரிடைக் காலமேயன்றி வேறில்லையென்ற நம்பிக்கையை நாம் உறுதியாகப் பற்றி நிற்போம்.

மனித சரித்திரத்தின் இந்த அசாசுவதமான குணத்தைத் திருத்திசெய்யும் பொருட்டு சாசுவதமான வேலை செய்வோர் இனி வரப்போகிற உண்மையான விடுதலைக் காலத்துக்குத் தகுதியில்லாது போவார்கள்.

ஜாதியக் கொள்கை தடையின்றி வளர்வதனுல் மனுஷ்ய நாகரிகத்தின் ஆதார நீதி தன்னையறியாமலே மாறுபடுகிறது. சமூகத்து மனுஷ்யனுடைய உத்தம லக்ஷ்யம் பிறர் நலம். ஆனுல் ஜாதி தொழிலாளித்தனம் உடையதாகையால் அதற்குத் தக்கபடியே அதன் உத்தம லக்ஷ்யம் தன் நலம். இதனுலேயே தனி மனுஷ்யன் தனக்குத் தனக்கென்ற அவா உடையவனுக இருந்தால் பழிக்கப்படுகிருன். ஒரு ஜாதி அப்படியிருந்தால் புகழப்படுகிறது. இதனுல் எக்கத்துக்கிடமான நீதிக்குருட்டுத்தனம் உண்டாகிறது. அது ஜனத்தின் மதத்தை ஜாதியின் மதத்தோடு ஒன்ருகப் போட்டுக் குழப்புகிறது. இதனுலேதான் உலகத்தின் பெரும்பகுதியைக் கிறிஸ்தவ ஜாதியார் ஆளுவதனுலே கிறிஸ்து மதந்தான் உயர்ந்ததென்று சொல்லுவோர் சிலர் இருப்பதாகக் காண்கிறேம். இது ஒரு திருடன் களவுசெய்த சொத்தை அளவிட்டு அவன் மதக் கொள்கையை ஆதரிப்பதொக்கும். ஜாதிகள் தாம் பிற மனிதரை யதேஷ்டமாகக் கொன்று முடித்தது பற்றி ஆலயங்களில் விசேஷங்கொண்டாடுகின்றன. "டக" ஜாதிக் கள்வர்கூடத் தமது கொலையை நிறைவேற்றியது தாம் வணங்கிய தேவியின் கிருபையென்று நினைத்தார்கள் என்பதை மேற்படி ஜாதிகள் மறந்து விடுகின்றன. "டக" ஜாதியார் விஷயத்தில் அவர்களுடைய தேவதையை வெளிப்படையாகவே ஸம்ஹார மூர்த்தியென்று சொல்லி வணங்கினர். அது மேற்படி குற்றவாளி ஜாதியின் கொலையுணர்ச்சியைத் தெய்வமாக்கினவாறு தனி மனிதனுடைய மனமன்று, கூட்டத்தின் பொது உள்ளம். ஆதலால் தெய்விகமென்று கருதப்பட்டது. அதே மாதிரி நவீன சர்ச்சு (கிறிஸ்தவாலயங்களில்) ஜாதியின் பொது மனமென்ற கூட்டு நிலையில் ஸ்வார்த்தமும், அற்பச் செருக்கும், விரோதமும் தெய்வ பூசையுடன் கூசாமல் வந்து கலந்துகொள்ளுகின்றன.

தன்னலத்தை நாடி யுழைத்தல் முழுமையும் அஹங்காரமாகவே யிருக்கவேண்டுமென்று கட்டாயமில்லை. எல்லோ நலத்துடன் அது பொருந்தவுங் கூடும். எனவே ஆதர்சிகமாகப் பேசுமிடத்து ஜனஸ்வார்த்தத்தின் பிரகாசத்தை நாடும் ஜாதியக் கொள்கை அவமானமடைய ஹேதுவில்லை. ஆனுல் நாம் அனுபவத்தில் காண்பது யாதெனில் செல்வமடைந்த ஜாதி ஒவ்வொன்றும் பிறருக்குத் தீங்கு செய்யும்

ஸ்வார்த்தச் செயல்களிலேதான் அதை யடைந்திருக்கிறது. அதாவது வியாபார வேட்டைகளினாலும், அந்நிய தேச உடைமைகளாலும், அல்லது இரண்டும் சேர்ந்தாலும் என்க.

இந்த லௌகிகச் செல்வமிகுதி ஓயாமல் ஜனத்தின் ஸ்வார்த்த இயல்பைப் போஷிப்பதுமன்றி, ஒரு ஜாதிக்கு ஸ்வார்த்தம் (தன்னலம்) அவசியம். ஆதலால் அதுவே தர்மம் என்ற பாடத்தை மனிதரின் உள்ளத்தில் அழுந்தச் செய்கிறது. ஐரோப்பாவில் ஜாதியெண்ணத்தில் அழுத்தம் எப்போதும் வளர்ந்து செல்வதால் அது நேர்ச் செய்கையாலும் தொத்தும் திறத்தாலும் மனிதனுக்குப் பெரிய விபத்தாய்க் கொண்டு வருகிறது.

மனுஷ்ய சுபாவத்திலேயே தீமைகள் இருப்பது மெய்தான். நாம் தர்ம விதிகளை நம்பியிருந்தாலும், தன்னாட்சியில் பயிற்சி பெற்றிருந்தாலும் அவை நம்மையறியாமல் வெளியே கிளைத்துவிடுகின்றன என்பதும் மெய்தான். ஆனால் அவை தம் நெற்றியின் மீது பழிச்சூடு போட்டுக்கொண்டிருக்கின்றன. அவற்றின் வெற்றியே அவற்றின் கொடூர ரூபத்தை அதிக கோரமாகக் காட்டுகிறது. மனுஷ்ய சரித்திர முழுமையிலும் துன்பப்படுவோர் சிலரும், படுத்துவோர் பிறரும் இருக்கவே செய்வார்கள். தீமையை வெல்லுதல் எக்காலத்திலும் பரிபூர்ணமாக நிறைவேறாது. தீ எரிவது போல் நமது நாகரிகத்தில் அது தொடர்ச்சியாக நடக்கும் செய்கையாகும்.

நித்தியமான பரிபூர்ணத்வ லக்ஷ்யத்துக்கும், அதன் நிரந்தர ஸ்தானத்துக்கும் உள்ள பொருத்தமே ஸ்ருஷ்டி யென்று சொல்லப்படும். நன்மையெல்லும் உடம்பாட்டு லக்ஷ்யம் ஸாதனக் குறைவு என்ற எதிர்மறையுடன் சமவேகமாகச் செல்லும்மட்டும் அவ்விரண்டுள் முழுப் பரிவுண்டாகாதிருக்குமட்டும் நாம் துன்பத்துக்கும் நஷ்டத்துக்கும் பயப்படவேண்டா.

ஆதலால் முற்காலங்களில் யாதேனுமொரு ஜனம் கலகந் தொடங்கிப் பிறருடைய மனுஷ்ய உரிமையைப் பறித்துவிட முயன்றபோது சில சமயங்களில் அந்த ஜனத்துக்கு வெற்றியும் சில சமயங்களால் தோல்வியும் ஏற்பட்டது; அவ்வளவுதான். ஆனால் இந்த ஜாதியக் கொள்கை இன்று சர்வ சம்மதமாய்த் தனது தன்னலம் அளவிலே பிரமாண்டமாக இருப்பதுகொண்டு அதைத் தர்மமென்று காட்டத் துவேப்படுமிடத்தே அந்தக் கொள்கை பிறர் சொத்துக்களைச்

கொள்ளையிடுவது மாத்திரமேயன்றி மனுஷ்ய ஜாதியின் உயிர் நிலையைத் தாக்குகிறது. தர்ம விதியைப் புறக்கணிக்கும் புத்தியை மனிதருக்கு அவசரமாகவே விளைவிக்கிறது. ஏனெனில் ஜனம் தர்மவிதியைத் தெய்வீகமாக எண்ண, ஜாதி அந்த விதியைக் காற்றிலே தூற்றிவிடுகிறதெதனால் எனில், ஜனத்தைக் காட்டிலும் ஜாதியே பெரிதென்ற கொள்கை பலவிதமான தந்திரங்களால் ஜனங்களுக்குக் கற்பிக்கப்படுவதனால் என்க.

ஒரு நோய் மூளையைத் தாக்கும்போது அது மிகவும் கடுமையாகிறது என்று கேள்விப்படுகிறோம். ஏனென்றால் எல்லா விதமான வியாதி சக்திகளையும் இடைவிடாமல் முற்றுகை போடுவது மூளையேயாம். ஜாதியத் தன்னலக் கொள்கையின் உள் நிலைமை ஒரு ஜனத்திற்கு நேரிட்ட மூளை வியாதியைத் தவிர வேறில்லை. தற்காலத்து அந்த நோயின் அறிகுறிகள் எவையெனில் சிவந்த கண்களும், குவிந்த முட்டிகளும், கொடுஞ் சொற்களும், கொடுஞ் செயல்களுமாம். இயற்கையிலே உள்ள சொஸ்தமாக்கும் கருவிகளை அது நொறுக்கிப் போடுகிறது.

ஜன சமூகத்தில் உயிருக்கும் நல்ல வழிகாட்டும் சக்தி யாதெனில் ஆத்ம த்யாகமும் அனுதாபத்துக்கும் கூட்டுத் தொழிலுக்கும் இடமாகிய தர்ம சிந்தையுமே என்க. சூழ்ந்திருக்கும் வஸ்துக்களுடன் அனுகூல சம்பந்தம் கொண்டிருப்பதே அதன் தொழிலாம்.

இன்னும் பெருங்கேடு யாதெனில், ஜனங்களின் இந்தக் கோணல் ரீதியானது தேச பக்தியென்ற பகட்டான பெயர் பூண்டு கொண்டு தன்னை ஒரு மேலான தர்மமாகக் காண்பித்துக்கொண்டு திரிகிறது. சுழலுகிற தனது தொத்து நோயை உலக முழுதும் பரப்பித் தன் ஐ்வரத்தை ஆரோக்கியத்தின் சிறந்த குறியென்று முழங்குகிறது. இயற்கையில் தீங்கில்லாத ஜனங்களின் மனதில் பொறாமையுண்டாக்குகிறது.

"ஜன்னி நிலையில் இருக்கும் அக்கம்பக்கத்துத் தேசத்தாருக்குள்ள பலம் நமக்கில்லையே, அவர்கள் பிறருக்குச் செய்யும் தீமை நம்மால் செய்ய முடியவில்லையே, நாமன்றோ தீமையனுபவிக்கிறோம்" என்று பொறாமையுறச் செய்கிறது.

எனது ஐரோப்பிய நண்பர்கள் அடிக்கடி என்னிடம் "இத்தனை கொடிய தீமையை அழிக்க உபாயமென்ன?" என்று கேட்கிறார்கள். வெறுமே எச்சரிக்கை செய்துவிட்டு

மாற்றுவழி சொல்லாதிருக்கிறேனென்றே என்மேல் பலர் குற்றஞ் சொல்லுகிறார்கள். ஒருவித அனுஷ்டானத்தால் நன்மையுண்டாகுமென்று நினைக்கிறோம். அனுஷ்டானத்துக்குப் பின்னே மறைந்து நிற்கும் உள்ளநிலை தவறாக இருந்தால் அனுஷ்டானம் இன்றில்லாவிட்டாலும் நாளைக்குத் தீமையுண்டாகவே செய்யும் என்பதை நாம் மறந்து விடுகிறோம். இன்று ஒரு ஜாதி கொண்டிருக்கும் அனுஷ்டானம் நாளை எல்லா ஜாதிக்கும் பரவும். மனிதர் தமது மிருகக் குணங்களையும் கூட்ட கோப தாபங்களையும் விடும் வரை புதிய அனுஷ்டானம் புதியதொரு துன்பக் கருவி ஆகுமேயன்றி வேறில்லை. அல்லது வியர்த்தமாகும். நாம் தார்மிகமாக ஸத்குணத்தையும் கார்ய ஸித்திக்குரிய அனுஷ்டானத்தையும் ஒன்றாகக் கருதிக் குழப்பியே பழகியிருக்கிறோமாதலால் ஒவ்வொரு புதிய அனுஷ்டானமும் தோற்றுப்போகும்போது தர்ம விதியினிடத்திலேயே அவநம்பிக்கை கொள்ள நேரிடுகிறது.

ஆதலால் நான் எந்தப் புதிய அனுஷ்டானத்திலும் நம்பிக்கை வைப்பதில்லை. தெளிவான யோசனையும் பெருந்தகைமையுடைய உள்ளமும் நேர் நடையுமுடையவர்களாய் உலக முழுதிலும் ஆங்காங்கே இருக்கும் தனித்தனி மனிதர்களிடம் நம்பிக்கைகொண்டிருக்கிறேன். அவர்களே தர்மத்தின் உண்மைக்கு வாய்க்கால்களாவார்கள். நமது தார்மிக லக்ஷ்யங்கள், உளியும் சம்மட்டியும் வைத்துக்கொண்டு வேலை செய்யவில்லை. சிற்பிகளிடம் அனுமதி கேட்காமல் மரம் வளர்வதுபோல் மண்ணுக்குள் வேர்களையும் இயற்கையிலேயே விடுகின்றன. இந்தக் காரணத்தாலேதான் ஜப்பானில் ப்ரஞ்ச் தேசத்து யௌவனப் பிராயமுடைய தர்மிஷ்டனொருவனைக் கண்டபோது இனி நாகரிகத்தில் உயர்ந்த காலம் வருவதைப்பற்றி என் மனதில் நிச்சயமேற்பட்டது. ஐரோப்பாவில் அழிவின் பெரிய சக்திகள் களிக்கூத்தாடிக் கொண்டிருக்கையிலே நான் இந்தத் தனியான வெளிக் கீர்த்தி பெறாத ப்ரஞ்சு இளைஞனைக் கண்டேன். அவனுடைய முகத்தில் புதிய ஸூர்யோதயத்தின் ஒளி வீசிற்று. அவனுடைய வாக்கில் புதிய உயிரின் அதிர்ச்சி தோன்றிற்று. எனவே ராஜ்ய தந்த்ரிகளின் பஞ்சாங்கத்தில் பதிவாகாவிடினும் மஹத்தான புதிய யுகம் ஏற்கனவே பிறந்துவிட்டதென்பதை நான் உணர்ந்துகொண்டேன்.

"ஜாதி" என்ற வியாஸம் முற்றிற்று.

# 27

## குறிப்புகள்

ஸௌந்தர்ய மஹால் உபந்யாஸத்தில் கர்னல் வெட்ஜ்வுட் இந்த மாகாணத்தாருக்கு ஓரிரண்டு நேர்த்தியான புத்திமதி சொல்லியிருக்கிறார். இந்தக் கவர்ன்மெண்டுக்குச் சட்ட ஸபையில் தோன்றும் எதிர்க் கக்ஷி நாளுக்கு நாள் வளர்ச்சி யெய்தித்தீரும். பார்லிமெண்ட் அனுஷ்டானங்களைப் பழமைப்பட்ட சிதலமான, பிளவுபட்ட முறைகளிலே அனுஷ்டிக்கும் ராஜாங்கத்தாருக்கு எதிர்க் கக்ஷி மேன் மேலும் வளர்ச்சி பெறுமென்பது திண்ணம். முதலாவது விதிகளையும், உபவிதிகளையும் தக்கவாறு மாற்றி ஒரு சீட்டாளிக் கூட்டத்துக்கொரு பிரதிநிதியென்று ஏற்படுத்த வேண்டும். வகுப்புவாரிப் பிரதிநிதி முறையை ஒழித்து விடவேண்டும். அது வெறும் சதி, ஏமாற்றென்பது ருஜுவாய் விட்டது. பிராமணரல்லாதாருக்குத் தனியாக ஸ்தானங்கள் ஏற்படுத்தியது புத்தியில்லாத குழந்தை விளையாட்டன்றி மற்றில்லை. மஹமதியர்களுக்குப் பொதுக் கூட்டத்துடனே கலந்து சீட்டுப் போடலாமென்ற ஏற்பாடு வைத்திருந்தால், அவர்கள் பொதுவாக எல்லாப் பிரதிநிதிகளிலும் யார் யார் முஸ்லீம் அனுகூலங்களைக் கவனியாதிருந்தனரோ, அவர்களையெல்லாம் நீக்க முயன்று ஸபையில் தமக்கு அதிக பலம் ஏற்படுத்திக் கொண்டிருப்பார்கள். இ போது அவர்கள் குறிப்பிட்ட சிலரையன்றி, மற்றப் பிரதிநிதிகளின் மீது எவ்விதச் சக்தியுமில்லாதிருக்கிறார்கள். அச் சிலரோ சட்ட சபையில் எப்போதும் சிறு பகுதியாகவேயிருப்பார்கள் என்று கர்னல் வெட்ஜ்வுட் சொன்னார்.

### தீர்வைப் பாகுபாடு

குறிப்பிட்ட அளவைக் காட்டிலும் அதிக விஸ்தாரமான பூஸ்திதியுடையவர்களுக்கு அதிகமான தீர்வை விதித்தால், அவர்கள் அந்த ஸங்கடத்தைப் பொறுக்க முடியாமல், தங்களுடைய நிலத்தில் மிஞ்சின பகுதிகளைச் சிறு குடியானவர்களுக்கு விற்கத் தலைப்படுவார்கள். அதினின்றும், பூஸ்திதி முழுமையும் இப்போது மூன்றே முக்கால் மனிதரின் கையில் சிக்கிக் கொண்டிருக்கையிலே பண்ணைத் தொழிலாளிகள் தன் தொழிற்பயனை யுண்ணமாட்டாத

கூலியாட்களாக இருக்கும் நிலைமை மாறிவிடும். பூஸ்திதி ஆதி திராவிடரிடையேயும், மற்றக் குடியானவரிடையேயும் அதிகமாகப் பரவுதலெய்தியிருக்கும். இதைக் கருதிப் பெரிய பூஸ்திதிகளுக்கு அதிகத் தீர்வை விதிக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று கர்னல் வெட்ஜ்வுட் அபிப்பிராயப்படுகிறார். இந்தியாவில் பூஸ்திதி விவகாரத்தை முற்றிலும் நியாயமாகத் தீர்த்துக்கொள்ள உத்தேசித்திருக்கிறோம். வரம்புக்கு மிஞ்சின தீர்வையை ஒரு பகுதியாருக்கு மாத்திரம் விதித்தல் அநியாயமென்பதில் ஐயமில்லை. கொள்ளைக்காரனும் கொள்ளையடிக்கக் கூடாது. உலகத்தில் கொள்ளை கூடாதென்று நிலைநிறுத்த வந்த தர்மிஷ்டர்களும் கொள்ளையடிக்கக் கூடாது. இப்போது கர்னல் வெட்ஜ்வுட் காட்டுகிற பாதை கடைசியாக லெனினுடைய கொள்கையில் வந்து முடியும். அதாவது, பூஸ்திதிகளையெல்லாம் ராஜாங்கத்தார் ஜனங்களுக்கென்று சொல்லிப் பலாத்காரமாகப் பறித்துக்கொண்டு உடையவரைத் தெருவில் விடவேண்டுமென்ற கொள்கை.

இங்ஙனம் கொள்ளையிடாமல், ஏழைகள், அதாவது, பூஸ்திதியில்லாதவர்களிடம் ஊர்ப் பொது நன்மைக்கும், அபிவிருத்திக்குமுரிய ஸகலவித வேலைகளும் வாங்கிக் கொண்டு, அதற்குக் கைம்மாறாக, ஒருயிர் மிச்சமில்லாமல், அத்தனை ஏழைகளுக்கும் தகுந்த ஆஹாரம் கொடுத்துவிட வேண்டுமென்று சட்டஞ் செய்துவிட்டால், போதும். ஒருயிரேனும், ஒருபோதேனும், சோறின்றி இளைக்க ராஜாங்கம் இடங்கொடாதென்ற உறுதிப்பாடு ஏற்பட்டுவிடும். அடே அப்பா! பசிப் பயமொன்று மாத்திரம் நீங்கிவிட்டால் மனித ஜாதி என்ன மேன்மையடைந்து நிற்கும்! இங்ஙனம், ஸமாதானமான முறையில் இந்தப் பசித் தொல்லையை இந்தியா மாற்றிவிட்டிருப்பதைக் கண் முன்னே காணில், மற்ற உலகத்து நாடுகளும் இந்த அறநெறியைப் பின்பற்றியொழுகும். இதற்கு ஸ்வராஜ்யம் வேண்டும்!

## இங்கிலாந்தில் தொழிலற்றோரின் நிலைமை

தொழிலின்றியிருப்போருக்குள்ளேதான், இங்கிலாந்து போன்ற தேசங்களில், ருஷியக் கொள்கைகள் வெகு தீவிரமாகப் பரவி வருகின்றன. பொதுவாக அக் கொள்கைகள் தொழிலாளரைக் குறித்தன. ஆதலால் தொழிலாளரிற் பலர் அக் கொள்கைகளை அங்கீகாரம் செய்கிறார்கள். எனினும்

அக் கொள்கைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதில் தொழிலாளர் காட்டும் சிரத்தையைக் காட்டிலும், தொழிலின்றி, உணவின்றி வருந்தும் கூட்டத்தார் பல மடங்கு அதிக சிரத்தை காட்டுகிறார்கள். எனவே; பொது வாக ஜனோபகார சிந்தையால் மாத்திரமேயன்றி, ராஜ்ய தந்திரத்தின் அவசரங்களாலும் ஐரோப்பிய ராஜதந்திரிகள் தத்தம் நாடுகளில் தொழிலற்றிருப்போருக்கு ஏதேனும் நிவாரணம் செய்ய வேண்டுமென்ற அவசியத்துக்குட் பட்டிருக்கிறார்கள். எனவே, இங்கிலாந்தில், தொழிலில்லா தோரைப் பற்றி ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கும விசாரணை சபை யொன்றுளது. அதில் வந்து தம்முடன் கலந்து வேலை செய்யும்படி தொழிற் சங்கங்களின் ஐக்ய மஹா ஸமாஜத்தாருக்கு ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் அழைப்புப் பத்திரமனுப்பினார்கள். அந்தத் தொழிலாளிகள் இது தம்மால் இயலாதென்று சொல்லி மறுத்து விட்டார்கள். ஸர்க்கார்க் கமிட்டி மூலமாக யாதொரு பயன் படக்கூடிய தொழிலும் நடக்காதென்றுணர்ந்த அத் தொழிற் பிரதிநிதிகள் அவ்விஷயமாகத் தம்மால் இயன்ற பரிஹாரங்கள் செய்யும்பொருட்டுத் தம்முடைய சொந்த ஆலோசனை ஸமிதியொன்று நியமனம் செய்திருக்கிறார்கள்.

## ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் சுருக்கு யோசனை

கவர்ன்மெண்ட் காரியங்களில் நியமிக்கப்பட்டிருக்கும் தொழிலாளிகளின் வேலை நேரத்தைக் குறைத்தால் அவர் களுக்கும் ஆறுதல் ஏற்படும்; தொழிலின்றியிருப்போர் பலருக்கு ராஜாங்கத்தார் தொழிலேற்படுத்திக் கொடுக்கவும் வழியுண்டாகும். இங்ஙனம் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் சொல்லிய உபாயத்தைத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும், ஸர்க்கார் வேலையாட்களும் நிராஹரித்து விட்டனர். ஏனென்றால், குறைந்த நேரம் வேலை செய்து, தொழி லாளிகள் அதற்குத் தக்கபடி குறைந்த சம்பளம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கவர்ன்மெண்ட் சொல்லுகிறது. இப்போதுள்ள சம்பளத்துக்குக் கீழே வாங்கினால் ஜீவிக்க முடியாதென்று தொழிலாளிகள் சொல்லுகிறார்கள்.

## இந்தியாவில் தொழிலற்றிருப்போர்

இங்கிலீஷ் படித்தவர்களுக்குள்ளே குறைவாகவும் அதாவது ஆயிரக்கணக்காகவும், இங்கிலீஷ் படிப்பில்லா தவர்களுக்குள்ளே மிகுதியாகவும் அதாவது லக்ஷக்

கணக்காகவும் யாதேனும் தொழில் செய்து பிழைக்க வேண்டுமென்ற ஆவலும் தொழில் செய்யுந் திறமையுமுடையோராயினும் தொழிலகப்படாமல் வறுமைப் பிசாசினால் கிழிப்புண்டு மடிகிறார்கள். ஏனென்று கேட்பாரில்லை. ராஜாங்கத்தார் இந்த விஷயத்தை ஸ்மரிக்கவேயில்லை. ராஜாக்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள் இதைக் கருதவில்லை. மடாதிபதிகள், தர்மகர்த்தாக்கள் இதனை ஸ்மரிக்கவில்லை. ஜனத் தலைவர்கள், ராஜ்ய தந்திரிகள் இதைக் கருதவில்லை. உபந்யாஸகர்களும், பத்திராதிபர்களும், உபாத்தியாயர்களும் இதைப் புறக்கணித்து விடுகிறார்கள். இந்தியாவிலே பசியால் மடிவோரைப் பார்த்திரங்குவாரில்லையா? தெய்வமில்லையா?

---

# 28

## ஹாஸ்யம்

### பத்திரிகைகளில் "பால்" வேற்றுமை

உயிரில்லாத வஸ்துக்களுக்குக்கூட ஆண்பால், பெண்பால் கற்பித்தல் கவிகளின் வழக்கம். ஸம்ஸ்க்ருதம் முதலிய புராதன பாஷைகள் சிலவற்றிலும், ப்ரெஞ்சு, ஹிந்தி முதலிய நவீன பாஷைகள் சிலவற்றிலும், பெரும்பான்மையான பொருட் பெயர்களுக்கு மட்டுமேயன்றி, குணப் பெயர்களுக்குங் கூடப் பால் வேற்றுமைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தப் பாஷைகளைக் கற்போர் சொற்களின் இறுதியெழுத்துக்களைக் கொண்டும், நெடுங்கால அனுபவத்தைக் கொண்டும் இன்ன சொல் இன்னபாலைச் சேர்ந்ததென்று நிர்ணயித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் தமிழ், இங்கிலீஷ் முதலிய பெரும்பான்மையான பாஷைகளில் இந்தக் கஷ்டம் கிடையாது. "மக்கள், தேவர், நரகர் உயர்திணை; மற்றுயிருள்ளவும், இல்லவும் அஃறிணை" என்ற தமிழிலக்கண விதியே பொதுவாக எல்லாப் பாஷைகளுக்கும் பொருந்தி நிற்கிறது. எனிலும், இப்போது சிறிது காலமாகத் தமிழிலேயே, பத்திரிகைகளின் பெயர்களுக்குச் சிலர் ஆண்பால், பெண்பால் வகுக்கத் தொடங்கியிருப்பது மிகவும் விநோதமாகத் தோன்றுவதால், இங்கு அதைக்

குறித்து எழுத நேர்ந்தது. முதலாவது இவ் வழக்கம் "தேச பக்தன்" பத்திரிகையில் தொடக்க மெய்திற்றென்று நினைக்கிறேம். அப்பத்திரிகையின் பழைய பத்திராதிபராகிய ஸ்ரீமான் கல்யாண ஸுந்தர முதலியாருடைய காலந்தொட்டே அதில், "சுதேசமித்திரன் சொல்லுகிருன்", "தேச பக்தன் சொல்லுகிருன்" என்பன போன்ற பிரயோகங்கள் வழங்கி வருகின்றன. இப்போது ஸ்ரீமான் முதலியார் நடத்தி வரும் "நவசக்தி"ப் பத்திரிகையிலும் அவ்வழக்க மிருந்து வருகிறது. எனவே, சில தினங்களுக்கு முன் ஏதோ தொழிலாளர் விஷயமாக மேற்கூறிய இரண்டு பத்திரிகை களுக்குள்ளே எழுந்திருக்கும் விவாதம் மிகவும் ரஸமாக இருக்கிறது. "தேச பக்த"னை ஆண்பாலாக்கி ஸ்ரீ முதலியார் எழுதி வருகிருர். "தேச பக்தன்" புதிய பத்திராதிபரோ, "நவசக்தி"யைப் பெண் பாலாக்கி விட்டார்! திருஷ்டாந்தமாக மேற்படி ஆண்பால் பத்திரிகையிலுள்ள பின்வரும் வசனங் களைக் கவனியுங்கள். "தேச பக்தன் தன் பிரதிநிதியை ஏன் அனுப்பவில்லை யென்று நவசக்தி கேட்கிருள்", "அவர் சொல்லியனுப்பியதையும் நவசக்தி மறந்து விட்டாள் போலும்." இந்தப் புதிய வழி ரஸமாகத்தான் இருக்கிறது. ஆனல் இதைப் பொது வழக்கமாக்க முயன்றல், பலவித ஸங்கடங்கள் ஏற்படுமென்று தோன்றுகிறது. முக்கியமாக, அன்ய பாஷைப் பத்திரிகைகளைக் குறித்துப் பேசுமிடத்தே தான் அதிகக் கஷ்டம். "லண்டன் டைம்ஸ்", "ஈவினிங் ந்யூஸ்" என்பன பலவின்பாற் பெயர்களாதலால் 'டைம்ஸ் சொல்லுகின்றன', 'ஈவினிங் ந்யூஸ் பரிஹாஸம் பண்ணு கின்றன' என்றெழுத நேரும்! மேலும் 'பெர்லினர் தகப்ளாத்', 'ப்ராங்க்புர்த்தெர் ஜெய்துங்' என்பவை போன்ற ஜெர்மானியப் பத்திரிகை நாமங்கள் ஆண்பாலோ பெண்பாலோ, ஒன்றன்பாலோ, பலர்பாலோ, பலவின்பாலோ அறிகிலோம். இவை போன்ற சிரமங்களைக் கருதி ஸாதாரண மாக, வழக்கம் போலவே, எல்லாப் பத்திரிகைகளின் பெயர் களையும் ஒன்றன்பாலாகவே வழங்கி விடுதல் நன்றென்று நினைக்கிறேன்.

### "யானைக்கால்" வியாதிக்கு முகாந்தரம்!

தென் இந்தியாவில் ஒரு நகரத்தில் ஒரு செல்வ மிகுந்த வியாபாரிக்கு இரண்டு கால்களிலும் யானைக்கால் நோய் வந்து கால்கள் உரல்களைப் போலாய்விட்டன. ஆனல் அந்தச்

செட்டியார் தமக்கு யானைக்கால் நோயென்று சொல்ல மன மில்லாமல், யாராவது, "காலிலே என்ன?" என்று கேட்டால் தம்மிடம் மோட்டார் சைகிள்வண்டி யிருப்பதாகவும், அதில் ஏறிச் செல்லும்போது, அது தம்மை எங்கேயோ மரத்தில் மோதிக் கீழே தள்ளிவிட்டபடியால் கால்கள் வீங்கி யிருக்கின்றன என்றும் சொல்வதுண்டு. அது போல் ஆங்கிலேய ராஜதந்திரிகளில் சிலர் தமது தேசத்திலேற் பட்டிருக்கும் வறுமைக்கும் பணத்தட்டுக்கும் காரணம் சொல்லும்போது தங்கள் தேசத்தில் செழித்துக் கிடக்கும் செய் பொருள்களை மற்ற ஐரோப்பிய தேசத்தார்கள் விலைக்கு வாங்க முடியாதபடி பரம ஏழைகளாய் விட்டபடியால் தங்க ளுடைய வியாபாரம் வீழ்ச்சி பெற்றிருப்பதாகவும் அதனால் பணக் கஷ்டம், தொழிலின்மை மிகுதி முதலியன தோன்றி விட்டதாகவும் "ஷரா" சொல்லுகிறார்கள். ஆனால் மேற் கூறிய இதர ஐரோப்பிய தேசங்களின் ராஜ தந்திரிகள் தத்தம் நாடுகள் ஏழ்மைப்பட்டதற்கு என்ன முகாந்தரம் சொல்லித் தப்புகிறார்களோ தெரியவில்லை. அவர்கள் இங்கிலாந்தின்மீது குறை சொல்லுகிறார்களோ அல்லது, ஆசியாவைக் காண்பிக்கிறார்களோ அறியோம்.

புதிதாகச் சென்னை நிர்வாஹ ஸபையில் சேர்ந்த பிராமண ரும், (பஞ்சமரும், ஐரோப்பியருமாகிய பிறரும்) அல்லாதார் வகுப்பைச் சேர்ந்த மந்திரிகள் தமிழர்களும் அல்லாதார் என்பதைத் தமிழராகிய பிராமணரும் பஞ்சமரும் பிறரு மல்லாதார் ஒருவர் என்னிடம் வந்து முறையிட்டார். ஹும்! இந்த பாஷை சரிப்படாது. நடந்த விஷயத்தை நல்ல தமிழில் சொல்லுகிறேன். தமிழ் வேளாளரொருவர் இப்போது மந்திரிகளாகச் சேர்ந்திருக்கும் ரெட்டியாரும், நாயுடுவும், ஸ்ரீராம ராயனிங்காரும் தெலுங்கர்களென்றும், தமிழ் நாட்டிற்குப் பிரதிநிதியாக இவருள் எவருமில்லாமை வருந்தத்தக்க செய்தியென்றும் என்னிடம் வந்து முறை யிட்டார்.

## "ஜஸ்டிஸ் பாடம்"

எனக்கு "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் வாசித்த வியாஸ மொன்று மேற்படி கதை கூறி வருகையிலேயே ஞாபகத்துக்கு வருகிறது. அதில் அந்த "ஜஸ்டிஸ்" பத்திராதிபர் "ஹிந்து", பத்திராதிபருக்குப் பல பல ஞானோபதேசங்கள்

செய்திருக்கிறார். அவற்றின் மொத்தக் குறிப்பு யாதென்றால் ஆங்கிலேய அதிகாரிகளின் ஆட்சியை இந்த க்ஷணமே பஹிஷ்காரம் செய்துவிட வேண்டுமென்ற "காங்கிரஸ்" கக்ஷியைச் சேர்ந்த பத்திராதிபர் யார் மந்திரியாக வந்தாலும் கவனிக்கக் கூடாதென்பது; அவர்களிடமுள்ள குணதோஷங் களை எடுத்துக் கூறவும், அந்த ஸ்தானத்துக்குப் பிறரைச் சிபார்சு செய்யவும் "ஹிந்து"வுக்குத் தகுதி கிடையாதென்பது.

ஏன் தகுதி கிடையாது? அதைக் குறித்துத் தர்க்க மெப்படி? "ஹிந்து" ஜனங்களுக்குப் பிரதிநிதி; அதிகாரி களுக்கு விளக்கு. ஜனங்களுடைய நன்மைக்கிசைந்தவாறு அதிகாரிகள் நடக்கும்படி கவனிக்க வேண்டியது அந்தப் பத்திரிகையின் கடமை. இந்த ராஜாங்கத்தை மாற்றி இதைக் காட்டிலும் தர்மமான ராஜாங்கம் ஸ்தாபிக்க வேண்டு மென்று நாங்கள் முயற்சி செய்கிறோம். இதனிடையே இந்த அதிகாரிகள் எங்கள் வீடுகளில் தீயைக் கொளுத்தினால் நாங்கள் ஒன்றும் பேசாமல் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டுமென்று "ஜஸ்டிஸ்" பத்திராதிபரின் தர்க்க சாஸ்த்ரம் போதிக்கிறதா? நாங்கள் ராஜாங்கத்தைப் புதுப் பிக்க விரும்புவது பற்றி நாங்கள் இவர்களுக்கு உதவி செய்வதை நிறுத்துவோம். இவர்கள் செய்யும் தவறுகளைக் கண்டனம் செய்துகொண்டிருப்போம். ஜனங்களுக் கெடுத்துக் காட்டி, அந்த உபாயத்தின் மூலமாக, இவர்கள் தங்கள் தவறுகளை நீக்கிக் கொள்ளும்படி வற்புறுத்துவோம். ஜன கோபத்துக்கு இவர்கள் எப்போதும் அஞ்சித் தீரவேண்டு மென்பதை நாம் அறிவோம். எனவே இவர்களுக்கும் நமக்குமிடையே நிகழ்ச்சி பெற்றுவரும் தர்ம யுத்தத்தில் அந்த அறிவைப் பயன்படுத்தாமல் விடமாட்டோம். எங்களு டைய தர்க்கம் "ஜஸ்டிஸ்" பத்திரிகைக்குத் தெளிவுபடுகிற தென்று நினைக்கிறோம்.

### அன்ய வஸ்து பஹிஷ்காரம்

"ஹிந்து" பத்திராதிபரிடம் "ஜஸ்டிஸ்" பத்திராதிபர் மற்றொரு குற்றம் கண்டு பிடிக்கிறார். அதாவது, அன்ய வஸ்து பஹிஷ்காரத்தை ஜனங்களுக்குப் போதித்துவிட்டுத் தாம் அன்ய வஸ்துக்களின் விளம்பரங்களுக்குத் தமது பத்திரிகை யில் இடங்கொடுக்கிறாரென்ற குற்றம்! சபாஷ்! இந்தக் குற்றத்துக்காக "ஹிந்து" பத்திராதிபருக்குப் பெருந் தண்டம் விதிக்கலாம்! அதிலும் "ஜஸ்டிஸ்" பத்திரிகை

நம்மை ஐரோப்பிய வியாபாரிகளுடைய விளம்பரம் போடும் குற்றத்துக்காகத் தண்டனைக்குட் படுத்தஅதிகாரமுமுடையது ! ஐரோப்பிய ஸம்பந்தமே அங்கில்லையே ! இது குற்றமென்று "ஜஸ்டிஸ்" சொல்வது பேதமை. விளம்பரங்களில்லாமல் இக்காலத்தில் பத்திரிகை நடத்த முடியாது. இது இந்தியருக்குத் தெரியும். ஆதலால் பத்திரிகைக்குள்ளே பத்திராதிபர் எழுதியிருக்கும் கருத்தைக் கவனித்து நடப்பார்களேயன்றி விளம்பரத்தைக் கவனித்து தேசக் கடமையை நிர்ணயிக்க மாட்டார்கள். "ஹிந்து" பத்திரிகையில் "சுருட்டு" விளம்பரம் போட்டிருக்கிறது. அதனின்றும் "ஹிந்து" பத்திராதிபர் உலகத்தாரையெல்லாம் புகையிலைச் சுருட்டுக் குடிக்கும்படி வற்புறுத்துகிறாரென்று நிச்சயித்தல் பொருந்துமா ? "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் "காந்தி சரித்திரம்" என்ற புஸ்தகத்தின் விளம்பரம் ப்ரசுரிக்கப் பட்டால் அதினின்றும் "ஜஸ்டிஸ்" பத்திராதிபர் மஹாத்மாவின் கொள்கைகளைப் பரப்ப விரும்புகிறாரென்று நிச்சயித்துவிடலாமா ? "ஹிந்து" விளம்பரங்களைப் பிரசுரம் செய்வதை நிறுத்திவிட்டால், ஜஸ்டிஸின் வருமானம் அதிகப்படுமென்பது அப் பத்திரிகையின் ஆட்சேபத்திற்குக் காரணமோ ?

அப்படி நிச்சயிக்கும்படி இந்தியர்கள் அத்தனை மூடர்களல்லர். மேலும், மனம் வேறு, சொல் வேறு, செயல் வேறாக நிற்பது தவறென்று, 'ஜஸ்டிஸ்' பத்திராதிபர் பிறருக்குப் போதிப்பதைப் பார்த்து எனக்கு மேன்மேலும் நகைப்பு விளைகிறது.

---

## 29

## சில குறிப்புகள்

### கட்டாயக் கூலி

சிம்லா பிரதேசங்களிலும், அவற்றையடுத்த குமாலன் பிரதேசங்களிலும் கட்டாயக் கூலி முறை இன்றும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. எவராவது நிர்வாக உத்தியோகஸ்தர் அல்லது ராணுவ உத்தியோகஸ்தர் அல்மோரா, நைநிதல், கட்வால் என்ற ஜில்லாக்களில் யாத்திரை செய்வாராயின் "பட்லாரி" எனப்படும் கிராமாதிகாரிகளுக்கு

இத்தனை கூலியாட்கள் தயார் செய்து கொடுக்கும்படிக் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது. பட்லாரியாரை வேண்டுமானாலும் கூப்பிடலாம். அங்ஙனம் மைல் கணக்காக நடந்து வந்து பிறகு மைல் கணக்காக மூட்டைகளைச் சுமந்து சென்று மீட்டும் அந்தக் கூலியாட்கள் தத்தம் வாஸஸ்தலங்கள் போய்ச் சேர மூன்று நாட்கள் பிடிக்கின்றன. இந்த மூன்று நாளுக்கும் சேர்த்துச் சம்பளம் எவ்வளவு தெரியுமா ? ஆறணா. மகன் சாகக் கிடக்கும்போது பிதாவைக் கூலி வேலைக்கழைத்தால் அப் பிதா தன் மகனைக் கவனியாமல், துரைக்கு மூட்டை சுமக்க வந்து தீர வேண்டும். வராவிட்டால் 5 ரூபாய் அபராதம். இந்த மாதிரி அந்த ஜில்லாக்களில் வசிப்போர் கட்டாய வேலைக்கு வரவேண்டுமென்று ஸர்க்காருக்கும் அந்த ஜனங்களுக்கும் நெடுங் காலத்துக்கு முன்னே செய்து கொள்ளப் பட்டதோர் உடம்பாடிருக்கிறதாம் ! பின் சந்ததியாரை ஜில்லாக் கணக்காக அடிமைகளாக இருக்கும்படி பூர்வ ஸந்ததியாரில் ஒரு சில மனிதர் எழுதிக் கொடுக்கும் உடம்பாடு செல்லாதென்பதை நம் அதிகாரிகள் அறிய மாட்டார்கள் போலும் ! சென்ற 18 வருஷங்களாக இந்த அனுஷ்டானத்தை ஒழித்து விடும்படி அந்தப் பிரதேசத்தார் ஸர்க்காருக்கு ஓயாமல் விண்ணப்பஞ் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த விண்ணப்பங்களை அதிகாரிகள் கழிவுக் காகிதக் குப்பையிலே போட்டுவிட்டுச் சும்மா இருந்து வருகிறார்கள்.

## சாத்விக எதிர்ப்பு

ஆனால் இந்தியாவில் தோன்றியிருக்கும் புதிய ஸாத்விக சக்தி ஹிம்லாக் குன்றுகளையும் சூழ்ந்து விட்டது. ஜனவரி 13-ஆம் தேதியன்று அல்மோரா ஜில்லாவிலுள்ள “ வ்யாகேசுரம் ” என்ற ஊரில் ஒரு பெரிய சந்தை நடந்தது. அப்போது ஜனங்களெல்லாரும் கூட்டங் கூடி “ கூலி உதார் ” என்று வழங்கப்படும் இந்தக் கட்டாயக் கூலி முறைமைக்கு இனி உட்படுவதில்லையென்று பிரதிக்ஞை செய்து கொண்டார்கள்.

இரண்டு மூன்று ஜில்லா வாசிகள் அத்தனை பேரையும் ஒருங்கே கூலியாட்களாகப் பாவித்து நடத்தும் இந்த மிருகத்தனமான முறைமையால், ஜனங்கள் சில சமயங்களில் பனியிலே மூட்டை சுமக்கமாட்டாமல் விறைத்துச் செத்துப் போய் விடுகிறார்கள். இந்த முறையினிடம் உண்டாகிய

அருவருப்பு மிஞ்சி ஜனங்கள் கலகஞ் செய்யக்கூடிய நிலையிலிருக்கிறார்களென்று மிஸ்டர் ஸி. எப். ஆண்ட்ரூஸ் தெரிவிக்கிறார். இதையும், உத்தியோகஸ்தர்களுக்குக் காய் கறி, ஆடு, கோழி, ரொட்டி மா, விறகு முதலியன ஜனங்களிடம் பெறும் முறையையும் நாட்டில் வைத்தாதரிக்கும் ராஜாங்கத்தார் நாகரிகப் பதவியுடையவர்களாக மாட்டார்கள்.

### கௌரவ * ராம ராயனிங்காரின் ஸமத்வ ஞானம்

சில தினங்களின் முன்பு அமலாபுரத்தில் பஞ்சமர்களின் பிரதிநிதிக் கூட்டமொன்று நம் மாகாணத்துப் புதிய பிராமணரல்லாத மந்திரிகளை ஸந்தித்தபோது அம்மந்திரிகளில் ஒருவராகிய ஸ்ரீமான் ராமராயனிங்கார் மிகவும் ரஸமாகப் பேசியிருக்கிறார். இதுவரை பிராமணரல்லாத வகுப்பினர் பஞ்சமர்களிடம் தக்கபடி அனுதாபம் செலுத்தாமல் இருந்து வரும் காரணம் பிராமணர்களுக்கு மன வருத்தமுண்டாகுமென்ற பயத்தைத் தவிர வேறில்லை யென்றும், இப்போது பிராமணரல்லாதாரில் மேற்குலத்தார் பிராமணர்களின் ஆதிக்கத்தை உதறி எறிந்து விட்டபடியால், இனிமேல் பிராமணரல்லாதார் பஞ்சமர்களை மிகவும் ஆதரிக்கத் தொடங்கி விடுவார்களென்றும் இந்த மந்திரி சொன்னார். மேலும் இனிமேல் பிராமணரல்லாதோரில் மேற்குலத்தார் பஞ்சமர்களைப் பரிபூர்ண ஸமத்வத்துடனும் சொந்த சகோதரர் போலவும் நடத்த முற்றிலும் விருப்பத்தோடிருக்கிறார்கள் என்று இவர் சொன்னார். இங்ஙனம் இவர் பிராமணரல்லாதோரும் பஞ்சமரல்லாதோருமாகிய மற்ற ஹிந்துக்கள் அனைவரும் இப்போதே பஞ்சமர்களை முழுதும் ஸமானமாக நடத்த உடம்படுகிறார்களென்று எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு உறுதி சொல்லுகிறாரென்பது நமக்கு விளங்கவில்லை. ஏற்கெனவே ஹிந்துக்களில் பிராமணர் முதலிய எல்லா வகுப்புகளிலும் அங்கங்கே ஜாதிக் கட்டுக்களை உதறி விட்டு எல்லா ஜாதியாரையும் ஸமானமாக நடத்தி வருகிறார்களென்பது மெய்யே. பொதுப்படையாக எல்லா வகுப்புகளிலும் ஜாதிக் கட்டுக்கள் தளர்ச்சி பெற்று ஸமத்வக் கொள்கை ஓங்கிக் கொண்டு வருகிறதென்பதும் மெய்யே. ஆசாரத் திருத்த முயற்சி ஆரம்ப முதல் நீதிபதி ரானடே முதலிய

பிராமணர்களாலே அதிக சிரத்தையுடன் போற்றப்பட்டு வருகிறதென்பதை நாம் மறக்கக் கூடாது. ஆனால் இவற்றைக் கொண்டு, இன்றைக்கே பிராமணரல்லாதாரில் மேல் வகுப்பினர் பஞ்சமர்களோடு ஸமானமாக உறவாடத்தயாராக இருக்கிறார்களென்று சொல்லுதல் அதிசயோக்தி. எனினும் ஸ்ரீராமராயணிங்கார் தம்மளவிலேனும் தாம் சொல்லியதை மெய்ப்படுத்திக் காட்டுவாரென்று நம்புகிறேன். இவ்விஷயத்தில் இவர் மனத்தோடு பேசினாரா, அல்லது வெறுமே வெளிப் பேச்சுத்தானா, என்பதைப் பஞ்சமத் திராவிட நண்பர்கள் பரிசோதனை செய்து பார்க்கும்படி வேண்டுகிறேன்.

## ஜெர்மனிடம் பணம் வாங்குதல்

ஜெர்மனியிடம் வசூலிக்க வேண்டிய தொகையைக் குறித்து நேசக் கக்ஷியாருள்ளே ஒருமுகமான அபிப்பிராய ஒற்றுமை ஏற்பட்டு விட்டது. அதாவது ப்ரான்ஸ் தேசத்தார் கேட்டபடி நம்பத் தகாத பொன் குவைகள் ஜெர்மனியிடம் வாங்கும் விஷயத்தில் இதுவரை மனமிணங்காதிருந்த இங்கிலாந்து முதலிய தேசத்தாரும் இப்போதிணங்கி விட்டார்கள். ஆனால் அதே காலத்தில் "நேசகர்கள்" கேட்கும் அபரிமிதமான தொகைகளை ஜெர்மனியால் செலுத்த முடியாதாகையால், நேசக்கக்ஷியாரின் ஏற்பாடுகளைத் தள்ளி அவற்றுக்கு மாற்றேற்பாடுகள் சில தயார் செய்து கொடுப்பதாக ஜெர்மன் மந்திரிகள் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். எனவே நேசக் கக்ஷியாருள் ஏற்பட்ட இணக்கத்தினின்றும் நாணய மாற்றுச் சந்தைகளிலும் பங்கு பத்திரச் சந்தைகளிலும் எதிர்ப்பார்க்கப் பட்ட மாறுதல்கள் தோன்றவில்லை. ஏனென்றால், நேசக் கக்ஷியாரின் வேண்டுதலுக்கிணங்கும்படி ஜெர்மனியை இவர்கள் வற்புறுத்த முடியுமா என்பதைப் பற்றி வியாபாரிகளுக்குள்ளே ஸம்ஸயம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் ஜெர்மனி தான் செலுத்தவேண்டிய ஈட்டுப் பணங்களை 'மார்க்' என்ற ஜெர்மன் நாணயங்களில் செலுத்தும்படி உடன்பாடு விதிக்கிறது. எனவே, இப்போது ஜெர்மன் ராஜாங்கத்தார் கோடிக் கணக்கான காயிதப் பணத்தை மடித்து "மார்க்" நாணயத்தின் மதிப்புக் குறைந்து போகும்படிச் செய்வார்களோ என்றும் வியாபாரிகள் பயப்படுகிறார்கள். இது பற்றியே நேசக் கக்ஷியாரின் நாணயங்களுக்கு எதிர்பார்க்கப்பட்டபடி மதிப்பேறவில்லையென்று லண்டன் நகரத்துப் பொருள் நிபுணர்கள் சொல்லுவதாக ராய்ட்டர் தெரிவிக்கிறார். இப்

போது (ஜன—31) ஒரு பவுனுக்கு 24 மார்க் விலை. ஜெர்மன் ஜனங்களின் மனதில் நேசக் கக்ஷியார்களின் முடிவு பற்றி அதிருப்தியும் கொதிப்பும் ஏறியிருப்பதாகத் தெரிகிறது.

---

# 30

## மணித் திரள்

### வாளும் எழுது கோலும்

என்றைக்குமே ராஜ்ய தந்திரத்தில் வாளைக் காட்டிலும் எழுதுகோலுக்கே மகிமை அதிகம். அதிலும் ஐரோப்பிய மஹாயுத்தத்தின் பிறகு இக்கொள்கை முன் எப்போதையுங் காட்டிலும் அதிக ஆழமாகவும் உறுதியாகவும் பூமண்டலத்து ராஜ்ய தந்திரிகளின் மனதில் பதிந்துவிட்டது. ப்ரான்ஸ் தேசம் ஒன்றில் மாத்திரமே இந்த மஹா யுத்ததில் பத்து லக்ஷம் ஜனங்கள் மடிந்திருப்பதையும் இன்னும் பல லக்ஷங்கள் அங்கஹீனராய் விட்டதையும் எடுத்துக் காட்டி, அப்பால் இங்கிலாந்திற்கும் இதைவிடக் குறையாத நஷ்டமேற்பட்டிருக்குமென்பதைச் சுட்டிச் சில தினங்களின் முன்பு ஸ்ரீமான் க்ளெமான்ஸோ என்ற ப்ரெஞ்ச் ராஜதந்திரி இப்போது இந்தியாவில் யாத்திரை செய்து கொண்டு வருபவர் இனிமேலேனும் உலகத்தார் யுத்தப் பைத்தியத்தை விட்டுத் தொலைத்தல் அவசரமென்பதை வற்புறுத்தியது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

### அமீர் அமானுல்லாகான்

1921 ஜனவரி 10-ஆந் தேதி திங்கட்கிழமையன்று காபூல் நகரத்தில் ப்ரிடிஷ் தூதர்களை வரவேற்கும் பொருட்டாக ஒரு பெரிய தர்பார் நடத்தப்பட்டது. அப்போது ஆப்கான் அரசராகிய அமீர் அமானுல்லாகான் செய்த உபந்நியாஸத்தினிடையே, காபூலில் நடத்தும் ஆங்கில ஆப்கன் ஆலோசனை சபையில் தம்முடைய முக்கியப்ரதிநிதியாக ஸர்தார் இ-ஆலா. முஹம்மது கான் தர்ஜியை நியமனம் செய்ததற்குப் பின் வரு

மாறு காரணம் சொன்னுர். " சர்தார் முஹம்மது நாதிர் கான் போர்த் தொழிலாளி. ஆதலால் நான் அவரை நிய மனம் செய்யவில்லை. ஸர்தார் இ-ஆலா முஹமத்கான் தர்ஜி எழுதுகோற் பயிற்சியுடையவராதலால் அவரையே நியமனம் செய்திருக்கிறேன். ஏனென்ருல் இந்தக் காலத்தில் வாளைக் காட்டிலும் எழுது கோலே அதிக அவசியமானது" என்ருர். இந்த உண்மையான கொள்கையை ஆகான் அமீர் எப்போதும் மறக்காமலிருப்பாரென்று நம்புகிறேம். தேசத்தின் அபி விருத்திக்குப் பரோபகார சிந்தையுள்ள மேதாவிகளின் இடை யருத உழைப்பே ஸாதனம். வாள் சிறிது காலத்துக்குக் காப் பற்றுவதுபோலே நடிக்கும். பிறகு ஸர்வ நாசத்தில் கொண்டே சேர்க்கும். எனவே இந்தியாவுக்கு " வாள் பலம் " அல்லது தற்கால பாஷைப்படி பீரங்கி பலம் இப்போதில்லாமை கருதி நாம் எப்படி விடுதலைப் பெறப் போகிறேமென்று எவரும் ஏங்குதல் வேண்டா. தைர்யமும் ஒற்றுமையும் தந்திர மும் சேர்ந்தால் இவற்றுக்கெதிரே கோடிப் பீரங்கிகள் நிற் பினும் அஃதோர் பொருட்டன்று.

## " டைம்ஸ் ஆப் இந்தியாவின் விகடம் "

பம்பாயில் பிரசுரமாகும் " டைம்ஸ் ஆப் இந்தியா " பத்திரிகையின் பிரதிநிதியொருவருடனே ஸ்ரீ ஆகாககன் செய்த சம்பாஷணை அப்பத்திரிகையில் இரண்டு வாரங் களுக்கு முன்பு வெளியிடப்பட்டிருந்தது. அதில் ஸ்ரீ ஆகா கான் துருக்கி உடம்பாட்டை மாற்றும் விஷயத்தில் இங்கி லாந்து தலைமை வகித்து நடத்தவேண்டுமென்று சொல்லி யிருந்தார். இப்போது ஆகாகானுடைய இஷ்டப்படியே நட ந்து விட்டதாக அப்பத்திரிகை தன் தலையங்கமொன்றில் ஸந் தோஷச் செய்தி தெரிவிக்கிறது ! என்ன நடந்தது ? ஆங்கி லேயர் முற்பட்டு மூண்டு வேலை செய்து " ஸேவா " உடம் பாட்டின் அந்த நிபந்தனைகளை மாற்றித் துருக்கியை அதன் பழைய பெருமையில் ஸ்தாபித்து விட்டார்களா ? அஃதன்று. துருக்கியுடம்பாட்டின் விஷயமாக எதிர் காலத்தில் செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்து ஆலோசனை செய்யும் பொருட்டு அடுத்த மாதம் லண்டனில் ஒரு சபை நடத்தப் போவதாகத் தீர்மானித்திருக்கிருர்கள். இதைத் தான் அந்தப் பத்திரிகை ஆகாகானுடைய அபீஷ்ட ஸித்தியாகக் காண்பிக்கிறது ! ஆனுல் லண்டனில் இந்தச்சபை நடத்துவது

மிகவும் கெட்ட அடையாளமென்று நான் கருதுகிறேன். ஏனென்றால் ப்ரான்ஸ் மந்திரிகளும் இத்தாலி மந்திரிகளும் இவ் விஷயத்தில் துருக்கிக்கு ஒரு வேளை அனுதாபம் செய்யக் கூடும். மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் முதலிய ஆங்கில மந்திரி களோ எப்படியாவது கிரேக்கரின் நட்பைப் பாதுகாக்க வேண்டுமென்பதிலும், துருக்கியிடமிருந்து பறிக்கப்பட்ட நாடுகளை அதனிடம் மீட்டும் ஒப்புவிக்ககூடாதென்பதிலும் ஒரே உறுதியாக நிற்கிறார்கள்.

## கிறிஸ்தவ நாகரிகத்துக் காவலாளி

வேல்ஸ் தேசத்து லிபரல் மஹா ஸங்கத்தின் நிர்வாக உத்யோகஸ்தருடன் சில தினங்களுக்கு முன்பு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஒரு ரஹஸ்ய ஸம்பாஷணை நடத்தினார். எனினும் இந்தக் கூட்டத்தில் மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் பேசிய விஷயம் பின்னிட்டு இங்கிலாந்தில் பிரசுரமாய், ராயட்டர் தந்தி மூல மாக நமக்கெட்டியிருக்கிறது. அதிலே கூட மிஸ்டர் லாய்ட் ஜயார்ஜ் ஜெர்மினி கொடுக்கவேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகை யை விட்டுக் கொடுப்பதும், கிறிஸ்துவ ஜனங்களை மீட்டும் துருக் கியின் ராஜாங்க நுகத் தடியின் கீழே கொணர்வதும் "லிபரல்" கட்சியின் நோக்கத்துக்கு விரோதமென்று வற்புறுத்திக் காட்டியிக்கிறார். இது போலவே, துருக்கியிடமிருந்து பறிக்கப் பட்ட பூமிகளை அதன்பால் மீட்டும் விடுவதினின்றும் கிறிஸ் துவ நாகரீகத்துக்கு ஹானி வருமென்ற தமது கொள்கை யை ஆங்கிலத் தலைமை மந்திரி இதுவரை எத்தனையோ முறை சொல்லியிருக்கிறார். எனவே, லண்டனில் இப்படிப் பட்ட மந்திரிகளின் ஆதிக்கத்தின்கீழே நடத்தப்போகிற கூட்டத் தில் துருக்கிக்கு எள்ளளவேனும் நியாயம் கிடைக்காது. கிரேக்க தேசத்துக்குப் பிடுங்கிக் கொடுத்த பிரதேசங்களில் கிறிஸ்தவர்கள் வாசம் புரிவதால் அவற்றைத் துருக்கிக்கு மீட்டும் ஒப்புவிப்பது சரியில்லையென்று சொல்லும் ஆங்கிலேய முதல் மந்திரி மெஸபோடேமியாவில் கிறிஸ்துவ ஜனத் தொகையில்லை யென்றுணர்ந்தும் அதை என் துருக்கியிடம் விடக்கூடாது? அந்த மெஸபொடோமியாவை இங்கிலாந்து கிறிஸ்துவ நாகரிகத்தால் மகிமைப்படுத்த எண்ணங்கொண்டு விட்டது. ஆதலால் அதையும் விடக்கூட வில்லை. என்ன செய்யலாம் ?

## மயிலே, மயிலே

"மயிலே, மயிலே, இறகு போடு" என்றால் போடாது. வற்புறுத்தி இறகைப் பிடுங்கவேண்டும். வெறும் வாய்ப் பேச்சால் இங்கிலாந்தினிடமிருந்து நீதி பெறுதல் ஸாத்ய மில்லை. இந்தியாவிலும், மற்ற முஸ்லிம் தேசங்களிலும் பலமான கிளர்ச்சி நடத்துதலன்றி, "ஸேவர்" உடம்பாடு நியாயப்படி மாற்றப்படுதல் ஸாத்யமில்லை. "கிளர்ச்சி செய் யுங்கள்!" "கிளர்ச்சி செய்யுங்கள்!" "கிளர்ச்சி செய் யுங்கள்!" என்று முக்காலும் கூறி ஸ்ரீமான் தாதாபாய் நவுரோஜி கல்கத்தா காங்கிரஸ் ஸபையில் செய்த உபதேசத் தையே இன்று நான் முஸ்லிம் உலக முழுமைக்கும் செய் கிறேன். ஆசியா வாஸிகள் அனைவருக்கும் செய்கிறேன்.

## அடக்கு முறைகள்

1921 பெப்ருவரி 10-ஆந் தேதியன்று ஸ்ரீ காசியில் தேசீய ஸர்வ கலாசாலை யொன்று மஹாத்மா காந்தியால் திறந்து வைக்கப்பட்டது. அந்த விசேஷம் நடக்கும் போது பிரமாண்ட மான ஜனத்திரள் கூடியிருந்தது. அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த ஐக்ய மாகாணத்து விவசாயிகளின் தலைவராகிய பாபாராம் சந்தர் என்ற ஸந்யாஸியைத் துப்பாக்கியில் மருந் தேற்றிக் கொண்டு போலீஸார் பெருங் கூட்டமாக வந்து கைது செய்ததாகத் தெரிகிறது. கூட்டத்தார் மனக் கொதிப் பினால் கலகம் செய்வார்களென்றும், அதை முகாந்தரமாகக் காட்டித் தாங்கள் ஏராளமாக ஜனங்களைச் சுட்டுத் தள்ளுவது மன்றி, மஹாத்மா காந்திக்கும் ஏதேனும் ஆபத்துண்டாக்கலா மென்றும் போலீஸார் எதிர் பார்த்தனர் போலும். ஆனால் அந்த அவமானத்தை ஜனங்கள் ஸமாதானமாகப் பொறுத் திருக்கும்படி தலைவர்கள் சொல்லியது கேட்டு ஜனங்கள் சும்மா இருந்து விட்டனர். எனவே, போலீஸார் பாபா ஒருவரை மாத்திரங்கொண்டு மீண்டேகினர். தேசீய ஸர்வ கலாசாலையின் ஆரம்ப விசேஷங்கள் நடத்தும் இடத்திலே தானா பாபாவைப் பிடிக்கவேண்டும்? தனியாக அவர் வீட்டி லிருக்கும்போது பிடிக்கக் கூடாதா? கூட்டத்தார் அவசரப் பட்டு மனம் பதறி ஏதேனும் செய்திருந்தால் என்னென்ன ஆபத்துக்கள் விளைந்திருக்குமோ யார் அறிவார்? இங்ஙனம் முற்றிலும் விரும்பத்தகாத விரஸமான வழிகளில் ராஜாங்கத்

தார் அடக்கு முறைகளை அனுஸரிப்பதினின்றும் அவர்களுக்கு ஏற்கெனவே தேசத்திலுள்ள மதிப்புக் குறை இன்னும் மிகுதியுறு மென்பதை அவர்கள் அறியாதது பற்றி வருத்த மடைகிறோம். மேலும் போலீஸார் இப்படி அநாகரிகமாக வேலை செய்த போதுகூட மனக் கொதிப்புக் கிடங் கொடுக்காமல் தலைவர்களின் சொற்படி கேட்டு ஜனக் கூட்டத்தார் அடங்கியிருந்தது நமக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. பொறுத்தாரன்றோ பூமியாள்வார் ?

---

# 31

## தீப்பொறிகள்

பாரத தேசத்தாரின் அகத்தில் தழல் வீசி எரிந்து வரும் தேசபக்திப் பெருங் கனலின் பொறிகள் சில இங்குக் காண்பிக்கப்படுகின்றன.

### " வில்லர் " ஸமாஜம்

பீலர் (Bhils) அல்லது வில்லர் எனப்படும் மலைக் குடிகள் ராஜபுத்ர சரித்திரத்தில் மிகவும் கீர்த்தி பெற்றவர்கள். கல்வி முதலிய நாகரிகச் சின்னங்களில் இந்த ஜாதியார் மற்றப் பாரதவாஸிகளைக் காட்டிலும் குறைவு பட்டோராயினும், வீரத் தன்மையில் யார்க்கும் இளைத்தோரல்லர். புதிய ஸ்வதேசீயத் தீ இவர்களிடத்தும் பாய்ந்து விட்டது. எனவே இவர்கள் தோஹாத் என்ற ஊரில் ஒரு பெரிய தேசாபிமானக் கூட்டம் நடத்தினர். அந்தக் கூட்டம் நடைபெறாமல் தடுத்துவிடவேண்டு மென்ற நோக்கத்துடன் அதிகாரிகள் சில தினங்களின் முன்பு இக் கூட்டத்தாரின் குருவாகிய குருகோவிந்தர் என்பவரைச் சிறைப் படுத்தி விட்டார்கள். அதினின்றும், அந்த ஸமாஜம் தடைப்படவில்லை. பெப்ருவரி 6-ஆந் தேதியன்று தோஹாதில் " வில்லர் " ஸமாஜம் கூடிற்று. மஹாத்மா காந்தியின் முக்யத் துணைவரில் ஒருவராகிய ஸ்ரீமான் படேல் அக்ராஸனம் வஹித்தார். முஹமதியச் சிங்கமாகிய மௌலானா ஷௌகத் அலியும் அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தார்.

## ஸ்ரீமான் படேலின் ப்ரஸங்கம்

சுமார் 10,000-பீல் (வில்லர்) ஜாதியார் கூடியிருந்த அக் கூட்டத்தின் முன்பு ஸ்ரீ படேல் செய்த அக்ராஸன உபந்யாஸத்தினிடையே பின் வருமாறு பேசினர் :—

"உங்களுடைய குருவை நள்ளிரவில் எழுப்பி ராஜாங்கத்தார் அவருக்கு யாதொரு முன் எச்சரிக்கை செய்யாமலும், அவருடைய குழந்தையைப் பார்க்கக்கூட இடங் கொடுக்காமலும், இரவு 'ரயில்' வண்டியில் ஏற்றிக்கொண்டு போய் விட்டார்கள். அவருடைய முக்ய சிஷ்யர்கள் நூற்றுக்கணக்காக அந்த நேரத்தில் அவரோடிருந்தார்கள். எனினும் அவர்கள் அதிகாரிகளைப் பலாத்காரமாக எதிர்க்காமலிருந்தது பற்றி நான் மகிழ்ச்சி யடைகிறேன். நாம் தார்மிகமான வெற்றி பெறுவோ மென்பதற்கு இஃதோர் அடையாளமாகும். பல குற்றங்கள் புரிந்து வரும் இந்த ராஜாங்கத்தாருக்கு நீங்கள் ஆதரவு செய்யும் குணத்தை முற்றிலும் விட்டுவிடவேண்டும். பீல் ஜாதியாரே! நீங்கள் இவ்வுலகத்தில் யாருக்கும் அஞ்சியிருக்கக் காரணமில்லை. உங்களுடைய வேண்டுதல்கள் மிகச் சொற்பம். உங்களுடைய வாஸமோ புலிகளுடனே செய்யப்படுவது. நீங்கள் என் எதற்கும் அஞ்ச வேண்டும்? கட்டாயக் கூலி வேலைக்கு நீங்கள் ஒரு போதும் உட்படக் கூடாது. எது நேர்ந்தாலும் அம்முறைமையை நீங்கள் எதிர்த்துத் தீரவேண்டும்".

## மௌலானா ஷௌகத் அலியின் பேச்சு

மாலைக் கூட்டத்தின் போது, அந்த ஸமாஜத்தில் ஒத்துழையாமைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை ஆதரித்துப் பேசுகையில் ஸ்ரீமான் ஷௌகத் அலி பின் வருமாறு பேசினார் :—

"என் 'பீல்" ஸஹோதரரைப் பார்ப்பதற்கென்றே நான் விசேஷ ஆவலுடன் இங்கு வந்திருக்கிறேன். ஸ்வதேசத்திற்கும் ஸ்வதர்மத்துக்கும் நீங்களெல்லோரும் முழுத் தொண்டு புரியவேண்டும். தைர்யத்தோடிருக்க வேண்டும். மஹாத்மா காந்தி காட்டியிருக்கும் வழியைச் சிரத்தையுடன் பின்பற்றி யொழுகவேண்டும். மனத் தளர்ச்சி யெய்தி விடாதீர்கள்! ராஜாங்கத்தார் உங்களுடைய குருவைப் பிரித்து விட்டது பெரிதில்லை, நமக்குள்ளே நூற்றுக் கணக்கான குருக்கள் தோன்றப் போகிறார்கள், மஹாத்மா காந்தியைக்

கூட அதிகாரிகள் தீவாந்தரத்துக் கனுப்புவாராயின், அல்லது சுட்டுக் கொல்வாராயின், நம்மிடையே பற்பல காந்திகள் கிளைப்பார்கள். ராஜாங்கத்தார் இதனை அறிந்து நடப்பாராக" என்றார்.

## "காந்திக்" குல்லா

இந்த மாஸம் 3-ஆந் தேதியன்று பேரார் மாகாணத்திலுள்ள அமராவதி நகரத்தில் டிப்டி கமிஷனராகிய மிஸ்டர் ஆர். ஏ. வில்ஸன் என்பவருக்கும் அவருடைய கச்சேரியில் குமாஸ்தாவாக வேலை செய்து வரும் ஸ்ரீமான் கிர்காம்கார் என்பவருக்கும் நடந்த ஸம்பாஷணை பின் வருமாறு :—

**மிஸ்டர் வில்ஸன்.**—"உம்முடைய தலையிலிருப்பது 'காந்தி' குல்லாவா ?"

**ஸ்ரீமான் கிர்காம்கார்.**—"ஆம்".

**மிஸ்டர் வி.**—"ஸ்ரீமான் காந்தியின் கொள்கைகளையெல்லாம் நீர் அங்கீகாரம் செய்து கொள்ளுகிறீரா ?"

**ஸ்ரீமான் கி.**—"ஆம்".

**மிஸ்டர் வி.**—"அப்படியானால் இந்த ராஜாங்கத்தாருக்கு நீர் ஏன் உதவி செய்துகொண்டிருக்கிறீர் ?"

**ஸ்ரீமான் கி.**—"பாரத ஜனஸபை (காங்கிரஸ்) இன்னும் ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் தம் உத்யோகங்களை விடும்படிக் கட்டளை பிறப்பிக்கவில்லை".

**மிஸ்டர் வி.**—"ராஜாங்கத்தை அழித்துவிட வேண்டுமென்பது ஸ்ரீமான் காந்தியின் கொள்கை. அதை நீர் ஆமோதிக்கிறீரா ?"

**ஸ்ரீமான் கி.**—"ஆம், ஆமோதிக்கிறேன்".

**மிஸ்டர் வி.**—"அப்படியானால் உம்முடைய வேலையை உடனே ராஜிநாமா கொடுத்துவிட வேண்டும்......மேலும், எங்கள் ராஜாங்கத்தினிட மிருந்து ஏறக்குறைய எட்டு மாஸங்களாக நீர் சம்பளம் வாங்கிக்கொண்டு வருகிறீர். அதனுடன், நீர் இப்படிப்பட்ட கொள்கைகள் வைத்துக் கொண்டிருப்பது பொருந்துமா ?"

**ஸ்ரீமான் கி.**—" இந்த ராஜாங்கத்துக்கு நான் உதவி புரிந்து வருதல் வெட்கத்துக்கிடமான செய்தியேயாம். ஆனால் நான் சில அவஸரங்களைக் கருதி அங்ஙனம் செய்ய நேர்ந்தது. எனினும் எனது தேசத்தின் ஆணை தோன்றுமிடத்தே நான் இந்த உத்யோகத்தை விட்டு விடக் காத்திருக்கிறேன் ".

**மிஸ்டர் வி.**—" நீர் அந்தக் குல்லாயை மாற்ற ஸம்மதப்படுவீரா ?"

**ஸ்ரீமான் கி.**—" மாட்டேன் ".

**மிஸ்டர் வி.**—" உம்முடைய தைர்யத்தை மதிக்கிறேன். எனிலும், இந்த விஷயத்தைக் குறித்து இன்றிரவு யோசனை செய்து பார்த்து, அப்பால் என்னிடம் உம்முடைய நிச்சயத்தைத் தெரிவிப்பீராக ".

மறு நாள் காலையில், ஸ்ரீமான் கிர்காம்கார், மிஸ்டர் வில்ஸனிடம் தம்முடைய ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்து விட்டார்.

### " தீண்டாமை " என்ற பாதகம்

தேச பக்தி யென்பது நம்மவருக்கு அன்னியரால் நேரும் தீமைகளை மாத்திரம் ஒழிக்கும் இயல்புடையதன்று. நமக்கு நாமே செய்து கொள்ளும் அநீதிகளையும் நீக்கு மியல்புடையது. எனவே தேச பக்த சிகாமணியாகிய மஹாத்மா காந்தி நாம் இன்னும் ஒன்பது மாஸங்களுக்குள்ளே ஸ்வராஜ்யம் பெற்று விடுவோமென்று சொல்லிய போதிலும் அதற்கொரு முக்கியமான நிபந்தனை சொல்வதை நாம் கவனிக்க வேண்டும்.

தம்முடைய " யௌவன இந்தியா " பத்திரிகையில் மஹாத்மா பின் வருமாறெழுதுகிறார் :—" சில வகுப்பினரைத் தீண்டாதவராகக் கருதும் பாவத்தை ஹிந்துக்கள் அகற்றினாலன்றி, ஸ்வராஜ்யம் ஒரு வருஷத்திலும் வாராது ; நூறு வருஷங்களிலும் வராது....ஹிந்து மதத்தின் மீது படிந்திருக்கும் இந்தக் களங்கத்தை நீக்குதல் ஸ்வராஜ்யம் பெறுதற்கவசியமாகுமென்ற தீர்மானத்தைக் காங்கிரஸ் ஸபையார் நிறை வேற்றியது நன்றேயாம்.... மேலும் இந்தத் தீண்டாமை யென்பது மதக் கொள்கைகளால் அனுமதி செய்யப்பட்டதன்று. இது சாத்தானுடைய தந்திரங்களில் ஒன்று " என்கிறார்.

அடிக்கடி "காந்தி கீ ஜேய்" என்று ஆரவாரம் செய்யும் நம்மவர்கள் இந்த அம்சத்தில் மஹாத்மா சொல்லியிருக்கும் வார்த்தையைக் கவனிப்பார்களென்று நம்புகிறேன். நம்முடைய சமூஹ வாழ்வில் அநீதிகள் இருக்கும்வரை நமக்கு ஸ்வராஜ்யம் ஸித்தியாகா தென்ற கொள்கையை நான் அங்கீகரிக்கவில்லை. ஆனால் "வினை விதைத்தவன் வினையறுப்பான்." நம்மவருக்குள் பரஸ்பர அநீதியுள்ள வரை தேசத்தில் சமாதானமிராது. நாம் பல வகைகளிலே துன்பப்பட நேரும்.

---

# 32

## புதுமைகள்

### பொம்மிடி ரயில்வே விபத்து

"தென் இந்தியா ரெயில்வே, பொம்மிடியில் நடந்த பயங்கரமான விபத்தைக் குறித்து நம் நேயர்கள் சிலருக்கு மறதி யேற்பட்டிருக்கக்கூடும். அது நடந்து இப்போது ஏறக்குறைய இரண்டு மாஸங்களாகின்றன. அதில் 40 பேருக்குமேலே இறந்து போனார்கள். ஏராளமான பொருட் சேதம் ஏற்பட்டது. ரெயில்வே பாதுகாப்பு விஷயத்தில் புது முறைகள் அனுஸரிக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். விசேஷத் தகுதி பெற்ற நிபுணர்களென்று உயர்ந்த சம்பளம் வாங்கும் ஐரோப்பிய மேற்பார்வை உத்தியோகஸ்தர்கள் அதி ஜாக்ரதையுடன் வேலை செய்வதாகத் தெரிவிக்கிறார்கள். பொது உத்தரவுகளும் தொழிற் கட்டளைகளும் மலிந்து போயின. இவ்வளவையும் மீறி மேற்படி விபத்து நேர்ந்திருப்பதினின்றும், ரெயில்வே பராமரிப்பில் எங்கோ ஒரு மூலையில் பிழையிருப்பதாக விளங்குகிறது. ஸம்பவம் நடந்த காலத்தை யொட்டி ஸ்தலத்திலேயே ஒரு 'கலப்பு விசாரணை' நடத்தப்பட்டது. அதில் பத்திரிகைப் பிரதிநிதிகளும் பொது ஜனங்களின் பிரதிநிதிகளும் ஸாக்ஷியாக இருக்க அனுமதி கொடுக்கப்படவில்லை. ஆனால் அந்த விசாரணை ஸபையின் தீர்மானங்கள் இன்னும் ப்ரசுரம் செய்யப்படவில்லை" என்று ஒரு நிருபர் சென்னைப் பத்திரிகை யொன்றில் முறையிட்டெழுதியிருக்கிறார். இதனிடையே ஊண்டியோட்டி, தீ வேலையாள், ஸ்டேஷன் அதிகாரி,

அவருடைய உப அதிகாரி இத்தனை பேரையும் வேலையி னின்று ஒதுக்கி வைத்திருப்பதாகத் தெரிகிறது. இத்தனை காலமாக இந்த விபத்துக்கு யார் பொறுப்பாளியென்று நிச்சயப்படுத்தாமலிருப்பது மிகவும் வியப்புத் தருகின்றது. எவரும் பொறுப்பில்லையாயின், மனிதராலே தடுக்கொணுத வாறு அவ்விபத்து நேர்ந்திருப்பதாயின் அதையாவது ஏன் வெளிப்படுத்தாமலிருக்கிறார்கள் ? இந்த மாதிரி ஸமீப காலத்தில் வேல்ஸில் நடந்த விபத்தில் சேதம் இதைக் காட்டிலும் மிகக் குறைவாயினும், அது நடந்த பத்து தினங்களுக்குள்ளே அதன் காரணமின்னதென்பதையும் பொறுப்பாளிகள் இன்னாரென்பதையும் நிர்ணயித்து வெளிப்படுத்தி விட்டார்கள். இந்தப் பொம்மிடி விபத்தின் காரணமும், இதன் பொறுப்பாளிகள் எவரென்பதும் இன் னும் ஏன் நிச்சயிக்கப்படவில்லை ? இந்தியாவில் பிரயாணி களுடைய உயிருக்கு மதிப்புக் குறையென்ற கொள்கையை இன்னும் ரெயில்வே அதிகாரிகள் விடாது பற்றியிருக் கிறார்களா ? இந்த ரெயில்வே அதிகாரிகள் தாம் வெளி யிடற்குரிய அறிக்கையை வெளியிடச் செய்யும் பொறுப்பு யாரைச் சேர்ந்தது ?

### " என்னிடம் ஒரு கைத்துப்பாக்கி யிருந்தால் !"

கிரேக்கரிடம் இன்னும் சற்றே அதிஸைந்யமிருந்தால், நேசக் கக்ஷியார் ' ஸேவர் ' உடம்படிக்கையை மாற்றுவதென்ற பேச்சை ஆரம்பித்தே யிருக்கமாட்டார்கள். ஆதலால், கிரேக்கர் தமது படையை மிகுதி செய்வதில் அதிகச் சிரத்தை செலுத்தி வருகிறார்கள். ஜெர்மனியிலுள்ள சட்ட அனுமதி பெறாத படைக் கூட்டங்களைக் கலைத்துவிட வேண்டுமென்று நேசக் கக்ஷியார் எவ்வளவோ சொல்லிக்கொண்டிருக்க, அதை மீறி ஜெர்மானியர் இன்னும் ரஹஸ்யமாகப் படைகளைத் திரட்டி வருகிறார்கள். ஜப்பானும், அமெரிக்காவும் கப்பற் படைகள் கட்டும் விஷயத்தில் தீவிரமான வேலை செய்து வருகின்றன. ஆஸ்த்ரேலியாவும், கானடாவும் தமக்குக் கப்பற் படைகள் அமைத்துக்கொள்ள முயலுகின்றன. இங்கிலாந்து தனது ஸைந்யத்தை அதிகப்படுத்த முயற்சி செய்கிறது. இவர்களெல்லாரும் உலகத்தில் நித்யமாகவும், நிரந்தரமாகவும், சாசுவதமாகவும் ஸமாதானம் நின்று நிலவவேண்டுமென்ற கொள்கையையே தரித்திருப்பதாகச் சில ஸமயங்களில் பேசிக்கொள்ளுகிறார்கள். ஆனால் ஸதா யுத்தத்தை காரணமாகப் படைகளைப் பலப்படுத்திக்

கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய குணம் இந்த மாஸம் (பெப்ருவரி) 11-ஆந் தேதி வெள்ளிக்கிழமை காலையில், திருவாங்கூர் எல்லையிலுள்ள ஆராமொழிக் குன்றினருகே, திருவாங்கூர்ப் போலீஸ் சேவகராலே பிடிக்கப்பட்ட காசி நாடான் என்ற கீர்த்திபெற்ற கள்வனுடைய குணத்தை யொத்தது. இவர்களுடைய மனமும், உள்ளமும் அந்தக் காசி நாடானுடைய மனதையும் உள்ளத்தையும் ஒத்தன. இந்தக் காசி நாடானுடைய விருத்தாந்தம் "சென்னை மெயில்" பத்திரிகைக்கு அதன் திருநெல்வேலி அறிக்கையாளரால் தந்தி மூலமாக அனுப்பப்பட்டிருக்கிறது. சென்ற பல மாஸங்களாக நாங்குனேரி, சேரன்மாதேவி தாலூகாக்களில் பிரபலமான வழிப்பறிகளும், கொள்ளைகளும் நடத்திவரும் ஜம்புலிங்க நாடான் என்பவனுடைய படைத் தலைவர்களில் இந்தக் காசி நாடான் ஒருவன். இவனுக்கு இப்போது வயது இருபத்து மூன்று. இவனைப் போலீஸார் கைதியாக்கிய ஸமயத்தில் இவன் சொல்லிய வார்த்தைகள் பின்வருன: "ஹா! நீ வைத்திருப்பதுபோன்ற கைத் துப்பாக்கியொன்று மாத்திரம் என்னிடம் இருந்தால் ஞான் திருவாங்கூரை ஆளுவேன்" என்றானாம். திருநெல்வேலிக் கள்வரிடையேயும் பல அலெக்ஜாந்தர்கள் இருக்கிறார்கள்!

**பெர்லின் நகரத்தில் இந்தியன் கொலையுண்ட ஸமயம்**

சென்ற மாஸம் (ஜனவரி) 23-ஆந் தேதியன்று பெர்லின் நகரத்திலிருந்து லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகைக்கு வந்திருக்கும் தந்தி யொன்றில் ஸிங் என்ற இந்திய இளைஞனொருவன் கொலையுண்ட விஷயத்தைக் குறித்துப் பெர்லின் நகர் முழுதிலும் பெருங் கலக்கமேற்பட்டதாகத் தெரிகிறது. விஷயம் ஜெர்மன் போலீஸாரின் விசாரணையி லிருக்கிறது.

"ஜெர்மனியிடம் நட்புக் கொண்ட இந்தியர்களின் ஸபை" என்பதாக பெர்லினில் ஒரு ஸபை இருக்கிறது. அந்த ஸபையார் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் ஆட்சி ஸபை முறைக்கு விரோதமாக ஜெர்மனியிலே கிளர்ச்சி செய்து வருவதாக லண்டன் "டைம்ஸ்" நிருபர் சொல்லுகிறார். அது ஆரம்பித்து நெடுங்காலமாகவில்லை. சென்ற (1920-ஆம்) வருஷம் டிசம்பர் மாஸம் 7-ஆந் தேதியன்று அந்த ஸபை ஜெர்மன் அதிகாரிகளின் அனுமதியுடன் திறக்கப் பட்டது. அந்த ஸபைக்குத் தலைவரின் பெயர் எமீர் தேஹிப் அர்ஸ்லான். இவர் மஹாயுத்தம் தொடங்கிய காலத்தில்

துருக்கிப் பார்லிமெண்டில் மத்யக் கட்சியின் தலைவராக இருந்தவர். மற்ற அங்கத்தாரில் ஸ்ரீமான் பிள்ளை, கர்னல் எமெர்ஸன் முதலியவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ப்ரிடிஷாருக்கு விரோதமாக நடைபெறும் இந்த ஸபையை ஜெர்மானிய அதிகாரிகள் மிக ஆவலுடன் ஆதரித்து வருவதாக "டைம்ஸ்" நிருபர் தெரிவிக்கிறார். வெஸ்ட் (f)பாலியா மாகாணத்து ஆலைத் தலைவர்கள் அந்த ஸபைக்குப் பண உதவி செய்திருக்கிறார்கள். இது நிற்க.

மேற்படி லிங் கொலையுண்ட விஷயத்தில் அவனுடைய ஜெர்மானிய மனைவியையும், அவளுடைய மாதா பிதாக்களையும் ஜெர்மன் போலீஸார் ஸம்சயப்பட்டுப் பிடித்து வைத்திருக்கிறார்கள். இவன் விவாகமாகுமுன்பு அந்த ஸ்திரீயினிடம் தனக்கு இந்தியாவில் ஏராளமான செல்வமிருப்பதாகச் சொல்லி அவளை வஞ்சித்ததாகவும், அவளும் அப்படியே இவனிடம் தன் பிதா மிக்க செல்வமுடையவனென்று பொய் சொன்னதாகவும், ஆதலால் விவாகமாய் இருதிறத்து உண்மையுந் தெரிந்த பின்னர், அந்தத் தம்பதிகளுக்குள்ளே மனவருத்த மேற்பட்டிருந்ததாகவும் போலீஸார் தெரிவிக்கிறார்கள்.

### வெளி ஜில்லாவின் தீர்மானம்

கிரேக்க ஸிம்ஹாஸனத்தின் மீது கான்ஸ்டன்டைன் ராஜா வீற்றிருக்கும்வரை தாம் ராஜரீக விவகாரங்களில் சிறிதேனும் ஸம்பந்தப்படாமல் விலகிக்கொள்ளப் போவதுறுதியென்று வெனிஜிலாஸ் தம் நண்பரொருவர் மூலமாகத் தமது கட்சியைச் சேர்ந்த முக்கிய கிரேக்கப் பத்திரிகையில் விளம்பரம் செய்வித்திருக்கிறார். அங்ஙனமானால், இவர் பஹிரங்கமாக யவன ராஜ்யத்து விவகாரங்களில் கலந்துகொள்ளாவிட்டாலும் ரஹஸ்யத்திலே, கான்ஸ்டன்டைனுக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்து கொண்டிருப்பார். வெளியரசுகளின் மூலமாகச் செய்யும் சூழ்ச்சிகளால் இவர் தம் ராஜ்யத்திற்கு அதிகத் தீங்கிழைக்க முடியாது. ஆனால் கிரேக்கர்களுக்குள்ளேயே கட்சி பேதங்கள் ஏற்படுத்த இவருக்கு இடமேற்படக் கூடாது. அதற்கிடமேற்பட்டால் பிறகு கிரேக்க ஸிம்ஹாஸனம் கான்ஸ்டன்டைனுக்கு உறுதியில்லை. வெனிஜிலாஸ் பழைய காலத்து நரி. அதனால் அஞ்சத்தக்கதென்று சிலர் நினைக்கக்கூடும. ஆனால் வாலறுந்த நரி— ஆதலால் அஞ்சத்தக்கதன்று.

## இந்தோர் ராஜரீக அலங்கோலங்கள்

இந்தோர் ஸம்ஸ்தானத்தில் நிகழ்ச்சி பெற்றுவரும்—ஸ்திரீ ஸீக் கடத்திக்கொண்டுபோவது ஸம்பந்தமான—அலங்கோலங்களைக் குறித்து ஏற்கெனவே நமது பத்திரிகையில் பேசியிருக்கிறோம். இப்போது அந்த வதந்திகளெல்லாம் சுத்தப் பொய்யென்று அந்த ஸம்ஸ்தான அதிகாரிகள் ஒரு மறுப்புரை ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். சென்ற வருஷம் ஸெப்டம்பர் மாஸத்திலே இந்த விஷயத்தைக் குறித்து இந்தோரில் ப்ரசுரமாகும் "மல்லாரி மார்த்தாண்ட விஜயம்" என்ற பத்திரிகையில் ஒரு அறிக்கை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இந்தக் கெட்ட செயல்களுக்குக் காரணமாவோரைக் குறித்து யாரேனும் ராஜாங்கத்தாருக்குத் தகவல் கொடுக்கலாமென்றும், அங்ஙனம் தகவல் கொடுப்போருக்கு வலிமையுடைய அதிகார துஷ்டர்களாலே கேடேதும் நேராமல் ராஜாங்கத்தார் இரண்டு வாரம் வரை பாதுகாப்பார்களென்றும், அந்த அறிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அந்த விளம்பரத்துக்கப்பால் எவனும் வந்து யாதொரு தகவலும் கொடுக்கவில்லை. அந்தத் தீச் செயல்களில் உயர்ந்த ராஜாங்க உத்யோகஸ்தர் ஸம்பந்தப்பட்டிருந்ததால் எவ்வித ருஜுவும் கிடைக்கவில்லை யென்று ஸம்ஸ்தான அறிக்கை சொல்லுகிறது. ஆனால் உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு விரோதமாக உயர்ந்த உத்தியோகஸ்தர்களிடம் வாக்குமூலம் கொடுக்கத் துணியும் துர்ப்பாக்யனுக்கு ராஜாங்கத்தார் இரண்டு வாரம் மாத்திரமே பாதுகாப்பருளினால் போதுமா ? இதை மஹாராஜா கவனியாதது பற்றி வருத்தமடைகிறோம். இனி ஸ்ரீ கோவிந்தராவ் நிகோஷ்காரின் மகளுடைய விவாகத்தின் ஸம்பந்தமாக அவருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் மஹா ராஜாவின் உத்தரவுப்படி நேர்ந்த அவமானங்களும் துன்பங்களும் மேற்படி நிகோஷ்காராலே கான்பூர் மாஜிஸ்ட்ரேட் முன்பு செய்து கொள்ளப்பட்ட பிரமாணப் பத்திரிகையில் விவரிக்கப்பட்டன.

அந்தப் பிரமாணப் பத்திரிகை வெறும் பொய்யென்று மஹாராஜா தெரிவிக்கிறார். மஹாராஜா தாம் நேராக அந்த விவாகத்தைப் பற்றி எவ்விதமான அபிப்ராயமும் சொல்லவில்லை யென்றும், அதைக்குறித்து விசாரணை செய்யும்படி ஹைகோர்ட்டுக்கு முறைப்படி உத்தரவு கொடுத்ததாகவும், ஹைகோர்ட்டார் அந்த விவாகம் செல்லாதென்று தீர்ப்புச்

சொல்லி விட்டார்களென்றும் ஸம்ஸ்தான அறிக்கை தெரிவிக்கிறது. இவ்விஷயம் இந்தோர் "லா ரிபோர்ட்" வரிசையில் ப்ரசுரமாயிருப்பதாகவும் அவ்வறிக்கை சொல்லுகிறது. மேலும் இப்போதுள்ள மஹாராஜா சென்ற 10 வருஷங்களாகப் பட்டம் ஆளுகிறார். இதுவரை இவருடைய ஆட்சியின் மீது எவ்விதமான முறையீடுகளும் வெளிப்படவில்லை. இந்தோர் ஸம்ஸ்தானத்தின் வேலையினின்று, ராஜவிரோதம் பற்றியும், கெட்டநடை பற்றியும் ஸமீப காலத்தில் தள்ளுண்ட உயர்தர உத்யோகஸ்தர்களே இந்தப் பொய் வதந்திகளால் மஹாராஜாவுக்கும் அவருடைய ஆட்சிக்கும் அவமதிப் பிழைக்க விரும்பி, இவற்றைப் பரப்புகிறார்களென்று ஸம்ஸ்தான அறிக்கை கூறுகிறது. எனினும் ஸ்ரீ கோவிந்த ராவ் நிகோஷ்காரின் முறையீடுகளைக் குறித்து இந்தோர் ஸம்ஸ்தானத்தார் சொல்லும் ஸமாதானத்தில் நமக்கு முழுத் திருப்தி பிறக்கவில்லை. இவ் விஷயத்தைக் குறித்து ஜனத் தலைவர்கள் ப்ரத்யேகமான விசாரணை செய்து தம்முடைய முடிவுகளை நாட்டோருக்குத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

---

## 33

### புதுமைகள்

#### இல்லாத காலிலே நோவு தெரிதல்

ஐரோப்பிய மஹாயுத்தத்தில் கால் பறிகொடுத்த கூட்டத்தார் ப்ரான்ஸ் தேசத்தில், இதர தேசங்களைப் போலவே ஆயிரக் கணக்கான ஜனங்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் நவீன முறையில் மரக் கால்கள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கால்கள் மிகவும் ஸௌகர்யமான முறையில் அமைக்கப்பட்டிருப்பதால், இவர்கள் சிறிது காலத்திற்குள் அவற்றை ஸாமான்யக் கால்களாகவே பாவித்துவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மனுஷ்யனுடைய மனத்தின் விநோத சுபாவங்களைக் கருதுமிடத்து இஃதோர் ஆச்சரியமில்லையெனலாம். ஆனால் இதற்கு மேலே மற்றொரு விநோதமான அனுபவத்தைக் குறித்துச் சில தினங்களின் முன்னே "லண்டன் டைம்ஸ்" பத்திரிகையில் ப்ரசுரம் செய்யப்

பட்டிருந்த குறிப்பொன்றை நோக்குமிடத்தே மிகவும் ஆச்சர்யம் விளைகிறது. பாரிஸ் பட்டணத்தில் அநேக ப்ரபல வைத்யர்கள் இஃதுண்மை யென்று ஒருமைப்பாடு தெரிவித்திருக்கிறார்களாம். அதாவது, மேற்படி மரக் கால்களின் பாதத்தில் நோவு தெரிவதாக எத்தனையோ மரக்கால் மனிதர் வந்து வைத்தியர்களிடம் சிகிச்சை கேட்கிறார்களாம்!

"இஃதென்ன பைத்தியம்! தொடை முதல் தாள வரை நல்ல மரக்கட்டையோ அது போன்ற வேறு ஜடஸாமானோ! அதன் மரத்தாளில் நோயிருப்பதாம்! அதனைத் தொடைக்கு மேலுள்ள சரீரம் உணர்வதாம்! இஃதென்னே பேதமை!" என்று பலர் வியப்புறலாம். ஒருவர் இருவர் சொன்னால் அவர்களைப் பித்தரென்று கூறித் திரஸ்காசம் புரிந்து விடலாம். ஒரே மாதிரியாக அநேகர் வந்து சொல்லும்போது, பின்னும் அது பேதமை தானென்பதை நாம் உணர்வோமெனினும் அதைக் குறித்து சாஸ்திர ஆராய்ச்சி யேற்பட இடமுண்டாயிற்று. மனுஷ்யனுடைய மனதில் எத்தனை விதமாக மூடக் கொள்கைகள் ஜனிக்கின்றன! எத்தனை மயக்கங்கள், எத்தனை மோஹங்கள், எத்தனை மறதிகள்! நாகரிகமடைந்த, பயிற்சி பெற்ற அறிவுகளிலும் ஆயிரம் வகை விசித்திரமான மூட பக்திகளும் மஹா மூட பயங்களும் குடி புகுந்திருக்கின்றன! இஃது சாஸ்த்ர ஆராய்ச்சிக்குரிய விஷயமே.

## ஐர்லாந்துக்குக் கார்டினல் போர்ன் சொல்லும் புத்தி

"கார்டினல்" என்பது ரோமன் கத்தோலிக் குருக்களின் சிரேணியில் மிக உன்னத ஸ்தானத்தைக் குறிப்பிடுவது. கார்டினல் போர்ன் என்பவர் ஐரிஷ் பாதிரி வர்க்கத்தைச் சேர்ந்தவர். இவர் ஐர்லாந்து வாஸிகளுக்கு விடுத்திருக்கும் ஸ்ரீமுக மொன்றில், ஸ்வதேசத்தின் மீதுள்ள ப்ரேமை மிகுதியால், தம் வசமின்றிச் சிலர் கடவுளின் விதிகளுக்கும் கத்தோலிக்க மதத்திற்கும் விரோதமான ஸபைகளில் ஸம்பந்தப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறதென்று சொல்லி அதனைக் கண்டனம் பண்ணியிருக்கிறார். 1867-ஆம்

வருஷத்தில் கொடுத்த எச்சரிக்கையைத் தாம் இப்போது மீட்டும் கொடுப்பதாக அவர் தெரிவிக்கிறார். அதாவது இப்போது ஸின்பீனர்கள் ஆங்கிலேயருக்கு விரோதமாக, ஐர்லாந்தில் ஏராளமாகவும் இங்கிலாந்திலே சொற்பமும் நடத்திவரும் கொலைச் செயல்கள் முதலியன கிறிஸ்தவ மதத்துக்கும் கடவுளுடைய விதிகளுக்கும் விரோதமென்பது இவருடைய கருத்து. மனிதர் பரஸ்பரம் பகைக்கவாயினும் கொல்ல வாயினும் கூடாதென்றும், ஸஹோதரரைப் போல் நேசிக்க வேண்டுமென்றும் யேசு கிறிஸ்து நாதர் கட்டளையிட்டிருப் பதை உத்தேசித்து, அவருடைய சிலுவைக்கு ஐரிஷ் ப்ரதிநிதியாகிய கார்டினல் போர்ன் இங்ஙனம் ஸ்ரீமுகம் பிறப்பித்தமை முற்றிலும் பொருத்தமுடைய செய்கையே யாம். பகைவர்கள் நம்மைத் துன்புறுத்தும் போதும், நாம் அவர்கள் மகிழ்ச்சியடையும்படித் துன்பத்துக்குள்ளாகி நிற்க வேண்டுமேயன்றி அவர்களைத் துன்புறுத்தலாகா தென்பது கிறிஸ்தவ தர்மம். ஆனால் ஐரோப்பிய மஹா யுத்தத்தில் யேசு கிறிஸ்துவின் பக்தர்கள் பரஸ்பரம் லக்ஷக் கணக்காகப் பீரங்கிகளாலும், எறிகுண்டுகளாலும், விஷக் காற்றாலும் கொன்ற ஸமயத்தில் இந்தப் பாதிரிகள் எங்கே போயிருந்தார்கள்? ரோமாபுரியில் போப்பானவர் மாத்திரம் இடைக்கிடையே யுத்தத்தை நிறுத்தி ஸமா தானந் தேடினால் நல்லதென்று யுத்தத்தின் பிற்பகுதிக் காலத்தில் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் அந்தந்தத் தேசத்துக் குருக்கள் போரைக் கண்டித்து ஏதேனும் சொன்னார்களா? மூலைக்கொரு பக்ஷமாகத் தத்தம் கக்ஷியே நியாயமென்றும், தத்தம் கக்ஷிக்கே வெற்றியும் எதிரிகளுக்குத் தோல்வியும் கொடுக்க வேண்டுமென்றும் யேசு கிறிஸ்துவையே பிரார்த்திக்க ஆரம்பித்தார்கள்! இப்போதும் ஆங்கிலேயர் சட்டமின்றி ஐர்லாந்தில் செய்து வரும் பலாத்காரக் கொடுஞ் செயல்களைக் கண்டிக்காமல் ஸின்பீனரை மாத்திரம் கண்டிப்பதில் பயனில்லை. பயிற்சி யற்ற, தொகை குறைந்த, திறமை மிகுந்த படையை வைத்துக்கொண்டு ஸின்பீனர் எவ்விதக் கார்யங்கள் செய்கிறார்களோ அதே விதமான செயல்கள் பயிற்சி வாய்ந்த தொகையேறிய திறமை குன்றிய படையைக் கொண்டு ஆங்கிலேயராலே செய்யப்படுகின்றன.

இங்கிலாந்திலே கூட மிஸ்டர் ஆஸ்க்வித் முதல் லண்டன் "டைம்ஸ்" பத்திராதிபர் வரை பலதிறப்பட்ட ராஜதந்திரி களும், ஐர்லாந்தில் இப்போதுள்ள பரிதாபகரமான

நிலைமைக்கு லெனின் படையையும் ஆங்கிலப் படையையும் ஒருங்கே பொறுப்பாக்கிக் கண்டித்துப் பேசுகிறார்கள். "யதா ராஜா, ததா ப்ரஜா". ராஜாங்கமே சட்டத்தை மீறி திருஷ்டாந்தங் காட்டினால் பிறகு ஜனங்கள் சட்டத்தை மீறி நடக்கும்போது அவர்களைக் குற்றங்கூற வாய் ஏது ?

## பாதிக் கல்யாணம்

"ராஜாவின் மகளை விவாகம் பண்ணிக்கொள்ள எனக்கு ஸம்மதம். அந்தப் பக்கத்து ஸம்மதந் தெரிய வேண்டியது தான் குறைவு. எனவே பாதிக் கல்யாணம் ஆய்விட்டது" என்று ஒரு விகட கவி சொன்னானாம். அதுபோல் எமீர் (f) பெய்ஸலல் மெஸபொடேமியாவுக்கு ராஜாவாக இருக்கத் தாம் ஸம்மதப்படுவதாகத் தெரிவிக்கிறார். இவரும் இவருடைய பிதாவும், வேலிக்குள்ளிருந்த பாம்பைப் பிடித்துக் காதுக்குள் விட்டுக்கொள்வது போல், ஆங்கிலேயர்களையும் ப்ரெஞ்ச் ஜனங்களையும் மத்ய ஆசியாவுக்கு நல்வரவேற்று உபசரித்த மஹான்கள்; தற்கால ஸௌகர்ய மொன்றைக் கருதி நீண்ட கால யோசனையை இழந்து நடந்த கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். இந்த எமீர் பெய்ஸலல், ஏற்கெனவே, தம்மை ஸிரியாவுக்கு ராஜாவாகச் செய்வார்களென்று எதிர்பார்த்து இறுதியில் பிரான்ஸ் தேசத்தார் அதை விழுங்கிச் செல்லத் தாம் ஏமாறிப்போன பிரபு. இப்போது இவர் லண்டன் நகரத்தில் போய்ப் பத்திராதிபர்களுக்குக் குழையடித்துக் கொண்டிருக்கிறார். மெஸபொடேமியாவில் ஆங்கிலேயர்கள் வீணாக ஆட்களையும், செல்வத்தையும் பலி கொடுத்து வருவதில் ஆக்ஷேபம் செலுத்துவோரிடையே தம்மையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இவர் "டெய்லி டெலிக்ராப்" பத்திரிகைக் கார்யஸ்தரிடம் தெரிவித்திருக்கிறார். ப்ரிடிஷ் மந்திராலோசனையையும் உதவியையும் கொண்டு மெஸபொடேமியாவை ஆளக்கூடிய ராஜாங்க மொன்றை அராபியர் ஸ்தாபனம் செய்ய ஆயத்தமாக இருக்கிறார்களாம். பிரிடிஷாருடைய ராஜரிக திரவிய உரிமைகளுக்குப் பங்கம் நேராதபடி அரப் கவர்ன்மெண்டார் உறுதி மொழி கொடுப்பார்களாம். தேசத்தின் இயற்கைப் பொருள்களைக் காட்டி ஏராளமான கடன் வாங்க முடியுமாம்........ ஐயோ, பாவம் ! எமீர் பெய்ஸலல் பகற் கனவு காண்கிறார். இவர் ஹிந்துதேச சரித்திரம் வாசித்திருப்பாரானால், தம்முடைய தேச ஆட்சியாகிய கரும்புத் தோட்டத்தைப் பிறர்

ஆளாமல் தாம் ஆளச் செய்யும்படி இங்கிலிஷ் பாஷையை உதவிக் கழைத்திருக்க மாட்டார். இனி, காலச்சக்ரத்தின் சுழற்சியால் மெஸபொடேமியாவில் அரப் ஆட்சி ஏற்பட்டாலும், அதில் எமீர் பெய்ஸலுக்குரியதொரு ஆதிக்கமும் இராதென்பது திண்ணம்.

---

## 34

## உலக நிலை

### லார்ட் மில்நரைத் தள்ளியதன் முகாந்தரமென்ன?

குடியேற்ற மந்திரி ஸ்தானத்திலிருந்து லார்டு மில்நர் விலகிக் கொண்டதாகவும், அவர் எகிப்தின் விஷயத்தில் செய்த வேலையினால் விலகுதல் ஏற்படவில்லையென்றும் ராய்ட்டர் இந்தியாவுக்கு மிக ஸங்க்ரஹமாக ஸாதித்திருக்கிறார். "என் பிதா மெத்தையில் ஒளிந்திருக்கவில்லை" யென்று, கதையில் ஸாக்ஷ்ய முரைத்த குழந்தையின் நல்லெண்ணத்தை எய்தியே ராய்ட்டர் இங்ஙனம் தந்தி கொடுத்திருக்கிறாரென்று வெளிப்படையாகவே தோன்றுகிறது. எகிப்துக்கு ஆதியில், (ப்ரான்ஸ், அமெரிக்கா முதலிய நேச ராஜ்யங்களின் தூண்டுதலாலே) ஏறக்குறைய ஸ்வாதீனமே கொடுப்பதாக விளம்பரம் செய்துவிட்டார்கள். ஸூயேஸ் கால்வாயைத் தமக்கு வைத்துக் கொண்டார்கள். வேறு சில பூமிகளையும் பல உரிமைகளையும் கவர்ந்து கொண்டனர். இந்த நிபந்தனைகளுக்குட்பட்டுப் பரிபூர்ண ஸ்வாதீனம் கொடுப்பதாகவே வாக்குறுதி செய்து, பூமண்டலமறிய முழங்கி விட்டார்கள். இந்தியாவைப் போல் எகிப்து பண வரவுள்ள பூமியில்லை. மெஸபடோமியாவை விழுங்கியதற்கு இஃதொரு பரிஹாரம் போன்றதாய் முஸல்மான்களை நமக்கு வசப்படுத்தக்கூடும். ஸூயேஸ் கால்வாய்தான் எகிப்திலே ஸாராம்சம். அதை நாம் வைத்துக் கொண்டாய்விட்டது. மேலும் நமது படை எப்படியேனும் எகிப்திலிருக்குமாதலால், எகிப்து தேசத்து ராஜாங்கத்தாரை ஸ்வாதீனங் கொடுத்த பின்னரும், நமது கைப் பொம்மைகளாக நம் இஷ்டப்படி ஆட்டிவரலாம். இப்போதைக்கு ப்ரான்ஸ் அமெரிகா முதலிய நேச நாடுகளின்

வயிற்றெரிச்சலுக்கு அஃதோர் ஆறுதல் போலாகக் கூடும். தவிரவும், அந்தத் தேசம் விடுதலைக்காக எப்பாடும் படக்கூடிய நிலைமையிலிருக்கிறது; என, இங்ஙனம் பல காரணங்களை உத்தேசித்து ஆங்கில மந்திரிகள் ஆரம்பத்தில் எகிப்துக்கு ஸ்வாதீனங் கொடுப்பதாகிய இதிஹாஸத்தை ப்ரசுரப்படுத்தினார்கள். பின்னிட்டு, "நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது". என்ன செய்யலாம்? லாய்ட் ஜ்யார்ஜ் உபதேசம் பண்ணுகிறார். கடவுள் தீர்ப்புப் பண்ணுகிறார்.

## எதிர்பாராத விளைவுகள்

ஆங்கில மந்திரிகள் தினை விளைத்தோமென்று கருதித் தினையறுக்கச் சென்ற இடத்தே பனை முளைத்திருக்கிறது. எகிப்துக்கு இவர்கள் ஸ்வாதீன விளம்பரம் செய்ததினால், முஸ்லிம் உலகத்தின் கோபம் ஆறவில்லை. முன்னிலும் அதிகமாகக் கொதித் தெழுந்தது. எகிப்தை விடப் போகிறார்களா? வாஸ்தவந்தான். துருக்கியை என் விடவில்லை? விடுவிக்கவில்லை? மொஸபொடோமியாவை, ஸிரியாவை என் விடவில்லை? விடுவிக்கவில்லை? பாரஸீகத்தை என் விழுங்க முயன்றார்கள்? அரபியாவை என் விழுங்க முயலுகிறார்கள்? இந்தியாவுக்கு விடுதலை எப்போது? இத்தனை கேள்விகள் சீறுவாணம் வீசிக் கொண்டிருந்த இடத்தில் எகிப்துக்கு இவர்கள் ஸ்வாதீன விளம்பரம் செய்ததினின்றும் உலகத்துக்கு முஸல்மான்களின் புதிய மனக் கொதிப்புக்கள் அடங்கவில்லை. இப்படித்தான் நேரு மென்பதை யாரும் முன் யோசனையாலே தெரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கும் அவருடைய ப்ரிய ராஜரீகத் துணைவருக்கும் ஊஹ சக்தி குறைவு. நாளைக்குக் காலையில் இன்ன கார்யம் இப்படியாகக் கூடு மென்பதை யுணரும் எதிர்கால ஞானமில்லாதோர் மந்திரி ஸ்தானத்துக்குத் தக்கோரல்லர். எனினும், இவர்கள் அதனாலே ஸங்கடங்களுக்குட்படுவது கிடையாது.

## மாற்றிச் சொல்லும் வித்தையில் மஹா மஹோபாத்யாயர்

ஒன்றில் ஒரு முறை சொல்லியதை மறு முறை மறந்தோ[illegible]யை வீசி யெறிந்து விட்டு, மாற்றிச் சொல்லும்

வித்தையில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜும், அவருடைய ஸஹ மந்திரிகளும் மஹா மஹோபாத்யாயப் பட்டம் பெற்றிருக்கிறார்கள். அமெரிகாவிலிருந்து "ஸ்வதந்த்ர பரியோஷணை ஸங்கத்தின்" (!) அத்யக்ஷகர்களாகிய ஆங்கில மந்திரிகள் எதிர்பார்த்த கைம்மாறுகள் கிடைக்கவில்லையென்று புலப்படுகிறது. அதினின்றும், எகிப்துக்குக் கொடுத்த வாக்குறுதியை அசைக்கலாமென்ற உத்தேசம் மேற்படி அத்யக்ஷகர்களுக்கேற்பட்டு விட்டதோ என்றெமக்கோர் ஐயமுண்டாகிறது. அங்ஙனம் அந்த வாக்குறுதியைக் கொஞ்சம் புதிய வியாக்யானங்களுக் குட்படுத்துவதற்கு முகவுரையாக லார்ட் மில்நரைச் சிறிது காலத்துக்கு விலக்கி வைத்திருக்கிறார்களென்று தோன்றுகிறது. ஆனால் இதிலும் உத்தேசந்தான் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் கூட்டத்தாருக்குரியது. தீர்ப்பு கடவுளுக்குரியது. முதலாவது, கடவுளுக்கும் இரண்டாவது எகிப்துக்குமுரியது.

## "கிலாபத்" விஷயம்

ஸ்மர்னாவில் ஆஹாரமின்றி வருந்தும் முஸ்லிம்களுடைய ஸம்ரக்ஷிப்புக்குப் பாரத மத்ய "கிலாபத்" ஸமிதியார் ஐயாயிரம் பவுன் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. இது போன்ற செயல்களே உலகத்து முஸ்லிம்களுக்குள் ஏற்கெனவே யுள்ளதாகிய ஸஹோதரப் பற்றுதலை இன்னும் உறுதிப் படுத்தும் நற்செயல்களாம். இது நிற்க, கிலாபத் ஸமிதிகளின் முயற்சியால் ஒத்துழையாமைக் கொள்கை நாட்டில் உறுதியடைந்து வருதல் யாராலும் மறுக்க முடியாத செய்தி. இந்த ஸமயத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் அசிரத்தையாக இருப்பதைப் பார்த்து நமக்குப் பெரு வியப்புத் தோன்றுகிறது. "ஸெவர்" உடம்பாடு, அநீதி, நஷ்டம், அபகீர்த்தி-இவை வேண்டுமா? முஸ்லிம்களின் நட்பு, நீதி, கீர்த்தி, நஷ்டமெய்தாமை இவை வேண்டுமா? இந்திய முஸ்லிம்களே இக்காலத்தில் உலகத்து முஸல்மான்களுக்கு முக்யப் பிரதிநிதிகள். இந்திய முஸ்லிம்கள் என்ன நினைப்புக்கள் கொண்டிருக்கிறார்களென்பதை இந்தியா கவர்ன்மெண்டார் மேன் மேலும் அழுத்தமாக வற்புறுத்தித் தெரிவித்தாலன்றித் தாமாகவே தெரிந்து வேலை செய்யக்கூடிய அத்தனை புத்திமான்களுமல்லர் லாய்ட் ஜ்யார்ஜ் ஸபை மந்திரிகள்.

# 35

## காலவிளக்கு

### " நாகரிகத்தின் ஊற்று "

ப்ரான்ஸ் தேசத்து முதல் மந்திரி ஸ்தானத்திலிருந்தவராகிய ஸ்ரீமான் க்ளெமன்ஸோ சில தினங்களாக இந்தியாவில் ஸஞ்சாரம் பண்ணி வரும் செய்தி நம் நேயர்களுக்குத் தெரிந்ததேயாம். இவருக்குச் சில நாட்களின் முன்னே பம்பாயில் * நடந்த விருந்தின்போது இவர் செய்த ப்ரஸங்கத்தில் பின்வரும் ஸார மயமான வாக்யம் காணப்படுகிறது :—

" ப்ரான்ஸிற்காக இரத்தம் சிந்திய மக்களைப் பெற்ற தேசத்தை வந்து பார்ப்பது எனக்குப் பெருமையுண்டாக்குகிறது. ப்ரெஞ்சு குடும்பங்களுடன் இந்தியச் சிப்பாய்களிருந்தபோது நான பார்த்திருக்கிறேன். அவர்களுடைய மரியாதையும் அன்பும் ப்ரான்ஸ் தேசத்தாரை மோஹிக்கும்படிச் செய்தன. கீழ்த்திசையானது நாகரிகத்தில் குறைந்ததன்று. அன்பு, மானுஷீகம் என்பவற்றிற்குரிய மஹோந்நத லக்ஷ்யங்களெல்லாம் கீழ்த்திசையிலிருந்து வந்தன. மேற்குத் திசையார் அவற்றை ஸ்வீகரித்துத் தம்முடைய லக்ஷ்யங்களாகச் செய்து கொண்டனர். எனவே, உங்களைக் காட்டிலும் உயர்ந்த நாகரிகத்தின் ப்ரதிநிதியாக என்னை மதித்து நான் உங்களோடு பேசவில்லை. (இந்தியாவாகிய) நாகரிகத்தின் ஊற்றை நோக்கி நீஞ்சி வந்தவனாக என்னை மதிக்கிறேன் " என்றார்.

இவர் யார் ? ப்ரான்ஸ் தேசத்து முதல் மந்திரியாக இருந்து அதி ஸமீப காலத்தில் விலகியவர். வெறும் இலக்கியப் படிப்பு மட்டும் உடையவரல்லர். மிகவும் பழுத்த லௌகிகத் தேர்ச்சியும், ஐரோப்பிய ராஜ தந்திரத்தில் மஹா கீர்த்தி வாய்ந்த நிபுணத் தன்மையுமுடையவர். இவரே பத்து வருஷங்களுக்கு முந்தி இவ்விதமாகப் பேசியிருக்கமாட்டார். இரண்டு வருஷங்களுக்கு முன் இப்படிப் பேசியிருக்கமாட்டார். நினைத்துக்கூட இருக்கமாட்டார். ஐரோப்பிய நாகரிகமே மேம்பட்டதென்று நினைத்திருப்பார்.

இன்றைக்கு இந்தியாவை வந்து கூடியவரை நிஷ்பக்ஷபாத மான, தெளிந்த விழிகளுடன் பார்க்கும்போது, இந்த எண்ணம் இவர் மீது வற்புறுத்தப்படுகிறது. இவருடைய வசனத்தை நன்ருக ஊன்றிப் படிக்கும்படி நம்மவர்களை வேண்டுகிறேன். இவர் என்ன சொல்லுகிருர் ? ஐரோப்பிய நாகரீகத்தின் பரம லக்ஷ்யங்கள் அவர்கள் எதிர் காலத்தில் நிறைவேற்றக் கருதும் தர்மங்கள், ஐரோப்பாவுக்கு சொந்தமல்லவென்றும் அவை கீழ்த்திசையிலிருந்தே கிடைத்தனவென்றும் சொல்லுகிருர். நாமே ஐரோப்பாவுக்கு லக்ஷ்ய தானம் செய்தோமென்றும் நம்முதவியின்றி அவர்கள் இன்னும் பச்சை குத்திய நிர்வாணமான காட்டு ஜனங்களாகவே யிருந்திருப்பார்களென்றும் அங்கீகரித்துக் கொள்ளுகிருர். ஆசியாவிலிருந்து நாகரிகம் ஐரோப் பாவுக்குச் சென்றது. ஆசியாவின் நாகரிகத்துக்கு மூல ஸ்தானம் நமது பாரத வர்ஷம். ஆனால் முற்காலத்தில் நாம் எத்தனை உயர்ந்த நிலைமையிலிருந்து உலகத்திற்கு எத்தனை அரிய நலங்கள் செய்தபோதிலும் இப்போது நாம் சரியான நிலைமையிலில்லாதிருப்போமானல் நமது பண்டைக் காலப் பெருமை யாருக்கும் நினைப்பிராது. இன்று மீண்டும் நமது தேசம் அபூர்வமான ஞானத் திகழ்ச்சியும் சக்திப் பெருக்கமும் உடையதாய்த் தலை தூக்கி நிற்பதே நமது பெருமையைக் குறித்து ஸ்ரீமான் க்ளெமான்ஸோ முதலிய வர்கள் மேலே காட்டியபடி பூஷித்துப் பேசக் காரண மாகிறது. எனினும், நாம் உலகத்திற்குப் புது வழி காட்டத் தகுதியுடையோமென்பதை ருஜூப்படுத்தி யிருக்கிறேமே யன்றி இன்னும் அந்த ஸ்தானத்தில் நாம் உறுதி பெறவில்லை. "மேற்குத் திசையிலிருப்பது போலவே இங்கும் மனிதர், பரஸ்பரம் அன்பு செலுத்தும்படி விதித்த கடவுளின் சட்டளையை மறந்து, ஒருவருக்கொருவர் விரோதிப் பதையும் கொலை புரிவதையும் கண்டு நான் வ்யஸனப்படு கிறேன்" என்று ஸ்ரீ க்ளெமான்ஸோவே சொல்லியிருக்கிருர். ஆனல் இந்த ஸமயத்தில் இந்தியாவில் பரவிவரும் ஸாத்விக தர்மக் காற்றைச் சுவாஸியாமலிருப்பாரானல், ஸ்ரீ க்ளெமான் ஸோவின் வாக்கில் இந்த வார்த்தை உதித்தேயிராதென்று நான் நிச்சயமாகக் கூறுவேன். இப்போது ஸ்ரீ க்ளெமான்ஸோ பாரீஸ் நகரத்திலிருந்தால் அங்கு மறுபடி வீசி வரும் ஜெர்மானிய விரோதக் காற்று இவரையும் தாக்கி இவருடைய புத்தி ஸாத்வீக நெறிகளிலே செல்ல இடங் கொடுத்திராது. எனவே, இந்தியா அன்பு நெறியால்

வலிமை யோங்கி உலகை நடத்த வேண்டுமென்ற கொள்கையை ஆதரிக்கத் தொடங்கி விட்டது. இந்த ஆசாரத்தின் ஆரம்பக் கலைகளே மிகவும் ஆச்சர்யமாக, உலகத்தாரெல்லாருங் கண்டு வியக்கும்படி யிருக்கின்றன. இனி இக்கொள்கை இந்தியாவில் மக்களுக்குளளே எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் பூர்ணமாக ஸ்தாபிக்கப்பட்டு விளங்கும் காலத்தைக் கடவுள் விரைவிலே அருள் செய்வாராகுக.

## ஸிர்ஸி ஜில்லாக் கமிஷனர்

பம்பாய் மாகாணத்தில் ஸிர்ஸி ஜில்லாக் கமிஷனர் மிஸ்டர் காடெல் என்பவரிடம் மூன்று இந்தியக் கனவான்கள் ஒரு விண்ணப்பம் கொண்டு போனார்கள். அப்போது அந்த மூவரையும் மிஸ்டர் காடெல் அடித்தார்; புடைத்தார்; கழுத்தை நெரித்தார். இந்தப் படிக்கு ஸிர்ஸி நகரத்தார் மூன்று பேர் கையெழுத்திட்டு "பம்பாய் க்ரானிகள்" பத்திரிகைக்கு ஒரு கடிதமெழுதினார்கள். பின்னிட்டுப் பம்பாய் கவர்ன்மெண்ட் கார்யதரிசி மிஸ்டர் க்ரரர் என்பவர் அவ் விஷயமாக ஸர்க்கார்ப் பக்கத்து வாக்குமூலமொன்றை அதே பத்திரிகைக்கனுப்பினார். அதற்குப் பிறகு மறுபடி மூன்று பேர் மேற்படி ஸம்பவம் நடக்கையில் ஸாக்ஷிகளாக நின்று பார்த்தோர் அந்தப் பத்திரிகைக்குக் கையொப்பமிட்டனுப்பியுள்ள கடிதமொன்றில் ஸர்க்கார் வாக்குமூலம் பிழையென்றும் மிஸ்டர் காடெல் மனதறிந்து, வேண்டுமென்றே புடைத்தாரென்றும் தெரிவிக்கிறார்கள்.

பம்பாய்க் கவர்னர் இந்த விஷயத்தைக் குறித்து விசாரணைகள் நடத்தி வருகிறார். ஆனால் மாமூல்படி அடித்த உத்தியோகஸ்தரை மாத்திரம் விசாரித்து அவர் தாம் புஷ்பாஞ்சலி செய்ததாக எழுதும் அறிக்கையைப் படித்து, கவர்மெண்டார் திருப்தி கொண்டிருந்தால் போதாது. கை வீசி அடிக்கும் அநாகரிக மனிதர் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாகவும் ஜில்லா "மாஜிஸ்ட்ரேட்களாக"வும் இருந்து நீதி பரிபாலனம் செய்யும் கோலத்தை இந்தியா இன்னும் ஒரு க்ஷணங்கூடப் பொறுத்திராது.

## மிஸ்டர் காடெல் அடித்த காரணம்

இதைப் பற்றிய பூர்வ கதையை ஸமீபத்தில் ப்ரசுரமாயிருக்கும் ஸாக்ஷிகளுடைய கடிதத்திலிருந்து ஸங்க்ரஹமாய் எடுத்தெழுதுகிறோம்:—வண்டிகளைக் கமிஷனருடைய

அவசியத்துக்காகப் பிடித்து வரும்படி போலீஸாருக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. அவர்கள் அந்தக் கட்டளையை நிறைவேற்றுகையிலே பலவித அக்கிரமங்களிழைத்தனர். ஒரு காளைக்குக் கழுத்தில் புண்ணாய் இரத்தமொழுகிக் கொண்டிருந்தது. அந்தக் காளையையும், வண்டிச் சொந்தக்காரர்களையும் உடன் கொண்டு, நகரத்து ப்ரமுகர் கமிஷனரிடம் அதன் சம்பந்தமாக மனுச் செய்துகொள்ள வந்தார்கள். துரைக்கு வண்டி கொடுக்கச் சொன்னால், அதை யெதிர்த்து மனுக் கொடுக்க வந்தார்கள் பார்த்தாயா என்ற கோபம் கமிஷனரின் தலைக்கேறி விட்டது. உடனே அபிமன்யு சண்டை. கண்டவனுக்கெல்லாம் அடி, குத்து, மிதி, உதை! ஆனால் இந்த அபிமன்யுவுக்கெதிரே வில்லாளிகளில்லை; வெறுமே விண்ணப்பச் சொல்லாளிகள் இருந்தனர். எனவே மிஸ்டர் காடெல் உயிர் தப்பியதுமல்லாமல், பின்னிட்டு ஸர்க்கார் விசாரணையிலே விஷயங்களை உண்மை தவறிச் சொல்லிவர இடமேற்பட்டதென்று மேற்படி சாக்ஷிகள் தெரிவிக்கிறார்கள்.

### ஸ்ரீமான் போமான்ஜியின் நன்கொடை

பம்பாயில் மாணாக்கர்களுடைய இயக்கத்தில் ஸ்ரீமான் போமான்ஜி மிகவும் சிரத்தை யெடுத்து வருவதாகத் தெரிகிறது. இந்த இயக்கத்தை நடத்தி வருபவராகிய ஸ்ரீமான் தேசபாண்டேயினிடம் ஸ்ரீ போமான்ஜி 10,000 ரூபாய் கொடுத்திருக்கிறார். பாடசாலை விட்டு ஒத்துழையாமைக் கிளர்ச்சிக்கு உதவி செய்யும் மாணாக்கர்களின் தற்காலச் செலவுகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளும்படி இந்தப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

---

## 36

## விநோதத் திரட்டு

### (1) ஐரிஷ் நிலைமை

ஐர்லாந்துக்கு விடுதலை கொடுக்கும் பக்ஷத்தில் அது ஐர்லாந்து இங்கிலாந்துக்கு விரோதமான செய்கைகள் செய்வது மன்றி, இங்கிலாந்துக்குப் பகையான மற்ற நாடுகளும் தீங்குகள் செய்வதற்கோர் தூண்டுதலாக இருக்குமென்ற அர்த்தத்தில் மிஸ்டர் லாயிட் ஜ்யார்ஜ் சில தினங்களின் முன்பு

காமன்ஸ் ஸபையில் பேசியதைக் குறித்து ஏற்கெனவே நமது பத்திரிகையில் எழுதியிருக்கிறேன். வேறு பல ப்ரிடிஷ் ராஜதந்திரிகளும் ஐர்லாந்தைக் குறித்துப் பேசுமிடத்தே அந் நாடு இங்கிலாந்தின் பாரிசத்திலுள்ளதொரு சத்துருவென்று சொல்லி வருகிறார்கள். "ஐரிஷ் குடியரசின்" ஜனாதிபதியாகி, அமெரிக்காவுக்குப் போய் வஸிக்கும் மிஸ்டர் டி-வலேரா என்பவருடைய ஸ்தானத்தில் வேலை பார்த்து வரும் மிஸ்டர் ஆர்தர் (g) க்ரி (f) பித்ஸ் என்பவர் ப்ரசுரம் செய்திருக்கும் அறிக்கை யொன்றில் நாம் எதிர்பார்த்த வண்ணமே மேற்கூறிய ப்ரிடிஷ் ராஜ்ய தந்திரிகளின் கொள்கையை மறுத்துப் பேசுகிறார். "நீங்கள் உங்களுடைய கொள்கைகளாலேயே ஐர்லந்தைப் பகையாகச் செய்து கொண்டு விட்டீர்கள். உங்களுடைய ராஜ்ய முறையை மாற்றி விடுங்கள். ஐர்லாந்து தேசத்தார் தங்களுக்கிஷ்டமான ராஜாங்க முறைமையை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமையுடையோ ரென்பதை அங்கீகாரம் செய்து கொள்ளுங்கள். உடனே ஐர்லாந்து உங்களிடம் நட்புள்ள தேசமாய்விடும். உங்களுடன் ஸமாதானத்தோடும் அன்போடும் வாழத் தொடங்கும் என்று மிஸ்டர் ஆர்தர் க்ரிபித்ஸ் சொல்லுகிறார். "ஸின்பீன்" கக்ஷியின் தலைவர்களுடைய கருத்து இங்ஙனமிருக்கிறது. எனினும், இந்த முறைப்படி ஐர்லாந்தைத் தனக்குப் பகையென்ற நிலைமையினின்றும் பெயர்த்துத் துணையாகச் செய்து கொள்ளுதற்குரிய தீர்க்காலோசனை ப்ரிடிஷ் மந்திரிகளுக்கு இப்போதேற்படுமோ என்பது எனக்கு மிகவும் ஸந்தேஹமாகத்தான் இருக்கிறது.

## சில குறிப்புகள்

### ஐர்லாந்து

ஐர்லாந்து விஷயமாகவும், உள்நாட்டுத் தொழிலாளர் கிளர்ச்சி விஷயமாகவும் இங்கிலாந்து தேசத்தாரின் மனம் மிகவும் குழம்பிப்போயிருக்கிறதென்று லண்டன் "டைம்ஸ்" முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளைப் பார்த்தால் மிகத் தெளிவாக விளங்குகிறது. முக்கியமாக, ஐர்லாந்தில் அதிகாரிகள் செய்யும் "எதிர்ச் செயல்கள்" உலக முழுவதிலும் ஐரிஷ் ஆட்சிக்குப் பேரவமானம் விளைக்கக் கூடிய விஷயமாதலால், அதன் ஸம்பந்தமாக ஆங்கிலேயர் மனதில் மிகுந்த அதிர்ச்சியுண்டாயிருக்கிறது. போலீஸாரையும் ராணுவத்தாரையும் எவ்விதத்திலேனும் கஷ்டப்படுத்தியவர்கள் அல்லது கஷ்டப்படுத்தக் கூடியவர்களாகிய "ஸீன்பீன்" கக்ஷியாரை

மாத்திரமே அதிகாரிகள் அழிக்கவில்லை. பல மாஸங்களாகவே இஷ்டமான வீடுகளில் பிரவேசிப்பதும், வீட்டாரைச் சுட்டுக் கொல்வதும், வீடுகளையும் பண்ணைகளையும் கிராமங்களையும் கொளுத்துவதுமாக விளையாடிக்கொண்டு வருகிறார்களென்று சொல்லப்படுகிறது. இந்த நிலைமையிலே கொண்டு சேர்த்த தாகிய ராஜதந்த்ர முறைமைக்கு லாயிட் ஜ்யார்ஜ் முதலிய மந்திரிகள் ஆரம்பத்திலேயே ஸம்மதமளித்ததாகவும் சிலர் தெரிவிக்கிறார்கள். லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை பிற்போக்குடையது. இன்றைக்கும் ஐர்லாந்து ஸ்வாதீன மடையும் விஷயத்தில் "டைம்ஸ்" பத்திரிகைக்குக் கொஞ்சமேனும் அனுதாபம் கிடையாது. ஐர்லாந்து தேசத்தார் தாங்கள் ஸ்தாபித்திருக்கும் குடியரசை எப்படியேனும் காப்பாற்ற வேண்டுமென்று பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டு வருகையிலே, லண்டன் "டைம்ஸ்":—"காலக் கிரமத்தில் ஐயர்லாந்து தேசத்தாரையும் சேர்த்துக்கொள்ளக் கூடியதான ஓராட்சி முறை ஐர்லாந்தில் விளைவதற்குரிய சட்ட திட்டங்களை ஏற்படுத்திவிட வேண்டும்" என்று ஆசீர்வாதம் பண்ணுகிறது. அந்தப் பாஷையைக் கவனித்தீர்களா? ஸ்வராஜ்ய விஷயத்தில் ஐர்லாந்து வாஸிகளுக்குள்ள தாகத்தின் வேகத்தையும் இப்பத்திரிகையின் ஆமை யெழுத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் வெகு விநோதமாகத் தோன்றும். இப்படிப்பட்ட லண்டன் "டைம்ஸ்" கூடப் 'பழி வாங்குதல்' என்ற பெயரை வைத்துக்கொண்டு ஆங்கிலேயத் துருப்புகள் ஐர்லாந்தில் நடத்தும் சட்டத்துக்கும் மனித நாகரிகத்துக்கும் விரோதமான கொடுஞ் செயல்களை மிகவும் உக்ரமாகக் கண்டிக்கிற தென்றால் அக்கொடுஞ் செயல்கள் எத்தனை கொடுமையாக இருந்திருக்க வேண்டுமென்பதை நேசர்களே ஊஹித்தறிந்து கொள்ளலாம். மேலும் இந்த விஷயத்தில் மிஸ்டர் லாயிட் ஜ்யார்ஜ் முதலிய ஆங்கில மந்திரிகளின் உபந்யாஸங்கள் கடிதங்கள் முதலியவற்றைப் படித்துப் பார்க்கும்போது, நிலைமை கை கடந்து போய் விட்டதென்றும் இந்த ஐர்லாந்தின் ஸம்பந்தமாக இன்னதுதான் செய்ய வேண்டுமென்பதே ஆங்கில ராஜதந்திரிகளுக்குத் தெரியவில்லை யென்றும் விளங்குகிறது.

## துருக்கியின் நிலை

துருக்கிக்கும் நேசக் கக்ஷியாருக்கும் நடந்த உடம்பாட்டைத் துருக்கி இன்னும் உறுதி செய்யவில்லை. மறுபடியும் ஒரு முறை தேசியக் கக்ஷியாரால் துருக்கிக்குச் சற்றே ஸௌகர்யம்

ஏற்படலாமென்று தோன்றுகிறது. பால்கன் யுத்த முடிவில் துருக்கி தோற்றுப் போய் விட்டது. தேசியக் கக்ஷிக்கு விரோதமான மனிதர் துருக்கியில் ஆட்சி செலுத்தி வந்தனர். அவர்களுடைய கொள்கை எப்படி யிருந்ததென்றால் :—உள் நாட்டில் தேசீயக் கக்ஷியாரின் சக்தியைக் குறைக்கும் பொருட்டு, அன்னியரின் உதவி பெற்று அதனால் அந்த அன்னியர்கள் நம்மைக் குதிரையேறக் கூடிய நிலைமை ஏற்பட்டாலும் பெரிதில்லை ; நாட்டை அன்னியர் கொண்டு போனாலும் போகுக ; ஆனால் தேசீயக் கக்ஷியார் ஆளக் கூடாது. இங்ஙனம் கருதும் மனிதர் செய்து கொண்ட உடம்பாடு எப்படி யிருக்கும் ! மேலும், லண்டன் நகரத்தில் பால்கன் தேசத்தார்களுக்கும் துருக்கிக்கும் உடம்பாடு கையெழுத்திடப்பட்டது. அதில், மற்ற நிபந்தனைகளுடனே, அட்ரியா நோபிள் ஜில்லாவைத் துருக்கி விட்டுவிட வேண்டு மென்ற நிபந்தனையும் சேர்ந்திருந்தது. அக்காலத்தில், அன்வர்பாஷா முதலிய தேசியக் கக்ஷித் தலைவர்கள் துணி வாகவும் தைர்யமாகவும் வேலை செய்தபடியால் துருக்கிக்கு அட்ரியா நோபிள் நஷ்டமாகாமல் மிஞ்சிற்று. திடீரென்று அன்வர்பாஷா முன்னிருந்த கோழை மந்திரிகளைத் தூக்கி எறிந்துவிட்டு, அதிகாரத்தைக் கைவசப் படுத்திக் கொண்டு, அட்ரியா நோபிளை இழக்கப் போவதில்லை யென்று தெரி வித்து விட்டார். இதற்குள், பால்கன் தேசங்கள் ஒன்றுக் கொன்று போராடத் தொடங்கித் தங்கள் மனஸ்தாபங்களைத் தீர்ப்பதற்குப் பிறர் மத்யஸ்தத்தை வேண்டக் கூடிய நிலை மைக்கு வந்துவிட்டபடியால் அவற்றால் துருக்கியை வற்புறுத்த முடியவில்லை, ஆனால், "லண்டன் உடம்பாட்டை நாங்க ளன்றோ கூட இருந்து முடித்து வைத்தோம் ? அப்படி யிருக்க அவ்வுடம்பாட்டுக்கு மாறாக அட்ரியா நோபிள் துருக்கி வசத்திலிருப்பதை நாங்கள் அங்கீகாரம் செய்ய மாட்டோம்" என்று ஆங்கில மந்திரிகள் சொன்னார்கள். அதற்கு அன்வர்பாஷா :—"தங்கள் இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். ஆனால் அட்ரியா நோபிளைக் கொடுக்கமாட்டேன்" என்று சொல்லி விட்டார். ஒன்றும் நடக்கவில்லை. துருக்கிக்கு அட்ரியா நோபிள் மிஞ்சிற்று. அதுபோல் இப்போது ஆசியா மைனரிலுள்ள அனடோலியாவின் ராஜதானியாகிய அங்கோரா நகரத்தில் கமால் பாஷா தேசீயக் கக்ஷிப் படைகளையும், தக்க உபபலங் களையும் வைத்துக் கொண்டு கான்ஸ்டாண்டி நோபிள் நகரத் திலுள்ள துருக்கிய அதிகாரிகளிடம் த்ரேஸ், ஸ்மர்னா ஸ்தானங்களை இழந்து விடாமல் இருக்கும்படி வற்புறுத்தி

வருகிறுர். இப்போது ஸெவர் உடம்பாட்டை உறுதி செய்யுமாறு நேசக் கக்ஷியார் வற்புறுத்தியதற்கு உத்தரமாகத் துருக்கி கவர்மெண்டார் அவ்விஷயம் இப்போது அத்தனை அவஸரமில்லே யென்று கமால் பாஷாவின் கூட்டத்தாரை ஸமாதானப்படுத்தும் பொருட்டாக அதைச் சற்று மெதுவாகவே கவனிக்கும்படி நேர்கிற தென்றும் தெரிவித்திருக்கிறுர்கள். நேசக் கக்ஷியாருக்குள்ளேயே ஸமாதான நிபந்தனைகளைப் பற்றிய பூர்ண மனவொற்றுமை யில்லாம லிருப்பதை யறிந்தே துருக்கிய அதிகாரிகளுக்கு இங்ஙனம் சொல்லத் தைர்யம் ஏற்பட்டிருக்கக் கூடுமென்று நினைக்கிறேம். ஜெர்மனி விஷயத்திலேயே பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் மேன்மேலும் அபிப்பிராய பேதங்கள் தோன்றி வருகின்றன. அமெரிக்காவோ சொல்ல வேண்டியதில்லை; “இங்கிலாந்தினிடம் எனக்கு விரோதம் கிடையாது” என்று அமெரிக்காவின் புதிய ஜனுதிபதியாக நியமனம் பெற்றிருக்கும் ஹார்டிங் என்பவர் சொல்லுகிருர். நம்முடைய பிராண ஸ்நேஹிதனுக உயிர்த்துணையாக இருந்த ஒருவன் இப்போது நமக்கும் தனக்கும் விரோதமில்லை யென்று சொல்ல நேர்ந்தால் முன் இருந்த ஸ்நேஹ நிலை எத்தனை தூரம் குறைந்து போய்விட்டதென்பது சொல்லாமலே விளங்கும். இத்தலியோ மிகவும் அபாயகரமான உள்நாட்டுக் குழப்பத்தில் அழுந்திக் கிடக்கிறது. இந்த நிலையில் தாமேன் தமது கழுத்திலே அவசரமாகச் சுருக்குப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று துருக்கி நினைத்தே இங்ஙனம் வாயிதா போடுகிறதென்று தோன்றுகிறது. ஆனல் இங்ஙனம் துருக்கி கொடுத்த உத்தரத்தில் நேசக் கக்ஷியாருக்குக் கோபமுண்டாய் அவர்கள் இதுவரை துருக்கி ராஜாங்கப் பொக்கிஷத்துக்குச் செய்து கொண்டு வந்த பண உதவியைக் குறைத்து விடப் போகிறுர்களென்றும் அதன் மேலும் துருக்கி சரிப்பட்டு வராவிட்டால் இறுதிச் சீட்டுப்பிறப்பிக்க நேருமென்றும் நேற்றுக் கிடைத்த ராய்ட்டர் தந்தியொன்று சொல்லுகிறது. இதனின்றும், துருக்கி மந்திரிகள் என்ன விதமான செய்கையை மேற்கொள்வார்களென்பது தெரியவில்லை.

ஆனல், நேசக் கக்ஷியாரின் இறுதிச் சீட்டு (எங்கள் வார்த்தையை அங்கீகாரம் செய்யாவிட்டால் யுத்தந் தொடங்குவோமென்ற சீட்டு) துருக்கியரை நடு நடுங்கச் செய்துவிடுமென்று தோன்றவில்லை.

## ஸர்வதேச ஸங்கம்

நேசக் கக்ஷியாரால் மிகவும் ஆரவாரத்துடன் நடத்தப்பட்டு வரும் "ஸர்வ தேச ஸங்கம்" செத்துப் போய்விட்ட தென்று அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி மிஸ்டர் ஹார்டிங் சொல்லியதாகத் தெரிகிறது. ஆரம்பத்தில், அநேகமாகப் பெரும் பகுதி, ஜனாதிபதி வில்ஸனுடைய வேண்டுதல்களை முன்னிட்டே இந்த ஸங்கம் அமைக்கப்பட்டது. இங்ஙனம் அமெரிக்காவின் முயற்சியால் ஏற்பட்ட இந்த ஸங்கத்தை இப்போது அமெரிக்காவே சாபமிடுதல், காலத்தின் மாறுபடும் குணத்தையும், அந்த ஸங்கத்தின் மாற்ற முடியாத துர்க்குணத்தையும் ஒருங்கே விளக்குகிறது. நிறைவேற்ற முடியாத, நிறைவேற்ற வழியில்லாத பல பல தீர்மானங்களில் பொழுது செலவிட்டுக் கொண்டிருக்கும் அந்த ஸங்கத்தை அமெரிக்கா இனி ஒரு சிறிதேனும் பொருட்படுத்தப் போவதில்லை யென்பது மேலே காட்டிய மிஸ்டர் ஹார்டிங்கின் வாக்கிலிருந்து நன்கு விளங்குகிறது. ஸமீப காலத்தில் ஐரோப்பாவில் ப்ரஸ்ஸல்ஸ் நகரத்தில் நடந்த திரவிய ஸங்கத்தின் முன்பு ஒரு அமெரிக்க ராஜ தந்திரி பேசுகையில் :—"வேலை செய்ய மனமில்லாத நாடுகளுக்கு ஆஹாரம் கொடுக்கமாட்டோம் ; ஸமாதானம் செய்துகொள்ள மனமில்லாத ராஜ்யங்களுக்குப் பணம் கடன் கொடுக்கமாட்டோம். இதுவே அமெரிக்காவின் நியாயமான கொள்கை" என்று சொன்னார். இதைக் குறித்துப் பேசுமிடத்தே, 'நியூ இந்தியா' பத்திரிகை சொல்லுகிறது ;—"இங்கிலாந்தில் ஒரு பொது எலெக்ஷன் நடந்து அதினின்றும் உதார குணமுடையவர்கள் அதிகாரம் பெற்று அதனால் ருஷியாவுடன் ஸமாதானமும், ஐர்லாந்துக்கு ஸமாதான வாழ்க்கையும் ஏற்படுமாயின் பிறகு உலகத்துத் தேசங்களில் மிகச் செல்வமுடையதாகிய அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு நிறையப் பணமும் உணவும் வர இடமுண்டாகும்" என்கிறது. இதை நோக்குமிடத்து அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கே, போதிய அளவு கடனுதவி கிடைப்பது நிறுத்தப்பட்டிருக்கிற தென்று தெரிகிறது. இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலும் தமது செல்வத்தையெல்லாம் மஹாயுத்தத்தில் இழந்துபோயின. அமெரிக்காவிடம் கடன் கேட்கப்போனால், "ஸமாதானத்தை வேண்டாத தேசங்களுக்குப் பணம் கொடுக்கமாட்டேன்" என்று சொல்லுகிறது. ஒவ்வொரு சிறு ராஜ்யத்துக்குங்கூட விடுதலையேற்படுத்திக் கொடுப்பதற்காக மஹாயுத்தம் நடத்துகிறோ

மென்று உருப்போட்டுக் கொண்டிருந்த ஆங்கிலேய மந்திரிகள் இப்போது ஐர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க மறுப்பதைப் பார்த்து அமெரிக்காவில் பலர் ஆச்சரியப்படுகிறார்கள். இப்படிப்பட்ட மந்திரிகளின் ஆதிக்கத்தின்கீழ் நடைபெறுவது கொண்டே "ஸர்வ தேச சங்க"த்தினிடம் அமெரிக்காவுக்கு நம்பிக்கை போய்விட்டதென்று தோன்றுகிறது.

---

## கிரேக்க தேசத்தின் ஸ்திதி

கிரேக்க தேசத்து ஜனங்கள் ஸமீபத்தில் நடந்த "எலெக்ஷன்"களில் வாக்குக் கொடுத்திருக்கும் மாதிரியைப் பார்க்கையிலே அவர்கள் முன்பிருந்த கான்ஸ்டன்டைன் ராஜாவே திரும்பிப் பட்டத்துக்கு வரவேண்டுமென்று விரும்புகிறார்களென்பது நிச்சயமாகத் தெரிகிறது. இந்தக் கான்ஸ்டனடைன் ராஜா கெய்ஸர் சக்ரவர்த்தியின் ஸஹோதரிக்குக் கணவரென்பதையும், யுத்த காலத்தில் கெய்ஸருக்கனுகூலமாக இருந்தாரென்பதையும் கருதி, முன்னர் அவரை ராஜ பதவியினின்றும் தள்ளியவர்களாகிய இங்கிலாந்து முதலிய நேசக் கக்ஷியார் அவர் மீளவும் கிரேக்க தேசத்து ராஜாவாகக் கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். கான்ஸ்டன்டைனுக்கப்பால் நேசக் கக்ஷியாரின் கைப்பொம்மையாகிய வெனிஜிலாஸ் என்ற கிரேக்க மந்திரியின் உதவியுடனே கிரேக்க ஆட்சியைத் தங்களிஷ்டப்படி மாற்றிக் கான்ஸ்டன்டைனுடைய இளைய மகனொருவனைப் பட்டத்தில் வைத்திருந்தார்கள். இந்தப் பிள்ளை ஸமீபத்தில் குரங்கு கடித்ததனால் இறந்துபோய் விட்டார். எனவே கிரேக்க தேசம் இப்போது ராஜா இல்லாமல் இருக்கிறது. கான்ஸ்டன்டைன் அரசரின் மற்றொரு குமாரரைப் பட்டத்துக்கிருக்கச் சொல்லியதில் தமது பிதாவே ராஜா ஆகவேண்டுமென்று கருதி அவர் ராஜா பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். கிரேக்க ஜனங்கள் கான்ஸ்டன்டைன் ராஜாவையே மறுபடி ஸிம்ஹாஸனத்துக்கு அழைக்கிறார்கள். எலெக்ஷனில் வெற்றி பெற்ற கக்ஷிக்குத் தலைவராகிய ஸ்ரீமான் குநாரிஸ் என்பவர் கான்ஸ்டன்டைன் ராஜாவுக்கே மறுபடி பட்டம் கொடுக்க வேண்டுமென்ற நிச்சயத்தோடிருக்கிறார். அந்தந்த தேசத்தாரிஷ்டப்படி அந்தந்த ராஜ்யம் ஆளப்பட வேண்டுமென்று நேசக் கக்ஷியார் வாயால் ஓயாது சொல்லுகிறார்களேயன்றிக் கார்யத்தில் வரும்போது, உலகத்து ராஜ்யங்களில் பலஹீனத்தோடிருப்பனவற்றை யெல்லாம், இவர்களுடைய ஸௌகர்

யங்களுக்கிசைந்தபடி இந் நேசக் கக்ஷியார்களின் அபிப்பிரா யங்களுக்கு, பலாத்காரமாகவேனும் உட்படுத்த முயற்சி செய்கிறார்கள். கிரேக்க தேசத்து ஜனங்கள் தங்களிஷ்டப்படி ராஜா ஏற்படுத்திக் கொள்வதைக்கூடத் தடுத்துப் பேசத் தங்களுக்கதிகாரமுண்டென்று நேசக் கக்ஷியார் நினைக் கிறார்கள். இதினின்றும் கிரேக்கர் நேசக் கக்ஷியின் கூட் டத்தை விட்டுப் பிரிந்து செல்லவும் விரும்பக் கூடுமென்று கருதுகிறேன்.

## பாரஸீகத்துக்கு ஸௌக்ய காலம்

பாரஸீகத்திலுள்ள ப்ரிடிஷ் துருப்புகள், இந்தியத் துருப்பு கள் முழுதையும் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் அங்கிருந்து மீண்டு வரும்படி கட்டளை பிறப்பித்து விட்டார்களென்று ஸமீ பத்தில் வந்த லண்டன் தந்தி யொன்றினால் விளங்குகிறது. இது போலவே, மெஸபடோமியாவில் ப்ரிடிஷாரால் அமைக்கப் பட்டுவரும் அராபிய ஆட்சியின் வசம் அந்நாட்டை ஒப்புவிப்ப தாகிய நோக்கத்துடன் அங்குள்ள இந்திய, ப்ரிடிஷ் ஸைந் யங்களையும் மிகவும் குறைத்துவிடும்படி ஏற்பாடு செய்யப்பட் டிருப்பதாகத் தெரிகிறது. சிறிது காலத்தின் முன்பு வட மேற்குப் பாரஸீகத்திலிருந்து போல்ஷெவிக்கரைத் துரத்தும் பொருட்டாக ப்ரிடிஷ் படைகள் உபயோகப்படுத்தப்பட்டன வென்று இந்தியா கவர்ன்மெண்டார் வெளியிட்ட அறிக்கை யிலிருந்து லண்டன் "டைம்ஸ்" முதலிய ஆங்கிலப் பத்தி ரிகைகளுக்குக் கோபமுண்டு அவை ப்ரிடிஷ் கவர்ன்மெண்டா ரைக் கண்டித்தெழுதுகின்றன. "அந்த அறிக்கை உண் மையா, பொய்யா? பொய்யானால் அதனை உடனே ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் மறுக்கவேண்டும். அதனை வெளியிட்டது பற்றி இந்தியா கவர்ன்மெண்டாரைக் கண்டிக்கவும் வேண்டும்" என்று லண்டன் "டைம்ஸ்" சொல்லுகிறது. எது எப்படியாயினும், பாரஸீகத்திற்கு இவ் விஷயம் பெரிய தோர் நிவர்த்தியாகவே கருதத்தக்கது. ஆரம்பத்தில் இதனால் பாரஸீகத்துக்கு அன்னியர்களிடமிருந்து இடையூறு களும், கஷ்டங்களும் நேரிடலாம். எனினும், காலக்கிரமத் தில், இதினின்றும் பாரஸீகத்துக்கு வயிற்றுப்பூச்சி வெளி யேறியதால் மனிதனுக்கு நலமேற்படுதல்போல முற்றிலும் நன்மைதானேற்படுமென்பது எனக்கு நிச்சயம்.

# 37

## விநோதக் கொத்து

### " மார்னிங் போஸ்ட் " பத்திராதிபரின் கற்பனுசக்தி

"மார்னிங் போஸ்ட்" பத்திராதிபர் மன ஸாக்ஷிப்படி எழுதும் விஷயத்தில் அத்தனை கீர்த்தி யடைந்தவரல்லர். எனினும் அவருடைய ஸமீபக் கற்பனை யொன்றைப் படித்துப் பார்க்கையிலே, அவர் அபாண்டக் கதைகளெழுதும் வித்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண முமாக அபிவிருத்தி செய்து வருகிறாரென்று புலப்படுகிறது. மந்திரி மாண்டேகு இந்தியாவில் ஒத்துழையாமைக் கிளர்ச் சியை அழித்துவிடும் பொருட்டு அடக்கு முறைகளை யதேஷ்ட மாக அனுஷ்டித்து, அக்னி மழை பெய்யும்படி இந்தியாவி லுள்ள அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்பது அப்பத்திராதிபருடைய கருத்து. அங்ஙனம் மாண்டேகு கட்டளை செய்யாமலிருப்பதன் காரணம் யாதென்று அப் பத்திராதிபர் ஆராய்ச்சி செய்து பார்க்கிறார். அந்த ஆராய்ச்சி யில் அவர் கண்ட முடிவு மிக மிக விநோதமானது. உலக முழுமையிலுமே ராஜாங்கப் புரட்சியே ஏற்படுத்த வேண்டு மென்ற கருத்துடைய ருஷிய ஜனாதிபதி ஸ்ரீமான் லெனினு டைய கொள்கைகளில் மந்திரி மாண்டேகு ஒரு வேளை அனுதாபம் செலுத்துகிறாரோ, எப்படியோ என்று அப்பத்தி ராதிபர் ஊஹிக்கிறார். உள்நாட்டு ராஜாங்க விஷயங்களில் ஏற்பட்ட கட்சி பேதத்தைக் கருதி இங்ஙனம் படாப் பழிகள் ஏற்படுத்தி விடுவது மேற்றிசையில் சில கீழ்த்தர ராஜதந்திரி களுக்குள்ளே வழக்கமாக இயல்பெற்று வருகிறது. அந்த வழக்கம் நம்மவருக்குள்ளேயும் பரவிவிடாமலிருக்க வேண்டுமென்பதே என் ப்ரார்த்தனை.

### வெனிஜிலாவின் கதி

நேசக் கக்ஷியாருக்குச் சார்பாக நின்று, யுத்த காலத்தில் கான்ஸ்டன்டைன் ராஜாவை யவன (கிரேக்க) ஸிம்ஹாஸனத் தினின்றும் தள்ளி, அதனால் உள்நாட்டில் தோன்றிய கிளர்ச் சியை வெளி உதவியால் நசுக்கித் தம்மைத் தாமே கிரேக்கரின் ஸ்வேச்சாதிபதியாகச் சமைத்துக்கொண்ட மந்திரி வெனி ஜிலாஸுக்குக் காலம் சரியான கூலி கொடுத்துவிட்டது. கிரேக்க ராஜதானியாகிய அத்தேனியா (எதென்ஸ்) நகரத்தி லிருந்து நவம்பர் 18-ஆம் தேதி புறப்பட்ட தந்தி யொன்றில்,

இவர் அந் நாட்டினின்றும், ப்ரிட்டிஷ் போர்க் கப்பல்களின் பாதுகாப்பில் வெளியேறிச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. நேசக் கட்சியார் ஆட்டியபடி யெல்லாம் ஆடும் பொம்மையாகத் தான் இருந்துகொண்டு, அவர்களுடைய பட்டாள உதவியால் தன் இஷடப்படியெல்லாம் யவன தேசத்தை ஒரு பொம்மைபோல் ஆட்டிக்கொண்டு வந்த வெனிஜிலாஸ். இப்போது சமீபத்தில் நடந்த எலெக்ஷனில் தோல்வியடைந்ததுமின்றி, எந்த ராஜாவை வீழ்த்துவதில் இந்த மஹான் (!) அன்ய ராஜாங்கத்தாருக்கு உதவி செய்து தன்னுடைய எஜமான விசுவாஸத்தை உலக சரித்திரத்தில் நிலை நிறுத்தி வைத்தாரோ, அந்தக் கான்ஸ்டன்டைன் ராஜாவே மீளவும் பட்டத்துக்கு வர வேண்டுமென்று தேசத்தில் பெரும் பகுதியார் உறுதி செய்து விட்டார்கள். இந்த விஷயத்திலும் நேசக் கக்ஷியின் முக்கிய வல்லரசுகளுக்குள்ளேயே, தெளிவான அபிப்பிராய பேதங்கள் தோன்றியிருக்கின்றன. யுத்தம் முடிந்து யுத்தத்திலே தாமடைந்த வெற்றியின் லாபங்களைப் பங்கிடத் தொடங்கிய கால முதல் நேசக் கக்ஷி ராஜ்யங்களுக்குள்ளே அபிப்பிராய ஒற்றுமைகளைக் காட்டிலும் அபிப்பிராய பேதங்களே அதிகமாக ஏற்பட்டு வந்திருப்பதைக் கவனிக்குமிடத்து, அவற்றுடன் இப்போது புதியதோர் ஸங்கடம் நேர்ந்திருப்பதொரு மிகையாகத்தோன்றுது. முழுகக் குளித்தால் பிறகு குளிரில்லை யென்பது தமிழ் வசனம். சில தினங்களின் முன்பு பார்லிமெண்ட் சபையில் மிஸ்டர் போனூர்லா பேசியபோது, கிரேக்க தேசத்தின் ஸம்ரக்ஷகப் பதவியைப் பிரான்ஸும், இங்கிலாந்தும் கைவிட்டு விட்டதாகவும், ஆதலால் இப்போது அந்நாட்டின் உள் விவகாரங்களில் குறுக்கிடும் அதிகாரம் அவ்வல்லரசுகளுக்குக் கிடையாதென்றும் தெரிவித்தார். ப்ரான்ஸ் தேசத்து மந்திரிகளோ கான்ஸ்டன்டைன் ராஜாவை மறுபடி கிரேக்க ஜனங்கள் பட்டத்துக்கு வைக்கக் கூடாதென்று பஹிரங்கமாக ஆக்ஷேபித்து வருகிறார்கள். இனி நேசக் கக்ஷியைச் சேர்ந்த மூன்றுவது ஐரோப்பிய வல்லரசாகிய இத்தாலியின் அபிப்பிராயத்தைக் கவனித்தால் பிரான்ஸ் சொல்வதற்கு நேர் விரோதமாக இருக்கிறது.

கான்ஸ்டன்டைன் ராஜா பட்டத்துக்கு வராமல் தடுக்கும் எந்தக் காரியங்களிலும் தான் ஸம்பந்தப்பட முடியாதென்று இத்தாலி ஸ்பஷ்டமாகத் தெரிவித்துவிட்டது. அமெரிக்கா—ஐக்கிய நாடுகளை இன்னும் நேசக் கக்ஷியுடன் சேர்த்துக் கணக்கிடலாமோ, எப்படியோ, என்றால் உறுதியாகச் சொல்ல

முடியவில்லை, எனினும் அமெரிக்காவை இப்போதும் நேசக் கக்ஷியினருடனே சேர்த்துக் கணக்கிடுதல் பெருங் குற்றமாகாதென்றே நினைக்கிறேன். அந்த அமெரிக்கா இத்தருணத்தில் கிரேக்க ஜனங்களின் ஸ்வ நிர்ணயத்துக்கு மாறான ப்ரான்ஸ் தேசக் கொள்கையை ஆதரிக்குமென்று நான் நினைக்கவில்லை. நேசக் கக்ஷியாரின் பொது நிலைமை இவ்வாறிருக்க, நேற்று வரை அந்தக் கட்சிக்குக் கிரேக்க தேசம் ஒரு அலங்காரமாக இருந்தது. துருக்கியின் உடைமைகளிற் சிலவற்றை நேசக் கக்ஷியார் கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்ததுபோல், தனக்குக் கீழ்ப்படுத்திக் கொடுக்கப்பெற்ற கிரேக்க தேசத்து ஜனங்கள், இப்போது மற்ற நேசக் கக்ஷியாரின் அபிப்பிராயங்களைக் குறித்து என்ன நினைக்கிறார்களென்பதைக் கவனிப்போம். அவர்கள் நேசக் கக்ஷியாரின் எண்ணங்களைச் சிறிதேனும் பொருட்டாக்கவில்லை என்று தெரிகிறது.

நேற்று மித்திரனில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கும் ராய்ட்டர் தந்தி யொன்றில், கிரேக்க ஜனங்களும், கவர்ன்மெண்டாரும், கான்ஸ்டன்டைன் ராஜா திரும்ப வருவதைக் குறித்து ஸந்தோஷக்கொண்டாட்டங்கள் நடத்தி வருகிறார்களென்றும், எல்லா ஸர்க்கார் கச்சேரிகளிலும், நியாய ஸ்தலங்களிலும் கான்ஸ்டன்டைன் ராஜாவின் சித்திரங்களைத் தொங்க விட்டு வைக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் கட்டளை பிறப்பித்திருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. மேலும் லண்டனில் கிரேக்க ராஜாங்கத்தின் முக்ய ஸ்தானாதிபதியாக வேலை பார்த்தவரும், சென்ற பதினேழு வருஷங்களாக லண்டனிலிருந்து, கிரேக்க தேசத்துக்கும் இங்கிலாந்துக்கும் நட்புறுதி யுண்டாகுமாறு பாடுபட்டு வந்தவருமாகிய ஸர் ஜான் ஸ்டவ்ரிட் என்பவர் வெனிஜிலாஸுக்கு ஒரு அனுதாபத் தந்தியனுப்பியது காரணமாக அந்த ஸ்தானாதிபதியை இப்போதுள்ள கிரேக்க கவர்ன்மெண்டார் உத்யோகத்தைவிட்டு நீக்கியதாயுந் தெரிவிக்கப்படுகிறது. இந்த வெனிஜிலாஸ் மந்திரியைப் போலவே ருஷியாவை நேசக் கக்ஷிக்கு வாலாக்கிவிட முயற்சிசெய்த கெரன்ஸ்கி என்ற ருஷிய மந்திரியை மித்திரன் நேயர்கள் மறந்திருக்க மாட்டார்களென்று நம்புகிறேன். ஒரு காலத்தில், கெரன்ஸ்கியை ருஷியா தேசத்து நெப்போலியன் என்று சில ஆங்கிலேயப் பத்திராதிபர் முதலியோர் சொல்லி வந்தனர். இன்று அந்தக் கெரன்ஸ்கியின் பெயரையே உலகத்தார் மறந்துவிடக்கூடிய நிலைமைவந்துவிட்டது. மிஸ்டர் வெனிஜிலாஸ், மிஸ்டர்

கெரன்ஸ்கி இவ்விருவரில் ஸ்வதேசாபிமானப் பரிசு யாருக்கு கொடுக்கலாமென்று யோசித்தால் அந்த யோசனையில் ஒரு முடிவுக்கு வருதல் ஸாத்யமில்லையென்றே தோன்றுகின்றது.

## ஜெர்மனியை ஸர்வதேச ஸங்கத்தில் சேர்த்துக் கொள்ளலாமா ?

ஸர்வதேச ஸங்கத்தில் ஜெர்மனியைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று, நார்வே, ஸ்வீடன், தென் ஆபிரிகா, ஸ்விட்ஜர்லாந்து, இத்தாலி, ஸ்பெயின், தென் அமெரிக்க ராஜ்யங்களிற் பல, இங்கிலாந்து என்ற தேசங்கள் சொல்லுவதாகவும், ஜப்பான், சீன தேசங்கள் இங்கிலாந்தின் கருத்தையே தழுவி நிற்குமென்று நம்பப்படுவதாகவும், ப்ரான்ஸ், பெல்ஜியம், போர்த்துகல், போலந்து, ஆஸ்த்ரேலியா, ந்யூஜிலாந்து, கனடா, ஜெக்கோஸ்லாவியா என்னும் அரசுகள் ஜெர்மனியைச் சேர்க்கலாகாதென்று தடுப்பதாகவும், ஸமீபத்தில் கிடைத்த ராய்ட்டர் தந்தியொன்று சொல்லுகிறது. இதனிடையே, தமக்குள் பரஸ்பரம், "அதிகாரப்பத்திரம்" கொடுத்துக் கொண்டு நேசக் கக்ஷியார் தம் இஷ்டப்படி வெளி நாடுகளை ஆண்டுவர முயல்வதில் அனுஷ்டிக்கப்படும் தற்கால முறைமையை ஜெர்மனி எதிர்ப்பதாகவும், தானிழந்த குடியேற்ற நாடுகளின் எதிர்கால நிலை தற்காலத்தில் அவற்றைக் கைப்பற்றியாள்வோரால் நிர்ணயிக்கப்படத் தக்கதன்றெனவும், ஸர்வதேச ஸங்கத்தாராலேயே முடிவு செய்யப்படவேண்டுமெனவும் ஜெர்மனி சொல்வதாகவும், வேறொரு தந்தியிலே கூறப்படுகிறது. ஜெர்மனி ஸர்வதேச ஸங்கத்தில் சேரும்படி ஏற்பாடு செய்வார்களோ மாட்டார்களோ அதைக் குறித்து எனக்கதிகக் கவலையில்லை. எப்படியாவது ஆசியா முதலிய வெளிக் கண்டங்களின் நாடுகளை ஐரோப்பியர் தமதிஷ்டப்படி பரஸ்பரம் "அதிகாரப் பத்திரம்" எழுதிக் கொடுத்து அநீதியாக ஆள்வதென்ற ஏற்பாடு சிதறிப் போகவேண்டுமென்பதே என் பிரார்த்தனை. அந்தப் பிரார்த்தனை நிச்சயமாக விரைவில் நிறைவேறுமென்பதற்குப் போதிய அடையாளங்கள் தற்கால ஐரோப்பாவின் நிலைமையிலே காணப்படுகின்றன.

இதில் மிகவும் ஆறுதலுக்குரிய அம்சம் எதுவெனில் பங்கிடற்குரிய ராஜ்யங்களின் தொகை மிகக் குறைவாகவும், அவற்றைப் பங்கிட்டாள விரும்பும் ராஜ்யங்களின் தொகை மிக அதிகமாகவும் ஏற்பட்டிருத்தலேயாம். ஊரிரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். கூத்தாடிகளுக்குள்ளே கக்ஷி பேதங்கள் மிகுதிப்பட்டால் ஊராருக்கு நல்லது.

## திராவிடக் கக்ஷி

நான், ஸமீபகாலம் வரை, திருநெல்வேலி ஜில்லாவின் மேற்கோரத்தில் ஒரு நாகரிகமடைந்த கிராமத்தில் குடியிருந்தேன். பொதுப்படையாக நல்ல நாகரிகமடைந்த அந்தக் கிராமத்துக்கு ஜாதிபேத விரோதங்கள் ஒரு களங்கமாக ஏற்பட்டிருக்கின்றன. கிறிஸ்தவப் பாதிரிகளின் செல்வாக்கு இந்தியாவில் மற்றெந்தப் பகுதியைக் காட்டிலும் அதிகமாகச் சென்னை மாகாணத்திலும், இந்த மாகாணத்தில் மற்றப் பிரதேசங்களைக் காட்டிலும் மிகுதியாகத் திருநெல்வேலி ஜில்லாவிலும் ஏற்பட்டிருக்கிறதென்ற செய்தி நம்மவரில் பெரும்பான்மையோருக்கும் தெரிந்திருக்கக்கூடும். ஆதலால், இங்கிலிஷ் படித்த பிள்ளைகளுக்குள் அந்த ஜில்லாவில் அநேகர் கிறிஸ்தவப் பாதிரிகள் உபதேசத்துக்கு அதிகமாகச் செவி கொடுத்துவிட நேர்ந்ததென்று நான் தெரிவிப்பது பலருக்கோர் வியப்பாகத் தோன்றுது. ஹிந்து மதத்தை வேரறுத்து, இந்தியாவில் கிறிஸ்து மதத்தை ஊன்றுவதே முக்ய நோக்கமாகக் கொண்டு வேலை செய்துவரும் அப்பாதிரிகள், ஹிந்து மதத்துக்குப் பிராமணரே இதுவரை காப்பாளிகளாக இருந்து வருதல் கண்டு, அந்தப் பிராமணரை மற்ற ஜாதியார் பகைக்கும்படிச் செய்தால் தம்முடைய நோக்கம் நிறைவேறுமென்று யோசிக்கத் தொடங்கினூர்கள். இங்ஙனம், மற்ற ஜாதிப் பிள்ளைகளுக்கு ஹிந்து மதத்தில் துவேஷ புத்தியுண்டாக்குவதற்கு அடிப்படையாகப் பிராமணத் துவேஷம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்ற கருத்துடையோர் சென்னை நகரத்து முக்கியமான கல்வி ஸ்தலங்கள் சிலவற்றிலுமிருந்து நெடுங்காலமாக வேலை செய்து வருகிறூர்கள். காமம், குரோதம் முதலிய தீய குணங்களை, வேதம் அஸுரரென்று சொல்லி, அவற்றைப் பரமாத்மாவின் அருள் வடிவங்களாகிய தேவர்களின் உதவியால், ஆரியர் வெற்றி பெறுதற்குரிய வழிகளைப் பற்றிப் பேசுகிறது ; இந்த உண்மையறியாத ஐரோப்பிய ஸம்ஸ்க்ருத வித்வான்கள் சிலர் அஸுரர் என்று முற்காலத்தில் ஒரு வகுப்பு மனிதர் இந்தியாவிலிருந்தார்களென்றும், அவர்களை ஆரியர் ஜயித்து இந்தியாவின் ராஜ்யத்தைப் பிடித்துக் கொண்டு, அதன் பூர்வக் குடிகளைத் தாழ்த்திவிட்டனரென்றும் அபாண்டமான கதை கட்டிவிட்டார்கள். இதை மேற்கூறிய கிறிஸ்தவப் பாதிரிகள் மிகவும் ஆவலுடன் மனனம் செய்து வைத்துக் கொண்டு தம்மிடம் இங்கிலிஷ்ப் படிப்புக்காக வரும் பிள்ளைகளில் பிராமணரைத் தவிர மற்ற

வகுப்பினர்—தென் இந்தியாவில் மாத்திரம்—அஸுர வம்சத்தாரென்றும், ஆதலால் பிராமணர் இவர்களுக்குப் போன யுகத்தில் (வேதமெழுதிய காலத்தில்!) விரோதிகளாக இருந்தனரென்றும், ஆதலால் இக்காலத்தில் அந்தப் பிள்ளைகள் அஸுரக் கொடியை மீளவும் தூக்கிப் பிராமணரைப் பகைக்கவேண்டுமென்றும் போதிக்கத் தொடங்கினுர்கள். இந்தியாவிலுள்ள ஜாதி பேதங்களைத் தீர்த்துவிட்டு இங்கு ஸமத்வ தர்மத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அந்தப் பாதிரிகள் இந்த வேலை செய்யவில்லை. ஹிந்து மதத்துக்குக் கேடு சூழவேண்டுமென்ற நோக்கத்துடன் செய்தார்கள். ஆனுல், இதில் மற்றொரு விநோதமுண்டு. அஃதியா தென்றுல் இந்தியாவில் பிராமணர்களிலேயே முக்காற் பங்குக்குமேல் பழைய சுத்தமான ஆர்யர்களல்லரென்றும் விசேஷமாகத் தென் இந்தியாவில் இவர்கள் பெரும்பகுதி அஸுர வம்சத்தாருடன் கலந்துபோனவர்களின் சந்ததியாரென்றும், அப்பாதிரிகளும் அவர்களுக்கு இந்த அம்சத்தில் குருக்களான ஐரோப்பிய பண்டிதரும் தெரிவிக்கிறுர்கள். எனவே பிராமணராகிய நாங்கள் இப்போது உங்களைப்போலே அஸுர ராக்ஷஸராய்விட்ட பிறகும் நீங்கள் எங்களைப் பகைக்க வேண்டுமென்று அந்தப் பாதிரிகள் போதிப்பது முன்னுக்குப்பின் முரண்படுகிறதன்றே? மேலும் இந்தத் "திராவிடர்" என்போர் அஸுர, ராக்ஷஸர்களின் ஸந்ததியாரென்பதும் அவர்களிடமிருந்து பிராமணர் ராஜ்யம் பிடித்த கதையும் யதார்த்தமென்று வேடிக்கைக்காக ஒரு க்ஷணம் பாவனை செய்து கொள்வோம். அப்படிக்கிருந்தாலும் அந்த ஸம்பவத்தில் பிராமணரின் மந்திரத்தால் அஸுரர்களை ஜயித்ததாகத் தெரிகிறதேயன்றி மாக்ஸ் முல்லரின் கருத்துப்படிக்கும் பிராமணர் அரசாண்டதாகத் தெரியவில்லை. பிராமணர்களையடுத்து, க்ஷத்திரியர்களே ராஜ்யமாண்டனரென்று தெரிவிக்கப்படுகிறது. தவிரவும் அந்த ஸம்பவம் நடந்து இப்போது புராணங்களின் கணக்குப்படிப் பார்த்தால் பல லக்ஷங்களோ கோடிகளோ வருஷங்கள் கடந்துபோயின. ஐரோப்பியப் பண்டிதரின் கணக்குப்படிப் பார்த்தாலும் எண்ணுயிர வருஷங்களுக்குக் குறைவில்லை. இப்படியிருக்க அந்தச் சண்டையை மறுபடி மூட்டுவது என்ன பயனைக் கருதி? யதார்த்தமாகவே, இந்திய தேச சரித்திரத்தில் ஹிந்துக்களுக்குள்ளேயே தமிழருக்கும் தெலுங்கருக்கும், தெலுங்கருக்கும் ஒட்டரருக்கும், ஒட்டரருக்கும் வங்காளிகளுக்கும்,வங்காளிகளுக்கும் ஹிந்துஸ்தானிகளுக்கும்

பஞ்சாபிகளுக்கும், பஞ்சாபிகளுடன் ராஜபுத்திரருக்கும், இவர்களுடன் மஹாராஷ்ட்ரருக்கும், மஹாராஷ்ட்ரருடன் ஏறக்குறைய மற்றெல்லாப் பிரிவினருக்கும், இவற்றைத் தவிர ஹிந்துக்களுக்கும் மஹமதியருக்கும் இடையே கணக் கற்ற யுத்தங்களும், அரசு புரிந்ததும் அடக்கியாளுதலும் நடந்து வந்திருக்கின்றன. இதுபோல், ஒரு நாட்டின் உட்பகுதி களுக்குள் யுத்தங்கள் இந்தியாவில் மாத்திரமன்றி, ஆஸ்தி ரேலியா முதல் இங்கிலாந்து வரையுள்ள ஸகல தேசங்களி லும் ஓயாமல் நடந்து வந்திருப்பதாகச் சரித்திரம் தெரிவிக் கிறது. இங்ஙனம் நம் நாட்டில், சமீபகால சரித்திரத்திலேயே நிகழ்ந்த எண்ணற்ற போராட்டங்களை மறந்து இன்று தெலுங்கர், தமிழர் முதலிய ஹிந்துக்களும் மஹமதியரும் ஸஹோதரரைப்போல் வாழவேண்டுமென்ற உணர்ச்சி பரவி யிருக்க, எண்ணாயிர வருஷங்களுக்கு முன் "மந்திரங்களா லும், யாகங்களாலும், அஸுர, ராக்ஷஸர்களை ஜயித்த பிரா மணர்களை மாத்திரம் நம்மவர் எக்காலத்திலும் க்ஷமிக்கா மல் உலக முடிவு வரை விரோதம் செலுத்திவரவேண்டு மென்று சொல்லுதல் பெரும்பேதைமையன்றோ ? தவிர வும், இந்த நவீன "அல்லாதார்" தாங்கள் அஸுர வம் சத்தாரென்று சொல்வதே முற்றிலும் தவறென்பதை ஏற் கெனவே நன்கு நிரூபணம் செய்திருக்கிறேன். ஜாதி பேதங் களின் கொடுமைகளை உடனே அழித்துவிட வேண்டுமென் பதை நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன்.

## ஜப்பான் தேசத்துத் திருஷ்டாந்தம்

ஜப்பானில் தீண்டாத வகுப்பினருட்படப் பலவித ஜாதி பேதங்களிருந்தன. எனினும் காலஞ்சென்ற மிகாடோ சக்ரவர்த்தி நவீன உலகத்தின் அவஸரங்களைக் கருதி அங்கு ராஜாங்க விஷயங்களில் ஜாதிபேதங்களைக் கருதக்கூடாதென்று சட்டஞ் செய்தார். எத்தனையோ நூற்றாண்டுகளாக இயல் பெற்று வந்த பேதக் கொடுமைகள் அங்கு ராஜரீகத்துறை யில் மட்டுமேயன்றி, ஸமூஹ வாழ்விலும் புலப்படாதபடி அதிசீக்கிரத்தில் மறைந்து போய்விட்டதாகத் தெரிவிக்கப்படு கிறது. இந்தியாவுக்கும் இதுதான் வழி. நாம் ஏற்கெனவே தெரிவித்தபடி ஸ்வராஜ்யம் கிடைத்தால் இந்த ஜாதிபேதத் தொல்லைகளையெல்லாம் சட்டம் போட்டு நீக்கிவிடலாம். இப் போதுள்ள அதிகாரிகள் இவ்விதமான சட்டம் ஏற்படுத்து வார்களென்று எதிர்பார்ப்பதே தவறு. ஆதலால் இந்தியா வின் ஸமூஹ வாழ்க்கையில் ஸமத்வமேற்படுத்த

விரும்புவோர் முதலாவது ராஜரீகத்துறையில் ஸமத்வமேற்படுத்த முயலும் " காங்கிரஸ் " கக்ஷியாருடன் சேர்ந்து வேலை செய்யவேண்டும் என்று கருதுகிறேன்.

---

# 38

## விநோத விஷயங்கள்

### ஸர்- ஹாமர் க்ரீன்வுடின் உபதேசம்

காரியமாக வேண்டுமானால் குதிரையின் காலையும் பிடிக்கலாமென்ற ராஜ்ய நீதியை ஐரிஷ் மந்திரியாகிய ஸர் ஹாமர் க்ரீன்வுட் நன்கு படித்திருக்கிறார். சில தினங்களின் முன்பு ப்ரிட்டிஷ் பார்லிமெண்ட் ஸபையில் இவர் பேசியபோது ஐர்லாந்திலுள்ள ரோமன் கத்தோலிக்க குருக்களுக்கு ஒரு விஞ்ஞாபனம் செய்திருக்கிறார். எதைப்பற்றியெனில், முன்பு மஹாயுத்த காலத்திலே ஐர்லாந்தில் கட்டாய ராணுவ ஸேவகம் ஏற்படுத்துவதை ஐர்லாந்தின் கத்தோலிக்க குருக்கள் எத்தனை தீவிரமாகவும், உக்ரமாகவும் எதிர்த்தார்களோ, அத்தனை உக்ரமாகவும், தீவிரமாகவும் ஐர்லாந்தில் இப்போது நடக்கும் ஸின்பீன் கொலைகளை அவர்கள் எதிர்த்து வேலை செய்ய வேண்டுமென்றும், ஜனங்கள் தங்களிடமுள்ள துப்பாக்கி முதலிய ஆயுதங்களைக் குருக்களின் வசம் ஒப்புவித்துவிட வேண்டுமென ஆலயங்களில் செய்யப்படும் உபதேசங்களிடையே அவர்கள் ஜனங்களைத் தூண்டுதலே நல்ல உபாயமென்றும் மந்திரி ஹாமர் க்ரீன்வுட் தெரிவிக்கிறார். ஆமாம்! வாஸ்தவந்தான்! ஆனால், முன்பு, கட்டாய ராணுவ ஸேவக முறைமையை ஐரிஷ் கத்தோலிக்க குருக்கள் எதிர்த்த காலத்தில் அவர்களுக்கு ஸர் ஹாமர் க்ரீன்வுட் எவ்வளவு தூரம் ஆமோதிப்பும், உதவியும் செய்தாரென்ற விஷயத்தை நாம் சற்றே தெரிந்து கொள்ள விரும்புகிறோம். மேலும், இங்ஙனம் ஜனங்களிடமிருந்து பறித்துக்கொண்ட ஆயுதங்களை அந்தக் குருக்கள் அப்பால் கடலில் எறிந்துவிட வேண்டுமா, அல்லது ஆலயங்களிலேயே வைத்துப் பூஜை செய்யவேண்டுமா, அல்லது அவற்றை ஆங்கிலேயப் போலீஸாரிடமும், சிப்பாய்களிடமும் ஒப்புவித்து ஐரிஷ் ஜனங்களையே வேட்டையாடும்படி கேட்டுக்கொள்ளவேண்டுமா என்ற விஷயத்தில் மந்திரி க்ரீன்வுட் தம்முடைய அபிப்ராயத்தைத் தெரிவிக்காமல் இருந்தது பற்றி வருத்தப்படுகிறேன்.

## மிகவும் நன்றி தெரிவிக்கிறோம்

சென்ற நவம்பர் 25-ந்தேதியன்று, மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஐர்லாந்தில் ராணுவச் சட்டமேற்படுத்துதல் இப்போது விரும்பத்தக்க தன்றென்பதாகவே மந்திரி ஸபையார் முடிவாகத் தீர்மானம் செய்து விட்டனரென்றும், அது விரும்பத்தக்கதாகவும், பயனளிக்கத்தக்கதாகவும் தோன்றிய வுடனே கவர்ன்மெண்டார் அதைப் பிரயோகம் செய்து விடுவார்களென்றும் அறிவித்தனர். இந்தத் தயவின் பொருட்டு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கும். ப்ரிடிஷ் மந்திரி ஸபையாருக்கும், ஐர்லாந்து வாஸிகளும், உலகத்தாரும், மிகமிக நன்றி செலுத்தக்கடமைப் பட்டிருக்கிறார்களென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால் தாமரைப் பூவைச் சித்திரிப்பதும், தங்கத்திலே தங்க முலாம் பூசுவதும் மிகையாகுமென்று ஆங்கிலேய மஹா கவியாகிய ஷேக்ஸ்பியர் சொல்லியது போல் இப்போது ஐர்லாந்தில் நடைபெறும் ஆங்கில ஆட்சி முறையில் ராணுவச் சட்டத்தைக் கொண்டு சேர்த்தால் மிகையாகு மென்று தோன்றுகிறது. ராணுவச் சட்டத்தின் ஆதிக்கத்தில் ஐரிஷ் ஜனங்களின் ஸ்வதந்தரங்களை இப்போதைக் காட்டிலும் அதிகமாகக் கட்டுப்படுத்த முடியுமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் நினைக்கிறாரா ?

## பிரான்ஸ் தேசத்தின் குட்டிக்கரணம்

ப்ரான்ஸ் தேசத்து வியாபாரிகளும், தொழிற்சாலைத் தலைவர் களும், ருஷ்யாவுடன் வியாபார ஸம்பந்தங்களேற்படுத்திக் கொள்ள அனுமதி கொடுத்துவிட வேண்டுமென்று ப்ரெஞ்ச் கவர்ன்மெண்டார் முடிவான தீர்மானஞ் செய்துவிட்டதாக ராய்ட்டர் தந்தியொன்று தெரிவிக்கிறது. எனவே, இங்கிலாந் தும் போல்ஷவிக்கர்களுடன் வியாபாரம் பண்ணுவதாகச் செய்து கொண்ட தீர்மானம் உறுதியாய் விடுமென்பதில் ஸந்தேஹ மில்லை. இங்ஙனம் ருஷியாவுடன் ஆங்கிலேயர் வியாபாரஞ் செய்யலாகாதென்று வற்புறுத்துவதில் லண்டன் "டைம்ஸ்" பத்திராதிபர் முதலிய ஆங்கிலத் தலைவர் பலர் மிதமிஞ்சிய காகிதமும், மையும், நேரமும் செலவிட்டிருக்கிறார்கள். காலக் கிரமத்தில் நடந்து தீரவேண்டிய காரியமொன்றை மேற்படி "டைம்ஸ்" பத்திராதிபர் முதலாயினோர் வீணாகக் கடத்திக்கொண்டு போக முயற்சி புரிந்தனர். இன்றைக் கில்லாவிட்டால் நாளை அல்லது மறுநாள், அல்லது அதற்கடுத்த நாள், ருஷியாவுடன் வியாபாரந் தொடங்குதல் இன்றி

யமையாததாய் விடும். ருஷியா சிறிய தேசமா ? ஐரோப்பாவில் முக்காற் பங்கு ருஷியா. அந்தத் தேசத்தை எத்தனை காலம் ஜாதி ப்ரஷ்டம் பண்ணிவைக்க முடியும் ? அவர்களுடைய ராஜாங்கக் கொள்கைகள் இங்கிலாந்தில் பரவுவதற்கு வியாபார சம்பந்தங்கள் ஸாதனமாகக் கூடுமென்று இங்கிலாந்திலுள்ள பழங் கக்ஷியார் அஞ்சுகிறார்கள். என்ன செய்யலாம் ? லண்டன் "டைம்ஸ்" பத்திராதிபருக்கு ஸம்மதமில்லாத கொள்கைகள் இங்கிலாந்தில் புகாதபடித் தடுப்பதற்காக, ப்ரிடிஷ் ஜனங்கள் ஒரு மகத்தான தேசத்துடன் வியாபாரம் செய்வதால் நேரும் ஸௌகர்யங்களை எத்தனை காலம் நிறுத்தி வைக்க உடம்படுவார்கள் ? ஆங்கில கவர்ன்மெண்டார் ருஷியாவுடன் வியாபார சம்பந்தங்கள் தொடங்கும்படி ஆங்கில ஜனங்களுக்கு அனுமதி கொடுத்தவுடனே நம்முடைய இந்தியா கவர்ன்மெண்டாரும் இங்குள்ள வியாபாரிகளுக்கு அதே அனுமதி கொடுப்பார்களென்று நம்புகிறேன். அதன் மூலமாக ருஷியக் கொள்கைகள் இந்தியாவிலும் பரவிவிடக் கூடுமென்று அஞ்சுவோர் யாரேனுமிருப்பாராயின், அந்த அச்சம் அநாவசிய மென்றும் ஆதலால், அதனை விட்டொழித்து விடவேண்டுமென்றும் அவர்களுக்கு நான் விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். ருஷியக் கொள்கைகள் ருஷிய வியாபார ஸம்பந்தங்களால் ஒரு வேளை இங்குப் பரவுமிடத்தே அவற்றை எதிர்த்தடித்து வேலை செய்ய நம்முடைய இந்தியா கவர்ன்மெண்டாரிடமுள்ள பப்ளிஸிடி பீரோ என்ற விளம்பர ஸபையாரால் முடியாதா ? நாமேன் வீணுகப் பயப்படவேண்டும் ?

## "விளம்பர சபை" யின் தமிழ்

ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கும் விளம்பர ஸபையார் பத்திரிகை படிப்போருக்காகவும், பொது ஜனங்களுக்காகவும், அடிக்கடிக் துண்டுப் பத்திரிகைகள் முதலியன ப்ரசுரம் செய்து வருதல் நேசர்களுக்குத் தெரிந்த செய்தியேயாம். ஆனுல் இந்த ஸபையாரின் ப்ரசுரங்களில் உள்ள இலக்கணத் தவறுகளுக்கும், பிரயோகத் தவறுகளுக்கும் கணக்கேயில்லை. தமிழ் பாஷையில் வெளிவரும் ப்ரசுரங்களைப் பற்றி மாத்திரம் நான் இங்குப் பேசுகிறேன். பெரும்பாலும், மற்றத் தேச பாஷைகளிலும் இதே மாதிரியாகத்தான் இருக்கக்கூடுமென்று ஸம்சயிக்கிறேன்.

பொதுவாக ராஜாங்கத்தாரின் கெஜெட்டுகள், நியாய ஸ்தல மொழி பெயர்ப்புகள் முதலிய முக்யமான தமிழ் ப்ரசுரங்களில் வழுக்கள் நிறைந்ததாய், ஸாதாரணத் தமிழருக்கர்த்தமாக வழியில்லாத தமிழ் பாஷையே வழங்கி வருதல் ப்ரஸித்தம். எனினும், ஜனங்களுக்கர்த்தந் தெரியாமல் "கெஜட்" வர்த்தமானங்கள் ப்ரசுரிப்பதைக் காட்டிலும், கக்ஷிப் பிரதிகக்ஷிகளும், தர்க்கங்களும் நடத்தி ஜனங்களுக்கு அபிப்பிராய மாறுதலுண்டாகும்படிச் சர்க்கார் வக்கீல் வேலை செய்ய வந்த இடத்தில் ஜனங்களுக்கு விளங்காத, இலக்கணத் தவறுகள் நிறைந்த பாஷையை வழங்குதல், நூறு மடங்கு அதிகப் பரிஹாஸத்துக் கிடமாகுமென்பதை ராஜாங்கத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## "ஸின்பீன்" வேட்டை

ஐர்லாந்தில் இப்போது குடியரசு முறையைக் கைக்கொண்டிருக்கும் "ஸின்பீன்" என்ற ஸ்வாதீனக் கக்ஷியாரை ஐரிஷ் அதிகாரிகள் வெகு கோலாஹலமாக வேட்டையாடி வருகிறார்கள். வழக்கம்போலவே, கொலை செய்த குற்றவாளிகள் ஒருபுறமிருக்க, அந்தக் கொலைகளைத் தம் உபதேச முதலியவற்றால் தூண்டியதாகக் கருதப்படும் ஜனத் தலைவர்களைப் பிடித்தடைப்பது மிகவும் எளிதாதலால், ஐரிஷ் அதிகாரிகள் இத் தலைவர்களை மிகவும் சுறுசுறுப்பாகக் கைது செய்யத் தொடங்கி விட்டனர். ஐரிஷ் குடியரசுத் தலைவரான மிஸ்டர் டிவலேரா அமெரிக்காவிலிருப்பதால், அவருக்குப் பிரதியாக ஐரிஷ் குடியரசின் ஜனாதிபதி ஸ்தானத்தை வகித்து வரும் மிஸ்டர் ஆர்தர் க்ரிபித் என்பவர் சென்ற வெள்ளிக்கிழமை (26-நவம்பர்) கைது செய்யப்பட்டார். இவர் ப்ரிட்டிஷ் காமன்ஸ் ஸபை மெம்பர்களில் ஒருவர். மறுநாள், நவம்பர் 27-ம் தேதியன்றைக்கும், அதற்கடுத்த 28-ம் தேதியிலும் மிஸ்டர் ஆர்தர் க்ரிபித் ஐரிஷ் நிலைமையைக் குறித்து மாஞ்செஸ்டர் நகரத்தில் உபந்யாஸங்கள் செய்யப்போவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்ஙனம் அவரைப் பேச விட்டால் அதினின்றும் ஜனங்களுக்குள் ராஜாங்கத் துவேஷம் பரவக்கூடும் என்று சொல்லி உள்நாட்டு மந்திரி அந்த உபந்யாஸங்களைத் தடுத்து விட்டார். அதனையடுத்து மிஸ்டர் க்ரிபித்தைச் சிறைப்படுத்தவும் செய்திருக்கிறார்கள். இவரையன்றி வேறிரண்டு பார்லிமெண்ட் மெம்பர்களும், ஒரு உபாத்யாயரும் உட்பட்ட மற்றுஞ் சில ஸின்பீன் தலைவர்களையும் பிடித்து வைத்திருக்கிறார்கள். மிஸ்டர் ஆர்தர்

க்ரிபித்தை ஜனங்களுக்குத் தெரியாமல் எங்கேயோ ரஹஸ்ய மாகக் கொண்டுபோய் வைத்திருப்பதாகத் தெரிகிறது. இங்ஙனம் மிஸ்டர் க்ரிபித்தை இங்கிலாந்தில் பிடித்ததற்கு முகாந்தரங் கூறுமிடத்தே, டப்ளின் நகரத்தில் அவருடைய வீட்டைப் போலீஸார் சோதனையிட்டதாகவும், அப்போது மேலும் ஆராய்ச்சி நடத்துவதற்கிடமான சில முக்யக் காயிதங்கள் போலீஸார் வசம் கிடைத்ததாகவும், அந்த ஆராய்ச்சி முடிவு வரை அவரை அடைத்து வைத்திருக்கப்போவதாகவும், மந்திரி ஹாமர் க்ரீன்வுட் சொன்னார். ஆனால், அதே காலத்தில் "ஸின்பீன்" கக்ஷியார் தாங்கள் இங்கிலாந்துடன் யுத்தம் நடத்தி வருகிறபடியால் தாங்கள் பிடிப்பட்ட இடத்தே தங்களை யுத்தக் கைதிகளாக நடத்தவேண்டுமென்று ஐரிஷ் தலைவர் சொல்வதை ஒருவாறு கவர்ன்மெண்டார் அங்கீகாரம் செய்துகொண்டே இவ்வித வேலை செய்து வருவதாகவும், அக்கொள்கைக்கிணங்கவே, இப்போது பிடிபட்டிருக்கும் ஐரிஷ் தலைவர்களைப் பந்தோபஸ்தில் வைத்து யுத்தக் கைதிகளொப்ப நடத்த உத்தேசங் கொண்டிருப்பதாகவும், ஒரு தந்தி மூலமாக அறிக்கையிடப்படுகிறது. இங்ஙனம், ஐர்லாந்தில் நடக்கும் போராட்டத்தை ஆங்கிலோ–ஜெர்மானிய யுத்தம் போல் ஓர் ஆங்கிலோ–ஐரிஷ் யுத்தமாகப் பாவித்து நடத்த வேண்டுமென்பது ப்ரிட்டிஷ் மந்திரிகளின் உண்மையான நோக்கமாயின், அந்த நோக்கத்தை வெளியுலகத்தார் அதிகமாகக் கொண்டாடமாட்டார்களென்று தோன்றுகிறது.

ஸம பலமுடைய தேசங்களுக்குள்ளே யுத்தம் ஸாத்யப்படும். ஏற்கெனவே பல நூற்றாண்டுகளாக இங்கிலாந்தின் கீழேயிருப்பதும், பல நூற்றாண்டுகளாக விடுதலைக்குக் கிளர்ச்சி நடத்தி வருவதும், இப்போது குடியரசு வேண்டுவதுமாகிய சார்பு நாடொன்றை அடக்கும் தொழிலுக்கு "யுத்தம்" என்ற பட்டம், ஸின்பீனர்களாலே சூட்டப்பட்டாலும், பொறுப்புள்ள மந்திரிகள் அப்பட்டத்தை அங்கீகரித்தல் பெருந்தவறென்று நினைக்கிறேன். ஆனால் இங்கிலாந்தில் எக்காலமுமில்லாதபடி ஸகல-கட்சி மந்திரிஸபை சேர்த்து மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் நடத்தி வரும் வேடிக்கையான ஆட்சி முறையில் இப்படி விநோதங்கள் ஏற்படுவது எனக்கு ஆச்சர்யமாகத் தோன்றவில்லை. கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருந்து போலீசாரைச் சுட்டு விட்டோடும் நூறே சில்லரை ஐரிஷ் ஸின்பீனருக்கு விரோதமாக ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யம் யுத்தம் செய்யப் புறப்பட்டிருக்கிறதென்றால், இது கேட்போருக்கு நகை விளைவிப்பதொரு செய்கையன்றோ?

### காலத்தின் மாறுதல்

சென்ற ஐந்து மாஸங்களுக்குள்ளே ஜெர்மனியிலிருந்து 6 லக்ஷம் கடிகாரங்களும், எழுபத்தீராயிரம் ஸங்கீத வாத்யங்களும், மாஸந்தோறும் ஆயிரம் மோட்டார் வண்டிகளும், பதினாயிரம் காலன் ஜெர்மன் சாராயங்களும் இங்கிலாந்துக்கு இறக்குமதியாயிருப்பதாகவும், இன்னும் இவ்வருஷத்துக் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னே சுமார் பத்து லக்ஷம் பவுன் கிரயமுள்ள விளையாட்டு ஸாமான்கள் இறக்குமதியாகப் போவதாகவும் ராய்ட்டர் தந்தி தெரிவிக்கிறது. ஜெர்மனி இன்னும் உடன்படிக்கையின் நிபந்தனைகளை முற்றிலும் நிறைவேற்றாதபடியால் அந்நாட்டை இப்போது ஸர்வதேச ஸங்கத்தில் சேர்க்கப்போவதில்லையென்று மற்றொரு தந்தி சொல்லுகிறது. அதற்குள் ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் இத்தனை நெருங்கிய வியாபார ஸம்பந்தங்கள் ஏற்பட்டு விட்டன. உலக முடிவுவரை அல்லது யுத்தம் முடிந்து நெடுங் காலம் வரை மானிட ராக்ஷஸராகிய ஜெர்மனியருடன் எவ்விதமான உறவுகளும் ஏற்படுத்திக்கொள்ளக் கூடாதென்றும், அவர்களிடம் ஸாதாரண மனித பாவனை செலுத்தாமல் ஸகல விதங்களிலும் அவர்களை பஹிஷ்காரம் செய்யவேண்டுமென்றும் மஹாயுத்தம் நடக்கும்போதெல்லாம் கூக்குரலிட்டுக் கொண்டிருந்த ஆங்கிலப் பத்திராதிபப் புலிகள் முதலியோர் இப்போது இங்கிலாந்துக்கும், ஜெர்மனிக்கும் ஏற்பட்டிருக்கும் நெருங்கிய வியாபார ஸம்பந்தங்கள் முதலியனவற்றைப் பற்றி என்ன நினைக்கிறார்களென்றறிய இச்சைப் படுகிறேன்.

---

## 39

### உலக விநோதங்கள்

#### லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையும் ஒரு கிருஸ்தவ குருவும்

" நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல் "!— இங்கிலாந்தில், ஒரு கிருஸ்தவ குரு தம் ஆலயத்தில் சிஷ்ய கணங்களுக்கு மதோபதேசம் செய்துவருமிடையே, லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் தேச பக்தியையும், உயர்ந்த லக்ஷ்யங்களையும், ஞான மஹிமை வாய்ந்த உபதேசங்களையும், அச்சமற்ற பெருந் தன்மையையும் மிக வியந்து ஸ்தோத்ரம் பண்ணியதாக அந்தப் பத்திரிகையிலேயே ஒரு செய்தி ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

தன் உற்பத்தி முதலாகவே, உலகத்து விடுதலைகளையும், சீர்திருத்தங்களையும் எதிர்த்துக்கொண்டே வருவதும் அதுபற்றி அநேக மனுஷ்யாபிமானிகளால் நிந்திக்கப்பட்டிருப்பதுமாகிய அப்பத்திரிகையை, உலகத்தாரெல்லாரும் பரஸ்பரமாகிய ஸகோதர உணர்ச்சியும், ஸமத்வ ஞானமும், மாறுத அன்புமுடையோராக ஒழுக வேண்டும் என்று போதித்த ஏசுகிறிஸ்து நாதரின் ஸமய குரு ஒருவர் பூஷித்துப் பேசுதல், ஐரோப்பாவில் டலருக்கு ஸாதாரணமாகத் தோன்றக் கூடுமெனினும், வெளி யுலகத்தாருக்குப் பெரு வியப்பாகத் தோன்றுமென்பதில் ஐயமில்லை.

## மிஸ்டர் ஆர். வில்லியம்ஸ் பார்லிமெண்ட் அபேக்ஷகர்

லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையில் மேலே குறித்த மகுடத்துடன் ப்ரசுரிக்கப்பட்டிருக்கும் குறிப்பொன்றிலே, இங்கிலாந்தில் தொழிற் கட்சியில் ஏற்பட்டிருக்கும் புதிய குழப்பங்களுக்கு ஒரு திருஷ்டாந்தம் காட்டப்பட்டிருக்கிறது. இந்த மிஸ்டர் வில்லியம்ஸ் என்பவர் "பூட்டில்" என்னும் பிரதேசத்திற்குத் தொழிற் கட்சியைச் சேர்ந்த பார்லிமெண்ட் அபேக்ஷகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் ஆங்கிலத் தொழிற் கட்சியின் நிர்வாஹ ஸமிதியில் ஓரங்கத்தினர். ஆங்கிலத் தொழிற் கட்சியோ, "கம்யூனிஸம்" என்றும், "போல்ஷவிஸம்" என்றும் பலவாறுகக் கூறப்படும் நவீன ருஷியக் குடியரசின் "ஸமூஹ உடைமை"க் கொள்கையைக் கண்டனஞ் செய்து மறுத்திருக்கிறது. இந்த ஆர். வில்லியம்ஸ் என்பவரோ மேற்படி ஸமூஹ உடைமைக் (கம்யூனிஸ்ட்) கட்சியைச் சேர்ந்தவர். சென்ற ஆகஸ்ட் மாஸத்தில் இவர் தேசீயக் "கம்யூனிஸ்ட்" கட்சியின் நிர்வாக ஸபைக்கு ஓர் அபேக்ஷகராக வெளிப்பட்டார். பார்லிமெண்ட் ஸபையைக் கருவியாக வைத்துக்கொண்டு இப்போதுள்ள ஸமூஹ நிலையைக் கவிழ்த்துவிட வேண்டுமென்ற பக்ஷத்தைச் சேர்ந்தவர். "பார்லிமெண்ட் ஸபையில் மந்திரி ஸபையைச் சேர்ந்த ஒருவர் பேச எழுந்தபோதெல்லாம் அவரை நோக்கி 'நீர் பொய்யன்' என்று சொல்லக்கூடிய "கம்யூனிஸ்ட்" மெம்பரொருவர் அந்த ஸபையிலிருப்பது அந்தக் கட்சிக்கு ஒருவித பலமேயாகும் என்று இவர் பஹிரங்கமாகச் சொல்லுகிறாராம். இங்கிலாந்திலுள்ள தேசீய ஸமூஹ உடைமைக் கட்சி ருஷியாவில் மாஸ்கோவிலுள்ள ஸர்வதேச சங்கத்தின் ஒரு கிளையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறதாம். அந்த

ஸங்கத்தினின்றும் "பொது ஜனத் தலைமை", "பலமான உள் நாட்டுச் சண்டைக்குத் தயார் செய்தல்" என்ற கொள்கைகளை ஸ்வீகரித்துக் கொண்டிருந்ததாம்.

இப்படிப்பட்ட போல்ஷவிக் கொள்கைகளை ஆதரிக்கும் மிஸ்டர் வில்லியம்ஸ் என்பவரை ஆங்கிலத் தொழிற் கட்சியார் தமது நிர்வாக ஸபை ஒரு மெம்பராக வைத்திருப்பது பற்றி லண்டன் "டைட்ஸ் பத்திரிகையின் நிருபர் வியப்புத் தெரிவிக்கிறார். அதே காலத்தில் "கம்யூனிஸ்ட்" கட்சி தன்னை ஒரு கிளையாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று ஆங்கிலத் தொழிற் கட்சிக்கு விடுத்ததொரு விண்ணப்பத்தைத் தொழிற் கட்சி நிராகரித்து விட்ட செய்தியும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இங்ஙனம் "கம்யூனிஸ்ட்" கட்சியை நிராகரிக்கும் தொழிற் கட்சியார் மேற் கூறிய மிஸ்டர் வில்லியம்ஸ் என்பவரையும் உதறித் தள்ளிவிடாமல் தமது சார்பில் அவரை ஒரு பார்லிமெண்ட் அபேக்ஷகராக நியமித்திருப்பது பொருந்தாத செய்கையென்று அந் நிருபர் குறிப்பாலுணர்த்துகிறார்.

### பக்ஷிகளைப் போல் பாடுந் தேரை

லண்டன் நகரத்திலுள்ள ஜந்து சாலைக்கு மிஸஸ் கய்லி விங்ஸ்டன் என்ற ஸ்த்ரீ அர்ஜென்டைன் ராஜ்யத்துச் சிறு தேரை யொன்று இனம் கொடுத்திருக்கிறாள். அந்தச் சிறு ஜந்து ஒரு அங்குல நீளந்தானிருக்கிறது. அதன் மேற்புறம் மஞ்சள் புள்ளிகளுடன் கரு நிறமுடையதாக இருக்கிறது. கீழ்ப் பக்கத்திலும், அதன் வலை போன்ற பாதங்களினடியிலும் இரத்தச் செம்மை கொண்ட புள்ளிகள் தோன்றுகின்றன. இதைத் திடுக்கிடச் செய்யும்போதும், கோப மூட்டிய இடத்தும் அப்படியே மல்லாந்து படுத்துக்கொண்டு யோகம் ஸாதிக்கிறது. அப்போது செத்ததாக நடிக்கிறது. அல்லது "எச்சரிக்கை" வர்ணங்களைப் புலப்படுத்துகிறது. இதில் ஆண்பால் பெண்பால் இரண்டும் குட்டி வளர்க்கும் பருவங்களில் உரத்த குரலில் பாடுகின்றன. அந்தப் பாட்டின் ஒலி ப்ரிடிஷ் க்ரீன்பிஞ்ச் என்ற பட்சியின் குரலைப் போலவேயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஸய்யிது துறைமுகத்தில் (போட் ஸயிது) போல்ஷ்விங் உபத்ரவங்கள்

சென்ற அக்டோபர் மாஸ முடிவில் ஸூயேஸ் கால்வாய்க்கு வட புறத்தேயுள்ள ஸய்யிது துறை முகத்தில், பலமான

தொழிற் கலகங்கள் நேரிட்டதாக லண்டன் "டைம்ஸ்" பத்திரிகைக்கு ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. ஸூயேஸ் வாய்க்கால் வேலை யாட்களைத் தொழில் நிறுத்தும்படி கலகக்காரர் தூண்டியும் அது பலிக்கவில்லை யென்று தெரிகிறது. இவ்வாறு பலிக்காமற் போனதன் காரணம் அந்த வேலை யாட்களின் சம்பளங்களில் கம்பெனியார் தக்கபடி மிகுதி செய்து கொடுத்திருப்பதேயாம். ஆனால் வேறு சில தொழிலாளிகள் அக்டோபர் முடிவில், இன்னும் தொழில் நிறுத்திய நிலைமையிலேதான் இருந்தனராம். எகிப்தின் பட்டாளமொன்று ஸய்யிது துறைமுகத்துக்கு வந்திருக்கிறது. கலகக்காரர் சிறைச் சாலையை உடைக்க முயன்றார்களாம். இங்ஙனம் அவ்விடத்தில் குழப்பமேற்பட்டிருப்பதற்குப் போல்ஷவிக்கரின் சேஷ்டைகளே முக்யக் காரணமெனினும், அந்தத் துறைமுகத்தில் வழங்கப்படும் "ப்ரான்" (franc) என்ற ப்ரெஞ்ச் நாணயத்திற்கு விலை மதிப்புக் குறைவு நேர்ந்திருத்தலும் ஒருவாறு காரணமாகுமென்று, லண்டன் "டைம்ஸ்" சொல்லுகிறது. இந்த நாணயத்திலேயே அங்குள்ள வியாபார ஸ்தலத் தலைவர் தங்கள் வேலை யாட்களுக்கெல்லாம் சம்பளம் கொடுக்கும் வழக்கம் இருப்பதாகத் தெரிகிறது.

## ஸ்வராஜ்யம் வேண்டும்

தேசீயக் கக்ஷித் தலைவராக இருந்து அரிய வேலை செய்த ஒரு வட நாட்டு வக்கீல், பின்னிட்டுப் பல வேறு காரணங்களைக் கருதி ஸர்க்கார் கக்ஷியுடன் பழகத் தொடங்கித் தம்முடைய ஸ்வதேசீய முயற்சிகளைச் சிறிது சிறிதாகத் தளரவிட்டு வந்தார்.

அன்பு மேலிட்டு, உயர்தர ப்ரிடிஷ் அதிகாரி யொருவர் அத்தலைவரின் வீட்டுக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தார். அத் தலைவருக்கு ஏறக்குறைய எட்டு வயதுள்ள பெண் குழந்தை யொன்றிருந்தது. அந்தக் குழந்தை தன் வீட்டில் தான் பிறந்து அறிவு தெரிந்த பிராய முதலாகவே ஸ்வராஜ்யத்தைப் பற்றி ஓயாமல் கேட்டுப் பழகி யிருந்தபடியால் அதற்கு ஆங்கிலேயரிடமிருந்து நாம் ஸ்வராஜ்யமடைய வேண்டுமென்ற எண்ணம் பலமாக ஏற்பட்டிருந்தது. ஒரு நாள், மேற்கூறிய ப்ரிடிஷ் அதிகாரி அத்தலைவரின் வீட்டுக்கு வந்திருந்தபோது, அக் குழந்தையிடம் வேடிக்கையாக ஸம்பாஷணை செய்யத் தொடங்கினார். அந்தக் குழந்தை

மிகவும் ஸாமர்த்தியமாக மறுமொழி சொல்லிக்கொண்டு வந்தது. இந்தக் குழந்தைக்கு ஏதேனும் ஸம்மானம் கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் ப்ரிடிஷ் அதிகாரி அதை நோக்கி, "உனக்கென்ன வேண்டும்?" என்று கேட்டார். ஆங்கிலேயரிடமிருந்து நமக்குக் கிடைக்க வேண்டியது ஸ்வராஜ்யந்தானென்று பாடம் படித்து வைத்திருந்த அக் குழந்தை உடனே "ஸ்வராஜ்யம் வேண்டும்" என்று மறுமொழி சொல்லிற்றும். அந்தக் காலம் முதல் மேற்படி தலைவரின் வீட்டுக்கு வருவதை அந்த ப்ரிடிஷ் அதிகாரி நிறுத்தி விட்டதாகக் கேள்விப்படுகிறேன்.

## துருக்கிச் செய்தி

முஸ்லிம் உலகம் முழுவதையும் புண்படுத்தித் துருக்கியையும் ஒரு சிறிய சார்பு ராஜ்யத்தின் பதவிக்குக் கொணர்ந்ஸெவர் உடன்படிக்கையை மாற்றுவதாகிய விஷயத்தில் (கான்ஸ்டாண்டிநோபில் நகரத்திலுள்ள) துருக்கிய ராஜாங்கத்தார் உறுதி கொண்டு நிற்க உடம்படுவாராயின், துருக்கிய தேசீயக் கக்ஷித் தலைவராகிய கமால்பாக்ஷா, தம்முடைய படைகளையும் செல்வாக்கையும் அவர்களுக்கெதிராகச் செலுத்தி வருவதை நிறுத்தி, அவர்களுக்குத் துணைப் படுத்த சம்மதிக்கிறாரென்பது நேயர்களுக்குத் தெரிந்த செய்தியேயாம். இதுவரை பிடிவாதத்தாலோ, தம்மினத்தாருடன் அபிப்பிராய பேதங்களைச் சரிப்படுத்திக் கொள்ளுதல் அதிகாரிகளுக்குக் கஷ்டமாகத் தோன்றுமென்ற காரணத்தாலோ, நேசக் கக்ஷியாரிடம் தாக்ஷிண்யத்தாலோ துருக்கி ராஜாங்கத்தார் கமால் பாக்ஷாவுடன் ஸமாதானம் செய்து கொள்ளாமலிருந்தார்கள். ஆனால் நேற்றுக் கிடைத்த ராய்ட்டர் தந்தியொன்றில் உள்நாட்டு மந்திரி, கடற்படை மந்திரி, வியாபார மந்திரி என்போருட்பட்ட ராஜாங்கத் தூதர் கணமொன்று கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்து புறப்பட்டுக் கமால் பாஷாவின் கூட்டத்தாருடன் உடன்படிக்கைப் பேச்சுகள் பேசும் பொருட்டுக் கமால்பாஷாவின் ஸ்தானமாகிய (ஆசியா மைனரிலுள்ள) அங்கோரா நகரத்துக்குப் போய்க் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்போதேனும், துருக்கி கவர்மெண்டார் உள்ளொற்றுமையை நாடி வேலை செய்வது துருக்கிக்கு நற்காலத்தைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும்.

## சிறிய ராஜ்யங்களுக்கெல்லாம் சுயேச்சையும் சுயநிர்ணயமும்

சுயேச்சையும் சுயநிர்ணயமும் இல்லாத சிறிய ராஜ்யங்களுக்கு, அவற்றை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டே ஐரோப்பாவில் நான்கு வருஷங்கள் மஹாயுத்தம் நடத்துவதாக ஐரோப்பிய ராஜ்ய தந்திரிகள் பல்லவி பாடிக் கொண்டிருந்தார்கள். ஆனால் மேற்படி மஹா பிரளயத்தின் தற்கால விளைவுகளை மாத்திரம் பார்க்கும்போது, ஏற்கெனவே சுயநிர்ணய அதிகாரம் வைத்துக்கொண்டிருந்த தேசங்களுக்குக்கூட இப்போது அவ்வுரிமை மறுக்கப்பட்டு வருகிறது. நேற்றைய ராய்ட்டர் தந்தியொன்றில், கிரேக்க ராஜாங்கத்தார் சிறிது காலத்துக்கு முன்பு இருபது கோடியே இருபது லக்ஷம் த்ராக்மா (என்ற கிரேக்க நாணயம்) தங்கள் நாணய சாலைகளில் அச்சிட்டதுபற்றி நேசக் கக்ஷியார் ஆக்ஷேபந் தெரிவித்திருக்கிறார்களென்றும், அக்கார்யம் செய்யும் முன்பு கிரேக்க ராஜாங்கத்தார் நேசக் கக்ஷியாரிடமிருந்து அநுமதி பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென அறிக்கையிட்டிருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. நல்ல வேலை! ஒரு தனி ராஜாங்கத்தார் தங்களிஷ்டப்படி நாணயமடித்துக் கொள்ளவுங்கூடாதென்ற நிலைமையில் ஐரோப்பாவிலுள்ள சிறு ராஜ்யங்களை நேசக் கக்ஷி ராஜதந்திரிகள் அடக்கியாள முயலுகிறார்களென்று தெரிகிறது. உதவி செய்த கிரீஸ் தேசத்துக்கு இப்படி நிபந்தனை யேற்படுத்தி யிருக்கிறார்கள். ஆனாலும், என்ன செய்யலாம்? நாம் எத்தனை பெரிய வல்லரசாக இருப்பினும், "நாமொன்று நினைக்க, தெய்வமொன்று நினைக்கும்" என்ற பழமொழியை மீறிச் செல்லுதல் இயலாது. என்ன செய்யலாம்? ஏதென்ஸ் நகரத்தில் வெனிஜிலாஸ் இல்லையே! அவரிருந்தால் பணம் அடித்தல், புஸ்தகம் அடித்தல், ராஜாவுக்குச் சோறு போடுதல் எல்லா விஷயங்களிலும் நேசக் கக்ஷியாரின் கட்டளையை எதிர்பார்த்து நடப்பார். அவர் போய்விடவே, நேசக் கக்ஷியாரின் செங்கோல் பாக்தாதிலும் கெய்ரோவிலும், டப்ளினிலும் ஒளி வீசுவதுபோல் அத்தேன நகரத்தில் நேராக வீசாவிடினும்; சற்று மறைந்தேனும் வீச இடமில்லாமல் போய்விட்டது. இவ் விஷயத்தில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கும் ப்ரெஞ்ச் மந்திரி ஸ்ரீமான் லேகுக்கும் என் அனுதாபம் தெரிவிக்கிறேன்.

## மாதர் ஸமத்வம்

இங்கிலாந்தில் கீர்த்தி பெற்றிருந்த பொருள் சாஸ்த்ர பண்டிதராகிய மிஸ்டர் பா (f) ஸட் (Fawcett) என்பவரின் மனைவியும், பெண்களுக்கு வாக்குச் சீட்டு வேண்டுமென்ற கக்ஷித் தலைவியரில் ஒருவருமான மிஸஸ் பாஸட் என்பவர், சில தினங்களின் முன்பு லண்டனில், " நகரத்தாரின் ஸமத்வத்தை வேண்டும் ஸங்கங்களின் தேசீய ஐக்ய ஸபை " என்ற ஸபை முன்பு விவாகம் செய்து கொண்ட ஸ்திரீகளின் பதவியைக் குறித்து ஒரு உபன்யாஸம் செய்தார். அதனிடையே அவர் பின்வரும் ரஸமான கதையொன்று சொல்லுகிறார். " 1870-ம் வருஷத்துக்கு ஸமீபத்தில், ஒரு நாள் என் சட்டைப்பையிலிருந்த பணம் களவுபோயிற்று. களவு செய்த மனிதன் அகப்பட்டான். அவன் மீது நியாய ஸ்தலத்தில் வழக்கு நடந்தது. நானும் நியாய ஸ்தலத்துக்குப் போயிருந்தேன். அப்போது அந்தத் திருடன் மீது நியாய ஸ்தலத்தில் வாசிக்கப்பட்ட குற்றப் பத்திரிகை பின் வருமாறு தொடங்கிற்று :—' ஹென்ரிபாஸட் என்பவரின் உடைமையாகிய மிலிஸென்க் பாஸட் என்ற ஸ்திரீயிடமிருந்து டாம் ஜோன்ஸ் என்பவன் ஒரு பணப்பையைக் களவு செய்ததாகக் குற்றஞ் சாற்றப்படுகிறான் ' என. நான் ஏற்கெனவே ஸ்திரீகளுக்கு ஸ்வதந்தரம் வேண்டுமென்ற கக்ஷியைச் சேராதிருந்தேனாயின், என்னை ' உடைமை 'ப் பொருளாக வர்ணித்த அந்த வாக்கியம் என்னை உறுதியாக அந்தக் கக்ஷியில் கொண்டு சேர்த்திருக்கும் "—என்று அந்தப் பண்டிதை கூறுகிறார்.

## நன்றி மறவாமை

" தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு "

என்றார் திருவள்ளுவர். ஆதலால் ராஜ்ய தந்திரிகளாகவும் ராஜரீக உபந்யாஸகராகவுமிருந்து தேசத்துக்கு நன்மை செய்ய விரும்புவோர் சொற்களை உபயோகப்படுத்தும் விதத்தில் மிகவும் ஜாக்கிரதை செலுத்தவேண்டும். தேச விடுதலைக்கு மூலாதாரம் தேச ஐக்கியமென்பது குழந்தைகளுக்குங்கூடத் தெரிந்த விஷயம். அதிலும், தேசீயக் கக்ஷியாருக்குள்ளே பலமான ஐக்கிய உணர்ச்சியிருத்தல் இன்றியமையாதது. ஆதலால் தேசீய வாதிகள் தம்முள்

கருத்து மாறும்போதும், கண்டனம் செய்தல் அவசியமாகத் தோன்றும்போதும் தம் இனத்தாரை மாருத மன வருத் தத்துக்குட் படுத்தக்கூடிய கடூர பாஷை சொல்வதை முற்றி லும் தவிர்த்து விடுதல் நன்று. சென்ற திங்கட்கிழமை மாலை நான் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடந்த பொதுக் கூட்டத்துக்குப் போயிருந்தேன். அங்கு ஒரு வாலிபர் ப்ரஸங்கம் செய்தபோது நம்மவர்களில் வயதானவர்கள் தேச ஸேவையைத் துறந்து விட்டார்களென்றும், இனி இளைஞர்கள் காப்பாற்றினாலன்றி தேசம் கதியற்றதாய் விடுமென்றும் தெரிவித்தார். காந்தி சிறு பிள்ளையா? விஜயராகவாச் சார்யர் சிறு பிள்ளையா? மதிபால் கோஷ் சிறு பிள்ளையா? மதன் மோஹன மாளவியா சிறு பிள்ளையா? நம்முள் வயதேறியவர்கள் தேச பக்தியைத் துறந்து விட்டதாக மேற் கூறப்பட்ட மஹான்கள் இருக்கும் வரை நாம் உச்சரிப்பது சரியா? இந்தியாவின் விருத்தத் தலைவர்களுக்கு யௌவன இந்தியர் செலுத்தும் நன்றி இது தானா?

## ஐரோப்பிய நாகரீகம்

ஐரோப்பிய நாகரிகத்தைக் குறித்துத் தம்முடைய கல்கத்தா உபந்யாஸமொன்றில் கர்னல் வெட்ஜ்வுட் பேசிய வார்த்தைகள் படிப்பதற்கு ரஸமாக இருப்பதால் அவற்றை இங்கு மொழி பெயர்த்துக் காட்டுகிறேன். கர்னல் வெட்ஜ் வுட் சொல்லுகிறார்:—

"ஐரோப்பிய நாகரிகம் இந்தியாவில் வந்து தங்கிப் போய்விடும் என்று தோன்றுகிறது. அதைத் தடுக்கவேண் டும். அந்த நாகரிகம் அநியாயத்தை அஸ்திவாரமாக உடை யது. அது யோக்கியதை யற்ற பொருளாசையை ஆதார மாகக் கொண்டது. அந்த நாகரிகத்தை நீங்கள் கைக் கொள்ள மாட்டீர்களென்று நம்புகிறேன். அது அநீதியை ஆதாரமாகக் கொண்ட தென்பதற்குக் காரணம் சொல்லு கிறேன். தொழிலாளிகள் செல்வத்தை உற்பத்தி செய் கிறார்கள். ஆனால் அவர்களுடைய தொழிலால் உற்பத்தி யாகும் செல்வத்தை அவர்கள் அனுபவிக்க இடமில்லை. இது அநியாயமன்றோ? நீதியை ஆதாரமாகக் கொள்ளாமல், அநீதியை ஆதாரமாகக் கொண்ட ஜன ஸமூஹம் பிழை யானது. அதை எப்படி அழித்து விடலாமென்பதைக் குறித்து நாம் யோசனை செய்யவேண்டும். தொழிலாளி களுக்கு அதிகக் கூலி கொடுக்க வேண்டுமென்று மாத்திரம்

நான் சொல்லவில்லை. அவர்களுடைய தொழிலின் முழுப் பயனையும் அவர்கள் அனுபவிக்க வேண்டுமென்கிறேன்" என்றார். முதலாளிகள் முதல் போட்ட அளவுக்கு அவர்களும் பயன்பெற வேண்டுமென்பதைக் கர்னல் வெட்ஜ்வுட் மறுத்துப் பேசுவதாக நினைப்பது நியாயமன்று. ஆனால், தொழிலாளரின் தொழிலால் பெறுமளவில் முழுப்பயனும் தொழிலாளிகளையே சேர வேண்டுமென்பதுதான் அவருடைய கொள்கை. மேலும், முதலாளிகள்—தொழிலாளிகள் என்ற பேதமின்றித் தொழில் செய்வோரே நாட்டிலுள்ள தொழிற் களங்களுக்கெல்லாம் அதிபதிகளுமாய்விடவேண்டுமென்ற கொள்கை அவர் மனதிலிருக்கக் கூடும்.

இயன்ற வரை, நகரத்து ஜனங்கள் அனைவருமே, ஏதேனுமொரு வகையில் பொது நலத்துக்காகத் தொழில் செய்து தீரவேண்டு மென்பதும், அங்ஙனம் நாட்டு மக்கள் அனைவரும் தொழில் செய்யுமிடத்தே, தொழிற்சாலை யுரிமையும் பொதுவாகிவிட வேண்டுமென்பதும் நவீன ஐரோப்பியத் தொழிற் கக்ஷியாரின் கொள்கையாதலால், அதை யெண்ணியே கர்னல் வெட்ஜ்வுட் மேலே காட்டிய வசனங்களைக் கூறியிருக்கிறார். ஆனால் கீழ்த் திசையிலும் தொழிலாளிகளின் நிலைமை அதே மாதிரியாகத்தானிருக்கும்போது மேற்றிசை நாகரிகத்தை மட்டும் கர்னல் வெட்ஜ்வுட் குறிப்பிட்டுப் பழி பேசியதன் நோக்கம் யாதென்று நம்மவரிலே சிலர் திகைப்பெய்தக் கூடும். ஆனால், மேலெழுந்த வாருகப் பார்க்கும்போது, இவ்விஷயத்தில் மேற்றிசையும் கீழ்த் திசையும் ஒரே மாதிரியாகவே இருப்பதாகத் தோன்றினும், ஆழ்ந்து கவனிக்கும்போது வேற்றுமை புலப்படும். மேற்றிசை நாகரிகத்தின் ஆதிக்கம் இங்குத் தொடங்கிய காலத்துக்கு முன்பு நம் நாட்டுத் தொழிலாளிகள் பெரும்பாலும் தத்தம் தொழில்களுக்குத் தாமே முதலாளிகளாகவும் இருந்தனர். முதலாளி ஒருவன் பணம் போட்டுப் பலரைக் கூலியாட்களாக்கி, வேலை வாங்கி அவர்களுக்குச் சொற்பக் கூலி கொடுத்துவிட்டு, அவர்களுடைய தொழிலால் உற்பத்தியான பண்டங்களை விற்றுக் கிடைக்கும் லாபத்தில் பெரும் பகுதி தான் அமுத்திக்கொள்ளும் முறை இந்தியாவில் ஸாதாரணமாகக் கிடையாது. இது நம்முடைய தேசத்து நாகரிகத்தின் நோக்கத்துக்கு மாறானமுறை. இந்த உண்மையை அன்னியராயினும், கர்னல் வெட்ஜ்வுட் சுலபமாகத் தெரிந்து கொண்டது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. இங்கிலாந்திலும், பிற இடங்களிலுமுள்ள தொழிற்

கக்ஷியார் நமக்கு எங்ஙனமேனும் ஸ்வராஜ்யம் கொடுக்கும்படி ப்ரிடிஷ் ராஜாங்கத்தை வற்புறுத்தக் கூடுமாயின் அதனுல் உலக முழுமைக்கும் நன்மையேற்படும். மேற்றிசையின் தற்கால நாகரிகம் அநியாயத்தைப்பற்றி நிற்பதென்றும், ஆதலால் அழித்துவிடத்தக்கதென்றும் கர்னல் வெட்ஜ்வுட் சொல்லுகிருர். அதை நாமும் அங்கீகாரம் செய்கிறோம். ஆனுல் அந்த அநியாய நாகரிகத்தை அழிக்கும் உபாயமெப்படி ? நியாயத்தைக் கொண்டு நிறுத்திஞல் அநியாயம் தானே அழிந்துவிடும். சிலர் அநியாயத்தைப் அழிப்பதற்கு மேன்மேலும் அதிக அநியாயம் பண்ண வேண்டுமென்று நினேக்கிருர்கள். ஆனுல் உண்மை அப்படியில்லே. நியாயம் ஸாதிப்பது ஸுலபமென்றும், லாபகரமென்றும், மனிதர் தெளிவாக அறிந்து கொண்ட மாத்திரத்தில் அநியாயத்தைத் தாமே நிறுத்தி விடுவார்கள். ஒளியைக் காண்பித்தால் இருள் தானே அகன்றுவிடும். மேற்றிசையின் அநாகரிகத்தை மாற்றவேண்டுமாயின், கீழ்த்திசை நாகரிகம் அங்குப் பரவும்படிச் செய்வதே அதற்குரிய உபாயமாகும். கீழ்த்திசை நாகரிகத்துக்கு இந்தியாவே இலக்கியமாக விளங்குகிறது. எனவே உண்மையான, கிழக்கு நாகரிகம் ஐரோப்பாவுக்கு வேண்டுமென்று கர்னல் வெட்ஜ்வுட் முதலியவர்கள் விரும்புவாராயின் அதை இந்தியாவிலிருந்தே பெற முடியுமென்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். ஆனுல் இந்தியா இப்போதிருக்கும் பராதீன நிலேமையிலே தனது பூர்வீக நாகரிகத்தின் உயர்ந்த லக்ஷியங்களேத் தன் வாழ்விலே நிறைவேற்றிக் கொள்வதற்குமே திறமைகளே இழந்து நிற்கிறது. இந்தியா பராதீனமாக இருக்கும் வரை ஐரோப்பியரிற் பெரும்பகுதியார் இதைக் குரு நாடாக ஒப்புக்கொள்ளவேமாட்டார்கள். இந்நிலேயில் அவர்கள் தம்மிடமுள்ள குற்றங்களே நீக்கி நம்மிடமுள்ள குணங்களேப் பற்றிக் கொள்ளுதல் எதிர் பார்க்கத்தக்க விஷயமன்று. எனவே கீழ்த்திசை நாகரிகம் இந்தியாவில் மறுபடி சுடர்விட்டெரிவதை ஐரோப்பியர் கண்டு தமது நாகரிகத்திலும் இது சிறந்ததென்றுணரும்படிச் செய்யவேண்டும். இதற்கு இந்தியா ஸ்வராஜயம் பெற்ருலன்றித் தகுந்த சௌகர்யங்களேற்படமாட்டா. எனவே, வெளியுலகத்து மனுஷ்யாபிமானிகள் இந்தியா ஸ்வராஜ்யம் பெறும்படி உழைப்பது நமக்கு நன்மையாவதுடன், நம்மைக் காட்டிலும் அவர்களுக்கே அதிக நன்மையாக முடியும்.

---

# 40

## பருந்துப் பார்வை

1. ஒரு தேசத்தார் ராஜ்ய மஹிமை பெறவேண்டுமானால் அவர்கள் ஏகதேவ பக்தி யுடையவர்களாக இருக்கவேண்டும் என்று "மாடர்ன் ரிவ்யூ" பத்திரிகை சொல்லுகிறது. அதாவது, 'முஹம்மதியர், கிறிஸ்துவர், யூதர் முதலியவர்களைப் போல் ஒரே கடவுளை நம்பித் தொழவேண்டும். கிறிஸ்துவர்களிலே ரோமன் கதோலிக் கிறிஸ்துவர்கள் பல ஞானிகளையும், தாயையும் வணங்குகிறார்கள். அப்படியில்லாமல் ப்ரோதஸ்தாந்துக் கூட்டத்தாரைப்போல் ஒற்றைக் கடவுளைத் தொழவேண்டும். இல்லாவிட்டால், இராஜ்யவலிமை உண்டாகாது' என்று அந்தப் பத்திராதிபர் நினைக்கிறார். இது பிழை. இதற்கு மனுஷ்ய சரித்திரத்திலே எவ்விதமான ஆதாரமும் இடையாது. ஹிந்து மதம் உண்மை. எல்லா மதமும் உண்மைதான். ஹிந்து மதம் ஆழ்ந்த உண்மை. உண்மையாலேதான் எல்லா நன்மையும் உண்டாகும்.

2. வைஸ்ராய் ஸபையிலே ஜனப்பக்கத்துப் பிரதிநிதிகள் 22 பேரிலே 19 பேர் சர்க்காருக்கு ஒரு அறிக்கையிட்டிருப்பதாகத் தங்கள் பத்திரிகையிலே பார்த்தேன். சண்டை முடிந்த பிறகு பொருளாட்சியும், மாகாண ஆட்சியும் ஜனங்கள் ஆயுதம் தரிக்க இடங்கொடுக்கவேண்டும் என்பது மேற்படி அறிக்கையின் ஸாரம் என்று தோன்றுகிறது. போதும்; பிரதிநிதிகள் சரியாகக் கேட்கவில்லை; ஏதோ தங்கள் புத்திக்குத் தோன்றியவரை செய்தார்கள். இருந்தாலும், பொதுவாக, அவர்கள் கேட்கிற அளவேனும் நிச்சயமாகக் கிடைத்துவிட வேண்டும். அப்போது தான் தேசத்து ஜனங்களுக்குச் சிறிது சந்தோஷம் ஏற்படும்.

3. தக்ஷிணத்துப் பாஷைகளிலே—அதாவது தமிழிலும், தெலுங்கிலும், கன்னடத்திலும், மலையாளத்திலும்—சாஸ்திர (சயின்ஸ்) பாடம் கற்றுக்கொடுப்பதற்கு மேற்படிப் பாஷைகள் தகுதியில்லை யென்று பச்சையப்பன் காலேஜ் தலைமை வாத்தியார் மிஸ்டர் ரோலோ என்பவர் சொல்லுகிறார். அவருக்கு இவ்விடத்துப் பாஷைகள் தெரியாது. ஸங்கதி தெரியாமல் விவரிக்கிறார். சாஸ்திர பரிபாஷை நமது பாஷைகளில் மிகவும் எளிதாகச் சேர்த்துவிடலாம். மேலும்,

இயற்கை நடையிலே இங்கிலீஷைக் காட்டிலும் தமிழ் அதிக நேர்மையுடையது. ஆதலால், சாஸ்திரப்பரவசனத்துக்கு மிகுந்த சீருடையது. இந்த ஸங்கதி நம்மவர்களிலே கூடச் சில இங்கிலீஷ்ப் பண்டிதருக்குத் தெரியாது. ஆதலால் மிஸ்டர் ரோலோவை நாம் குற்றஞ் சொல்வது பயனில்லை.

4. காசியிலே ஹிந்து ஸர்வகலா சங்கம் கட்டும் போது, பல மாளிகைகள் ஹிந்து சிற்பத்தைத் தழுவியிருக்க வேண்டும். நவீன பாடசாலைக்குரிய லக்ஷணங்கள் குறையக்கூடாது. ஆனால், சிற்பத்தின் மேனி சுதேசிய விஷயமாக இருக்க வேண்டும். பாரத தேசத்துச் சிற்பிகளிலே தமிழ் நாட்டு ஸ்தபதிகள் ஒரு முக்கியமான அங்கமாவர். வங்கத்திலே ஏற்பட்டு மஹா கீர்த்தியுடன் சோபிக்கும் நவீன சாஸ்திரிகளில் நாயகராகிய அவனீந்த்ரதாகூர்கூட இக்காலத்திலும் தமிழ் நாட்டில் வாழும் ஸ்தபதிகளிடம் உயர்ந்த தொழில் இருப்ப தாக மிகவும் புகழ்ந்து பேசியிருக்கிறார். ஆதலால், மேற்படி ஸர்வகலா சங்கத்தின் கூட்டங்களிலே கூடியவரை நமது தமிழ் ஸ்தபதிகளின் உதவியை நாடிக் கொள்ளும்படித் தமிழ் நாட்டிலுள்ள பண்டிதர்களும் ஜனத்தலைவர்களும் மேற்படிச் சங்கத்திற்குப் பொருள் கொடுத்து உதவுந்தோறும் முயற்சி செய்யவேண்டும்.

5. ஜப்பானில் ஸம்ஸ்கிருதப் படிப்பு வளருகிறது. அங்கே ஸம்ஸ்கிருதப் படிப்பு எந்தக்காலத்தில் தொடங்கியது என்று இன்னும் நிச்சயமாய்ச் சொல்ல இடமில்லை. ஆறும் நூற்றாண்டில் அந்த நாட்டுக்குள் பௌத்தமதம் நுழைந்த போதே ஸம்ஸ்கிருதமுங்கூட நுழைந்திருக்கலாம் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஏழாவது நூற்றாண்டின் மத்தியிலே சீன தேசத்தில் மொழி பெயர்ப்புச் சங்கம் நடத்திய ஹயனுக்தஸ்வ் என்ற பண்டிதரிடம் ஜப்பானிலிருந்து பல குருக்கள் வந்து ஸம்ஸ்கிருதம் படித்ததாகச் சரித்திர ஆதாரத் தினால் தெரிகிறது. 735 (கி.பி.)-ஆம் வருஷத்தில் பாரத தேசத்திலிருந்து போதிஸேனன், யத்ரியத் என்ற இரண்டு பேர் ஜப்பானில் போயிறங்கினார்கள். சிறிது காலம் சீன ராஜதானியிலிருந்துவிட்டு ஜப்பானிலிருந்து அங்கு வந்த மந்திரிகளுடனே அங்கிருந்து புறப்பட்டு ஜப்பானுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இதற்கப்பால் ஸம்ஸ்கிருதப் படிப்பு மிகுதிப் பட்டது. ஜப்பானிலிருந்து ஸம்ஸ்கிருத பண்டிதர் சீனத்திலே போய் மஹா கீர்த்தியடைந்தனர். திருஷ்டாந்தமாக

805 (கி.பி.)-ஆம் வருஷத்தில் ரெய்ஸோன் என்ற ஜப்பானிய குரு சீனத்துக்குப் போய் அங்கே பௌத்த மொழி பெயர்ப்புச் சங்கத்தின் தலைமையை நடத்தினர். அப்போது ந்ராஸ்ஞ நன்றென்ற ஹிந்து பண்டிதர் அங்கிருந்தார். இவருஞ் சேர்ந்து ஒரு பெரிய சாஸ்திரம் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்த்து வந்தார்கள். இப்போதும் அங்கே பௌத்த தர்மத்துக்கு அந்நூல் பெரிய ப்ரமாணமாக நிற்கின்றது. மேலும், அக்காலத்திலிருந்து ஜப்பானிலிருந்து பலர் பாரத தேசத்துக்கு வந்து போனதாகவும் தெரிகிறது. இப்போது ஜப்பானிலே பௌத்தமடங்களில் நூற்றுக் கணக்கான மனிதர் ஸம்ஸ்கிருதம் படிக்கிறார்கள்; ஒவ்வொரு ராஜாங்கத்து ஸர்வ கலாசாலையிலேயும், சங்கத்திலேயும் பெரிய தேர்ச்சி கொண்ட ஜப்பானிய ஸம்ஸ்கிருத பண்டிதர் நியமிக்கப் பட்டிருக்கிறார். இங்குள்ள ஸம்ஸ்கிருத பண்டிதர்கள் ஜப்பானிலுள்ள ஸம்ஸ்கிருத பண்டிதர்களுடன் ஓலை எழுதிப் பழக்க மேற்படுத்திக் கொள்ளலாம். டோக்யோ ஸாம்ராஜ்ய ஸர்வகலா சங்கத்தில் பண்டித் அநேஸாரி (Anesari) என்பவர் இருக்கிறார். அங்கிருந்து பழைய சுவடிகள் தருவித்துப் பார்க்க ஏற்பாடு செய்யவேண்டும். ஹிந்து ஸர்வகலா சங்கத்தார் இவ்விஷயத்தைக் கவனிப்பது நலமாகும்.

---

# 1

## பெண்ணின் பாட்டு

### இதிலுள்ள வகுப்புக்கள்

இருபாலருக்கும் பொதுவான சந்தங்கள் இருப்பதுடன், பெண்களுக்கு மாத்திரம் சிறப்பான பாட்டுக்களும், சந்தங்களும் இருக்கின்றன. பண்டைத் தமிழ்நாட்டு மாதர் பாடிக் கொண்டிருந்த பல பாட்டு வகைகள் இப்போது வழக்கிலின்றி இறந்து போய்விட்டன.

ஆனால், ஜீவன் பெண்ணென்றும், பரமாத்மா ஆணென்றும் பாவனை செய்து பழைய பக்தர் பாடியிருக்கும் பாட்டுக்களில் பெண்களுக்குரிய சில பாட்டு வகைகள் காணப்படுகின்றன.

திருஷ்டாந்தமாக, திருவாசகத்திலே பின்வரும் வகைகள் காணலாம் :—

(1) எம்பாவை (பெண்கள் நீராடப்போவது).

" கண்ணார முதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே யிப்பூம் புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய் ".

(2) அம்மானைப் பாட்டு.

(3) தும்பி, குயில், கிளி முதலிய தூதுப் பாட்டுகள்.

(4) தெள்ளேணம் (நடுவே ஒரு பெரிய முரசை வைத்துக்கொண்டு, பெண்கள் சுற்றியிருந்து இரண்டு கைகளிலும் கோல் கொண்டு கொட்டி அந்தத் தாளத்திற்கு இசையப் பாடுதல்).

(5) சுண்ணம் இடித்தல் (சுண்ணமென்பது கந்தப் பொடி).

" பானல்தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ண மிடத்தும் நாமே ".

(6) சாழல்.

(7) உந்தி.

(இவ்விரண்டும் பெண்களுடைய விளையாட்டு என்று தெளிவாகிறது. ஆனால் விளையாட்டின் விவரங்கள் தெரியவில்லை).

(8) பூவல்லி (பெண்கள் பூக் கொய்யும்போது பாடுவது).

(9) தோணோக்கம் (பெண்கள் தோள் கோத்துப்பாடிக் குதிப்பது).

(10) ஊசல் (இதை இக்காலத்தில் " ஊஞ்சற் பாட்டு " என்கிறோம்).

(11) காலைத் துயில் எழுப்பும் பாட்டு.

இங்ஙனம், தாலாட்டு, அம்புலி, செங்கீரை, சப்பாணி முதலிய வேறு பல வகைகளுமிருந்தன. 'பிள்ளைத் தமிழ்' என்ற நூல் வகுப்பைக் காண்க. இவற்றிலே, தாலாட்டு, ஊஞ்சல், அம்மானை, பள்ளியெழுச்சி என்ற நான்கு வகையும் வெவ்வேறு சந்தங்களுடன் இக்காலத்தில் நமது பெண்களுக்குள் வழங்கி வருதல் காண்கிறோம். பழைய காலத்து வகைகளை நாம் விஸ்தாரமாகக் கவனிப்பதற்குவேண்டிய ஸௌகரியங்கள் இல்லை. ஆதலால், பெயர் மாத்திரமே குறிப்பிட்டிருக்கிறோம்.

குடும்பத்துப் பெண்களிலே சாஸ்திரப்படி ஸங்கீதம் கற்றுக் கொள்வோரின் தொகை மிகவும் குறைவு. நகரப் பழக்கமும், சுக ஜீவனமும் உடைய குடும்பங்களில் மாத்திரமே பெண் களுக்கு வாத்தியார் வைத்துப் பாட்டுக் கற்றுக் கொடுக்கி ருர்கள். ஆயினும், வாத்தியார் இல்லாமல் சாஸ்திர வழி களில் வாஸனை ஏற்பட்டவர் பலர் உண்டு.

இவர்களையல்லாது, பொதுப் படையாகப் பார்க்கு மிடத்து, நமது மாதர் பாட்டுக்களின் இனம் பின்வருமாறு :—

(1) கல்யாணப் பாட்டு. நலங்கு, பத்யம், ஓடம் முதலியன.

(2) கும்மிப் பாட்டு. குதித்துப் பாடுகிற பாட்டுக்கள்.

இவ் வகுப்பில், கிளிப் பாட்டு, பல்லிப்பாட்டு முதலி யனவும் அடங்கும்.

(3) அம்மானை, தூது, மாலை, சோபனம் முதலிய நீண்ட கதைப் பாட்டுக்கள்.

(4) பொதுத் தாலாட்டு, விளையாட்டுப் பாட்டுக்கள், ஜாவளிகள், கீர்த்தனை முதலியன.

மேலும், பண்ணைகளில் வேலை செய்யும் பெண்கள், நெல் குத்துவோர், சுண்ணம்பு இடிப்போர், குறிகாரி, தொம்பச்சி முதலிய வகுப்பினர் தத்தமக்கென்று தனியான மெட்டுக்கள் வைத்துக் கொண்டிருக்கிருர்கள். மேற்கூறப்பட்ட பாட்டுக் களில் மிக இன்பமான சந்தங்கள் பல இருக்கின்றன. இவை கால வெள்ளத்தில் மறைந்துபோகு முன்பாக ஸங்கீத வித் வான்கள் பொறுக்கி யெடுத்து ஸ்வர நிச்சயம் செய்து வித்தைப் பழக்கத்திலே சேர்த்து விடவேண்டும்.

பெண்களுக்குக் கல்விப் பயிற்சி ஏற்பட்டால் இப்போதுள்ள கொச்சை மொழிகளும், பிழைகளும், ரஸக்குறைவும் பொருந் திய பாட்டுகளை மறந்து விடுவார்கள். ஆனுல், அத்துடன் பழைய ஸங்கீதக்கட்டுக்களை மறந்து போகாமல் பார்த்துக்

கொள்ளவேண்டும். பழைய வழிகளை முற்றிலும் மறந்து போய் நமது பெண்கள் நாடக மெட்டுக்கள் முதலியவற்றையே பாடத் தொடங்கி விட்டால், தமிழ் நாட்டில் ஸங்கீத வுணர்ச்சி நாசமாய்விட ஹேது உண்டாகும்.

கொச்சை மொழிகளும் ரஸக் குறைவும் மலிந்த பாட்டுக்களென்று சொன்னோம். ஆனாலும், ஒரு கூடைப்பதரில் ஒருழக்கு அரிசி யகப்படும். அதை நாம் இழந்துவிடக் கூடாது. கவிதைத் தேட்டமுடையோர் நமது பெண்களின் பாட்டைத் தேடிப் பார்த்தால், சிற்சில விடங்களில் நல்ல கவிதை கிடைக்கும். பாட்டி, ராமாயணத்தில் குசலவரின் கதையை ஒரு நீளப் பாட்டாகச் சொல்லுவாள். அதில் சீதையின் கஷ்டங்களைக் கேட்கும்போது குழந்தைகளெல்லாம் கண்ணீர் விட்டழும். ராமனைக் குசலவர் வெல்லும் இடத்து வரும்போது மனதிலே ஆத்திரம் பொங்கும். 'ராமனுக்கு வேணும்; நன்றாக வேணும்' என்று தோன்றும். நலங்குப் பாட்டு, கும்மி முதலியவற்றிலேகூடச் சில இடங்களிலே முத்துப்போல வார்த்தைகள் அகப்படும். தொழிற் பெண்களின் பாட்டு மிகவும் ரஸமானது; சந்தமும் இன்பம்; ஒன்றுக்குப் பாதி நல்ல கவிதை.

பெண்களின் பாட்டில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களில் பெரும்பகுதி ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். இதன் சம்பந்தமாக இங்கே இன்னும் சில வார்த்தைகள் சேர்க்க விரும்புகிறேன். வீட்டிலே பந்துக்களின் முன்பும், விவாக ஸந்தர்ப்பங்களிலும் பாடும்போதும் கூச்சத்தினாலே பாட்டை விடக்கூடாது. வித்தை விஷயத்தில் கூச்சங்காட்ட நியாயமில்லை. வித்தைப் பயிருக்கு விடுதலை நீர்ப்பாய்ச்ச வேண்டும். மேலும், பெண்களுக்குள்ளே பொதுக் கல்வியை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்க வேண்டும். கல்வியறிவில்லாத மூடர் எந்தத் தொழிலும் நேரே செய்ய மாட்டார்கள். தவிரவும் பார்ஸி மெட்டிலே ஆரத்தியெடுப்பது, இங்கிலீஷ் நலங்கு முதலிய கோரமான விகாரங்களுக்குத் துணை செய்யக்கூடாது. நமது நாடகசாலைக்குள்ளே கல்வியறிவும், சாஸ்திரப் பழக்கமும், நாகரீகமும் நுழையுங் காலம் வரை, நமது பெண்கள் நாடகப் பாட்டுகளைக் கவனியாமல் இருப்பது நன்று. வேதாந்தக் கொடுமையையும் கொஞ்சம் குறைந்துவிட்டால் பெரிய உபகாரம்.

# 2

## ஸங்கீத விஷயம்

இங்குள்ள ஜந்துக்களிலே மனிதருக்கும் பறவைகளுக்குந் தான் பாடத்தெரியும். மற்ற மிருகங்களுக்குப் பாட்டு வராது. பறவைகள் வானத்திலே பறக்கும் வழக்கமாயிருப்ப தால், அவற்றின் மனநிலை ஸங்கீதத்திற்கு இசைகின்றது போலும்! மனிதன் உடம்பினாலே பறக்காவிட்டாலும், உள்ளத்தைத் திசை வெளியிலே பறக்கும்படிச் செய்கிறான். அப்போது, இயற்கையிலே பாட்டுத் தோன்றுகிறது.

ரஸங்கள் ஒன்பது :—

(1) வீரம்.

(2) ரௌத்ரம் (கோபம்).

(3) அற்புதம் (வியப்பு).

(4) சாந்தம் (நடுவுநிலை).

(5) பநாநகம் (அச்சம்).

(6) பீபத்ஸம் (வெறுப்பு).

(7) ஹாஸ்யம் (நகை).

(8) கருணை, சோகம் (துயரம்) : இதை 'அவலம்' என்பது பழைய தமிழ் வழக்கு.

(9) சிருங்காரம் (காமம்).

வெளிப்பொருள்களைக் காணும்போது அல்லது நினைக்கும் போது மனிதனுடைய உள்ளத்திலே இந்த ஒன்பது சுவைகளில் எதேனும் ஒன்று தோன்றும். இரண்டு மூன்று கலந்தும் தோன்றக்கூடும். ரஸ உணர்ச்சியிலே உள்ளத்தை முழுதும் ஈடுபடுத்தக்கூடிய சிலர் கவிதை, பாட்டு, சித்திரம் முதலிய தெய்வக் கலைகளிலே சிறப்படைகிறார்கள். ரஸ உணர்ச்சி இல்லாவிடின் இக் கலைகள் நசித்துப்போகும்.

பிறர் துன்பத்தைக் காணும்போது தனது துன்பம்போல் எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும், பிறர் துன்பத்தைக் கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்துக் கவிதை செய்யப் பழகுவாராயின், முந்தியவன் உண்மையான

கவிதை எழுதுவான் ; பிந்தியவன் பதங்களைப் பின்னுவான் ; இவனுடைய தொழிலிலே கவிதை இராது. இப்படியேதான் ஒவ்வொன்றிலும்.

ரஸ ஞான மில்லாதபடி பல்லவிகளும், கீர்த்தனங்களும் பாடுவோர் ஸங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள். இக்காலத்து ஸங்கீத வித்வான்களிலே பலர் 'ஸங்கீதத்திற்கு நவரஸங்களே உயிர்' என்பதை அறியாதவர்.

முத்துசாமி தீக்ஷிதர், தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் முதலியவர்களின் கீர்த்தனங்களிலே சிலவற்றை அதிக ஸங்கதிகளுடன் பாடுவோரே 'முதல்தர வித்வான்கள்'. இந்தக் கீர்த்தனங்களெல்லாம் ஸம்ஸ்கிருதம் அல்லது தெலுங்கு பாஷையில் இருக்கின்றன. ஆகவே, முக்காலே மும்மாகாணி 'வித்வான்'களுக்கு இந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக்களையும் பதங்களையும் கொலை செய்தும், விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவனுக்கு 'ரஸம்' தெரிய நியாயம் இல்லை.

நானும் பிறந்தது முதல் இன்றுவரை பார்த்துக்கொண்டே வருகிறேன். பாட்டுக் கச்சேரி தொடங்குகிறது. வித்வான் 'வாதாபி கணபதியும்' என்று ஆரம்பஞ் செய்கிறார். 'ராமநீ ஸமான மெவரு' 'மரியாத காதுரா' 'வரமு லொஸகி' . . . . . ஐயையோ, ஐயையோ, ஒரே கதை.

எந்த ஜில்லாவுக்குப் போ, எந்தக் கிராமத்திற்குப் போ, எந்த 'வித்வான்' வந்தாலும், இதே கதை தான். தமிழ் நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாய் இருப்பதால், திரும்பத் திரும்பத், திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுக்களை வருஷக் கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தோல்காது உள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

'பூர்வீக மஹான்களுடைய பாட்டுக்களை மறந்துபோய்விட வேண்டும்' என்பது என்னுடைய கக்ஷியன்று. அவற்றை அர்த்தத்துடன் பாட வேண்டும். பதங்களைப் பிழையாக உச்சரிக்கக் கூடாது. பதங்களை வாய் விட்டுத் தெளிவாகச் சொல்லவேண்டும். விழுங்கி விடக்கூடாது. பத்து, முப்பது கீர்த்தனங்களையே ஓயாமற் பாடி ஸங்கீதத்தை ஒரு தொல்லையாகச்செய்து விடக்கூடாது.

புதிய புதிய கீர்த்தனங்களை வெளியே கொண்டுவர வேண்டும். இப்போது ஸங்கீத வித்வான்களிலே தலைமைப் பட்டிருப்போர் தமிழிலே புதிய மெட்டுக்களில் கீர்த்தனங்கள் செய்ய முயலவேண்டும். நவரஸங்களின் தன்மைகளையும், இன்னின்ன ரஸங்கள் உண்டாகும் என்பதையும் கற்றுத் தெரிந்து கொள்ளுதல் அவசியம்.

'பூர்வ காலத்து மஹான்களுக்குத் தெய்வப் பிரஸாத மிருந்தது. எங்களுக்கில்லையே. என்ன செய்வோம்?' என்று புதிய வித்வான்கள் புதிய கீர்த்தனங்கள் அமைப்பதிலே பின்வாங்கக்கூடாது. தெய்வங்கள் இறந்துபோக வில்லை. இப்போதும் அவற்றை உபாஸனை செய்து அவற்றின் அருள் பெறலாம். தெய்வப் பிரஸாதத்தை ஒருவன் பக்தியாலும், ஜீவதயையாலும், நேர்மையாலும், உண்மையாலும், இடைவிடாத உழைப்பினாலும் ஸம்பாதிக்க முடியும்.

"நாட்டிலே ஸங்கீதத்திற்குச் சரியான போஷணை செய்யும் ராஜாக்களும், பிரபுக்களும் இல்லை. எங்களுக்கு ஜீவனமே கஷ்டமாயிருக்கிறது. மனக்கஷ்டம் இல்லாமல் இருந்தாலன்றோ ரஸஞானத்தை வளர்த்துக்கொண்டு போகலாம். சில வருஷங்களுக்குள்ளே சில கீர்த்தனங்களை வரப்படுத்திக் கொண்டு ஜீவனத்திற்கு வழிதேட வேண்டிய ஸ்திதி ஏற்பட்டிருக்கிறது. என்ன செய்யலாம்?" என்று நினைத்து மன முடைந்து போக வேண்டாம்.

இப்போது உலக முழுவதிலுமே ராஜாக்களையும், பிரபுக்களையும் நம்பி வித்தை பழகும் காலம் போய்விட்டது. பொது ஜனங்களை நம்பவேண்டும். இனிமேல் கலைகளுக்கெல்லாம் போஷணையும், ஆதரவும் பொதுஜனங்களிடமிருந்து கிடைக்கும். அவர்களுக்கு உண்மையான அபிருசி உண்டாக்கிக் கொடுப்பது வித்வான்களுடைய கடமை. பிறகு, நல்ல போஷணை கிடைக்கும். ஒரு பிரபு மாதம் ரூபாய் 100 கொடுப்பான். ஊர் சேர்ந்தால் தலைக்குக் கால் ரூபாயாக வசூல் பண்ணி மாதம் 1,000 ரூபாய் கொடுக்கும். ஊரையே யஜமானனாகக் கொள்ளவேண்டும்.

ஊர்தான் ராஜா. இந்த ராஜாவுக்கு ஆரம்பத்திலே கொஞ்சம் ஞானம் அளித்துப் பழக்கங் கொடுத்தால், வித்தைகளுக்கு எவ்விதமான குறைவும் ஏற்படாது. நவரஸங்களும் சேரவேண்டும். கருணா ரசமும் (அதாவது சோக

ரஸமும்), சிருங்கார ரஸமுந்தான் நமது தேசத்தில் நடைபெறுகின்றன. மற்ற வீரம், கோபம் (ரௌத்ரம்), வியப்பு, வெறுப்பு, அச்சம், நகைப்பு, சாந்தம் என்ற ரஸங்களின் விலாஸம் பாட்டிலே காணப்படவில்லை. நல்ல பாட்டுப் பாடினால் நல்ல மதிப்புத் தானாகவே வரும். அதிலிருந்து நல்ல வரும்படி ஏற்படும்.

திருஷ்டாந்தமாக; ஹாஸ்ய ரஸம் தோன்றும்படி ஒரு ராகத்தை விஸ்தரிக்கும்போது அதிலே அர்த்தச் சேர்க்கையில்லா விடத்தும் ஜனங்கள் கடகடவென்று சிரிக்கவேண்டும்.

ரௌத்ர ரஸம் தோன்றும்படிப் பாடினால் அதைக் கேட்கும்போது ஜனங்களுக்கு மீசை துடிக்க வேண்டும், கண்கள் சிவக்கவேண்டும்.

வீர ரஸமுள்ள பாட்டை ஒரு வித்வான் பாடும் போது, ஜனங்களெல்லாம் தம்மை யறியாமல் முதுகு நிமிர்ந்து தலை தூக்கி உட்காரவேண்டும். அவர்கள் விழியிலே வீரப் பார்வை உண்டாகவேண்டும். அப்போதுதான் பாட்டு ஸ‌ஃபலமாகும்.

பொருளிலும், ஓசையிலும் ரஸம் கலக்காத பாட்டு இனி மேல் தமிழ் நாட்டிலேயே வழங்கலாகாது.

முத்துசாமி தீக்ஷிதர், தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் இந்த மூன்று பெயருடைய கீர்த்தனைகளைத்தான் வழக்கத்தில் அதிகமாய்ப் பாடுகிறார்கள். இவற்றுள்ளே தீக்ஷதரின் கீர்த்தனைகள் பச்சை ஸம்ஸ்கிருத பாஷையிலே எழுதப் பட்டவை. இவை கங்கா நதியைப் போலே கம்பீர நடையும் பெருந்தன்மையும் உடையன. வேறு பல நல்ல லக்ஷணங்களும் இருந்த போதிலும் ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதப் பட்டிருப்பதால் இவை நமது நாட்டுப் பொது ஜனங்கள் ரஸானுபாவத்துடன் பாடுவதற்குப் பயன்படமாட்டா.

தியாகையர் தெய்வ வரம் பெற்றவர். தியாகையர் ரஸக் கடல். கர்நாடக ஸங்கீதம் இப்போது உயிர் தரித்திருப்பதற்கு அவரே காரணம். பூர்வ காலத்து ஞானிகளைப்போலவே இவர் இஷ்ட தேவதைக்கு ஆத்ம யக்ஞம் செய்து 'தான்' அற்று வித்தை வடிவாகி விளங்கினர். இவருடைய பாட்டுகளை இக்காலத்துப் பாடகர் அதிக ஸங்கதிகளாலும், ரஸநாசத்தாலும் சொற்களைத் திரித்தல், விழுங்குதல் முதலிய செய்கைகளாலும் இயன்றவரை ஆபாஸமாக்கிவிட்ட போதிலும்

இன்னும் அவற்றிலே பழைய ஒளி நிற்கத்தான் செய்கிறது. குப்பையிலே கிடந்து மாசேறி ஒளி மங்கிப் போயிருந்த போதிலும், மாணிக்கத்தின் குணம் ரத்னப் பரீட்சைக் காரனுக்குத் தெரியாதா? அது போலவே, ரஸ உண்மை தெரிந்தோர் இத்தனை குழப்பத்துக்கிடையே தியாகையருடைய தொழிலின் ஸ்வரூபத்தை நன்கு கண்டுபிடித்துக் கொள்ள முடியும். கீர்த்தனத்தில் ராக தாளங்களை இசைத்திருக்கிற மாதிரியிலேயே அர்த்தம் தொனிக்கவேண்டும். அதைத் தான் ரஸச் சேர்க்கை என்று சொல்லுகிறோம். இதிலே தியா கையர் மிகவும் சிறப்புக் கொண்டவர்.

திருஷ்டாந்தமாக: 'சக்கனி ராஜமார்க்கமு', என்ற கீர்த்த னத்தை எடுத்துக்கொள்ளுவோம். அதிக ஸங்கதிகளும், பின்னல்களும் இல்லாமல் இதன் பல்லவியைச் சுத்தமாகப் பாடிப் பாருங்கள். நல்ல 'ராஜ மார்க்கம் இருக்கும்போது சந்துகளில் என் சுற்றுகிறாய், மனதே?' என்ற அர்த்தம் இந்த இசையிலே அகப்படும்.

'மாருபல்க குன்னுவேமி' (என் மறுமொழி சொல்லாமல் இருக்கிறாய்?) என்ற கீர்த்தனத்தின் பல்லவியைப் பாடிப் பாருங்கள். அந்த அர்த்தம் இசையிலே தொனிக்கும்.

'நன்னுப்ரோவ நீகிந்த தாமஸமா' (என்னைக்காக்க உனக்கு இத்தனை தாமஸமா?) என்ற பல்லவி எடுத்தவுடனேயே அர்த் தம் பளீரென்று வீசும்.

இப்படியே எல்லாக் கீர்த்தனங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மாதிரி ஏற்படுத்தவேண்டும் என்று தியாகையர் சிரமப் பட்டு வேலை செய்யவில்லை. நெஞ்சிலே உண்மையிருந்தால் ஸங்கீதம் இயற்கையிலே இவ்விதமாகப் பிறக்கும்.

பிற்காலத்தில், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் முதலிய வர்களின் பாட்டிலே இந்த லஷணம் இல்லை. 'வரமுலொஸகி' என்ற பாட்டை எடுத்தீர்களானால், இசைக்கும் பொரு ளுக்கும் ஸம்பந்தமே இல்லை என்பது விளங்கும். சொற்கள் வரங்கொடுத்துக் காப்பது உனக்கு அரிதா? என்று கேட் கின்றன. இசை சண்டைத் தாளம் போடுகிறது. இது நிற்க.

வித்வான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிப் புராதன வழிகளைப் தெரிந்துகொள்ளுதல் அவசியம். ஆனால் தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிறபாஷைகளில் பழம் பாட்டுகளை மீட்டும் மீட்டும் சொல்லுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி ஸங்கீத ஞானத்தைப்போக்கும்படி நேரிடும்.

'மேலும் பாட்டுக்குத் தாளமே யொழிய தாளத்திற்குப் பாட்டில்லை' என்ற விஷயத்தைப் பார்ப்போர் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். சிலவிதக் கூத்துகளிலே, தாளத்திற்குப் பாட்டுப்பாடுதல் பொருத்தம். அங்கே கூட, முழுதும் தாள நயத்தையே கருதி இசை நயத்தை நாசம் செய்யக்கூடாது. அப்படியிருக்க, 'பாட்டுக்கச்சேரி' என்று பெயர் வைத்துக் கொண்டு அங்கே இசையின்பங்களைக் கொன்று தாள முழக்கத்தைப் பிரதானமாக்குதல் தகாது. அதிலும் கீர்த்தனங்களைப் பாடும்போது இசையின்பங்களைக் காட்டுதல் முதற் காரியமாகவும், தாளத்தை உபகரணமாகவும் கொள்ள வேண்டும்.

சுமார் 12 வருஷங்களுக்கு முன்பு நான் இரண்டு மூன்று வருஷம் ஸ்ரீ காசியில் வாஸஞ் செய்தேன். அங்கே, பாட்டுக் கச்சேரி செய்யவரும் ஆண்களுக்கெல்லாம் நேர்த்தியான வெண்கலக் குரல் இருந்தது. பெண்களுக்கெல்லாம் தங்கக் குரல். அங்கிருந்து தென்னாட்டிற்கு வந்தேன். இங்கே ஓரிரண்டு பேரைத் தவிர மற்றப்படி பொதுவாக வித்வான்களுக்கெல்லாம் தொண்டை சீர்க் கெட்டிருப்பதைப் பார்க்கும் போது, எனக்கு மிகவும் வியப்புண்டாயிற்று. ஒன்றுபோல எல்லோருக்கும் இப்படித் தொண்டை வலிமை குறைந்தும், நயங் குறைந்தும் இருப்பதன் காரணமென்ன? இதைப்பற்றிச் சில வித்வான்களிடம் கேட்டேன். "வடநாட்டில் சர்க்கரை, பால், ரொட்டி, நெய், சாப்பிடுகிறார்கள். புளியும், மிளகாயும் சேர்ப்பதில்லை. இங்கே புளி மிளகாய் வைத்துத் தீட்டுகிறோம், அதனாலே தான் தொண்டை கெட்டுப்போகிறது" என்றனர். பின்னிட்டு நான் யோசனை செய்து பார்த்ததில், மேற்படி காரணம் ஒரு சிறிது வாஸ்தவம்தான் என்று தெரிந்து கொண்டேன். ஆனால் அதுவே முழுக்காரணம் அன்று. நம்மவர் தொண்டையை நேரே பழக்குவதில்லை. காட்டு வெளிகளிலே போய், கர்ஜனை செய்யவேண்டும். நதி தீரங்கள்,

வரிக்கரை, கடற்கரைகளிலே போய்த் தொண்டையைப் பழக்கவேண்டும். சாஸ்திரப்படி ஆஹார ஸாதனம் செய்யும் வழக்கம் தென்னாட்டிலே குறைவுபட்டிருக்கிறது.

தவிரவும், உள்ளத்திலே வீரம் இருக்கவேண்டும். உள்ளத்திலே ஸத்து இல்லாதவர்களுக்கு ஒரு தொழிலும் நேரே வராது. கலைகள் நேர்ப்படுவதைப்பற்றிப் பேச வேண்டியதில்லை. உள்ளத்திலே தைர்யம், சந்தோஷம், வலிமை முதலிய சுப லக்ஷணங்கள் தமிழரைக் காட்டிலும் வடநாட்டு ஜனங்களிடம் சிறிது அதிகமாகத் தோன்றுகின்றன. முன்னெல்லாம் தமிழ் நாட்டிலேதான் இந்தக் குணங்கள் மிகவும் விசேஷமாக விளங்கின. இப்போது சில வருஷங்களாகக் குறைவுபட்டிருக்கின்றன. இந்தக் குணங்களை நமது ஜனங்களெல்லோருமே பயிற்சி செய்து கொள்ளவேண்டும். ஸங்கீத வித்வான்கள் இவற்றைப் பழக்கப்படுத்தினால்தான், அவர்கள் கண்டத்தில் உவகையும் வீரமும் பிறக்கும் ; பாட்டிலே களையுண்டாகும்.

தமிழ் நாட்டு வித்வான்களுடைய ஸங்கீதத்தைப்பற்றி மேலே எழுதினேன். மற்றச் சாதாரண ஜனங்கள் பாடும் பாட்டைப்பற்றிக் கொஞ்சம் ஆராய்ச்சிசெய்ய விரும்புகிறேன். இந்தப் புதிய பகுதி தொடங்குமுன் மேற்படி ஸங்கீத வித்வான்களிடம் உள்ள நன்மையையும் சொல்லவேண்டாமா? பெயர்கள் குறிப்பிடாததுபற்றி மன்னிப்பு வேண்டுகிறேன். கன்னியாகுமாரி முதல் சென்னை வரை தமிழ் நாட்டில் உள்ள ஜில்லாக்களிலே ஒவ்வொன்றிலும் இக்காலத்தில் கருவிகளிலும், வாய்ப் பாட்டிலும் புகழ்பெற்ற வித்வான்கள் பலர் இருக்கின்றனர்.

காலத்தின் சீர் கேட்டாலும், ஸம்ப்ரதாய பங்கத்தினாலும் நவரஸங்களுக்கும், பாட்டுக்கும் உள்ள தொடர்பை மறந்துவிட்ட போதிலும், இவர்களிலே சிலர் (ஆணும், பெண்ணும்) ஸரஸ்வதி கடாக்ஷத்தினால் தம்மை அறியாமலே அற்புதமான வேலை செய்கிறார்கள். சில சமயங்களில் ஓரிரண்டு ரஸங்களைத் தெரிந்தே பாட்டில் இசைக்கிறார்கள். அப்போது இவர்களுடைய பாட்டு அல்லது வாத்தியம் மிகவும் உயர்ந்த நிலையடைகிறது. ஸமீப காலத்திலே இறந்து போன மஹா வைத்யநாதய்யர், புல்லாங்குழல் சரப சாஸ்திரி முதலிய மஹான்களுக்கு இப்போது தக்க பின் காப்பாளர் இல்லாமற் போகவில்லை.

ஆனால், இவர்கள் நான் முன்னிரண்டு பகுதிகளில் குறிப்பிட்ட செய்திகளையும் தயவு செய்து கவனிக்கும் பக்ஷத்தில் தமிழ் நாட்டுக்கு இவர்கள் செய்து வரும் உபகாரம் பல மடங்கு அதிகப்படுமென்பதும் அப்படி அதிகப்படவேண்டுமென்பதும் என்னுடைய கருத்து ; அதைத் தெரிவித்துக் கொண்டேன்.

இனி சாஸ்திரோக்தமாகப் பாடும் வித்வான்கள் அல்லாமல், ஸாமான்யமாகப் பாடும் பொது ஜனங்களுடைய செய்தியைப் பார்ப்போம்.

முதலாவது, நமது குடும்ப ஸ்திரீகளின் பாட்டையெடுத்துக் கொள்வோம். கல்யாணப் பாட்டுகள், கும்மிப் பாட்டுகள் முதலியவற்றுடன் நமது பெண்கள் “ கீர்த்தனை ” வகைகளும் கொஞ்சம் பாடுகிறார்கள். இதில், ஒரு சில பெண்கள் நல்ல லக்ஷணத்துடன் பாடுகிறார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஆனால், பெரும்பான்மையோர் ஸங்கீத லக்ஷணமே தெரியாமல் தவறாகப் பாடுகிறார்கள். பெரும்பான்மையோருக்குத் தொண்டை நன்றாகப் பழகவில்லை. பெரும்பான்மையோருக்குப் படிப்பு மிகவும் குறைவாகவும், சூனியமாகவும் இருப்பதால் இவர்கள் பாடும் பாட்டுக்களிலே சொற் பிழையும், பொருட் பிழையும் மொய்த்துக் கிடக்கின்றன. அதிலும் இவர்கள் தீக்ஷிதர் தியாகையர் முதலியவர்களின் கீர்த்தனங்கள் பாடும்போது தாளம், சுருதி ஒன்றையும் கவனிக்காமல் பதங்களைச் சூறையாடி மிகவும் விகாரப்படுத்தி விடுகிறார்கள். ஆனாலும். தமிழ் நாட்டு ஸ்திரிகளின் ஸங்கீதத்தை நாம் புகழாதிருக்கலாகாது. இவர்கள் பாடும் பாட்டிலே பெரும்பான்மைக் கீர்த்தனங்களும், பத்யங்களும், தெலுங்கில் இருந்தபோதிலும், தமிழ்ப் பாட்டுத்தான் அதிகமாகப்பாடுகிறார்கள். இந்தத் தமிழ்ப் பாட்டிலே பல பிழைகள் மலிந்து கிடந்தாலும், ஒரு சில பாட்டுக்கள் மிகவும் நன்றாக அமைந்திருக்கின்றன. ‘ ஓடம் ’ முதலியவற்றில் அதிஸமீப காலத்துப் பாட்டுக்கள் மிகவும் விகாரமாயிருந்தாலும், பழைய காலத்துப் பாட்டுக்களிலே சொல் நயம் அதிகம் இருக்கிறது. பின்னிட்டு “ ரயில் வண்டி ஓடம் ” முதலிய அசுத்தங்கள் அதிகமாய்ச் சேர்ந்துவிட்டன. இங்கிலீஷ் படித்த புருஷர்கள் கேட்டு மடத்தனமாகச் சந்தோஷப்பட்டதிலிருந்து பெண்களுக்கு இந்த மாதிரி விரஸங்களிலே பற்றுதல் உண்டாயிற்று.

கும்மிப்பாட்டு, பல்லிப்பாட்டு, கிளிப்பாட்டு, நலங்குப்பாட்டு, பள்ளியறைப்பாட்டு, அம்மானைப் பாட்டு, தாலாட்டுப் பாட்டு முதலிய பெண்களுடைய பாட்டெல்லாம் மிகவும் இன்பமான வர்ணமெட்டு. தமிழர்களின் தாய், அக்காள், தங்கை, காதலி முதலிய இவர்கள் பாடும் பாட்டு மறக்கக்கூடிய இன்பமா ? ஞாபகம் இல்லையா ?

தமிழ்ப் பெண்களின் பாட்டைக் கையெடுத்து வணங்குகிறோம். ஆனால் அதில் ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தங்கள் பல இருக்கின்றன.

---

## 3

### தாள ஞானம்

நமது குடும்ப ஸ்திரீகளின் பாட்டிலே முக்கியமான குறை என்னவென்றால் இவர்களிலே பெரும்பாலோருக்குத் தாள ஞானமில்லை.

பெண்களுக்குத் தாளஞானம் ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் சிரமமென்றும் இயற்கையிலே அவர்களுக்கு "லய வுணர்ச்சி" கொஞ்சம் குறைவென்றும் சிலர் தப்பாக நினைக்கிறார்கள். பெண்கள் குதித்துப் பாடும்போது பாருங்கள் 'டணீர், டணீர்' என்று எப்படித் தாளம் விழுகிறது. நமது பெண்கள் கீர்த்தனங்கள் முதலியவற்றைத் தாளமில்லாமற் பாடுவதற்குக் காரணம் பயிற்சிக் குறைவே யல்லாது வேறொன்றுமில்லை. அவர்களுக்கு நாம் சரியானபடி பாட்டுக் கற்றுக்கொடுப்பதில்லை.

"தாவலிகளா ? கச்சேரி நடத்தப் போகிறார்களா ? தாளம் தவறாமற்பாடி என்ன ஆகவேண்டும் ?" என்று சிலர் பேசுவதுண்டு. தாளம் தவறிப் பாடினால் காதுக்கு விரஸமாக இருக்கும். ஜனங்களுக்குப் பிரிய முண்டாகாது. வீட்டிலும் அதே காரணந்தான். எனது மகள் பிழையாகப் பாடினால், பக்கத்தில் இருந்து கேட்கும் எனது காதுக்கு சுகப்படாது. அவளுக்கும் பாட்டில் நல்ல ருசி ஏற்படாது.

பெண்கள் பாடவே கூடாதென்று ஒரேயடியாக நிறுத்தி விட்டீர்களானால் ஒரு தொல்லையுமில்லை. பிறகு உலக வாழ்வுமில்லை. கல்யாணப்பாட்டுக்களும், தாலாட்டுப் பாட்டுக் களும், காதற் பாட்டுக்களும் நின்று போனால், பிறகு சுடுகாடு தான் மிச்சமிருக்கும். அப்படி நிறுத்த வேண்டுமென்று

ளவனும் விரும்பமாட்டான். ஆண்களைப் போலவே பெண்க ளும் எப்போதும் பாடத்தான் செய்வார்கள். ஆணைக் காட்டிலும் பெண்ணுக்கு ஸங்கீதத்திலே அதிகத் தொடர்பு உண்டு. “ செய்வன திருந்தச் செய் ”. பாட்டுப்பாட விரும்பு வோர் நல்ல பாட்டிற் பழக வேண்டும். பாட்டுக்கேட்க வழி தேடவேண்டும். பாட்டினால் மகிழ்ச்சி உண்டாகிறது ; லக்ஷ்மீ கடாக்ஷம் ஏற்படுகிறது ; உபசாந்தி பிறக்கிறது.

## ஹார்மோனியம்

தமிழ்நாட்டு மாதர்களுக்குள்ளே நல்ல பாட்டு வளர்ச்சி பெறவேண்டும் என்பது என்னுடைய விருப்பம். ஆனால், அதற்கு ஹார்மோனியப்பெட்டி ஒரு விக்கினமாக வந்து சேர்ந்திருக்கிறது. இந்தப் பெட்டி நமது நாட்டிலே பழகுவதி னால் ஸங்கீதத்திற்குப் பலவிதமான தீங்கு உண்டாவதாக வித்வான்களிலே பெரும்பாலோர் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் அதை நிறுத்துவதற்கு யாரும் வழி தேடவில்லை. நமது ஸங்கீதத்திலுள்ள சுருள்கள் வீழ்ச்சிகள் முதலிய வற்றை ஹார்மோனியத்தில் காட்டமுடியாது. ஆதலால், அந்த வாத்தியத்தில் அதிகம் பழக்க முடையோரிடம் நமது ஸங்கீதத்தில் உள்ள விசேஷ நயங்கள் மங்கிப் போகின்றன. இதையெல்லாங் காட்டிலும், அந்தப் பெட்டி போடுகிற பெருங் கூச்சல்தான் என் காதுக்குப் பெரிய கஷ்டமாகத்தோன்றுகிறது.

மேலும், ஸங்கீதத்திலே கொஞ்சமேனும் பழக்கமில்லாத வர்களுக்கெல்லாம் இந்தக் கருவியைக் கண்டவுடனே “ ஷோக் ” பிறந்து விடுகிறது. சத்த முண்டாக்குவதற்கு நல்ல துருத்தி கைக்கு ஒத்ததாகப் பின்னே வைத்திருக்கிறது. ஒரு கட்டையை உள்ளே அழுத்தி, முன் பக்கத்துச் சாவிகளை இழுத்துவிட்டு, துருத்தியை அசைத்தால், “ ஹோ ” என்ற சத்த முண்டாகிறது. உடனே பாமரனுக்கு மிகுந்த சந்தோஷ முண்டாகிறது. ‘ நாம் அல்லவா இந்த இசையை யுண்டாக்கி னோம் ? ’ என்று நினைத்துக் கொள்கிறான். உடனே வெள்ளைக் கட்டைகளையும் கருப்புக் கட்டைகளையும் இரண்டு தட்டுத்தட்டுகிறான். பேஷான தொனிகள் ! மேலான தொனி கள் ! பாமரன் பூரித்துபோகிறான். முதல்நாள், முதல் தடவை, தொட்ட மாத்திரத்திலே இவ்வளவு கோலாஹலம் உண்டா கிறது. பிறகு ஸரளி, அலங்காரம், பிள்ளையார் கீதம், சங்கரா பரண வர்ணம், ‘ பவநுத ’ கீர்த்தனம் இத்தனையும், ஹார் மோனியத்தில் மூன்று மாதத்திற்குள் பழக்கமாய் விடுகிறது. பாமரனின் மனதிலே “ நாம் ஒரு வித்வான் ” என்ற ஞாபகம்

உறுதியாகப் பதிந்து விடுகிறது. ராக விஸ்தாரங்களைத் தொடங்கி விடுகிறான். ஒரு வீட்டில் "ஹார்மோனியம்" வாசித்தால் பக்கத்திலே ஐம்பது வீட்டுக்குக் கேட்கிறது. அறியாதவன் தனது அறியாமையை வீட்டில் இருந்தபடியே இரண்டு மூன்று வீதிகளுக்குப் பிரசுரம் பண்ணவேண்டுமானால், அதற்கு இந்தக் கருவியைப்போலவே உதவி வேறொன்றுமில்லை. வீணை தவறாக வாசித்தால் வீட்டில் உள்ள ஜனங்களுக்கு மாத்திரந்தான் துன்பம்; ஹார்மோனியம் தெரு முழுவதையும் ஹிம்ஸைப் படுத்திவிடுகிறது. ஒரு தேசத்தாரின் செவியைக் கெடுத்து ஸங்கீத உணர்ச்சி குறையும்படிச் செய்ய வேண்டுமானால், கிராமந்தோறும் "நாலைந்து ஹார்மோனியம்" பரவும்படிச்செய்தால் போதும்.

நாடகக்காரர் வாய்ப்பாட்டுக்குச் சுருதிபோடும் பொருட்டு இதை வைத்துக் கொள்ளுதல் ஒரு வேளை பொருந்தும். ஸாமான்ய ஜனங்கள் இதைச் சுருதிக்கு வைத்துக் கொள்வதனால் பல தீங்குகள் உண்டாகின்றன. இத் தீங்குகள் யாவை என்பதையும் நமது நாட்டுக்குப் பொருத்தமான வாத்தியங்கள் எவை என்பதையும் பெண்கள் பாட்டை நேராக்குவதற்கு இன்னும் என்ன வழிகள் தேடவேண்டுமென்பதையும் ஆராய்ச்சி செய்வோம்.

### தம்பூர்

நாடகக்காரர் தவிர மற்ற ஸாமான்ய ஜனங்கள் வீடுகளிலும் பஜனைக் கூடங்களிலும் பாடும்போது தம்பூர் சுருதி வைத்துக் கொள்ளுவதே பொருந்தும். ஹார்மோனியம் பேரிரைச்சல் போடுவதிலே பாட்டின் சத்தம் கணீரென்று கேட்பதில்லை. பாட்டுக் கீழாகவும் சுருதி மேலாகவும் நிற்கிறது. அஸாதாரணமான உச்ச சாரீரமுடைய சிலர் மாத்திரமே ஹார்மோனியத்தின் சுருதிக்கு மேலே பாடக் கூடும்; பொதுப்படையாகச் சாத்தியமில்லை. பாட்டுக்கு உதவியாகச் சுருதி ஒலிக்கவேண்டும். பாட்டை விழுங்கும் சுருதி பிரயோஜனமில்லை. அது வெறும் மடமை.

### வீணை

வாத்தியம் படிக்கவிரும்பும் ஸ்திரீகள் வீணை பழக வேண்டும். வீணை ஆரம்பத்திலே கொஞ்சம் சிரமம். போகப் போக ஸுலபமாய் விடும். இந்தக் கருவியிலே தேர்ச்சியேற்பட்டால் அது தான் வாஸ்தவமான சங்கீதத் தேர்ச்சியாகும். பெண்கள் வீணை வாசிப்பதனால், நாட்டிலே ரஸப்பயிற்சியும்

வாழ்க்கை நயமும் உண்டாகும். மைசூரிலும் மலையாளத்திலும் பழகியவர்களுக்குப் பெண்கள் வீணை கற்றுக் கொள்ளுதல் சிரமமில்லை என்பது தெரியும். வீணை பழகினால் அதிலேயே நல்ல தாள ஞானம் உண்டாய்விடும். வீணை மனிதர் குரல் போலவே பேசும். இன்பச் சுருள்களுக்கும் பின்னல்களுக்கும் வீணை மிகவும் பொருத்தமானது. அதன் ஒலி சாந்திமயமானது. ஸரஸ்வதி தனது கையில் வீணையைத் தரித்துக் கொண்டிருக்கிறாள். காளிதாஸ கவி பராசக்தியைப் பாடும்போது "மாணிக்ய வீணாம் உபலாலயந்தீம்" என்று தொடங்குகிறார்.

## பொய்த் தொண்டை

ஆணாயினும் பெண்ணாயினும் கள்ளத் தொண்டை வைத்துக்கொண்டு பாடலாகாது. தொண்டையைத் திறந்து பாடினால் தான் சுகமுண்டாகும். இயற்கையிலே ஆணுக்குக் கனமான குரலும் பெண்ணுக்கு ஸன்னமான குரலும் ஏற்பட்டிருக்கின்றன. பெண்களிலே சிலர் இயற்கை ஸன்னத்தை அதிக ஸன்னப்படுத்த வேண்டுமென்று கருதிக் கள்ளத் தொண்டையிற் பாடுகிறார்கள், வேறு சிலர் லஜ்ஜையினாலே கள்ளத் தொண்டைக்கு வந்து சேருகிறார்கள். இதுவும் தவறேயாம். தொண்டையைத் திறந்து தெளிவாகப் பாடுவதிலே லஜ்ஜைப்பட யாதொரு நியாயமுமில்லை.

---

## 4

## சங்கீத விஷயம்

பொதுப் பள்ளிக்கூடத்தில் சங்கீதம் கற்றுக்கொடுக்க வேண்டும். இது மற்ற நாகரிக தேசங்களில் சாதாரணமாக நடந்து வருகிறது. உயிரிலே பாதி சங்கீதம். சாஸ்திரத்தை யாருமே பேணாமலிருந்தால் பாடகர்கூட அதைக் கைவிட்டு விடுவார்கள். ஆதலால் சுதேசமித்திரன் (விசேஷ அனுபந்தம்) பத்திரிகையில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் ஸங்கீதம் சீர்திருந்த வேண்டுமென்ற கருத்துடன் எழுதிய லிகிதத்தைப் படித்தபோது எனக்குச் சந்தோஷமுண்டாயிற்று.

இங்கிலீஷ் பாஷையிலே ஒரு பெரிய கவிராயன் ஸங்கீத ஞானமில்லாதவரைக் கள்ளரென்றும் குறும்பரென்றும் சொல்லிப் பழிக்கிருன். பாட்டு சகலருக்கும் நல்லது. தொண்டையும் எல்லோருக்கும் நல்ல தொண்டைதானென்பது என் மதம். கூச்சத்தாலும் பழக்கக் குறைவாலும் பலர் தமக்கு நல்ல குரல் இடையாதென்று வீணே நினைத்துக் கொள்கிருர்கள்.

பாட்டுக் கற்க விரும்புவோர் காலையில் சூரியனுக்கு முந்தியே எழுந்து பச்சைத் தண்ணீரிலே குளித்துவிட்டுக் கூடியவரை சுருதியும் லயமும் தவருதபடி ஸரளி வரிசை முதலியன பழகவேண்டும். உச்ச ஸ்தாயிதான் எப்போதும் நல்லது. உடம்பை நிமிர்த்து முகத்தை நேரே நிறுத்தி முகத்திலும் வாயிலும் கோணல் திருகலில்லாதபடி வாயை ஆவென்று சிங்கம் போலே திறந்து பாடவேண்டும். தொண்டையிலே கரகரப்பிருந்தால் வெறு மிளகைத் தின்ன வேண்டும். கற்கண்டு சேர்ப்பது நல்லதில்லை.

பாட்டுக் கச்சேரி நடத்தும்போது, நடுவிலே மற்ற வாத்தியக்காரரை வாசிக்கச் சொல்லிவிட்டுப் பாடகர் வெறுமே இருப்பதும், தெம்மாங்கு முதலான வேடிக்கைப் பாட்டுகள் பாடுவதும் தமக்கு ரஸப்படவில்லையென்று ஸ்ரீநிவாசய்யங்கார் சொல்லுகிருர். அதை நான் ஒரு பகுதி ஆக்ஷேபிக்கிறேன். வீணை குழல் முதலிய இசைக் கருவிகளும், மத்தளம் முதலிய தாளக் கருவிகளும் வாய்ப்பாட்டின் உதவியில்லாமல் தனியே இன்பந்தருகின்றன.

வாத்யம், எட்டாத ஸ்வரத்தைத் தொடப்போய்க் கஷ்டப்படாது. தொண்டையிலே கரகரப்பும், அடைப்பும் இருக்கும் போது கச்சேரி நடத்த வராது. சரியானபடி சுருதி சேர்ந்த பிறகு தான் தொழில் செய்யத் தொடங்கும்.

வீணையும் குழலும் பறையும் வாய்ப்பாட்டில்லாமல் தனியே ஒலிப்பது பழைய நாளிலும் உண்டு. கண்ணன் குழலுக்கு இடைப்பெண் ஒத்துப் பாடியதுமுண்டு. எம்பெருமான் தனியே இசைப்பதுமுண்டு. தெம்மாங்கு முதலியன ஹாஸ்ய ரசத்தை உடையவை. அவற்றை முழுதும் நிறுத்தி விடக்கூடாது. ஆனல் ஒரு மெட்டை வளைத்து வளைத்துப் போன இடமெல்லாம் சொல்லிப் பயனில்லை. தமிழ்ப் பிழையாகவும் பொருள் ரஸமில்லாமலும் பாட்டுக்கள் இருந்தால் அவற்றை மனதிலே கொண்டு வருதல் நியாயமில்லை.

இருந்தாலும் மத்தளக்காரனுக்குப் பாட்டுக்காரன் பயந்து கட்டுப்பட்டு நடக்கும் விபரீதம் சில இடங்களிலே காணப் படுவதைக் கண்டனை செய்து ஸ்ரீநிவாஸய்யங்கார் சொல்லும் வார்த்தை ஒப்புக் கொள்ளத்தக்கது.

ஏனென்றால் பாட்டுக்காரன் தனதுபாட்டுகளுக்குத் தவறாமல் தாளம் போட்டு வரவேண்டும். இவ்வளவு தாள ஞானம் இருந்தால பாடகனுக்குப் போதும். அதிகமிருந் தால் மிச்சம். இந்த விஷயம் தெரியாமல் மத்தளக்கார னுக்குப் பாட்டுக்காரன் பயப்படுவது மிகவும் வேடிக்கை. ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸய்யங்கார் ராகப் பழக்கம், வர்ணங்கள், கீர்த்தனங்கள் முதலிய விஷயங்களைப் பற்றி எழுதியிருப்ப தெல்லாம் (பெரும்பகுதி) கேட்டவுடன் நியாயமென்று கொள்ளத்தக்கது. கீர்த்தனங்கள் பழகுவது மாத்திரம் அவரவரிஷ்டப்படி போகவேண்டும். எது எப்படியாயினும் யாராவதொரு வித்வான் இந்தத் தமிழ்நாட்டுக்குப் புதிய கீர்த்தனங்கள் ஏற்படுத்தும் வழிகாட்டிக் கொடுத்தால், ஆயிரம் பேர் அதைப் பின்பற்றி மேன்மை பெறுவார்கள்.

---

## 5

## அபிநயம்

### கூத்தில் அபிநயமே பிரதானம்

தாள விஸ்தாரங்களைக் கூத்தன் தனது உடம்பிலே தோற்று விப்பதே கூத்தின் உடல். அபிநயமே கூத்தின் உயிர். தாளந் தவறாமல் ஆடிவிட்டால் அது கூத்தாகாது.

தற்காலத்தில் சில பாகவதர்கள் கதாகால க்ஷேபங் களில் இடையே கொஞ்சம் கூத்தாடிக் காட்டுகிறார்கள். இதற்குச் சிலர், "பட்டணம் கிருஷ்ண பாகவதரின் வழி" என்று பெயர் சொல்லுகிறார்கள். 'இந்தக் கூத்து வெறுமே தாள விஸ்தாரமாகக் குதிப்பது மாத்திரமே யல்லாமல், யதார்த்த நாட்டியமென்று பிறர் நினைக்கவேண்டும்' என்று உத்தேசித்தே அந்தப் பாகவதர்கள் அப்படிச் செய்கிறார்கள்.

பாகவதர் ஒருவர் வேதபுரத்தில் நந்தனுர் சரித்திரம் நடத்தினுர். நந்தன் அடிமை, ஐயர் ஆண்டை. ஐயருக்கு முன்னே நந்தன் போய் நிற்கிறுன். "நைச்ய" பாவம் என்றது நைச்யத்தோற்றம்: நைச்யம் என்பது நீசன் என்ற சொல்லடியாகத் தோன்றி நீசத்தன்மை என்று பொருள் படும் குணப் பெயர். இங்கு நீசன் என்பது அடிமை. எனவே, நைச்ய பாவ மென்றுல் அடிமைத் தோற்றம். இதை, அந்தப் பாகவதர் பல அபிநயங்களினுற் காட்டினுர். நிரம்ப நேர்த்தியான வேலை செய்தார். புருவத்தை அசைக்கிற மாதிரிகளும், மெல்ல மெல்லப் பாகவதருடைய அபிநயங்கள் பக்தி ரஸத்திலிருந்து சிருங்கார ரஸத்தின் தோரணைகளுக்கு வந்து சேர்ந்தன. மேற்படிச் சிருங்காரத்தின் அபிநயங்களிலேயும் மேற்படி பாகவதர் குற்றமில்லை, புருவம், கடைக்கண் முதலியவற்றை மிகத் திறமையுடன் வெட்டுகிறுர். சிருங்கார ரஸத்திற்கு, 'பாவம் ரதி; சந்திரன், சந்தனம் முதலியன உத்தீபனங்கள் அல்லது தூண்டுதல்கள்' என்றும் சாஸ்திரம் சொல்லுகிறது. மேற்படி பாகவதர் சந்திரன் முதலியவற்றைக் கண்ணுலே குறிப்பிடுகிறுர்.

ஆனுல் இவர் புருஷராக இருந்தும் புருஷாபிநயங்கள் குறைவாகவும், நாயிகாபிநயங்கள் அதிகமாகவும் கற்றிருக்கிறவிநதை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நைச்ய பாவத்திலே, அதாவது அடிமைத் தோற்றம் காட்டுவதிலேகூட, இவர் இந்தப் பெண்மையைக் கலப்பதினுல் அதிக மிசிரம் ஏற்படுகிறது. ஆண்டையின் முன்னே வந்து நிற்கும் நந்தன் பறையன் பாதியும் தாஸி பாதியுமாகக் காட்டுகிறுர்.

இருந்தாலும், பாகவதருடைய முகத்தில் காட்டும் அபிநயங்களைப் புகழ்ந்து சொல்லுதல் நம்முடைய கடமை. ஊடலை மாத்திரம் முகத்தில் தொண்ணூற்றென்பது அபிநயங்களிற் காட்டுகிறுர். இப்படி மற்ற வகுப்புக்களையும் சேர்த்தால் எத்தனைவித அபிநயங்களாகும்? நிறைய ஆகும் அல்லவா? கருணு ரஸத்தின் பாவம் சோகம் என்று சொல்லப்படும். இதைக் காட்டுவதில் மேற்படி பாகவதருக்குத் தோடாப் பண்ணிப்போடத் தகும். இன்னும் ஒன்று, கடைசி. அதிலே தான் அந்தப் பாகவதர் முதல்தரமான வேலை செய்கிறுர். அதாவது, பயாநகத்தைப் பதினுயிரம் அபிநயங்களிற்

காட்டுகிறார். இந்த ரஸத்திற்கும் பாவம் பயம். மானுக்கும், முயலுக்கும் சில மனுஷ்யருக்கும் இயற்கையாகவுள்ள பயத்தை இவர் அபிநயத்தில் பூதக் கண்ணாடி போலக் காட்டுகிறார். இந்தப் பாகவதர் சில தினங்களின் முன்பு என்னைப் பார்க்க வந்தார். "ஹாஸ்ய ரஸம், ரௌத்ர ரஸம், வீரரஸம், அற்புதம், சாந்தம் என்ற ஐந்து ரஸங்களையும் நீங்கள் தீண்டவேயில்லை. அதன் காரணம்?" என்று கேட்டேன். அந்தப் பாகவதர் சொல்லுகிறார்:—"நான் என்ன செய்வேன்?" நான் நாட்டிய சாஸ்திரம் படித்தது கிடையாது. ஊரிலே கண்ட அபிநயங்களை நான் நடித்துக் காட்டுகிறேன். ஹிந்துக்களிலே அடிமைத்தனம் அதிகம். ஆதலால், எனக்கு "நைச்ய பாவம்" என்ற அடிமைத் தோற்றம் காட்டுதல் மிகவும் ஸுலபமாக வருகிறது. வீர ரஸம். காட்டச் சொன்னால் எப்படிக் காட்டுவேன்? நான் பிறந்தது முதலாக இன்றுவரை ஸஞ்சாரம் செய்து வந்திருக்கிற எழெட்டு ஜில்லாக்களில் ஒரு வீரனைக் கூடப் பார்த்ததில்லை. வீர ரஸத்திற்கு நான் "ரஸ பண்டாரம்" என்ற ஸம்ஸ்க்ருத சாஸ்திரத்திலிருந்து பின் வரும் பொருளுடைய சுலோகங்களை அவருக்குப் படித்துக் காட்டினேன். அந்த நூல் சொல்லுகிறது:—

"லோக நடையினாலே சாஸ்திரம் பிறக்கிறது." அந்தச் சாஸ்திரத்தைப் பயிற்சியினாலே விஸ்தாரப் படுத்துகிறார்கள். ரஸவான்களுடைய பழக்கத்தாலும் பக்தி வழிகளை அனுசரிப்பதனாலும் ஒருவன் ரஸக்காட்சியை வருவித்துக்கொள்ளலாம்.

"ராகத் துவேஷங்களை ஜயிப்பதனாலே ஒருவன் சித்த சமாதியடைகிறான். அப்போது ஞானதிருஷ்டி யுண்டாகிறது. அந்த ஞானதிருஷ்டியுடையவர்கள் புறப்பயிற்சியில்லாமலே சாஸ்திரங்களுக்குக் கண்ணாடிபோல் விளங்குவார்கள்.

சிங்கார ரஸத்தை ஒரு கூத்தன் காண்பிக்கும் அபிநயங்களில் கூத்துப் பெண்ணுடைய அபிநயங்கள் கலக்கலாகாது. ஆண் மகனே பெண்ணுருக்கொண்டு கூத்தாடுவானாயின், அப்போது பெண்மை யபிநயங்கள் காண்பிக்கத் தகும். ஆண் மகன் உரு மாறாமல் கூத்தாடும்போது பெண்மை தோன்றலாகாது.

"வீர ரஸத்தில் ஒருவன் தேர்ச்சியடைய விரும்புவானாயின், ராமன் முதலிய அவதார புருஷர்களுடைய வடிவை அவன்

தியானம் செய்யக் கடவான்.” நரநாராயண உபாஸனேயே கூத்தனுக்கு வீர ரஸத்தில் தேர்ச்சி கொடுக்கும்.

“பயாநக ரஸத்தை ஸபையிலே கூத்தன் அதிகமாக விவரிக்கலாகாது. எந்த நாட்டிலே கூத்தர் பயாநகத்தையும் சோகத்தையும் அதிகமாகக் காட்டுகிருர்களோ, அந்த நாட்டில் பயமும் துயரமும் அதிகப்படும்.

“நைச்ய பாவம் அதிகமாகத் தோன்றும் கூத்திஞலே, ஒரு நாட்டார் அடிமை இயற்கை மிகுதியாக உடையவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஆதலால், கூத்தர் கூத்துகளில் அடிமைத் தோற்றத்தை மிதமிஞ்சிக் காட்டாத படி நாட்டார் கவனித்துக் கொள்ளவேண்டும்.

“நாட்டிய சாஸ்திரத்தை உண்மையாகப் பயின்ருல், அதிலிருந்து ஆண்களுக்கு ஆண்மையும், பெண்களுக்குப் பெண்மையும் உண்டாகும்.” அதை நெறிதவறிப் பயிற்சி செய்தால் அதிலிருந்து ஆணுக்குப் பெண்மையும், பெண்ணுக்கு ஆண்மையும் விகாரமாகத் தோன்றும்.

“நாட்டிய சாஸ்திரத்தை ஆதியிற் பரமசிவன் நந்திக்குக் கொடுத்தார். அப்போது, பகவான் நந்தியை நோக்கி, கேளாய், நந்தீ! அபிநயம் தவறுவதாலே ஜனங்கள் நரகத்தை அடைகிருர்கள். தர்மஷ்டஞகிய கூத்தன் அபிநய உண்மைகளே ஆசார்யனிடமிருந்து நியமங்களுடனே கற்றுக் கொள்ள வேண்டும். அடிமைகள் கூத்துப் பழகிஞல் அபிநய தர்மங்களேச் சிறிதேனும் தெரிந்து கொள்ளாமல் எப்போதும் அடிமைக் கூத்தொன்றே ஆடிக் கொண்டிருப்பார்கள். அங்ஙனம் அடிமைகள் சாஸ்திர விரோதமாக நைச்யம் ஒன்றையே காட்டி நடத்தும் கூத்தைப் பார்ப்போர் நரகத்தை அடைகிருர்கள்” என்று சொல்லி, மேலும் சொல்லுகிருர் :—‘தர்மஷ்டஞகிய சிஷ்யன் நெறிப்படி ஆசார்யனிடமிருந்து கற்றுக்கொண்ட நாட்டியத்தில் நவரஸங்களும் ஸமரஸப்பட்டுக் காண்போருக்கு ஆனந்தத்தையும், லக்ஷ்மீ கடாக்ஷத்தையும் ஏற்படுத்தும். நல்ல ஆசார்யன் இல்லாமல் இந்த நாட்டிய சாஸ்திரத்தைப் பழகுவோனுக்கு உண்மையான பக்தியிஞலே ஸகல வித்தைகளும் வசப்படும்.’

இங்ஙனம் மேற்படி ரஸபண்டாரமென்ற நூலிலிருந்து நான் பல சுலோகங்களே அவருக்குப் படித்துக் காட்டினேன்.

இதையெல்லாம் கேட்டவுடன் அந்தப் பாகவதர் மிகவும் சந்தோஷ மடைந்தவராய், "இந்தச் சாஸ்திரத்தை என்னிடம் கொடுங்கள். நான் எழுதிக்கொண்டு இந்தப் பிரதியைக் கொடுத்துவிடுகிறேன்" என்ருர். "அப்படியே செய்யுங்கள்" என்று சொல்லி அந்தச் சுவடியை அவரிடம் கொடுத்தேன்.

அந்தச் சாஸ்திரத்தில், 'ரஸ ஞானத்திற்கு உபாஸனையே முக்ய ஸ்தானம்,' என்பது மிகவும் அழுத்திச் சொல்லப்படுகிறது. அதன் பேரில், தாம் சில தினங்களின் முன்பு வேதநாயகர் கோயிலைப் பிரதக்ஷணம் செய்து கொண்டிருந்ததாகவும், அப்போது இந்த ஊர்க் குள்ளச்சாமி என்ற பரதேசி தம்மை இடையே நிறுத்தி, "ஓம் சக்தி" என்ற மஹாசக்தி மந்திரத்தைத் தமக்கு உபதேசம் செய்துவிட்டுப் போனதாகவும் அதிலிருந்து தாம் பராசக்தி உபாஸனை செய்து வருவதாகவும் சொன்னுர்.

நான் மிகவும் சந்தோஷத்துடன், அவரை வண்டியேற்றி வழியனுப்பி விட்டு வந்தேன். அவர் இன்னும் நம்முடைய புஸ்தகத்தைத் திரும்பக் கொடுத்தனுப்பவில்லை.

---

## 6

## உள்ளுருத்த கலை விளக்கம்

### உச்சரி—சொல்

1. உச்சரி என்பதை உத்—சரி என்று பிரித்தால் மேலே (உயர்ந்த படியில் நட) என்று பொருள்படுகிறது. சொல்லும் போது மேல் நிலையில் நின்று சொல்க.

2. 'கை' என்பதற்கு தெலுங்கில் 'செய்' என்று பெயர். க. ச. மாறுதல் இயல்பு. 'கை' என்ற சொல்லுக்கே 'செய்' என்று பொருள். தொழில் செய்யாமல் இருக்கும் கையை நெருப்பிலே வை ; கரியாவது கிடைக்கும் என்றர்த்தம்.

3. காக்கை ஒரு பறவையின் பெயர்.

கார்கை என்றால் காப்பாற்றுதல் என்றும் அர்த்தம்-

தெருவில் நாம் பண்ணுகிற அசுத்தங்களை யோசிக்கும் போது காக்கையில்லாமல் போனால் நாம் எல்லோரும் நாற்றமெடுத்துச் செத்துப்போவோம் என்பதில் சந்தேக மில்லை.

காக்கைகள் பிதிர்க்களுடைய வாஹனங்கள் என்றும் அவற்றுக்குச் சிராத்தாதி ஸமயங்களிலும், தினந்தோறும் வாமஸாந்தம் போடவேண்டும் என்றும் நமது முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். காக்கைக்கு நூறு வயது. அது எளிதிலே சாகாது.

புயற் காற்றில் பதினாயிரக் கணக்கான காக்கைகள் மடிந்தன. தெருவெல்லாம் காக்கை செத்து விழுந்து கிடந்தது. பார்த்தவர்கள் அழுதார்கள். இரண்டு காக்கையோ மூன்று காக்கையோ மிஞ்சியிருப்பது போலே தோன்றிற்று. இப்போது பார்த்தால் ஏறக்குறைய பழைய ஜனத்தொகை, காக ஜாதியில் உண்டாகிவிட்டது. காக்கை வலிய பறவை. அது நம்மைக் காக்கிறது ; அதை நாம் கும்பிடவேண்டும்.

4. வருஷம் என்பது மழை ; ஆண்டுக்கும் பெயர்.

5. திரு பதி என்பது ஒரு க்ஷேத்திரத்துக்கும் ஸௌபாக்கிய நிலைமைக்கும் பெயர்.

6. அன்னம் என்றால் உணவு.

அன்னம் என்பது வஸ்து.

ஸத்தியத்துக்கும், ப்ரஹமத்துக்கும் அன்னம் என்று பெயர். பிராம்மணர் " ஸத்யம்ந்தவர்த்தேந பரிஷிஞ்சாமி" என்று சொல்லி அன்னத்தை ஜலத்தில் சுற்றுகிறார்கள். அங்கு ஸத்யம் என்றது ஆகாரத்தை ; ரிதம் என்றது ஜலத்தை சத்யம் என்பது உண்மைக்கும் ரிதம் நேர்மைக்கும் பெயர். நேர்மையாவது தைர்யம். நாம் அறிந்த உண்மைப்படி நடக்கும் துணிவு. உண்மை : ப்ருதிவியினுடைய அம்சம்; துணிவு ஜலத்தினுடைய அம்சம் என்று வேதாந்த சாஸ்திரம் சொல்லுகிறது.

அன்னம் அமிர்தம்

வைஷ்ணவர் ' போஜனமாயிற்று ' என்பதற்கு, அமுது செய்தாயிற்று, என்கிறார்கள். அன்னம் அமிர்தம் என்பதே ராமானுஜருடைய சித்தாந்தம். உண்மையை நேர்மையாலே காக்கவேண்டும்.

ஆதலால் அன்னத்தைக் காப்பாற்றத் தெரியாதவன் மூடன்.

---

## 7

## இந்தியப் பத்திரிகைத் தலையங்கம்

கலையென்னும் சொல் தமிழிலே மிகவும் பரந்த பொருளுடையது. எனினும் இங்கே மேற்படி சொல்லை ஆங்கிலேயர்கள் " ஆர்ட் " (Art) என்ற மொழியை உபயோகிக்கும் அர்த்தத்திலே பயன்படுத்துகின்றோம். அழகு, சுவை, ரம்மியம், என்பவற்றுக்கிடமாகி மனிதர்கள் புளகமுறும்படி செய்யும் தொழில்களையெல்லாம் ஆங்கிலேயர்கள் " மதுர கலைகள் " (Fine Arts) என்று கூறுகிறார்கள். இதனைப் பொதுப்படையாக, " கலை " என்று சுருங்கச் சொல்வதுமுண்டு. சங்கீதம், கவிதை, சிற்பம், சித்திரம் என்பவை இவ்வினத்தைச் சேர்ந்தவை. இக் கலைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமான பழக்கத்தின் மேலும், பயிற்சியின் மேலும் ஏற்படக்கூடியதென்றாலும், பொதுவாக இவை ஆழ்ந்த மனக் கிளர்ச்சியுடையோரும், வரப் பிரசாதிகளென்று கருதப்படுவோருமாகிய பெரியோர்களுக்கே இனிது சாத்தியமாகின்றபடியால், ஆங்கிலேயர்கள் இவற்றை ஒரு வர்க்கத்திலே சேர்த்திருக்கிறார்கள்.

இது, மதுர கலைகளின் நிலைமை தற்காலத்திலே தமிழ் நாட்டிலே எவ்வாறு இருக்கிறதென்பதைப் பற்றியும், அதன் காரணத்தைப் பற்றியும் இங்கே ஆராயப் புகுந்திருக்கின்றோம். தமிழ் நாட்டைப்பற்றிக் கூறுவது இந்தியாவின் மற்றப் பகுதிகளுக்கும் பெரும்பான்மையும் பொருத்தமுடையதேயாகும். பெங்காளத்திலும் மஹாராஷ்டிர தேசத்திலும் மேற்படி கலைகளிலே சில, சிறிது சிறிது தளிர்த்து வருகின்றனவென்றாலும், இந்தியாவிலுள்ள மற்ற நாடுகளிலெல்லாம் அவை உயிரின்றி நிற்கின்றன.

இப்போது திருஷ்டாந்தமாகத் தமிழ் நாட்டை எடுத்துக் கொள்வோம். இங்கே கம்பனைப் போன்ற கவிஞர்கள் இக் காலத்தில் யார் இருக்கின்றார்கள்? கம்பனைப் போன்ற கவிஞர் அடிக்கடி தோன்றுவதில்லையென்பதைச் சிலர் ஆக்ஷேபமாகக் கொண்டு வரலாம். கம்பனுடைய பெருமையில் நூற்றில் ஒரு பங்கு கொண்டோர் யாவர் இருக்கிறார்கள்? பாண்டித்தியம் உடையோர்களும், பாண்டித்தியம் இருப்ப தாக நினைத்துக் கொள்வோர்களும் கவிகள் கூறத் தொடங்கி விடுகின்றார்கள். கவித்திறமை இருப்பதற்குப் பாண்டித்தியம் ஒருவாறு அவசியமென்றாலும், பாண்டித் தியம் இருப்போர்களுக்கெல்லாம் கவிதா சக்தி இருப்பதில்லை யென்பதை நம்மவர்கள் மறந்து விட்டார்கள். இலக்கண வித்துவான்கள்கூடத் தாம் கவி பாடாமல் இருந்தால் அது மதிப்புக் குறைவென்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். இங்ஙனமாக, உண்மையான கவிதை இந்நாட்டிலே மறைந்து போய்விட்டது.

இதுபோலவே மற்ற மதுர கலைகளும் மழுங்கிப்போய் விட்டன. சிற்பக் கலையிலே அரிய "வரப் பிரசாதம்" கொண்டோர் இப்பொழுது காணப்படவில்லை. சித்திர வேகனத்திலே ரவிவர்மா ஒருவர் தன்னந்தனிச் சுடராக இருந்து மறைந்து விட்டார். சங்கீதத்திலே கடல் போன்ற ஆழங்கொண்ட கீர்த்தன கர்த்தர்களைக் காணேம். தியாகையர் தீக்ஷிதர் என்போரைப் போன்ற இசைவல்லார்கூட இந்தச் சமயத்தில் கிடையாது. டம்பக்காரர்களும் வேஷக்காரர்களும் ஆயிரக்கணக்காக இருக்கிறார்கள்.

இவ்வாறு கலைப் பஞ்சம் தோன்றியிருப்பதன் முகாந்திரம் என்ன என்பதைப் பற்றிச் சிறிது ஆராய்ச்சி புரிவோம். உண்மையான கலை தோன்ற வேண்டுமானால் அது இரு வகையாகத் தோன்றுமென்பதாக மெஸீனி (Mazzini) என்னும் இத்தாலிய ஞானி கூறுகிறார். அதாவது, "ஒரு வகைப்பட்ட காலசகம் முடிவு பெற்றபோதிலும், ஒரு வகைப்பட்ட காலசகம் வருந்தருவாயிலும் உண்மையான கலைத்திகழ்ச்சி ஏற்படுகின்றது" என்றார். இதை ஒருவிதமாக உண்மையெனக் கொள்ளலாம். பொதுவாகக் கூறுவோ மாயின், ஒரு தேசத்து ஜனங்கள் மெய்யான உற்சாகமும் வீரத் தன்மைகள் புகழும் கொண்டிருக்கும்போது அங்கே பெரிய கலையெழுச்சி ஏற்படுகின்றது. அழிவுக் காலங்களிலே

யுத், தாழ்ச்சிக் காலங்களிலேயும் இடையிடையே ஜனங்கள் தாழ் நிலையைச் சபிக்கும் பொருட்டு மஹான்கள் தோன்று வார்களேயல்லாமல் கலையின் வளர்ச்சி ஏற்படமாட்டாது.

தமிழர்களாகிய நமக்குள்ளே ஆண்மை போய்விட்டது. வீரியம் போய்விட்டது. நமக்குத் தேசம் கிடையாது, ராஜ்யம் கிடையாது; சுயாதீனம் கிடையாது. இந்த நிலைமையில் "ஸரஸ்வதி" இந்நாட்டிலே வந்து அவதரிப் பாளா?

---

# 8

## விண்ணப்பம்

எமது தாய் நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கின்றேனாதலின் பண்டைத் தமிழ் நூல்களில் பாரத நாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார்களாயின் அவர்மாட்டு மிக்க கடப் பாடுடையவனாவேன். தமிழ்ப் புராணங்களிலும் இதிகாசங் களிலும் நாட்டுப் படலங்களில் நிடதம் கோசலம் முதலிய பகுதிகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் வருணனைகள் பயன்பட மாட்டா. தற்காலத்தே தமிழ்ப் புலமையிற் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக 'தேச பக்தி' பாக்கள் புனைந்தனுப்புவாராயின் அவையும் நன்றியறிவுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

சிறிய ஆற்றலுடையேனாகிய யான் இப்பெரிய தொழிலை நிறைவேற்றுவதன் கண்ணே எவ்வாற்றானும் துணைபுரிய விரும்புவோர் கால பரியயம் செய்யலாகாதென்று பிரார்த்திக் கின்றேன்.

இங்ஙனம்,

**சி. சுப்ரமணிய பாரதி.**

(நவம்பர் இதழ் சக்ரவர்த்தினியில் வந்தது)

**குறிப்பு.**—வந்தே மாதர கீதத்தின் மொழி பெயர்ப்பை ஒட்டிய ரஸமான ஒரு சம்பவத்தைச் சமீபத்தில் திரு. வி. கே. ராமனுத ஐயர் அவர்கள் என்னிடம் கூறினுர்கள். இவர் மயிலாப்பூரிலே வக்கிலாக இருக்கிறுர். இவர் மஹேச குமார சர்மாவுக்கு நெருங்கிய உறவினர். மஹேச குமார சர்மா ஆனந்த மடம் என்ற நூலைத் தமிழிலே பெயர்த்து அழகாக எழுதியிருக்கிறுர். அதிலே வெளியிடுவதற்காக வந்தேமாதர கீதத்தை மொழி பெயர்த்துத் தரும்படி ப்ாரதியாரை கேட்டுக் கொண்டாராம். இரண்டு மூன்று மாதங்கள் அவருடைய வேண்டுகோள் நிறைவேறவில்லை. பிறகு ஒரு நாள் இரவு சுமார் பத்து மணிக்கு பாரதியார் மஹேச குமார சர்மாவின் வீட்டுக் கதவைத் தட்டினுர். அவர் அப்பொழுது சென்னை ஜார்ஜ் டவுனில் வசித்து வந்தார். பாரதியார் திருவல்லிக்கேணியிலிருந்தார். அந் நேரத்தில் பாரதியார் வந்தது சர்மாவுக்குச் சற்று ஆச்சரியத்தை விளைவித்தது. "சர்மா, பாட்டு வந்து விட்டது. எழுதிக் கொள். கடற்கரையிலே உட்கார்ந்திருந்தேன். நீ கேட்ட பாட்டு திடீரென்று உதயமாயிற்று. கடற்கரையோரமாகவே நேராக இங்கு வந்து விட்டேன்" என்று பாரதியார் கூறினுராம்.

பாரதியார் இரண்டு விதமாக இக் கீதத்தை மொழி பெயர்த்திருக்கிறுர். இங்குள்ள கட்டுரை அப்பாடலுக்கு நல்ல முன்னுரையாக அமைந்துள்ளது.

இக் கட்டுரையிலிருந்து வேருெரு முக்கிய விஷயமும் தெளிவாகிறது. பாரதியார் சுதேசமித்திரனில் வேலை பார்த்துக்கொண்டே அக்காலத்தில் சக்ரவர்த்தினி என்ற மாதப் பத்திரிகை ஒன்றை நடத்தியிருக்கிறுர். அதன் ஒரு இதழ் 1905 நவம்பரில் வெளியாகியுள்ளது.

—பாரதி தமிழ்.

---

# 9

## தமிழ் நாட்டில் நாடகம்

தமிழ் நாட்டில் நாடகப் பாட்டுக்கள் நாள்தோறும் நூற்றுக் கணக்காக அதிகப்பட்டு வருகின்றன. ஆனுல், இவற்றிலே தெளிவு, அறிவு வளம், கல்விப் பயிற்சி, சொல் நயம், ரஸவொளி முதலிய லக்ஷணங்கள் கொஞ்சமேனும் காணப்படவில்லை. வண்டிக்காரன் பாட்டு, பாம்புப் பிடாரன் பாட்டு, குறத்திப் பாட்டு முதலிய பாமரப் பாட்டுக்களிலே இலக்கணப் பிழைகள் இருந்தபோதிலும் கவிதா ரஸம் அமைந்திருப்பது காண்கிறேம். இந்த நாடகப் பாட்டுக்கள் வெறும் பாமரமாக இருப்பதுடன் கவிதா ருசி அணுகூடக் கலக்காமல் பெரிய பீடையாக ஏற்பட்டிருக்கின்றன. மேலும் தமிழ்ப் பாஷையின்

இயல்புக்குப் பொருந்தாத மெட்டுக்களில் நாடகக்காரருக்கு எப்படியோ பிரியமுண்டாகியிருக்கிறது. "இதற்கெல்லாம் விமோசனம் என்ன ?" என்று ஒரு தமிழ்க் கவிஞரிடம் கேள்வி போடப்பட்டது. அதற்கு அவர் சொல்லிய மறு மொழியை இங்கெழுதுகிறேன்.

"இந்த விஷயத்தில் நாடகக்காரரைக் குற்றஞ் சொல்வது நியாயமில்லை. பெரும்பாலும் நமது நாட்டில் ஏழை வாலிபர்கள் ஸங்கீதத்திலும் உல்லாஸத்திலும் பிரிய முடையவர்களாக இருக்கும்போது ஜீவனத்துக்காகவும், சில சமயங்களில் உல்லாஸத்தின் பொருட்டாகவும் நாடகங்களிலே சேர்கிறார்கள். இவர்களுக்கு ஏராளமான பாட்டு வேண்டி யிருக்கிறது. பழைய மெட்டுக்களும், அர்த்தம் தெரியாத கடுஞ் சொற்களும் இவர்களுக்கு அவசியமில்லை. 'தமிழ்ப் புலவர்' களிடம் போனால் நிகண்டுக்குக்கூட அர்த்தம் தட்டும் படியான வார்த்தைகள் எழுதிக் கொடுப்பார்கள். ஸாமான்ய பாஷையில் எழுதும் தொழில் புலவர்களுக்குத் தெரியாது; பெரும்பாலும் இவர்களுக்குச் சங்கீதமும் தெரியாது.

"தீவிரமான தாள கதியும் மதுரமான இசையும் உடைய தாய் நர்த்தனத்திற்கு உதவக் கூடிய பாட்டுக்கள் நாடகக் காரர்களுக்கு வேண்டும்.

"தவிரவும், தமிழ்ச் சங்கீதமும் பல வருஷங்களாகப் புதுமையும் உல்லாஸமும் இழந்து சோர்ந்து கிடக்கிறபடி யால், நாடகக்காரரும் நாடகம் பார்க்கும் பொது ஜனங் களும், ஹிந்துஸ்தானி, பார்ஸி மெட்டுக்களையே விரும்பு கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட மெட்டுகளுக்குச் சரியான பதங்கள் சேர்த்துக் கொடுப்போர் எவ்வளவு மூடர்களாக இருந்த போதிலும், அவர்களை நாடகக்காரர் ஆவலுடன் ஏற்றுக் கொள்ளும்படி நேரிடுகிறது. கவிதா ரஸங்களைப் பற்றி யோசனை செய்து கொண்டிருந்தால் அன்றன்றைக்கு நாடகம் நடக்கவேண்டுமே அதற்கென்ன செய்வது ?........ புதிய கவிதை புலவர்களிடம் தோன்ற வேண்டும். புதிய மெட்டுக்கள், தமிழ் நாட்டு சங்கீத வித்வான்கள் ஏற்படுத்த வேண்டும். அப்போது தமிழ் நெறிக்கு இசையாத பார்ஸி மெட்டுக்களும், காதைத் தொளைக்கும் பாமரமான பத வரிசைகளும் நாடகத்தை விட்டு நீங்கும்.

# பெண்

## 1

## வீரத்தாய்மார்கள்

'தாயைப்போல பிள்ளை' ஓர் தேசத்தார் ஞானமும், செல்வமும், வீரமும், புகழும் கொண்டு உன்னத நிலையிலே இருக்கும்போது, அவர்களுக்குள் ஆண் மக்களிடம் மட்டுமே யல்லாது பெண் பாலரிடத்திலும்கூடத் தர்மாபிமானமும், வீரத்தன்மையும் சிறந்து விளங்கும். ராஜபுத்திரர்கள் உன்னத நிலையிலே இருந்த காலத்தில் ராஜபுத்திர ஸ்திரீகள் காட்டிய வீரகுணங்கள் இன்றுங்கூட உலகத்தா ரெல்லாம் கேட்டு மெய் சிலிர்க்கும்படியாக இருக்கின்றன. யுத்த காலங்களிலே ராஜபுத்ர ஸ்திரீகள் தமது உயிரைப் புல்லினும் சிறிதாக மதித்து, மானத்திற்காகவும், தர்மத் திற்காகவும், கற்பிற்காகவும் செய்திருக்கும் வீரச் செயல்கள் எண்ணி முடியாதன. 'டாட்' என்ற ஆசிரியர் எழுதி யிருக்கும் ராஜஸ்தான சரித்திரத்தை வாசித்தவர்களுக்கு நமது பாரத நாட்டு க்ஷத்திரிய மாதர்களுக்கு நிகரான 'வீரத் தாய்மார்' உலகத்தில் வேறெங்குமிருந்ததில்லை என்பது நன்கு விளங்கும். நிற்க.

நமது தமிழ் நாட்டிலேயும் அத்தகைய பெருங்குடி (மூதில்) மாதர்கள் இருந்திருக்கிறார்களென்பதைச் "செந்தமிழ்"ப் பத்திரிகாசிரியர் இம்மாதம் எழுதியிருக்கும் ஓர் திவ்வியமான உபந்நியாசத்திலே பல அரிய திருஷ்டாந் தங்களால் விளக்கியிருக்கிறார். அவரது உபந்நியாசத்தைச் சென்ற வாரத்திலே ஒரு பகுதியும் இவ்வாரத்தில் ஒரு பகுதியுமாக நமது பத்திரிகையிலே பிரசுரம் செய்திருக்கின் றோம். இன்னும் சிறிது மிஞ்சியிருக்கின்றது. இதனை அடுத்த வாரத்தில் பிரசுரம் செய்வோம். தமிழ் நாட்டுத் தாய் மாரைப் பற்றிச் "செந்தமிழ்" ஆசிரியர் எழுதியிருக்கும் உபந்நியாசத்தைப் படித்தபோது, எமக்குண்டான பெரு மகிழ்ச்சிக்கும் பெருந் துயரத்திற்கும் அளவில்லை. 1800-ம் வருஷங்களுக்கு முன்பாகவே இத்தனை பெருங் குணங்கள் வாய்க்கப்பெற்றிருந்த நாகரிக நாட்டிலே, இவ்வளவு உயர்வு கொண்டிருந்த பெரியோரின் சந்ததியிலே

இவர்கள் நடையினும் செய்கைகளினும் நிகரில்லாது கையாண்டு வந்த தமிழ்ப் பாஷையைப் பேசும் பெருங் குடியில் நாம் பிறந்திருக்கிறோமென்பது அரிய மகிழ்ச்சி யுண்டாக்குகிறது.

ஆனால், பிரம்ம சந்ததியிலே இராவணன் பிறந்ததுபோல இத்தனை பெரிய நாகரிகமும் சிறப்பும் அறவலிமையும் பொருந்திய மேலோரின் சந்ததியிலே குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பாகத்தோன்றி நாம் இக்காலத்திலே இருக்கும் நிலையையெல்லாம் பார்க்கும்போது மனம் புண்ணாய் உலைகின்றது.

அந்நாட்களிலே மாதர்கள் காட்டிய வீரத்தன்மையையும், இந்நாளிலே ஆண்மக்கள் காட்டும் பேடித் தன்மையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, “ஆ! நமது உயர்வு கொண்ட பாரத ஜாதி இத்தனை தாழ்ந்த நிலைக்கு வருவதைக் காட்டிலும் ஒரேயடியாக அழிந்து போயிருந்தாலும் சிறப்பா யிருக்குமே” என்று மனம் குமுறுகின்றது.

நமது பத்திரிகை படிக்கும் நேயர்களனைவரும் நாம் “செந்தமிழ்”ப் பத்திரிகையிலிருந்து பெயர்த்துப் பதிப்பித் திருக்கும் உபந்யாசத்தைத் தாம் பல முறை படிப்பது மட்டுமே யன்றித் தமது சுற்றத்தாருக்கும், மித்திரருக்கும் தமது வீட்டு மாதர்களுக்கும் திரும்பத் திரும்பப் படித்துக் காட்டுதல் நலமென்று கருதுகின்றோம்.

“மகனைப்பெற்று விடுதல் எனது கடமை. அவனைத் தக்கோன் ஆக்குதல் அவன் தந்தையின் கடமை. அவனுக்கு வேல் செய்து கொடுத்தல் இரும்புக் கொல்லனது கடமை. என் மகனது கடமை எனிலோ யுத்தத்திலே சென்று யானையைக் கொன்று மீளுதல் ஆகும்” என்று ஓர் தமிழ்த் தாய் பாடியிருக்கின்றாள்.

இனி, மற்றொரு தாய், “எனது மகன் யுத்த களத்திலே போர் வீரர் வாளிலே கழுத்தறுப்புண்டு மடிவானானால், அது தான் எனக்கு மேலான தர்மம்; அதுவே ஸத்கர்மம்” என்று பாடினாள். பின்னுமொரு பெண் புலவர், தமது சுற்றத்திலுள்ள ஓர் அம்மை தன் மகன் போரிலே யானையை வீழ்த்திக் கொன்று தானும் இறந்தான் என்று கேள்வி யுற்று, தான் அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சியடைந்த சிறப்பைக் கண்டு வியந்து பாடல் சொல்லியிருக்கின்றார்.

அப்பால், ஒரு தமிழ்த்தாய் தனது தந்தையும் கணவனும் போரிலே சிறிது காலத்திற்கு முன்பு இறந்து போயிருக்கவும், யுத்தப் பறையின் ஒலி கேட்டவுடனே சந்தோஷம் மிகுந்து, தன் மகனுக்கு நல்ல ஆடையுடுத்தி, அவன் குடுமிக்கு எண்ணெயிட்டுச் சீவி முடித்து அவன் கையிலே வேலெடுத்துக் கொடுத்துத் தனது ஒரே பிள்ளையைப் போர்க்களத்திற்குப் போ என்று அனுப்பிய பெருமையை ஓர் பெண் புலவர் வியந்திருக்கின்றார். பின்னுமொரு தாய், " தன் மகன் யுத்த களத்திலே வலியழிந்து புறங்கொடுத்து ஓடியது உண்மையாயின் அவன் பால் உண்டு வளர்ந்ததற்குக் காரணமாயிருந்த என் முலைகளை அறுத்திடுவேன்" என்று வாளைக் கையிலே கொண்டு போர்க் களத்திற்குப் போய், அங்கே வீழ்ந்து கிடக்கும் பிணங்களை வாளினால் புரட்டித் தேடுகையிலே, அப் பிணங்களினிடையில் தன் மகன் உடலும் இரண்டு துண்டமாகக் கிடந்ததைப் பார்த்து, அவனைப் பெற்ற பொழுதைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சி யடைந் தாள் என்று ஓர் பாடல் இருக்கிறது.

இன்னும், அதுபோல எத்தனையோ ஆச்சரியமான திருஷ்டாந்தங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இடம் போதாமை பற்றி அவற்றை இங்கே எடுத்துக் கூற முடியவில்லை.

இவ்வளவு மேலான வீரப்பயிற்சி இருந்த நாடு இப்போது என்ன நிலைமைக்கு வந்துவிட்டது !

ஆனால், நமக்கு ஒரு ஆறுதல் இருக்கின்றது. அதுவும் வீணான ஆறுதலன்று. உண்மை பற்றிய ஆறுதல்.

அந்த ஆறுதல் யாதெனில், நமது ஜாதியை இடையே பற்றிய சிறுமை நோய் விரைவிலே நீங்கி விடும் என்பதற்கு ஆயிரக்கணக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. பரிசுத்தமான நெஞ்சமும் தெய்வ பக்தியும் தன்னல மறப்பும் உடைய பல மேலோர்களை இப்போது நாட்டிலே காண்கிறோம். இது வீணாகமாட்டாது. நம்மைப் பற்றியிருந்த புன்னோய் சீக்கிரத்திலே மாறிப்போய் விடும். வானத்திலே துந்துபியொலி அதிரக் கேட்கின்றோம். மகா பாரதம் (Great India) பிறந்து விட்டது. வந்தே மாதரம்.

மேற்கண்ட கட்டுரையை யொட்டி பிரம்மஸ்ரீ மு. இராக வையங்காரவர்களுக்கு எழுதிய லிகிதம்,

இந்தியா ஆபீஸ்,
பிராட்வே, மதராஸ்,
18th அக்டோபர் 1907.

அநேக நமஸ்காரம்,

ஒவ்வொரு காலத்துச் சோம்பர் மிகுதியாலும், ஒவ்வொரு காலத்தே முயற்சி மிகுதியாலும், தங்களைப்போன்ற பெரியோர்களுக்கு அடிக்கடிக் கடிதங்களெழுதிப் புனிதத் தன்மை பெறுவதற்கு அவகாசமில்லாதவனாக இருக்கின்றேன்.

சென்ற முறை வெளிவந்த "செந்தமிழ்"ப் பத்திரிகையிலே தாங்கள் எழுதியிருக்கும் "வீரத்தாய்மார்கள்" என்ற அற்புத உரையைக்கண்டு மகிழ்ச்சியுற்று அம் மகிழ்ச்சியைத் தமக்கு அறிவிக்கும் பொருட்டாக இக்கடிதம் எழுதலானேன்.

தாங்கள் பாண்டித்தியத்தை நான் புகழ வரவில்லை, அதனை உலகமறியும். தங்களுடைய பரிசுத்த நெஞ்சிலே எழுந்திருக்கும் "ஸ்வதேசபக்தி" என்ற புது நெருப்பிற்குத்தான் நான் வணக்கம் செய்கிறேன்.

"காலச் சக்கரம் சுழல்கிறது" என்று அவ்வுபந்நியாசத்தின் இறுதியிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள், ஆம்! காலச் சக்கரம் சுழலவே செய்கிறது; அச்சுழற்சியிலே, சிறுமைச் சேற்றில் ஆழ்ந்து கிடந்த நீச பாரதம் போய், மஹா பாரதம் பிறக்கும் தருவாய் வந்துவிட்டது.

'தாழ்நிலை' என்ற இருளிலே மூழ்கிக் கிடக்கும் பாரத வாசிகளுக்கு மஹா பாரதம் காட்டத் தோன்றியிருக்கும் சேதிகளிலே தமது நெஞ்சிற் பிறந்திருக்கும் நெருப்பொன்றாகும். அதற்கு வணக்கம் செய்கிறேன்; அது வளர்க ஓம்!

சி. சுப்பிரமணிய பாரதி.

---

குறிப்பு.—ஸ்ரீ அழகிய சிங்கப்பெருமாளையங்கார் (பச்சையப்பன் காலேஜ்) அவர்களுக்கும் அவர் தம்பி ஸ்ரீ கிருஷ்ணமாசாரியாரும் தங்களுக்கு ஸாஷ்டாங்க வணக்கம் கூறும்படி என்னிடம் கற்பித்தார்கள்.

## 2

# பெண்

வேதபுரத்தில் தர்மவீதியில் வாத்தியார் பிரமராய அய்யர் என்றொரு பிராமணர் இருக்கிறார். இவர் சாக்த மதத்தைச் சேர்ந்தவர். "சக்தி பூஜை" பண்ணுவோரில் சிலர் மதுமாம்ஸ போஜனம் செய்கிறார்கள். இந்த வாத்தியார் அப்படியில்லை. இவர் "சுத்த சைவம்"; அதாவது ஆட்டுக்குட்டியை மாம்ஸம் தின்னும்படிச் செய்தாலும் செய்யலாம்; இந்த வாத்தியாரை மாம்ஸம் தின்னும்படிச் செய்ய முடியாது. இவர் இங்கிலீஷ், ப்ரெஞ்சு என்ற இரண்டு பாஷைகளிலும் நல்ல பாண்டித்யமுடையவர். கொஞ்சம் ஸம்ஸ்கிருதமும் தெரியும். பகவத்கீதை, வால்மீகி ராமாயணம், குமாரஸம்பவம் மூன்று நூலும் படித்திருக்கிறார். வேதாந்த விசாரணையிலே நல்ல பழக்கமுண்டு. கதை, காலக்ஷேபம், உபந்யாஸம் முதலியன நடந்தால், தவறாமல் கேட்கப் போவார். பெரும்பாலும் கதை கேட்டுவிட்டு அதிருப்தியுடனே திரும்பி வருவார். வீட்டுக்கு வந்து உபந்யாஸிகளின் கொள்கைகளை ஒரு மாஸம் தொடர்ச்சியாக நண்பர்களுடனே தர்க்கிப்பார். "ஹிந்துக்கள் முற்காலத்தில் நல்ல மேதாவிகளாக இருந்தனர். இன்னும் அதிசீக்கிரத்தில் மேலான நிலைமைக்கு வரப்போகிறார்கள். ஆனால், இந்தத் தேதியில், பண்டிதர்களாக வெளிப்பட்டுப் பிரஸங்கங்களும், கதைகளும், காலக்ஷேபங்களும் நடத்தும் ஹிந்துக்களிலே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் சமையல் வேலைக்குப் போக வேண்டியவர்கள். அதை விட்டு, உலகத்துக்கு ஞானோபதேசம் பண்ணக் கிளம்பிவிட்டார்கள். இது பெரிய தொல்லை, உபத்திரவம், தொந்தரவு, கஷ்டம், ஸங்கடம், ஹிம்ஸை, தலைநோவு. இந்தத் தேதியில், ஹிந்து ஜாதி முழு மூடமாக இருக்கிறது. நம்மவர்கள் மூளைக்குள்ளே கரையான் பிடித்திருக்கிறது. எனக்கு ஹிந்துக்களின் புத்தியை நினைக்கும்போது வயிற்றெரிச்சல் பொறுக்க முடியவில்லை. படகோனியா தேசத்தில்கூட சராசரி நூற்றுக்கு இத்தனை பேர் மூடர்களாக இருப்பார்களென்று தோன்றவில்லை" என்று நானாவிதமாக நம் தேசத்தாரின் அறிவு நிலைமையைத் தூஷணை செய்து கொண்டேயிருப்பார்.

மேற்படிப் பிரமராய வாத்தியாருக்குத் தமிழிலும் கொஞ்சம் ஞானமுண்டு. ஐரோப்பாவின் சாஸ்திரங்களில் பலவற்றைத் தமிழில் எழுதியிருக்கிறார். சில சமயங்களில்

கவிதைகூட எழுதுவார். இவருடைய கவிதை மிகவும் உயர்ந்ததுமில்லை, தாழ்ந்ததுமில்லை; நடுத்தரமானது. இவருக்குச் சங்கீதத்தில் நல்ல ஞானமுண்டு. ஆனால் பாடத் தெரியாது. தொண்டை சரிப்படாது. தாளத்தில் மஹா நிபுணர். பெரிய பெரிய மிருதங்கக்காரரெல்லாம் இவரைக் கண்டால் பயப்படுவார்கள்.

இவர் இந்தத் தெருவில் வார்த்தை சொன்னால் மூன்றுவது தெருவுக்குக் கேட்கும். பகலில் பள்ளிக்கூடத்து வேலை முடிந்தவுடனே வீட்டுக்கு வந்து, சாயங்காலம் ஆறுமணி முதல் எட்டுமணி வரை தன் வீட்டுத் திண்ணையில் சிநேகிதர்களுடன் பேசிக்கொண்டு, அதாவது, கர்ஜனை செய்து கொண்டிருப்பார். பிறகு சாப்பிடப் போவார். சாப்பிட்டுக் கையலம்பிகை ஈரம் உலர்வதற்கு முன்பு மறுபடி திண்ணைக்கு வந்து சப்தம் போடத் தொடங்கிவிடுவார். இவருடைய வீட்டுத் திண்ணைக்கு அக்கம்பக்கத்தார், 'இடிப் பள்ளிக்கூடம்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அந்த இடிப் பள்ளிக்கூடத்துக்கு வந்து மாலைதோறும் நாலைந்து பேருக்குக் குறையாமல் இவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அந்த நாலைந்து பேருக்கும் இன்னும் காது செவிடாகாமலிருக்கும் விஷயம் அனேகருக்கு ஆச்சர்யத்தை உண்டாக்குகிறது.

மேற்படி வாத்தியாருக்கும் எனக்கும் ஸ்நேகமுண்டு. நானும் அடிக்கடி இடிப்பள்ளிக்கூடத்துக்குப் போய் பேச்சுக் கேட்கும் வழக்கமுண்டு. ஹிந்துக்கள் பரம மூடர்களென்று அவர் சொல்லும் வார்த்தையை மாத்திரம் நான் அங்கீகாரம் செய்து கொள்வதே கிடையாது. மற்றப்படி, அனேகம் விஷயங்களில் அவருடைய அபிப்பிராயங்கள் எனக்கு நியாயமாகவே தோன்றும்.

நாலாநாள் ஞாயிற்றுக்கிழமைச் சாயங்காலம் மழைத் தூற்றலாக இருந்தபடியால், நான் வெளியே உலாவப் போகாமல், பொழுதுபோக்கும் பொருட்டாக மேற்படி இடிப் பள்ளிக்கூடத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே வாத்தியார் கர்ஜனை அட்டஹாஸமாக நடந்துகொண்டிருந்தது. கேட்டுக் கொண்டிருந்தவர்களின் "ஜாபிதா" பின் வருமாறு :—

(1) வீராசாமி நாய்க்கர். (இந்த நாயக்கர் ஆனைக் குட்டியைப் போலிருப்பார்; சர்க்கார் உத்தியோகம்; முப்பத்து

மூன்று வயது ; அதற்குள் சரியான வழுக்கை ; நல்ல வ்ய வஹார ஞானமுடையவர் ; வாய் பேசுவது கிடையாது ; கோபம் வருகிறபோது கொஞ்சம் பொடியெடுத்து மூக்கில் போட்டுக்கொளவார்.)

(2) கொங்கண பட்டர். (இவர் பெருமாள் கோயில் பட்டர் ; ஏழரையடி உயரம் ; இவரை யார் வேண்டுமாஞு லும் வையலாம் ; வேஷ்டியைப் பிடித்திழுக்கலாம். மேற்படி வீராசாமி நாயக்கர் இவருடைய தலையில் கால்மணி நேரத்திற் கொருதரம் குட்டுவார். இவருக்குக் கோபம் வராது. இவருடைய ஜாதகத்திலே கோபத்துக்குரிய கிரகம் சேரவில்லை யென்று கேள்வி.)

(3) நாராயண செட்டியார். (பணக்காரர் ; குள்ளம் ; வட்டிக்குக் கொடுக்கல் வாங்கல், இடிப் பள்ளிக்கூடம்— இந்த இரண்டு தொழிலையுந் தவிர, மூன்ருவது காரியத்தை இவர் கவனிப்பதே கிடையாது. வாரத்துக்கொருமுறை வெள்ளிக்கிழமையன்று பிள்ளையார் கோவிலுக்குப் போவார். மற்றப்படி வீட்டை விட்டு வெளியேறமாட்டார். இவரை அந்தப்புரச் செட்டியாரென்றும் சொல்லுவார்கள்.)

(4) குருசாமி பாகவதர். (ஸங்கீத வித்வான் ; குழந்தை களுக்குப் பாட்டும் வாத்தியமும் சொல்லிக் கொடுப்பார். சாரீரம் கட்டை.)

மேற்படி சபையில் நானும் போய்ச் சேர்ந்தேன். பிரமராய வாத்தியாருக்கு என்னைக் கண்டவுடன் கொஞ்சம் சந்தோஷம் ஏற்பட்டது.

" வாருங்கள், வாருங்கள், உங்களுக்கும் ரஸப்படக்கூடிய விஷயந்தான் பேசிக்கொண்டிருக்கிறோம் " என்ருர்.

" அதாவது என்ன விஷயம் ? " என்று கேட்டேன்

" ஸ்திரீகளுடைய பேச்சு " என்ருர்.

" ஸ்திரீகளைப் பற்றின பேச்சா ? சரிதான்,மேலே உபந்யாஸம் நடக்கட்டும் " என்றேன்.

வாத்தியார் கர்ஜனையைத் தொடங்கினார் :—

"நான் சொன்ன விஷயத்தைச் சுருக்கமாக *'சக்தி தாஸ்'ருக்கு மறுமுறை சொல்லிக் காட்டிவிட்டு மேலே சொன்னால்தான் அவருக்குத் தொடர்ச்சி தெரியும்" என்று சொல்லி, பூர்வகதையை யெடுத்தார்.

அந்த நிமிஷத்தில் வீராசாமி நாயக்கர் ஒரு தரம் பொடி போட்டுக்கொண்டு கொங்கண பட்டர் தலையில் ஒரு குட்டுக் குட்டினார்.

"சில்லரை விளையாட்டு வேண்டாம், வாத்தியார் பிரசங்கம் நடக்கட்டும்" என்றேன்.

வாத்தியார் கர்ஜனை செய்யலானார்.

"இந்தியாவில் ஆண்பிள்ளைகளுக்குக்கூட வாக்குச் சீட்டுக் கிடையாது. அதாவது ஜனங்களுடைய இஷ்டப்படி ஆள் நியமித்து ஜன சபையாலே நடத்தும் அரசாட்சியுரிமை ஹிந்துக்களுக்குக் கிடையாது. ஹிந்துக்களுக்குப் புத்தி சொற்பம். நம்முடைய தேசத்தில் ஆண்பிள்ளைகளுக்குக் கிடைக்காத மேற்படி வாக்குச் சீட்டுச் சுதந்திரம் வேறு சில தேசங்களிலே பெண்களுக்கு உண்டு. அதாவது, அரசாட்சி இன்னபடிதான் நடக்கவேண்டுமென்று நியமிக்கும் பாத்தியதை அங்கே ஸ்திரீகளுக்கும் உண்டு.

"ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, டென்மார்க், நார்வே, யுனைடெட் ஸ்டேட்ஸிலே பாதி, கானடா—இத்தனை தேசங்களில், பெண்களுக்கு வாக்குச் சீட்டு கெட்டியாகவுண்டு. இங்கிலாந்திலேகூட அந்த அநுஷ்டானத்தை ஏற்படுத்த வேண்டுமென்று பலர் மன்றாடுகிறார்கள். போன மந்திரி ஆஸ்க்வித்கூட அந்தக் கட்சியை நெடுங்காலமாக எதிர்த்து வந்து, ஸமீபத்தில் அதற்கனுகூலமாகப் பேசுகிறாரென்று கேள்வி, இதை விடுங்கள்.

"துருக்கி தேசம் தெரியுமா? அங்கே நேற்றுவரை ஸ்திரீகளை மூடிவைத்திருப்பது வழக்கம். கஸ்தூரி

* ஸ்ரீ பாரதியாரின் புனை பெயர்.

மாத்திரைகளை டப்பியில் போட்டு வைத்திருக்கிறார்களோ இல்லையோ? அந்த மாதிரி; திறந்தால் வாசனை போய்விடும் என்று நம்முடைய தேசத்திலேகூட அனேக ஜாதிக்காரர் அந்த மாதிரிதானே செய்கிறார்கள். ஹிந்து ஸ்திரீ ஏறக்குறைய அடிமை நிலைமையிலிருக்கிறாள். நம்முடைய வீடுகளில் அறைக்குள் அடைத்து வைப்பது கிடையாது. அறைக்குள்ளேதான் இருந்தாலென்ன, குடி கெட்டுப் போச்சுது? அடிமையைத் தண்ணீர் கொண்டுவரத் தெருவிலே விட்டாலென்ன, அதுவும் கூடாதென்று கதவைப் பூட்டிக் கைதியாக வைத்திருந்தாலென்ன? எந்த நிலைமையிலிருந்தாலும் அடிமை அடிமைதானே ஸ்வாமி? மனுஷ்ய ஜீவனுக்கு இரண்டுவித நிலைமைதான் உண்டு. எதுவும் தன்னிஷ்டப்படி செய்து, அதனால் ஏற்படக்கூடிய இலாப நஷ்டங்களுக்குந்தான் பொறுப்பாளியாக இருப்பது ஒரு நிலைமை. அதுதான் சுதந்திரம். அப்படி இல்லாமல், பிறர் இஷ்டப்படி தான் இஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும் மீறி நடக்கக்கூடாதபடிக் கட்டுப்பட்டிருத்தல் அடிமை நிலை. அந்த ஸ்திதியில் நம்முடைய ஸ்திரீகளை வைத்திருக்கிறோம். சும்மா பொய்க்கதை சொல்வதில் பிரயோஜனமென்ன, ஸ்வாமி? நம்முடைய ஸ்திரீகள் அடிமைகள். அதிலே சந்தேகமில்லை. ஹிந்துக்களுக்குள்ளே புருஷர்களுக்கே அரசாட்சியில் வாக்குச் சீட்டுங் கிடையாது. அவர்களுக்குள்ளே ஸ்திரீகள் அடிமைகள். ஹிந்து ஸ்திரீகளைக் காட்டிலும் இப்போது துருக்கி ஸ்திரீகள் நல்ல நிலைமையில் வந்திருக்கிறார்கள். மிஸ் எல்லிஸன் என்றொரு இங்கிலீஷ்காரி ஒரு புஸ்தகம் போட்டு, நேற்றுத்தான் ஒரு பத்திரிகையில் அந்தப் புஸ்தகத்தைப்பற்றி அபிப்பிராயம் போட்டிருந்தது. அந்த அபிப்பிராயம் எழுதினவர் ஒரு சிங்களத்துப் பௌத்தர். அவர் பெயர் ஜினராஜதாஸர். அவர் ஒரு இங்கிலீஷ்காரியைக் கலியாணம் பண்ணிக்கொண்டிருக்கிறார். துருக்கி ஸ்திரீகள் படிப்பு, ராஜ்யப் பொறுப்பிலே ஊக்கம் முதலிய சகல அம்சங்களிலேயும் போதுமானபடி விருத்தியாய்க்கொண்டு வருவதாக அந்த இங்கிலீஷ் புஸ்தகத்தில் போட்டிருப்பதாக அந்தப் பௌத்தர் சொல்லுகிறார். ஐயோ, ராமா, ராகவா, கேசவா, விசுவாமித்ரா!-நமக்கு ஸந்தியாவந்தனம் கொஞ்சம் மறதி!"

இங்ஙனம், அவர் பிரசங்கத்தில் கொஞ்சம் மூச்சு வாங்கும் பொருட்டாக, ஒரு விகட வார்த்தை சொன்னவுடனே, அவருடைய முக்கிய சிஷ்யராகிய கொங்கண

பட்டர் கொல்லென்று சிரித்தார். வீராசாமி நாயக்கர் மேற்படி பட்டாசார்யாருடைய தலையில் ஒரு குட்டுக் குட்டி ஒரு தரத்துக்குப் பொடி போட்டுக் கொண்டார்.

**வாத்தியார் மறுபடியும் கோஷிக்கலானார்.**

"ருதுவான பிறகு, பெண்ணுடைய இஷ்டப்படி கலியாணம் செய்யவேண்டும்: புருஷன் கொடுமையைச் சகிக்க முடியாமலிருந்தால், ஸ்திரீ சட்டப்படி அவனை த்யாஜியம் செய்துவிடச் சட்டமும் இடம் கொடுக்கவேண்டும்; ஊர்க்காரரும் தூஷணை செய்யக்கூடாது. பெண் உழைத்துச் சாப்பிட முடியாது. இந்த விஷயத்தில் ஐரோப்பிய ஸ்திரீ ஸ்வதந்திர முயற்சிக்காரருடைய அபிப்பிராயத்திலிருந்து உன் அபிப்பிராயம் பேதப்படுகிறது. பெண்ணை ஸம்பாத்யம் பண்ணிப் பிழைக்க விடக்கூடாது. அவளுக்குப் பிதுரார்ஜியத்தில் பாகமிருக்க வேண்டும். கலியாணம் செய்துகொண்டால் புருஷனுடைய சொத்து அவளுடையதாகவே பாவிக்கவேண்டும். (பெண்டாட்டி கையில் காசு கொடுக்கக் கூடாதென்று சொல்லுகிற மனுஷ்யர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.) பெண் அவளிஷ்டப்படி சஞ்சரிக்கலாம். தனி இடங்களில் ஸ்திரீகளைக் கண்டால் மரியாதை செய்து வணங்கவேண்டும். அப்படி எந்தப் புருஷன் மரியாதை செய்யவில்லையென்று தோன்றுகிறதோ, அவனைக் கிருகஸ்தர்கள் நெருங்கக் கூடாது. அவன்கூட ஒருவனும் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளாமல் இருந்துவிடவேண்டும். அப்படி வீதிவழியோ, கடைத்தெருவோ, ரயில் வழியோ, காசிப் பட்டணமோ ஸ்திரீகள் தனியே போனாலும், புருடர் கண்டு வணங்கும்படி ஏற்பாடு செய்வது நாளது தேதியில் இந்தத் தேசத்தில் வெகு கஷ்டம். என்ன செய்யலாம்? ஹிந்துக்களிலே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மூட ஜனங்கள். அது எப்படி நாசமாய்ப் போனாலும், படித்துக் கௌரவமாகக் குடித்தனம் பண்ணும் ஜனக்கூட்டத்துக்குள்ளே ஸ்திரீகள் சுயேச்சையாகப் பேசலாம், சுயேச்சையாக ஸஞ்சரிக்கலாம், என்று வைக்கவேண்டும். அது ஸாத்யமாகும்படிப் புருஷரைத் தண்டிக்க வேண்டும். கையாலாகாத பேரைத் தண்டிப்பதிலே என்ன பிரயோசனம்! ஸ்வாமி எத்தனை நாள் இந்தத் தேசத்தில் பழங்குப்பையில் முழுகிக் கிடக்கப் போகிறார்கள்? நத்தைப்புழுவைப்போல ஆணும் பெண்ணும் கூடப் பிறக்கிறோம், உடன் பிறந்தான் ஆண்டான், உடன் பிறந்தவள் அடிமை. ஸ்வாமீ? சுத்த பாமர ஜனங்கள்" என்று சோனாமாரியாகப் பொழிந்தார்.

இந்தச் சமயத்தில் என்னுடைய குழந்தை வீட்டிலிருந்து ஓடிவந்து என்னைச் சாப்பிடக் கூப்பிட்டது. நான் எழுந்தேன். "பிரமராய வாத்தியார் சொல்லுகிற விஷயத்தைக் குறித்து உம்முடைய அபிப்பிராயமென்ன ?" என்று என்னை நோக்கிக் கொங்கணபட்டர் கேட்டார்.

நான் சொல்லத் தொடங்குமுன்னே, வீராசாமி நாயக்கர் மேற்படி பட்டாசார்யாருடைய தலையில் ஒரு குட்டுக்குட்டி, "நீர் சும்மா இருமே, ஓய்" என்று சொன்னார். பிறகு நான், "பூலோகத்துப் பஞ்சாயத்தெல்லாம் எனக்கு வேண்டியதில்லை ஸ்வாமி, யாருக்கு என்ன காரியம் சித்தியாக வேண்டுமானாலும், ஓம் சக்தி, ஓம் சக்தி, என்று சொன்னால், அவர்களுக்கு அந்தக் காரியம் சித்தியாகும். இதுதான் எனக்குத் தெரிந்த விஷயம்" என்றேன்.

பிரமராய வாத்தியார் "அது உண்மை" என்றார். இடிப் பள்ளிக்கூட முழுவதும் 'வாஸ்தவந்தான்' என்று ஒப்புக் கொண்டது. நான் போஜனத்துக்குப் புறப்பட்டேன்.

---

## 3

## தமிழ் நாட்டின் விழிப்பு

ஜீவஹிம்ஸை கூடாது. மதுமாம்ஸங்களால் பெரும் பான்மையோருக்குத் தீங்கு உண்டாகிறது. மது மாம்ஸங்கள் இல்லாதிருந்தால் பிராமணருக்குப் பெரிய கீர்த்தி. அது ெரிய தவம். அது கிருத யுகத்துக்கு, வேராகக் கருதக் கூடிய அநுஷ்டானம்.

ஆனாலும், தாம் ஒரு காரியத்தைச் செய்யாமலிருக்குமிடத்து, அதைப் பிறர் செய்யும்போது அஸூயை கொள்வது தவறு.

ஊண், உடை, பெண் கொடுக்கல்; வாங்கல் முதலிய விஷயங்களில் மூடத்தனமாகக் கட்டுப்பாடுகளும், விதிகளும், நடைகளும் காட்டுவதில் யாதொரு பிரயோஜனமும் கிடையாது.

மேலும் உலகத்து மனிதர்களெல்லோரும் ஒரே ஜாதி. 'இந்தச் சண்டையில் இத்தனை ஐரோப்பியர் அநியாயமாக மடிகிறார்களே' என்பதை நினைத்து நான் கண்ணீர் சிந்திய துண்டு. இத்தனைக்கும் சுதேசியத்திலே கொஞ்சம் அழுத்தமானவன். அப்படியிருந்தும் ஐரோப்பியர் மடிவதில் எனக்குச் சம்மதம் கிடையாது. எல்லா மனிதரும் ஒரே வகுப்பு.

சகல மனிதரும் சகோதரர். மனுஷ்ய வர்க்கம் ஓருயிர். இப்படியிருக்க, நாம் ஒரு வீட்டுக்குள்ளே மூடத்தனமாக ஆசாரச் சுவர்கள் கட்டி, "நான் வேறு ஜாதி, என் மைத்துனன் வேறு ஜாதி, இருவருக்குள் பந்தி போஜனம் கிடையாது. அவனை ஜாதிப் பிரஷ்டம் பண்ண வேண்டும்" என்பது சுத்த மடமையென்பதைக் காட்டும்பொருட்டாக இத்தனை தூரம் எழுதினேனே தவிர வேறில்லை.

தமிழ் நாட்டில் ஜாதி ஸம்பந்தமான மூட விதிகளும் ஆசாரங்களும் சடசட வென்று நொறுங்கி விழுகின்றன.

அடுத்த விஷயம், பெண் விடுதலை. தமிழ் நாட்டில் பெண் விடுதலைக் கக்ஷிக்குத் தலைவியாக ஸ்ரீமான் நீதிபதி சதாசிவம் அய்யரின் பத்தினி மங்களாம்பிகை விளங்குகிறார். ஸ்ரீ அனி பெசண்ட் இந்த விஷயத்தில் அவருக்குப் பெரிய திருஷ்டாந்தமாகவும், தூண்டுதலாகவும் நிற்கிறார்.

இவ்விருவராலும் இப்போது பாரத தேசத்தில் உண்மையான பெண்விடுதலை உண்டாக ஹேது ஏற்பட்டது. இவ்விருவருக்கும் தமிழுலகம் கடமைப்பட்டது. இவர்களுடைய கக்ஷி என்னவென்றால் : 'ஸ்திரீகளுக்கு ஜீவன் உண்டு ; மனம் உண்டு ; புத்தியுண்டு ; ஐந்து புலன்கள் உண்டு ; அவர்கள் செத்த யந்திரங்களல்லர்; உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர்; சாதாரணமாக ஆண் மாதிரியாகவேதான். புறவுறுப்புக்களில் மாறுதல் ; ஆத்மா ஒரே மாதிரி.'

இதனை மறந்து அவர்களைச் செக்கு மாடுகளாகப் பாவிப்போர் ஒரு திறத்தார். பஞ்சுத் தலையணைகளாக் கருதுவோர் மற்றொரு திறத்தார். இரண்டும் பிழை.

ஸ்திரீகள் தமக்கிஷ்டமான பேரை விவாகம் செய்து கொள்ளலாம். விவாகம் செய்துகொண்ட புருஷனுக்கு ஸ்திரீ அடிமையில்லை ; உயிர்த்துணை ; வாழ்க்கைக்கு ஊன்று

கோல்; ஜீவனிலே ஒரு பகுதி; சிவனும் பார்வதியும் போலே. விஷ்ணுவும் லக்ஷ்மியும் போலே. விஷ்ணுவும் சிவனும் பரஸ்பரம் உதைத்துக்கொண்டதாகக் கதை சொல்லும் பொய்ப் புராணங்களிலே லக்ஷ்மியை அடித்தா ரென்றுவது, சிவன் பார்வதியை விலங்கு போட்டு வைத் திருந்தாரென்றுவது கதைகள் இடையா. சிவன் ஸ்திரீயை உடம்பிலே பாதியாகத் தரித்துக்கொண்டார். விஷ்ணு மார்பின் மேலே இருத்தினர். பிரம்மா நாக்குக்குள்ளேயே மனைவி யைத் தாங்கி நின்றார். ஜகத்திற்கு ஆதாரமாகிய பெருங் கடவுள் ஆண் பெண் என இரண்டு கலைகளுடன் விளங்கு கிறது. இரண்டும் பரிபூர்ணமான சமானம். பெண்ணை அணுவளவு உயர்வாகக் கூறுதலும் பொருந்தும்.

எனவே, இன்று தமிழ் நாட்டில் மாத்திரமேயல்லாது பூமண்டல முழுதிலும், பெண்ணைத் தாழ்வாகவும், ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கெல்லாம் அஸ்தி வாரம்; அநீதிகளுக்கெல்லாம் கோட்டை; கலியுகத்திற்குப் பிறப்பிடம்.

இந்த விஷயம், தமிழ் நாட்டில் பல புத்திமான்களின் மனதிலே பட்டு, பெண் விடுதலைக் கக்ஷி தமிழ் நாட்டின் கண்ணே பலமடைந்து வருவதை நோக்குமிடத்தே எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியுண்டாகிறது. இந்த விஷயத்திலும் தமிழ் நாடு பூமண்டலத்துக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குமென்பதில் ஆக்ஷேபமேயில்லை.

அடுத்த விஷயம் மத பேதங்களைக் குறித்தது. இதில் பாரத தேசம்—முக்கியமாகத் தமிழ்நாடு—இன்று புதிதாக அன்று; நெடுங்காலமாக, தலைமையொளி வீசி வருதல் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ராமானுஜர் தமிழ் நாட்டில் பிறந்தவர் அன்றோ? ஆழ்வார்களும், நாயன் மார்களும் அவதாரம் புரிந்தது தமிழ் நாட்டிலன்றோ? பறையனைக் கடவுளுக்கு நிகரான நாயனாராக்கிக் கோயிலில் வைத்தது தமிழ் நாட்டிலன்றோ? சிதம்பரம் கோயிலுக் குள்ளே நடராஜாவுக்கு ஒரு சந்நதி, பெருமாளுக்கொரு சந்நதி; ஸ்ரீரங்கத்திலே, பெருமாளுக்கு ஒரு துருக்கப் பெண்ணைத் தேவியாக்கித், துலுக்க நாச்சியார் என்று பெயர் கூறி வணங்குகிறார்கள். “எம்மதமும் சம்மதம்” என்றார் ராமலிங்க ஸ்வாமி.

உலகத்திலுள்ள மதபேதங்களையெல்லாம் வேருடன் களைந்து ஸர்வ ஸ்மய ஸமரஸக் கொள்கையை நிலைநாட்ட வேண்டுமானால், அதற்குத் தமிழ் நாடே சரியான களம். உலக முழுவதும் மத விரோதங்களில்லாமல் ஒரே தெய்வத்தைத் தொழுது உஜ்ஜீவிக்கும்படிச் செய்யவல்ல மஹான்கள் இப்போது தமிழ் நாட்டில் தோன்றியிருக்கிறார்கள். அது பற்றியே பூமண்டலத்தில் புதிய விழிப்பு தமிழகத்தே தொடங்குமென்கிறோம்.

மேலே சொன்னபடி, 'பரிபூரண ஸமத்வம் இல்லாத இடத்தில் நாம் ஆண் மக்களுடன் வாழ மாட்டோம்' என்று சொல்லுவதனால் நமக்கு நம்முடைய புருஷராலும், புருஷ சமூகத்தாராலும் நேரத்தக்க கொடுமைகள் எத்தனையோவாயினும், எத்தன்மையுடையனவாயினும் நாம் அஞ்சக்கூடாது. சகோதரிகளே! ஆறிலும் சாவு; நூறிலும் சாவு; தர்மத்துக்காக இறப்போரும் இறக்கத்தான் செய்கிறார்கள். பிறரும் இறக்கத்தான் செய்கிறார்கள். ஆதலால், சகோதரிகளே! பெண் விடுதலையின் பொருட்டாக தர்ம யுத்தம் தொடங்குங்கள். நாம் வெற்றி பெறுவோம். நமக்குப் பராசக்தி துணை புரிவாள். வந்தே மாதரம்.

---

## 4

## பதிவிரதை

இந்தக் காலத்தில், பல பொய்கள் இடறிப்போகின்றன. பல பழைய கொள்கைகள் தவிடு பொடியாகச் சிதறுகின்றன. பல அநீதிகள் உடைபடுகின்றன. பல அநியாயக்காரர் பாதாளத்தில் விழுகிறார்கள்.

இந்தக் காலத்தில், யாருக்கும் பயந்து நாம் நமக்குத் தோன்றுகிற உண்மைகளை மறைக்கக்கூடாது. பத்திரிகைகள் தான், இப்போது உண்மை சொல்ல, சரியான கருவி. பத்திராதிபர்கள் இந்தக் காலத்தில் உண்மைக்குப் புகலிடமாக விளங்குகிறார்கள்.

'ஸ்திரீகள் பதிவிரதையாக இருக்க வேண்டும்' என்று எல்லாரும் விரும்புகிறார்கள். அதிலே கஷ்டம் என்னவென்றால், ஆண் பிள்ளைகள் யோக்கியர்கள் இல்லை. ஆண் மக்களில் ஒவ்வொருவனும் தன் மனைவி, மக்கள் பதிவிரதை

களாக இருக்கவேண்டுமென்பதில் எத்தனை ஆவலோடு இருக்கிறானோ, அத்தனை ஆவல் இதர ஸ்திரீகளின் பதி விரதத்திலே காட்டுவதில்லை. ஒவ்வொருவனும் ஏறக் குறைய தன் இனத்து ஸ்திரீகளைப் பதிவிரதை என்று நம்புகிறான்.

ஆணும் பெண்ணும் ஒன்றுக்கொன்று உண்மையாக இருந் தால் நன்மையுண்டாகும்; பதிவிரதைக்கு அதிக வீரமும், சக்தியும் உண்டு. சாவித்ரி தனது கணவனை எமன் கையி லிருந்து மீட்ட கதையில் உண்மைப்பொருள் பொதிந்திருக் கிறது. ஆனால், பதிவிரதை இல்லை என்பதற்காக ஒரு ஸ்திரீயை வதைத்து ஹிம்சை பண்ணி அடித்து ஜாதியை விட்டுத் தள்ளி ஊரார் இழிவாக நடத்தி, அவளுடன் யாரும் பேசாமல் கொள்ளாமல் தாழ்வுபடுத்தி அவளைத் தெருவிலே சாகும்படி விடுதல் அநியாயத்திலும் அநியாயம்.

அட பரம மூடர்களா! ஆண் பிள்ளைகள் தவறினால் ஸ்திரீகள் எப்படிப் பதிவிரதைகளாக இருக்க முடியும்? கற்பனைக் கணக்குப் போட்டுப் பார்ப்போம். ஒரு பட்டணத்தில் லக்ஷம் ஜனங்கள். ஐம்பதினாயிரம் பேர் ஆண்கள், ஐம்பதினா யிரம் பேர் பெண்கள். அதில் நாற்பத்தையாயிரம் ஆண்கள் பர ஸ்திரீகளை இச்சிப்பதாக வைத்துக்கொள்வோம். அதி லிருந்து குறைந்த பக்ஷம் நாற்பத்தையாயிரம் ஸ்திரீகள் பர புருஷர்களின் இச்சைக்கிடமாக வேண்டும். இந்தக் கூட்டத்தில் இருபதினாயிரம் புருஷர்கள் தம் இச்சையை ஓரளவு நிறைவேற்றுவதாக வைத்துக்கொள்வோம். எனவே, குறைந்த பக்ஷ இருபதினாயிரம் ஸ்திரீகள் விபசாரிகளாக இருத்தல் அவசியமாகிறது. அந்த இருபதினாயிரம் விபசாரி களில் நூறு பேர் தான் தள்ளப்படுகிறார்கள். மற்றவர்கள் புருஷனுடன் வாழ்கிறார்கள். ஆனால், அவளவளுடைய புருஷனுக்கு மாத்திரம் அவளவள் விபசாரி என்பது நிச்சயமாகத் தெரியாது. தெரிந்தும் பாதகமில்லை யென்று சும்மா இருப்பாருமுளர்.

ஆகவே, பெரும்பாலோர் விபசாரிகளுடனே தான் வாழ் கிறார்கள். இதனிடையே, பதிவ்ரத்யத்தைக் காப்பாற்றும் பொருட்டாக ஸ்திரீகளைப் புருஷர்கள் அடிப்பதும், திட்டுவதும், கொடுமை செய்வதும் எல்லையின்றி நடைபெற்று வரு கின்றன. சீச்சி! மானங்கெட்ட தோல்வி, ஆண்களுக்கு! அநியாயமும் கொடுமையும் செய்து பயனில்லை!

இதென்னடா இது! "என்மேல் ஏன் நீ விருப்பம் செலுத்தவில்லை ?" என்று ஸ்திரீயை அடிப்பதற்கு அர்த்தமென்ன ? இதைப் போல் மூடத்தனம் மூன்று லோகத்திலும் வேறே கிடையாது.

ஒரு வஸ்து நம்முடைய கண்ணுக்கு இன்பமாக இருந்தால், அதனிடத்தில் நமக்கு விருப்பம் இயற்கையிலே உண்டாகிறது. கிளியைப் பார்த்தால் மனிதர் அழகென்று நினைக்கிறார்கள். தவளை அழகில்லை என்று மனிதர் நினைக்கிறார்கள். இதற்காகத் தவளைகள் மனிதரை அடித்தும், திட்டியும், சிறையிலே போட்டும் துன்பப்படுத்த அவற்றுக்கு வலிமை இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்படி அவை செய்தால் நாம் நியாயமென்று சொல்லுவோமா ?

சில தேசங்களில் அன்னியர் வந்து கொடுங்கோல் அரசு செலுத்துகிறார்கள். அவர்களிடம் அந்த ஜனங்கள் ராஜபக்தி செலுத்தவேண்டுமென்றும், அங்ஙனம் பக்தி செய்யாவிட்டால், சிறைச்சாலையிலே போடுவோம் என்றும் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட ராஜ்யத்தை உலகத்து நீதிமான்கள் அவமதிக்கிறார்கள்.

அந்த அரசுபோலேதான், ஸ்திரீகள் மீது புருஷர் செய்யும் கட்டாய ஆட்சியும் என்பது யாவருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாக விளங்கும். கட்டாயப்படுத்தி என்னிடம் அன்பு செய் என்று சொல்வது அவமானமல்லவா?

ஸ்திரீகள் புருஷர்களிடம் அன்புடன் இருக்கவேண்டினால் புருஷர் ஸ்திரீகளிடம் அசையாத பக்தி செலுத்தவேண்டும். பக்தியே பக்தியை விளைவிக்கும். நம்மைப் போன்றதொரு ஆத்மா நமக்கு அச்சத்தினாலே அடிமைப்பட்டிருக்கும் என்று நினைப்பவன் அரசனாயினும், குருவாயினும், புருஷனாயினும் மூடனைத் தவிர வேறில்லை, அவனுடைய நோக்கம் நிறைவேறாது. அச்சத்தினால் மனுஷ்ய ஆத்மா வெளிக்கு அடிமைபோல நடித்தாலும் உள்ளே துரோகத்தை வைத்துக்கொண்டுதான் இருக்கும்.

அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது.

---

5

# பெண் விடுதலை (1)

இங்கிலாந்தில் பெண்களுக்கு வாக்குச் சீட்டுக் கொடுத்தாய் விட்டதென்று சில தினங்களின் முன்பு 'ராய்டர்' தந்தி வந்தது. 'அதைப் பற்றிய பத்திராதிபர் குறிப்பொன்று "ஸ்திரீகளின் ஜயம்" என்ற மகுடத்துடன் சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது. நேற்று மாலை நானும் என்னுடைய சினேகிதர் வேதாந்த சிரோமணி ராமராயரும் வேறு சிலருமாக இருக்கையில் மேற்படி தேதி (அதாவது "ஸ்திரீகளின் ஜயம்" எழுதியிருந்த) சுதேசமித்திரன் பத்திரிகையைக் கையில் எடுத்துக்கொண்டு மோட்டுவீதிக் கோபாலய்யர் பத்தினி வேதவல்லி அம்மை வந்தார்.

வேதவல்லி அம்மைக்கு நாற்பது வயது. தமிழிலும் இங்கிலீஷிலும் உயர்ந்த படிப்பு. ஸம்ஸ்கிருதம் கொஞ்சம் தெரியும். இவளுடைய புருஷன் கோபாலய்யர் பெரிய சர்க்கார் உத்தியோகத்திலிருந்து விலகிப் பணச் செருக்கு மிகுந்தவராய் தமது பத்தினியாகிய வேதவல்லியுடனும் நான்கு குழந்தைகளுடனும் சௌக்கியமாக வேதபுரத்தில் வாழ்ந்து வருகிறார். வேதவல்லிக்கு அவர் விடுதலை கொடுத்துவிட்டார். எங்கும்போகலாம், யாருடனும் பேசலாம். வீட்டுச்சமையல் முதலிய காரியமெல்லாம் ஒரு கிழவி பார்த்துக்கொள்ளுகிறாள். வேதவல்லி அம்மை புஸ்தகம், பத்திரிகை சாஸ்திர ஆராய்ச்சி, பொதுக்கூட்டம் முதலியவற்றிலே காலங்கழித்து வருகிறார்.

வேதவல்லி வரும்போது நான் ராமராயர் முதலியவர்களுடன் வேதவியாசர் செய்த பிரம்ம சூத்திரத்திற்குச் சங்கராச்சாரியர் எழுதின அத்வைத பாஷ்யத்தை வாசித்து அதன் சம்பந்தமாகத் தர்க்கித்துக்கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் வேதவல்லியார் வந்தனர். (ஒருமை பன்மை இரண்டும் பெண்களுக்கு உயர்வையே காட்டும்.) வேதவல்லிக்கு நாற்காலி கொடுத்தோம், உட்கார்ந்தாள். தாகத்துக்கு ஜலம் கொண்டுவரச் சொன்னாள். பக்கத்திலிருந்த குழந்தையை மடைப்பள்ளியிலிருந்து ஜலம்கொண்டு கொடுக்கும்படி ஏவினேன். அதனிடையே, வேதவல்லி அம்மை "என்ன சாஸ்திரம் ஆராய்ச்சி செய்கிறீர்கள்?" என்று கேட்டாள். சங்கர பாஷ்யம் என்று சொன்னேன். வேதவல்லி சிரித்தாள். "சங்கர பாஷ்யமா? வெகு

ஷோக், இந்துக்களுக்கு இராஜ்யாதிகாரம் வேண்டுமென்று சொல்லித்தான் மன்றுடப்போய் ‘ஆனி பெஸண்ட்’ வலைக்குள் மாட்டிக்கொண்டாள். அவள் இங்கிலீஷ்கார ஸ்திரீ. நம்முடைய தேசத்து வீராதிவீரராகிய ஆண் பிள்ளைச் சிங்கங்கள் சங்கர பாஷ்யம் வாசித்துப் பொருள் விவரித்துக்கொண்டிருக்கிறார்கள். ஷோக்! ஷோக்! இரட்டை ஷோக்!” என்றாள்.

ராமராயருக்குப் பளிச்சென்று கோபம் வந்துவிட்டது. “சரிதானம்மா, நிறுத்துங்கள். தங்களுக்குத் தெரிந்த ராஜயுக்திகள் பிறருக்குத் தெரியாதென்று நினைக்கவேண்டாம்” என்றார்.

“இங்கிலாந்தில் ஸ்திரீகளுக்குச் சீட்டுக்கொடுத்தாய் விட்டது” என்று சொல்லி வேதவல்லி தன்கையில் இருந்த சுதேசமித்திரன் பத்திரிகையை ஏறக்குறைய ராமராயர் முகத்தில் வந்து விழும்படி வீசிப்போட்டாள். ராமராயர் கையில் தடுத்துக் கீழே விழுந்த பத்திரிகையை எடுத்து மெதுவாக மேஜையின் பேரிலே வைத்துவிட்டுத் தலைக்குமேலே உத்தரத்தைப் பார்த்துக்கொண்டு ஏதோ யோசனையில் இறங்கிவிட்டார். குழந்தை இச்சமயத்தில் ஜலம் கொண்டு கொடுத்தது. வேதவல்லியம்மை அதை வாங்கிச் சற்றே விடாய் தீர்த்துக்கொண்டாள். “என்ன? ராமராயரே, மோட்டைப் பார்க்கிறீரே? மோட்டில் என்ன எழுதியிருக்கிறது? ‘ப்ரம்மம் ஸத்யம்; லோகம் மித்யை’. ஆதலால், வித்வான்கள் எப்பொழுதும் பொய் சொல்லிக் கொண்டே இருப்பதே மேன்மை, என்றெழுதியிருக்கிறதா?” என்று கேட்டாள்.

ராமராயருக்கு முகம் சிவந்து போய்விட்டது. கொஞ்சம் மீசையைத் திருகிவிட்டுக்கொண்டார். தாடியை இரண்டுதரம் இழுத்தார். கடகடவென்று சிரிக்கத் தொடங்கினார்.

ஸ்ரீமதி அனி பெஸண்டு ராஜ்ய விஷயத்திலே தலையிட்டுச் சுதேசியமே தாரகமென்றும், வந்தேமாதரம் ஒன்றே ஜீவ மந்திரம் என்றும் பேசத் தலைப்பட்டது மேற்படி ராமராயருக்குச் சம்மதமில்லை. வேதாந்திகள் எப்போதும் பரப்ரஹ்மத்தையே கவனிக்கவேண்டும்; லௌகிக விஷயங்களைத் துளிகூட கவனிக்கக் கூடாதென்பது அவருடைய மதம்.

வேதவல்லி அம்மை ராமராயரை நோக்கிச் சொல்லு கிறார் :—" எடுத்ததற்கெல்லாம் ஆனி பெஸண்ட் சொன்னதே பிரமாணம் என்று தொண்டை வறண்டு போகக் கத்திக்கொண்டிருந்தீர். இப்போது அந்த அம்மாள் சுய ராஜ்யம் நல்லதென்று சொல்லும்போது அவளைப் புறக்கணிக் கிறீர் ! ஐயோ ! கஷ்டம் ! புருஷ ஜன்மம் ! ஸ்திரீகளுக் குள்ள திறமையிலே நாலிலொரு பங்கு புருஷர்களுக்கில்லை. எல்லாத் தேசங்களிலும் புருஷரைக் காட்டிலும் ஸ்திரீ களுக்கு ஆயுள் அதிகம், அதனால் சரீர உறுதி அதிகம் என்று ருஜுவாக்கியாயிற்று ; புத்தி அதிகமென்பதுந்தான். ராமாயணத்தில் சீதை பொய் மானை மெய் மான் என்று நினைத்து ஏமாற்றம் அடைந்தாள் என்று எங்கள் வீட்டில் ஒரு தாத்தா நேற்று வந்து பேசிக்கொண்டிருந்தார். அந்தச் சீதை சொல்லுக்குக் கட்டுப்பட்டு அதை வேட்டையாடப்போன ராமனுடைய புத்தியைக் காட்டிலும் அவளுக்குப் புத்தி அதி கமா, குறைவா என்று நான் கேட்டேன். தாத்தா தலை யைக் குனிந்துகொண்டு வாயில் கொழுக்கட்டையைப் போட்டுக்கொண்டு சும்மாயிருந்தார். சகல அம்சங்களிலும் ஸ்திரீயே மேல். அதில் சந்தேகமில்லை" என்று வேதவல்லி சொன்னாள்.

" ஸ்திரீகளுக்குப் பேசும் திறமை அதிகம் " என்று ராம ராயர் சொன்னார்.

வேதவல்லியம்மை சொன்னாள் :—" ஆனி பெஸண்டுக்கு ஸமானமாக நம்முடைய புருஷரில் ஒருவருமில்லை. அந்த அம்மாள் கவர்னருடனே சம்பாஷணை செய்ததைப் பார்த் தீரா ? அந்த மாதிரி கவர்னரிடத்தில் நீர் பேசுவீரா ? "

இதைக் கேட்டவுடன் ராமராயர், " நான் வீட்டுக்குப் போய் விட்டு வருகிறேன் " என்று சொல்லி எழுந்து நின்றார். நான் இரண்டு கட்சியையும் சமாதானம் பண்ணிக் கடைசியாக வேத வல்லியம்மை பொதுப்படையாக ஆண் பிள்ளைகளை எவ்வளவு கண்டித்துப் பேசியபோதிலும் ராமராயரைச் சுட்டிக்காட்டி ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டோம். — அப்பால் வேதவல்லி அம்மையின் உபந் யாஸம் நடக்கிறது :—

" ஹிந்து ஸ்திரீகள் ராஜ்ய விவகாரங்களிற் சேர்ந்து பாடு படாத வரையில், இங்குள்ள புருஷர்களுக்கு விடுதலை

ஏற்பட நியாயமில்லை. இந்தத் தேசத்தில் ஆதிகாலத்துப் புருஷர் எப்படி யெல்லாமோ இருந்ததாகக் கதைகளில் வாசித்திருக்கிறோம். ஆனால் இப்போதுள்ள புருஷரைப் பற்றிப் பேசவே வழியில்லை. ஹிந்து ஸ்திரீகள் ராஜ்ய விவகாரங்களிலே தலையிட்டால் ஆனி பெஸண்டுக்கு ஸமானமாக வேலை செய்வார்கள். இங்குள்ள ஆண் பிள்ளைகள் வேதாந்த விசாரணைக்கும் குமாஸ்தா வேலைக்கும்தான் உபயோகப்படுவார்கள். ராஜ்ய க்ஷேமத் தைக் கருதி தைரியத்துடன் கார்யம் நிறைவேறும் வரை பாடுபடும் திறமை இத்தேசத்துப் புருஷருக்கு மட்டு. ஸரோ ஜினி நாயுடு எவ்வளவு தைரியமாகப் பேசுகிறாள், பார்த்தீர் களா? உலகத்தில் எங்குமே புருஷரைக் காட்டிலும் ஸ்திரீ கள் அதிக புத்திசாலிகள் என்றும், தைரியசாலிகள் என்றும் எனக்குத் தோன்றுகிறது. மற்றத் தேசங்களில் எப்படியானாலும், இங்கே பெண்ணுக்குள்ள தைர்யமும் புத்தி யும் ஆணுக்குக் கிடையாது. இங்கிலாந்தில் பெண்கள் ஆண் பிள்ளைகளை வசப்படுத்தி எவ்வளவு சுலபமாகச் சீட்டு வாங்கி விட்டார்கள்.

ஹோ! ஹோ! அடுத்த தடவை இங்கிருந்து காங்கிரஸ்காரர் இங்கிலாந்திற்கு ஸ்வராஜ்யம் கேட்கப் போகும்போது, அங் குள்ள புருஷரைக் கெஞ்சினால் போதாது. ஸ்திரீகளைக் கெஞ்சவேண்டும். அதற்கு இங்கிருந்து புருஷர் மாத்திரம் போனால் நடக்காது. இந்தத் தேசத்துப் புருஷர்களைக் கண் டால் அங்குள்ள ஸ்திரீகள் மதிக்கமாட்டார்கள். ஆதலால், காங்கிரஸ் ஸபையார் நமது ஸ்திரீகளை அனுப்புவதே நியாயம். எனக்கு இங்கிலீஷ் தெரியும். என்னை அனுப்பினால் நான் போய் அங்குள்ள பெண் சீட்டாளிகளிடம் மன்றாடி இந்தியா வுக்கும் சீட்டுரிமை வாங்கிக் கொடுப்பேன். பெண் பெருமை பெண்ணுக்குத் தெரியும். உங்களிடம் சொல்லிப் பிரயோ ஜனம் இல்லை" என்று சொன்னாள்.

**ராமராயர்** :—"வேறு விஷயம் பேசுவோம்" என்றார். தான் பாதி பேசும்போது, ராமராயர் தடுத்துப் பேசியதி லிருந்து, அந்த வேதவல்லி அம்மைக்குக் கோபம் உண் டாகி, "நான் இவரைக் குறிப்பிட்டு ஒன்றும் சொல்லுவ தில்லையென்றும், இவர் சும்மாயிருக்க வேண்டும் என்றும் ஆரம்பத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தை இவர் அதற்குள்ளே மறந்து விட்டார்" என்று சொல்லி வெறுப்புடன் எழுந்து போய்விட்டார்.

நான் எத்தனையோ சமாதானம் சொல்லியும் கேட்க வில்லை. ' ராமராயர் இருக்கும் சபையிலே தான் இருக்க லாகாது ' என்று சொன்னாள். அந்த அம்மை சென்ற பிறகு ராமராயர் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார். " என்ன சொல்லுகிறீர் ?" என்று கேட்டேன்.

ஸ்திரீகளுக்கு விடுதலை கொடுப்பது மிகவும் அவசியத்தி லும் அவசியம் என்று ராமராயர் சொன்னார். பிறகு மறு படி சங்கர பாஷ்யத்தில் இறங்கி விட்டோம்.

## பெண் விடுதலை (2)

அடிமைகள் யாராயினும், அவர்களுக்கு விடுதலைகொடுத் தால், அதினின்றும் யுகப்பிரளயம் நிச்சயமாக நேரிட்டு, அண்டச் சுவர்கள் இடிந்துபோய் ஜகத்தே அழிந்துவிடும் என்று சொல்லுதல் அவர்களை அடிமைப்படுத்தி ஆள்வோ ருடைய ஸம்பிரதாயம்.

இருபது முப்பது வருஷங்களுக்கு முன்பு, பெண் கல்வி ஏற்பட்டால் மாதர் ஒழுக்கத்தில் தவறி விடுவார்களென்று தமிழ் நாட்டில் பலர் கூறினர். இப்போதோ, பெண் கல்வி தமிழ் நாட்டில் சாதாரணமாகப் பரவியிருக்கிறது ; அண்டச் சுவர்கள் இன்னும் இடிந்து போகவில்லை ; இதுவரை கூடிய மட்டும் பத்திரமாகவே இருந்து வருகின்றன. ஆனால், இப் பொழுது பெண்களுக்கு விடுதலை கொடுத்தால் ஏழு மேற்கு மும் கட்டாயம் இடிந்து பூமியின்மேல் விழும் என்றும் வால் நக்ஷத்திரம் வகையறுக்களெல்லாம் நடுவிலே அகப்பட்டுத் துவையலாய் விடும் என்றும் பலர் நடுங்குகிறார்கள். ' மதராஸ் மெயில் ' போன்ற ஆங்கிலேயப் பத்திராதிபதியிடம் போய் இந்தியாவிற்குச் சுயராஜ்யம் கொடுத்தால் என்ன நடக்கும் என்று கேளுங்கள். " ஓஹோ ! ஹோ ! ஹோ ! இந்தியா விற்குச் சுயராஜ்யம் கொடுத்தால் பஞ்சாபிகள் ராஜபுத்திரரைக் கொல்வார்கள். பிறகு, ராஜபுத்திரர் மஹாராஷ்டிரரின் கூட்டத்தையெல்லாம் விழுங்கிப் போடுவார்கள். அப்பால், மஹாராஷ்டிரர் தெலுங்கரையும், கன்னடரையும், மலையாளி களையும் தின்று விடுவார்கள். பிறகு மலையாளிகள் தமிழ்ப் பார்ப்பாரையும், தமிழ்ப் பார்ப்பார் திராவிடரையும் சூர்ண

மாக்கி விடுவார்கள். சூர்ணித்த திராவிடர் வங்காளிகளின் எலும்புகளை மாலையாகப் புனைவர்'' என்று சொல்லிப் பெருமூச்சு விடுவார். அதே கேள்வியை நீதிபதி மணி அய்யர், கேசவப் பிள்ளை, சிதம்பரம் பிள்ளை முதலியவர்களைப் போய்க் கேளுங்கள். '' அப்படி பெரிய அபாயம் ஒன்றும் உண்டாகாது. ஸ்வராஜ்யம் கிடைத்தால் கஷ்டம் குறையும். பஞ்சம் வந்தால் அதை பொறுக்கத் திறன் உண்டாகும். அகால மரணம் நீங்கும். அவ்வளவுதான்'' என்று சொல்லுவார்கள்.

அதுபோலே, பெண்களுக்கு விடுதலை கொடுத்ததனால் ஜன சமூகம் குழம்பிப்போய்விடும் என்று சொல்லுவோர், பிறர் தமது கண்முன் ஸ்வேச்சையுடன் வாழ்வதைத் தாம் பார்க்கக் கூடாதென்று அசூயையால் சொல்லுகிறார்களேயொழிய வேறொன்றுமில்லை. விடுதலை என்றால் என்ன அர்த்தம்? விடுதலை கொடுத்தால் பிற ஸ்திரீகள் என்ன நிலையில் இருப்பார்கள்? பெண்களுக்கு விடுதலை கொடுக்கவேண்டும் என்றால் என்ன செய்யவேண்டும்? வீடுகளை விட்டு வெளியே துரத்தி விடலாமா? செய்யவேண்டிய விஷயமென்ன என்று பலர் சங்கிக்கலாம். இங்ஙனம் சங்கையுண்டாகும்போது விடுதலையாவது யாது? என்ற மூலத்தை விசாரிக்கும்படி நேரிடுகிறது. இதற்கு மறு மொழி சொல்லுதல் வெகு சுலபம். பிறருக்குக் காயம் படாமலும், பிறரை அடிக்காமலும், வையாமலும், கொல்லாமலும், அவர்களுடைய உழைப்பின் பயனைத் திருடாமலும், மற்றப்படி எறக்குறைய 'நான் எது பிரியமானாலும் செய்யலாம்' என்ற நிலையில் இருந்தால் மாத்திரமே என்னை விடுதலையுள்ள மனிதனாகக் கணக்கிடத் தகும். 'பிறருக்குத் தீங்கில்லாமல் அவனவன் தன் இஷ்டமான தெல்லாம் செய்யலாம் என்பதே விடுதலை' என்று ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் சொல்லுகிறார்.

இந்த விதிப்படி உலகத்தில் பெரும்பான்மையான ஆண் மக்களுக்கே விடுதலை உண்டாகவில்லை. ஆனால் இவ்விடுதலை பெறும் பொருட்டாக நாடுதோறும் ஆண் மக்கள் பாடுபட்டு வருகிறார்கள். ஆண் மக்கள் ஒருவருக்கொருவர் அடிமைப் பட்டிருக்கும் கொடுமை சகிக்க முடியாது. ஆனால், இதில் எற்படும் கஷ்ட நஷ்டங்களைக் காட்டிலும் பல்லாயிர மடங்கு அதிகக் கஷ்ட நஷ்டங்கள் பெண் கூட்டத்தை ஆண் கூட்டம் அடிமைப்படுத்தி வைத்திருப்பதால் விளைகின்றன.

அடிமைத் தேசங்களிலே கூட ஆண் மக்களிற் பெரும் பாலோர்—அதாவது ரஹஸ்யப் போலீஸ் உபத்திரவத்திற்கு இடம் வைத்துக்கொண்டவர் தவிர மற்றவர்கள்—தம் இஷ்டப் படி எந்த ஊருக்குப் போகவேண்டுமானாலும், போகலாம், எங்கும் சஞ்சரிக்கலாம்: தனியாக சஞ்சாரம் பண்ணக்கூடா தென்ற நியதி கிடையாது. ஆனால் பெண் தன்னிஷ்டப்படி தனியே சஞ்சரிக்க வழியில்லாத தேசங்களும் உள. அவற்றில் நமது தேசத்தில் பெரும் பகுதி உட்பட்டிருப்பதைப் பற்றி மிகவும் விசனப்படுகிறேன்.

"ஓஹோ! பெண்கள் தனியாகச் சஞ்சாரம் செய்ய இடங் கொடுத்தால் அண்டங்கள் கட்டாயம் இடிந்துபோகும். ஒருவித மான நியதியும் இருக்காது. மனுஷ்யர் மிருகப் பிராயமாய் விடுவார்கள்" என்று சில தமிழ் நாட்டு வைதிகர் நினைக்க லாம், அப்படி நினைப்பது சரியில்லை. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பெண்கள் இஷ்டப்படி எங்கு வேண்டுமானா லும் போகலாமென்று வைத்திருக்கிறார்கள். அதனால் பூகம்பமொன்றும் நேர்ந்துவிடவில்லை. ஸ்ரீமதி அனி பெஸண்டை நம்மவர்களிலே பலர் மிகவும் மரியாதையுடன் புகழ்ந்து பேசுகிறார்கள். 'அவரைப் போலே நமது ஸ்திரீகள் இருக்கலாமே' என்றால், நம்மவர் கூடாதென்றுதான் சொல்லுவார்கள். காரணமென்ன? ஐரோப்பிய ஸ்திரீகளைக் காட்டிலும் நமது ஸ்திரீகள் இயற்கையிலே நம்பத்தகாத வர்கள் என்று தாத்பர்யமா?

மேலும், ஐரோப்பியரைத் திருஷ்டாந்தம் காட்டினால் நமக்கு ஸரிப்படாது. நாம் ஆரியர்கள், திராவிடர்கள்; அவர் களோ, கேவலம் ஐரோப்பியர் என்று சொல்லிச் சிலர் தலையசைக்கலாம்.

சரி, இந்தியாவிலே மஹாராஷ்டிரத்தில் ஸ்தீரீகள் யதேச் சையாகச் சஞ்சாரம் பண்ணலாம்; தமிழ் நாட்டில் கூடாது. ஏன்?

பெண்களுக்கு விடுதலை கொடுப்பதில் இன்னும் முக்கிய மான ஆரம்பப் படிகள் எவையென்றால்:—

(1) பெண்களை ருதுவாகு முன்பு விவாகம் செய்து கொடுக்கக்கூடாது.

(2) அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தல்கூடாது.

(3) விவாகம் செய்துகொண்ட பிறகு அவள் புருஷனை விட்டு நீங்க இடங்கொடுக்கவேண்டும். அதன்பொருட்டு அவளை அவமானப்படுத்தக்கூடாது.

(4) பிதுரார்ஜிதத்தில் பெண்குழந்தைகளுக்கு ஸமபாகம் செய்துகொள்வதைத் தடுக்கக்கூடாது.

(5) விவாகமே இல்லாமல் தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றால் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்திரீகளை யதேச்சையான தொழில்செய்து ஜீவிக்க இடங்கொடுக்கவேண்டும்.

(6) பெண்கள் கணவனைத் தவிர வேறு புருஷருடன் பேசக்கூடாதென்றும், பழக்கக்கூடாதென்றும் பயத்தாலும் பொறாமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்து விடவேண்டும்.

(7) பெண்களுக்கும் ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக்கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்தவேண்டும்,

(8) தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்யோகம் பெற விரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக் கூடாது.

(9) தமிழ் நாட்டில் ஆண்மக்களுக்கே ராஜீய சுதந்திரம் இல்லாமல் இருக்கையிலே, அது பெண்களுக்கு வேண்டுமென்று இப்போது கூறுதல் பயனில்லை எனினும், சீக்கிரத்தில் தமிழருக்குச் சுயராஜ்யம் கிடைத்தால் அப்போது பெண்களுக்கும் ராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்கவேண்டும். சென்ற வருஷத்துக் காங்கிரஸ் சபையில் தலைமைவகித்தவர் மிஸஸ் ஆனி பெஸண்டு என்ற ஆங்கிலேய ஸ்திரீ என்பதை மறந்துபோகக்கூடாது.

இங்ஙனம் நமது பெண்களுக்கு ஆரம்பப்படிகள் காட்டினோமானால், பிறகு அவர்கள் தமது முயற்சியிலே பரிபூரண விடுதலை நிலைமையை எட்டி மனுஷ்ய ஜாதியைக் காப்பாற்றுவார்கள். அப்போதுதான் நமது தேசத்துப் பூர்வீக ரிஷிபத்தினிகள் இருந்த ஸ்திதிக்கு நமது ஸ்திரீகள் வர இடமுண்

டாகும். ஸ்திரீகளை மிருகங்களாக வைத்து நாம் மாத்திரம் மஹரிஷிகளாக முயலுதல் மூடத்தனம். பெண் உயராவிட்டால் ஆண் உயராது.

## பெண் விடுதலைக்குத் தமிழ்ப் பெண்கள் செய்யத்தக்கது யாது ?

**[புதுச்சேரியில் ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியின் குமாரி ஸ்ரீ தங்கம்மாவால் ஒரு பெண்கள் கூட்டத்தில் படிக்கப் பெற்றது.]**

ஆறிலும் சாவு ; நூறிலும் சாவு ; ஆணுக்கு மட்டுமன்று, பெண்ணுக்குமப்படியே.

ஆதலால் உயிருள்ளவரை இன்பத்துடன் வாழ விரும்புதல் மனுஷ்ய ஜீவனுடைய கடமை. இன்பத்துக்கு முதல் அவசியம் விடுதலை. அடிமைகளுக்கு இன்பம் கிடையாது. தென் ஆப்பிரிக்காவில் ஹிந்து தேசத்தார் படுங் கஷ்டங்களைக் குறித்து, 1896-ம் வருஷத்தில் கல்கத்தாவில் கூடிய பன்னிரண்டாயிரம் ஜனசபைக் (காங்கிரஸ்) கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மான மொன்றை ஆதரித்துப் பேசுகையில் வித்வான் ஸ்ரீ ஜி. பரமேச்வரன் பிள்ளை பின்வருமாறு கூறினர் :—

" மிகவும் உழைப்பாளிகளாகிய ஹிந்து தேசத்தார் அந்த நாட்டில் பரம்பரை முறியடிமைகளாக வாழும்படி நேர்ந்திருக்கிறது. அங்கு நம்மவர் உத்தரவுச் சீட்டில்லாமல் யாத்திரை செய்யக்கூடாது. இரவு வேளையில் வெளியே சஞ்சரிக்கக் கூடாது. நகரங்களுக்கு நடுவே குடியிருக்கக்கூடாது. ஒதுக்கமாக நமக்கென்று கட்டப்பட்டிருக்கும் சேரிகளில் வசிக்க வேண்டும். ரயில் வண்டியில் மூன்றாவது வகுப்பிலேதான் ஏறலாம் ; முதலிரண்டு வகுப்புக்களில் ஏறக்கூடாது. நம்மை ட்ராம் வண்டியிலிருந்து துரத்துகிறார்கள். ஒற்றையடிப் பாதையினின்றும்கீழே தள்ளுகிறார்கள். ஹோட்டல்களில் நுழையக் கூடாதென்கிறார்கள். பொது ரஸ்தாக்களில் நடக்கக் கூடாதென்று தடுக்கிறார்கள். நம்மைக் கண்டால்

காறி உமிழ்கிருர்கள். ‘ ஹுஸ் ’ என்று சீத்காரம் பண்ணு கிருர்கள். நம்மை வைகிருர்கள், சபிக்கிருர்கள். மனுஷ்ய ஜந்துக்களிஞல் சகிக்கக்கூடாத இன்னும் எத்தனையோ அவமானங்களுக்கு நம்மை உட்படுத்துகிருர்கள். ஆகையால் நம்மவர் இந்த நாட்டிலேயே இருந்து பஞ்சத்திலும் கொள்ளே நோயிலும் அழிந்திட்டாலும் பெரிதில்லே. நமது ஸ்வதந் திரங்களே வெளிநாடுகளில் அன்னியர் காலின்கீழே போட்டு மிதிக்காதபடி ராஜாங்கத்தாரால் நம்மைக் காப்பாற்ற முடியா விட்டால், நம்மவர் வேற்று நாடுகளுக்குக் குடியேறிப் போகா மல் இங்கிருந்து மடிதலே நன்று ” என்ருர். என்ன கொடு மையான நிலே பார்த்தீர்களா ?

ஆனுல், சகோதரிகளே, தென் ஆப்பிரிக்காவில் மாத்திரமே இவ்விதமான கொடுமைகள் நடக்கின்றன என்று நினைத்து விடாதீர்கள் !

சகோதரிகளே ! ஔவையார் பிறந்தது தமிழ் நாட்டில் ; மதுரை மீனுக்ஷியும், அல்லி அரசாணியும் நேற்று மங்கம் மாளும் அரசு புரிந்த தமிழ் நாட்டிலே நம்முடைய நிலேமை தென்னுப்பிரிக்காவில் ஹிந்து தேசக் கூலிகளுடைய நிலேமை யைக் காட்டிலும் கேடு கெட்டிருக்கிறதா ? இல்லேயா ? உங் களுடைய அனுபவத்திலிருந்து நீங்களே யோசனே பண்ணிச் சொல்லுங்கள்.

நாமும் ஸ்வேச்சைப்படி வெளியே சஞ்சரிக்கக்கூடாது ; நம்மைச் சேரிகளில் அடைக்காமல் சிறைகளில் அடைத்து வைக்க முயற்சி செய்கிருர்கள். ரயில் வண்டிகளில் நமக் கென்று தனிப்பகுதி ஏற்பாடு செய்து வைத்திருக்கிருர்கள். நம்மைக் கண்டாலும் ஆண் மக்கள் நிஷ்காரணமாய்ச் சீறி விழுகிருர்கள் ; காறி உமிழ்கிருர்கள் ; வைகிருர்கள் ; அடிக் கிருர்கள் ; நாம் நம்மிஷ்டப்படி பிறருடன் பேசக்கூடாதென்று தடை செய்கிருர்கள். மிருகங்களே விற்பதுபோல், நம்மை விலேக்கு விற்கிருர்கள். தம்முடைய நூல்களிலும் ஸம்பா ஷணைகளிலும் ஓயாமல் நம்மைத் தூற்றிக்கொண்டிருக்கிருர் கள். வழக்கத்தால் நாம் இத்தனே பாடுக்கும் ஒருவாறு ஜீவன் மிஞ்சியிருக்கிருேமெனினும் இந்த நிலே மிக இழிவான தென்பதிலும், கூடிய சீக்கிரத்தில் மாற்றித் தீரவேண்டிய தென்பதிலும் சந்தேகமில்லே. இதற்கு மருந்தென்ன ?

தென் ஆப்பிரிக்காவில் ஹிந்து தேசத்துக் கூலியாட்களுக்கு ஸ்ரீமான் மோஹனதாஸ் கரம் சந்த் காந்தி எந்த வழி காட்டினரோ, அதுவே நமக்கும் வழி. தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையரை ஹிந்துக்கள் ஆயுத பலத்தால் எதிர்க்கவில்லை. கைத்துப்பாக்கி வெடிக் குண்டு முதலியவற்றை உபயோகிக்க விரும்பின சில இளைஞரைக்கூட அது செய்யலாகாதென்று மஹாத்மா காந்தி தடுத்து விட்டார். "அநியாயத்தை அநியாயத்தால் எதிர்த்தலென்பது அவசியமில்லை. அதர்மத்தை அதர்மத்தால்தான் கொல்லவேண்டுமென்பது அவசியமன்று. நாம் அநியாயத்தை நியாயத்தால் எதிர்ப்போம்; அதர்மத்தை தர்மத்தால ஒழிப்போம்" என்று காந்தி சொன்னர்.

சகோதரிகளே, நாம் விடுதலை பெறுவதற்கும் இதுவே உபாயம். நமக்கு அநீதி செய்யும் ஆண் மக்களுடனே நாம் அன்புத் தளைகளால் கட்டுண்டிருக்கிறோம். நமக்கு அவர்கள் அண்ணன் தம்பிகளாகவும், மாமன் மைத்துனராகவும், தந்தை பாட்டனராகவும், கணவர் காதலராகவும், வாய்த்திருக்கின்றனர். இவர்களே நமக்குப் பகைவராகவும் மூண்டிருக்கையிலே, இவர்களை எதிர்த்துப் போர் செய்யவேண்டுமென்பதை நினைக்கும்போது, என்னுடைய மனம், குருக்ஷேத்திரத்தில் போர் தொடங்கியபோது அர்ஜுனனுடைய மனம் திகைத்ததுபோலே திகைக்கிறது. ஆண் மக்களை நாம் ஆயுதங்களால் எதிர்த்தல் நினைக்கத்தகாத காரியம். அது பற்றியே "சாத்வீக எதிர்ப்பினல்" இவர்களுக்கு நல்ல புத்தி வரும்படிச் செய்யவேண்டுமென்று நான் சொல்லுகிறேன்.

'அடிமைப்பட்டு வாழமாட்டோம்; ஸமத்வமாக நடத்தினலன்றி உங்களுடன் சேர்ந்திருக்க விரும்போம்' என்று அவர்களிடம் வெளிப்படையாகவும் தெளிவாகவும் சொல்லிவிட்டு, அதினின்றும் அவர்கள் கோபத்தால் நமக்கு விதிக்கக்கூடிய தண்டனைகளையெல்லாம் தெய்வத்தை நம்பிப் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுப்பதே உபாயம். இந்தச் சாத்வீக எதிர்ப்பு முறையை நாம் அனுசரிக்கத் தொடங்கவேண்டுமாயின், அதற்கு இந்தக் காலமே சரியான காலம். இந்த வருஷமே சரியான வருஷம். இந்த மாஸமே நல்ல மாஸம், இன்றே நல்ல நாள். இந்த முகூர்த்தமே தகுந்த முகூர்த்தம்.

சகோதரிகளே! இப்போது பூமண்டலமெங்கும் விடுதலைப் பெருங்காற்று வீசுகிறது. கொடுங்கோலரசர்களுக்குள்ளே கொடியவனாய் ஹிரண்யனைப்போல் ஐரோப்பாவின் கிழக்கே பெரும் பகுதியையும் ஆசியாவின் வடக்கே பெரும் பகுதியையும் ஆண்ட ஸார் சக்கரவர்த்தி, இப்போது ஸைபீரியாவில் சிறைப்பட்டுக்கிடக்கிறான். "பாரத நாட்டைக் காப்பதிலே எனக்குத் துணைபுரிய வாருங்கள்" என்று ஆங்கிலேயன் ஹிந்துக்களைக் கூப்பிடுகிறான். விடுதலைக் காற்று 'வீர், வீர்' என்று வேகமாக வீசுகிறது.

ஒரு ஸ்திரீயானவள் இந்த ஸாத்விக எதிர்ப்பு முறையை அனுசரிக்க விரும்பினால் தனது கணவனிடம் சொல்லத் தக்கது யாதெனில் :—

"நான் எல்லா வகைகளிலும் உனக்குச் சமமாக வாழ்வதில் உனக்குச் சம்மதமுண்டானால் உன்னுடன் வாழ்வேன். இல்லாவிட்டால் இன்று இராத்திரி சமையல் செய்யமாட்டேன். எனக்கு வேண்டியதைப் பண்ணித் தின்றுகொண்டிருப்பேன். உனக்குச் சோறு போடமாட்டேன், நீ அடித்து வெளியே தள்ளினால் ரஸ்தாவில் கிடந்து சாவேன். இந்த வீடு என்னுடையது. இதை விட்டு வெளியேறவும்மாட்டேன்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிடவும் வேண்டும். இங்ஙனம் கூறும் தீர்மான வார்த்தையை, இந்திரிய இன்பங்களை விரும்பியேனும் நகை, துணி முதலிய வீண் டம்பங்களை இச்சித்தேனும், நிலையற்ற உயிர் வாழ்வைப் பெரிதாகப் பாராட்டியேனும், மாற்றக்கூடாது. 'சிறிது சிறிதாக, படிப் படியாக ஞாயத்தை ஏற்படுத்திக் கொள்வோம்' என்னும் கோழை நிதானக் கட்சியாரின் மூடத்தனத்தை நாம் கைக்கொள்ளக்கூடாது. நமக்கு ஞாயம் வேண்டும். அதுவும் இந்த க்ஷணத்தில் வேண்டும்.

இங்ஙனம், 'பரிபூர்ண ஸமத்வ மில்லாத இடத்திலே ஆண் மக்களுடன் நாம் வாழமாட்டோம்' என்று சொல்வதனால், நமக்கு நம்முடைய புருஷர்களாலும் புருஷ சமூகத்தாராலும் ஏற்படக்கூடிய கொடுமைகள் எத்தனையோ வாயினும், எத்தன்மையுடையனவாயினும், அவற்றால் நமக்கு மரணமே நேரிடினும், நாம் அஞ்சக்கூடாது. ஸஹோதரிகளே! ஆறிலும் சாவு; நூறிலும் சாவு. தர்மத்துக்காக மடிகிறவர்களும் மடியத்தான் செய்கிறார்கள்; ஸாமான்ய ஜனங்களும் மடியத்தான் செய்கிறார்கள்.

ஆதலால், ஸஹோதரிகளே, பெண் விடுதலைக்காக அந்த க்ஷணத்திலேயே தர்ம யுத்தம் தொடங்குங்கள். நாம் வெற்றி பெறுவோம். நமக்கு மஹா சக்தி துணை செய்வாள். வந்தே மாதரம்.

---

## 6

## தமிழ் நாட்டு மாதருக்கு

இந்திய தேசத்து ஸ்திரீகள் இங்குள்ள ஆண் மக்களால் நன்கு மதிக்கப்படுவதற்குள்ள பல உபாயங்களில் வெளி நாட்டாரின் மதிப்பைப்பெற முயல்வதும் ஒரு உபாயமாம். திருஷ்டாந்தமாக, சில வருஷங்களுக்கு முன்பு, ஐரோப்பா விலும் அமேரிக்காவிலும், 'இந்தியா நாகரீகக் குறைவான தேசம்' என்ற எண்ணம் வெகு சாதாரணமாகப் பரவி யிருந்தது. மேற்றிசையோர்களுக்குள்ளே சில விசேஷ பண்டிதர்கள் மட்டும் நம்முடைய வேதங்கள், உபநிஷத்துக் கள், ஸாங்கியம், யோகம் முதலிய தர்சனங்கள் (அதாவது ஞான சாஸ்திரங்கள்); காளிதாஸன் முதலிய மஹா கவி களின் காவியங்கள்; ராமாயணம், பாரதம்; பஞ்சதந்திரம் முதலிய நீதி நூல்கள்—இவற்றை மூலத்திலும், மொழி பெயர்ப்புக்களின் வழியாகவும் கற்றுணர்ந்தோராய், அதி லிருந்து ஹிந்துக்கள் பரம்பரையாகவே நிகரற்ற ஞானத் தெளிவும் நாகரீகமும் உடைய ஜனங்கள் என்பதை அறிந் திருந்தனர். இங்ஙனம் மேற்குத் தேசங்களில் பதினாயிரம் அல்லது லக்ஷத்தில் ஒருவர் இருவர் மாத்திரம் ஒருவாறு நமது மேன்மையை அங்கீகாரம் செய்தனர். எனினும், அந் நாடுகளிலே பொது ஜனங்களின் மனதில் 'இந்தியா தேசத் தார் ஏறக்குறைய காட்டு மனிதரின் நிலையிலுள்ளோர்' என்ற பொய்க் கொள்கையே குடிகொண்டிருந்தது. அப்பால் ஸ்வாமி விவேகானந்தரும் பின்னிட்டு ரவீந்திரநாத தாகூர், ஜகதீச சந்திர வஸு முதலிய மஹான்களும் மேற்றிசையில் விஸ்தாரமான யாத்திரைகள் செய்து தம்முடைய அபார சக்திகளைக் காண்பித்த பின்னரே, மேற்றிசைவாசிகளில் பலர், 'அடா! இந்த ஹிந்துக்கள் நாகரீகத்திலும், அறிவிலும் இவ்வளவு மேம்பட்டவர்களா?' என்று வியப்பெய்தினர்.

தவிரவும், மேற்கத்தியார் நம்மைக் குறைவாக நினைக் கிறார்கள் என்பதை அவ்விடத்துப் பத்திரிகைகளின் மூலமாகவும் புஸ்தகங்களின் மூலமாகவும் தெரிந்து கொண்ட

வர்களால் நமது தேசத்துக் கல்விப் பெருமை யால் இந்தியாவின் உண்மையான மாட்சியை அறியாது நின்ற இங்கிலீஷ்ப் படிப்பாளிகளாகிய நம்மவரில் பலரும் வெளி நாட்டாரின் எண்ணத்தையே உண்மையெனக் கருதி மயங்கிவிட்டனர். காலச் சக்கரத்தின் மாறுதலால் இந்நாட்டில் அறிவுத் துறைகள் பலவற்றிலும் மேற்படி இங்கிலீஷ்ப் படிப்பாளிகளே தலைமை வகிக்கும்படி நேர்ந்து விட்டதினின்றும், இந்தியா தன் மாண்பை முற்றிலும் மறந்துபோய் அதோ கதியில் விழுந்துவிடுமோ என்று அஞ்சக்கூடிய நிலைமை அநேகமாய் ஏற்படலாயிற்று. இப்படிப்பட்ட பயங்கரமான சமயத்தில் ஸ்வாமி விவேகானந்தர் முதலாயினோர் தம்முடைய ஞான பராக்கிரமத்தால் மேற்றிசை நாடுகளில் திக்விஜயம் பண்ணி மீண்டனர். இதினின்றும், இங்குள்ள இங்கிலீஷ்ப் படித்த சுதேச தூஷணைக் காரர் தமது மடமை நீங்கி ஹிந்து நாகரீகத்தில் நம்பிக்கை செலுத்துவராயினர். மேற்றிசையோர் எது சொன்னாலும் அதை வேதமாகக் கருதிவிடும் இயல்பு வாய்ந்த நம்மவர், முன்பு இந்தியாவை அந்த அந்நியர் பழித்துக்கொண்டிருந்த போது தாமும் பழித்தவாறே, இந்தியாவை அவர்கள் புகழத் தொடங்கியபோது தாமும் சுதேசப்புகழ்ச்சி கூறலாயினர். விவேகானந்தர் முதலானவர்கள் ஐரோப்பிய அமெரிக்கர் களால் போற்றப்படுவதன் முன்பு அம்மஹான்களை நம்மவர் கவனிக்கவேயில்லை. அப் பெரியோர் மேற்றிசையில் வெற்றி பெற்று மீண்ட மாத்திரத்தில், அவர்களை நம்மவர் தெய்வத்துக்கொப்பாக எண்ணி வந்தனை வழிபாடுகள் செய்யத் தலைப்பட்டனர். இந்த விஷயத்தை நம்முடைய மாதர்கள் நன்ருகக் கவனித்தறிந்து கொள்ளுதல் நன்று.

அறிவின் வலிமையே வலிமை. அறிவினல் உயர்ந் தோர்களை மற்ருேர் இழிவாக நினைப்பதும், அடிமைகளாக நடத்துவதும் ஸாத்யப்படமாட்டா. அறிவின் மேன்மையால் வெளித் தேசங்களிலே உயர்ந்த கீர்த்தி படைத்து மீள்வோரை அதன் பிறகு இந்தத் தேசத்தார் கட்டாயம் போற்றுவார்கள். சில ஹிந்து ஸ்திரீகள் வெளிநாடுகளுக்குச் சென்று உயர்ந்த கீர்த்தி ஸம்பாதித்துக்கொண்டு வருவார்களாயின், அதினின்றும் இங்குள்ள ஸ்திரீகளுக்கெல்லாம் மதிப்பு உயர்ந்துவிடும். இந்த விஷயத்தை ஏற்கெனவே நம்முடைய மாதர் சிலர் அறிந்து வேலைசெய்து வருகிருர்கள். வங்காளத்துப் பிராமண குலத்தில் பிறந்து ஹைதராபாத் நாயுடு ஒருவரை மணம் புரிந்து வாழும் ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு

என்ற ஸ்திரீ இங்கிலீஷ்ப் பாஷையில் உயர்ந்த தேர்ச்சி கொண்டு ஆங்கிலேய அறிஞர்கள் மிகவும் புகழ்ந்து போற்றும்படியாக இங்கிலீஷில் கவிதை எழுதுகிறார். இவருடைய காவியங்கள் பல இங்கிலாந்தில் அச்சிடப்பட்டு அங்குள்ளோரால் மிகவும் உயர்வாகப் பாராட்டப்படுகின்றன. மேலும், இந்த ஸ்திரீ இங்கிலாந்தில் பல இடங்களிலே நமது தேசத்து முன்னேற்றத்தையொட்டி அற்புதமான ப்ரஸங்கங்கள் செய்து சிறந்த கீர்த்தி படைத்திருக்கிறார். மேலும், வங்காளி பாஷையிலே கவிதை யெழுதுவோராகிய ஸ்ரீமதி காமிநீ ராய், ஸ்ரீமதி மனகுமாரிதேவி, ஸ்ரீமதி அநங்க மோஹினி தேவி என்ற மூன்று ஸ்திரீகளுடைய பாட்டுக்களை இங்கிலீஷில் மொழிபெயர்த்து அமெரிக்காவிலுள்ள பத்திரிகையொன்று புகழ்ச்சியுரைகளுடன் சிறிது காலத்துக்கு முன்பு பிரசுரம் செய்திருப்பதினின்றும், இம் மாதர்களுக்கு அமெரிக்காவில் நல்ல கீர்த்தியேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பூனா நகரத்துச் சித்திர பண்டிதராகிய ஜனப்பைஜீ ரஹ்மின் என்பவர் அமெரிக்காவின் ராஜதானியாகிய ‘ நீயூயார்க்’ நகரத்திற்குப் போய்ச் சென்ற வருஷத்தில் அந் நகரத்துச் சிற்பிகளால் மிகவும் போற்றப்பட்டனர். இவருடைய சித்திரங்களை அங்குள்ளோர் மிகவும் வியந்தனர். அஜந்தாவிலுள்ள குகைச் சித்திர வேலைகளின் ஆச்சரியத்தைக் குறித்து ஸ்ரீமான் பைஜீ ரஹ்மின் கொலம்பியா ஸர்வகலா சங்கத்தாரின் முன்னே நேர்த்தியான உபந்யாஸம் புரிந்தார். இவருடன் இவருடைய மனைவியும் அங்குச் சென்றிருந்தாள். இவர் ‘ இந்திய தேசத்துச் சங்கீதம் ’ என இங்கிலீஷில் ஒரு புஸ்தக மெழுதியிருக்கிறார். ஹிந்து ஸங்கீத சாஸ்திரத்திலும் வாய்ப்பாட்டிலும் நல்ல தேர்ச்சியுடையவர். இவர் அமெரிக்காவில் பல மாதர் ஸபைகளின் முன்பு ஹிந்து ஸங்கீதத்தைக் குறித்து பல உபந்யாஸங்கள் செய்தார். இடைக்கிடையே தம் உபந்யாஸக் கருத்துக்களைத் திருஷ்டாந்தப் படுத்தும் பொருட்டு நேர்த்தியான பாட்டுக்கள் பாடி அந்நாட்டினரை மிகவும் வியப்புறச் செய்தார்.

இங்ஙனம், தமிழ் மாதர்களிலும் பலர் மேல்நாடுகளுக்குச் சென்று புகழ் பெற்று மீள்வாராயின், அதினின்றும் இங்கே நம்முடைய ஸ்திரீகளுக்குள்ள மதிப்பு மிகுதிப்படுமென்பதில் சிறிதேனும் ஐயமில்லை. எவ்வாறு நோக்கிய போதிலும், தமிழ் நாட்டு மாதர் ஸம்பூர்ணமான விடுதலை

பெற வேண்டுவராயின் அதற்குக் கல்வித் தோணியே பெருந் துணையாம். எனவே, கொஞ்சம் கொஞ்சம் பல துறைகளில் பயிற்சி வாய்ந்திருக்கும் தமிழ்ச் சகோதரிகள் இரவு பகலாகப் பாடுபட்டு அவ்வத் துறைகளில் நிகரற்ற தேர்ச்சி பெற முயல வேண்டும். இடைவிடாத பழக்கத்தால் தமிழ் மாதர் தமக்குள்ள இயற்கையறிவை மிகவும் உன்னத நிலைக்குக் கொணர்ந்து விடுதல் சாலவும் எளியதாம். ஔவையார் பிறந்து வாழ்ந்த தமிழ்நாட்டு மாதருக்கு அறிவுப் பயிற்சி கஷ்டமாகுமா ? சற்றே ஊன்றிப் பாடுபடுவார்களாயின், தமிழ் மாதர் அறிவுப் பயிற்சிகளிலே நிகரற்ற சக்தி படைத்து விடுவார்கள். அறிவுத் திறத்தால் பிறகு விடுதலைக் கோட்டையைக் கைப்பற்றுதல் அதிசுலபமாய் விடும். எனவே, பல வித சாஸ்திரங்கள் படித்துத் தேறுங்கள் ; தமிழ்ச் சகோதரிகளே ! அங்ஙனம் தேறியவர்களில் சிலரேனும் வெளி நாடுகளுக்குப் போய்க் கீர்த்தி ஸம்பாதித்துக்கொண்டு வாருங்கள். விடுதலைத் தெய்வம் உங்களைத் தழுவும் பொருட்டு இரண்டு கைகளையும் விரித்துக்கொண்டு காத்து நிற்கிறது. தமிழ் மாதர்களே ! மனம் சோர்ந்து விடாதீர்கள். உங்களுக்கு நல்லகாலம் வருகிறது ; வந்துவிட்டது ; நீங்கள் விடுதலை பெறுவீர்கள் ; உங்களால் உலகம் மேன்மை யுறும்.

சகோதரிகளே !

தமிழ் நாட்டின் நாகரீகம் மிகவும் புராதனமானது. ஒரு தேசத்தின் நாகரீகம் அல்லது அறிவு முதிர்ச்சி இன்ன தன்மையுடையதென்று கண்டு பிடிக்க வேண்டுமாயின், அதைக் கண்ணாடிபோல் விளக்கிக் காட்டுவது அந்த நாட்டில் வழங்கும் பாஷையிலுள்ள இலக்கியம்—அதாவது காவியம் முதலிய நூல்களேயாம். இங்கிலாந்து தேசத்தின் தற்கால இலக்கிய நூல்களை வாசித்துப் பார்த்தோமாயின் அதன் தற்கால நாகரீகத்தை ஒருவாறு அளவிடக்கூடும். எனவே, தமிழ் நாட்டில் புராதன நாகரீகத்தை அளவிட்டறிவதற்குத் தமிழ் நூல்களே தக்க அளவுகோலாகின்றன. இந்தியாவில் பெரும்பான்மையான பாஷைகள் ஸம்ஸ்க்ருதத்தின் திரிபுகளேயன்றி வேறல்ல. அங்ஙனம் திரிபுகளல்லாததுவும் ஸம்ஸ்க்கிருதக் கலப்புக்குப் பிந்தியே மேன்மை பெற்றனவாம்.

தமிழ் பாஷைக்கோ இலக்கணம் முதல்முதலாக அகஸ்தியராலும் அவருடைய சிஷ்யராகிய திரணதூமாக்நி (தொல்காப்பியர்) என்ற ஆரிய முனிவராலுமே சமைத்துக் கொடுக்கப்பட்டதென்பது மெய்யே. அதனின்றும் தமிழ் இலக்கணம் பெரும்பாலும் ஸமக்கிருத இலக்கணத்தை அனுசரித்தே சமைக்கப்பட்டிருக்கிறதென்பது மெய்யே. எனினும், வடமொழிக் கலப்புக்கு முந்தித் தமிழுக்கு வேறு வகையான இலக்கணமிருந்து ஒரு வேளை பின்னிட்டு மறைந்திருக்கக் கூடுமென்று நினைப்பதற்குப் பல ஹேதுக்கள் இருக்கின்றன. இஃது எவ்வாறாயினும், ஸம்ஸ்கிருத பாஷையின் கலப்புக்கு முன்னாகவே, தமிழ் நாட்டில் மிகவும் உயர்ந்த நாகரீகமொன்று நின்று நிலவி வந்ததென்பதற்கு அடையாளமாகத் தமிழில் மிக உயர்ந்த தரமுடைய பல பழைய இலக்கிய நூல்கள் காணப்படுகின்றன.

ஐரோப்பாவிலும், ஆசியாவிலும், பிற இடங்களிலும் காணப்படும் நாகரீகங்களுக்கெல்லாம் முந்தியதும், பெரும்பான்மை மூலதாரமுமாக நிற்பது ஆர்ய நாகரீகம். அதாவது, பழைய ஸம்ஸ்கிருத நூல்களிலே சித்தரிக்கப்பட்டு விளங்குவது. இந்த ஆரிய நாகரீகத்துக்கு ஸமமான பழமை கொண்டது தமிழருடைய நாகரீகம் என்று கருதுவதற்குப் புலவிதமான ஸாக்ஷ்யங்களிருக்கின்றன. ‘ஆதியில் பரமசிவனால் படைப்புற்ற மூலபாஷைகள் வடமொழியென்று சொல்லப்படும் ஸம்ஸ்கிருதமும் தமிழுமேயாம்’ என்று பண்டைத் தமிழர் சொல்லியிருக்கும் வார்த்தை வெறுமே புராணக் கற்பனை அன்று. தக்க சரித்திர ஆதாரங்களுடையது. ‘தமிழரும் ஆரியருமல்லாத ஜனங்களைக் கடவுள் பேச்சில்லாமலா வைத்திருந்தார்?’ என்று கேட்பார்களாயின், மற்றச் சொற்களும் பல இருக்கத்தான் செய்தன. ஆனால், மனித நாகரீகத்தில் முதல் முதலாக இவ்விரண்டு பாஷைகளிலேதான் உயர்ந்த கவிதையும், இலக்கியங்களும், சாஸ்திரங்களும் ஏற்பட்டன. மற்றப் பாஷைகளின் இலக்கிய நெறிகள் இவற்றுக்குப் பின்னே அமைந்தன. பல இடங்களில் இவை இயற்றின நடையையே முன் மாதிரியாகக் கொண்டன. அதாவது, ஆரியரும் தமிழருமே உலகத்தில் முதல்முதலாக உயர்ந்த நாகரீகப் பதவி பெற்ற ஜாதியார். இங்ஙனம் முதல்முதலாக நாகரீகம் பெற்ற இவ்விரண்டு வகுப்பினரும் மிகப் பழைய நாட்களிலேயே ஹிந்து மதம் என்ற கயிற்றால் கட்டுண்டு ஒரே கூட்டத்தாராகியசெய்தி

பூ மண்டலத்தின் சரித்திரத்திலேயே மிக விசேஷமும் நலமும் பொருந்திய செய்திகளில் ஒன்ருகக் கணித்தற்குரியது.

தமிழ் நாட்டு மாதராகிய என் அன்புக்குரிய ஸஹோதரி களே! இத்தனை பழமையும் மேன்மையும் சான்ற இரண்டு பகுதிகளின் கலப்பாகுந்தன்மையால் பாரத தேசத்திலேயே மற்றப் பிரதேசங்களிலுள்ள நாகரீகத்தைக் காட்டிலுங்கூட ஒருவாறு சிறப்புடையதாகக் கருதுவதற்குரிய ஆர்ய-திராவிட நாகரீகம் உங்களுடைய பாதுகாப்பிலிருக்கிறது.

இதனை மேன்மேலும் போஷித்து வளர்க்குங் கடமை உங்களைச் சேர்ந்தது. எங்ஙனம் எனில், பொதுப்படையாக நோக்குமிடத்தே மனித நாகரீகங்கள் ஆண் மக்களின் உதவி கொண்டு பிறப்பிக்கப்படுகின்றன. அப்பால் பெரும்பாலும் பெண்களாலேயே காக்கப்படுகின்றன. இடைக்காலத்தில் மகம் மதிய நாகரீகம் வந்து ஹிந்து தர்மத்தைத் தாக்கிற்று. ஆனல், ஹிந்து தர்மம் அதிலுள்ள முக்கிய அம்சங்களைத் தனதாக்கிக்கொண்டு, அந்தத் தாக்குதலால் அழிவெய்தாமல் முன்னைக் காட்டிலும் அதிக சக்தியுடன் மிஞ்சி நின்றது. ஸமீப காலத்தில் ஐரோப்பிய நாகரீகம் இந்தியாவுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. இதுவும் நமது நாட்டு நாகரீகத்துடன் நன்ருகக் கலந்துவிட்டது. இனி இதன் விளைவுகளை நம் நாட்டாரின் அறிவினின்றும் முற்றிலும் பிரித்துக் களைதல் ஸாத்தியப்படாது. இது நம்முடைய தேச ஞானத்தின் மர்மங் களுக்குள்ளே கலந்து பெரும்பாலும் நமதாய்விட்டது. எனினும், நம்மவரிலே பல பண்டிதர்கள் பல வருஷங்களாக, “இந்த ஐரோப்பிய நாகரீகத்தை நாம் முற்றிலும் உதறித் தள்ளி விடுதல் நன்ருே? அல்லது, இதனை நாம் முழுமை யாகவே தழுவிக்கொள்ளலாமா? அல்லது, இதிலுள்ள நல்ல அம்சங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு தீயவற்றைக் களைந்து விடலாமா” என்ற விஷயங்களைக் குறித்து நீண்ட ஆலோசனைகளும் விசாரணைகளும், ஆராய்ச்சிகளும் நடத்தி வருகிருர்கள். ஆனல், இந்த ஐரோப்பிய நாகரீகமென்பது ஒரு ஸ்தூல வஸ்துவன்று. ஸ்தூல வஸ்துவாக இருந்தால் அதை நம் இஷ்டப்படித் துண்டு துண்டாக வகுக்கவும், வேண்டிய அம்சங்களை எடுத்துக்கொள்ளவும் பிறவற்றை விலக்கவும் ஸௌகர்யப்படும். மனிதர்களின் பயிற்சி இத் தகைய பொருளன்று. அஃது ஸூக்ஷ்மப் பொருள்.

ஐரோப்பிய நாகரீகத்தின் உண்மை இயல்புக்கு ஸம்பந்த மில்லாதனவும், அதன் புறத்தோலின் மீது தோன்றும்

தோற்றங்கள் போன்றனவுமாகிய முக்கியத் தன்மையில்லாத சில புற வழக்கங்களை விரும்பாத நம்மவரில் சிலர் அந்த நாகரீகத்தையே துண்டு துண்டாக வெட்ட வேண்டிய பகுதிகளைக்கொண்டு பிறவற்றை நீக்குதல் நலமென்று கருதுகிறார்கள். திருஷ்டாந்தமாக, தலை மயிரைக் கத்தரித்துக் கொள்ளுதல், சுருட்டு பிடித்தல், சாராயம் குடித்தல், பெண்களைத் தம் இஷ்டப்படி பல புருஷருடன் பேசவும் பழகவும் இடங்கொடுத்தல்—இவை போன்றனவெல்லாம் ஐரோப்பிய நாகரீகத்தின் கெட்ட லக்ஷணங்களென்றும் ஆதலால், இவற்றை நாம் நீக்கிவிட வேண்டுமென்றும், ஐரோப்பியரின் உழைப்பு, விடா முயற்சி, ஒற்றுமை, பொருள் சேர்ப்பதில் அவர்களுக்குள்ள திறமை இவை போன்றவையெல்லாம் இந்த நாகரீகத்தின் நல்ல லக்ஷணங்களென்றும், ஆதலால் இவற்றை நம்மவர் கைக்கொள்ள வேண்டுமென்றும் நம்மவரிலே பலர் அடிக்கடிச் சொல்வதை நீங்கள் கேட்டிருக்கலாம். ஆனால், இங்ஙனம் பேசுவோர், விஷயங்களை ஆழ்ந்து கவனியாமல் அவற்றின் புறத்தோலை மாத்திரம் கருதும் இயல்புடையார். ஏனென்றால் தலைமயிரை வெட்டுவதும், சுருட்டு பிடிப்பதும், சாராயங் குடிப்பதும் ஐரோப்பிய நாகரீகத்தின் தத்துவங்களல்ல. புகையிலை மாத்திரம்தான் சில நூற்றாண்டுகளின் முன்பு அமெரிக்காவிலிருந்து புதிதாக வந்த சாமான். ஐரோப்பா மூலமாக அது உலக முழுவதையும் வியாபித்தது. ஐரோப்பியர் அதைச் சுருட்டாகப் பிடிக்கிறார்கள். நம்மவரும் அந்த வழக்கத்தை அங்ஙனமே கைக்கொண்டார். பலர் அப்படிக்கின்றி, கொஞ்சம் வைதிகமான ஜனங்கள் அதை வாய்ப் புகையிலையாகவும் மூக்குப் பொடியாகவும் உபயோகிக்கிறார்கள். மதுபானம் ஐரோப்பியரின் ஸஹவாஸத்தால் இந்நாட்டில் மிகுதியுற்றதென்பது மெய்யேயாயினும், அது ஐரோப்பியரால் புதியதாகக்கொண்டு நுழைக்கப்பட்ட வழக்கமன்று; புராதன கால முதலாகவே நமது தேசத்திலுள்ளது. ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய சகோதரரும், அவதார புருஷரில் ஒருவருமாகிய பலராமர் பெருங்குடியரென்றும், ஸ்ரீ கிருஷ்ணனே சாதாரணமாகக் குடிக்கக்கூடியவரென்றும், பகவானுடைய மக்கள் குடிவெறி மிகுதியால் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு செத்தார்களென்றும் புராணங்கள் சொல்லுகின்றன.

சுருட்டுப் பிடித்தல் முதலியன ஐரோப்பிய நாகரீகத்தின் தத்துவங்களல்ல என்று மேலே சொன்னேன், அவற்றை அங்ஙனம் பாவித்தல் வெற்றிலை போட்டுக்கொள்வதையும்,

மூக்குப்பொடி போட்டுக் கொள்வதையும், உச்சந்தலையில் காலணா அகலக் குடுமி வைத்துக்கொள்வதையும் ஹிந்து மதத்தின் மூல தருமங்களாகக் கருதும் மடமைக்கு நிகராகும். மேலும், இவற்றையும் ஐரோப்பாவில் ஸ்திரீகளுக்குள்ள அதிக ஸ்வதந்திரங்களையும் ஒரே ஜாபிதாவில் சேர்த்துக் கணக்கிடுதல் மிதமிஞ்சிய அஞ்ஞானத்துக்கு லக்ஷணமாம். ஏனென்றால், ஸ்திரீ ஸ்வதந்திரம் ஆத்மஞானத்தை ஆதாரமாக உடையது. ஆண் பெண் எல்லோரும் சமானமென்பதும் பிறருக்குத் தீங்கு விளையாதவரையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் தன்னிஷ்டப்படியெல்லாம் நடக்கக்கூடிய அதிகாரமுண் டென்பதும் ஐரோப்பிய நாகரீகத்தின் மூல ஸித்தாந்தங்கள். தலைமயிர் வெட்டிக்கொள்ளுதல் முதலியன ஸௌகர்யத் தையும் காலதேச வர்த்தமானங்களையும் தழுவியேற்படும் முக்கிய தன்மையில்லாத புறநடைகள் சரீர ஸௌகரியங்களைக் கருதியும் அலங்காரத்தின் பொருட்டாகவும் ஒரு தேசத்தார் ஏற்படுத்திக்கொள்ளும் வழக்கங்கள். சில சமயங்களில் அந்தத் தேசத்தாருக்கு நன்மையாகவும் பிறருக்குத் தீமை யாகவுமிருக்கலாம். சில சமயங்களில் இவர்களுக்கே கேடாக முடியினும் முடியலாம். இவற்றுள், அலங்காரத்தைக் கருதி ஏற்படும் உடை வழக்கங்களும், மயிர் வைத்துக்கொள்ளும் வழக்கங்களும் எந்த நாட்டிலும் சாசுவதமாக நிற்கக் கூடியவை அல்ல, அடிக்கடி மாறும் இயல்புடையன. ஒரு தேசத்திலேயே எல்லோரும் ஒரே மாதிரி அலங்காரத்தை விரும்புவதில்லை. சிலருக்கு அலங்காரமாகத் தோன்றுவது சிலருக்கு விகாரமாகத் தோன்றக்கூடும். திருஷ்டாந்தமாக, தமிழ் நாட்டில் பிராமணரும் வேறு சில வகுப்பினரும் மீசையை சிரைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் பெரும் பான்மையான தமிழ் மக்கள் மீசையில்லாமலிருப்பது விகாரமென்று நினைக்கிறார்கள். இங்கிலாந்தில் நூறு வருஷங் களுக்கு முன்பு ஆண் பிள்ளைகள் தலைமயிரை கத்தரித்துக் கொள்ளும் வழக்கம் கிடையாது. தலைமயிர் முழுவதையும் நீளமாக வளர்த்து விடுதலே வழக்கமாகக் கொண்டிருந்தனர். தென்னிந்தியாவில் பெரும்பான்மையான பிராமணர் மீசை வைத்துக்கொள்வதில்லை. வேத பூமியாகிய ஆரியாவர்த் தத்தில், பிராமணர்கள் மீசையில்லாமலிருப்பது சாஸ்திர விரோதமென்று பாவிக்கிறார்கள். அங்கு ஒருவன் மீசையைச் சிரைத்தல் அவனுடைய நெருங்கிய சுற்றத்தாரில் யாரேனும் இறந்து போதற்கடையாளமாகக் கருதப்படுகிறது. பல வருஷங்களின் முன்பு நான் ஸ்ரீ காசியில் ஜயநாராயண கலாசாலை என்ற இங்கிலீஷ்ப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து

வாசிக்கப்போனேன். நான் தமிழ் நாட்டிலிருந்து சென்ற வறுதலால் தமிழ் நாட்டின் பிராமணரின் வழக்கப்படி அடிக்கடி முகக்ஷவரம் செய்துகொண்டிருந்தேன். அப்போது என்னுடன் படித்துக்கொண்டிருந்த பிள்ளைகள் என்னை நோக்கி மிகவும் ஆச்சரியப்பட்டனர். எப்போது பார்த்தாலும் இவன் மீசையைச் சிரைத்துவிட்டு வருவதின் காரணம் யாதென்று அவர்களுக்குள்ளே பல நாள் ஆலோசனை செய்து பார்த்தார்கள். அவர்களுக்கொன்றும் புலப்படவில்லை. கடைசியாக என்னையே ஒருவன் கேட்டுத் தீர்த்தான். 'உங்கள் குடும்பத்தில் யாரேனும் வாரந் தவருமல் செத்துப்போய்க் கொண்டிருக்கிருர்களா ?' என்று என்னிடம் வினவினன். அவன் இங்ஙனம் கேட்டதின் காரணத்தை அறிந்துகொண்டு "அப்படியில்லையப்பா, தமிழ் நாட்டில் பிராமணர் மீசை வைத்துக்கொள்ளும் வழக்கமில்லை" என்று தெரிவித்தேன். ஆசாரங்களும் பழக்கங்களும் சில சமயங்களில் மதக்கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டிருக்கக்கூடும். யதேச்சையாகவும் அங்ஙனமின்றி வெறுமே அர்த்தமில்லாமலும் தோன்றி நடைபெறவுங் கூடும். குடுமி வைத்துக்கொள்ளும் மாதிரிகள் இவைபோன்ற சரீர அலங்கார சம்பந்தமான வழக்கங்களை நமது நாட்டின் பிற்காலத்தில் மதக் கொள்கைகளுடன் பிணைத்து ஸ்மிருதிகளிலே அவற்றைக் குறித்துச் சட்டம் போடத் தொடங்கினர்கள். இந்தப் பரிதாபகரமான தவறுதல் ஆதிகாலம் முதல் மற்ற நாடுகளிலும் ஏற்பட்டு வந்திருக்கிறது. சிறிது காலத்து முன்புவரை சீன தேசத்தார் "பன்றிவால்" என்று சொல்லப்படும் தமது நீளக் குடுமியை மிகவும் வைதீகமாகவும் அதனை வெட்டி யெறிதல் பெரும் பாவமுமாகக் கருதி வந்தார்கள். சில வருஷங்களுக்கு முன்பு அந்நாட்டில் ராஜவம்சத்தின் ஆட்சி அழிந்து போய்க் குடியரசு ஸ்தாபனம் செய்யப்பட்டபோது பதினாயிரம் லக்ஷக்கணக்காக சீனர் ஏககாலத்தில் குடுமிகளை வெட்டியெறிந்தனர். அந்த ரோமங்கள் ஆயிரக்கணக்கான வண்டிகள் நிறைய ஏற்றப்பட்டு வியாபாரத்துக்காகப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ்விஷயத்தை நான் இவ்வளவு நீட்டாகச் சொல்ல வந்ததின் காரணம் யாதென்றால், இத்தகைய புற ஆசாரங்களைப் பாதுகாக்கும் விஷயத்தில் நமது தேசத்து மாதர் மித மிஞ்சிய கவலை செலுத்துவதை மாற்ற வேண்டுமென்ற நோக்கம்.

ஸஹோதரிகளே ! நீங்கள் ஐரோப்பிய நாகரீகத்தின் சேர்க்கையைக் குறித்துச் சிறிதேனும் வருத்தப்படவேண்டாம்.

அது நமது தேசத்துப் பயிற்சியை அழிக்கும் வலிமை யுடையதன்று. அது நமக்குத் துணை. அது நாம் அஞ்சுவதற்குரிய பிசாசன்று. வெவ்வேறு வகைப்பட்ட இரண்டு நாகரீகங்கள் வந்து கூடும்போது அவற்றுள் ஒன்று மிகவும் வலியதாகவும் மற்றொன்று மிகவும் பலவீனமாகவும் இருக்குமாயின் வலியது வலிமையற்றதை இருந்த இடம் தெரியாமல் விழுங்கி விடும். வலிமையற்ற நாகரிகத்திற்குரிய பாஷையும், மதமும் முக்கியத் தன்மையற்ற புற ஆசாரங்கள் மாத்திரமேயன்றி விவாக முறை முதலிய முக்கிய ஆசாரங்களும் அழிந்து மறைகின்றன. அந்த நாகரீகத்தைக் காத்துவந்த ஜனங்கள் பலமுடைய நாகரீகஸ்தரின் பாஷை, மதம் முதலியவற்றைக் கைக்கொள்ளுகிறார்கள். பிலிப்பைன் தீவில் அமெரிக்க நாகரீகம் இவ்வகை வெற்றியடைந்திருக்கிறது. ஆனால் நம்முடைய ஹிந்து நாகரிகம் இங்ஙனம் சக்தியற்ற வஸ்துவன்று. பிற நாகரிகங்களுடன் கலப்பதனால் இதற்குச் சேதம் நேருமென்று நாம் சிறிதேனும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. உலகத்திலுள்ள நாகரிகங்கள் எல்லாவற்றிலும் நம்முடைய நாகரிகம் அதிக சக்தி யுடையது. இது மற்றெந்த நாகரிகத்தையும் விழுங்கி ஜீர்ணித்துக் கொள்ளும் திறன் வாய்ந்தது. ஆதலால், ஐரோப்பிய நாகரிகத்தின் கலப்பிலிருந்து ஹிந்து தர்மம் தன் உண்மை இயல்பு மாறாதிருப்பது மட்டுமேயன்றி முன்னைக்காட்டிலும் அதிக சக்தியும் ஒளியும் பெற்று விளங்குகிறது. இந்த விஷயத்தை நம்முடைய மாதர்கள் நன்றாக உணர்ந்துகொண்டாலன்றி இவர்களுடைய ஸ்வதர்ம ரக்ஷணம் நன்கு நடைபெறாது.

தமிழ் நாட்டு ஸஹோதரிகளே! உங்களிடம் எத்தனையோ அரிய திறமைகளும், தந்திரங்களும் உயர்ந்து இருந்த போதிலும், கல்வியின் பரவுதல் அதிகமில்லாதபடியால் அவ்வப்போது வெளியுலகத்தில் நிகழும் செய்திகளையும் மாறுதல்களையும் நீங்கள் அறிந்துகொண்டு அதற்குத் தக்கபடி நடக்க இடமில்லாமற் போகிறது. ‘ஸ்வதர்மத்தைக் காப்பாற்றுவதில் இறந்து விட்டாலும் பெரிதில்லை’ என்று கிருஷ்ண பகவான் பகவத் கீதையில் சொல்லுகிறார். ஆனால், இங்ஙனம் உயிரினும் அருமையாகப் போற்றுதற்குரிய கடமைகள் அல்லது தர்மங்களுக்கும் அர்த்த மற்றனவும் ஸத்தில்லாதனவுமாகிய வெற்று வழக்கங்களுக்கும் பேதமறியாமல் நீங்கள் மருட்சி கொண்டு வீணே துயரப்படலாகாது. திருஷ்டாந்தமாக, தமிழ் நாட்டு மாதருக்கு மட்டுமேயன்றி உலகத்து நாகரீக தேசங்களிலுள்ள ஸ்திரீகளுக்கெல்லாம்

கற்பு மிகச்சிறந்த கடமையாகக் கருதப்படுகிறது. அதைக் காக்கும் பொருட்டாக ஒரு ஸ்திரீ எவ்வளவு கஷ்டப்பட்ட போதிலும் தகும். ஆனால் குழந்தைப் பிராய முதலாகவே செவிகளில் மிகவும் கனமான நகைகளைத் தொங்கவிட்டுத் தோள் வரையிலும், சில சமயங்களில் மார்பு வரையிலும், காது வளர்க்கும் விநோதமான ஆசாரம் தமிழ்நாட்டு மாதர்களிலே பல பகுதியாரிடம் காணப்படுகிறது. நம்முள்ளே புதிதாக இங்கிலீஷ்ப் படித்துத் தேறியவர்களில் பலர் தம்முடைய மனைவியர் ஏற்கெனவே நீளமாகவும் விகாரமாகவும் வளர்த்திருக்கும் செவிகளை மறுபடி சுருக்கித் தைத்துத் தோடு போட்டுக் கொள்ளும்படிச் செய்ய விரும்புகிறார்கள். தமக்குப் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கேனும் அங்ஙனம் காது வளர்க்காமலிருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இதற்காக, பல ஸ்திரீகள் புருஷருடன் முரண்பட்டு வீட்டில் தீராத மனஸ்தாபமும் சண்டை சச்சரவுகளும் நிகழும்படி நடக்கிறார்கள். கற்பு எங்ஙனம் ஸ்வதர்மமோ அதுபோலவே காது வளர்ப்பதும் ஸ்வதர்மமென்று அந்த ஏழை ஸ்திரீகள் அறியாமையாலே நினைக்கிறார்கள். மாதரிடையே கல்வி பரவுமாயின், இவ்விதமான தப்பெண்ணங்கள் தாமே விலகிப்போய்விடும். குடும்ப வழக்கங்களாயினும், தேச வழக்கங்களாயினும், ஜாதி வழக்கங்களாயினும் அவற்றுள் முக்கியத் தன்மையுடையன எவை, இல்லாதன எவை என்ற ஞானம் நம்முடைய ஸ்திரீகளுக்கு ஏற்படவேண்டுமாயின், அதற்குக் கல்வியைத் தவிர வேறு ஸாதனமில்லை. ஆண் மக்களுக்கு ஸமானமான கல்வித்திறமை பெண்களுக்குப் பொதுப்படையாக ஏற்படும் வரை, ஆண் மக்கள் பெண் மக்களைத் தக்கபடி மதிக்க மாட்டார்கள். தாழ்வாகவே நடத்துவார்கள். தமிழ் நாட்டு ஸஹோதரிகளே! கணவன்மார், உடன்பிறந்தார், புத்திரர் முதலியவர்களால் நன்கு மதிக்கப்பெறாமல் இழிவாகக் கருதப்பட்டு உயிர் வாழ்வதைக் காட்டிலும் இறந்துவிடுதல் நன்று.

"மானமிழந்தபின் வாழாமை முன்னினிதே". கல்விகூட அத்தனை பெரிதில்லை, தைரியம் வேண்டும். எது வரினும் நம்மைப் பிறர் தாழ்வாகக் கருதவும் தாழ்வாக நடத்தவும் இடங்கொடுக்கக் கூடாது என்ற மன உறுதிவேண்டும்.

ஐரோப்பிய நாகரீகத்தின் புறத் தோற்றங்களிலே ஆக்ஷேபத்துக்கு இடமான அம்சங்கள் பலவும் இருக்கின்றன

என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இஃது வியக்கத்தக்க தொரு செய்தியன்று. நமது ஸநாதன ஹிந்து தர்மத்தின் புறநடைகளிலே கூடப் பல வெறுக்கத்தக்க அம்சங்கள் வந்து கலந்துதான் கிடக்கின்றன. அதுபற்றி ஐரோப்பிய நாகரீகத்தையே வெறுத்தல் சால மிகப் பெரிய பேதைமையாம். நம்முடைய ஹிந்து தர்மமாகிய வேத தர்மத்துக்கு ஐரோப்பிய நாகரீகம் தனது தத்துவ நிலையில் விரோதமன்று. அதன் உள்நிலை, நான் மேலே குறிப்பிட்டபடி, நமது ஹிந்து தர்மத்துக்குப் பெருந் துணையாக அமைந்திருக்கிறது. ஸர்வ ஜீவ ஸமத்வம்—எல்லா உயிர்களும் தம்முள்ளே நிகர் என்பது, ஸர்வ ஜீவ ஐக்கியம்—எல்லா உயிர்களும் ஒன்றென்பது. இவையே ஸநாதன ஹிந்து தர்மத்தின் வேர்க்கொள்கைகள். இவற்றை மனிதர் எப்போதும் தம்முடைய நினைப்புகளிலும், செயல்களிலும் விளங்கச்செய்யும் போதுதான் ஹிந்து மதத்துக்கு உண்மையான வெற்றி ஏற்படும். இக்கொள்கையின் ஒரு சிறு அம்சத்தையே ஐரோப்பிய நாகரீகம் தனக்கு ஆதாரமாக உடையது. எல்லா ஜந்துக்களும் நிகரென்பது இறுதியான உண்மை. மனிதரெல்லோரும் தம்முள்ளே ஸமானராவாரென்பது இவ் வுண்மையின் ஒரு சிறு பகுதி. இந்தப் பகுதி யுண்மையை நிலை நிறுத்த வேண்டுமென்பதே ஐரோப்பிய நாகரீகத்தின் உட்கருத்து.

ஆனால், ஆழ்ந்த உண்மைகளைக் கண்டுபிடிப்பதில் நாம் ஐரோப்பியரைக் காட்டிலும் மிகமிக உயர்ந்திருக்கிறோமெனினும், அவற்றை அனுஷ்டானத்துக்குக்கொண்டு வருவதில் நம்மைக்காட்டிலும் அவர்கள் அதிக ஊக்கம் செலுத்துகிறார்கள். எட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகாது. அனுஷ்டானத்துக்கு வராத ஞானத்தை ஞானமென்று சொல்வதே பிழை. ஆகவே, பூமி முழுமைக்கும் பெருந்துணையாக நின்று மனுஷ்ய ஜாதியைக் காப்பாற்றக்கூடிய ஹிந்து மதத்தின் ஸார உண்மைகளை நாம் ஒழுக்கத்திலே காண்பிக்க வேண்டும். இங்ஙனம் காண்பிக்கும்படி நம்மவரைத் தூண்டி வழிகாட்டும் கடமையும் தகுதியும் நம்முடைய மாதர்களுக்கே உரியன. இதனை ஸாதிப்பதற்குரிய உபாயங்களைக் குறித்து மற்றொரு முறை எழுதுகிறேன்.

# 7

## தமிழ் நாட்டு நாகரீகம்

தமிழ் நாகரீகத்தைக் குறித்துச் சென்ற வ்யாசத்திலே பொதுப்படையாகச் சில விஷயங்கள் சொன்னேன். இங்கு அவற்றைச் சற்று விஸ்தாரமாகத் தெரிவிக்கின்றேன். பண்டைத் தமிழ் நாகரீகத்தில் ஸ்திரீகளுக்கு அதிகமான ஸ்வதந்திரம் இருந்தது. இதற்குரிய காரணங்களில் முக்கியமானது யாதெனில், தமிழ் நாட்டுக்கு மூல அரண்போல் இயற்கையால் வகுப்புற்றிருக்கும் மலையாள நாட்டின் பயிற்சிக்கும் தமிழ் நாகரீகத்துக்கும் எப்போதும் அதிகமான ஊடாட்டமிருந்துகொண்டு வந்தது. மலையாளத்து நாகரீகமோ ஸ்திரீகளை முன்னிட்டு விளங்குவது.

மிகப் பழைய தமிழ் பாஷையும், மிகவும் புராதனமான மலையாள பாஷையும் ஒரே வஸ்துதான். பிற்காலத்திலும் சேரநாடு தமிழகத்தில் ஒரு பகுதியாகவே கணக்கிடப்பட்டு வந்தது. சேரரனைவரும் தமிழரசரே ; அவர்கள் தமிழ் நாட்டு வேந்தருள்ளே சேர்த்தெண்ணப்பட்டு வந்தனர். பாஷையையொப்பவே நாகரீக விஷயத்திலும் மிகப் பழைய தமிழ் நாகரீகமும் மிகப் பழைய மலையாள நாகரீகமும் ஒரே வஸ்து தான்.

பிற்காலத்தில் மலைக்கோட்டைக்கு உட்பட்ட மலையாள நாடு பழைய தமிழ் நாகரீகத்தை இயன்றவரை சிதையாமல் காப்பாற்றிக்கொண்டு வந்தது. மலையடிக்குக் கிழக்கே மைதானத்தின் மீது வளர்ச்சிபெற்ற தமிழ் நாகரீகமோ வெனில், தெலுங்கு முதலிய வடநாட்டுப் பயிற்சிகளின் ஊடாட்டத்தால் நாளுக்குநாள் அதிக மாறுதல் பெற்றுஹிந்து தேசத்தின் பொது நாகரீகத்தை அனுசரித்து வருவதாயிற்று.

எனினும், மலையாளத்துப் பழக்கம் ஒருபோதும் நீங்கவேயில்லை. மலை நாட்டு ஆண் மக்கள், உலகமெங்கும், புலி, கரடி, ஓநாய் முதலிய மலை மிருகங்களுடன் போராடியும், மலை வெப்பத்துக்கும் மலை மழைக்கும் மலைப் பனிக்கும் மலைத் தீக்கும் தப்பியும், கஷ்டத்துடன் பிழைக்க வேண்டியவர்களாதலால், மைதானங்களில் வாழும் ஜனங்களைப்போல் ஸ்திரீகளின் விஷயத்தில் அதிக கடினசித்த மில்லாமல் அவர்களைத் தயவுடனும், மதிப்புடனும் நடத்துவது வழக்கம்.

ஐரோப்பாவுக்குள்ளே ஸ்விட்சர்லாண்டு தேசத்து மலைப் பெண்கள் மற்றப் பகுதியிலுள்ள மாதரைக்காட்டிலும் அதிக ஸ்வதந்திர முடையோராக வாழ்ந்து வருகின்றனர்.

மலையாளத்திலோ, மாதர்கள் மிக உயர்ந்த சுதந்திர முடையோர்களாகயிருப்பது மட்டுமேயன்றி, சொத்துடைமை அங்குப் பெண் சந்ததியாருக்கு ஏற்பட்டிருக்கிறது. இவ்வித மான மலையாள நாகரீகத்துள் நெருங்கிப் பழகி ஊடாடிக் கொண்டு வந்திருப்பதினின்றும், தமிழ் நாட்டு நாகரீகமும் இங்குள்ள மாதர்களுக்கு—ஹிந்து தேசத்தின் மற்றப் பகுதி களிலுள்ள மாதர்களைக் காட்டிலும்—அதிக ஸ்வதந்திரம் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறது. முகம்மதிய நாகரீகத் தின் ஆதித்யம் பலமடைந்ததினின்றும் வட இந்தியாவில், மேல்ஜாதி ஹிந்து ஸ்திரீகள் கோஷா என்ற முகம்மதிய வழக்கத்தைக் கைக்கொள்ளும்படி ஏற்பட்ட காலத்திலேகூட, தமிழ் நாட்டிலும் அதன் நாகரீகத்தைத் தழுவிய தெலுங்கு, கன்னடம் முதலிய நாடுகளிலும் அந்த வழக்கம் உண்டாக வில்லை.

மேலும் உலகத்திலுள்ள மாதர்களுக்கெல்லாம் நீதி ஆண் மக்களாலேயே விதிக்கப்பட்டது. தமிழ் நாட்டு மாதரும் ராஜநீதி சம்பந்தப்பட்ட சிறிதளவிலே பொதுவான ஆண் சட்டத்துக்குக் கீழ்ப்பட்டிருந்தனரேயாயினும், ஜன ஸமூஹ நீதிகளின் விஷயத்தில் தமிழ் நாட்டில் எப்போதும் ப்ரமாண மாக இருந்துவருவது ஒளவையின் நீதி வாக்கியங்களும் நீதி நூல்களுமேயாம். ஆண் மக்களிலேகூட உயர்ந்த கல்வி பயின்றோர் மாத்திரமே ஜன ஸமூஹ விஷயங்களில் வள்ளுவர் குறள், நாலடியார் முதலியவற்றைப் ப்ரமாண மாகக் கூறுவர். அதிகப் படிப்பில்லாதவர்களும், படிப்பே தெரியாதவர்களுமாகிய ஜனங்கள் ஆண் பெண் அனை வருக்கும் ஒளவையாரின் நீதியே வழிகாட்டி. தமிழ் ஜனங்களில் பெரும்பான்மையோருக்குச் சுமார் சென்ற இரண்டாயிரம் வருஷங்களாக ஒளவையாரின் நீதியே ப்ரமாண மாக நடைபெற்று வருகின்றது.

ஸாமான்ய ஜனங்கள் ஒள்வை நீதியைக் கொண்டாடி வருகிறார்களெனில், கற்றோரும் அரசரும் அதைப் புறக் கணித்து வந்தார்களென்று கருதுதல் வேண்டா. கற்றோருக் கும் அரசருக்கும் தமிழ் மக்கள் எல்லோருக்கும் குறள்,

நாலடியார் முதலிய நூல்களைக் காட்டிலும் ஒளவையின் நூல்களில் அகப்பற்றுதலும் அபிமானமும் இருந்து வருகின்றன. ஆனால், இந்த நீதி நூல்கள் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னேயிருந்த முதல் ஒளவையால் இயற்றப்பட்டன அல்லவென்றும் சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னேயிருந்த இரண்டாம் ஒளவையால் செய்யப்பட்டன என்றும் ஒரு கட்சியார் சொல்லுகிறார்கள்.

ஒளவையார் வெறுமே நூலாசிரியர் மட்டுமல்லர். அவர் காலத்திலேயே அவர் ராஜ நீதியில் மிகவும் வல்லவரென்று தமிழ் நாட்டு மன்னர்களால் நன்கு மதிக்கப்பெற்று ராஜாங்கத் தூதில் நியமனம் பெற்றிருக்கிறார். மேலும் அவர் சிறந்த ஆத்ம ஞானி, யோகசித்தியால், உடம்பை முதுமை நோவு சாவுகளுக்கு இரையாகாமல் நெடுங்காலம் காப்பாற்றி வந்தார்.

“ மாசற்ற கொள்கை மனத்தமைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு ”.

அதாவது, ஹிருதயத்தில் சுத்தமான, பயமற்ற, கபடமற்ற, குற்றமற்ற, பகைமையற்ற எண்ணங்களை நிறுத்திக்கொண்டால், உடம்பில் தெய்வத்தன்மை, அதாவது சாகாத்தன்மை (அமரத் தன்மை) விளங்கும் என்னும் பொருள் படுவது. இந்தக் குறள் பாடியவர் ஒளவையார். இவர் தாமே நெடுந்தூரம் இக் கொள்கைப்படி ஒழுகியவரென்பது இவருடைய சரித்திரத்தில் விளங்குகிறது.

ஒரு தேசத்தின் நாகரீகத்துக்கு அந்தத் தேசத்தின் இலக்கியமே மேலான அடையாளமென்று முந்திய வியாசத்தில் சொன்னேன். திருஷ்டாந்தமாக ஆங்கிலேய நாகரீகத்துக்கு ‘ ஷேக்ஸ்பியர் ’ முதலிய மஹா கவிகளின் நூல்களே அளவு கருவியாக கருதப்படுகின்றன. ‘ நாங்கள் இந்தியா தேசத்து ராஜ்யாதிகாரத்தை இழக்க ஒருப்பட்டாலும், ஒருப்படுவோமேயன்றி ஷேக்ஸ்பியரை இழக்க ஒரு நாளும் ஒருப்படமாட்டோம் ’ என்று நாம் மறுமொழி சொல்வோமென்று ‘ மெக்காலே ’ என்னும் ஆங்கிலேய ஆசிரியர் சொல்லுகிறார்.

இந்த மாதிரியாகப் பெருமைப் படுத்தி நம்மவர் கம்பனைச் சொல்லலாம் ; திருவள்ளுவரைச் சொல்லலாம் ; சிலப்பதிகார மியற்றிய இளங்கோவடிகளைக் கூறலாம் ; இன்னும் பல புலவர்களைக் காட்டலாம். எனினும், கம்பர், திருவள்ளுவர் முதலிய பெரும் புலவராலேயே தம்மனைவரிலும் மிகச்

சிறந்தவராகக் கருதப்பட்ட ஔவைப் பிராட்டியையே மிகவும் விசேஷமாக எடுத்துச் சொல்லக்கூடும். "தமிழ் நாட்டின் மற்றச் செல்வங்களை யெல்லாம் இழந்துவிடப் பிரியமா? ஔவையின் நூல்களை இழந்துவிடப் பிரியமா?" என்று நம்மிடம் யாரேனும் கேட்பார்களாயின், "மற்றச் செல்வங்களை யெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ் நாடு மீட்டும் சமைத்துக்கொள்ள வல்லது. ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்படமாட்டோம், அது மீட்டும் சமைத்துக்கொள்ள முடியாத தனிப்பெருஞ் செல்வம்" என்று நாம் மறுமொழி உரைக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். தமிழ் நாட்டு நாகரீகத்துக்கு இத்தனை பெரும் செல்வமாகவும், இத்தனை ஒளி சான்ற வாடாவிளக்காகவும் தனிப்பேரடையாளமாகவும் தமிழ் மாதொருத்தியின் நூல்கள் விளங்குவது நமது நாட்டு ஸ்திரீகளுக்குப் பெருமகிழ்ச்சி தரத்தக்கதொரு செய்தி யன்றோ? இஃது தமிழ் ஸ்திரீகளுக்கு வெறுமே புகழ் விளைவிப்பது மாத்திரமன்று. அவர்களுக்குக் கிரமமான காவலுமாகும். ஔவையார் பிறந்த நாட்டு மாதரை, ஔவையார் இனத்து மாதரை, ஆண் மக்களைக் காட்டிலும் அறிவிலே குறைந்த கூட்டத்தாரென்று வாய் கூசாமல் எவனும் சொல்லத் துணிய மாட்டான். மற்றத் தேசங்களில், திருஷ்டாந்தமாக இங்கிலாந்து தேசத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே ஆண் மக்களுக்குச் சமானமான உரிமைகளைப் பெண்களுக்குக் கொடுப்பது தகாதென்று வாதம் பண்ணுகிற கக்ஷியார், மாதர்கள் இயற்கையிலேயே ஆண் மக்களைக் காட்டிலும் அறிவில் குறைந்தவர்களென்றும், ஆதலால் வீட்டுக் காரியங்களுக்கே அவர்கள் தகுதியுடையோராவாரல்லது அறிவுவன்மையால் நடத்தவேண்டிய நாட்டுப் பொதுக் காரியங்களை நிர்வகிக்க அவர்களுக்குத் திறமை கிடையாதென்றும் தர்க்கிக்குமிடத்தே, அதற்கு ஒரு ஸாக்ஷ்யமாக, "ஆண் மக்களில் ஷேக்ஸ்பியர் என்னும் கவியரசர் எழுதியிருப்பது போன்ற கவிதை எழுதும் திறமை கொண்ட ஸ்திரீ ஒருத்தி நமது நாட்டில் எப்போதேனும் தோன்றி யிருப்பதுண்டா? ஏன் தோன்றவில்லை? இதனால் இயற்கையிலே ஸ்திரீகள் ஆண் மக்களைக் காட்டிலும் புத்தியில் குறைந்தவர்களென்பது தெளிவாக விளங்குகிறதன்றோ?" என்கிறார்கள்.

தமிழ் நாட்டிலோவெனில், இப்படிப்பட்ட வாதம் செல்லாது, அதற்கு நேர் எதிரிடையாக இந் நாட்டில் ஸ்திரீகள்—"ஔவையாரைப் போல் கவிதையும் சாஸ்திரமும் செய்யக்

கூடிய ஓர் ஆண் மகன் இங்குப் பிறந்திருக்கிறுன்? ஏன் பிறக்கவில்லை? இதினின்றும் ஆண் மக்கள் இயற்கையி லேயே பெண்களைக் காட்டிலும் அறிவுத் திறமையில் குறைந்தவர்களென்பது தெளிவாக விளங்குகிறதன்றே?" என்று வாதிக்கக்கூடிய நிலைமையிலிருக்கிறுர்கள்.

மகிமை பொருந்திய ஆத்ம ஞானியாகிய ஔவையார் இயற்றியிருக்கும் "ஔவை குறள்" என்ற ஞான நூல் தமிழ் நாட்டு யோகிகளாலும், சித்தர்களாலும் உபநிஷத்துக் களுக்குச் சமானமாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறது. யோக சாஸ்திரத்துக்கும் மோக்ஷ சாஸ்திரத்துக்கும் இந் நூல் முக்கிய பாடங்களில் ஒன்ருகக் கருதத்தக்கது. மேலும் யோகாநுபூதி ஸம்பந்தமாகப் பிறர் எழுதுமிடத்தே மிகவும் கடினமும் அஸாதாரணமுமாகிய சொற்களையும் வாக்கியங் களையும் வழங்குதல் இன்றியமையாததென்ற கருத்துடன் வேலை செய்திருக்கிறுர்கள். ஔவையின் நூலோ மிகத் தெளிந்த, மிக எளிய தமிழ் நடையில் எல்லா ஜனங்க ளுக்கும் பொருள் விளங்கும்படியாக எழுதப்பட்டிருக்கின்றது. "சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்" என்பது கவிதைத் தொழிலில் மிகவும் உயர்ந்த தொழில். இதில் ஔவை ஒப் பற்றவள். இத்துடன் மிகவும் அருமையான நுட்பமான விஷயங்களை யாவருக்கும் அர்த்தமாகும்படி மிகவும் எளிய நடையில் சொல்வதாகிய அற்புதத் தொழிலை உயர்ந்த கவி யரசர்களே தெய்வீகத் தொழில் என்றும் தெய்வசக்தி பெறுத சாதாரணக் கவிகளுக்குச் சாத்தியப்படாத தொழில் என்றும் கருதுகிறுர்கள். இந்த அற்புதத் தொழிலிலும் ஔவை நிகரற்ற திறமை வாய்ந்தவள்.

புருஷார்த்தங்கள், அதாவதுமானிட ஜன்மம் எடுத்ததினின் றும் ஒருவன் அடையக்கூடிய மிக உயர்ந்த பயன் களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் வீடு என்று சொல்லப்படும் முக்தி, வாக்குக்கும் மனதுக்கும் எட்டா தாகையால், அதனை விரித்துக்கூற முயலாமல், அதற்குச் சாதனமாகிய தெய்வபக்தியை மாத்திரம் முதல் அத்யாயத் தில் கூறி நிறுத்திவிட்டு, மற்ற மூன்று புருஷார்த்தங்களையும் விளக்கி, திருவள்ளுவநாயனுர் 'முப்பால்' (மூன்று பகுதி களுடையது) என்ற பெயருடைய திருக்குறள் செய்தருளினுர். ஆயிரத்து முந்நூற்று முப்பது சிறிய குறட்பாக்களில் நாயனுர் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலையும் அடக்கிப் பாடியது மிகவும் அபூர்வமான செய்கை என்று கருதப் படுட்டது. இது கண்ட ஔவைப்பிராட்டி வீட்டுப்பாலையும் கூட்டி

நான்கு புருஷார்த்தங்களையும் ஒரே சிறிய வெண்பாவுக்குள் அடக்கிப்பாடினார். இந்த ஆச்சரியமான வெண்பா பின்வருமாறு :—

"ஈதலறம்; தீவினைவிட் டீட்ட(ல்) பொருள்; எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே இன்பம் ; பரனை நினைந்திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

இவ் வெண்பாவின் கருத்து யாதெனில், ஈதலாவது அருள் செய்தல் அல்லது கொடுத்தல் என்றும் பொருள் படும். அதாவது, உலகத்தாருக்குப் பயன்படும் வண்ணமாக நம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் பண்ணி விடுதல் ; நமது பொருளாலும், வாக்காலும் மனத்தாலும், உடற் செய்கையாலும், பிறருடைய கஷ்டங்களை நீக்கி அவர்களுக்கினியன செய்தல் ; பொருள் கொடுப்பது மாத்திரமே ஈகையென்று பலர் தவருகப் பொருள் கொள்ளுகிறார்கள். பிறர் பொருட்டாக நம் உயிரைக் கொடுத்தல் கொடையன்றோ? வைத்தியம் முதலிய சிகிச்சைகளால் பிறருக்குப் பிராண தானம் செய்தல் ஈகையன்றோ ? பொருள் முதலிய நலங்களை யெல்லாம் ஒருவன் தனக்குத்தானே சேகரித்துக்கொள்ளக் கூடிய திறமை அவனுக்கு ஏற்படும்படி அவனுக்குக் கல்வி பயிற்றுதல் தான மாகாதா ?

எனவே, கைம்மாறு கருதாமல் பிறருக்கு எவ்விதத்திலேனும் செய்யப்படும் கஷ்ட நிவாரணங்களும் அனுகூலச் செயல்களும் ஈகை எனப்படும். இதுவே மனிதனுக்கு இவ் வுலகத்தில் அறம், அல்லது தர்மம், அல்லது கடமையாம். இனி, தீயசெயல்கள் செய்யாதபடி, எவ்வகைப்பட்ட அறிவு முயற்சியாலேனும் சரீர முயற்சியாலேனும் சேகரிக்கப்படும் உணவு, துணி முதலிய அவசியப்பண்டங்களும், குதிரை வண்டிகள், ஆபரணங்கள், வாத்தியங்கள், பதுமைகள் முதலிய சௌக்கிய வஸ்துக்களும், இவற்றை அனுபவிப்பதற்குச் சாதனங்களாகிய வீடு, தோட்டம் முதலியனவும், இப் பண்டங்களுக்கெல்லாம் பொதுக் குறியீடும் பிரதியுமாக மனிதரால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கும் பொற் காசு, வெள்ளிக்காசு, காயிதப் பணம் முதலியனவும், செல்வம் அல்லது அர்த்தம் எனப்படும் நற்செயல்களாலே சேர்க்கப் படும் பொருளே இன்பத்தைத் தருவதாகையாலும், தீச் செயல்கள் செய்து சேர்க்கும் பொருள் பலவிதத் துன்பங் களுக்கு ஏதுவாய் விடுமாகையாலும், தீவினைகள் விட்டுச்

சேர்ப்பதே பொருள் என்னும் பெயர்க்குரியதென்றும் தீவினைகளாலே சேர்ப்பது துன்பக் களஞ்சியமே யாகு மென்றும் ஔவையார் குறிப்பிட்டருளினர்.

இனி இன்பத்துக்கு ஔவையார் கூறும் இலக்கணமே நிகரற்ற மாண்புடையது. காதலின்பத்தையே முன்னோர் இன்பமென்று சிறப்பித்துக் கணக்கிட்டனர். பொருளைச் சேர்ப்பதிலும் அறத்தைச் செய்வதிலும் தனித்தனியே பல வகையான சிறியசிறிய இன்பங்கள் தோன்றும். ஆயினும் இவை காதலின்பத்துக்குத் துணைக் கருவிகளாவது பற்றியே ஒருவாறு இன்பங்களென்று கூறத் தக்கனவாம். உலகத்தில் மனிதர் ருசியான பதார்த்தங்களை உண்டல், நல்ல பாட்டுக் கேட்டல், நல்ல மலர்களை முகர்தல் முதலிய இந்திரிய இன்பங் களை விரும்பி அவற்றை அடையும் பொருட்டு மிகவும் பாடு படுகிறார்கள். அதிகார இன்பம், புகழின்பம் முதலிய எண் ணற்ற வேறு பல இன்பங்களுக்காகவும் உழைக்கிறார்கள். ஆனால் இவையெல்லாம் அற்பமான இன்பங்களென்று கருதி முன்னோர் இவற்றை இன்பப்பாலிலே சேர்க்கவில்லை. புகழ், அதிகாரம் முதலியவற்றை அறத்துப் பாலிலும், பொருட் பாலிலும் சார்ந்தனவாக்க் கவனித்தார்கள். இந்திரிய இன்பங்களுக்குள்ளே இனிய பக்ஷணங்களையும் கனிகளையும் உண்டல், மலர்களை முகர்தல் முதலியன மிகவும் எளிதிலே தெவிட்டக்கூடியனவும், வெறுமே சரீர சுகமாத்திரமன்றி ஆத்ம சுகத்துக்கு அதிக உபகாரமில்லாதனவுமாதல் பற்றி அவற்றையும் இன்பப் பாலிலே சேர்க்கவில்லை.

> " கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
> ஒண்டொடிக் கண்ணேயுள "

என்று திருவள்ளுவர் பாடியிருக்கிறார்.

" காண்டல், கேட்டல், உண்டல், மோப்பு, தீண்டுதல் எனும் ஐவகை இந்திரியங்களையும் ஒருங்கே இன்புறுத்தும் இயல்பு ஒளி பொருந்திய வளையணிந்த இப் பெண்ணிடத்தே தானுள் ளது " என்பது அக்குறளின் பொருள். இதனுடன் உயிருக் கும் மனத்துக்கும் ஆத்மாவுக்கும் சேர இன்பமளிப்பதனால் காதலின்பம் இவ்வுலக இன்பங்களனைத்திலும் தலைமைப் பட்டதாயிற்று. ஆதலால், நான்கு புருஷார்த்தங்களுள், அதாவது மனிதப் பிறவி எடுத்ததனால் ஒருவன் எய்தக் கூடிய பெரும்பயன்களைக் கணக்கிடப்புகுந்த இடத்து நம் முன்னோர் காதலிப்பதையே இன்பமென்னும் பொதுப்பெய ரால் சொல்லி இருக்கிறார்கள். இங்ஙனம் இன்பமென்ற

பொதுப் பெயரால் சிறப்பித்துக் கூறத்தக்க பெருஞ் சுவைத் தனி யின்பம் மனிதனுக்குக் காதலின்பமே யாகுமென் பதையும், அவ்வின்பத்தைத் தவறுதலின்றி, நுகர்தற்குரிய வழி யின்ன தென்பதையும் ஔவைப் பிராட்டியார் சால இனிய தமிழ்ச் சொற்களிலே காட்டி அருள் புரிந்திருக்கிறார்.

ஒருவன் ஒருத்தியினிடத்திலும் ஒருத்தி ஒருவனிடத்திலும் மனத்தாலும், வாக்காலும், செய்கையாலும், கற்பு நெறி தவறாமல் நித்தியப் பற்றுதலுடையோராய் மன ஒருமை யெய்தித் தம்முள் ஆதரவுற்றுத்துய்க்கும் இன்பமே இன்ப மெனத் தகும் என்று ஔவையார் கூறுகிறார்.

இனி, முக்தியாவது யாதெனில் :—கடவுளை உள்ளத்தி லிருத்தித் தானென்ற கொள்கையை மாற்றி ஈசபோதத்தை யெய்தி, மேற்கூறிய மூன்று புருஷார்த்தங்களிலும் எவ்வித மான ஸம்பந்தமு மில்லாமலே செய்கையற்று மடிந்து கிடப்பானென்றெண்ணுதல் பெருந்தவறு. உயிருள்ளவரை ஒருவன் தொழில் செய்யாதிருக்கக் கடவுளுடைய இயற்கை இடங்கொடாது. "யாவனுயினும் (மனத்தாலேனும், வாக் காலேனும், உடம்பாலேனும்) யாதேனு மொருவிதமான செய்கை செய்து கொண்டிராமல் சும்மாயிருத்தல் ஒரு க்ஷணங்கூட ஸாத்தியப்படாது. இயற்கையிலேயே பிறக்கும் குணங்களால் ஒவ்வொருவனும் தன் வசமின்றியே எப்போதும் தொழில் செய்து கொண்டிருக்கும்படி வற் புறுத்தப்படுகிறான்" என்று கண்ணபிரான் பகவத்கீதையில் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

இன்னும் ஔவைப் பிராட்டியின் நூல்களிலுள்ள வசனங் களை உதாரணங்காட்டி அவருடைய மகிமைகளையெல்லாம் விளக்கிக் கூறவேண்டுமாயின் அதற்கு எத்தனையோ சுவடிகள் எழுதியாகவேண்டும். நமது வியாசமோ ஏற்கெனவே மிகவும் நெடிதாய்விட்டது. ஆதலால் இந்தக் கவியரசியைக் குறித்துத் தற்காலத்தினர் தெரிந்துகொள்ளவேண்டிய அம்சங்களில் மிகவும் முக்கியமாக எனக்குத் தோன்றுவனவற்றை மற்றொரு வியாஸத்தில் சுருக்கமாகச் சொல்ல உத்தேசம் கொண்டிருக்கிறேன்.

தமிழ் நாட்டு மாதராகிய, என் அன்புக்கும் வணக்கத்துக்கு முரிய சகோதரிகளே, இத்தனை பெருமை வாய்ந்த தமிழ் நாகரீகத்தின் எதிர்கால வாழ்வு உங்களுடைய பயிற்சிகளையும் முயற்சிகளையும் பொறுத்திருக்கிறது. பூமண்டலத்தில்

நிகரில்லாத அருஞ்செல்வமுடைய சேமநிதி யொன்றுக்குக் கடவுள் உங்களைக் காவலாக நியமித்திருக்கிறான். மனித உலகமோ, இந்த நேரத்தில், பிரமாண்டமான சண்டமாருதங்களைப்போன்ற மாறுதல்களாலும், புரட்சிகளாலும், கொந்தளிப்புற்ற கடலிடைப் பட்டதொரு சிறு தோணிபோல் அலைப்புண்டும், புரளுண்டும், மோதுண்டும், எற்றுண்டும், சுழற்றுண்டும் தத்தளிக்கிறது. இந்த மஹா ப்ரளய காலத்தில் தமிழ் நாகரீகம் சிதறிப் போகாதிருக்கும்படிக் கடவுள் அருள் புரிவாராகுக. அஃது அங்ஙனம் சிதறாமலிருக்குமாறு தகுந்த கல்விப் பெருமையாலும், ஒழுக்க மேன்மையாலும் விடுதலையின் சக்திகளாலும் அதைக் காப்பாற்றக்கூடிய திறமையை உங்களுக்குப் பரப்ரம்மம் அருள் செய்க.

---

## 8

# பெண்கள் ஸம்பாஷணைக் கூட்டம்

"காசி" எழுதுவது :—

புதுச்சேரியில் சில தினங்களின் முன்பு நடந்த பெண்கள் 'மஞ்சள் குங்குமம் (ஸம்பாஷணை) கூட்ட' மொன்றில் நடந்த விஷயங்கள் பின்வருமாறு :—

### ஆரம்பம்

பார்வதி, லக்ஷ்மி, ஸரஸ்வதி முதலிய படங்களுக்குப் பூஜை முடித்தபிறகு விடுதலைப் பாட்டுகள் பாடப்பட்டன. ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸாசார் புத்திரி மண்டயம் ஸ்ரீமதி கிரியம்மா பின்வரும் உபந்யாஸம் செய்தார் :—

### முயற்சியின் பயன்

நமது தேசத்தில் தெய்வ பக்தி அதிகமென்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் தெய்வத்தை நம்பிவிட்டு நாம் யாதொரு முயற்சியும் செய்யாமல் வெறுமே இருந்தால், தெய்வமும் பேசாமல் பார்த்துக்கொண்டிருக்கும். தெய்வத்தை நம்பி நாமும் முயலவேண்டும். எப்படியென்றால் ஒரு குழந்தை அழாமல் வெறுமே இருந்தால் நாம் அதன்

மீது கண்ணைச் செலுத்தாமல் மற்ற வேலைகளில் கவனஞ் செலுத்துகிறோம். அழத்தொடங்கினால் ஆத்திரத்துடன் வேலையைவிட்டு அதை எந்த விதத்திலாயினும் ஸமாதானப் படுத்த முயலுகிறோம். அதுபோல் நாம் ஒரு கார்யத்தில் ஊக்கம் வைத்துப் பிரயத்தினப்பட்டால் அந்த வேலைக்கு எப்படியாவது ஒரு முடிவைத் தெய்வம் காட்டும்.

இப்போது நாம் முயற்சி செய்யவேண்டிய விஷயம் பெண் விடுதலை. பல்லாயிர வருஷங்களாக நாம் அடிமைப்பட்டு வருகிறோம். தெய்வம் தானாக நமக்கு விடுதலை கொடுத்ததா? இல்லை.

"உங்களுடைய வழி இது தான்" என்று ஒரு சட்டம் ஏற்படுத்தி வைத்தது.

இப்போது நாம் "இப்படி இருக்கமாட்டோம்" என்றால்: சரி, ஆனால் பாருங்கள். உங்களுக்காக இன்னொரு வழி உண்டாக்கியிருக்கிறேன். அதன்படி நடங்கள்" என்று கூறி நம்மை ஊக்கப்படுத்துகிறது.

"நான் தூங்குவேன்" என்று தெய்வத்தினிடம் சொன்னால் தெய்வம் "ஸுகமாகத் தூங்கு, உனக்கு மெத்தென்று படுக்கை போட்டுத் தருகிறேன்" என்று சொல்லி நம்மைத் தட்டித் தூங்கப்பண்ணுகிறது.

"மாட்டோம்! நாங்கள் எழுந்து உலக விஷயங்களைக் கவனிக்கவேண்டும். இதோ! இதோ எழுகிறோம்" என்றால், "எழுந்திரு குழந்தாய், இதோபார்; உனக்கு இந்தப் பெரிய வழியை ஏற்படுத்தி இருக்கிறேன். அந்த வழியே போய் நீ நன்மை அடை" என்கிறது.

ஆதலால், ஸகோதரிகளே, தெய்வத்தை நம்பி நாம் முன்னடையும் வழியை நாமே தேடவேண்டும். "முயற்சி திருவினை ஆக்கும்" என்பது முன்னோர் உறுதிமொழி. நாம் எல்லாரும் சேர்ந்து முயற்சி செய்தல் அவசியம். தெய்வம் நன்மை செய்யும். நம்முள் ஏதேனும் வருத்தம் நேர்ந்தால், அதை நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்த இடத்தில் தாக்ஷண்ய மில்லாமற் சொல்லித் தீர்த்துக் கொள்ளவேண்டும். நாம் குழந்தைகள். நாம் அழுதால் லோகமாதா பராசக்தி உணவு கொடுப்பாள். நாம் அழுவதற்கு வழி முயற்சியினால் தெய்வத்தை இரங்குவித்தல். ஆதலால் முயற்சி செய்வோம். ஓம் வந்தே மாதரம்.

# 9

## ‘ சீயூ சீன் ’ என்ற சீனத்து ஸ்திரீயின் கதை.

அப்பால் ஸ்ரீமான் சி. சுப்பிரமண்ய பாரதியின் குமாரியாகிய ஸ்ரீ தங்கம்மா பின் வரும் பத்திரிகையைப் படித்தனர் :—

சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன்னே சீனதேசத்தில் செகியாங் மாகாணத்தில் ஷாங் ஸிங் என்ற பட்டணத்தில் ஒரு ராஜாங்க உத்தியோகஸ்தரின் மகளாக ‘ சியூ சீன் ’ என்ற நமது கதா நாயகி பிறந்தாள். இவளைக் குறித்துச் சென்ற வருஷம் ஆகஸ்டு மாசத்து ‘ ஏஷியாடிக் ரெவ்யூ ’ (ஆசிய பரிசோதனை) என்ற பத்திரிகையில் லயோ நெல் கிப்ஸ் என்ற ஆங்கிலேயர் எழுதியுள்ள கதையில் ஸாராம்சமான சில பகுதிகளை இந்தச் சபையின் முன்னே தெரிவிக்கிறேன்.

ஆசியாவில் பெண் விடுதலைக் கொடியை நாட்டவேண்டுமென்று பாடுபட்டவர்களில் இவளும் ஒருத்தியாகையால் இவளுடைய கதை பெண் விடுதலையில் நாட்டம் செலுத்தி வரும் உங்கள் அனைவர்க்கும் மிகவும் ரஸமாகத் தோன்றக் கூடும்.

‘ சியூ சீன் ’ என்ற பெயரில் சீன் என்பதற்கு ‘ ஒளியுடைய சத்தம் ’ என்பது பொருள். ‘ சியூ ’ என்ற உப நாமம் ‘ கார்ப் பருவம் ’ (மழை பெய்யுங்காலம்) என்ற பொருள் உடையது. பின்னிட்டு இவள் சிங்ஹுவியாங் என்ற பட்டப்பெயர் தரித்துக் கொண்டாள் ; அதன் பொருள் ‘ ஆண் மக்களுடன் போர் செய்பவள் ’ என்பது. இவளுக்கு ‘ சியெந்-ஹொ-நு-சி-யெஹ் ’ என்றும் ஒரு பெயருண்டு. அதன் பொருள் யாதெனில் ‘ கண்ணாடி ஏரிக்கரைப் பெண் வக்கீல் ’ என்பது, ‘ கண்ணாடி ஏரி ’ அந்தப்பிரதேசத்தில் ஒரு ஏரிக்குப் பெயர்.

பதினெட்டாம் வயதில் இவள் ‘ வாங் ’ என்ற பெயருள்ள ஒருவனை மணம் செய்து கொண்டு அவனுடன் சீனத்து ராஜதானியாகிய பெகிங் நகரத்தில் சென்று வாழ்ந்தாள். அங்கே இவளுக்கு ஒரு பெண் குழந்தையும் ஓராண் குழந்தையும் பிறந்தன. 1900-ஆம் வருஷத்தில் பாக்ஸர் கலக நிமித்தமாக பெகிங் நகரத்தில் அன்னிய ராஜ்யப் படைகள் புகுந்து சீனத்துக்குச் செய்த பழிகளைக் கண்டு மனம் பொறுக்காமல் இவள் “ ஐயோ, மனுஷ்ய ஜன்மத்தில் பிறந்தும்

நம்முடைய மனுஷ்ய சக்தியைக் காண்பிக்கும் பொருட்டாகக் கஷ்டங்களையும் விபத்துக்களையும் எதிர்த்து உடைக்கும் பாக்கியம் நமக்கில்லாமல் போய்விட்டதே! வீட்டுக் காரியங் களின் அற்பக் கவலைகளுக்கிரையாகி மடியவா நாம் பூமியில் பெண் பிறந்தோம்" என்று சொல்லிப் பெருமூச்செறிந்து வருத்தப்பட்டாள்.

சீன பாஷையில் தகுந்த பாண்டித்யம் வஹித்திருந்தது மட்டுமே யன்றி இவளிடம் கவிதா சக்தியும் சேர்ந்திருந்தது. சீன ஸம்பிரதாயங்களின்படிக் கணவனுடன் கூடி வாழும் வாழ்க்கை இவளுடைய இயற்கைக்குப் பொருந்தவில்லை யாதலால், இவள் பாக்ஸர் கலகத்திற்குப்பின் இரண்டு மூன்று வருஷங்களுக்குள் தன் கணவனிடமிருந்து ஸமாதானமாகவே பிரிந்து வந்து விட்டாள்.

இதனிடையே இவளுக்குப் பூர்வார்ஜிதமாகக் கிடைத்த பண முழுதையும் ஒரு அயோக்கிய வியாபாரியிடம் கொடுத்து அவன் மூலமாக வியாபாரச் சூதில் இழந்து போய்விட்டாள்.

பின்பு 'ஜப்பானில் போய் ஐரோப்பிய நவீனக்கல்வி பயின் றால் இக்காலத்தில் அதிகப் பயன் பெருகிவாழலாம்' என்ற எண்ண முடையவளாய்த் தன்னுடைய ஆபரணங்களை விற்றுப் பணம் சேகரித்துக் கொண்டு ஜப்பானுக்குப் புறப்பட ஆயத்தங் கள் செய்தாள். ஆனால் இவள் பெகிங் நகரத்திற்குப் புறப் படு முன்னே அங்குச் சீர்திருத்த கக்ஷியைச் சேர்ந்த ஒருவனை அதிகாரிகள் பிடித்து அடைத்து வைத்திருப்பதாகவும், வக்கீல் நியமிக்கவும் வழக்கு நடத்தவும் பணமில்லாதபடியால் ஏனென்று கேட்பாரில்லாமல் அவன் சிறைக்களத்திற்கிடந்து வருவதாகவும் கேட்டுப் பணத்திற் பெரும் பகுதியை அவனுக்குக் கொடுத்தனுப்பிவிட்டாள்.

மிஞ்சிய சிறு தொகையுடன் 1904-ஆம் வருஷம் ஏப்ரல் மாஸத்தின் இறுதியில் ஜப்பானுக்குக் கப்பலேறினாள். ஜப்பான் ராஜதானியாகிய டோக்யோ நகரத்தில் தன்னுடைய சாமர்த்தியத்தால் விரைவில் கீர்த்தியடைந்து விட்டாள். சீனத்து மாணாக்கரின் ஸபைகள் பலவற்றில் சேர்ந்து விளங் கினாள். மேலும் அப்போது சீனத்தில் அரசுசெலுத்திய மஞ்சு ராஜ்ய வம்சத்தை ஒழித்துவிடவேண்டுமென்ற கருத் துடன் இவள் தானாகவே பல ராஜ்யப் புரட்சி ஸங்கங்கள் ஏற்படுத்தித் திறமையுடன் உழைத்து வந்தாள். சீனாவில் இப்போது நடைபெறும் குடியரசுக்கு வேர் நாட்டியவர்களில் இவளும் ஒருத்தி.

1905-ம் வருஷத்து வஸந்த காலத்தில் இவள் தன் கல்வியின் பொருட்டுப் பின்னும் பணம் சேர்க்குமாறு சீனத்துக்கு வந்தாள். அப்போது சீனத்திலிருந்த பெரிய ராஜ்யப் புரட்சித் தலைவர்களுடன் இவள் ஸ்நேகம் ஏற்படுத்திக்கொண்டது மன்றிக் குடியரசுக் கக்ஷியாரின் மூல ஸபையாகிய 'குலாங்—பூ' (அற்புத உத்தாரண) ஸபையில் சேர்ந்தாள். பிறகு அவ் வருஷம் செப்டம்பர் மாஸத்தில் டோக்யோவுக்குத் திரும்பி அங்கு வாழ்ந்த ஸுனயத்—ஸேன் என்ற மஹா கீர்த்தி பெற்ற குடியரசுக் கக்ஷித் தலைவனுடன் பழக்கம் பெற்றாள்.

அப்பால் சீனத்திலுள்ள 'நான்ஜின்' நகரத்தில் ஸ்ரீமதி ய்ஜுஹ்ஹ என்ற தனது தோழியும் தன்னைப் போல் கவி ராணியுமான ஸ்திரீயுடன் சேர்ந்து ஒரு பெண் பள்ளிக்கூடத்து உபாத்திச்சியாக வேலை செய்தாள்.

அப்பால் நாடு முழுதிலும் கலாசாலைகள் ஸ்தாபனம் செய்தும், ரஹஸ்ய ராஜ்யப்புரட்சி ஸபையின் கிளைகள் ஏற்படுத்தியும், பத்திரிகைகள் நடத்தியும் தொழில் புரிந்தாள். இங்கிலீஷ் பாஷையிலும் இவள் தகுந்த தேர்ச்சி பெற்றிருந்ததாக லயோநெல் கிப்ஸ் சொல்லுகிறார்.

அப்பால் இவள் தன் ஜன்ம ஸ்தானமாகிய ஷாவ்ஷிங் நகரத்துக்கு மீண்டும் வந்து அங்கே ஒரு பாடசாலை நடத்தினாள். ஆனால் அது வெளிக்குப் பாடசாலையாகவும் உண்மையில் குடியரசுப் படைப் பயிற்சிக்கூடமாகவும் நடைபெற்றது. மாணாக்கரெல்லாம் படையாட்களாகப் பயிற்சி பெற்றனர்.

இவளுடைய முடிவைக் குறித்து லயோநெல் கிப்ஸ் பின்வருமாறு எழுதுகிறார் :—

ஒரு நாள் பிற்பகலில் இவளுடைய ஒற்றர் அஞ்சிவந்து மஞ்சுப் படைகள் ஷாவ்ஷிங் நகரத்தின் மீது தண்டெடுத்து வருவதாகக் கூறினார்கள். அவள் மறுபடி ஒற்றுப் பார்த்து வரும்படிச் சிலரை ஏவினாள். நகரத்தருகிலுள்ள நதியைத் தாண்டிக் கீழ்க் கரைக்கு மஞ்சுப்படை வந்துவிட்டதென இவ்வொற்றர் வந்து சொன்னார்கள். பிறகு மிக விரைவில் மஞ்சுப்படை நகரத்துள்ளே புகுந்துவிட்டது. மாணாக்கர்கள் அவசரமாகக் கூட்டங்கூடி பரியாலோசனை நடத்தி இவளைத் தப்பியோடும்படிச் சொல்லினர். இவள் மறுமொழிகூறவில்லை. மஞ்சுப்படை கலாசாலையின் முன்னே வந்து நின்றது. எனினும் உடனே உள்ளே நுழைய அதற்குத்

..தைர்யம் ஏற்படவில்லை. மாணாக்கர்களில் பெரும்பாலோர் புழக்கடை வழியாக வெளியே குதித்தோடிவிட்டனர். ஏழெட்டுப் பேர் மாத்திரம் ஆயுதங்கள் ஏந்திக்கொண்டு வாயிலில் நின்ற தளத்தின் மீது பாய்ந்தனர். எதிர்பார்க்காத இச் செய்கைகளைக் கண்ட மஞ்சுப்படை திகைத்துவிட்டது. அப்போது நடந்த போரில் மஞ்சுப்படையாளர் பலர் கொலையுண்டும் புண்பட்டும் வீழ்ந்தனர். மாணாக்கரிலும் இருவர் மாண்டனர். உள்ளே ஓரறையில் வீற்றிருந்த சியூசீனையும் அவளுடன் அறுவரையும் படை வந்து கைதியாக்கிற்று. மறு நாள் நியாயாதிகாரியின் முன்னே சியூசீனைக் கொண்டு நிறுத்தி வாக்கு மூலம் கேட்ட போது உடந்தையானவர்களைக் காட்டிக் கொடுக்கக் கூடாதென்ற கருத்தால் இவள் ஒரு சொல்லேனும் மொழியவில்லை.

"சியூ யூசி யூதெங் சவிஷா ஜென்" என்ற கவிதை வாக்கியத்தை மாத்திரம் எழுதிக் காட்டினாள்.

இதன் பொருள் :—"மாரி நாட் காற்றும், மாரி நாண் மழையும், மார் புண்ணுக வருத்துகின்றனவே" என்பது.

அப்பால் இவளுக்குக் கொலை என்பது தண்டனை விதிக்கப் பட்டது. ஜூலை 15-ம் தேதி யன்று ஸூர்யோதய வேளையில் இவள் ஷங் ஷிங் நகர மண்டபத்தருகே தூக்குண்டாள். அத் தருணத்தில் இளஞ் செந்நிறமுடைய மேக மொன்று இவள் தலையின்மீதே வானத்தில் பறந்ததென்றும், குளிர்ந்த வாடை வீசிற்றென்றும் தூக்கிட்டோரும் பார்த்து நின்றோரும் துக்கத்தால் மெய் நடுங்கினரென்றும், ஆனல் சியூசீன் பரிபூர்ண சாந்தியுடன் தூக்கு மரத்துக்குச் சென்றாளென்றும் லயோநெல் கிப்ஸ் சொல்லுகிறார்.

## 'சியூ சீன்' என்ற சீனத்து ஸ்திரீ செய்த ப்ரஸங்கம்

சியூ சீன் என்ற மாது பொதுக்கூட்டத்தில் செய்த உபந்யாஸ மொன்றின் ஸாராம்சத்தை லயோநெல் கிப்ஸ் எழுதி யிருக்கிறபடி இங்கு மொழி பெயர்த்துச் சொல்லுகிறேன். அதினின்றும் இவளுடைய உண்மையான குணத்தை அறிந்து கொள்ளுதல் சற்றே எளிதாகுமென்று நினைக்கிறேன். சியூசீன் சொல்லுகிறாள் :—

ஸஹோதரிகளே, பல்லாயிர வருஷங்களாக நாம் ஆண் மக்களின் கொடுமைக்குக் கீழ்ப்பட்டு வாழ்கிறோம். எந்தக்

காலத்திலும் நமக்கு ஓரணுவளவாயினும் ஸ்வதந்திரம் இருந்தது கிடையாது. மூன்று விதமான கீழ்ப்படிதலென்றும் நான்கு விதமான பெண்ணறங்களென்றும் சொல்லிப் பழைய சாஸ்த்ர விதிகள் நம்மை இறுகக் கட்டியதுமன்றி இந்தப் பந்தத்தை எதிர்த்து நாம் ஒரு வார்த்தைகூட உச்சரிக்கக் கூடாத வண்ணமாக நம்மை அடக்கிவிட்டன. ஸ்திரீகளாகிய நம்மைச் சிறு குழந்தைப் பிராய முதலாகவே பாதங்களைக் கட்டுதல் என்ற வழக்கத்தால் எண்ணுதற்கரிய துன்பங்களுக் காளாக்கி விட்டார்கள். இந்த முறையால் நமது பாதம் வற்றிச் சதையும் எலும்பும் குறுகிச் சிதைந்து போகின்றன. இதனால் நம்முடல் பலமிழந்து உழைப்பதற்குத் தகுதியற்றதாய் விடுகிறது. எல்லாக் காரியங்களிலும் நாம் ஆண் மக்களைச் சார்ந்து நிற்க நேரிட்டது. விவாகம் நடந்த பின்னர் நம்மைக் கணவர் அடிமைகளைப்போல நடத்து கிறார்கள். அவர்களுக்குத் துணிப்பெட்டி தைத்துக்கொடுக்கவும், சமையல் பண்ணவும், சோறு போடவும், தேயிலை காய்ச்சிக் கொடுக்கவும், வாயிலில் தெளிக்கவும், குப்பை பெருக்கவும், அவர்களுக்கு ஸ்நானம் செய்து வைக்கவும், பணிசெய்யவும் மாத்திரமே நம்முடைய சக்திகளெல்லாம் செலவாகின்றன. முக்கியமான காரியம் எதிலும் நாம் சிறிதளவேனும் கலக்கக்கூடாது. வீட்டுக்கு யாரேனும் விருந்தாளி வந்தால் உடனே நாம் அந்தர்த்தானம் பண்ணி அறைக்குள்ளே போய்ப் பதுங்கிக்கொள்ளவேண்டும். எதைக் குறித்தும் நாம் ஆழ்ந்த விசாரணை செய்யக்கூடாது. ஏதேனும் வாதத்தில் நீண்ட மறுமொழி சொல்லப் போனால் ஸ்திரீகள் அற்ப மதியுடையவர்களென்றும், ஸ்திரபுத்தியில்லாதவர்களென்றும் சொல்லி நம்முடைய வாயை அடைத்து விடுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் நம்முடைய தைர்யக் குறைவேயன்றி வேறில்லை. இந்தத் தைரியக் குறைவுக்குரிய பல ஹேதுக்களில் நம்மைக் குழந்தைப் பிராயத்திலேயே பாதங்கட்டி விடுதல் ஒன்றாகும். "மூன்றங்குலப் பொற்றாமரைகள்" என்றும், அவற்றின் "மோஹனச் சிறு நடை" என்றும் வர்ணித்துப் பெண் குழந்தைகளின் அடிகளைக் கட்டிப் போடும் தீமையால் நாம் சக்தியிழந்து விட்டோம். இன்று எனது ரத்தம் கொதிப்புற்று நிற்கிறது. உங்களுடைய ரத்தத்தையும் கொதிக்கும்படிச் செய்ய விரும்புகிறேன். முதலாவது, இனிமேல் எல்லா ஸ்திரீகளும் சூர்ணம் தடவுவதையும் முகப் பூச்சுகள் பூசுவதையும் நிறுத்திவிடவேண்டும். மோஹப்படுத்த வேண்டுமென்று

பொய்ப் பூச்சுக்கள் பூசக்கூடாது. ஒவ்வொரு மனுஷ்ய ஜந்துவுக்கும் கடவுள் கொடுத்த முகமிருக்கிறது. பாதங்களைக் கட்டும் நீச வழக்கத்தை உடனே வேரோடு களைந்து எறிந்துவிட வேண்டும். ஐந்து கண்டங்களிலுமுள்ள வேறெந்த நாட்டிலும் இவ் வழக்கம் கிடையாது. அப்படியிருந்தும் உலகத்தில் சீனுவே அதிக நாகரீகமுடைய தேசமென்று நமக்குள்ளே பிதற்றிக் கொள்ளுகிறோம். பாதக்கட்டு மட்டுமேயன்றி, இன்னும் பழைய கெட்ட வழக்கங்கள் எத்தனை உளவோ அத்தனையும் ஒழித்தெறிவோம். ஆண் மக்களுக்கு இனி அடிமைகளாக வாழமாட்டோம். தைர்யத்துடன் எழுந்து நின்று தொழில் செய்து நம்முடைய ஸ்வதந்திரத்தை நிலை நிறுத்திக் கொள்ளுவோம்.

## பெண் விடுதலை (3)

அப்பால் மேற்படிக் கூட்டத்தில் ஸ்ரீ சகுந்தலா பின் வரும் பாட்டுப் பாடினுள் :—

சீன பாஷையில் 'சியூ சீன்' என்ற ஸ்திரீ பாடிய பாட்டின் தமிழ் மொழி பெயர்ப்பு—

விடுதலைக்கு மகளி ரெல்லோரும்
வேட்கை கொண்டனம் ; வெல்லுவமென்றே
திட மனத்தின் மதுக் கிண்ணமீது
சேர்ந்து நாம் பிரதிக்கினை செய்வோம்.
உடையவள் சக்தியாண் பெண்ணிரண்டும்
ஒரு நிகர் செய் துரிமை சமைத்தாள்.
இடையிலே பட்ட கீழ் நிலை கண்டீர்
இதற்கு நா மொருப்பட்டிருப்போமோ ? (1)

திறமையா லிங்கு மேனிலை சேர்வோம்.
தீய பண்டை யிகழ்ச்சிகள் தேய்ப்போம்
குறைவிலாது முழுநிகர் நம்மைக்
கொள்வ ராண் களொனிலவரோடும்
சிறுமை தீர நந்தாய்த் திரு நாட்டைத்
திரும்ப வெல்வ திற் சேர்ந்திங் குழைப்போம் ;
அற விழுந்தது பண்டை வழக்கம்
ஆணுக்குப் பெண் விலங்கெனு மஃதே (2)

விடியு நல்லொளி காணுதி நின்றே
மேவு நாக ரீகம் புதிதொன்றே !
கொடியர் நம்மை யடிமைக ளென்றே,
கொண்டு தாமுதலென்றன ரன்றே !
அடியொடந்த வழக்கத்தைக் கொன்றே
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர் நந்தேசத்து வீரக்
காரிகைக் கணத்தீர் துணிவுற்றே.

அப்பால் சில பெண்கள் பேசினர். மங்களப் பாட்டுடன் "மஞ்சள் குங்குமம்" கூட்டம் முடிவு பெற்றது.

## 10

## திரு விளக்கு

நிகழும் காளயுக்தி வருஷம் சித்திரை மாதம் 31-ம் தேதி திங்கட்கிழமை யன்று மாலை புதுச்சேரியில் ஸ்ரீ சி. சுப்ரமணிய பாரதி வீட்டில் திருவிளக்கு பூஜை செய்யப்பட்டது. சுமார் ஏழெட்டு ஸ்திரீகள் கூடி விளக்குப் பூஜை முடித்துப் பாட்டுகள் பாடினர். அப்பால் ஸ்ரீ வ. வே. சுப்பிரமணிய அய்யரின் பத்தினியாகிய ஸ்ரீமதி பாக்ய லக்ஷ்மீ யம்மாள் பின்வரும் உபந்யாஸம் புரிந்தனர் :—

### ஊக்கம்

சகோதரிகளே,

பெண் விடுதலை முயற்சிக்கு இந்த ஊர் ஸ்திரீகள் தகுந்தபடி உதவி செய்யவில்லை யென்று நாம் மன வருத்தப்பட்டு நம்முடைய நோக்கத்தைத் தளரவிடக்கூடாது. நாம் செய்யும் கார்யம் இந்த ஓரூர் ஸ்திரீகளுக்கு மாத்திரமேயன்று; பூமண்டலத்து ஸ்திரீகளுக்காக நாம் பாடுபடுகிறோம்.

உலக மெங்கும் விடுதலை யருவிநீர் காட்டாறு போலே ஓடி அலறிக்கொண்டு வரும் ஸமயத்தில் நீங்கள் நாவு வறண்டு ஏன் தவிக்கிறீர்கள் ?

ஸகோதரிகளே, தயங்காதீர்கள், மலைக்காதீர்கள். திரும்பிப் பாராமல் நாம் செய்யவேண்டிய எந்தக் காரியத்தையும் நிறைவேற்றும் வரை—நம்முடைய லக்ஷ்யத்தை அடையும் வரை—முன் வைத்த காலைப் பின் வைக்காமல் நடந்து செல்லுங்கள். பேடிகளாயிருந்தால் திரும்புங்கள்.

நாம் கொண்ட கார்யமோ பெரிது. இதற்குப் பெரிய இடையூறுகள் நிச்சயமாக நேரிடும். ஆனால் நீங்கள் பயப்படக்கூடாது.

"பயமே பாபமாகும்" என்று விவேகாநந்தர் சொல்லியதை மறவாதீர்கள். நந்தனார் விடுதலைக்குப்பட்ட சிரமங்களை நினைத்துப் பாருங்கள்.

உங்களில் ஒவ்வொருவருடைய கொள்கைகளையும் இன்று வாய்விட்டு விஸ்தாரமாகச் சொல்லிவிடுங்கள். மனதிலுள்ள பயம், வெட்கம் என்ற பேய்களைத் தைர்ய வாளால் வெட்டி வீழ்த்திவிட்டுப் பாரத ஸஹோதரிகள் பாரதமாதாவுக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதே என்னுடைய ப்ரார்த்தனை. ஓம் வந்தே மாதரம்.

பிறகு ஸ்ரீமான் மண்டயம் ஸ்ரீநிவாஸசாரியார் குழந்தை ரங்கா பின் வரும் உபந்யாஸத்தை படித்தது :—

### அநாகரீக ஜாதியார்.

இந்தியாவில் முன்பு ஆரியர் குடியேறு முன்னே இருந்த பூர்வீக ஜனங்கள் கருநிறமாகவும் சப்பை மூக்காகவும் இருந்தார்கள் ; நாகரீக மற்ற பேதை ஜனங்கள் ; அவர்களுடைய சந்ததியார் இப்போது சில குன்றுகளின் மீதும் சில கனிகளிடையிலும் வஸிக்கின்றனர். இந்த வகுப்பைச் சேர்ந்த ஜுலாஸ் குலக் என்ற ஜாதி ஒன்று இப்போது ஒரிஸ்ஸா தேசத்தில் இருக்கிறது. துரைத்தனத்தார் அந்த ஜாதிக்கு இனமாகத் துணி கொடுத்துக் கட்டிக்கொள்ளும்படிச் செய்து, துணி கட்டிக் கொள்வோருக்கு வெகுமதி கொடுத்துத் துணி கட்டும் நாகரீகத்தைக் கொஞ்சமாக ஏற்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இதுவரை அந்த ஜாதியார் இலைகளை உடைபோல் உடுப்பது வழக்கம். இந்த அநாகரீக ஜாதியிலுள்ள மனுஷ்யர் கூடப் பெண்களை மிருகங்கள் மாதிரியாகவே நடத்துகின்றனர்! ஆதலால், நம்முடைய ஆண் மக்கள் நம்மைக் கீழாக நடத்துவது தங்களுடைய உயர்ந்த அறிவுக்கு லக்ஷணமென்று நினைத்தல் சரியில்லை. நம்மைக் காட்டிலும் ஆண் மக்கள் சரீர பலத்தில் அதிகம். அதனால் நம்மை இஷ்டப்படி ஸஞ்சரிக்க வொட்டாமலும் பள்ளிக்கூடம் போய்ப் படிக்க வொட்டாமலும் தடுக்க முடிந்தது. இதனால் அவர்கள் நம்மை விட மேலென்று நினைத்துக்கொள்ளுதல் தவறு.

# ரெயில்வே ஸ்தானம்

## ஒரு சிறிய கதை.

வஸந்த காலம், காலை நேரம். தென் காசி ஸ்டேஷன். இது பிரிட்டிஷ் இந்தியாவைச் சேர்ந்தது. இதற்கு மேற்கே யுள்ள அடுத்த ஸ்டேஷன் செங்கோட்டை. இது திருவாங்கூர் ஸமஸ்தானத்தைச் சேர்ந்தது. தெற்கே இரண்டு மைல் தூரத்தில் மிகக் கீர்த்திபெற்ற குற்றாலத்தருவி விழுகிறது. பக்கமெல்லாம் மலையகிரிச் சாரல். கொஞ்சம் மேற்கே போனால், செங்கோட்டை ஸ்டேஷன் முதல் திருவனந்தபுரம் வரை பாதையிலே பத்து ஸ்டேஷன் மட்டும் இரண்டு பக்கங் களிலும் செங்குத்தான மலைகளும், ஆழமான பள்ளங்களும், மலையை உடைத்து ரயில் வண்டி ஊடுருவிச்செல்லும் பொருட் டாக ஏற்படுத்தப்பட்ட நீண்டமலைப் புழைகளும் இரு பாரி சத்திலும் இயற்கையாய்ப் பச்சை உடுத்து, சால மிகப் பெருஞ் செழிப்புடனே களிகொண்டு நிற்கும் பலவகைப்பட்ட வனக் காட்சிகளும் ஒருமுறை பார்த்தால் பிறகு எக்காலத்திலும் மறக்கமுடியாதன.

இந்தத் தென்காசி ஸ்டேஷன் வெளி முற்றத்தில் காலை நேரத்தில் திருநெல்வேலிப் பக்கம் கிழக்கே போகும் ரயில் வரப்போகிற சமயத்தில் சுமார் நூறு பிரயாணிகள் வந்து கூடியிருக்கிறார்கள்.

இவர்களிலே சிலர் பிராமண வைதீகர். நீர்க்காவி அழுக்கு நிறமாக ஏறிப்போன மிகப் பழைய வெள்ளைத் துணி உடுத்து உடல் வேர்க்க உட்கார்ந்துகொண்டு, இன்ன ஊரில், இன்ன தேதி, இன்னாருக்குச் சீமந்தம் என்ற விஷயங்களைப் பற்றிச் சம்பாஷணை செய்து கொண்டிருக்கிறார்கள்.

பிராமண விதவைகள் பலர் ஒரு புறத்திலேயிருந்து தமக் குள் ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். சுமங்கலிப் பிராம ணத்திகள் ஒரு பக்கத்தில் தலைகுனிந்து நின்றுகொண்டு போவார் வருவோரை கடைக்கண்ணால் பார்த்துக் கொண் டிருக்கிறார்கள். வேறு சில உத்தியோகஸ்தர் தலைப்பாகை, கோட்டு, கெடியாரச் சங்கிலி சகிதமாக உலாவுகிறார்கள். சில போலீஸ்காரர்கள் சக்கிரவர்த்திகளைப் போலத் தலை நிமிர்ந்து நடக்கிறார்கள். சில முகம்மதிய ஸ்திரீகள் முட்டாக்குப் போட்டுத் தலையையும் முகத்தையும் மூடிக்கொண்டு திசைக்

கொருத்தியாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுருட்டு, பீடி, பொடிப்பட்டை, முறுக்கு, தேங்குழல், சுகியன், காப்பி முதலியன வியாபாரம் செய்யும் ஓரிரண்டு பிராம்மணரும் சூத்திரரும் பகற் கொள்ளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதாவது காசு பெறாச் சாமான்களுக்கு மும்மடங்கு நான்கு மடங்கு விலை வைத்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

ரயில் வண்டி அன்றைக்கு ஒரு மணி நேரம் தாமஸமாக வந்தது. எனக்குப் பொழுது போகவில்லை. தண்டவாளத்தின் ஓரமாகச் சிறிது தூரம் உலாவி வரலாமென்று கருதித் தென்புறமாகக் கூப்பிடு தூரம் போனேன். அங்கு ஒரு மரத் தடியிலே மிகவும் அழகுள்ள ஒரு மகம்மதிய கனவான் உட்கார்ந்திருக்கக் கண்டேன். சரிகைத்தொப்பி, சரிகைக் கரைகள் தைத்த மஸ்லீன் சட்டை, சரிகைக் கரை போட்ட நிஜார், சரிகை போட்ட செருப்பு, பூர்ண சந்திரன் போன்ற முகம், செழித்து வளர்ந்த மீசை, அவனைப் பார்த்த மாத்திரத்திலே அவன் பிரபுக் குலத்தில் பிறந்தவனென்று எனக்கு நிச்சயமாகி விட்டது. அவன் கண்களினின்றும் தாரை தாரையாகக் கண்ணீர் ஊற்றுகிறது. இதைப் பார்த்து எனக்கு மிகவும் பரிதாப முண்டாயிற்று. நான் போய் அவனை ஏன் அழுகிறாய் என்று கேட்டால், அதினின்றும் அவனுக்கு ஒரு வேளை கோபம் உண்டாகுமோ என்பதைக்கூட யோசனை செய்யாமல் சரேலென்று அவன் முன்னே போய் நின்று கொண்டு :—“ தம்பி ஏன், அழுகிறாய் ?” என்று கேட்டேன்.

அவன் என்னை ஏற இறங்க ஒருமுறை பார்த்தான். அவனுக்கு 25 வயதுக்குமேல் இராது. அவன் தலையைக் குனிந்து அழுது கொண்டிருந்தபோதே மிகவும் சுந்தர புருஷனாகக் காணப்பட்டான். பிறகு அவன் என்னைப் பார்த்தவுடன் கண்ணைத் துடைத்துக்கொண்டு என் இரண்டு கண்களுடனே அவனிரண்டு கண்களும் பொருந்த நோக்கிய காலத்தில் அவன் ரூபம் எனக்குச் சாட்சாத் மன்மத ரூபமாகவே தென்பட்டது.

என்னை உற்று நோக்கியதினின்றும் அவனுக்கு எப்படியோ என்னிடத்தில் நல்லெண்ணம் உண்டாய் விட்டது. சற்றேனும் என்னிடம் கோபம் கொள்ளாமல் “ ரயில் எப்போது வரப் போகிறது ?” என்று கேட்டான்.

“ இன்றைக்கு ஒரு மணி நேரம் ரயில் தாமதித்து வரப் போவதாக ஸ்டேஷன் மாஸ்டர் சொன்னார் ” என்றேன்.

எனக்கு ஹிந்துஸ்தானி அல்லது உருது பாஷை நன்றாகத் தெரியும். ஆதலால் நான் அவனிடம் உருது பாஷையிலே ஆரம்ப முதல் பேசினேன். "உங்களுக்கு உருது எப்படித் தெரியும்? உங்களைப் பார்த்தால் ஹிந்துக்கள் போலத் தோன்றுகிறதே?" என்று கேட்டான்.

அதற்கு நான் :—"சிறு பிராயத்திலேயே நான் காசிப்பட்டணத்தில் கல்வி பயின்று கொண்டிருந்தேன். அங்கு எனக்கு ஹிந்துஸ்தானி பாஷை பழக்கமாயிற்று" என்றேன்.

"காசியில் ஹிந்தி பாஷை அன்றோ பேசுகிறார்கள்?" என்று அந்த முஸல்மான் கேட்டான்.

அதற்கு நான் :—"ஹிந்தி, உருது, ஹிந்துஸ்தானி எல்லாம் ஓரே பாஷைதான். முகலாய ராஜாக்கள் பாரசீக பாஷையிலே தான் பெரும்பாலும் ஆரம்பத்திலே விவகாரம் நடத்தி வந்தார்கள். பின்னிட்டு அவர்கள் தமக்கும் தம்முடைய பரிவாரங்களுக்கும் இந்தத் தேசத்துப் பாஷையாகிய ஹிந்தியையே பொது பாஷையாகக் கைக்கொண்டார்கள். ஹிந்தி பாஷை ஸமஸ்கிருதத்திலிருந்து பிறந்தது. அது ஸமஸ்கிருத பாஷைச் சிதைவு, அதை ஹிந்துக்கள் தேவநாகரியில் எழுதி ஸ்வயம்புவாகப் பேசுகிறார்கள். அதையே பார்ஸி லிபியில் எழுதிக்கொண்டு பல பார்ஸி அரபி மொழிகளைக் கலந்து முஸல்மான்கள் பேசியபோது அதற்கு ஹிந்துஸ்தானி அல்லது உருது என்று பெயர் வழங்கினார்கள். உருது என்றால் கூடார பாஷையென்று அர்த்தம். அதாவது, மொகலாய ராஜ்யத்தின் சேனைகள் கூடாரம் அடித்துக்கொண்டு பல தேசத்துப் போர் வீரர்கள் கலந்திருக்கையில் அங்குத் தோன்றிய கலப்புப் பாஷை என்று பொருள். எனக்கு ஹிந்திதான் மிகவும் நன்றாகத் தெரியும். எனினும் ஹிந்துஸ்தானி அல்லது உருது மேற்படி ஹிந்தி பாஷையில் பார்ஸி அரபிச் சொற்கள் சேர்ந்ததே யாகுமாதலால் நான் இதிலும் நல்ல பழக்கமுடையவனானேன். இது நிற்க, "நீ வருத்தப்பட்டுக்கொண்டிருந்த காரணம் யாது?" என்று மறுபடியும் என்னை அறியாமலே கேட்டேன். இது கேட்டு அந்த முகம்மதியப் பிரபு சொல்லுகிறான் :—

"சுவாமி உங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே எனக்கு உங்களிடம் விசுவாசம் உண்டாகிறது. உங்களிடம் சொன்னால் என் துக்கத்திற்கு நிவிர்த்தி உண்டாகுமென்று என் மனதில் ஒருவித நிச்சயம் தோன்றுகிறது, என் துயரம் சாதாரணமாக மற்றவர்களிடம் சொல்லக்கூடியதன்று.

எனினும் உங்களிடம் சொல்லலாமென்று நினைத்துச் சொல்லுகிறேன். என் துயரத்தைத் தீர்த்து விட்டால் உங்களுக்கு மிகுந்த புண்ணிய முண்டு. இந்த உபகாரத்தை நான் இறந்து போகும்வரை மறக்க மாட்டேன்" என்ருன்.

"முதலாவது உம்முடைய கஷ்டத்தைச் சொல்லும், தீர்க்க வழிகிடைத்தால் தீர்த்துவிடுகிறேன்" என்றேன்.

அப்போது அம் முகமதியப் பிரபு பின் வருமாறு சொல்லத் தொடங்கினுர் :—

"எங்கள் ஜாதியில் சிறிய தகப்பனுர் பெரிய தகப்பனுர் மக்களை விவாகம் செய்து கொள்ளலாமென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். நான் பிறந்தது வடக்கே ஹைதராபாத் நகரம். சிந்து மாகாணத்து ராஜதானியாகிய ஹைதராபாத் அன்று ; நிஜாம் அரசரின் ராஜதானியாகிய ஹைதராபாத் நகரம். நான் என் பிதாவுக்கு ஒரே பிள்ளை. நான் பிறக்கும்போது என் பிதா மிகவும் ஏழையாக இருந்தார். நான் பிறந்து சில வருஷங்களுக்குப் பின் எங்கள் ராஜ்யத்தில் ஒரு பெரிய "லாட்டரி" எலச் சீட்டுப் போட்டார்கள். அந்தச் சீட்டுக்கு என் பிதா யாரிடமிருந்தோ 10 ரூபாய் கடன் வாங்கி அனுப்பினுர். அதிர்ஷ்டம் அவருக்கிருந்தது. அவருடைய தரித்திரத்தை நாசம் பண்ணிவிட வேண்டுமென்று அல்லா திருவுளம் பற்றினுர். ஒரு கோடி ரூபாய்ச் சீட்டு அவருக்கு விழுந்தது. பிறகு அவர் அதைக்கொண்டு சில வியாபாரங்கள் நடத்தினுர். அந்த வியாபாரங்களிலும் அவருக்கு மிதமிஞ்சிய லாபம் கிடைக்கத் தொடங்கிச் சில வருஷங்களுக்குள்ளே ஏழெட்டுக் கோடிக்கு அதிபதியாய் விட்டார். அப்பால் சற்றே நஷ்டம் வரத் தொடங்கிற்று. என் பிதா நல்ல புத்திமான். நஷ்டம் வரத்தொடங்கிய மாத்திரத்திலே திடீரென்று வியாபாரங்களை யெல்லாம் நிறுத்திக்கொண்டு, பணங்களைத் திரட்டி ஏராளமான பூஸ்திதிகள் வாங்கி அவற்றினிடையே மாளிகை கட்டிக்கொண்டு தம்மால் இயன்றவரை பரோபகாரத்தில் ஈடுபட்டவராய் வாழ்ந்துவந்தார். நான் பதினைந்து வயதாக இருந்தபொழுது அவர் இறந்து போய் விட்டார். நான் ஒரே பிள்ளையாதலால் அவர் சொத்தெல்லாம் எனக்கு வந்து சேர்ந்தது. என் வீட்டு மேற்பார்வை செய்ய எனது சிறிய தகப்பனுர் நியமிக்கப்பட்டிருந்தார். என் தந்தை இறக்குந் தருவாயில் சிறிய தகப்பனுருக்குச் சில லக்ஷங்கள் பெறக்கூடிய பூமி இனும் கொடுத்ததும் அன்றி

என்னைப் பராமரித்து வரும் கடமையையும் அவருக்கே சார்த்தி விட்டுப் போனார். எனது சிறிய தகப்பனார், முதலாவது வேலையாகத் தம்முடைய குமாரத்திகளை எனக்கே மணம் புரிவித்தார். என் பிதா இறந்து இரண்டு வருஷங்கள் ஆகு முன்னரே, மேற்படி விவாகம் நடைபெற்றது. என் சிறிய தகப்பனாருக்கு ஆண் குழந்தை கிடையாது. மூன்று பெண் பிரஜை தான் அவருக்குண்டு. ஆகவே என்னுடைய சொத்து வெளிக் குடும்பங்களுக்குப் போய்விடக்கூடாதென்று உத்தே சித்து அவர் இங்ஙனம் செய்தார். இந்த விவாகம் என் தாயாருக்குச் சம்மதமில்லை. அவள் தன்னுடைய வகையில் ஒரு அழகான பெண்ணை எனக்கு மணம் புரிவிக்க விரும் பினாள். அதைவிட்டு நான் சிறிய தகப்பனாரின் பெண்களை விவாகம் செய்து கொண்டாலும் அவர்களில் யாரேனும் ஒரு பெண்ணை மாத்திரம் மணம் செய்து கொள்வதே சரியென் றும் ஒரே யடியாக மூவரையும் மணம் புரிவது கூடாதென் றும் என் தாய் வற்புறுத்தினாள். இதினின்றும் என் தாயாருக்கும் சிறிய தகப்பனாருக்கும் மனஸ்தாபம் மிகுதியாக ஏற்பட்டது. சிறியதகப்பனார் என்னைத் தனியாக வேறே ஊரு க்கு அழைத்துக் கொண்டுபோய் அங்கு என் தாயாருடைய அனுமதி யில்லாமலே விவாகத்தை முடித்து வைத்து விட்டார். சிறிது காலத்துக்கெல்லாம் என் தாயார் என் கையாலே ஏற்பட்ட துக்கத்தைப் பொறுக்கமாட்டாமலே உயிர் துறந்துவிட்டாள். சிறிய தகப்பனார் இட்டதே என் வீட்டில் சட்டமாய் விட்டது. சொத்து விஷயங்களை நான் கவனிப் பதே கிடையாது. எல்லாம் அவர் வசத்தில் விட்டு விட்டேன். அவரும் என் சொத்தில் தம்மால் இயன்ற வரை இரண்டு மூன்று வருஷங்களுக்குள்ளே அறுபத்தேழு லக்ஷம் கிட் டத்தட்ட ஒரு கோடி ரூபாய் வரை—தாஸிகளின் விஷயத் திலும் குடியிலும் நாசம் பண்ணிவிட்டுக் கடைசியில் குடி மிகுதியால் குடல் வெடித்துச் செத்துப் போனார். பிறகு என் சொத்தை யெல்லாம் நிர்வகிக்க வேண்டிய கடமை என்னைப் பொறுத்ததாயிற்று. சரி. இந்த விஷயத்தை விஸ்தாரமாகச் சொல்லுவது என்னுடைய நோக்க மன்று. சொத்து கொஞ்சம் நஷ்டமானதில் எனக்கு அதிகக் கஷ்டமில்லை. இதனிடையே என்னுடைய மூன்று மனைவிகளால் நான் படும் பாடு சொல்லுந் தரமன்று. அதோ—பார்த்தீர்களா ? ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் முக மதிய ஸ்திரீகள் உட்கார்ந்திருக்கும் கூட்டம் தெரிகிற தன்றோ ? நடுவே யிருக்கும் மூன்று பேரும் என்னுடைய

பத்தினிமார். சுற்றி உட்கார்ந்திருப்போர் வேலைக்காரிகள். அந்த மூன்றுபேரும் மூலைக்கொருத்தியாக முகத்தை திருப்பிக்கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்த மாத்திரத்திலேயே அவர்களுக்குள்ளே மன வொற்றுமையில்லை யென்பது பிரத்யக்ஷமாக விளங்கவில்லையா? இவர்களில் மூத்தவள் பெயர் ரோஷன். அவளுக்கு வயது இருப்பத்திரண்டு. அடுத்தவள் பெயர் குலாப் பீவி. அவளுக்கு வயது பத்தொன்பது. அதற்கடுத்தவள் பெயர் ஆயிஷா பீவி. அவளுக்கு வயது பதினாறு. ரோஷனிடத்தில் நான் பேசினால் குலாப் என்னை வெட்டலாமென்று கருதுகிறாள். குலாபிடம் வார்த்தை பேசுவது ஆயிஷாவுக்குச் சம்மதமில்லை. அவளுக்கு ஒரு நகை வாங்கிக் கொடுத்தால் இவள் ஒரு நகையை உடைத்தெறிகிறாள். இவளுக்கொரு பட்டுச்சட்டை வாங்கிக் கொடுத்தால் அவளொரு சட்டையைக் கிழித்தெறிகிறாள். இங்ஙனம் ஒவ்வொரு விஷயத்திலும் அம் மூவரும் முரண்பட்டு என் பிராணனை வதைக்கிறார்கள். ஒரு நாளா, இரண்டு நாளா, ஒரு வருஷமா, இரண்டு வருஷமா என் வாழ்நாள் முழுவதும் இவர்களால் நரகமாக்கப்படுகிறது. நான் என்ன செய்வேன்? இதனிடையே நேற்றிரவு ஒரு கனாக் கண்டேன். அதில் முகமது நபி வந்து என்னை நோக்கி, அடே இஸ்மேல், நீ உன் பத்தினிமார் மூவராலே மிகவும் கஷ்டப்படுகிறாய். யாரேனும் இருவரைத் தள்ளி வேறு விவாகம் செய்து கொள்ள விட்டுவிடு. ஒருத்தியை மாத்திரம் வைத்துக்கொள். உன் துக்கம் தீரும் என்றார். நான் அந்தக் கனவைத் தெய்வ சாஸனமாகவே நம்புகிறேன். நம்முடைய மனதில் தோன்றுவதுதான் கனவாக வருகிறதென்பதை நான் அறிவேன். ஆனாலும் நம்முடைய ஆத்மாவிலும் அல்லாவே இருக்கிறாராதலால் இந்தக் கனவை அல்லாவின் கட்டளையென்று நான் கருதுகிறேன். ஆனால் இந்த மூன்று ஸ்திரீகளிடமும் ஸமானமான பிரியம் இருக்கிறது. அவர்களும் என்னிடம் ஸமமான காதல் கொண்டிருக்கிறார்களென்றும் நினைக்கிறேன். யாரைத்தள்ளுவது, யாரைத் வைத்திருப்பது என்று என் புத்திக்குத் தென்படவில்லை, அதற்காகத் துக்கப்படுகிறேன்" என்று முகம்மதியப் பிரபுவாகிய இஸ்மேல்கான் சொன்னான்.

இதற்குள் ரயில் ஸ்டேஷனுக்குள் வருகிற சத்தம் கேட்டது. அவன் திடுக்கென்றெழுந்து "ஸலாம்! ஸலாம்!" என்று சொல்லிவிட்டு ஸ்டேஷனை நோக்கி ஓடினான். நானும் :— "நல்ல வேளை இந்தக் கடினமான விவகாரத்துக்குத் தீர்ப்புச்

சொல்லுமுன் ரயில் வந்ததே '' என்று மகிழ்ச்சி கொண்டு ரயிலிலேறப் போய்விட்டேன். முகம்மது நபி கனவில் செய்த கட்டளைப் படியே அவன் நடந்து கொள்வானென்று நம்புகிறேன்.

## முகமதிய ஸ்திரீகளின் நிலைமை.

இரண்டு தினங்களுக்கு முன்பு என்னுடைய முகம்மதிய நண்பர் ஒருவர் என்னைப் பார்க்கும் பொருட்டு வந்திருந்தார். இவர் இஸ்லாம் மார்க்கத்தில் ஆழ்ந்த பற்றுதல் உடையவர். எதிர்காலத்தில் இஸ்லாம் மதம் மிகுந்த மகிமையும் ஒளியும் உடையதாய் உலகத்துக்கு எண்ணிறந்த நன்மைகள் செய்யப் போகிறதென்று இவர் உறுதியாக நம்புகிறார். இவரது நம்பிக்கை நிறைவேறுமென்பதற்குப் பல அடையாளங்கள் இக் காலத்தில் உலகமெங்கும் தோன்றுவதால், நானும் இவருடைய கருத்தை அங்கீகாரம் செய்கிறேன். ஆதலால், இவருக்கும் எனக்கும் மிகுந்த நட்பேற்பட்டு வளர்ந்து வருகிறது.

இவர் அன்று மாலை என்னிடம் முதலாவது கேட்ட கேள்வி :—

'' சென்ற 20–5–20-ல் சுதேசமித்திரன் பத்திரிகை 7-ம் பக்கத்தில் ' ரெயில்வே ஸ்தானம் ' என்றொரு கதை எழுதியிருந்தீர்களே ? அது மெய்யாகவே நடந்த விஷயமா ? வெறும் கற்பனைக் கதை தானா ? '' என்றார்.

'' வெறும் கற்பனை '' என்று நான் சொன்னேன்.

'' என்ன கருத்துடன் எழுதினீர் ? '' என்று அவர் கேட்டார்.

அதற்கு நான் :—'' பொதுவாக நான் கதைகளெழுதும் போது, வெறுமே கற்பனை நயத்தைக் கருதி எழுதுவது வழக்கமேயன்றி ஏதேனும் ஒரு தர்மத்தைப் போதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதும் வழக்கமில்லை. தர்ம போதனைக்கு வியாஸங்களெழுதுவானேன் ? கதையென்றெடுத்தால் கற்பனைப் புனைவையே அதில் நான் முக்கியமாகக் கருதுவேன். எனினும் என்னை மீறியே கதைகளிலும் பெரும்பாலும் தர்ம போதனைகள் வந்து நுழைந்து விடுகின்றன. அவ்வாறே இந்த ' ரெயில்வே ஸ்தானம் ' என்ற கதையிலும் ஒரு தர்மக் கொள்கை இருக்கத்தான் செய்கிறது.

ஒருவன் பல மாதரை மணம் புரிந்து கொண்டால் அதினின்றும் அவனுக்குக் கஷ்டம்தான் விளையுமென்பதும், விவாகத்தில் ஒருவன் இன்பம் காணவேண்டினுல் அவன் ஒருத்தியை மணம் செய்துகொண்டு அவளிடம் மாருத தீராத உண்மைக் காதல் செலுத்துவதே உபாயமாகுமென்பதும் மேற்படிக் கதையினுல் குறிப்பிடப்படும் உண்மைகளாகும் '' என்றேன்.

அப்போது அந்த முஸ்லீம் நண்பர் :—" அந்தக் கதையில் ஒரு பிழை இருக்கிறது '' என்ருர்.

'' என்ன பிழை ? '' என்று கேட்டேன்.

'' அக்கதையில் ஒரு முகம்மதியப் பிரபு மூன்று சகோதரிகளை மணம் செய்ததாக எழுதியிருக்கிறீர்கள். அப்படிச் சகோதரரான மூன்று பெண்களை மணம் புரிந்து கொள்ளுதல் முகம்மதிய சாத்திரப்படி ' ஹராம் ' (பாதகம்) ஆகக் கருதப்படுகிறது. தன் மனைவி உயிருடனிருக்கையில் அவளுடன் பிறந்த மற்ற ஸ்திரீயை ஒரு முஸ்லீம் மணம் புரிந்து கொள்ளக் கூடாதென்பதே எங்களுடைய சாத்திரங்களின் கொள்கை '' என்று அந்த முகம்மதிய நண்பர் சொன்னுர்.

இதைக் கேட்டவுடன் நான் :—" சரிதான், எனக்கு அந்த விஷயம் தெரியாது. மனைவி யொருத்தியின் சகோதரிகளை மணம் புரியும் வழக்கம் ஹிந்துக்களுக்குள்ளே உண்டாதலால், அதுபோல முகம்மதியர்களுக்குள்ளேயே இருக்கலாமென்று நினைத்து அங்ஙனம் தவருக எழுதி விட்டேன். எனவே அந்தக் கதாநாயகனுகிய முகம்மதியப் பிரபுவுக்கு அவனுடைய சிற்றப்பன் தன் மூன்று குமாரத்திகளையும் மணம் புரிவித்தானென்பதை மாற்றித் தன்னினத்தைச் சேர்ந்த மூன்று பெண்களை மணம் புரிவித்தானென்று திருத்தி வாசிக்கும்படி ' சுதேசமித்திரன் ' பத்திரிகையில் எழுதிவிடுகிறேன் '' என்றேன்.

---

[* ' ரெயில்வே ஸ்தானம் ' என்ற கதையில் நான் மேலே கூறிய சாதாரண தவறு புகவிட்டது பற்றிப் பத்திராதிபரும் பத்திரிகை படிப்போரும் என்னைப் பொறுத்துக்கொள்ளும்படி வேண்டுகிறேன். உலகமெல்லாம் மாதர்களுக்கு நியாயம் செய்ய வேண்டுமென்ற கிளர்ச்சி நடப்பதை அனுசரித்து முஸ்லீம்களும் ஏக பத்தினி விரதம், பெண் விடுதலை, ஆண் பெண் சமத்துவம் என்ற கொள்கைகளைப் பற்றி மேன்மை அடைய வேண்டுமென்பதே என் கருத்து. இந்தக் கருத்து நிறைவேறும்படி பரமாத்வான அல்லா ஹுதஆலா அருள் புரிவாராக.]

இதிலிருந்து சம்பாஷணை பொதுவாக முகம்மதிய விவகாரங்களின் விஷயத்தைக் குறித்து நடைபெறலாயிற்று. அப்பால் முகம்மதிய மாதர்களின் ஸ்தானத்தைக் குறித்துப் பேசலானோம்.

என்னுடனே ஒரு ஹிந்து நண்பர் இருந்தார். அவர் அந்த முஸ்லீம் நண்பரை நோக்கி :—"உங்களுக்குள்ளே ஸ்திரீகளை அந்தப்புரத்தில் மறைத்து வைப்பதாகிய (கோஷா) வழக்கம் எக் காலத்தில் ஏற்பட்டது ?" என்று கேட்டார்.

அது கேட்டு அந்த முகம்மதிய நண்பர் :—"முகம்மது நபி (ஸல்லல்லாஹி அலகிவஸல்லா) அவர்கள் காலத்திற்கு நெடுங் காலம் முன்னே இந்த வழக்கம் அரேபியாவில் இருந்து இடையே மாறிப்போய்விட்டது. பிறகு முகம்மது நபி அதை மீளவும் விதியாக்கினார்" என்றார்.

அப்போது நான் "மதவிஷயங்களை அதாவது அல்லாவிடம் செலுத்தவேண்டிய பக்தி முதலிய விஷயங்களைத் தவிர, விவாகம், ஸ்திரீகளை நடத்தவேண்டிய மாதிரி முதலிய ஜன சமூகத்தின் ஆசார நியமங்களில் காலத்துக்குத் தக்கபடி புதிய மாறுதல்கள் செய்து கொள்ளலாமன்றோ ?" என்று கேட்டேன்.

"அங்ஙனம் ஆசார விஷயங்களிலேகூட மாறுதல்கள் செய்ய எங்கள் சாஸ்திரங்கள் இடங்கொடுக்கவில்லை !" என்று அந்த முஸ்லீம் நண்பர் சொன்னார். "எந்தச் சாஸ்திரங் களுமே ஆசார நியமங்களில், அதாவது நம்மால் விதிக்கப்பட்ட புதிய ஆசார முறையில் அதற்குப் பிறகு யாதொரு மாறுதலும் ஏற்படக்கூடாதென்று விதிப்பதுதான் வழக்கம். ஆனால் அந்தப்படி எங்கும் நடப்பதில்லை. எல்லா ஜாதிகளிலும் எல்லா ஜன சமூகங்களிலும் எல்லாத் தேசங்களிலும் எல்லா மதஸ்தர்களுக்குள்ளும் காலத்துக்குக் காலம் ஆசாரங் களில் புதிய மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டுதான் வருகின் றன" என்று நான் சொன்னேன்.

"புராதன நபிகளால் விதிக்கப்பட்ட ஆசாரங்களில் சில முகம்மதிய நபியின் காலத்தில் மாறவில்லையோ ? அதுபோல் முகம்மது நபியின் காலத்தில் ஏற்பட்ட ஆசாரங்களை அதன் பிறகு மாற்றக்கூடாதோ ?" என்று என் ஹிந்து நண்பர் கேட்டார்.

அது கேட்ட என் முஸ்லீம் நண்பர் :—" கூடாது. ஏனென்றால் முகம்மது தான் கடைசி நபி. அவருடைய உத்தரவுகள் கடைசியான உத்தரவுகள். அவற்றை மாற்றுவதற்கு இடமில்லை " என்றார்.

" முந்திய நபிகளின் கட்டளைகளும் கடவுளுடைய நேரான கட்டளைகளேயன்றி அந்தந்த நபிகளின் சொந்தக் கருத்துக்களல்ல என்பதை இஸ்லாமானவர்கள் அங்கீகாரம் செய்கிறார்கள். காலத்தின் மாறுதலுக் கிணங்க, அல்லா தன் பழைய கட்டளைகளை மாற்றி ஒவ்வொரு புதிய நபி மூலமாகவும் புதிய கட்டளைகள் பிறப்பித்துக்கொண்டு வந்திருக்கிறார் ; எனவே, முகம்மது நபி இருந்த காலத்துக்கும் தேசத்துக்கும் பொருந்த அவர் மூலமாக புதிய கட்டளைகள் கொடுக்கப்பட்டன. மதக் கொள்கைகள் எக்காலத்துக்கும் எந்தத் தேசத்திற்கும் பொது. ஆதலால் அவற்றை மாற்றக்கூடாது. வெறுமே ஜனக்கட்டு சம்பந்தமான ஆசார விவகாரங்களைக் காலதேசங்களுக்குப் பொருந்தும்படி மாற்றலாமென்று முகம்மது நபி சொல்லவில்லையா ? " என்று அந்த ஹிந்து நண்பர் கேட்டார்.

" அங்ஙனம் எங்கள் நபிநாயகம் அவர்கள் உத்தரவு கொடுக்கவில்லை " என்று என் முஸ்லீம் நண்பர் தெரிவித்தார்.

' உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமோ ? நீங்கள் கொரான் முழுதும் வாசித்திருக்கிறீர்களோ ?" என்று நான் கேட்டேன்.

அதற்கு என் முஸ்லீம் நண்பர் :—" நான் கொரான் முழுதும் ஓதியதில்லை. என் சுற்றத்தாரில் சிலர் கொரான் முற்றிலும் ஓதியிருக்கிறார்கள். இந்த விஷயத்தைப் பற்றி அவர்களிடம் கேட்டுத் தெரிவிக்கிறேன் " என்றார். பிறகு இந்த விஷயத்தை விட்டு விட்டோம்.

அப்பால் நான் என் முஸ்லீம் நண்பரை நோக்கி :—" தென் ஜில்லாக்களிலே தமிழ் பேசும் முஸ்லீம் (ராவுத்தர்) களுக்குள்ளே கோஷா வழக்கம் காணப்படவில்லையே ! அதன் காரணம் யாது ? " என்று கேட்டேன். " இங்கும் சிலர் அந்த வழக்கத்தைப் பரிபாலிக்கத் தான் செய்கிறார்கள் " என்று என் முஸ்லீம் நண்பர் சொன்னார்.

" எனினும் பலர் அதைப் பரிபாலிக்கவில்லையே ? அதன் மூகாந்தரம் யாது ? " என்று கேட்டேன்.

"வேதசாஸ்திர விதிகளில் அவர் செலுத்தக் கடமைப் பட்ட அளவு பயபக்தி செலுத்தாமலிருப்பதே அதற்கு முகாந்திரம்" என்று என் முஸ்லீம் நண்பர் தெரிவித்தார்.

"அப்படியிருந்தும், தென் ஜில்லாக்களிலுள்ள இந்து முஸ்லீம்கள் மற்றப் பக்கத்து முஸ்லீம்களைக் காட்டிலும் அல்லாவின் பக்தியிலும், மதப்பற்றுதலிலும் சிறிதேனும் குறைந்தவர்களில்லை என்பது பிரத்யக்ஷ மன்றோ ? அங்ஙன மாக, இவர்கள் கொரான் விதிகளில் போதிய அளவு பயபக்தி செலுத்தாமல் இருக்கிறார்கள் என்று சொல்லுதல் நியாயம் அன்று. இந்தக் கோஷா விஷயத்தில் மாத்திரம் இந்தத் தேச சம்பிரதாயங்களைத் தழுவி நடக்கிறார்கள். இவர்களுடைய கூட்டத்தில் எத்தனை ஞானிகளும் பக்திமான்களும் அவதாரம் செய்திருக்கிறார்கள். அவர்கள் இந்தக் கோஷா விஷயத்தை இக் கூட்டத்தின் மீது வற்புறுத்தாமல் தான் இருந்திருக்கிறார் கள். ஆதலால் மத பக்தி முதலிய விஷயங்களில் மாறுதல்கள் கூடாதேயொழிய, ஆசாரங்களில் காலத்துக்குத் தகுந்த, இடத்துக்குத் தகுந்த மாறுதல்கள் செய்து கொள்ள இஸ்லாம் சாஸ்திரங்களே அனுமதி தரக்கூடும் என்று நினைக்கிறேன்" என்று நான் சொன்னேன்.

இது கேட்டு அந்த முஸ்லீம் நண்பர் மீளவும் :—"நான் நன்றாகக் கொரான் ஓதியவர்களை விசாரித்து இந்த விஷயத் தில் முடிவு சொல்லுகிறேன்" என்றார். "இடைக்காலத்துச் சாஸ்திரங்கள் இந்த விஷயத்தில் அதிக முரண் செலுத்தக் கூடும். ஆதலால் சாட்சாத் கொரான் வேதத்தையே நன்றாகப் படித்து உணர்ந்தவர்களிடம் விசாரணை செய்யுங்கள்" என்றேன்.

"சரி. அங்ஙனமே செய்கிறேன்" என்று என் முஸ்லீம் நண்பர் சொன்னார்.

பிறகு துருக்கி தேசத்தில் ஸ்திரீகளுக்குள்ளே பிரம்மாண்ட மான விடுதலைக் கிளர்ச்சி நடந்து வருவதைப்பற்றியும் அங்குப் பல மாதர்கள் கோஷா வழக்கத்தை முற்றிலும் ஒழித்து விட்டு, கல்வி கேள்விகளில் உயர்ந்த தேர்ச்சி யுடையோராய், தங்களுக்குள்ளே சபைகள் சேர்த்தும், தாங்களே உபந்நியா ஸங்கள் முதலியன நடத்தியும், உலகத்து மற்ற மாதர்களைப் போல் துருக்கியிலுள்ள மாதரும் கல்வி, விடுதலை, ஆண்

களுடன் சமத்துவம் இவற்றை எய்தி மேன்படுமாறு அதி தீவிரமான முயற்சிகள் செய்து வருவதைப் பற்றியும் நான் சில வார்த்தைகள் சொன்னேன்.

அப்பால் எங்கள் காலைக் கூட்டம் கலைந்துவிட்டது. என் முஸ்லீம் நண்பரும் தம் வீட்டுக்குப் போயினர்.

---

## 12

## நவீன ருஷ்யாவில் விவாக விதிகள்

ருஷ்யாவில் ஜார் சக்ரவர்த்தியின் ஆட்சி பெரும்பாலும் ஸமத்வக் கக்ஷியார் அதாவது போல்ஷிவிஸ்ட் கக்ஷியாரின் பலத்தாலே அழிக்கப்பட்டது. எனினும் ஜார் வீழ்ச்சியடைந்த மாத்திரத்திலே அதிகாரம் போல்ஷிவிஸ்ட்களின் கைக்கு வந்துவிடவில்லை. அப்பால் சிறிது காலம், முதலாளிக் கூட்டத்தார் கெரன்ஸ்கி என்பவரைத் தலைவராக நிறுத்தி, ஒரு விதமான குடியரசு நடத்தத் தொடங்கினார்கள். ஆனால் கெரன்ஸ்கியின் ஆட்சி அங்கு நீடித்து நடக்கவில்லை. இங்கிலாந்து, ப்ரான்ஸ் முதலிய நேச ராஜியங்களிடமிருந்து பல வகைகளில் உதவி பெற்ற போதிலும் புதிய கிளர்ச்சிகளின் வெள்ளத்தினிடையே, கெரன்ஸ்கியால் தலை தூக்கி நிற்க முடியவில்லை. சில மாஸங்களுக்குள்ளே கெரன்ஸ்கி தன் உயிரைத் தப்புவித்துக்கொள்ளும் பொருட்டாக ருஷ்யாவினின்றும் ஓடிப்போய், நேச வல்லரசுகளின் நாடுகளில் தஞ்சமென்று குடிபுக நேரிட்டது.

போல்ஷிவிக் ஆட்சி ஏற்பட்ட காலத்திலே அதற்குப் பலவகைகளிலும் தோஷங்கள் கற்பிப்பதையே தம் கடமையாகக் கருதியவர்களிலே சிலர் அதன்மீது ராஜரீக நெறிகளின் குற்றங்கள் சுமத்தியது போதாதென்று, போல்ஷிவிஸ்ட் கக்ஷியார் ஸ்திரீகளையும் பொதுவாகக்கொண்டு ஒருத்தியைப் பலர் அனுபவிக்கிறார்களென்ற அபாண்டமான பழி சுமத்தப் பட்டது. ஆனால், "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு." ஒன்பதாம் நாள் உண்மை எப்படியேனும் வெளிபட்டுவிடும். ஒரு பெரிய ராஜ்யத்தைக் குறித்து எத்தனை காலம் பொய் பரப்பிக்கொண்டிருக்க முடியும்? சில தினங்களுக்கு முன்பு, இங்கிலாந்து தேசத்தில் மாஞ்செஸ்டர் நகரத்தில் பிரசுரம் செய்யப்படும் "மாஞ்செஸ்டர் கார்டியன்" என்ற பத்திரிகை நவீன ருஷியாவின் விவாக விதிகளைப் பற்றிய உண்மையான விவரங்களைப் பிரசுரம் செய்திருக்கிறது.

அவற்றைப் பார்க்கும்போது நவீன ஐரோப்பிய நாகரீகம் என்று புகழப்படும் வஸ்துவின் நியாயமான, உயர்ந்த பக்குவ நிலைமை மேற்படி போல்ஷிவிஸ்ட் விவாக சம்பிரதாயங்களில் எய்தப்பட்டிருக்கிறதென்று தெளிவாக விளங்குகிறது. ஆண், பெண் இருபாலாரும் பரிபூர்ண ஸமத்வ நிலைமையுடையோர். இங்ஙனம் இரு பாலோரும் முற்றிலும் ஸமானம் என்ற கொள்கைக்குப் பங்கம் நேரிடாதபடி விவாகக் கட்டைச் சமைக்கவேண்டும் என்பதே ஐரோப்பிய நாகரீகத்தின் உண்மையான நோக்கம். பெண்களுக்கு விடுதலை தாங்கள் வேறு பல ஜாதியர்களைக் காட்டிலும் அதிகமாகக் கொடுத்திருப்பதே தாம் நாகரீகத்தில் உயர்ந்தவர்கள் என்பதற்கு முக்கியமான அடையாளங்களில் ஒன்றுமென்று ஐரோப்பியர்கள் சொல்லுகிறார்கள். அந்த வகையிலே பார்த்தால், ஐரோப்பாவின் இதரப் பகுதிகளைக் காட்டிலும் நவீன ருஷியா உயர்ந்த நாகரீகம் பெற்றுள்ளதென்பது ப்ரத்யக்ஷமாகத் தெரிகிறது.

“மாஞ்செஸ்டர் கார்டியன்” சொல்லுகிறது :—“தெற்கு ஸோவியட் (போல்ஷிவிஸ்ட்) ருஷியாவில் இதுவரையிலிருந்த வீண் நிர்ப்பந்தங்கள் இனி விவாக விஷயத்தில் இல்லாதபடி ஒழித்துவிடப்படும். அதாவது, வேற்றுமைகள் முதலியன விவாகங்களுக்குத் தடையாகக் கணிக்கப்படமாட்டா ! இப்போதுள்ள சட்டப்படி ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் எவ்விதத்திலும் வேற்றுமை கிடையாது. இருபாலோரும் ஸமானமாகவே கருதப்படுவர். எல்லாக் குழந்தைகளும ஸமூஹச் சட்டப்படிப் பரிபூர்ண சமத்வம் உடையனவாம். பாதுகாப்பில்லாத குழந்தைகள் யாருக்குப் பிறந்தபோதிலும், அவற்றைப் பாதுகாக்க ஒரு தனி இலாகா ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் ராஜாங்க சாஸனப்படி நடைபெறும் விவாகங்களையே அங்கீகாரம் செய்யும். பெண்கள் பதினாறு வயதுக்குள்ளும், ஆண்கள் பதினெட்டு வயதுக்குள்ளும் விவாகம் செய்து கொள்ளவேண்டும். இரு திறத்தாரும் மனமொத்தால்தான் விவாகம் செய்யலாம். விவாகம் முடிந்ததும் புருஷன் அல்லது ஸ்திரீயின் பெயரைக் குடும்பத்தின் பெயராக வைத்துக் கொள்ளலாம். விவாகத்துக்குப் பிறகு தம்பதிகள் பரஸ்பரம் உதவியாக வாழக் கடமைப்பட்டிருக்கிறார்கள். புருஷனேனும் ஸ்திரீயேனும் விவாக பந்தத்தை நீக்கிக் கொள்ள விரும்பினால், அங்ஙனமே நீக்கிக் கொள்ளச் சட்டம் இடங் கொடுக்கிறது.”

மேற்படி விவரங்கள் " மான்செஸ்டர் கார்டியன் " பத்திரிகையிலே காணப்படுகின்றன. சில தினங்களின் முன்பு ஒரு கிராமாந்தரத்து ஸ்திரீ " மாதர் நிலை " என்ற மகுடத்தின் கீழே " சுதேசமித்திரன் " பத்திரிகையில் ஒரு வியாஸம் எழுதியிருந்தார். அந்த வியாஸத்தை வாசித்துப் பார்த்தால் (ஸ்ரீமான் காந்தி சொல்லுவது போல) எவனுக்கும் அழுகை வராமல் இராது. அந்த வ்யாஸத்தில் நம்முடைய தேசத்து ஸ்திரீகளை நம்மவரில் ஆண் மக்கள் எத்தனை இழிவாகவும் குரூரமாகவும் நடத்துகிறார்களென்பதை அந்த ஸ்திரீ மிகவும் நன்றாக எடுத்து விளக்கியிருந்தார். உலகத்தில் ஒரு ஸ்திரீ ஜனன மெய்திய மாத்திரத்திலே பூமாதேவி மூன்றே சொச்சம் முழம் கீழே அமிழ்ந்து போய்விடுவதாக இந் நாட்டில் முந்தைய ஆண் மக்கள் எழுதி வைத்திருப்பதையும் அதுபோல் ஸ்திரீகளை இழிவாகவும் குறைவாகவும் சொல்லும் வேறு பல " சாத்திர " வசனங்களையும் மேற்கோள் காட்டி, அந்த மாது நம் பெண்மக்களின் ஸ்திதி விலங்குகளின் ஸ்திதியைக் காட்டிலும் பரிதாபத்துக்கு இடமாக விளக்கி மிகவும் வருத்த முணர்த்தியிருந்தார்.

இப்படிப்பட்ட நம்முடைய ஸ்திரீகளின் நிலைமையை நவீன ருஷ்யாவில் ஸ்திரீகளின் விஷயமாக ஏற்பட்டிருக்கும் சட்டங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அப்போதுதான் நம்மை ஐரோப்பிய நாகரீகம் எந்தச் சக்தியினாலே கீழே வீழ்த்திற்று என்பதும், எந்த அம்சங்களில் நாம் ஐரோப்பிய நாகரீகத்தின் வழியைப் பின்பற்றத் தகும் என்பதும் தெளிவுறப் புலப்படும். நாம் ஐரோப்பியர் காட்டும் நெறிகளை முற்றிலுமே கைப்பற்றிக் கொள்ளுதல் அவசியமில்லை. திருஷ்டாந்தமாக, நாம் குழந்தைகளைக் குடும்ப ஸம்ரக்ஷணையினின்றும் பிரித்து ராஜாங்க ஸம்ரக்ஷணையில் விடவேண்டியதில்லை. பெண்கள் 14 வயதுக்குள்ளும் ஆண்கள் 18 வயதுக்குள்ளும் விவாகம் பண்ணித் தீரவேண்டுமென்று நிர்பந்தப்படுத்தவேண்டிய தவசியமில்லை. விவாகத்தை ரத்து செய்யும் விஷயத்தில் அவஸரப்படவேண்டியதில்லை. பொறுமையை உபயோகப்படுத்தி விவாகக் கட்டை நிரந்தரமாகப் பாதுகாப்பதே மனித நாகரீகத்தின் சிறப்பாதலால், நாம் அதற்குரிய ஏற்பாடு செய்வோம். ஆனால் " ஆண்களுக்கும் பெண்களுக்கும் எவ்விதத்திலும் வேற்றுமை கிடையாது. இரு பாலோரும் ஸமானமாகவே கருதப்படுவார்கள் " என்று ருஷ்யச் சட்டம் கூறுமிடத்திலே நாம் ஐரோப்பிய நாகரீகத்தின் கருத்தை அனுசரித்தல் மிக, மிக, மிக, மிக, அவசியம்.

# 13

## தென் ஆப்பிரிக்காவில் பெண்கள் விடுதலை

தென் ஆப்பிரிக்காவிலே "பியேட்டர் மாரிட்ஸ்புர்க்" என்ற பட்டணத்தில் 1910-ம் வருஷத்தில் "பெண்கள் விடுதலை சங்கம்" என்றொரு சபை ஸ்தாபனம் செய்யப்பட்டது. இதிலே பல வகுப்புகளைச் சேர்ந்த பெணகள் ஒன்றுகூடி "பார்லிமெண்டு" சபையிலே பிரதிநிதிகள் நியமிப்பதற்காகச் சீட்டுப் (ஓட்) போடும் சுதந்திரம் பெண்களுக்குக் கொடுத்தால் ஒழிய வேறு விதமான சீர்திருத்தங்கள் பெண்களுடைய நிலைமையிலே உண்டாக்குவது சாத்தியமில்லை என்று முடிவு செய்து கொண்டு அந் நோக்கத்தை நிறைவேற்றும்படிப் பிரயத்தனம் செய்து வருகின்றார்கள். இந்தச் சங்கம் ஆரம்பித்த காலத்தில் 'நட்டா' லிலே பெண்கள் நகர சபை (Municipality) க்குச் சீட்டுப்போடும் உரிமை கூட இல்லாதிருந்தனர். இச் சங்கத்தினரின் முயற்சியால் ஸ்திரீகளுக்குள்ளே ஜாதி, குலம், செல்வம், ஸ்தானம், பட்டம் முதலியவற்றால் ஏற்பட்டிருந்த அனுவசியமான தாரதம்யங்கள் குறைந்து வருகின்றன. கல்வி விஷயத்திலே (அதாவது பெண் கல்வி மாத்திரம் அன்று), பொதுவாக தேசத்து ஜனங்களின் படிப்பு விஷயத்தில் இவர்கள் மிகவும் சிரத்தை செலுத்தி வருகிறார்கள். பள்ளிப் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் இயற்கை விதிகள் நன்றாகக் கற்றுக்கொடுத்து மேற்படி விதிகளைத் தவறினால் இயற்கையே தண்டனை செய்யும் என்பதை அவர்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளும்படிச் செய்து, பொதுஜன அறிவை இயற்கை நெறியில் ஓங்கும்படிச் செய்யவேண்டும் என்று பாடு படுகிறார்கள். நிலை தவறிப் போன ஸ்திரீகளைக் கொடூரமான அவமதிப்பாலும் அசிரத்தையாலும் மேன் மேலும் கெட்டழிந்து துன்பப்படாதபடி நல்லவழி காட்டி நேர்மைப் படுத்தலே தகுதியென்று தீர்மானித்து அதற்குரிய முயற்சி செய்து வருகிறார்கள். "ஜன சபைராசி" (ஜன சபை பார்லிமெண்டு) ரோசி கமிட்டியென்று தன் ராசி ஒன்று நியமித்து அந்த ராசி கமிட்டியைச் சேர்ந்தவர்கள் அப்போதப்போது ஜன சபைக்கு முன்பு வரும் மசோதாக்களைப் படித்து ஆராய்ச்சி செய்கிறார்கள். ஏதேனும் ஒரு மசோதா சட்டமாவதனாலே ஜனங்களுக்குப் பிரதிகூலம் ஏற்படும் என்று தோன்றினால், உடனே ஜன சபைக்காரரைத் தனித்தனியே போய்ப் பார்த்து ஆட்சேபங்கள்

செய்தல், தந்திகளின் மூலம் ஆட்சேபித்தல் முதலிய காரியங்கள் செய்கிறார்கள். ஸ்திரீகளுக்குத் தொழிற்சாலைகளிலே கொடுக்கும் சம்பளம் இன்ன அளவுக்குக் கீழே போகக்கூடாதென்று நிர்ணயம் செய்த ஜன சபையார் "ஒரு சம்பளக் கீழெல்லை மசோதா" கொண்டுவரவேண்டும் என்று சொல்லி அதற்காகப் பல "மெம்பர்" * களைப் போய்ச் சந்தித்து வாதாடி வருகிறார்கள்.

ஸ்திரீகளுக்கு நகர சபையிலே சீட்டுப் போடும் சுதந்திரம் மேற்படி சங்கத்தாரின் முயற்சியாலே தான் கைகூடிற்று. ஸ்திரீகளையும் குழந்தைகளையும் யாரேனும் அடித்து ஹிம்சை செய்ததாக நியாயஸ்தலங்களிலே வழக்கு வரும்போது, மேற்படி சங்கத்தின் காரியஸ்தர்கள் போயிருந்து கவனித்து வருகிறார்கள். தென்னாப்பிரிக்கா முழுமைக்குமாக ஒரு பெரிய 'விடுதலை'க் கோட்டம் (கோட்டம் என்பது பெருஞ் சபை) ஏற்பட்டிருக்கிறது. அதனுடன் இந்தச் சங்கமும் சேர்ந்திருக்கிறது. "பிருத்தானிய ஸ்திரீ ஸாம்ராஜ்யம்" என்ற பெரிய கோட்டத்துடன் இவையெல்லாம் ஐக்கியப் பட்டிருக்கின்றன. அந்நிய தேசங்களில் உள்ள விடுதலைக் கூட்டத்தாருடனே இவர்கள் அடிக்கடிக் கடிதப் போக்கு வரவு நடத்துகிறார்கள். இவ்விஷயமெல்லாம் சென்னையில் மிஸஸ் அன்னிபெஸண்ட் என்ற பண்டிதை நடத்தும் "காமன்வீல்" (பொதுநலம்) பத்திரிகையிலே சொல்லப்படுகிறது. மிஸஸ் அன்னிபெஸண்ட் பெண்கள் விடுதலை விஷயத்திலே தீவிரமான பக்தியுடையவர் என்பது சொல்லாமலே விளங்கும். இப்படியே எல்லாத் தேசங்களிலும் பெண்கள் மேன்மேலும் சுதந்திரம் பெற்று மனித ஜாதியை மேன்மைப் படுத்த செய்கிறார்கள். தமிழ் நாட்டு ஸ்திரீகள் மாத்திரம் தமது மனுஷ்ய பதவியை ருசுப்படுத்துவதற்கு யாதொரு வழியும் செய்யாமல் இருக்கிறார்களே! என்? என்ன காரணம்?

---

[* நடுவே ஒரு ரசமான வார்த்தை. "மெம்பர்" என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் எனக்கு அகப்படவில்லை (இது ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம்). "அவயவி" சரியான வார்த்தையில்லை. "அங்கத்தான்" கட்டிவராது. "சபிகன்" சரியான பதந்தான். ஆனால் பொது ஜனங்களுக்குத் தெரியாது. யாரேனும் பண்டிதர்கள் நல்ல பதங்கள் கண்டு பிடித்துக் கொடுத்தால் புண்ணியமுண்டு. அரை மணி நேரம் யோசித்துப் பார்த்தேன்: 'உறுப்பாளி' எதெல்லாமோ நினைத்தேன். ஒன்றும் மனதிற்குப் பொருந்தவில்லை. என்னசெய்வேன்! கடைசியாக "மெம்பர்" என்று எழுதி விட்டேன். இன்னும் ஆர, அமர யோசித்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொரு முறை சொல்லுகிறேன்.]

# 14

## இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமான நிலைமை

ஸ்ரீமான் மோஹனதாஸ் கரம்சந்திர காந்தி (மகாத்மா காந்தி)யால் நடத்தப்படும் " நவஜீவன் " என்ற பத்திரிகையில் ஒருவர் பாரததேசத்து விதவைகளைப் பற்றிய சில கணக்குகளைப் பிரசுரம் செய்திருக்கிறார்.

அவற்றுள் குழந்தைக் கைம்பெண்களைப் பற்றிய பின்வரும் கணக்கு மிகவும் குறிப்பிடத்தக்கது.

| வயது. | மணம்புரிந்த மாதர். | கைம்பெண்கள். |
|---|---|---|
| 0-1 | 13,212 | 1,014 |
| 1-2 | 17,753 | 856 |
| 2-3 | 49,787 | 1,807 |
| 3-4 | 134,105 | 9,273 |
| 4-5 | 302,425 | 17,703 |
| 5-10 | 2,219,778 | 94,240 |
| 10-15 | 10,087,024 | 223,032 |

இந்தக் கணக்கின்படி இந்தியாவில் பிறந்து ஒரு வருஷமாகு முன்னமே விதவைகளாய்விட்ட மாதர்களின் தொகை 1,014! 15 வயதுக்குக் குறைந்த கைம்பெண்களின் தொகை 3½ லக்ஷம்! இவர்களில் சற்றுக்குறைய 18,000 பேர் ஐந்து வயதுக்குட்பட்டோர்!

இப்படிப்பட்ட கணக்குகள் சில கொடுத்துவிட்டு அவற்றின் இறுதியில் மேற்படிக் கடிதம் எழுதியவர், " இக்கைம் பெண்களின் மொத்தத் தொகை மிகவும் அதிகமாக இருக்கிறது. இதைப் படிக்கும்போது எந்த மனிதனுடைய மனமும் இளகிவிடும். (இந்நாட்டில்) விதவைகள் என்ற கட்டுப்பாட்டை நீக்க முயல்வோர் யாருளர்?" என்று சொல்லி வருத்தப்படுகிறார்.

இந்த வியாசத்தின் மீது மகாத்மா காந்தி, பத்திராதிபர் என்ற முறையில் வியாக்கியானம் எழுதியிருக்கிறார். அந்த வியாக்கியானம் ஆரம்பத்தில் ஸ்ரீமான் காந்தி " மேலே காட்டிய தொகையைப் படிப்போர் அழுவார்கள் என்பது திண்ணம் " என்கிறார். அப்பால், இந்த நிலைமையை நீக்கும் பொருட்டு, தமக்குப் புலப்படும் உபாயங்களில் சிலவற்றை

எடுத்துச் சொல்லுகிறார். அவற்றின் சுருக்கம் யாதெனில், (1) பால்ய விவாகத்தை நிறுத்திவிடவேண்டு மென்பதும் (2) 15 வயதுக்குட்பட்ட கைம்பெண்களும் மற்ற இளமையுடைய கைம்பெண்களும் புனர் விவாகம் செய்துகொள்ள இடம் கொடுக்கவேண்டுமென்பதுமேயாகும்.

ஆனால் இந்த உபாயங்கள் விருப்பமுடையோர் அனுசரிக்கலா மென்றும், தமக்கு இவற்றை அனுசரிப்பதில் விருப்பமில்லை யென்றும், தம்முடைய குடும்பத்திலேயே பல விதவைகள் இருக்கலாமென்றும், அவர்கள் புனர் விவாகத்தைப்பற்றி யோசிக்கவேமாட்டார்களென்றும், தாமும் அவர்கள் மறு மணம் செய்து கொள்ளும்படிக் கேட்க விரும்பவில்லை என்றும் ஸ்ரீமான் காந்தி சொல்லுகிறார்.

### ஸ்ரீமான் காந்தி சொல்லும் உபாயம்

"ஆண்மக்கள் புனர் விவாகம் செய்து கொள்ளுவதில்லை என்ற விரதம் பூணுதலே விதவைகளின் தொகையைக் குறைக்கும் அருமருந்தாகும்" என்று ஸ்ரீமான் காந்தி அபிப்பிராயப்படுகிறார். இந்த விநோதமான உபாயத்தை முதல் முறை வாசித்துப் பார்த்தபோது எனக்கு ஸ்ரீமான் காந்தியின் உட்கருத்து இன்னதென்று விளங்கவில்லை. அப்பால், இரண்டு நிமிஷம் யோசனை செய்து பார்த்த பிறகு தான், அவர் கருத்து இன்னதென்பது தெளிவுபடலாயிற்று. அதாவது, 'முதல் தாரத்தை சாகக்கொடுத்தவன் பெரும்பா லும் கிழவனாகவேயிருப்பான். அவன் மறுபடி ஒரு சிறு பெண்ணை மணம் புரியுமிடத்தே அவன் விரைவில் இறந்து போய் அப் பெண் விதவையாக மிஞ்சி நிற்க இடமுண்டாகிறது. ஆதலால் ஒருமுறை மனைவியை இழந்தோர் பிறகு மணம் செய்யாதிருப்பதே விதவைகளின் தொகையைக் குறைக்க வழியாகும்' என்பது ஸ்ரீமான் காந்தியின் தீர்மானம்.

சபாஷ்! இது மிகவும் நேர்த்தியான உபாயம்தான். ஆனால் இதில் ஒரு பெரிய சங்கடம் இருக்கிறது. அது யாதெனில், இந்த உபாயத்தின்படி ஆண் மக்கள் ஒரு போதும் நடக்கமாட்டார்கள். மேலும், பெரும்பாலும் கிழவர்களே முதல் தாரத்தை இழப்பதாக ஸ்ரீமான் காந்தி நினைப்பதும் தவறு. 'இந்தியாவில் ஆண்களுக்கும் பெண் களுக்கும் சராசரி 25-ம் பிராயத்தில் மரணம் நேருகிறது' என்பதை ஸ்ரீமான் காந்தி மறந்துவிட்டார். எனவே, இளம்

பிராயமுடைய பலரும் மனைவியாரை இழந்து விடுகிறார்கள். அவர்கள் ஸ்ரீமான் காந்தி சொல்லும் சந்நியாச மார்க்கத்தை ஒருபோதும் அநுஷ்டிக்கமாட்டார்கள். அவர் அங்ஙனம் அனுஷ்டிப்பதினின்றும் தேசத்துக்குப் பல துறைகளிலும் தீமை விளையுமேயன்றி நன்மை விளையாது. ஆதலால் அவர்கள் அங்ஙனம் துறவு பூணும்படிக்கேட்பது நியாயமில்லை.

ஸ்திரீ-விதவைகளின் தொகையைக் குறைக்க வழிகேட்டால் ஸ்ரீமான் காந்தி "புருஷ-விதவை"களின் (அதாவது புனர் விவாகமின்றி வருந்தும் ஆண் மக்களின்) தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்கிறார்! இதினின்றும், இப்போது ஸ்திரீ-விதவைகளின் பெருந்தொகையைக் கண்டு தமக்கு அழுகை வருவதாக ஸ்ரீமான் காந்தி சொல்லுவதுபோல், அப்பால் புருஷ விதவைகளின் பெருந்தொகையைக் கண்டு அழுவதற்கு ஹேது உண்டாகும்.

மேலும், ஆணுக்கேனும், பெண்ணுக்கேனும் இளமைப் பிராயம் கடந்த மாத்திரத்திலே போக விருப்பமும் போக சக்தியும் இல்லாமற் போகும்படிக் கடவுள் விதிக்கவில்லை. உலகத்தின் நலத்தைக் கருதி கடவுளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் போக இச்சையை அக்கிரமமான வழிகளில் தீர்த்துக் கொள்ள முயல்வோரை மாத்திரமே நாம் கண்டிக்கலாம். கிரமமாக ஒரு ஸ்திரீயை மணம் புரிந்துகொண்டு அவளுடன் வாழ விரும்புவோர் வயது முதிர்ந்தோராயினும் அவர்களைக் குற்றம் சொல்வது நியாயமன்று. சிறிய பெண் குழந்தைகளை வயது முதிர்ந்த ஆண் மக்கள் மணம் புரியலாகாதென்பதை நாம் ஒரு வேளை பேச்சுக்காக ஒப்புக்கொண்ட போதிலும், வயதேறிய பெண்களை வயது முற்றிய ஆண் மக்கள் மணம் புரிந்துகொள்ளக்கூடாதென்று தடுக்க எவனுக்கும் அதிகாரம் கிடையாது. எனவே, எவ்வகையிலே நோக்குமிடத்தும் ஸ்ரீமான் காந்தி சொல்லும் உபாயம் நியாய விரோதமானது; சாத்தியப்படாதது; பயனற்றது.

விதவைகளின் தொகையைக் குறைப்பதற்கும் அவர்களுடைய துன்பங்களைத் தீர்ப்பதற்கும் ஒரே வழிதான் இருக்கிறது. அதை நம்முடைய ஜனத் தலைவர்கள் ஜனங்களுக்குத் தைர்யம் போதிக்கவேண்டும். அதை ஜனங்கள் எல்லோரும் தைர்யமாக அனுஷ்டிக்கவேண்டும். அதாவது யாதெனில் :—இந்தியாவில் சிற்சில ஜாதியாரைத்தவிர மற்றநாகரிகமுடையோர், நாகரீக தேசத்தார் எல்லோரும் செய்கிறபடி,

விதவைகள் எந்தப் பிராயத்திலும் தமது பிராயத்துக்குத் தகுந்த புருஷரைப் புனர் விவாகம் செய்து கொள்ளலாம். அப்படியே புருஷர்கள் எந்தப் பிராயத்திலும் தம் வயதுக்குத் தக்க மாதரை மறு மணம் செய்துகொள்ளலாம். இந்த ஏற்பாட்டை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டும். வீண் சந்தேகம், பொருமை, குருட்டுக் காமம், பெண்களை ஆத்மாவில்லாத, ஹ்ருதயமில்லாத, ஸ்வாதீனமில்லாத அடிமைகளாக நடத்த வேண்டுமென்ற கொள்கை இவற்றைக் கொண்டே நம்மவர்களில் சில புருஷர்கள் 'ஸ்திரீகளுக்குப் புனர் விவாகம் கூடாது' என்று சட்டம் போட்டார்கள். அதனலே தான, மனைவியில்லாதவர்கள் சிறு பெண்களை மணம் புரிய நேரிடுகிறது. அதனாலேதான், ஹிந்து தேசத்து விதவைகளின் வாழ்க்கை நரக வாழ்க்கையினும் கொடியதாய் எண்ணற்ற துன்பங்களுக்கு இடமாகிறது. பால்ய விதவைகள் புனர் விவாகம் செய்து கொள்ளலாமென்று ஸ்ரீமான் காந்தி சொல்லுகிறார். ஆனால் அதைக்கூட உறுதியாகச் சொல்ல அவருக்குத் தைரியம் இல்லை ; மழுப்புகிறார். எல்லா விதவைகளும் மறுமணம் செய்து கொள்ள இடம் கொடுப்பதே இந்தியாவில் மாதருக்குச் செய்யப்படும் அநியாயங்கள் எல்லாவற்றிலும் பெரிதான இந்த அநியாயத்திற்குத் தகுந்த மாற்று. மற்றப் பேச்செல்லாம் வீண் கதை.

---

## 15

## ஸ்வர்ண குமாரி

பெங்காளம் என்று கூறப்படும் வங்க தேசத்திலே, சாந்த் பூர் (சாந்திபுரம்) என்ற கிராமத்தில் மனோரஞ்சன பானர்ஜி என்ற ஒரு பிராமண வாலிபன் உண்டு. இவன் கல்கத்தா போய் பி.ஏ. பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருக்கையில், 1904-ம் வருஷம் டிஸம்பர் மாதம் ரஜாவின் பொருட்டாகத் தனது சொந்த ஊராகிய சாந்த்பூருக்கு வந்திருந்தான்.

மனோரஞ்சன் வெகு சுந்தரமான ரூபமுடையவன். பார்ப்பதற்கு மன்மதனைப் போலிருப்பான். மேலும் குழந்தைப் பிராயம் முதலாகவே பள்ளிக்கூடத்துப் பத்

தாட்டம் முதலிய விளையாட்டுகளிலேயும், மற்றும் சிலம்பம், கர்லா முதலிய சுதேசிய தேகாப்பியாசங்களிலேயும் இவன் மிகுந்த தேர்ச்சி உடையவனாகி, தன்னோடு ஒத்த வாலிபர்கள் எல்லாராலும் 'அர்ஜுனன்' என்று அழைக்கப் பட்டு வந்தான்.

வயது இருபத்தி மூன்று ஆயிருந்தபோதிலும், என்ன காரணத்தாலோ இன்னும் விவாகம் நடக்காமல் இருந்தது. பெங்காளத்தார் மிகுந்த சொற்ப வயதிலேயே விவாகாதிகள் நடத்திவிடுவது முறைமை. இவன் விஷயத்தில் மட்டும் இவ்வாறு நடக்கவில்லை. இதற்கு வேறு ஒரு உள் முகாந்திரமும் உண்டு. மனோரஞ்சனனுடைய தந்தை உயிரோடிருந்திருக்கும் பக்ஷத்தில், இவனை இதற்கு முன் விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தியிருப்பார். ஆனால், இவனுக்கு ஏழு வயதாக இருக்கும் பொழுதே, தந்தை இறந்துபோய் விட்டார். தாய்க்கு இவன் ஒரே பிள்ளை யாதலால், இவன் மீது மிகுந்த அருமை கொண்டவளாகி வீட்டில் இவன் சொன்னதற்கு மாறு சொல்லாமல் காரியங்கள் நடந்து வந்தன. இந்தக் குடும்பத்திற்கு அதிக ஆஸ்தி இல்லாவிட்டாலும் 'உள்ள நிலத்தை விற்று, பணம் எடுத்துக் கொண்டு தான் கல்கத்தாவுக்குப் போய் பரீட்சைகள் தேறி வரவேண்டும்' என்று இவன் சொன்னவுடனேயே, யாதொரு ஆட்சேபமும் சொல்லாமல், 'சரி' என்று சம்மதித்து விட்டாள். இதுபோலவே தான் எல்லா விஷயங்களிலும்.

அடிக்கடி இவனுடைய தாய், இவனைக் கூப்பிட்டு "குழந்தாய் ரஞ்சன்! உனக்கு வயதாய் விட்டதே. விவாகம் எப்போடா செய்து கொள்வாய்?" என்று கேட்டால், இவன் முரட்டுத்தனமாக, "அம்மா, அந்தப் பேச்சை மட்டிலும் என்னிடம் பேசாதே" என்று சொல்லிவிட்டு, வெளியே போய் விடுவான்.

அந்தரங்கத்திலே இவன் வடக்கு வீதி ஸூர்யகாந்த பாபு என்ற பெருஞ் செல்வரின் குமாரத்தியான ஸ்வர்ண குமாரியின்மீது மோகம் வைத்திருக்கிறானென்ற விஷயத்தைத் தாயார் நன்றாய் அறிவாள். ஆனால், இவனுக்கும் ஸ்வர்ண குமாரிக்கும் ஒருபோதும் விவாகம் நடப்பது சாத்தியமில்லை என்பது அவளுக்கு நிச்சயந்தான். அப்படி ஒரு வேளை அந்த விவாகம் நடப்பது ஸாத்தியமாகக் கூடுமானால், அதை இவள் கேட்ட மாத்திரத்திலே இவளுக்குப் பிராணன் போய் விடும். தனது மகன் ஸூர்யகாந்த பாபுவின் பெண்ணை

விவாகம் செய்து கொள்வதைக் காட்டிலும் அப்பிள்ளை இறந்து போவது விசேஷமென்று அவளுக்குத் தோன்றும். தனது குலதெய்வமான ஸ்ரீ கிருஷ்ண பகவானைத் தியானித்து இவள், "ஸர்வஜீவ தயாபரா! என்து பிள்ளைக்கு அந்த மிலேச்சனுடைய பெண்மீது இருக்கும் மோகத்தை நீக்கி அவனுக்கு நல்ல புத்தி கொடுக்கலாகாதா?" என்று அடிக்கடிக் கண்ணீர் சொரிந்து பிரார்த்தனை புரிவாள்.

* * *  * * *  * * *

ஸ்வர்ண குமாரியை மனோரஞ்சனன் மணம் புரிந்து கொள்வதிலே, மனோரஞ்சனனுடைய தாயாருக்கு இத்தனை விரோதம் ஏன் இருக்கவேண்டுமென்பதை நமது கதாப் பிரியர்கள் அறிய ஆவலுறலாம். அதன் காரணம் பின் வருமாறு:—ஸ்வர்ண குமாரியின் தந்தையாகிய ஸூர்யகாந்த பாபு பிராமண குலத்திலே பிறந்த போதிலும், பிராமண ஆசாரங்களையும் அனுஷ்டானங்களையும் மார்க்க முறைகளையும் நம்பிக்கைகளையும் திலதர்ப்பணம் செய்துவிட்டு, "பிரம்ம ஸமாஜம்" என்ற புதிய மார்க்கத்தைச் சேர்ந்து கொண்டு விட்டார். இந்த ஸமாஜத்தார் "ஜாதி பேதம் இல்லை, விக்ரஹாராதனை கூடாது, பெண்களும் ஆண்களும் சமானமாக ஒத்துப் பழகலாம்" என்பது போன்ற நவீனக் கோட்பாடுகளைக் கொண்டிருப்போர். ஸ்வர்ண குமாரியின் தகப்பனார் எந்த ஜாதிக்காரனுடனும் கலந்து சாப்பிடுவார். அவர்கள் வீட்டு ஸ்திரீகள் பகிரங்கமாக வெளியே உலாவுவதும், கண்ட புருஷர்களுடன் சம்பாஷிப்பதும் பிழையில்லையென்று நடப்பவர்கள். ஸ்வர்ண குமாரிக்கு வயது பதினெட்டாகியும் இன்னும் விவாகமாகவில்லை. இது எல்லாம், மிகுந்த புராதன இயற்கை கொண்ட மனோரஞ்சனனின் தாயாருக்குக் காதால் கேட்கக்கூட வெறுப்பாக இருந்தது. இங்ஙனமிருக்க, ஸ்வர்ண குமாரியின் மீது தனது மகன் அடங்காத மையல் கொண்டிருக்கிறானென்பதையும், அதன் பொருட்டாகவே வேறு விவாகத்தில் விருப்பமில்லாதிருக்கிறானென்பதையும் இந்த அம்மை பல முகாந்தரங்கள் மூலமாக ஊஹித்தறிந்துகொண்ட நாள் முதலாக, இவள் மனதிலே தோன்றிய வருத்தங்களுக்கு அளவு கிடையாது. நிற்க.

* * *  * * *  * * *

இங்கே ஸ்வர்ண குமாரியின் நிலை எப்படி யிருக்கிற தென்பதைக் கவனிப்போம். இவள் மனதிலே மனோரஞ்சனனுடைய வடிவம் என்றும் அகலாது சுந்தர விக்கிரகமாகப் பதிந்து போய்விட்டது. வரம்பில்லாத செல்வமுடைய குடும்பத்திலே பிறந்து, ஸங்கீதம், ஸாஹித்யம் முதலிய கலைகளிலே யெல்லாம் சிறந்த பழக்கங்கொண்டவளாகி, தனக்கு இசைவான கணவனைத் தவிர மற்றப்படிச் சாதாரண மனிதன் எவனையும் மணம் செய்துகொள்ளக் கூடாதென்று இவள் ஒரே பிடிவாதமாக யிருந்தாள். இவளுடைய ரூபலாவண்யமோ சொல்லுந் தரமன்று. கருமை நிறங்கொண்ட அமிருதத்தின் கடல்களென்று சொல்லத்தக்க இவளுடைய நேத்திரங்களும், முல்லைபோன்ற புன்சிரிப்பும், மூக்கும், கன்னமும், நெற்றியும், ஸ்வர்ணமயமான சரீரமும்—இவளை என்னென்று சொல்வோம்! சுகப்பிரம்மரிஷி பார்த்தபோதிலும் மயங்கிப்போய் விடுவார். இவளுக்கு மனோரஞ்சனன் பாலிய சினேகிதன், பள்ளித் தோழன். தேவரூபனான இவனையே கடைசிவரை பள்ளித்தோழனாகவும் கொள்ள வேண்டுமென்று இவள் ஆசைகொண்டு விட்டாள். இதற்கு முன் எத்தனையோ முறை இவர்கள் அடிக்கடிச் சந்திப்பதும், காதற்சுவையிற் கனிந்து நிற்பவும், உயிரென நோக்கி உள்ளம் வாடுவதும், பொருளிலாத் தெய்விகமொழி பல புகல்வதும் என இவ்வாறு தமது மோஹ நெருப்புக்கு நெய் ஊற்றிக் கொண்டே வந்திருக்கிறார்கள். இப்போது மனோரஞ்சனன் மறுபடியும் சாந்த்பூருக்கு வந்தவுடனே, வழக்கம்போலவே இவர்களுடைய சந்திப்புகள் தொடங்கி விட்டன. இதை நமது ஸ்வர்ணத்தின் தந்தையாகிய ஸூர்யகாந்த பாபு அறிந்து ஒருநாள் இவளை அழைத்து, "மகளே! நீ நான் சொன்னபடி ஹேமசந்திரபாபுவை விவாகம் செய்துகொள்ள சம்மதிக்காமலிருப்பாயானால், இனி என் வீட்டைவிட்டு வெளியேறிவிடவேண்டும். கையிலே காசற்றவனும், விக்கிரகாராதனை செய்யும் மூடபக்திக் கூட்டத்தைச் சேர்ந்தவனுமாகிய அந்த மனோரஞ்சனன் பயலை நீ அடிக்கடிப் பார்த்துப் பேசுகிறாயென்ற வார்த்தை என் காதிலே படக்கூடாது. அடுத்த தை மாதம் உனக்கும் ஹேமசந்திரபாபுவுக்கும் விவாகம். நீ இப்போதே எனக்கு 'ஆகட்டு' மென்ற வார்த்தை கொடுத்துத் தீரவேண்டும். நான் எத்தனையோ வருஷம் உன்னுடைய மூடத்தன்மையான பிடிவாதத்தைச் சகித்தாகிவிட்டது. இனி ஒரு க்ஷணமும்

பொறுக்கமாட்டேன். இன்று மாலை இங்கே ஹேமசந்திரர் வருவார். நீ தோட்டத்திலே யுள்ள பூஞ்சோலையில் ஆறு மணிக்குப் போயிரு ; அங்கே அவரை வரச் சொல்கிறேன். நீ அப்போது அவரிடம் உன்னுடைய சம்மதம் தெரிவித்தே தீரவேண்டும். இல்லாவிட்டால், உன்னைக் கையும் கப்பரை யுமாய் நாளை காலையில் வெளியே ஓட்டிவிடுவேன் ''—என்று மஹா கோபத்துடன் படபடவென்று சொல்லிவிட்டுப்போய் விட்டார். தனது மகள் கண்ணீர் மாரிக்கிடையே தரைமீது சோர்ந்து விழுந்து விட்டதைக் கூட அவர் கவனிக்கவில்லை.

* * *   * * *   * * *

**ப**கல் முழுதும் ஸ்வர்ண குமாரி தனது தந்தையின் கொடூ ரத்தை நினைத்து நினைத்து மனம் தயங்கிக் கொண்டிருந் தாள். இவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. இதுபோன்ற சமயங்களிலே தாய் இருக்கும் பட்சத்திலே, எவ்வளவோ தைரியம் சொல்வாள். ஆனால் நமது ஸ்வர்ணத்திற்கோ தாயார் அதி பாலியத்திலே இறந்து போய்விட்டாள். வீட்டி லுள்ள ஸ்திரீகளெல்லாம் தூர பந்துக்களே யல்லாமல், இவள் தன் மனதை யெல்லாம் சொல்லி முறையிடக் கூடிய வாறு அத்தனை நெருகிய நட்புடையோர் யாரும் கிடையாது. தனியே நெடுநேரம் யோசித்து, இவள் பின் வரு மாறு நிச்சயம் செய்து கொண்டாள் :—

'' தந்தையோ இரும்பு நெஞ்சுடையவர். மனோரஞ்சனனோ தனது தாயிருக்கும் வரையில் பிரம சமாஜத்தில் சேரப் போவது கிடையாது. எனக்கு இந்த ஹேமசந்திரனை விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்றே விதியிருக்கிறது போலும். மனோரஞ்சனனுடனேதான் வாழ்வேனென்று நான் தெய்வ சாட்சியாய் விரதங்கொண்டாய் விட்டது. மனோரஞ்சனன் என்னை விவாகம் செய்துகொள்வதும் சாத்தியமில்லை. இனி தந்தை வீட்டிலிருந்து பிச்சைக்காரிபோல வெளியே துரத் துண்டு, ஏன் அவமானமடைய வேண்டும் ? ஹேமசந்திரனையே விவாகம் செய்து கொள்வதாக இன்று மாலை சம்மத மளித்துவிட்டு, விவாகத்திற்கென்று குறிப்பிட்டிருக்கும் நாளில் விஷத்தைதின்று உயிரை மடித்துக்கொள்கிறேன். இதற்கிடையே ஏதேனும் அகஸ்மாத்தாக அனுகூலம் ஏற் பட்டால், பார்த்துக் கொள்வோம். இல்லாவிட்டால் மரணமே கதி '' என இவ்வாறு மனவுறுதி செய்து கொண்டு விட்டாள்.

இந்த ஹேமசந்திரன் யார்? இவன் ஒரு பணக்கார ஜமீன்தார், பிரம ஸமாஜத்தைச் சேர்ந்தவன். ஆனால், புராதன ஆசாரங்களைக் கைவிட்ட இவன் மற்றபிரம ஸமாஜிகளைப் போல அத்துடன் நிறுத்தி விடாமல், மதுபானம், கோமாமிச போஜனம் முதலிய புது ஆசாரங்களும் புரிய படித்துக் கொண்டு விட்டான். பார்ப்பதற்கு எருமை போல கொழுத்து, வெகு குரூபியாக இருப்பவன், மஹா மூடன், குரூரதத்தையுடையவன். இவனிடம் ஸ்வர்ண குமாரியின் தந்தை செல்வம் பற்றி விருப்புக் கொண்டபோதிலும், நமது ஸ்வர்ணத்தின் கோமள நெஞ்சு காதலுறுதல் எங்ஙனம் இயலும்? நிற்க.

* * *    * * *    * * *

மாலை 6 மணி ஆயிற்று. பெரிய வனம் போல விஸ்தாரமுடைய சோலையினிடையிலே ஓர் அழகிய கொடிவீட்டின்கண் ஸ்வர்ணகுமாரி தனியே உட்கார்ந்திருந்தாள். ஹேமசந்திரன் வந்து சேர்ந்தான்.

"பெண்ணே! இப்ப, உன் மனது எப்படி இருக்கிறது?"

"சரிதான்! சிறிது நாற்காலியை சற்றே விலகிப்போட்டுக் கொண்டு பேசவேண்டும்."

"அடடா! இந்தக் குணம் இன்னும் மாறவில்லை போலிருக்கிறதே! ஸௌர்ய பாபு, 'நீ சரிப்பட்டு வந்து விட்டாய்' என்று சொன்னாரே."

"ஆமாம்! அவருடைய கட்டாயத்தின் பேரில் சரிப்பட்டு விட்டேன்."

"ஆனால், என்னை விவாகம் செய்து கொள்வதில் உன் மனத்திற்குத் திருப்தி கிடையாதோ?"

"கிடையாது."

"அது எப்படியேனும் போகட்டும். உன் தகப்பனார் பலவந்தத்தின் பேரிலாவது நீ என்னை விவாகம் செய்து கொள்ளப்போவது நிச்சயந்தானே."

"ஆம்."

"சபாஷ்! ஸ்வர்ணு, மெத்த சந்தோஷம். நீ இனி என் மனைவி தானே, அடடா! என்ன ஸௌந்தரியம்! என்ன ஸௌந்தரியம், உன்னைப் பெறுவதற்குப்பட்ட பாடெல்லாம் தகும், தகும். கண்ணே, ஒரு முத்தம் தரமாட்டாயா?"

"நாற்காலியை விலகிப் போட்டுக்கொள்ளும்."

"நீ எனக்கு மனைவி யென்பதோ நிச்சயமாகிவிட்டது. மூட பக்தியுள்ள ஹிந்துக்களைப்போல் நாம் விவாகச் சடங்குகளுக்குக் காத்திருப்பது அவசியம் இல்லையல்லவா? விவாஹ பலனை இப்போதே என் அனுபவித்துக் கொள்ளக்கூடாது? இனி உனது திவ்விய சரீரம் என்னுடையது தானே?"

"விவாஹ தினத்திலேயே நான் இறந்து போய்விட்டால் எனது சரீரம் உமதாக மாட்டாதல்லவா?"

"அப்படியா யோசிக்கிறாய்? ஆனால் விவாகப் பயனை இப்பொழுது நுகர்ந்தறிகின்றேன்"—என்று சொல்லி ஹேமசந்திரன் பலவந்தமாகத் தழுவக் கை யெடுத்தான்.

ஸ்வர்ணகுமாரி "கோ, கோ" என்றலறத் தொடங்கிவிட்டாள். திடீரென்று கொடிமாடத்திற்குப் பின்னே புதரில் பதுங்கி நின்ற மனோரஞ்சனன் கையும் தடியுமாக வந்து, ஹேமசந்திர பாபுவைப் பிடித்து வெளியே தள்ளி நையப் புடைத்தான். இந்தக் கலவரையிலே தந்தையாகிய ஸூர்ய காந்தபாபுவும் வந்துவிட்டார். மகள் கீழே மூர்ச்சை யுண்டு கிடந்தாள். வரும்போது குடித்து வந்த கள்ளின் வெறியாலும், அடிபட்ட கோபத்தாலும் ஹேமசந்திரன் ஏதோ வாய்க்கு வந்தபடி உளறினான். உடனே ஸூர்யகாந்தர் மனோரஞ்சனனைப் பார்த்து, "ஏதடா, பையலே, நீ இங்கே ஏன் வந்தாய்? இதெல்லாம் என்ன குழப்பம்?" என்று கேட்டார். மனோரஞ்சனன் "ஐயா, உமது குமாரத்தி மூர்ச்சையுண்டு விழுந்து கிடக்கிறாள். இன்னும் சிறிது நேரம் கவனியாமலிருந்தால் மிகவும் அபாயம் நேர்ந்துவிடும். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும். மற்ற விஷயங்கள் பிறகு பேசிக்கொள்ளலாம்" என்றான். அதன் படியே ஸூர்யகாந்தர் மகளை வீட்டிற்கு எடுத்துச்சென்று வேண்டிய சிகிச்சைகள் செய்ததின் பேரில் ஸ்வர்ண குமாரிக்கு மூர்ச்சை தெளிந்தது. இரண்டு மணி நேரத்திற்

கப்பால் ஸூர்ய பாபு வந்து மகளிடம் விசாரணை செய்ததில், அவள் நடந்த விஷயங்களை யெல்லாம் உண்மையாகத் தெரிவித்தாள். அவள் சொல்வதெல்லாம் மெய்யென்று அவருக்குப் புலப்பட்டுவிட்டது.

"அடடா! நமது குடும்பத்திற்குப் பெரிய அவமான மிழைக்கத் தெரிந்த பாதகனுக்கா பெண் கொடுக்க எண்ணி யிருந்தேன்?" என்று தம்மைத் தாமே நொந்துகொண்டு ஸூர்யகாந்தர் சென்றுவிட்டார். மறுநாட் காலை மகளிடம் வந்து, "பெண்ணே, உனது மனோரஞ்சனனை நான் நேற்றுத் தான் நன்றாக உற்றுப்பார்த்தேன். அவன் செல்வமில்லாது வறியனாயிருந்த போதிலும், ரூபத்தினாலும், அறிவினாலும் நமக்கு மருமகனாயிருப்பதற்கு யோக்கியதை யுடையவனாகவே காணப்படுகிறான். அவன் ஹிந்து மார்க்கத்தினின்றும் நீங்கிப் பிரம்ம ஸமாஜத்தில் சேர்ந்துகொள்ளும் பட்சத்தில். உங்களிருவருக்கும் விவாகம் முடித்து வைப்பதில் எனக்கொரு ஆட்சேபமும் கிடையாதென்று அவனிடம் தெரிவித்து விடு" என்று சொல்லிச்சென்றுவிட்டார். இது முறையே மனோரஞ்சனனுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆயினுமென்ன பயன்? மனோரஞ்சனன் தான் பிரம ஸமாஜத்தில் சேர்ந்து கொள்ளுவானாயின் தனது தாய் மனமுடைந்து இறந்து போவாளென்பதை நன்றாக அறிவான். எனவே தாயினிடத்தே அன்பு ஒரு புறமும், அவனது ஸ்வர்ண குமாரியின் மீது மையல் மற்றொரு புறமும் அவனது மனதை இழுக்க, இன்ன செய்வதெனத் தெரியாமல் திகைப்பானாயினான். இவ்வாறே ஒன்றரை வருஷ காலம் கழிந்துவிட்டது. இவன் கடைசிவரை பிரம ஸமாஜத்தில் சேராமலேயிருந்துவிடும் பட்சத்தில், தான் விவாகம் செய்துகொள்ளாமலே யிருந்து விடவேண்டுமென ஸ்வர்ணகுமாரி நிச்சயித்துக்கொண்டிருந் தாள்.

இப்படியிருக்க, 1906-ம் வருஷம் கல்கத்தாவிலே காளி பூஜை திருவிழா நடந்துகொண்டிருந்த (நவராத்திரி) காலத்திலே, ஸ்வர்ணகுமாரி தனது வீட்டு அடியிலே ஒரு பஞ்சணைமீது சாய்ந்து கொண்டு "ஸந்தியா" என்னும் தினசரிப் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தாள். அதில் திடீரென அவளது கண்களுக்குப் பின்வரும் குறிப்புத் தென்பட்டது.

"சாந்த்பூர் வாசியாகிய ஸ்ரீயுத மனோரஞ்சன பானர்ஜி நேற்று மாலை பிரம ஸமாஜத்தில் சேர்ந்துவிட்டார். இவர் மிகுந்த திறமையும், புகழுமுள்ள அதி வாலிபராதலால், இவர் ஹிந்து மார்க்கத்தினின்றும் பிரிந்து விட்ட விஷயம் எங்கே பார்த்தாலும் பேச்சாய் கிடக்கிறது".

மேற்கண்ட வரிகளைப் படித்தவுடனே ஸ்வர்ண குமாரிக்குப் புளகமுண்டாய் விட்டது. ஆனந்த பரவசத்திலே அமிழ்ந்து விட்டாள். உடனே மற்றோரிடத்தில் மனோரஞ்சனனுடைய பெயர் காணப்பட்டது. அதென்னவென்று பார்த்தாள். அதிலே,

"சென்ற சில தினங்களாக லோகமான்ய பாலகங்காதர திலகர் பூனாவிலிருந்து நமது நகரத்திற்கு வந்து சுதேசீயம், ஸ்வராஜ்யம் என்ற பெரு விஷயங்களைப் பற்றிப் பதினாயிரக் கணக்கான ஜனங்களின் முன்பு உபந்நியாசங்கள் புரிந்து வருகின்றார். இவருக்கு நடக்கும் உபசாரங்களும் சிறப்புக் களும் முடியரசர்களுக்குக்கூட நடக்கமாட்டா. அப்படியிருக்க இவருடைய கோட்பாடுகளுக்கு விரோதமாகச் சில வாலிபர்கள், சாந்த்பூர் ஸ்ரீ மனோரஞ்சன பானர்ஜியின் அக்ராசனத்தின் கீழ் ஒரு எதிர்க் கூட்டங்கூடி இந் நகரத்தின் ஏதோ ஒரு மூலையில் சில நிபந்தனைத் தீர்மானங்கள் செய்து கொண்டார்களென அறிந்து விசனமடைகிறோம்" என இருந்தது,

இதைக் கண்டவுடனே ஸ்வர்ண குமாரிக்கு மனம் பதைத்து விட்டது. இவள் குழந்தை முதலாகவே ஸ்ரீ பாலகங்காதர திலகரைத் தெய்வம் போலக் கருதிவந்தாள். இவளுக்கு மனோரஞ்சனனிடமிருந்த அன்பைக் காட்டிலும், சுதேசத்தின் மீதுள்ள அன்பு பதினாயிர மடங்கு வன்மையுடையது. சுதேச பக்தர்களின் திலகமாகிய பாலகங்காதர திலகருக்கு விரோத மாக உழைக்கிற ஸ்வஜன விரோதியினிடமா நாம் இத்தனை நாள் காதல் கொண்டிருந்தோம்? இவனையா மாசற்ற குமரனென்றெண்ணி மதி மயங்கினோம்?" என்று பலவாறு யோசித்து மிகவும் வருந்துபவளாயினாள். இவள் நிலைமை இங்ஙனமாக.

தன் கண்போல் வளர்த்த ஒரே ஆசைக் குமாரன் ஹிந்து மார்க்கத்தைவிட்டு நீங்கி விட்டானென்று கேள்வியுற்றவுடனே மனோரஞ்சனனுடைய தாய் மூர்ச்சித்து விழுந்து இறந்து போய்விட்டாள்.

இந்தச் செய்தி கேட்டவுடனே அலறிக்கொண்டு சாந்த் பூருக்கு வந்த மனோரஞ்சனன் தனது தாயின் கிரியைகளை யெல்லாம், ஹிந்து ஆசாரங்களின்படி, ஒரு பந்துவின் மூலமாக நடப்பித்து விட்டு ஸ்வர்ண குமாரியைப் பார்க்கச் சென்றான். அங்கே வீட்டில ஸ்வர்ண குமாரி இல்லை. அவளுடைய தந்தை பின்வரும் கடிதத்தை மனோரஞ்சன னிடம் கொடுத்தார்.

" எனது காதலனாயிருந்த மனோரஞ்சனனுக்கு,

நெடுங் காலமாக உறங்கி நின்ற நமது சுதேசமாதா இப்போது கண் விழித்திருக்கிறாள். நமது நாடு மறுபடியும் பூர்வகால மஹிமைக்கு வருவதற்குரிய அரிய முயற்சிகள் செய்து வருகின்றது. இந்த முயற்சிகளுக்கு விரோத மிழைக்கும் ஸ்வஜனத் துரோகிகளின் கூட்டத்திலே, நீயும் சேர்ந்துவிட்டாயென்று கேள்வியுற்றவுடனே எனது நெஞ்சம் உடைந்து போய்விட்டது. இனி உன்னைப்பற்றி வேறுவித மான பிரஸ்தாபம் கேட்கும் வரை உன் முகத்திலே விழிக்க மாட்டேன். பெற்ற தாய்க்குச் சமானமான தாய்நாட்டின் மீது அன்பு செலுத்தாத நீ, என் மீது என்ன அன்பு செலுத்தப் போகிறாய் ? நமது வாலிப எண்ணங்களைப் பற்றி, நீ திருந்திய பிறகு யோசனை செய்துகொள்ளலாம். நான் காசியிலே என் அத்தை வீட்டிற்குச் சென்று ஒரு வருஷம் தங்கியிருக்கப்போகிறேன். அங்கே நீ என்னை வந்து பாரா திருக்கும்படிப் பிரார்த்தனை செய்து கொள்ளுகிறேன்."

இங்ஙனம் இக்கடிதத்தைத் பார்த்தவுடனே மனோ ரஞ்சனன் மனம் தீயிலகப்பட்ட புழுப்போலத் துடிக்க லாயிற்று.......

இப்போது மனோரஞ்சனன் பூனாவிலே திலகரிடம் தேச பக்திப் பாடங்கள் படித்து வருகிறானென்று கேள்வியுறு கின்றோம்.

# தராசு

இவ்வுலகமே ஈசனுடைய 'விளையாட்டு'. உலகத்தை அறிய வேண்டுமானால் விளையாட்டுப் பழக்கமும் வேண்டும்.......... எழுதும் விஷயங்களுக்கு என்ன மகுடம் ஏற்படுத்தலாமென்ற யோசனையுண்டாயிற்று. பலவிதமான செய்திகளையும் கலந்து பேச நேரிடுமாதலால் "பலசரக்குக் கடை" என்று மகுடமெழுத உத்தேசித்தேன். அது அதிக விளையாட்டாக முடியுமாதலால் விட்டுவிட்டேன். எனக்கும் ஒரு செட்டியாருக்கும் சிநேகம்; அவரைப்போல் நாம் ஒரு பலசரக்குக் கடை வைத்தால் அவருக்குக் கோபம் ஏற்படுமென்று கருதி அந்த மகுடத்தை விலக்கினேன்........ "**தராசு**" என்று பொதுப்படையாகப் பெயர் வைத்திருக்கிறேன். எல்லா வஸ்துக்களையும் நிறுத்துப் பார்க்கும். எல்லாச் செட்டியாருக்கும் இதனால் உதவி யுண்டு. எந்தச் செட்டியாரும் நம்மிடம் மனஸ்தாபங் கொள்ள இடமிராது.

## 1

ஐரோப்பிய வைத்தியம் சிறந்ததா? நாட்டு வைத்தியம் சிறந்ததா?

ஐரோப்பிய வைத்தியத்தின் சார்பாக இருப்போர் சொல்லுகிறார்கள்:—"எங்கள் வைத்தியம் ஸயன்ஸ்படி நடத்தப்படுகிறது. (ஸயன்ஸ் என்பது தற்காலத்து ஐரேப்பிய இயற்கை சாஸ்திரம்.) 'உடலுக்குள் என்னென்ன கருவிகள் உண்டு? அவை எப்படி வேலை செய்கின்றன?' என்ற விஷயம் நாட்டு வைத்தியருக்குத் தெரியாது. தொற்று வியாதிகளுக்கு ஆதாரமான, கண்ணுக்குத் தெரியாத தூளிப்பூச்சிகளின் செய்தியெல்லாம் நாட்டு வைத்தியம் படித்ததில்லை. மருந்துகளின் தொழில் மர்மங்களெல்லாம் நன்றாகத் தெரிய வேண்டுமானால் ரஸாயன சாஸ்திரம் கற்றிருக்கவேண்டும். நாட்டு வைத்தியருக்கு அந்தச் சாஸ்திரம் தெரியாது. நாட்டு வைத்தியத்தால் ஜனங்கள் பிழைப்பது ஒரு ஆச்சரியமேயன்றி வேறில்லை."

நாட்டு வைத்தியன் கட்சியார் சொல்லுகிருர்கள் :—" அந்த ஐரோப்பிய சாஸ்திரங்களை யெல்லாம் ராஜாங்கத்தார் எளிய தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுவார்களாளுல் நாங்கள் படித்துக் கொள்வதில் ஆக்ஷேபமில்லை. ஆனல் வைத்திய னுக்கு முக்கியமாக வேண்டியது நோய் தீர்த்துவிடுதலே. இதில, இந்தத் தேசம் ஸம்பந்தப் பட்டவரை,—ஐரோப்பிய வைத்தியரைக் காட்டிலும் எங்களுக்கு அதிகத் திறமை யுண்டு. எங்களுடைய பூர்வீக மருந்துகளே இந்தத் தேசத்து சரீர நிலைக்கு அனுகுணமாகும் ; இதை வேண்டுமாளுல் சோதனை செய்து பார்க்கலாம்."

எனது நண்பர் ஒரு யோகீச்வரர் இருக்கிருர். அவரிடம் இந்த இரண்டு கட்சிகளையும் சொன்னேன். அவர் சொல்லு கிருர் :—"ஒருவனுக்கு வியாதிகள் வராதபடி தடுத்துக் கொள் வது நலம். தன்னை மீறி வந்தால்—நல்ல காற்று, நல்ல நீர், நல்ல வெளிச்சம், சுத்தமான உணவு, இயன்றவரை சரீர உழைப்பு, மனோதைரியம், ஸந்தோஷம்—இவற்ருல் பெரும் பான்மையான நோய்கள் இயற்கையிலேயே சொஸ்தமாய் விடும். வைத்தியர் அவசியமென்ற ஸ்திதிக்கு வந்து விட் டால் பிறகு தெய்வ பலமுள்ளவர்கள் நிச்சயமாகப் பிழைப் பார்கள். சாகத்தான் வேண்டுமென்று தீர்ந்தால், அயல் நாட்டு மருந்திஞற் சாவதைக் காட்டிலும், நாட்டு முறைப்படி சாவது நல்லது."

" நாட்டு வைத்தியம் " என்ற பேச்செடுத்ததிலிருந்து எனக்கு வேருெரு செய்தி யோசனைக்கு வருகிறது.

நமது ஜனங்களுடைய உடம்பைப்பற்றிய வியாதிகளுக்கு மருந்து கொடுப்பதைப் பற்றிப் பேசினேமா ? அதிலிருந்து, நம்மவர்களின் ஆத்மாவைப் பற்றிய வியாதிகளுக்கு மருந்து கொடுக்கும் பெரிய வைத்தியத்தின் விஷயம் ஞாபகத்துக்கு வந்து விட்டது.

" இந்த உலகத்து மேன்மைகளெல்லாம் அநித்யம் ஆகையால் நமக்கு வேண்டியதில்லை. செல்வத்தையும் கீர்த் தியையும் தேடி முயற்சி செய்பவன் அஞ்ஞானத்தில் அழுந்திக் கிடக்கிருன். நாம் ஆத்ம லாபத்தை விரும்பி இவ்வுலகத்தை வெறுத்துத் தள்ளிவிட வேண்டும்" என்பது ஒரு முறை.

மடங்களிலும், காலக்ஷேபங்களிலும், பஜனைக் கூட்டங்களிலும், புராண பிரசங்கங்களிலும், மதப் பிரஸங்கங்களிலும், பிச்சைக்காரர் கூட்டத்திலும், வயது முதிர்ந்தோர் சம்பாஷணைகளிலும்—எங்கே திரும்பினாலும் நமது நாட்டில் இந்த "வாய் வேதாந்தம்" மலிந்து கிடக்கிறது.

"உலகம் பொய்; அது மாயை; அது பந்தம்; அது துன்பம்; அது விபத்து; அதை விட்டுத் தீரவேண்டும்," இந்த வார்த்தைதான் எங்கே பார்த்தாலும் அடிபடுகிறது. ஒரு தேசத்திலே படித்தவர்கள்; அறிவுடையோர், சாஸ்திரக்காரர் எல்லோரும் ஒரே மொத்தமாக இப்படிக் கூச்சலிட்டால், அங்கே லௌகிகக் காரியங்கள் வளர்ந்தேறுமா? மனம்போல் வாழ்க்கையன்றோ?

பூர்வமதாசார்யர் 'பாரமார்த்திக' மாகச் சொல்லிப்போன வார்த்தைகளை நாம் ஓயாமல் லௌகிகத்திலே சொல்லிக் கொண்டிருப்பது சரியா? வெகு ஜனவாக்கு நமது தேசத்தில் பலித்துப் போய் விடாதோ? இகலோகம் துன்பமென்று நம்பினால், அது துன்பமாகத் தான் முடியும். இந்த உலகம் இன்பம். இதிலுள்ள தொழில், வியாபாரம், படிப்பு. கேள்வி, வீடு, மனைவி, மக்கள் எல்லாவற்றிலும் ஈசன் அளவிறந்த இன்பத்தைக் கொட்டி வைத்திருக்கிறான். விதிப்படி நடப்போர் இந்த ஸுகங்களை நன்றாக அனுபவிக்கிறார்கள். ஈசனுடைய விதி தவறும் கூட்டத்தார் துன்பமடைகிறார்கள்.

* * *

"வேதாந்தம்" மற்றொரு ஸமயத்திலே பார்த்துக்கொள்வோம். "சட்டசபை" சங்கதி யொன்று பேசலாம். சேலத்து ஸ்ரீ. நரஸிம்மையர், சிறு பிள்ளைகள் சுருட்டுக். குடிப்பதைக் குறைக்க வேண்டு மென்று சென்னப்பட்டணம் சட்டசபையில் பேசப் போவதாகத் தெரிகிறது. இந்த விஷயத்தை மேற்படி வழக்கமுடைய ஒரு சிறு பிள்ளையிடம் நான் சொன்னேன். "என்ன சட்டந்தான் கொண்டு வரட்டும். நான் சுருட்டுப் பிடிப்பதை அவர்களாலே தடுக்கமுடியாது" என்று அந்தப் பிள்ளை சொல்கிறான். புகையிலே ஆகாரத்தைக் குறைத்து விடுமென்று வைத்திய சாஸ்திரம் சொல்லுகிறது. அப்படியிருந்தும், அதை வழக்கமாகக் கொண்டவர்கள் விட மனமில்லாமலிருக்கிறார்கள். ஆனாலும், புகையை நம்பி உணவை வெறுக்கும் மனிதர்களை இந்த ஒரு விஷயத்தில் தானா பார்க்கிறோம்?

## 2

சென்றவாரம் சென்னப்பட்டணம் கந்தசாமிக் கோயில் வஸந்த மண்டபத்தில், சாது மஹா ஸங்கத்தாரின் ஏற்பாட்டிலே ஒரு கூட்டம் நடந்தது. அதிலே, ஸ்வாமி அத்புதாநந்தர் என்பவர் ஒரு நேர்த்தியான உபந்யாஸம் செய்ததாகத் தெரிகிறது.

ஸ்வாமி சொல்லியதன் சுருக்கம் :—" மத விஷயங்களில் நமது முன்னோர் மிகவும் உயர்ந்த ஆராய்ச்சிகள் செய்து வைத்திருக்கிறார்கள். இவற்றை நாம் நன்றாகத் தெரிந்து கொண்டு உலகத்தாருக்கெல்லாம் உபதேசம் செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய வெளி தேசத்தார் நமது உதவியை எதிர்பார்த்து நிற்கின்றனர் ".

இனி, " மதவிஷயங்கள் " என்பவை பாரமார்த்திக உண்மைகளாம் ; அதாவது ஐம்புலன்களுக்கெட்டாத, சுத்த அறிவினால் காணுதற்குரிய, தெய்விக உண்மைகள் ; இவை ஞானம், பத்தி, யோகம் என்னும் வழிகளிலே கிடைப்பனவாகும். இவற்றை நமது முன்னோர் பெரிய பாடு பட்டுத் தேடித் தம்முடைய நூல்களிலே திரட்டி வைத் திருக்கிறார்கள். இந்தச் செல்வத்தை நாம் திறமையுடன் கையாண்டு உலகத்தாருக்கெல்லாம் வாரிக்கொடுத்து இவ் வுலகத்தின் துன்பங்களையும், சிறுமைகளையும், அறியாமை களையும் மாற்றி இதனை மேன்மைப் படுத்த வேண்டும்.

> " தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
> காமுறுவர் கற்றறிந்தார் "

என்று திருவள்ளுவர் சொல்லியபடி, இஃதே ஸ்வாமி அத்புதாநந்தருடைய கருத்தாகும். இதை நான் பரிபூர்ண மாக அங்கீகாரம் செய்து கொள்ளுகிறேன். ஆனால் நமது ஆசையை இவ்வளவுடன் நிறுத்தி விடலாகாது. லௌகிக விஷயங்களிலும் நமது உதவியை உலகம் வேண்டித்தான் நிற்கிறது. இதை நாம் மறந்துவிடலாகாது. நமது முன்னோர் பாரமார்த்திகச் செய்திகளில் மாத்திரமே நிகரற்ற மேன்மையடைந்திருந்ததாக நினைத்துவிடலாகாது. இஹ லோக அறிவிலும் ஆச்சரியமான உயர்வு பெற்றிருந்தார்கள்.

பல தேசங்களையும் அவற்றின் பலவித சாஸ்திரங்களையும் நன்றாக அறிந்த எனது நண்பரொருவர் ஐரோப்பாவில் மஹா கீர்த்தி பெற்றிருக்கும் யவனத்துச் (கிரேக்க தேசத்துச்) சிற்பத்தைக் காட்டிலும் நமது புராதனச் சிற்பம் மேம்பட்டதென்று கருதுகிறார். இதை வெளியுலகத்தாருக்கு விளங்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன், ஸ்ரீ ஆனந்த குமாரசாமி முதலிய வித்வான்கள் மிகவும் உழைத்து வருகிறார்கள். ஆனால் இதை இங்கு நமது தமிழ் நாட்டிலே வாழும் ஜனங்களுக்கு விளங்க காட்டுவார் யாரையும் காணவில்லை. பல தேசத்து ஸங்கீதங்களையும நான் ஒருவாறு ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறேன். நமது புராதன ஸங்கீதத்துக்கு நிகரானது இவ்வுலகத்தில் வேறெங்குமில்லை என்பது என்னுடைய முடிவு. கவிதை விஷயத்திலும் இப்படியே.

இனி கணிதம், ரஸாயனம் முதலிய வேறு பல சாஸ்திரங்களும் நமது தேசத்திலே தான் முதலில் வளர்ச்சி பெற்றவையாகும்,

நாம் இஹலோகத்து அறிவிலும் மேம்பாடு பெறவேண்டும். தெரியாத சாஸ்திரங்களின் ஆரம்பங்களைப் பிறரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். பிறகு அவற்றை நமது ஊக்கத்தாலும் உயர்மதியாலும் மேன்மேலும் வளர்த்து மீளவும் உலகத்தாருக்கு ஊட்டவேண்டும். இஹலோக வளர்ச்சியிலே நாம் தலைமை வகிக்க வேண்டும். அதற்கு நாமே தகுதியுடையோர்.

*　　*　　*　　*

**ப**ம்பாயில் நடக்கப்போகிற காங்கிரஸ் ஸபைக்குப் பல ஊர்களிலிருந்தும் பிரதிநிதிகள் வருவதிலே சில மாதர்களும் பிரதிநிதிகளாக வரக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆண் பிரதிநிதிகளுக்கு வேண்டிய உதவிகள் செய்யும் பொருட்டு தர்ம ஸேவகர்களாக (வாலண்டியர்களாக) ஆண் பிள்ளைகள் முற்பட்டு வந்திருப்பது போலவே, பெண் பிரதிநிதிகளுக்கு வேண்டிய உபகாரங்கள் செய்வதற்காகத் தர்மஸேவகப் பெண்கள் சிலர் முற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தப் புதுமை நமது தேசத்துக்குப் பெரியதோர் நன்மைக் குறியென்பது என்னுடைய கொள்கை.

அடடா! விளையாட்டுப் பேச்சை மறந்தல்லவோ போய் விட்டோம். யுவான்-ஷி-காய்—சீன தேசத்துக் குடியரசுத் தலைவர்—காயாக இருந்தவர் பழுத்துக் கொண்டு வருகிறார். பூர்வ ராஜ வம்சத்தை ஒழிப்பதற்குப் பகீரத ப்ரயத்தனங்கள் செய்து சீன தேசத்தார் குடியரசு நாட்டினார்கள். யுவான்-ஷி-காயின் பக்கம் ஸேனாபலம் இருந்தபடியால் அந்தக் குடியரசுக்கு இவர் தலைமை பெறுதல் சுலபமாயிற்று. நாட்பட நாட்பட, வெகு சீக்கிரத்தில், யுவான் மனதில் குடியரசை விட ராஜாதிகாரமே சீனத்துக்குப் பொருந்திய ஏற்பாடாகுமென்று உதயமாயிற்று. உலகத்தாரெல்லாம் இவர் தாமே ராஜாவாகிவிட நினைப்பதாக நிச்சயித்தனர். இப்போது பழைய குமார ராஜாவுக்கு அவருடைய பெண்ணை மணஞ் செய்து கொடுப்பதாக வதந்தி ஏற்படுறது. எனவே சீனா தேசத்துக் குடியரசு இன்னும் எவ்வளவு காலம் ஜீவித்திருக்குமென்பதை நமது தேசத்து ஜோதிடர்கள் கண்டு பிடித்துச் சொல்லும்படிக்கேட்டுக் கொள்ளுகிறேன். அதன் ஜாதக விவரங்கள் சொல்லவேண்டுமானாலும் சொல்லுகிறேன்.

மேற்படி குடியரசுக்கு உச்சஸ்தானத்திலே ராகு இருக்கிறான். இரண்டாமிடத்திலே சனி. சனி சப்பாணியென்ற விஷயம் ஸகலருக்கும் தெரியும். மற்றக் கிரகங்களெல்லாம் வக்கிரந்தான். இதற்கு நானே தீர்மானம் சொல்லிவிடக் கூடும். ஆனால், எனக்கு ஜோதிடத்திலே அரிச்சுவடி கூடத் தெரியாது.

*   *   *   *

செய்யூரிலிருந்து ஸ்ரீ மாதவய்யா ஒரு கிழவருடைய விவாகத்தின் சம்பந்தமாக எழுதியிருந்த கடிதம் சில தினங்களின் முன்னே "சுதேசமித்திரனி"ல் பிரசுரஞ் செய்யப்பட்டிருந்தது.

கிழவருக்கு வயது 70; அவருடைய தாயார் இன்னும் உயிரோடிருக்கிறாள். அந்தப் பாட்டிக்கு வயது 98. இந்தத் தாயாருக்கும் தமக்கும் உபசாரங்கள் செய்யும் பொருட்டுக் கிழவர் ஒரு பதினாறு வயதுக் குமரியை மணஞ் செய்து கொள்ளப் போகிறாராம். இதே கிழவரிடம் இதைத் தவிர இன்னும் 21 குமரிகளின் ஜாதகம் வந்திருப்பதாகத் தெரிகிறது. கடைசியாக ஒருவாறு தீர்மானஞ் செய்திருக்கிற

பெண்ணினுடைய தகப்பனார், பணத்தையும், விதியையும் ஜோதிடத்தையும் நம்பி வேலை செய்கிறார். தெய்வத்தை நம்புவதாகத் தெரியவில்லை. ஒட்டகத்துக்கு ஓரிடத்திலா கோணல்? தமிழ் நாட்டிற்கு ஒரு வழியிலா துன்பம்?

3

இன்று காலை நம்முடைய கடைக்கு ஒரு கவிராயர் வந்து சேர்ந்தார். வந்து, "வங்க தேசத்தின் மஹா கவி யென்று புகழ் பெற்றிருக்கும் ரவீந்திரநாத் டாகூர் செய்த 'கீதாஞ்சலி' என்ற நூலில் சிறிய பாட்டொன்றைத் தமிழில் வசனமாக மொழி பெயர்த்திருக்கிறேன். சரிதானா என்று பார்க்கவேண்டும்," என்றார்.

"வாசித்துக் காட்டும்" என்றேன்.

"எங்கே மனதில் அச்சமில்லை; தலை நிமிர்ந்து நிற்கிறது; எங்கே அறிவுக்குக் கட்டில்லை;

எங்கே மனிதவுலகம் சிறிய வீட்டுச் சுவர்களால் துண்டு துண்டாகப் பிரிவுபடா திருக்கின்றது;

எங்கே உண்மையின் ஆழத்திலிருந்து சொற்கள் நேரே புறப்படுகின்றன;

எங்கே ஓய்வில்லாத முயற்சி பரிபூரணத் தன்மையை நோக்கிக் கை நீட்டுகிறது:

எங்கே மதியாகிய தெளிந்த வாய்க்கால் செத்த வழக்கம் என்ற கொடிய பாலையின் மணலிலே மடியாது நீங்குகிறது;

எங்கே மேன்மேலும் விரிகின்ற கருத்திலும் செய்கையிலும் அறிவு மூண்டு செல்லும்படி நீ நடத்துகிறாய்;

அமரஸ்தானமாகிய அந்த ஸ்வதந்த்ர நிலையில், ஹே பிதா எனது தேசம் கண்விழித்திடுக,"

(குறிப்பு.—அமரஸ்தானம்—தேவ லோகம்; ஸ்வதந்த்ரம்—விடுதலை; பிதா—கடவுள்.)

"மொழி பெயர்ப்பிலே பிழையில்லை. ஆனாலும், இன்னும் சிறிது சுலபமான நடையில் இருக்கலாம்" என்று தராசு சொல்லிற்று.

* * * *

பூசனிக்காய் சங்கதி சொல்லட்டுமா? என்று நண்பர் செட்டியார் கேட்டார்.

"அதென்னையா?" என்று எல்லாரும் வியப்புடன் செட்டியாரைக் கேட்டார்கள்.

செட்டியார் சொல்லுகிறார்:—"சில தினங்களின் முன்பு சென்னப்பட்டணத்தில் பொருட்காட்சி பார்க்க பத்திரிகையின் மனுஷரொருவர் போயிருந்தார். அங்கே ஸாமான்யமாகக் கிடைக்கக்கூடிய மிகவும் பெரிய பூசனிக்காயைக் காட்டிலும் அதிகப் பெரியதாகிய ஒரு பூசனிக்காய் இருந்தது. 'சாஸ்திர-எரு'ப் போட்டதனால் இந்தப் பயன் உண்டாயிற்றென்று தெரிகிறது. 'ஒரு புல் முளைக்கிற இடத்தில் இரண்டு புல் முளைக்கும்படி செய்பவன் தேசத்துக்குப் பெரிய உபகாரி" என்று இங்கிலிஷ்காரர் சொல்வதுண்டு. 'தொகைக் குள்ளது அளவுக்கும் உண்டு' என்று அந்தப் பத்திரிகைக்காரர் சொல்லுகிறார். அதாவது, சிறிய இலை தரும் வாழையைப் பெரிய இலையைத் தரும்படிச் செய்பவனும் தேசத்துக்குப் பெரிய உபகாரியாவான். 'பெரிய பூசனிக்காயை மற்றப் பூசனிக்காய்கள் பார்த்துக் கொஞ்சம் வெட்கப்பட்டது போல விழித்தன. ஆனால் நமது பூர்வீகர்களிருந்த அளவு நமக்கும் போதும் என்று ஒருவித வைதீக தோற்றமும் அந்தப் பூசனிக்காய்களின் முகத்திலே தென்பட்டது' என்று அந்தப் பத்திரிகைக்காரர் எழுதியிருக்கிறார்".

இவ்வாறு செட்டியார் சொல்லிக் கொண்டு போகையில், நான் அவரை நோக்கி.—"ஆமாங்காணும். அதற்கென்ன இப்போது? ஆலோசனைக்கு என்ன விஷயம் கொண்டு வந்திருக்கிறீர்?" என்று கேட்டேன்.

செட்டியார்.—"ஆலோசனை ஒன்றுமில்லை. ஐயரே, சும்மா ஒரு கதை சொன்னேன்".

தராசு.—"சரி, மேலே வியாபாரம் நடக்கட்டும்" என்றது.

" உங்க ஹிந்துக்களுடைய நாலு வேதத்துக்கும் பெயரென்ன?" என்று ஜிந்தாமியான் ஸேட் கேட்டார்.

''ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம்'' என்றேன். " எதுக்குக் கேட்கிறீர்? " என்று செட்டியார் கேட்டார். அதற்கு ஜிந்தாமியான் ஸேட் சொல்வதானார்.—" கேள்விப்பட்டேன். நேற்றுப்பட்டணத்திலிருந்து ஒரு சாமியார் நம்ம கடைக்கு வந்திருந்தார். அவர் சொன்னார்.— " ஹிந்துக்களுடைய வேதம் மிகவும் பழமையானது. அதிலும் நம்ம குரானைப் போலவே அல்லாவைத்தான் புகழ்ந்து பேசுகிறது. ஆனால் அல்லா என்கிறத்துக்கு அவர்களுடைய பாஷையிலே ப்ரஹ்ம என்கிறார்கள். அதில் ரிஷிகள் என்று பாடினவர்கள் அல்லாவினுடைய உண்மையை அறிந்தவர்கள். இன்னும் அந்தச் சாமியார் ஏதெல்லாமோ சொன்னார். அதிலிருந்து ஞாபகம் உண்டாயிற்று."

''வேதம் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்களோ?" என்று மற்றொருவர் கேட்டார்.

" இல்லை " என்றேன்:

" என்ன காரணம் ?" என்றார் கவிராயர்.

" அதற்குத் தகுந்த திறமையுடைய பண்டிதர்கள் இல்லை. ஒரு வேளை இருந்தாலும், அவர்கள் தொழில் செய்ய வில்லை."

" ஆமாம், வேதத்துக்குப் பலவிதமாக அர்த்தஞ் சொல்லுகிறார்களாமே ? என்ன காரணம் ?" என்று செட்டியார் கேட்டார்.

" மற்றொரு முறை அந்த விஷயம் பேசுவோம்: வேறே தேனும் வியாபார முண்டோ ?" என்றேன்.

* * *

ஸயன்ஸ் என்பதென்ன ?

ஐரோப்பிய இயற்கை நூலுக்கு இங்கிலீஷ் பாஷையில் ஸயன்ஸ் என்று பெயர்.

"ஐரோப்பிய இயற்கை நூல்" என்று தனியாக ஒரு சாஸ்த்ரமுண்டா ?

அப்படியில்லை. அந்தச் சாஸ்திரத்திலே நம்மைக் காட்டிலும் அவர்கள் அதிகத் தேர்ச்சியடைந்திருக்கிறார்கள்.

அதிலே என்ன பயன் உண்டாகிறது ?

புதிய வழி உண்டாகிறது.

புதிய வழி என்பதென்ன ?

பூமண்டலத்தையும் ஸர்வத்தையும் பற்றிய புதிய அறிவு.

நமது பூர்வீகர்களுக்கு இல்லாத அறிவு இப்போது சாத்தியப்படுமா ?

அதைப்பற்றிய பேச்சில்லை.

நமக்கு இதுவரை இல்லாத அறிவு இப்போது சாத்தியப்படுமோ ?

"முற்படுக ; எழுக" என்றது தராசு.

* * *

சென்னைச் சட்ட சபையிலே ஜனங்களுக்குச் சார்பான காரியஸ்தர்கள் சில நல்ல தீர்மானங்கள் செய்து வைக்க விரும்பினார்கள். அவற்றுள்ளே, "கட்டாயப் படிப்பு," "ஸர்க்கார் உத்தியோக மில்லாதவரை ஜில்லா போர்டு களுக்குத் தலைவராக நியமித்தல்" முதலிய முக்கியமான அம்சங்களையெல்லாம் ஸர்க்கார் பக்கத்து ஸ்தானிகர்கள் எதிர்த்துப் பேசிப் பயனில்லாதபடிச் செய்துவிட்டார்கள்.

இந்த விஷயங்களை யெல்லாம் என்னுடைய தராசிலே போட்டுப் பார்த்தேன். தராசுப் படிகள் கொள்ளவில்லை. இதை யெல்லாம் ரயில்வே மூட்டைகள் நிறுக்கும் யந்திரத்தைப் போன்ற பெரிய நிறை யந்திரங்களில் போட்டுப் பார்க்கவேண்டும். இப்போது என்னுடைய வியாபாரம் அவ்விதமான பெரிய தராசு வாங்கக்கூடிய நிலைமையில் இல்லை.

*　　　*　　　*

" புதுக்கோட்டை ராஜா ஆஸ்த்ரேலிய மாதை விவாகம் செய்துகொண்டது சரிதானு ?" என்று ஒரு நண்பர் என்னிடம் கேட்டார்.

" பெரிய மூட்டை, சீமை வியாபாரம்; நாட்டு வியாபாரத் துக்குத் தான் நம்முடைய தராசு உதவும். வேறு கடைக்குக் கொண்டுபோம் " என்று ஜவாப் சொல்லி விட்டேன்.

" அது போனால் போகட்டும். அந்த ராஜா சமீபத்தில் ஒரு பிரசங்கம் செய்திருக்கிறார். அதில் நமது நாட்டு ஸ்திரீகளைக் கொஞ்சம் குறைவாகச் சொல்லியிருப்பது போல என் புத்திக்குப் புலப்படுகிறது. 'ஹிந்து' பத்திரிகையில் இதைப் பற்றி ஒரு தந்தியிருக்கிறது. வாசித்துக் காட்டுகிறேன்" என்று அந்த நண்பர் சட்டைப் பையிலிருந்து ஒரு காயிதத்தை எடுத்தார்.

" ஒய் சுருக்கமாக இருந்தால் படியும். இல்லாவிட்டால் வாயினால் அதன் சாராம்சத்தைச் சொல்லிவிடும். வீண் கதை கேட்க நமக்கு நேரமில்லை" என்றேன்.

அவர் பின்வருமாறு படித்துக் காட்டினார் :—புதுக்கோட்டை ராஜா தமது பிரஜைகளுக்குச் செய்த பிரசங்கத்திலே சொல்லுகிறார் :—" என் குடிகளே, எனது பத்தினிக்கு நீங்கள் செய்த ராஜோபசாரத்தால் என்ன விளங்குகிறது ? என்னையும் எனது ராஜ்யத்தையும் பற்றிய சகல விஷயங்களிலேயும் நீங்கள் எனது தீர்மானத்தைப் பக்தி விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறீர்களென்பது தெளிவாகிறது. என்னையும் எனது ராணியையும் வரவேற்பதில் நீங்கள் செய்த ஆனந்த கோஷங்களினால் என்ன தெரிகிறது ? வைதிக ஆசாரங்களுக்கு விரோதமாகத் தோன்றக்கூடிய செய்கைகளிலே கூட நீங்கள் சிறிதேனும் திகைப்பில்லாமல் என்னிடம் ராஜ பக்தி செலுத்துவீர்களென்று தெரிகிறது. சில வருஷங்களாக எனது விவாகத்தைப் பற்றி ஆழ்ந்த சிந்தனை செய்துகொண்டு வந்தேன். இன்னவிதமான பத்தினி இருந்தால் தான் நமக்குக் குடும்ப சந்தோஷமும், ராஜ்ய பாரத்திலே உதவியும் உண்டாகுமென்பதைப் பற்றி என்னுடைய பயிற்சியிலிருந்தும், யாத்திரைகளிலிருந்தும் எனக்

குச் சில விசேஷ அபிப்பிராயங்கள் ஏற்பட்டிருந்தன. நமது ஸமூஹம் இப்போதிருக்கும் நிலைமையில் நான் விரும்பிய குணங்களுடைய ஸ்திரீ நமக்குள் அகப்படுவது சாத்தியமில்லை யென்று கண்டேன். இதற்காகச் சுதேசிய அபிமானத்தின் வெளித் தோற்றத்தைக் கொஞ்சம் இழந்துவிடுதல் அவசியமென்றும் நிச்சயித்தேன். 'சுதேசிய அபிமானத்தின் வெளித்தோற்றம்' என்று சொல்லுகிறேன். ஏனென்றால் எத்தனையோ அன்னிய தேசங்களிலே பிறந்தாலும் தாம் ஸ்வீகாரம் செய்துகொண்ட தேசத்தாருடன் பரிபூர்ணமாக ஒற்றுமைப்பட்டுப் போவதை நாம் அறிவோம். இத்தனை காலம் கழித்துக் கடைசியாக எனது அபீஷ்டங்களுக்கு இணங்கிய பத்தினியை எனக்கு ஈசன் அருள் செய்திருக்கிறார். எங்களிருவருடைய ஆட்சியிலே இந்த ராஜ்யம் முன்னைக் காட்டிலும் அதிக க்ஷேமத்துடனும் ஸந்தோஷத்துடனும் இருக்குமென்று நம்புகிறேன்" என்பதாக அந்த நண்பர் ஒருமட்டில் வாசித்து முடித்தார்.

"சரி, அனுபவக் குறைவினால் சொல்லிவிட்டார். அஹல்யாபாயி முதலிய ஹிந்து ராணிகளைப் பற்றி அவர் தக்க ஆராய்ச்சி செய்வதில்லை" என்று ஜவாப் தெரிவித்தேன்.

"அடா, இப்போதுகூட பரோடா மஹாராணி இல்லையா!" என்று மற்றொருவர் குறுக்கிட்டார்.

"வேறு விஷயம் பேசுவோம்" என்று சொல்லிவிட்டேன்.

தீர்ப்பு எப்படி யிருக்கு மென்பதை நீங்களே ஊஹித்துக் கொள்ளலாம்.

நேற்று மாலை தராசுக் கடைக்குச் சதுரங்க பட்டணத்திலிருந்து ஒரு மாத்வ (ராவ்ஜி) வாலிபன் வந்தான். "தராசுக் கடை இதுதானா?" என்று கேட்டான். "ஆம்" என்றேன். என் பக்கத்திலிருந்த தராசை ஒரு கோணற் பார்வையாகப் பார்த்தான். கொஞ்சம் மீசையைத் திருத்திவிட்டுக் கொண்டான். மூக்குக் கண்ணாடியை நேராக்கிக் கொண்டான். மனதுக்குள் ஏதோ இங்கிலீஷ் வார்த்தைகள் சொல்லிக் கொண்டான். என்னை ஒரு பார்வை பார்த்தான்.

"நான் கேட்கிற கேள்விக்கு விடை நீர் சொல்லுவீரா? இந்தத் தராசு சொல்லுமா?" என்று கேட்டான்.

"தராசு தான் சொல்லும்" என்றேன்.

நம்பிக்கை கொள்ளாதவன் போலே விழித்தான். "அப்படித்தான் சென்னப்பட்டணத்தில் கேள்விப்பட்டேன். ஆச்சரியமான தராசு! உமக்கெங்கே கிடைத்தது? தமிழ் தான் பேசுமோ? இங்கிலீஷ் தெரியாதாமே? வொன்-டர்-புல், வெரி, வெரி, வொன்-டர்-புல்" என்று இங்கிலீஷில் கொண்டு ஸமாப்தி பண்ணினான்.

"நீ கேட்க வந்த விஷயங்களைச் சொல். வீணாக நேரம் கழிப்பதில் பயனில்லை" என்று நினைப்பூட்டினேன். அந்தப் பிள்ளையின் பெயர் வாஸுதேவராவ். வாஸுதேவராவ் சொல்லுகிறான்:—"வாலன்டீர் பட்டாளம் சேர்க்கிறார்களே, அந்த விஷயம் உம்முடைய தராசுக்குத் தெரிந்திருக்குமென்றே நினைக்கிறேன். எல்லாம் தெரிந்து எந்தக் கேள்வி கேட்டாலும் விடை சொல்லக்கூடிய மாயத் தராசுக்கு அது தெரியாமலிருக்குமா? 'அப்கோர்ஸ்', தெரிந்துதான் இருக்கும். அதிலே சேரலாமா? சேர்ந்தால் பயனுண்டா? இது வரை நம்மவர்களுக்கு தளகர்த்த பதவி கொடுப்பதில்லையென்று வைத்திருந்த வழக்கத்தை மாற்றி இப்போது புதிய விதிப்படி நமக்கு ராணுவ உத்யோகங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்களென்று தெரிகிறது. இது நம்பத்தக்க செய்திதானா? நான் எப்படியேனும் நம்முடைய பாரத மாதாவுக்கு உழைக்கவேண்டுமென்ற கருத்துடனிருக்கிறேன். இந்தப் பட்டாளத்தில் நாம் சேர்வதனால் நமது தேசத்துக்கு ஏதேனும் நன்மை யேற்படுமா என்ற விஷயம் என் புத்திக்கு நிச்சயப்படவில்லை. அதை உம்முடைய கீர்த்திபெற்ற தராசினிடம் ஆராய்ச்சி செய்ய வந்தேன்" என்றான்.

"ஆராய்ச்சியா?" என்று தராசு கேட்டது.

அதற்கு வாஸுதேவன் சொல்கிறான்.—"ஆம்! ஆராய்ச்சி; அதாவது பரியாலோசனை; இதை இங்கிலீஷில் 'கன்ஸல்டேஷன்' என்று சொல்லுவார்கள். இங்கிலீஷ் பாஷையில் சொல்லக்கூடிய 'ஐடியாஸ்' நம்முடைய தாய்ப் பாஷைகளில் சொல்ல முடியவில்லை. 'நெவர்மைண்ட்', அதுவே விஷயம் 'கிப்ளிங்' என்ற இங்கிலீஷ் கவிராயர் சொல்வது போலே, 'அது மற்றொரு கதை'; நான் கேட்க வந்த விஷயத்துக்கு விடை சொல்லவேண்டும்" என்றான்.

அப்போது நான் வாஸுதேவனை நோக்கி, "நீ ஏன் கேட்கிறாய்? நீ பட்டாளத்தில் சேரப் போகிறாயா?" என்றேன்.

அதற்கு வாஸுதேவன் :—"ஆஹா! நான் சேர்வதென்றால் ஏதோ ஸாமான்யமாக நினைத்துவிடவேண்டாம். எனக்குச் சென்னப்பட்டணம் முதல் டின்னவேலி வரைக்கும் ஒவ்வொரு முக்யமான ஊரிலும் ஸ்நேஹிதர் இருக்கிறார்கள். நான் சேர்ந்தால் அவர்களத்தனை பேரும் சேர்வார்கள்; நான் சேராவிட்டால் அவர்கள் சேரமாட்டார்கள்" என்றான்.

தராசு கட கட கட வென்று சிரித்தது.

வாஸுதேவனுடைய கன்னங்கள் சிவந்து போயின. மூக்குக் கண்ணாடியை நேரே வைத்துக் கொண்டான். மீசையைத் திருகினான். "வாட் இஸ் திஸ்!' இந்தத் தராசு என்னை நோக்கி ஏன் சிரிக்கிறது?" என்று மஹா கோபத்துடன் என்னை நோக்கிக் கேட்டான்.

அப்போது தராசு சொல்லுகிறது :—"முந்தி ஒரு தடவை ஒரு வக்கீல் என்னிடம் வந்து எனக்குச் சில ஞானோபதேசங்கள் செய்துவிட்டுப் போனார். அதாவது, ராஜ்ய விஷயங்களைப் பற்றி தான் எவ்விதமான அபிப்பிராயங்களும் சொல்லக் கூடாதென்றும், சண்டை சமயத்தில் ராஜ்ய விஷயங்களைப் பற்றி யாரும் ஒரு வார்த்தைகூடப் பேசாமலிருப்பதே நாம் இந்த ராஜாங்கத்தாருக்குச் செலுத்தவேண்டிய கடமையென்றும் பல முறை வற்புறுத்திச் சொன்னார். நானும் அவர் சொல்வது முழுதும் நியாய மென்பதை அங்கீகரித்து, நம்மால் கூடியவரை இந்த ராஜாங்கத்தாருக்குத் திருப்தியாகவே நடந்துவிட்டுப் போகலாமென்ற எண்ணத்தால், அவருடைய சொற்படி நடப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டேன். நீயோ ராஜ்ய விஷயமான கேள்வி கேட்கிறாய். என்ன செய்வதென்று யோசனை பண்ணுகிறேன்" என்று தராசு சொல்லிற்று.

அப்போது வாஸுதேவன்—" 'நோ, நோ, நோ'; இல்லை இல்லை, நீ என்னைக் கேலிபண்ணிச் சிரிக்கிறாய். நான் மதிப்புடன் கேட்க வந்தேன். உன்னுடைய குணம் எனக்குத் தெரியாமல் போய்விட்டது. போனால் போகட்டும்; நீ சிரித்ததைப்பற்றி எனக்குப் பெரிய காரியமில்லை. உன்னைப் பொறுத்து விடுகிறேன். நான் கேட்கவந்த விஷயத்துக்கு விடை சொல்லு" என்றான்.

அதற்குத் தராசு :—“ தம்பி, நான் உனக்குப் பயந்து ஒன்றையும் மறைத்துப் பேசவில்லை. நீ கேட்க வந்த விஷயத்துக்கு மறுமொழி ஏற்கெனவே சொல்லியாய் விட்டது. சிரித்தது உன்னைக் குறித்தே தான். அதில் சந்தேகமில்லை ” என்றது.

“ காரணமென்ன? ” என்று வாஸுதேவன் சினத்தோடு விசாரித்தான்.

“ தேசத்துக்குச் சண்டை போடக்கூடிய வீரனாக உன்னைப் பார்க்கும்போது தோன்றவில்லை. சண்டையிலே சேர்கிறவன் இத்தனை ஆராய்ச்சியும், பரியாலோசனையும், கன்ஸல்டேஷனும் நடத்தமாட்டான். படீரென்று போய்ச் சேர்ந்துவிடுவான் ” என்று தராசு சொல்லிற்று.

“ என்னை நீ போலீஸ்காரனென்று நினைக்கிறாயா? ” என்று வாஸுதேவன் கேட்டான்.

“ நான் அப்படிச் சொல்லவில்லை ” என்றது தராசு.

“ நான் போய் வரலாமா? ” என்று வாஸுதேவன் கேட்டான்.

“ போய்வா ” என்றது தராசு.

அவன் போன பிறகு தராசு என்னிடம் சொல்லுகிறது :— “ இவன் உளவு பார்க்க வந்தவன். சந்தேகமில்லை. பட்டாளத்தில் சேர்ந்து தேசத்தைக் காப்பாற்றக் கூடிய யோக்யதையுடையவன் இத்தனை வீண் பேச்சுப் பேசமாட்டான். அவனுக்கு இத்தனை கர்வமிராது. ”

## 5

நேற்றுக் காலையிலே பொழுது விடிந்து இரண்டு நாழிகைக்கு முன்னே நமது தராசுக் கடைக்குச் சென்னப்பட்டணத்திலிருந்து ஒரு வக்கீல் வந்தார். இவருக்கு 40 வயதிருக்கும். ஜாதியிலே பிராமணர். சிவப்பு நிறம். உருளைக் கிழங்கைப் போலே நல்ல வட்டமான சதைப்பற்றிய முகம். நெற்றியிலே கோபீ சந்தனம். இலேசான தொப்பை.

அதை மறைத்து 'அல்பாகா' என்ற பட்டுத் துணியுடுப்பு. காலிலே, இங்கிலீஷ் செருப்பு. தலையிலே மஸ்லீன் பாகை. தங்க விளிம்புடைய மூக்குக் கண்ணாடி. உடுப்புப் பையிலே தங்கக் கடியாரம், சங்கிலி முதலியன.

இவருக்குக் கண்ணிலே ஒரு குறை. ஸமீபத்திலிருக்கிற பொருள் நேரே தெரியாது; தூரத்திலே யிருப்பது தெரியும். எனவே, கண் முன்னே பெரிய தராசு தொங்க விட்டிருப்பதை இவர் காணாமல் கொஞ்சம் விலகியிருந்த நமது நண்பர் எலிக்குஞ்சுச் செட்டியாரை நோக்கித் திரும்பிக்கொண்டு :— "தராசே, தராசே, உன்னுடைய கீர்த்தி சென்னப்பட்டண மெல்லாம் பரவி யிருக்கிறது. உன்னிடம் சில கேள்விகள் கேட்கும்பொருட்டு வந்தேன். கேட்கலாமா?" என்றார்,

அதற்குச் செட்டியார் :—"நான் தராசில்லை, சாமி; நான் எலிக்குஞ்சு செட்டியார். அதோ கிழக்கே தொங்க விட்டிருக்கிறதே, அதுதான் தராசு. பக்கத்திலிருக்கிறாரே அவர் தான் தராசுக் கடை ஐயர்" என்றார்.

வக்கீல் கொஞ்சம் வெட்கமடைந்தார். நான் விஷயத்தை அறிந்துகொண்டு வேண்டிய உபசாரவார்த்தைகள் சொல்லி முடித்த பிறகு, தராசினிடம் வக்கீல் கேள்விகள் போடத் தொடங்கினார் :—

வக்கீல் :—"நமது தேசத்துக் காருண்ய கவர்ன்மெண்டார் நமக்கு எப்போது ஸ்வராஜ்யம் கொடுப்பார்கள்?"

தராசு :—"ஒவ்வொரு கிராமத்திலும் ஜனத் தலைவர் பள்ளிக்கூடங்கள் வைத்து, தேச பாஷைகளிலே புதிய படிப்புச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்தால், உடனே கொடுத்து விடுவார்கள்."

வக்கீல் :—"அது எப்போது முடியும்?"

தராசு :—நீர் போய் நான்கு கிராமங்களில் நான் சொல்லிய படிப் பள்ளிக்கூடங்கள் ஏற்பாடு செய்துவிட்டுப் பிறகு வந்து கேளும், சொல்லுகிறேன்."

வக்கீல் :—"அது சரி, மற்றொரு கேள்வி கேட்கிறேன். செத்துப்போன பிறகு மறு ஜென்ம முண்டா?"

தராசு :—“ உண்டு. மனோதைரியமில்லாத பேடிகள் புழுக்களாகப் பிறப்பார்கள். பிறர் துன்பங்களை அறியாமல் தம தின்பத்தை விரும்பினோர் பன்றிகளாகப் பிறப்பார்கள். சொந்தபாஷை கற்றுக்கொள்ளாதவர் குரங்குகளாகப் பிறப்பார்கள். சோம்பேறிகள் எருமைகளாகப் பிறப்பார்கள். அநீதிசெய்வோர் தேளாகப் பிறப்பார்கள், பிறரை அடிமைப் படுத்துவோர் வண்ணான் கழுதைகளாகப் பிறப்பார்கள், ஸ்திரீகளை இமிசை செய்வோர் நபும்ஸகராகப் பிறப்பார்கள். ஸமத்துவத்தைமறுப்போர் நொண்டிகளாகப் பிறப்பார்கள். கருணையில்லாதவர் குருடராகவும், தமது கல்வியைப் பிறருக்குக் கற்றுக்கொடாதவர் ஊமைகளாகவும், அச்சமுடையோர் ஆந்தைகளாகவும் பிறப்பார்கள். மறு ஜன்மம் வரையிலே கூடப் போகவேண்டாம். இந்த ஜன்மத்திலேயே பதவி, கோழை முதலியவர்கள் தாழ்ந்த ஜந்துக்களாக இருப்பதை அவர்களுடைய அந்தக்கரணத்திலே பார்க்கலாம். ”.

வக்கீல் :—“ ஏன் தராசே, பயப்பட்டால் அது கூட ஒரு பாவமா?”

தராசு :—“ ஆம். அதுதான் எல்லாப் பாவங்களுக்கும் வேர். அதர்மத்தைக் கண்டு நகைக்காமல் எவன் அதற்குப் பயப்படுகிறானோ அந்த நீசன் எல்லாப் பாவங்களும் செய்வான். அவன் விஷப் பூச்சி ; அவன் தேள் ; அவனை மனித ஜாதியார் விலக்கி வைக்கவேண்டும். ”

வக்கீல் :—“ அப்படியானால் மனோதைரியம் ஒரு புண்ணியமா? ”

தராசு :—“ ஆம். அது தெய்வபக்திக்கு ஸமமான புண்ணியம். உண்மையான தெய்வபக்தியிருந்தால் மனோதைரிய முண்டாகும் ; மனோதைரியம் இருந்தால் உண்மையான தெய்வபக்தி உண்டாகும். மனோதைரியத்தினால் ஒருவன் இந்த ஜன்மத்திலேயே தேவநிலை பெறுவான். ஆண்மை, வெற்றிமுதலிய தெய்வ சக்திகள் அவனைச் சேரும். அஞ்சாத மனோதைரியத்தைக் காட்டிலும் சிறந்த புண்ணியம் இவ்வுலகத்தில் இல்லை ; வானத்திலுமில்லை; அதனால் மனிதன் எல்லா இன்பங்களையும் பெறுவான். ”

வக்கீல் :—''சரி, வேறொரு கேள்வி கேட்கிறேன்; ஒரு வனுக்கு வக்கீல் வேலையில் நல்ல வரும்படி வராவிட்டால் அதற்கென்ன செய்யலாம் ?''

தராசு :—'' அந்த வேலையை விட்டு வியாபாரம் அல்லது கைத்தொழில் தொடங்கலாம். பள்ளிக்கூடங்கள் நடத்த லாம். சாஸ்திர ஆராய்ச்சிகள் செய்யலாம்.''

வக்கீல் :—'' சாஸ்திர ஆராய்ச்சி செய்தால் பணம் வருமா ? லக்ஷ்மிக்கும் சரஸ்வதிக்கும் விரோதமென்று சொல்லு கிறார்களே ?''

தராசு :—'' அதெல்லாம் பழங்கதை. எல்லாவிதமான செல்வங்களுக்கும் அறிவுதான் வேர். அறிவிருந்தால் எதையும் வெல்லலாம். சாஸ்திர வலிமையே வலிமை. உலகத்தில் இப்போது அதிகச் செல்வத்துடன் இருக்கும் ஜாதியாரெல்லாம் சாஸ்திர வலிமையாலே செல்வம் பெற் றார்கள்.''

வக்கீல் :—'' இன்னுமொரு கேள்வி. இழந்துபோன யௌவனத்தை மீளவும் பெறவேண்டுமானால் அதற்கு வழி யென்ன ?''

தராசு: —'' ஒரு வருஷம் மனதிலும் சரீரத்திலும் பிரம்மசரிய விரதத்தை அனுசரிக்கவேண்டும். காலையில் ஸ்நானம் செய்யவேண்டும். கை கால்களை உழைக்க வேண்டும். யௌவனமுடைய பிள்ளைகளுடன் ஸஹவாஸம் செய்ய வேண்டும். பயத்தை விடவேண்டும். மனோ தைரியம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். தெய்வபக்தி உண்டாக்கிக் கொள்ளவேண்டும். பிறரைத் தாழ்வாக நினைக்கலாகாது. புதிய புதிய கல்விகள் கற்க வேண் டும்.''

வக்கீல் :—'' கண் நோய் குணப்பட வழி யுண்டா ?''

தராசு :—'' உண்டு, மூக்குக் கண்ணாடியைக் கழற்றி யெறிந்து விடும். தெரிந்த வரை படித்தால் போதும். மனதிலே தோன்றிய உண்மைகளையும் நியாயங்களையும்

வழக்கத்திலே கொண்டுவர முயற்சி செய்யும். எதிலும், எப்போதும், யாருக்கும் பயந்தும், மனம் வேறு செய்கை வேறாக நடிக்கலாகாது. தாழ்ந்த ஜாதியாருக்குப் பள்ளிக் கூடம் போட்டுப் பாடஞ் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யும். கண் நேராகிவிடும்.''

வக்கீல் :—'' நீ சொல்லும் மருந்தெல்லாம் ஒரு மாதிரி விநோதமாக இருக்கிறதே !''

தராசு :—'' வேறு கேள்வியுண்டா ?''

வக்கீல் :—'' இல்லை. தராசே, நமஸ்காரம், நான் போய் வருகிறேன்.''

திரும்பிப் போகும்போது வக்கீல் முகமலர்ச்சியுடன் போனார். தராசு அவரைக் காட்டி, ''இன்னும் ஒரு வருஷத்தில் இவர் மனிதனாய் விடுவார்'' என்று சொல் லிற்று.

6

தராசுக் கடையின் வெளிப்புறத்திலே சில தினங்களின் முன்பு பின்வரும் விளம்பரம் எழுதி ஒட்டப்பட்டது :—

'' இங்கு நீடித்த விலைமதிப்புள்ள ஸாமான் மாத்திரமே நிறுக்கப்படும். விரைவிலே அழிந்து போகக்கூடிய, விலை குறைந்த ஸாமான்கள் நிறுக்கப்படமாட்டா.''

இந்த விளம்பரத்தைப் படித்துவிட்டு, ஜிந்தாமியான் ஸேட் என்னிடத்தில் வந்து, '' உமது வியாபாரத்திலே கொள்கை களும், சிந்தனைகளும் மனோதர்மங்களுந்தானே சரக்கு? இதில், நீண்ட மதிப்புடைய தென்றும், விரைவில் அழிந்து போகக்கூடிய வஸ்து வென்றும் பிரிந்ததெப்படி? மனதைப் பற்றிய விஷயமெல்லாம் நீடித்ததுதானே ?'' என்று கேட்டார்.

'' அறிவுத்துணிவுகள், தர்மக் கொள்கைகள் இவற்றிலும் பொன்னைப் போலே நீடித்து நிற்பனவும், வெற்றிலையைப் போலே விரைவில் அழிவனவும், ஓட்டாஞ்சல்லி போலே பயனற்றனவும் உண்டு'' என்றேன்.

" பயனற்றதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லும் " என்றார்.

" சிறையூர் ஜமீந்தார் தர்ம ப்ரஸங்கம் " என்றேன்.

" அதென்ன கதை?" என்று ஸேட் கேட்டார்.

" தென்னாட்டிலே சிறையூர் என்றொரு கிராமம் இருக்கிறது. அங்கே பழைய காலத்தில் க்ஷத்ரியராக இருந்து இப்போது மாட்சிமை குறைந்து போயிருக்கும் மறக்குலத்திலே பழம்புலித் தேவர் என்ற ஒரு ஜமீந்தார் இருக்கிறார். அவர் சிறிது காலமாக தர்மோபதேசம் செய்யத் தொடங்கி, 'மூச்சு விடத் தகுதியுள்ளவர் யார், தகுதியில்லாதவர் யார்? பல்நகம் தரிக்கத் தக்கோர் யார், தகாதோர் யார்?' என்ற விஷயங்களைப்பற்றி உபந்யாஸங்கள் செய்து வருகிறார். இது போன்ற வீண் சங்கதிகளை நமது தராசு கவனிக்க மாட்டாது " என்றேன்.

## 7

நேற்றுக் காலை, தராசுக்கடைக்கு வெளி ஜனங்கள் யாரும் வரவில்லை. ஜிந்தாமியான் ஸேட் வந்து உட்கார்ந்தார். வழக்கம் போல வேடிக்கை பார்க்க வந்தாரென்று நினைத்தேன்.

" ஸேட் ஸாஹேப், என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

" தராசினிடம் சில கேள்விகள் கேட்க வந்தேன் " என்றார்.

" சரி கேளும் " என்றேன்.

" தர்ம ப்ரஸங்கம் செய்யத் தகுதியுடையோர் யார்?" என்று கேட்டார்.

தராசு சொல்லிற்று :—" கலங்காத நெஞ்சுடைய ஞான தீரர்."

" அப்படியில்லாதோர் தர்ம ப்ரஸங்கம் செய்யத் தலைப் பட்டாலோ ?"

தராசு :—" மற்ருேர் அதைக் கவனிக்கக் கூடாது" என்றது.

பிறகு ஜிந்தாமியான் :—" ஆண்களுக்கு விடுதலையைப் பற்றிப் பேசலாமோ ?"

தராசு :—"பேசலாம்"

ஸேட் :—"முயற்சி கைகூடுமா ?"

தராசு :—தொடங்கு முன்னே எந்த முயற்சியும் கை கூடுமா கூடாதா என்று ஜோதிஷம் பார்ப்பதிலே பயனில்லை ; தொடங்கி நடத்தினுல் பிறகு தெரியும்.

சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டு, ஜிந்தாமியான் மறுபடி பின்வரும் கேள்வி கேட்டார் :—

"வருகிறேனென்று சொல்லி வாராதவர்களையும் தருகிறே னென்று சொல்லித் தாராதவர்களையும் என்ன செய்யலாம்?"

தராசு :—"சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி" என்றது.

"விளக்கிச் சொல்லு" என்று ஸேட் வற்புறுத்தினுர்.

தராசு சொல்வதாயிற்று :—தருகிறேனென்று சொல்லும் போதே பின்னிட்டுத் தம்மால் கொடுக்க முடியாதென்பதை அறிந்துகொண்டு சொல்வோர் புழுக்கள். அவர்களைப் படுக்க வைத்துக் கை கால்களைக் கட்டி மேலே ஒரு முட்டை கட்டெறும்பைக் கொட்டி கடிக்கவிடவேண்டும். தருகிறேனென்று சொல்லும்போது உண்மையாகவே கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் சொல்லிவிட்டுப் பின்பு சௌகர்யமில்லாமையால் கொடுக்காதிருப்போர் முன் யோசனையற்றவர்கள். இவர்களை நல்ல சவுக்கினுல் இரண்டடி அடித்துவிட்டுப் பின் முகதரிசன மில்லாமல் இருக்கவேண்டும். வருகிறேனென்று சொல்லி வாராதவர்களையும், இதைப் போலவே இரண்டு பகுதிகளாக்கிக் குற்றத்திற்குத் தக்கபடி சிக்ஷை விதிக்கவேண்டும், இதைக் கேட்டு ஜிந்தாமியான் சில நிமிஷங்கள் வரை ஒன்றும் பேசாமல் யோசனை செய்துகொண்டிருந்தார். பிறகு நான்

அவரை நோக்கி "இன்னும் ஏதேனும் கேள்வியுண்டோ ?" என்றேன். "ஒன்றுமில்லை" என்று சொல்லிவிட்டார்.

*   *   *

தராசைக் கட்டி உள்ளே வைத்து விட்டுக் கடையை மூடிய பிறகு நானும் ஜிந்தாமியான் ஸேட்டும் வீட்டுக்குத் திரும்பினோம். வரும் வழியிலே நான் ஸேட்டைப் பார்த்து "ஸேட் ஸாஹேப், வருகிரேனென்று வராதவர், தருகிறேனென்று தராதவர்! என்பதாக ஏதோ நீண்ட கேள்வி கேட்டீரே; மனதில் எதை வைத்துக்கொண்டு கேட்டீர் ?" என்றேன்.

ஸேட் மறுமொழி சொல்லாமல் புன்சிரிப்புச் சிரித்தார்.

"வியாபார விஷயமோ?" என்றேன்.

"இல்லை" என்று தலையை அசைத்தார்.

"குடும்ப விவகாரமோ" என்றேன்.

மறுபடியும் "இல்லை" என்றார்.

"அப்படியானால் விஷயந்தானென்ன ? சொல்லுமே" என்றேன்,

ஸேட் பின்வரும் கதை சொல்லலானார் :—

"ஒரு வாரத்துக்கு முன்பு எங்கள் வீட்டுக்கு ஒரு தமிழ்ப் பரதேசி வந்தான். எனக்கு இந்தப் பரதேசிகளிடம் நம்பிக்கை கிடையாது. எங்கள் மாமா ஒரு கிழவர் இருக்கிறாரே, அவருக்கோ இந்தப் பயித்தியம் அதிகம். அவருடன் நெடுநேரம் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தான். நானும் பொழுது போக்குக்காக ஸமீபத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். இரண்டு மணி நேரத்துக்குள் மாமா மனதில் இந்தப் பரதேசி பெரிய யோகியென்ற எண்ணம் உண்டாய்விட்டது. கதையை வளர்த்துப் பிரயோஜனமில்லை. நம்பக் கூடாத, சாத்தியமில்லாத, அசம்பாவிதமான இரண்டு மூன்று ஸாமான்கள் மூன்று தினங்களுக்குள் கொண்டு வருவதாகச் சொல்லி, அவரிடமிருந்து ஐம்பது ரூபாய் வாங்கிக்கொண்டு போய்விட்டான். குறிப்பிட்ட நாளில் வரவில்லை. அதை நினைத்துக்கொண்டு கேட்டேன்."

எனக்குக் கோபம் வந்துவிட்டது.

''உஸ், ஸேட்ஸாகேப், யாரிடத்திலே காணும் இந்த மூட்டை அளக்கிறீர் ? ஐம்பது ரூபாய், பரதேசி— பாட்டி கதை, ஸம்மதமுண்டானால் மனதிலுள்ளதைச் சொல்லும். இல்லாவிட்டால், ஸௌகர்யப்படாதென்று சொல்லிவிடும்'' என்றேன்.

ஸேட் சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு, ''உம்முடைய தராசுக்குப் புத்தியில்லை. என் மனதிலிருந்ததைச் சரியாக கண்டுபிடித்து மறுமொழி சொல்லவில்லை. நானும் அதை உம்மிடத்திலே சொல்ல முடியாது. வேண்டுமானால் தராசை யே கேட்டுத் தெரிந்துகொள்ளும்'' என்றார்.

நான் சிறிது நோயுடன், ''தராசு பிறர் மனதிலிருப்பதை கண்டு சொல்லாது. நேரே கேட்டால் நேரே மறுமொழி சொல்லும்'' என்றேன்.

''அப்படியானால் அடுத்த வியாழக்கிழமை வந்து சரியான படி கேட்கிறேன்'' என்று சொல்லிப் பிரிந்துவிட்டார். விஷயம் போகப் போகத் தெரியும்.

8

மைசூரிலிருந்து நம்முடைய கடைக்கு ஒரு ஐயங்கார் வந்தார் ; " என்ன தொழில் ?'' என்று கேட்டேன்.

''சமாசாரப் பத்திரிகைகளுக்கு விஷய தானம் செய்து ஜீவிக்கிறேன்'' என்று இங்கிலீஷிலே மறுமொழி சொன்னார்; ''இங்கிலீஷ் பத்திரிகைகளுக்கு'' என்றார். ''நல்ல லாப முண்டா ?'' என்று கேட்டேன்.

''ஒரு பத்திக்கு 6 ரூபாய் கிடைக்கிறது. மாதத்திலே ஏழெட்டு வியாஸந்தான் எழுத முடிகிறது. ஒரு வியாஸம் அநேகமாக ஒரு பத்திக்கு மேலே போகாது. என்னுடைய வியாஸங்களுக்கு நல்ல மதிப்பிருக்கிறது. சில சமயங்களில் எனது வியாஸமே தலையங்கமாகப் பிரசுரம் செய்யப்படுகிறது. ஆனாலும், அதிக லாபமில்லை. சிரமத்துடனேதான் ஜீவனம் நடக்கிறது. அன்றன்று வியாஸமெழுதி அன்றன்று பகி

தீர்கிறது. எனக்கு இரண்டு குழந்தைகள். அந்தக் குழந் தைகளையும் பத்தினியையும் ஸம்ரக்ஷணை பண்ண இத்தனை பாடு படுகிறேன்'' என்று இங்கிலீஷிலே சொன்னார்.

"இவருக்குத் தமிழ் தெரியாதோ?'' என்று தராசு கேட்டது.

ஐயங்கார் சொன்னார், இங்கிலீஷில் :—“ தமிழ் தெரியும். நெடுங்காலம் கன்னட தேசத்தில் பழகினபடியால் தமிழ் கொச்சையாக வரும். அதனால் இங்கிலிஷில் பேசுகிறேன்.

தராசு சொல்லுகிறது :—“ கொச்சையாக இருந்தால் பெரிய காரியமில்லை. சும்மா தமிழிலேயே சொல்லும்.''

ஐயங்காருடைய முகத்தைப் பார்த்தபோது அவர் ஸங்கடப் படுவதாகத் தோன்றிற்று. அதன் பேரில், ஐயங்கார் இங்கிலீஷிலேயே வார்த்தை சொல்லும்படிக்கும், நான் அதைத் தராசினிடத்திலே மொழி பெயர்த்துச் சொல்லும் படிக்கும் தராசினிடம் அனுமதி பெற்றுக்கொண்டேன்.

தராசு கேட்கிறது :—“ ஐயங்காரே, கையிலே என்ன மூட்டை?''

ஐயங்கார் “ பத்திரிகை வியாஸங்களைக் கத்தரித்து இந்தப் புஸ்தகத்திலே ஒட்டி வைத்திருக்கிறேன். ஸம்மதமுண்டானால் பார்வையிடலாம்'' என்று அந்த மூட்டையைத் தரா சின் முன்னே வைத்தார். தராசு அந்தப் புஸ்தகத்தைப் பரிசோதனை செய்து பார்த்து, “ நன்றாகத்தான் இருக்கிறது'' என்றது.

இதைக் கேட்டவுனே ஐயங்கார் :—“ யூ வ்ஸீ மிஸ்டர் பாலன்ஸ்'' என்று தொடங்கி....(அடடா! இங்கிலீஷில் அப்படியே எழுதுகிறேன்; வேறெங்கேயோ ஞாபகம்.)

ஐயங்கார் சொல்லுகிறார் :—“ கேளாய், தராசே, நானும் எத்தனையோ வியாஸங்கள் எழுதுகிறேன். பிறர் எழுது வதையும் பார்த்திருக்கிறேன். ஆனாலும், அந்த இங்கிலீஷ் காரருக்கு இங்கிலீஷ் பாஷை எப்படி வசப்பட்டு நிற்கிறதோ அந்தமாதிரி நம்மவருக்கில்லை. நான் இப்போது இரண்டு மூன்று நாளாக ஒரு இங்கிலீஷ் புஸ்தகம் வாசித்துக்கொண்டு

வருகிறேன். ஆஹா ஹா! வசனந்தான் என்ன அழகு; நடை எத்தனை நேர்த்தி; பதங்களின் சேர்க்கை எவ்வளவு நயம்!" என்று ஒரே ஸங்கதியைப் பதினேழு விதங்களிலே சொல்லிப் புகழ்ச்சி செய்யத் தொடங்கினர்.

அதற்குத் தராசு :—" ஸ்வாமீ, இந்த ஜன்மம் இப்படித் தமிழ்ப் பிராமண ஜன்மமாக எடுத்துத் தீர்ந்து போய் விட்டது. இனிமேல் இதைக் குறித்து விசாரப்பட்டுப் பயனில்லை. மேலே நடக்கவேண்டிய செய்தியைப் பாரும்" என்றது.

இப்படியிருக்கும்போது, வெளிப் புறத்தில் யாரோ சீமைச் செருப்புப் போட்டு நடந்துவரும் சத்தம் கேட்டது. சில க்ஷணங்களுக்குள்ளே, ஒரு ஆங்கிலேயர் நமது தராசுக் கடைக்குள் புகுந்தார். வந்தவர் தமிழிலே பேசினர் :— " காலே வந்தனம்."

" தராஸுக்கடை இதுவாக இருக்கிறதா ?" என்று கேட்டார்.

" ஆம் " என்றேன்.

" தராஸு எல்லாக் கேள்விக்கும் படில் சொல்லுமா ?"

" சொல்லும். ஆனல், நீர் இங்கிலீஷ் பேசலாம் ; தமிழ்ப் பேசித் தொல்லைப்பட வேண்டாம் " என்றேன்.

அப்போது தராசு :—" இந்த ஆங்கிலேயர் இப்போது எந்த ஊரிலே வாசம் செய்து வருகிறார் ? இவர் யார் ? என்ன வேலை ?" என்று கேட்டது.

எனது கேள்விக்கும் தராசின் கேள்விக்கும் சேர்த்து, மேற்படி ஆங்கிலேயர் பின்வருமாறு மறுமொழி சொன்னர் :—

" எனக்குத் தமிழ் பேசுவதிலே பிரியமதிகம்." (ஆங்கிலேயர் பேசிய கொச்சைத் தமிழை எழுதாமல் மாற்றி எழுதுகிறேன்.)

ஆங்கிலேயர் சொல்லியது :—" எனக்குத் தமிழ் பேசுவதிலே பிரியமதிகம். அது நல்ல பாஷை. தமிழ் ஜனங்

களும் நல்ல ஜனங்கள். நான் அவர்களுக்கு 'சுய' ஆட்சி, கொடுக்கலாமென்ற கக்ஷியைச் சேர்ந்தவன். இன்னும் கொஞ்ச கொஞ்ச காலத்துக்குள் சில சுதந்திரங்கள் வரு மென்று நிச்சயமாக நம்புகிறேன். என் உத்தியோகம், நான் இப்போது வசித்து வரும் ஊர்—எல்லாவற்றையும் தங்களிடம் சொல்லிவிடுகிறேன். ஆனால் அனைத்தும் தாங்கள் எந்தப் பத்திரிகையிலும் போடக் கூடாது" என்றார்.

'சரி' என்ற பிறகு தமது பூர்வமெல்லாம் சொன்னார். அவரிடம் வாக்குக் கொடுத்தபடி இங்கே அந்த வார்த்தைகள் எழுதப்படவில்லை.

அப்போது தராசு சொல்லுகிறது :—"ஆங்கிலேயரே, உம்மை பார்த்தால் நல்ல மனிதனாகத் தெரிகிறது. பொறுத் துக்கொண்டிரும். இந்த ஐயங்கார் கேள்விகள் போட்டு முடித்த பிறகு உம்மிடம் வருவோம்." "ஐயங்காரே, நம் முடைய கேள்விகளை நடக்கலாம்."

ஐயங்கார் சொல்லுகிறார், (இங்கிலீஷில்) :—"இந்த ஆங்கி லேயரின் கேள்விகளை முதலாவது கவனியுங்கள். என் விஷயம் பிறகு நேரமிருந்தால் பார்த்துக் கொள்ளலாம்."

அப்போது ஆங்கிலேயர் சொல்லுகிறார்.—"அவசியமில்லை, இருவரும் கேட்கலாம். மாற்றி மாற்றி இருவருக்கும் தராசு மறுமொழி சொன்னால் போதும்."

"சரி, இஷ்டமானவர் கேட்கலாம்" என்று தராசு சொல்லிற்று.

ஐயங்கார் பேசவில்லை. சும்மா இருந்தார். சில நிமிஷங் கள் பொறுத்திருந்து, ஆங்கிலேயர் கேட்டார் :—"ஐரோப்பா விலே சண்டை எப்போது முடியும்?"

தராசு :—"தெரியாது."

ஆங்கிலேயர் —"இந்த யுத்தம் முடிந்த பிறகு ஐரோப்பா விலே என்ன மாறுதல்கள் தோன்றும்?"

தராசு :—"தொழிலாளிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அதிக அதிகார மேற்படும். வியாபாரிகளுக்குக் கொஞ்சம் சிரம மேற்படலாம். இரகசியத் தேசாந்தரக் கொள்கைகள் ஐரோப்பாவிலே கொஞ்சம் பரவலாம்."

ஆங்கிலேயர் :—“ இவ்வளவுதானா ? ”

தராசு :—“ இவ்வளவுதான் இப்போது நிச்சயமாகச் சொல்ல முடியும்.”

ஆங்கிலேயர்:—“ தேச விரோதங்கள் தீர்ந்துபோய் விடமாட்டாதா ? ”

தராசு :—“ நிச்சயமில்லை. ஒரு வேளை சிறிது குறையலாம். அதிகப்பட்டாலும் படக்கூடும். ”

ஆங்கிலேயர் :—“ ஸர்வ–தேச–விதி’ ’க்கு வலிமை அதிகமாய், ‘ இனிமேல் இரண்டு தேசத்தாருக்குள் மனஸ்தாபங்கள் உண்டானால் அவற்றைப் பொது மத்தியஸ்தர் வைத்துத் தீர்த்துக் கொள்வதேயன்றி, யுத்தங்கள் செய்வதில்லை ’ என்ற கொள்கை ஊர்ஜிதப்படாதோ ? ”

தராசு :—“ நிச்சயமில்லை. அந்தக் கொள்கையைத் தழுவி ஆரம்பத்திலே சில நியதிகள் செய்யக்கூடும். பிறகு அவற்றை மீறி நடக்கவுங்கூடும். ”

ஆங்கிலேயர் :—“ இரண்டு தேசத்தார் எப்போதும் நட்புடன் இருக்கும்படிச் செய்வதற்கு வழி யென்ன ? ”

தராசு :—“ ஒருவரை ஒருவர் நன்கு மதித்தல் ; ஸமத்வ தர்மம். ஹிந்து வேதப் பழக்கம். ”

ஆங்கிலேயர் “ ஸாயங்கால வந்தனம் ” என்று சொல்வதற்கு ‘ ஸாயங்கால வண்டனம் ’ என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு எழுந்து போய்விட்டார்.

பிறகு ஐயங்கார் (தமிழில்) :—“ நானும் போய் வருகிறேன். அந்த ஆங்கிலேயர் கேட்ட கேள்விகளைத்தான் நானும் கேட்க நினைத்தேன். அவருக்குச் சொல்லிய மறுமொழி எனக்கும் போதும். நான் போய் வருகிறேன் நமஸ்காரம் ” என்றார்.

தராசு :—“போய் வாரும், உமக்கு லக்ஷ்மிகடாக்ஷமும், தமிழிலே சிறிது பாண்டித்தியமும் உண்டாகுக ” என்று ஆசீர்வாதம் பண்ணிற்று. ஐயங்கார் சிரித்துக்கொண்டே போனார்.

## 9

இன்று நமது கடைக்கு ஒரு தமிழ்க் கவிராயர் வந்தார்; கைக்கோள ஜாதி; ஒட்டக்கூத்தப் புலவர் கூட அந்தக் குலந்தானென்று நினைக்கிறேன்.

இவருக்கு இங்கிலீஷ் தெரியாது. தம்முடைய பெயரை வெளிப்படுத்தக் கூடாதென்று சொன்னார். ஆதலால் வெளிப்படுத்தவில்லை.

தராசு முகமலர்ச்சியுடன் சிரித்தது. "இப்படி ஒரு கவிராயன் வந்தால் எனக்கு ஸந்தோஷம். எப்போதும் வீண் வம்பு பேசுவோரே வந்தால் என்ன செய்வேன்?" என்றது. "கவிராயரே, என்ன விஷயம் கேட்க வந்தீர்?" என்று தராசு கேட்டது.

"எனக்குக் கவிராயர் என்பது பரம்பரையாக வந்த பட்டம். என்னுடைய தகுதியால் ஏற்படவில்லை. அத்தகுதி பெற முயற்சி செய்து வருகிறேன். அந்த விஷயமாகச் சில வார்த்தைகள் கேட்க வந்தேன்" என்று கவிராயர் சொன்னார். "இதுவரை பாடின பாட்டுண்டானால் சொல்லும்" என்று தராசு கேட்டது.

"இதுவரை நாற்பது அல்லது ஐம்பது அடிகளுக்கு மேல் பாடியது கிடையாது. இப்போதுதான் ஆரம்பம். அது அத்தனை ரஸமில்லை" என்று சொல்லிக் கவிராயர் விழித்தார்.

"மாதிரி சொல்லும்" என்றது தராசு.

புலவர் பாடத் தொடங்கினார். தொண்டை நல்ல தொண்டை.

"காளை யொருவன் கவிச்சுவையைக்—கரை
காண நினைத்த முழு நினைப்பில்—அம்மை
தோளசைத் தங்கு நடம் புரிவாள்—இவன்
தொல்லறி வாளர் திறம் பெறுவான்.
ஆ! எங்கெங்கு காணினும் சக்தியடா!—தம்பி

எழு கடலவள் மேனியடா!
தங்கும் வெளியினிற் கோடியண்டம்—எங்கள்
தாயின் கைப் பந்தென வோடுமடா!
கங்குலில் ஏழு முகிலினமும்—வந்து
கர்ச்சனை செய்வது கேட்டதுண்டோ?
மங்கை நகைத்த ஒலியதுவாம்—அவள்
வாயிற் குறுநகை மின்னலடா!"

தராசு கேட்டது:—"புலவரே, தமிழ் யாரிடம் படித்தீர்?"

கவிராயர்:—"இன்னும் படிக்கவில்லை; இப்போதுதான் ஆரம்பம் செய்கிறேன்."

தராசு:—"சரிதான், ஆரம்பம் குற்றமில்லை. விடா முயற்சியும், தெய்வ பக்தியும் அறிவிலே விடுதலையும் ஏறினால், கவிதையிலே வலிமையேறும்."

இங்ஙனம் வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கையில் சீட்டிக் கடை ஸேட் வந்தார்.

"சாமியாரே, தீபாவளி சமீபத்திலிருக்கிறது. ஏதேனும் சீட்டித் துணி செலவுண்டா?" என்று ஸேட் கேட்டார்.

"இல்லை" என்று சொன்னேன்.

அப்போது ஸேட் சொல்லுகிறார்:—"நான் அதற்கு மாத்திரம் வரவில்லை. வேறு ஸங்கதி கேட்கவும் வந்தேன். தராசு நடக்கப் போவதை அறிந்து சொல்லுமோ?"

"சொல்லாது" என்று தராசே சொல்லிற்று.

"சொல்லச் சம்மதமிருந்தால் சொல்லும். இல்லாவிட்டால் சொல்லாது. எதற்கும் நீர் கேட்க வந்த விஷயமென்ன? அதை வெளியிடும்" என்று நான் சொல்லப் போனேன்.

தராசு என்னிடம், "காளிதாஸா, அ—" என்றது. இந்த "அ" காரத்துக்கு "அடக்கு" என்றர்த்தம். அதாவது "என்னுடைய கருத்துக்கு விரோதமாக வார்த்தை சொல்லாதே" என்றர்த்தம்.

தராசு "அ—" என்றவுடனே நான் வருத்தத்துடனே தலை குனிந்துகொண்டேன்.

ஸேட் :—" தீபாவளி ஸமயத்தில் எங்கள் கடைக்குப் பத்து நூறாகவும், நூறு ஆயிரமாகவும், லாபம் வரும்படித் தராசு தன் வாயினால் வாழ்த்தவேண்டும். அப்படி வாழ்த்துவதற்கு ஏதேனும் கூலி வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

தராசு :—" கூலி வேண்டாம், ஸேட்ஜீ; இனாமாகவே ஆசீர்வாதம் பண்ணி விடுகிறேன். உமக்கு மேன்மேலும் லாபம் பெருகும், நாட்டுத் துணி வாங்கி விற்றால்" என்றது. ஸேட் விடை பெற்றுக்கொண்டு போனார்.

கவிராயர் தராசை நோக்கி, " நம்முடைய ஸம்பாஷணைக்கு நடுவிலே கொஞ்சம் இடையூறுண்டாயிற்று" என்றார்.

தராசு சொல்லுகிறது :—" உமக்கும் அதுதான் காணும் வார்த்தை. நெசவிலே நாட்டு நெசவு மேல். விலைக்கு நெய்வதைக் காட்டிலும் புகழுக்கு நெய்வதே மேல். பணம் நல்லது; ஆனால் பணத்தைக் காட்டிலும் தொழிலருமை மேல். காசிப்பட்டுப் போலே பட்டு நெய்யவேண்டும். அல்லது உறுதியான, உழவனுக்கு வேண்டிய, கச்சை வேஷ்டி போல நெய்யவேண்டும். " மல்" நெசவு கூடாது. " மஸ்லின்" நீடித்து நிற்காது. பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இத்தனையுமிருக்க வேண்டும். இதற்கு மேலே நல்ல வர்ணஞ் சேர்த்தால் குற்றமில்லை. சேராமலிருந்தால் விசேஷம்."

அப்போது புலவர் தராசை நோக்கி :—" நீயே எனது குரு" என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினார்.

தராசு :—" எழுக! நீ புலவன்!" என்றது.

## 10

பதினாறு வயதிருக்கும்; பிராமணப் பிள்ளை; வைஷ்ணவன். இவன் போன தீபாவளிக்கு மறுநாள் தராசுக் கடைக்கு வந்தான். வழக்கம் போலே முகவுரைகள் பேசி முடிந்த பிறகு தராசினிடம் பின்வரும் கேள்வி கேட்டான்.

பிராமணப் பிள்ளை :—" எனக்குப் பள்ளிக்கூடத்துச் சம்பளம் மூன்று மாதத்துக்கு ஒன்பது ரூபாய் வேண்டும். நாளைக் காலை சம்பளம் கொடுக்காவிட்டால் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்று பெரிய வாத்தியார்

கண்டிப்பாகச் சொல்லி விட்டார். எனக்குத் தெரிந்த பணக்காரர், என் பிதாவுக்கு அறிமுகமான பணக்காரர், எங்கள் குடும்பத்திலே நல்லெண்ணமுடைய சில நண்பர்களுக்குப் பழக்கமான பணக்காரர்—எல்லா விதமான பணக்காரர்களிடத்திலும் பலவிதங்களிலே கேட்டுப் பார்த்தாய்விட்டது. பயன்படவில்லை. சம்பளமோ அவசியம் கொடுத்துத் தீர வேண்டும். எனக்கு இந்த ஒன்பது ரூபாய் எங்கே கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும்? யார் கொடுப்பார்கள்!" என்றான்.

"விதி கொடுக்கும்" என்று தராசு சொல்லிற்று.

பிராமணப் பிள்ளை சிரித்தான்; சொல்லுகிறான்:— "தராசே, விதியை நம்புவது பிழை. ஐரோப்பியர் விதியை நம்புவதில்லை. ஆசியாவிலுள்ள மகமதிய ஜாதியாரும் ஹிந்துக்களும்தான் விதியை முழுமுரமாக நம்புகிறார்கள். இதனால் இந்த ஜாதியாரெல்லாம் வீழ்ச்சியடைந்தார்கள். ஐரோப்பியர் நாகரீகத்திலும் செல்வத்திலும் ஓங்கி வருகிறார்கள். முயற்சி செய்பவன் நல்ல ஸ்திதிக்கு வருவான். விதியை நம்பினவன் சோற்றுக்கில்லாமல் பட்டினி கிடப்பான்."

இங்ஙனம் பிராமணப் பிள்ளை சொல்லியதைக் கேட்டுத் தராசு சிரித்தது.

"தம்பி, ஐயங்காரே, உன் பெயரென்ன?" என்று தராசு கேட்டது.

"லக்ஷ்மீ வராஹாசார்யர்; வடகலை; ஸ்வயமாசார்ய புருஷர் வகுப்பு" என்றான்.

இங்ஙனம் பேசிக்கொண்டிருக்கையிலே, ஒரு பாட்டி வந்தாள். இந்தப் பாட்டிக்கு வயது அறுபத்தைந்து அல்லது எழுபதிருக்கும். தெலுங்குப் பிராமணர்களிலே நியோகி என்ற பிரிவைச் சேர்ந்தவள். கையிலே ஒரு ஆண் குழந்தை கொண்டு வந்தாள். மூன்று வயதுக் குழந்தை. தராசினிடம் கேள்விகள் கேட்க விருப்பமிருப்பதாக இந்த அம்மையார் சொல்லியதற்குத் தராசு சம்மதித்தது.

"ஐயங்காரப் பிள்ளையைக் கொஞ்சம் நிறுத்தி வைத்துவிட்டு முதலாவது இந்தப் பாட்டி விஷயத்தை முடிவு செய்தனுப்புவோம்" என்று தராசு தீர்மானித்தது.

பாட்டி சொல்லுகிறாள் :—"ருக்மிணி கர்ப்பமாயிருக்கிறாள்."

"ருக்மிணி யார் ?" என்று தராசு கேட்டது.

"என்னுடைய இரண்டாவது பேத்தி" என்று பாட்டி சொன்னாள். "அவளுக்கு எழெட்டு மாஸமாய்விட்டது. மூத்தவளுக்கு நாலைந்து மாஸம். இரண்டு பேருக்கும் புருஷக் குழந்தைகள் பிறக்கவேணும். மூத்தவள் புருஷனுக்கு ஸர்க்காரில் 150 ரூபாய் கொடுக்கிறார்கள். செலவுகுத் தட்டத்தான் செய்கிறது. அவன் சம்பளம் உயரவேணும். வீட்டிலே காளி படம் வைத்துப் பூஜை பண்ணுகிறான். அந்தப் படம் வீட்டிலிருந்தால் நல்லதில்லையென்று சொல்லுகிறார்கள். அவனிடம் சொல்லிப் பார்த்தேன்; கேட்கவில்லை. இந்தக் குழந்தைக்கு அடிக்கடி மாந்தம் வருகிறது. பேய் பிசாசுகளின் சேஷ்டை ஏதேனும் இருக்கலாமோ என்னவோ தெரியவில்லை. மாரியம்மனுக்குப் பூஜை செய்விக்கவேண்டுமென்று பூஜாரி சொல்லுகிறான். எனக்கு அந்த எலிக்கடி விஷம் இன்னும் உடம்பை விட்டுப் போகவில்லை. அடிக்கடி ஜ்வரம் வந்துகொண்டிருக்கிறது. எல்லாத் தோஷங்களும் நீங்குவதற்கு ஏதேனும் பரிஹாரம் செய்யவேண்டும். தராசைக் கேட்டால் எல்லா ஸங்கடங்களுக்கும் தீர்ப்புச் சொல்லுமென்று காலேஜ் வாத்தியார் கண்ணைய நாராயணசாமி ஐயர் சொன்னார். ஏதேனும் ஒரு பரிஹாரம் சொல்ல வேண்டும்" என்று பாட்டி ப்ரஸங்கத்தை முடிவு செய்தாள்.

"விதிப்படி நடக்கும்" என்று தராசு சொல்லிவிட்டுச் சும்மா இருந்தது.

நானும் தராசினுடைய மன நோக்கத்தைத் தெரிந்து கொண்டு, "பாட்டியம்மா, வருகிற வெள்ளிக்கிழமை காலையிலே நாலு பிள்ளைகளுக்குச் சாப்பாடு போட்டுவிட வேண்டும். பேத்திகளை இருவரையும், தினந்தோறும் கோவிலுக்குப் போய் ஸ்வாமி தரிசனம் பண்ணிவிட்டு வரும்படிச் செய்ய வேண்டும். உங்களுடைய கஷ்டங்களெல்லாம் நிவர்த்தியாகும்" என்று சொல்லிப் பாட்டியைப் போகச் சொல்லி விட்டேன்.

பிறகு, லக்ஷ்மீவராஹன் என்ற வைஷ்ணவப் பிள்ளையை நோக்கித் தராசு பின்வருமாறு சொல்லுகிறது :—

"கேளாய், மகனே, விதிப்படி தான் இந்த உலகமெல்லாம் நடக்கிறது. மனித வாழ்க்கை இவ்வுலகத்தின் வாழ்க்கையிலே ஒரு சிறு பகுதி. விதி தவறி ஒன்றும் நடக்காது. பூர்வ காலத்து மகமதியர்களும், ஹிந்துக்களும் விதியை முற்றிலும் நம்பியிருந்தார்கள். அரபியாவிலே உண்டான மகமதிய மதம் மத்திய ஆசியா முழுவதிலும் பரவிற்று; அத்துடன் அற்புதமான சாஸ்திரங்களும் பரவின; ஐரோப்பாவில் தென் பகுதியை வியாபித்தது; ஸ்பெயின் தேசத்திலே போய் அரசாண்டது. ஐரோப்பா முழுதிலிருந்து பண்டிதர்கள் ஸ்பெயின் தேசத்துக்கு வந்து சாஸ்திரங் கற்றுக்கொண்டு போனார்கள். இப்போது ஐரோப்பாவில் ஓங்கி நிற்கும் நவீன சாஸ்திரங்களிலே பலவற்றின் வேர் அங்கே மகமதியரால் நாட்டப்பட்டது. மகமதியர் பாரத நாட்டை ராஜபுத்ரரிடமிருந்து வென்றனர், சிங்கத்தினிடமிருந்து காட்டை வெல்லுவதுபோலே. இங்ஙனமே ஜாவா முதலிய தென்கடல் தீவுகளைப் பற்றிக் கொண்டனர். வட ஆப்பிரிக்கா தென் ஆப்பிரிகா, மத்திய ஆப்பிரிகா, சீனம், ருஷியா—மனிதனுக்குத் தெரிந்த நாகரிக தேசங்களெல்லாவற்றிலும், அல்லாவின் குமாரர் வெற்றியும், புகழுமெய்தி விளங்கினர். அக்காலத்தில், இவர்களுக்கு விதி நம்பிக்கை இப்போதைக்காட்டிலும் குறைவில்லை, பூர்வ ஹிந்து ராஜாக்களின் புகழ் திசையெட்டுக்குள் அடங்கவில்லை. அவர்களெல்லாம் விதியைப் பரிபூரணமாக நம்பியிருந்தார்கள். முதலாவது மொகலாயச் சக்ரவர்த்தியாகிய பாபர்ஷா விதியை நம்பி ஹிந்துஸ்தானத்தின் மேலே படையெடுத்தான். அவன் யோசித்தான் !—"அரே! அல்லா உலகத்துக்கு நாயகன். அவனுடைய விதி, அவன் உண்டாக்கிய ஒழுங்கு, அதற்குக் கிஸ்மத் (விதி) என்று பெயர். கிஸ்மத்படி எல்லாம் நடக்கிறது. ஒருவனுக்குச் சாக விதியில்லையென்றால், அவன் போர்க்களத்திலே அம்புகளின் சூறைக்கு நடுவிலே போய் நின்றாலும் சாகமாட்டான். அவன் மேலே அம்பு தைக்காது. விதி கொல்ல வேண்டுமானால் வீட்டிலே கொல்லும். இடி விழாமல் நம்மால் தடுக்க முடியுமா ? சாகாத வைத்தியனுண்டா ? விதிப்படி நடக்கும். ஹிந்துஸ்தானத்தின் மேலே படையெடுத்துப் போவோம். விதியின் அனுகூலமிருந்து வெற்றி கிடைத்தால், உலகத்து மண்டலாதிபதிகளிலே முதன்மையடையலாம். அங்கே இறந்தோமானால் நம்முடைய சதையைக் காக்காய்கள் தின்னும்.

நம்மாலே சில ஜீவன்களுக்கு வயிற்றுப் பசி தீர்ந்து ஸந்தோஷம் சிறிது நேரமுண்டாகும். எல்லாம ஒன்று தான. விதியே துணே. ஹிந்துஸ்தானத்தின மேலே படையெடுப்போம்' என்ருன். ஆள் பலமில்லே; பணமில்லே. ராஜபுத்ர ஸ்தானத்து க்ஷத்திரியர்களே வெல்லுவதென்ருல ஸாதாரணமான காரியமன்று; ஒவ்வொரு ராஜபுத்ரனும் ஒவ்வொரு மஹா சூரன. எப்படியோ! பாபர்ஷா வென்று விட்டான் விதியை நம்பி! விதி வெற்றிக்குத் துணையாகும். விதியை நம்பி விதை போடாமலிருந்தால், பயிர் விளேயாது. விதியை நம்பி உழைத்தால் அநேகமாக விளேயும்" என்று தராசு சொலலிற்று.

என் கையிலிருந்தது ஒரு தர்ம நிதிப்பணம். அதில் ஒன்பது ரூபாய் எடுத்து அந்தப் பையனிடம் கொடுத்தேன். "விதி உண்மைதான்" என்று சொல்லி லக்ஷ்மீவராஹன் ஒப்புக்கொண்டு போனுன்.

## 11

ஒரு கிராமத்திலே ஒரு ஏழைக் குடியானவன் சுரைக்காய்த் தோட்டம் போட்டிருந்தான். ஒரு நாள் பொழுது விடியு முன்பு இருட்டிலே, ஒரு திருடன் அந்தத் தோட்டத்துக்குள்ளே புகுந்து சுரைக்காய் திருடிக்கொண்டிருக்கையிலே, குடியானவன் வந்துவிட்டான். திருடனுக்குப் பயமேற்பட்டது. ஆனுலும் குடியானவன் புத்தி நுட்ப மில்லாதவனுக இருக்கலாமென்று நினேத்து அவனே எளிதாக ஏமாற்றிவிடக் கருதித் திருடன் ஒரு யுக்தியெடுத்தான்.

இதற்குள்ளே குடியானவன் :—"யாரடா அங்கே?" என்று கூவினுன். திருடன், கம்பீரமான குரலிலே— "ஆஹா! பக்தா, இது பூலோகமா? மானிடர் நீங்கள் தானு?' என்ருன்.

தோட்டக்கானும் :—"ஒஹோ, இவர் யாரோ, பெரியவர்; தேவலோகத்திலிருந்து இப்போதுதான் நமது சுரைத் தோட்டத்தில் இறங்கியிருக்கிருர் போலும்" என்று நினேத்து, "ஆம், ஸ்வாமி; இதுதான் பூலோகம், நாங்கள் மானிட ஜாதி" என்று சொல்லித் திருடனுக்குப் பல நமஸ்காரங்கள் செய்து ஏழெட்டுச் சுரைக்காய்களேயும் நைவேத்தியமாகக் கொடுத்தனுப்பினுன். திருடன் அவற்றை வாங்கிக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

மேற்கூறிய கதை எனக்கு ஒரு நண்பர் நேற்று நான் சொல்லிக் காட்டினார். அது இன்று காலையில் மிகவும் பிரயோஜனப்பட்டது. போன முறை ஒரு தொப்பைச்சாமியார் நம்முடைய கடை கட்டப்போகிற ஸமயத்தில் ஒரு விஷயம் கேட்க வந்ததாகச் சொல்லியிருந்தேன். ஞாபக மிருக்கிறதா ? அவர் மறுபடி அன்று காலையில் வந்தார்.

"பெற்றோர், உற்றோர், மனைவி மக்கள், பொன், வீடு, காணி முதலிய தீய விஷயாதிகளிலே கட்டுண்டு, பிறவிப் பிணிக்கு மருந்து தேடாமல் உழலும் பாமரருக்குச் சார்பாக நீரும்............" என்று ஏதோ நீளமாகச் சொல்லத் தொடங்கினார். நான் மேற்படி சுரைத் தோட்டத்துக் கதையைச் சொல்லிக் காட்டினேன். சாமியார் புன்சிரிப்புடன் எழுந்து போய்விட்டார்.

* * *

நானிருக்கும் தெருவுக்குப் பக்கத்துத் தெருவிலே ஒரு சாஸ்திரியார் இருக்கிறார். நல்ல வைதீகர் ; அத்தியயனத்திலே புலி ; சிராத்தம் பண்ணி வைப்பதிலே ஸாக்ஷாத் வியாழக்கிழமைக்கு (பிருஹஸ்பதி பகவானுக்கு) நிகரானவர். அவர் வீட்டிலே அவரொரு கக்ஷி, மூத்தாள் பிள்ளை முத்துசாமியும், அவன் மனைவியும் ஒரு கக்ஷி—ஆக மூன்று கக்ஷிகளாக இருந்து பல வருஷங்களாக இடைவிடாமல் சண்டை நடந்து வருகிறது. அவர் இன்று காலை என்னிடம் வந்து, "என்ன வாசித்துக்கொண்டிருக்கிறீர் ?" என்று கேட்டார்.

"சுதேசமித்திரன் பத்திரிகை" என்றேன்.

"இந்தச் சண்டை எப்போது முடியும் ?" என்று கேட்டார். நான் ஏதோ ஞாபகத் தவறாக, "நீங்கள் வேறு குடும்பம், உங்கள் பிள்ளை முத்துசாமி வேறு குடும்பமாகக் குடியிருக்கவேண்டும். உங்கள் பத்தினியும், அவன் மனைவியும் சந்திக்க இடமில்லாதபடி ஏற்பாடு செய்யவேண்டும். அப்போது ஒருவேளை முடியலாம்" என்றேன். "சரி! நான் போய்வருகிறேன்" என்று கோபத்துடன் எழுந்து போய்விட்டார். 'அவர் கேட்டது ஐரோப்பா யுத்தத்தைப்பற்றியது' என்ற விஷயம், அவர் எழுந்துபோன பிறகு எனக்குத் தோன்றியது. நாளை அவரைக் கூப்பிட்டு க்ஷமை கேட்க வேண்டும்.

எதனுலேயோ, இன்று எனக்குக் கதைகள் சொல்வதிலே பிரியமுண்டாய் விட்டது. இன்னுமொரு சிறிய கதை சொல்லுகிறேன். திருவாங்கூரிலே வைத்தியநாதய்யர் என்றொரு நியாயாதிபதி இருந்தார். அவருக்கு ஜனங்கள் "தர்மஸங்கடம் வைத்தியநாதய்யர்" என்று பெயர் வைத்தார்கள். எந்த வழக்கு வந்தபோதிலும் அவர் இரண்டு பக்கத்து வக்கீல்களும் ஸாக்ஷிகளும் சொல்வதையெல்லாம் மிகுந்த பொறுமையுடன் கேட்டுப் பல தினங்கள் ஆலோசனை செய்த பிறகுதான் தீர்ப்புச் சொல்லுவார். கக்ஷிக்காரருக்கு அவஸரம் அதிகம். நியாயமோ, அநியாயமோ விரைவாகத் தீர்ப்புச் சொன்னால் போதுமென்ற ஸ்திதிக்கு வந்து விட்டது.

ஒரு நாள் இரவு பத்து மணிக்கு இந்த வைத்தியநாதய்யர் திருவனந்தபுரம் பத்மநாப ஸ்வாமி கோயிலில் ஒரு தனியிடத்திலே, ஸமீபத்தில் யாருமில்லையென்ற ஞாபகத்துடன், தமக்குத்தாமே இரைந்து வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தார்.

அவர் சொல்லியதென்னவென்றால் :—" ஸ்வாமீ! பத்மநாபா! ஜகந்நாதா! நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும். நான் என்ன செய்வேன? வாதி பக்கத்து வக்கீல்களும் ஸாக்ஷிகளும் சொல்வதைக் கேட்டால் வாதி பக்கத்திலேயே நியாயமிருப்பதாகத் தோன்றுகிறது. பிரதிவாதி பக்கத்தார் சொல்வதைக் கேட்டால் அந்தக் கக்ஷியிலே தான் நியாயமிருப்பது போலத் தோன்றுகிறது. நான் எப்படித் தீர்ப்புச் செய்வேன்?"

இவர் சொல்லிய வார்த்தைகளைத் தூண் மறைவிலிருந்த ஒரு சிறுவன் கேட்டு ஊர் முழுதும் பறையடித்து விட்டான். அதன் பிறகு தான் இவருக்குத் "தர்மஸங்கடம் வைத்தியநாதய்யர்" என்ற பட்டம் ஏற்பட்டது.

இந்த விளையாட்டுக் கதையிலுள்ள நியாயாதிபதியைப் பற்றி யார் எப்படி நினைத்தபோதிலும் எனக்கு இவர் விஷயத்தில் ஒருவிதமான மதிப்புண்டு. இவரைப்போன்ற யோக்கியர்கள் உலகத்திலே கிடைப்பது மிகவும் அருமை என்பது என்னுடைய அபிப்பிராயம். பக்ஷபாதமாகத் தீர்ப்புச் செய்துவிடுதல் யாருக்கு மெளிது. இரண்டு கக்ஷியின் நியாயங்களையும் தீரத் தெரிந்துகொண்டு முடிவு சொல்லுதல் கஷ்டம்.

நமது தேசாபிமானிகளுள் ஒருவரை என் நண்பன், “ஏனய்யா, நான் இந்த ஸ்வராஜ்ய சங்கத்திலே (அதாவது, மிஸஸ் அனிபெஸண்ட் ஏற்பாடு செய்யும் “ஹோம்-ரூல்” சங்கத்திலே) சேரலாமா ?” என்று கேட்டால், அவர் சொல்லும் மறுமொழியிலிருந்து எந்த விஷயத்திலும் முடிவான தீர்மானஞ் செய்தல் எவ்வளவு கஷ்டமென்பது தெரியும்.

இன்று காலை தராசுக் கடைக்கு இரண்டு பிள்ளைகள் வந்தார்கள். ஒருவனுக்கு வயது பதினெட்டிருக்கும்; மற்றவனுக்கு இருபது வயதிருக்கலாம்.

“நீங்கள் யார் ?” என்று கேட்டேன்.

மூத்தவன் சொல்லுகிறான் :—“நாங்கள் இருவரும் புதுச்சேரிக் கலாசாலையில் வாசிக்கிறோம். தராசுக் கடையின் விஷயங்களைக் கேள்விப்பட்டு, இங்கே சில ஆராய்ச்சிகள் செய்து விட்டுப் போகலாமென்று வந்தோம்.”

தராசினிடம் விஷயத்தைத் தெரிவித்தேன். தராசு சொல்லிற்று :—“மத விஷயமான கேள்விகளைக் கேட்பதானால் சுருக்கமாகக் கேட்கவேண்டும்.”

இதைக் கேட்டவுடன் இரண்டு பிள்ளைகளும் திகைத்து விட்டார்கள். சிறிது நேரத்துக்குப் பிறகு மூத்தவன் ஒருவாறு மனதைத் திடஞ் செய்துக்கொண்டு சொல்லுகிறான் :—

“நான் சில தினங்களாக ராமாயணம் வாசித்துக்கொண்டு வருகிறேன். அதிலே விசுவாமித்திரர் என்ற ரிஷி ஆயிரம் வருஷம் தவம் செய்ததாகவும், அந்தத் தவத்தில் ஏதோ குற்றம் நேர்ந்து விட்டபடியால் மறுபடி ஆயிரம் வருஷம் தவம் புரிந்ததாகவும் எழுதப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் மஹா யோகிகளென்றும், ஞானிகளென்றும் சிலரை நமது ஜனங்கள் வழிபடுகிறார்கள். இவர்களெல்லாம் மற்ற ஸாமான்ய ஜனங்களைப்போலவே நூறு நூற்றிருபது வருஷங்களுக்குள் மடிந்து போகிறார்கள். விசுவாமித்திரர் கதையை நான் ஒரு திருஷ்டாந்தமாகக் காட்டினேன். பழைய புராணங்களிலும், இதிஹாஸங்களிலும் பொய்க்கதைகள் மலிந்து கிடக்கின்றன என்பது என்னுடைய கருத்து.

அப்படி இருக்க, 'நம்மவர் அவற்றைப் பக்தி சிரத்தையுடன் போற்றத் தகுந்த உண்மை நூல்களென்று பாராட்டுதல் பொருந்துமா ?' என்பது என்னுடைய கேள்வி."

தாராசு சொல்லுகிறது :—"புராணங்கள் முழுதும் சரித்திரமல்ல ; ஞான நூல்கள் ; யோக சாஸ்திரத்தின் தத்துவங்களைக் கவிதை வழியிலே கற்பனைத் திருஷ்டாந்தங்களுடன் எடுத்துக் கூறுவன. இவையன்றி நீதி சாஸ்திரத்தை விளக்கும்படியான கதைகளும் அந்நூல்களில் மிகுதியாகச் சேர்ந்திருக்கின்றன. சரித்திரப் பகுதிகளும் பல உண்டு. இவ்வாறு பல அம்சங்கள் சேர்ந்து ஆத்ம ஞானத்துக்கு வழிகாட்டி, தர்ம நீதிகளை மிகவும் நன்றாகத் தெரிவிப்பதால் அந்த நூல்களை நாம் மதிப்புடன் போற்றிவருதல் தகும்."

பிறகு இளைய பிள்ளை கேட்டான் :—"உடைமை என்பது நம்முடைய ஜன்மாந்திரத்தில் செய்த பாவ புண்ணியத்தின் பயனல்லவா ?"

தாராசு சொல்லுகிறது :—"இல்லை. ஒருவன் தன் காலத்திலே செய்யும் செய்கைகளும், அவன் முன்னோர் செய்துவிட்டுப்போன செய்கைகளுமே உடைமைக்குக் காரணமாகும். ஏழ்மைக்கும், செல்வத்துக்கும் காரணம் தெரிய வேண்டுமானால் அர்த்தசாஸ்திரம் (பொருள் நூல்) பார்க்கவேண்டும் ஜன்மாந்தர விஷயங்களைக் கொண்டு வருதல் வீண் பேச்சு ; அதிலே பயனில்லை."

இளையவன் கேட்கிறான் :—"முன் பிறப்பும் மறுபிறப்பும் மனிதனுக்குண்டென்பது மெய்தானா ?"

தாராசு சொல்லுகிறது :—"அந்த விஷயம் எனக்குத் தெரியாது."

இளையவன் :—ஆத்மா உண்டா ; இல்லையா ?"

தாராசு :—"உண்டு".

இளையவன் :—"அதற்குப் பல ஜன்மங்கள் உண்டா, இல்லையா ?"

தாராசு :—"உலகத்தினுடைய ஆத்மாதான் உனக்கும் ஆத்மா, உனக்கென்று தனியாத்மா இல்லை. எல்லா

பொருள்களும் அதனுடைய வடிவங்கள். எல்லாச் செய்கைகளும் அதனுடைய செய்கைகள். அவனன்றி ஓரணுவும் அசையாது."

இளைய பிள்ளை :—" சரி, அது போகட்டும். இப்போது ஒருவன் செல்வம் சேர்க்க விரும்பினால் முடியுமா ?"

தராசு :—" முடியும். இஹலோக சாஸ்திரங்களைக்கற்று, வியாபார விதிகளைத் தெரிந்துகொண்டு, தெளிவுடனும், விடாமுயற்சியுடனும் பாடுபட்டால் முடியும். ' முயற்சி திருவினை ஆக்கும்.' "

பிள்ளைகள் " இன்னும் பல விஷயங்கள் கேட்கவேண்டும். மற்றொரு முறை வருகிறோம்" என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

## 12

இன்று நமது தராசுக் கடைக்குச் சென்னப்பட்டணத்திலிருந்து ஒரு காலேஜ் மாணாக்கர் வந்து சேர்ந்தார்.

" ஒய்.எம்.ஸி.ஏ. யில் மிஸ்டர் காந்தி செய்த உபந்யாஸத்தைப் பற்றி உம்முடைய ' ஒப்பினியன் ' எப்படி ? " என்று அந்த மாணாக்கர் கேட்டார்.

" இதென்னடா, கஷ்டகாலம் ! காலை வேளையில் இந்த மனுஷன் ஹிந்துஸ்தானி பேச வந்தான் ! " என்று சொல்லித் தராசு நகைக்கலாயிற்று. தராசுக்கு இங்லீஷ் தெரியாது. ஹிந்துஸ்தானி யதார்த்தத்திலே தெரியும். தெரியாததுபோல சில சமயங்களில் பாவனை செய்வதுண்டு.

" ஒய்.எம்.ஸி.ஏ. என்பது வாலிபர் கிறிஸ்தவ சங்கம் என்று பெயர் கொண்ட ஒரு சபையைக் குறிப்பிடுவது. அந்த சபையாரின் பிரசங்க மண்டபத்தில் ஸ்ரீமான் காந்தி சில தினங்களின் முன்பு ஒரு உபந்யாஸம் செய்தாராம். அந்த உபந்யாஸத்தைப்பற்றி, ஏ தராசே, உன்னுடைய அபிப்பிராயத்தை அறிந்துகொள்ள வேண்டுகிறார் " என்று தராசை நோக்கிச்சொன்னேன்.

"அபிப்பிராயமென்ன ?" என்று கேட்டது தராசு.

"ராஜீய விஷயத்தைக் கலக்காமல் பேசும்" என்று நான் விண்ணப்பம் செய்துகொண்டேன்.

காலேஜ் மாணுக்கர் சொல்லுவதாவர் :—

ஸ்ரீமான் காந்தி வாசம் செய்யும் ஆமதாபாத்தில் ஸத்யாக்ரஹ ஆசிரமம் ஏற்படுத்தியிருக்கிறார். அந்த ஆசிரமத்தில் யௌவனப் பிள்ளைகள் பலரை வைத்துக் கொண்டு அவர்களைத் தேசஸேவைக்குத் தயார்படுத்துகிறார். அவருடைய ஆசிரமத்திலே பயிற்சி பெறுவோருக்குச் சில விரதங்கள் அவசியமென்று ஏற்படுத்தியிருக்கிறார். உண்மையிலே லோகோபகாரம் செய்ய எல்லோருமே மேற்படி விரதங்களை அனுஷ்டிக்க வேண்டுமென்பது அவருடைய கொள்கை. கிறிஸ்தவ சங்கத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் அவர் அந்த விரதங்களைக் குறித்துத்தான் பேசினார். விசேஷமாக அவர் வற்புறுத்திச் சொல்லிய விஷயங்கள் பதினொன்று. அவை பின்வருமாறு :—

1. ஸத்ய விரதம் :—எப்போதும், யாரிடத்திலும், என்ன துன்பம் நேரிட்டாலும், பிரஹலாதனைப் போல ஒருவன் உண்மையே பேசவேண்டும்.

2. அஹிம்ஸா விரதம் :—எவ்வுயிருக்கும் துன்பஞ் செய்யலாகாது; யாரையும் பகைவராக நினைக்கலாகாது; ஒருவன் உன்னை அடித்தால் நீ திரும்பி அடிக்கக்கூடாது.

3. பிரமசரியம் :—விவாகம் பண்ணிக்கொள்ளக்கூடாது. ஏற்கெனவே மனைவியிருந்தால் அவளை ஸஹோதரம் போல நடத்தவேண்டும்.

4. நாக்கைக் கட்டுதல் :—உணவிலே மஸாலா சேரக் கூடாது; ருசியை விரும்பி உண்பது பிழை; அதனால் உஷ்ணம் அதிகரித்து, போக இச்சையுண்டாகிறது.

5. உடைமை மறுத்தல் :—ஒருவன் ஒரு பொருளையும் தனது சொத்தாகக் கொள்ளலாகாது.

6. சுதேசியம் :—நமது தேசம், ஜில்லா, நமது கிராமத் தொழிலை முதலாவது ஆதரிக்க வேண்டும்; நமது தேசம், நமது ஜில்லா, நமது கிராமத்து அம்பட்டன் நேரே க்ஷவரம்

செய்யாமல் போனாலும், அவனுக்குப் பயிற்சி உண்டாகும் படிச் செய்து நாம் அவனிடமே க்ஷவரம் செய்து கொள்ள வேண்டும். வெளியூர் அம்பட்டனை விரும்பக்கூடாது.

7. பயமின்மை :—எதற்கும் நடுங்காத நெஞ்சம் வேண்டும். அஃதுடையவனே பிராமணன்.

8. தீண்டல் :—தீண்டாத ஜாதி என்று ஒருவரையொருவர் அமுக்கி வைப்பது பாவம். அது பெருங்கேடு. எந்த ஜாதி யையுந் தீண்டலாம்.

9. தேச பாஷை :—தேச பாஷையிலேயே கல்வி பயில வேண்டும்.

10. தொழிற் பெருமை :—எல்லாத் தொழில்களுக்கும் ஸமான மதிப்புண்டு. ஒரு தொழில் இழிவாகவும் மற்றொரு தொழில் உயர்வாகவும் கருதலாகாது.

11. தெய்வ பக்தி ;—பொதுக் காரியங்களிலும் ராஜீய விஷயங்களிலும் பாடுபடுவோருக்குத் தெய்வ பக்தி வேண்டும்.

இதுதான் ஸ்ரீ காந்தி செய்த பிரசங்கத்தின் ஸாராம்சம். தராசு சொல்லலாயிற்று :—

"ஸ்ரீமான் காந்தி நல்ல மனுஷ்"

"அவர் சொல்லுகிற ஸத்ய விரதம், அஹிம்ஸை, உடமை மறுத்தல், பயமின்மை— இந்த நான்கும் உத்தம தர்மங்கள் —இவற்றை எல்லோரும் இயன்ற வரை பழகவேண்டும். ஆனால் ஒருவன் என்னை அடிக்கும் போது நான் அவனைத் திரும்பி அடிக்கக்கூடாதென்று சொல்லுதல் பிழை"

"சுதேசியம், ஜாதி ஸமத்வம், தேசபாஷைப் பயிற்சி, தெய்வ பக்தி இந்த நான்கையும் இன்றைக்கே பழகி சாதனை செய்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நமது தேசம் அழிந்து போய்விடும்"

"நாக்கைக் கட்டுதல், ப்ரமசரியம், இவை யிரண்டையும் செல்வர்கள், இடையிடையே அனுஷ்டித்தால் அவர்களுக்கு நன்மை யுண்டாகும். ஏழைகளுக்கு இந்த உபதேசம்

அவசியமில்லை. அவர்களுக்கு நாக்கை ஏற்கெனவே கட்டித் தான் வைத்திருக்கிறது. பிரமசரியத்தை ஜாதி முழுமைக்கும் ஸ்ரீ காந்தி தர்மமென்று உபதேசம் செய்யவில்லை. அந்த வேலை செய்தால் தேசத்தில் சீக்கிரம் மனிதரில்லாமல் போய்விடும்.

" காந்தி பதினொரு விரதம் சொன்னார். நான் பன்னிரண்டாவது விரதமொன்று சொல்லுகிறேன். அது யாதெனில் :—' எப்பாடுபட்டும் பொருள் தேடு ; இவ்வுலகத் தில் உயர்ந்த நிலைபெறு ' இப்பன்னிரண்டாவது விரதத்தை தேசமுழுதும் அனுஷ்டிக்கவேண்டும். "

## 13

சில தினங்களாக நமது தராசுக் கடையில் வியாபாரம் சரியாக நடக்கவில்லை. சந்தேக நிவ்ருத்தியே நமது வியா பாரத்தின் நோக்கம். சந்தேகங்களை யெல்லாம் தீர்த்து விடுவதென்றால் இது ஸாமான்யக் காரியமன்று. கீதையிலே பகவான் " ஸம்சயாத்மா விநச்யதி " [சந்தேகக்காரன் அழிந்து போகிறான்] என்று சொல்லுகிறார்.

எந்த முயற்சி செய்யப்போனாலும், ஆரம்பத்திலே பல வழிகள் தோன்றும். இந்த வழிகள் ஒன்றுக்கொன்று பொருந்தாமலிருக்கும். எந்த வழியை அனுசரிப்போமென்ற சந்தேக மேற்படும். நானிருக்கும் வேதபுரத்திலே ஒரு செட்டிப் பிள்ளை கையிலே சொற்ப முதல் வைத்துக்கொண்டு எந்த வியாபாரத் துறையில் இறங்கலாமென்று சென்ற ஐந்து வருஷங்களாக யோசனை செய்துகொண்டு வருகிறான். இன்னும் அவனுக்குத் தெளிவேற்படவில்லை. மணிலாக் கொட்டை வியாபாரம் தொடங்கலாமென்று நினைத்தான். ஆனால் அந்த வியாபாரம் இங்குப் பெரிய பெரிய முதலாளிகளை யெல்லாம் தூக்கியடித்து விட்டது. நாளுக்குநாள் விலை மாறுகிறது. இன்று ஒரு விலை பேசி முப்பது நாளில் ஆயிரம் மூட்டை அனுப்புகிறேனென்று சீமை வியாபாரியுடன் தந்தி மூலமாக ஒப்பந்தம் செய்து கொண்டோமானால், இடையிலே எதிர்பாராதபடி விலையேறிப்போகிறது. ஒப்பந்தத்தை நிறை வேற்ற முடியாமல், சீமை வியாபாரிக்குத் தண்டம் கொடுக்க நேரிடுகிறது. நாம இதிலே புகுந்து கையிலிருக்கும் சொற்ப முதலையும் இழக்கும்படி வந்தால் என்ன செய்வோமென்று

செட்டிப்பிள்ளை பயப்படலானான். கடைசியாகச் சென்ற வருஷத்தில், ஒரு சமயம், "என்ன வந்தாலும் சரி. ஒரு கை பார்ப்போம் ; மணிலாக் கொட்டையே தொடங்குவோம்" என்று யோசித்தான். சண்டையினால் கப்பல்களின் போக்கு வரவு சுருக்கமாய் விட்டது. சில கப்பல்கள் போய் வருகின்றன. இவற்றில் இடக்கூலி தலைக்கு மேலே போகிறது. பெரிய முதலாளிகளே இந்த வியாபாரத்தைச் சுருக்கப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆதலால் செட்டிப்பிள்ளை இந்த யோசனையை அடியோடு நிறுத்தி விட்டான். இப்படியே, துணிமணி, பீங்கான், கண்ணாடி, வெங்காயம் முதலிய எந்தவியாபாரத்தை எடுத்தாலும் அவனுக்கு ஏதேனுமொரு தடை, ஏதேனுமொரு ஆக்ஷேபம் வந்துகொண்டேயிருக்கிறது. வருஷம் ஐந்தாகிவிட்டது !

லாபாலாபங்களை யோசித்த பிறகுதான் ஒரு துறையில் இறங்க வேண்டும். ஆனால் வாழ்நாள் முழுதும் வெறுமே யோசனை செய்து கொண்டிருந்து காரியந் தொடங்காமலே காலத்தைக் கழிப்போர் எவ்வித இன்பத்தையுமறியாமல் மாய்ந்து போகிறார்கள். வியாபாரத்தில் மாத்திரமன்று, ஒருவன் யோகசாதனம்செய்யவேண்டுமென்று விரும்புகிறான். ஹடயோகம் நல்லதா, ராஜயோகம் நல்லதா, பக்தி யோகம் நல்லதா ? என்ற சந்தேக முண்டாகிறது. யோகசித்தி ஏற்பட வேண்டுமானால் குடும்பத்தாருடன் வீட்டிலிருந்து முயற்சி செய்யலாமா ? அல்லது குடும்பத்திலிருந்தே விலகிப் போய் எங்கேனும் தனியிடத்திலிருந்து பாடுபட வேண்டுமா. இப்படி எத்தனையோ கேள்விகள் பிறக்கின்றன. இங்ஙனமாக மணிலாக் கொட்டை வியாபார முதல் ஆத்ம ஞானம் வரை எந்தக் காரியத்திலும் ஆரம்பத்திலே திகைப்புகளுண்டாகும். இப்படி நான்கு வழிகளைக் காட்டி எது நல்ல வழியென்று கேட்டால் நமது தராசு சரியான வழியைக் காட்டிக்கொடுக்கும். மேலும் பொதுப்படையாக எந்த ஆராய்ச்சியிலும், கொள்கைப் பிரிவுகள் தோன்றிப் பல கக்ஷிகள் ஏற்படுவது இவ்வுலகத் தியற்கை, நமது தராசு எந்தக் கக்ஷி நியாயமென்பதைத் திட்டமாகக் கண்டுபிடித்துச் சொல்லும். இவ்வளவு நல்ல தராசாக இருந்தும் என்ன காரணத்தாலோ வியாபாரம் ரஸமாக நடக்கவில்லை.

ஆதலால் நேற்றுத் தராசினிடம் நானே கேள்விகள் போடத் தொடங்கினேன்.

" தராசே, நம்முடைய சொந்த வியாபாரம் நன்ருக நடப்பதற்கு வழியென்ன ? " என்று கேட்டேன்.

தராசு கலகலவென்று நகைத்துப் பின்வருமாறு சொல்லலாயிற்று :—

" ஆஹா, காளிதாஸா, நல்ல கேள்வி கேட்டாய். நீ இதை எப்போது கேட்கப்போகிருயென்று நான் பல தினங்களாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். உன் வசத்திலே குறுங்குறு மஹாரிஷி என்னை ஒப்புவிக்கும் போது என்ன வார்த்தை சொன்னுர். ஞாபகமிருக்கிறதா ?"

காளிதாஸன்:— " ஆம், தராசே, நன்ருக ஞாபகமிருக்கிறது. ' கேளாய் காளிதாஸா, தெய்வ ஆராய்ச்சி ஒன்றையே உனது வாழ்க்கையின் முதற்காரியமாக வைத்துக்கொள்ள வேண்டும். லௌகிகத் தொழிலொன்று சேர்ந்தால்தான் யோக சித்தி விரைவாகக் கைகூடுமாதலால், உனக்கு லௌகிகத் தொழிலாக இந்தத் தராசு வியாபாரத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறேன். இதன் மூலமாக உன்னுடைய இஹலோக தர்மங்கள் நேரே நிறைவேறும். உனக்குச் சக்தி துணை ; உன்னைச் சார்ந்த உலகத்திற்கு இந்தத் தராசு நல்ல உதவி ; இவை இரண்டையுந் தவிர, மூன்ருவது காரியத்தில் புத்தி செலுத்தக்கூடாது, உனக்கு நன்மையுண்டாகும், என்று சொன்னுர். "

தராசு :— " நீ அந்தப்படி செய்து வருகிருயா ? "

காளிதாஸன் .—" ஏதோ, என்னுல் இயன்றவரை செய்து வருகிறேன். "

தராசு :— " ஞாபகமில்லாமல் பேசுகிருய், இரண்டு மாதத்திற்கு முன் ஒரு முறை பட்டு வியாபாரம் தொடங்கலாமென்று யோசனை செய்தாய். அதற்கு முன்னே ஒரு நாள் ரத்ன வியாபாரத்திலே புத்தி செலுத்திஞய். மனிதன் செல்வந் தேடுவதற்குப் பல உபாயங்கள் செய்வது நியாயந்தான். ஆனல் அவனவன் தகுதிக்குரிய வழிகளிலே செல்ல வேண்டும். ஒரு முயற்சியைக் கைக் கொண்டால் பிறகு வெற்றியுண்டாகும் வரை எப்போதும் அதிலேயே கண்ணும் கருத்துமாகப் பாடுபடவேண்டும். பல மரங்கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்ட மாட்டான் . "

காளிதாஸன் :—" நீ சொல்வது சரிதான். ஏதோ மறதியினால் வேறு விஷயங்களில் கவனம் செலுத்தும்படி நேரிட்டது. மறுபடி தராசு வியாபாரத்தையே ஒரே உறுதியுடன் நடத்தவேண்டுமென்று மனது நிச்சயம் செய்து விட்டேன். அதை ஓங்கச் செய்வதற்கு வழி சொல்லு."

தராசு :—" இந்த வியாபாரத்தின் மஹிமையை நீயே சில சமயங்களில் மறந்துவிடுகிறாய். 'எட்டும் இரண்டும் என்ன?' நீலப் போர்வை வாங்கலாமா, பச்சைப் போர்வை வாங்கலாமா, என்பவைபோன்ற அற்பக் கேள்விகள் கேட்போரைச் சில சமயங்களில் அழைத்துக்கொண்டு வருகிறாய். இப்படி அற்ப விசாரணைக்கெல்லாம் இடங் கொடுத்தால், நமது கடையின் பெயர் கெட்டுப் போகாதா? மேலும் அறிவுத் தராசு போட்டு, உலக வாழ்க்கையின் விதிகளையும், கிரமங்களையும் நிறுத்துப் பார்ப்பதே உனது தொழிலென்பதை மறந்து, வேறு முயற்சிகளிலே சிந்தை செலுத்துகிறாய். புலி பசித்தால் புல்லைத் தின்னுமா? வயிர வியாபாரி ஒரு மாதம் நல்ல வியாபாரமில்லாவிட்டால் மொச்சைக் கொட்டைச் சுண்டல் விற்கப்போவானோ? காளிதாஸா, கவனத்துடன் கேள் நம்முடைய வியாபாரம் அருமையானது. இதிலே ஜயம் பெறவேண்டுமானால் ஸாமான்ய உபாயமொன்றுவும் போதாது. செய்கைக்குத் தகுந்தபடி உபாயம்; இதை மறந்துவிடலாகாது. உனக்கு வேண்டியதெல்லாம் இரண்டே நெறி; தெய்வ பக்தி, பொறுமை. குறுங்குறு மஹாரிஷி வாக்கியத்தைத் தவறவிடாதே. லௌகிகச் செய்கை நேரும்போது அதை முழுத் திறமையுடன் செய். மற்ற நேரங்களில் பராசக்தியைத் தியானம் செய்து கொண்டிரு. நமது வியாபாரம் மேலான நிலைமைக்கு வரும்."

காளிதாஸன் :— "எப்போது?"

தராசு :— "பொறு. விரைவிலே நன்மை காண்பாய்."

## 14

தராசுக் கடையை நெடு நாளாக மூடிவைத்து விட்டேன். விஷயம் பிறருக்கு ஞாபகத்திலிருக்குமோ, மறந்து போயிருக்குமோ என்ற ஸந்தேகத்தால் எழுத முடியவில்லை. தராசுக்கடை என்பதென்ன? பத்திரிகை படிப்பார் சில

ளுக்கு ஞாபகமிருக்கலாம். ஞாபகம் இல்லாவிட்டாலும் பெரிதில்லை. அந்தக் கடையை மாற்றிவிட்டேன்; தராசு: என்ற மகுடமிட்டு இனிமேல் எழுதப்படும் வினாவிடைகளில் கதைக்கட்டு சுருங்கும்; சொல் நேர்மைப்படும்.

தராசு என்பது தர்க்க சித்தாந்தம். ஒரு கட்சி சொல்லி அதற்குப் ப்ரதி கக்ஷி சொல்லி அங்குத் தீர்ப்புக் காணுவதே தராசின் நோக்கம்.

என்னுடைய ஸ்நேஹிதர் வேணு முதலியார் என்றொருவர் உண்டு. அவர் வைஷ்ணவர். அவர் வாயினால் பேசுவதே கிடையாது. ஆஹார வ்யவஹாரங்கள் எல்லாம் குறிகளால் நடத்தி வருகிறார். அவர் தமிழில் ஒரு வ்யாஸம் "ஊமைப் பேச்சு" என்ற மகுடத்துடன் எழுதி வெளியிட்டிருக்கிறார். ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பு அந்த நூல் அச்சிடப் பட்டது. ஸமீபத்தில் நான் அவரிடம் விசாரணை செய்தபோது ஒரு பிரதிகூட மிச்சம் இல்லை என்று சொன்னார்.

அந்தப் புஸ்தகத்தின் கருத்து எப்படி என்றால் :—

"ஒரு மனிதன் தனது மனக் கருத்தை வெளிப்படச் சொல்ல வேண்டும் என்றால், அதற்குப் பாஷை அவசியம் இல்லை. பாஷை அவசியம் என்று ஸாதாரண ஜனங்கள் நினைக்கிறார்கள். அது பிழை."

"பாஷையானது மனதின் இன்றியமையாத கருவி அன்று. வண்டி ஓடும்போது சக்கரம் கிச் சென்று கத்துவது போல், மனம் சலிக்கும் போது நாக்கு தன் வசம் இன்றிப் படைத்துக் கொள்கிறது.

"பல வேறு நாடுகளில் பல வேறு பாஷையாக ஏற்பட்ட காரணம் என்னவென்றால், அது கால தேச வர்த்தமானங்களும் ஜனங்களுக்கும் உள்ள தொடர்களின் வேற்றுமையாலே ஏற்படுகிறது.

"பக்ஷிகளின் மனக் கிளர்ச்சிக்குத் தக்கபடி இயற்கையில் அவற்றின் வாய்க் கருவி கூவுகின்றது; மிருகங்களிலும் அங்ஙனமே காண்கிறோம். அவையெல்லாம் ஒரு பாஷை பேசவேண்டும் என்று கற்பிதம் பண்ணிக்கொண்டு இலக்கணம் போட்டுப் பேசவில்லை. பசி வந்தால் குஞ்சு இன்ன வகை கத்தும் என்ற நியதி இருக்கிறது. அதைத் தாய்

அறிந்து கொள்ளுகிறது. நாக்கே இல்லாவிட்டாலும் மனிதர் பரஸ்பரம் சம்பாஷணை அதாவது வியாபார ஸம்பந்தங்கள் நடத்திக்கொள்ளலாம். பேசத் தெரியாத ஜந்துக்கள் எத்தனையோ கூட்டம் போட்டுக் குடித்தனம் பண்ணி வருகின்றன. மனிதருக்குள்ளே ஊமையின் கருத்தை அவன் எப்படியேனும் பிறருக்குத் தெரியும்படிச் செய்து விடுகிறான்."

இங்ஙனம் பலவித நியாயங்கள் காட்டி வேணு முதலியார் தமது நூலில் மனிதனுக்குப் பாஷையே மிகை என்று ஸ்தாபனம் செய்திருக்கிறார். ஆனால் மேற்படி விதியை அவர் தமது நடையில் பழக இல்லை. அவர் எப்போதும் சளசள என்று வாயினால் பேசா விட்டாலும் எழுதிக் குவிக்கிறார். "எழுத்து பாஷையின் குறிதானே, வேணு முதலியாரே? நீர் பாஷையே மிகை என்று சொல்லிவிட்டு ஓயாமல் எழுதி எழுதிக் கொட்டுகிறீரே ?" என்று அவரிடத்தில் கேட்டால், அவர் "பேச்சே துன்பம் ; எழுத்து சுகம் என்று எழுதிக் காட்டுகிறார். இன்னும் ஒரு வேடிக்கை ; 'வாயினால் பேசக்கூடாது என்று விரதம் வைத்துக் கொண்டு வேணு முதலியார் பாட்டுப் பாடுவதில் சலிப்பது கிடையாது. இவரும் நமது வேதாந்த சிரோமணி ராமராயர் என்ற மித்திரரும் சில தினங்களின் முன்பு (சந்திர கிரஹணம் பிடித்த தினத்தின் மாலையில்) என்னைக் கடற்கரையில் பார்த்தார்கள்.

"தராசுக்கடை கட்டியாய்விட்டது போல் இருக்கிறதே" என்று ராமராயர் சொன்னார். "இங்கே செய்வீர், இன்னே செய்வீர்" என்று வேணு முதலியார் காம்போதி ராகத்தில் பாடினார். "தராசுக்கடையை இங்கே இப்போது திறக்கவேண்டும், என்ற கருத்துடன் வேணு முதலி பாடுகிறார்" என்று ராமராயர் வ்யாக்யானம் பண்ணினார்.

"திறந்தோம்" என்றேன்.

ராமராயர் சொல்லுகிறார் :—"நான் ஒரு கக்ஷி சொல்லுவேன், எதிர்க் 'கக்ஷியை வேணு முதலியார் பாட்டிலே பாடிக் காட்டவேண்டும். காளிதாஸர் தீர்ப்புச் சொல்ல வேண்டும். இதுதான் தராசுக்கடை" என்றார்.

" ஸம்மதம் " என்றேன். வேணு முதலியாரும் தலையை அசைத்தார்.

ராமராயர் சொல்லுகிறார் :—" அனிபெஸண்ட் அம்மை 'தியாஸபி' நடத்தினதெல்லாம் ஸ்வராஜ்ய வேலைக்கு அடிப்படையென்று நம்புகிறேன்."

வேணு முதலியார் பாடுகிறார்.

" நந்தவனத்திலோ ராண்டி ; அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி ; அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி."

ராமராயர்.—" அன்ய ஜாதியிலே பிறந்த போதிலும் நான் அனிபெஸன்டை ஹிந்துவாகவே பாவிக்கிறேன்,"

வேணு முதலியார்.—

" தன்னைத்தான் ஆளவேண்டும்
தன்னைத்தான் அறியவேண்டும்
தன்னைத்தான் காக்கவேண்டும்
தன்னைத்தான் உயர்த்தவேண்டும்."

ராமராயர்:—" ஸ்வராஜ்யம் என்பது விபரீதம் அன்று. அதை ஆங்கிலர் கொண்டாடுவது ஆச்சர்யமில்லை. ஆங்கில ஸ்திரீகளும் புருஷர்களும் நம்மிடம் நேசம் காட்டும்போது நாம் ஸந்தேஹப்படுவது நியாயமில்லை. ஆங்கிலேயர்களில் நல்லவர்களே இருக்கக் கூடாதா? எல்லாரும் மனுஷ்ய ஜாதிதானே? ஹிந்துக்களுக்கு ஸ்வராஜ்யம் உடன்பிறந்த உரிமை என்பதை ஒப்புக்கொள்ளும் பிறரை நாம் மித்திரராகவே கொள்ளவேண்டும். இங்கிலாந்திலுள்ள ராஜ வம்சத்தாருக்கு நாம் ஸ்வராஜ்யம் பெறுவதனாலே எவ்வித மான நஷ்டமும் கிடையாது. பொது ஜனங்களுக்கும் அப்படியே. பார்லிமெண்டாருக்கும் அப்படியே. நம்முடைய உபத்ரவம் இல்லாமலிருந்தால் அவர்கள் உள்நாட்டு விஷயங் களை அதிக சிரத்தையுடன் கவனிக்க இடம் உண்டாகும்.

சிற்சில வியாபாரிகளுக்கும் சில உத்தியோகஸ்தர்களுக்கும் தாம் ஸ்வராஜ்யம் செலுத்துவதனாலே வரும்படி குறையும், ஆதலால் இந்த வியாபாரிகளின் கூட்டத்தையும் உத்யோகக் கூட்டத்தையும் சேராத ஆங்கிலேயர்களுக்கு நம்மிடம் அபிமானம் ஏற்படுதல் அஸாத்யமன்று. அது நம்பத் தக்கதாகும் " என்றார்.

வேணு முதலியார் பாடுகிறார்—

" நல்ல விளக்கிருந்தாலும் கண் வேண்டும், பெண்ணே
நாலு துணையிருந்தாலும் சுய புத்தி வேண்டும்;
வல்லவர்க்கு மித்திரர்கள் பலருண்டு, பெண்ணே;
வலிமையில்லார் தமக்குலகில் துணையேது, பெண்ணே?"

ராமராயர் சொல்லுகிறார் :—" அதிகாரிகள் அனிபெஸண்ட் சொல்வதைத் தடுக்க முடியாது. லோகத்தின் அபவாதத்துக்குப் பயப்படுவார்கள். அனிபெஸண்ட் சீக்கிரம் விடுதலை பெறுவாள். அவளைப் பிடித்து வைத்ததனாலே இப்போது உலகமெங்கும் இந்தியாவின் நிலைமை தெரியக் காரணம் ஏற்படும், ஆங்கில ராஜாங்கத்துக்கு விரோதமான ராஜத் துரோகம் செய்கிறாள் என்ற வார்த்தையை அனிபெஸண்ட் விஷயத்தில் எவனும் சொல்லத் துணியமாட்டான். ' ஸ்வராஜ்யம் கேட்பது ராஜத்துரோகம் இல்லை ' என்பதை இங்கிலாந்து ஜனங்களும் ராஜாவும் தெரிந்து கொள்வதற்கு அனிபெஸண்ட் செய்த காரியம் உதவியாயிற்று.

வேணு முதலியார் பாடுகிறார் : —

" சொல்லால் முழக்கிலோ
சுகமில்லை மவுனியாய்ச்
சும்மா இருக்க அருள்வாய்,
சுத்த நிர்க்குணமான பர தெய்வமே
பரஞ்சோதியே சுக வாரியே."

அப்போது ராமராயர் என்னை நோக்கி, " காளிதாஸரே, உம்முடைய தீர்ப்பென்ன? தராசின் தீர்ப்பைச் சொல்லும்" என்று கேட்டார்.

அதற்கு நான்

" நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல
தன்றே மறப்பது நன்று."

“ எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”

“ தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார்
தோன்றலின் தோன்றுமை நன்று.”

“ வேண்டிய வேண்டியாங் கெய்தலான், செய்தவம்
ஈண்டு முயலப் படும்.”

என்ற நாலு குறளையும் சொன்னேன்.

“ தராசின் கருத்தை நீர் நேரே சொல்லாதபடி, வேணு முதலியைப் போலே பாட்டில் புகுந்த காரணம் என்ன?” என்று ராமராயர் கேட்டார்.

“ தராசு ராஜாங்க விஷயத்தைக் கவனியாது. சண்டை முடிகிற வரையிலும் ராஜாங்க விஷயமான வார்த்தை சொல்லுவதிலே தராசுக்கு அதிக ருசி ஏற்படாது. சண்டை பெரிது; நம்முடைய கடை ஸாதாரணம்; ராஜாங்க விசாரணைகளோ மிகவும் கடுமை. ஆதலால் அனிபெஸண்டின் ராஜாங்கக் கொள்கையை நாம் நிர்ணயிக்க இடமில்லாவிடினும், அவள் சரியான ஹிந்து. ஆதலால் நம்முடைய ஸஹோதரி என்பதை ஒப்புக்கொள்கிறோம். ஹிந்து மதத்தை அவள் போற்றுகிறாள். அதனால் அவளுடைய ஜன்மம் கடைத்தேறும். வேதம் என்று சொன்னால் பாவம் போகும். பகவத் கீதையை நம்புகிறவர்கள் யாராயினும் அவர்கள் நமக்கு ஸஹோதரரே. ‘ தியாஸபி ’ ‘ ஹோம் ரூல் ’—இரண்டுக்கும் சம்பந்தமில்லை. அது வேறு, இது வேறு. ஹிந்துக்கள் அனி பெஸண்டுக்கு நன்றி கூற வேண்டும்; தமக்குத் தாமே உதவி செய்து கொள்ள வேண்டும்.”

## சித்தக்கடல்

---

### யோகம்

**ஜூலை 1, 1915**

**கா**லை கண் விழிக்கும் பொழுதே “ பணம் ” என்ற ஞாபகம். எழுந்து Bourgoine வீட்டுக்குப் போதல். போகையில் மனக்கிளர்ச்சி. இடைவழியில் தருக்கன் அவனுக்கு

வழி விட்டதைப் பற்றி மன நோதல். மரண பயம். அதன் மடமையுணர்ச்சி. கடற் கரையில் தனியேயிருத்தல். அங்கு சாரர். மன வெறுப்பு. உதாஸீனம்.

சே 'மாலை' என்ற வார்த்தை—ஒரு பொய்.

*　　　*　　　*

இந்த மனமாகிய கடலை வென்று விடுவேன். பல நாளாக இதை வெல்ல முயன்று வருகிறேன். இந்த மனத்தை வெல்ல நான் படும்பாடு தேவர்களுக்குத் தெரியும். இதிலே ப்ராண பயம், வியாதி பயம், தெய்வ பக்திக் குறைவு, கர்வம், மமதை, சோர்வு முதலிய ஸம்ஸ்காரங்கள் மிகுதிப்பட்டிருக்கின்றன. இவற்றை ஒழித்து விட வேண்டும்.

சலோ! தெய்வ முண்டு. அது அறிவுமயம். அந்த அறிவுக் கடலில் நான் என்பது ஒரு திவலை. அதற் கும் எனக்கும் ஒரு குழாய் வைத்திருக்கிறது. அந்தக் குழாயை அஹங்காரம் என்ற மாசு மூடியிருக்கிறது. இந்த அஹங்காரத்தை நீக்கிவிட்டால் தெய்வ சக்தியும் தெய்வ ஞானமும் எனக்கு உண்டாகும்.

*　　　*　　　*

புகையிலைச் சாற்றினால் தலை கிறுக்குகிறது. இருபது லக்ஷம் தரம் புகையிலையை நிறுத்தி விடுவதாக ப்ரதிக்ஞை செய்திருக்கிறேன். இதுவரை கை கூடவில்லை. ஸம்ஸ்காரம் எத்தனை பெரிய விலங்கு பார்த்தாயா? மகனே, ஸம்ஸ் காரங்களைச் சக்தியினால் வென்றுவிடு.

*　　　*　　　*

உடல் படுத்துக் கொண்டது. உடலை வைரம்போல உறுதி உடையதாகவும், பக்ஷிகளைப் போல லாகவமுடையதாகவும், சிங்கத்தைப்போல வலியுடையதாகவும் செய்யவேணும். உடல் வசப்படாவிட்டால் இந்த உலகத்தில் வாழ்க்கை பெருந் துன்பந்தான். உடம்பே, எழுந்துட்காரு. உடம்பு எழுந்து விட்டது. முதுகு கூனுகிறது. அந்த வழக்கத்தைத் தொலைத்து விடவேண்டும்.

*　　　*　　　*

வயிறு வேதனை செய்கிறது, உஷ்ண மிகுதியால். நோயற்றிருப்பதற்கு சக்தியை ஓயாமல் வேண்டிக்கொள். நோயில்லையென்று மனதை உறுதிசெய். மனம்போல உடல்.

மகனே, உடல் வெற்றி கொள். அது எப்பொழுதும் நீ சொன்னபடி கேட்க வேண்டும்; அது சொன்னபடி நீ கேட்கலாகாது. அது மிருகம். நீ தேவன். அது யந்திரம் நீ யந்திரி.

## ஜுலை 2

வியாதி பயம். சோம்பர். இன்று காலைப் பொழுதையும் இவை வந்து வீணாக்கிவிட்டன. செ. வழக்கம்போல் வந்தான். பரமேஸ்வரி. மகாசக்தீ—உன்னிடத்தில் அமரத் தன்மை கேட்கிறேன். எனை மனக்கவலையிலிருந்து விடுவிக்க வேண்டும். உன்னை எப்போதும் சிந்தனை செய்துகொண்டும், உனது மஹா அற்புதமான உலகத்தை எப்போதும் கண்டு தீரா மகிழ்ச்சியடைந்து கொண்டும், தர்மங்களை இடைவிடாமல் நடத்திக்கொண்டும் வருந் திறமை எனக்கு அருள் செய்ய வேண்டும்.

மனமாகிய குரங்கு செய்வதையெல்லாம் எழுதிக்கொண்டு போனால் காலக் கிரமத்தில் அதை வசப்படுத்திவிடலாமென்பது என்னுடைய கருத்து. ஒன்றை அடக்கு முன்பாக அதன் இயல்புகளையெல்லாம் நாம் அறிந்துகொள்ள வேண்டும். நம்மால் நன்றாக அறியப்படாததை நாம் வசப்படுத்த முடியாது. சித்தத்தை வசப்படுத்துமுன் சித்தத்தை அறியவேண்டும். அதன் சலனங்களை ஓயாமல் கவனித்து எழுதிக் கொண்டு வந்தால் அதன் தன்மை முழுவதையும் அறிய ஹேதுவுண்டாகுமென்பது என்னுடைய தீர்மானம்.

பராசக்தீ, ஒவ்வொரு கணமும் எனது சித்தம் பலிக்கும் முறைகளை அப்போதப்போது பொய்மையில்லாமலும், வஞ்சகமில்லாமலும் எழுதுவதற்கு எனக்குத் தைரியம் கொடுக்க வேண்டும்.

நாம் எழுதுவதைப் பிறர் பார்க்க நேரிடுமென்று கருதி, துர்ப்பலங்களை எழுத லஜ்ஜை உண்டாகிறது. பராசக்தீ, என் மனதில் அந்த லஜ்ஜையை நீக்கிவிடவேண்டும்.

பாரதியினுடைய மன நடைகளை நான் எழுதப் போகிறேன். நான் வேறு, அவன் வேறு, நான் தூய அறிவு. அவன் ஆணவத்திலே கட்டுண்ட சிறு ஜந்து. அவனை எனக்கு வசப் படுத்தி நேராக்கப்போகிறேன். அவனுடைய குறைகளை எழுத அவன் லஜ்ஜைப் படுகிறான். அந்த லஜ்ஜையை நான் பொருட்டாக்காதபடி அருள் செய்யவேண்டும்.

எழுது. பராசக்தியின் புகழ்ச்சிகளை எழுது. அடா! பாரதி. அதைக் காட்டிலும் உயர்ந்த தொழில் இவ்வுலகத்தில் வேறொன்றுமில்லை. பராசக்தி வாழ்க. அவள் இந்த அகில வுலகத்துக்கு ஆதாரம். அகிலம் நமக்கு மூன்று வகையாகத் தெரிகிறது.—ஜடம், உயிர், அறிவு—என. இவை தம்முட் கலந்தன. அறிவுலகத்திலே பல படிகள் இருப்பதாக யோகிகள் நிச்சயித்திருக்கிறார்கள்.

இவற்றுள் ஜடத்துக்கு உயிரும், உயிருக்கு அறிவும் காரணமா மென்று யோகிகள் சொல்லுகிறார்கள்.

இவை யனைத்திற்கும் மூலப் பொருளாய், இவையனைத்தை யும் தனது உறுப்புக்களாகக் கொண்டு, இவை யனைத்தும் தானாய், இவை யனைத்தின் உயிர் நிலையாக ஒரு பொருள் உண்டு. அதனை மஹாசக்தி என்கிறோம். அதை இடை விடா மல் த்யானம் செய்வதால் உனது குறைகளெல்லாம் நீங்கும். பெரிய பொருளை இடைவிடாது பாவனை செய்யும் அறிவுதான் பெருமையடைகிறது.

சித்தம் ஒரு கண்ணாடி. ஓயாமல் பராசக்தியை த்யானம் செய்யுமானால் அவளுடைய சாயை இதிலே படும். அதிலே சுகமுண்டு.

* * * * * *

பத்திரிகைகளுக்கு வியாஸங்கள் எழுதவேண்டும். கடிதங்கள் எழுதவேண்டும். சோம்பர் உதவாது. வெற்றிலை போடுவதைக் குறைக்கவேணும். பணமில்லாதது பற்றிக் கவலைப்படலாமா? மூடா, மூடா, மூடா, நாம் சுத்த அறிவல்லவா? உலக வ்யவஹாரங்களை நாம் வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருக்கவேணும். ஆணவக்கட்டிலே அகப் பட்ட சித்தத்தின் விருப்பப்படி இந்த உலகில் ஏதாவது நடக் கிறதா? சாகாத ஜந்து உண்டா? எல்லா ஜந்துக்களும்

ஓயாமல் உயிரைக் காக்கின்றன. அதில் பயனுண்டா? உயிரே ஜீவனுடைய வசமில்லாதபோது வேறெதைப் பற்றிக் கவலைப் படுவதிலேயும் என்ன பயன்? பராசக்தியின் கட்டளைப்படி உலகம் நடக்கிறது. உனக்கு வேண்டிய இன்பங்களை அவளிடம் வேண்டிக்கொள். அவள் கொடுப்பதைப் பெற்றுக்கொண்டு சுகமாக இரு.

எப்போதும் பாடுபடு. எப்போதும் உழைத்துக் கொண்டிரு. உழைப்பிலே சுகமிருக்கிறது. வறுமை, நோவு முதலிய குட்டிப்பேய்களெல்லாம் உழைப்பைக் கண்டவுடன் ஓடிப் போய்விடும்.

“உத்யோகினம் புருஷஸிம்ஹ முபைதி லக்ஷ்மீ:”

பராசக்தியை த்யானம் செய்துகொண்டேயிருந்தால் எல்லாத் துன்பங்களும் நீங்கி விடும். உடலும் உயிரும் ஒளி பெற்று வாழும். நூறு வயதுக்குக் குறைவில்லை. இது ஸத்யம். நூறுவயது நிச்சயமாக வாழ்வாய். மனிதனுக்கு நூறாண்டு இயற்கையிலே ஏற்பட்டது. இயற்கை தவறாமல், மூடக் கவலைகளில்லாம லிருந்தால் நூறு வயது அவசியம் வாழலாம். மகனே, அச்சத்தைப் போக்கு.

மண்ணையும், காற்றையும், கடலையும் எத்தனை யுகங்கள் ஒரே வடிவத்தில் வைத்துக் காப்பாற்றுகிறாய்? பராசக்தி, எனது கருவி கரணங்களிலே நீ பரிபூர்ணமாக ஸந்நிதி கொண்டு என்னையும் அங்ஙனமே காக்கவேண்டும்.

இன்ப மில்லையா?

பராசக்தி. இந்த உலகத்தின் ஆத்மா நீ.

உனக்கு அறிவில்லையா? உனக்குக் காது கேட்காதா? நாள்தோறும் உன்மீது பாட்டுப் பாடுகிறேன். நான் கேட்கும் வரங்களை யெல்லாம் கொடுத்துவிடக்கூடாதா?

முதலாவது. எனக்கு என்மீது வெற்றி வரவேண்டும். குழந்தைக்கு ஜ்வரம் வந்தது. நினது திருவருளால் குணமாய் விட்டது. இரண்டு மாத காலம் இரவும் பகலுமாக நானும் செல்லம்மாளும் புழுத்துடிப்பதுபோலத்துடித்தோம். ஊண் நேரே செல்லவில்லை—இருவருக்கும். உறக்கம் நேரே

வரவில்லை—இருவருக்கும். எப்போதும் சஞ்சலம். பயம், பயம், பயம்! சக்தி; உன்னை நம்பித்தானிருநதோம். நீ கடைசியாகக் காப்பாற்றிஞய். உன்னை வாழ்த்துகிறேன்.

கடன்காரர் தொல்லையும் அத்துடன் வந்து கலந்தது. வைத்தியனுக்குக் கொடுக்கப் பணமில்லை. குழப்பம் குழப்பம்—தீராத குழப்பம்! எத்தனை நாட்கள்! எத்தனை மாதங்கள்! எத்தனை வருஷங்கள்!

பராசக்தீ, ஓயாமல் கவிதை எழுதிக்கொண்டிருக்கும்படி திருவருள் செய்யமாட்டாயா? கடன்களெல்லாம் தீர்ந்து, தொல்லை யில்லாதபடி என் குடும்பத்தாரும் என்னைச் சார்ந்த பிறரும் வாழ்ந்திருக்க, நான் எப்போதும் உன் புகழை ஆயிர விதமான புதிய புதிய பாட்டுகளில் அமைக்க விரும்புகிறேன். உலகத்தில் இதுவரை எங்குமில்லாதபடி அற்புதமான ஒளிச் சிறப்பும், பொருட் பெருமையும் உடைய பாட்டொன்று என் வாயிலே தோன்றும்படிச் செய்யவேண்டும்.

தாயே—என்னைக் கடன்காரர் ஓயாமல் வேதனைப் படுத்திக் கொண்டிருந்தால், நான் அரிசிக்கும், உப்புக்கும் யோசனை செய்து கொண்டிருந்தால்—உன்னை எப்படிப் பாடுவேன்?

மனைவியைப் பிரிந்து செல்லும்படிச் சொல்வதில் பயனில்லை. அவளும் உனது சரணையே நம்பி, என்னுடன் எப்போதும் வாழ்ந்துகொண்டு, உனது தொழும்பிலே கிடைக்கும் புகழில் பங்கு பெற்று மேன்மையுற விரும்புகிறாள். இயன்றவரை உண்மையோடுதான் இருக்கிறாள். அவளையும் நீ ஸம்ரக்ஷணை செய்யவேண்டும்.

அவளுக்கு நோயின்மை, கல்வி, கவலை யின்மை, பக்தி, ஞானம் முதலிய சோபனங்களெல்லாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

குழந்தையை உனது குழந்தையாகக் கருதி, இவ்வுலகத்தில் நீடித்துப் புகழுடன் வாழும்படித் திருவருள் செய்ய வேண்டும். காசியிலிருக்கும் குழந்தையையும் நீதான் காப்பாற்ற வேண்டும்.

எனது குடும்ப பாரமெல்லாம் உன்னைச் சேர்ந்தது. உன்னைப் புகழ்ச்சி புரியும் தொழில் என்னைச் சேர்ந்தது. தாயே, ஸம்மதந்தானா ?

மஹா சக்தீ—என்னுள்ளத்தில் எப்போதும் வற்றாத கவிதை யூற்று ஏற்படுத்திக் கொடு.

ஓயாமல் வியாதி பயம் கொண்டு உளைகின்ற நெஞ்சமே ! தூ ! தூ ! தூ ! கோழை !

புகையிலை வழக்கம் தொலைந்துவிட்டது. பராசக்தியின் அருளால். இனிக் 'கஸரத்' வழக்கம் ஏற்படவேணும், பராசக்தியின் அருளால். தோள் விம்மி வயிரம் போலாக வேணும். நெஞ்சு விரிந்து, திரண்டு, வலிமையுடையதாக வேணும். இரத்தம் மாசு தீர்ந்து, நோயின்றி நன்றாக ஓடி, உடலை நன்கு காத்துக் கொண்டிருக்கவேணும்—பராசக்தியின் அருளால்.

செட்டி பணத்துக்கு எத்தனை நாள் பொய் சொல்லுகிறது ? பொய் வாயிதா, பொய் வாயிதா, பொய் வாயிதா—தினம் இந்தக் கொடுமைதானா ? சீச்சீ !

பராசக்தி—உன்னை நான் நம்புவதை முற்றிலும் விட்டு நிச்சயமாக நாஸ்திகனாய் விடுவேன். நீ என்னை அற்பத் தொல்லைகளுக்கு உட்படுத்திக் கொண்டேயிருந்தால்.

மஹாசக்தி— நீ யிருப்பதை எவன் கண்டான் ? உனக்கு அறிவுண்டென்பதை எவன் கண்டான் ? இந்த உலகம்—சரி, சரி, இப்போது உன்னை வையமாட்டேன். என்னைக் காப்பாற்று. உன்னைப் போற்றுகிறேன்.

பிறருக்கு நான் தீங்கு நினையாதபடி நீ அருள் புரிந்தால் நல்லது. துஷ்டர்களைக்கூட நீ தண்டனை செய்துகொள். எனக்கு அதிலே ஸந்தோஷமில்லை. எனக்குப் பிறர் செய்யும் தீங்குகளை நீ தவிர்க்க வேண்டும். நான் உன்னையே சரணடைந்திருக்கிறேன்.

சொல்லு ! மனமே, சொல்லு, பராசக்தி

வெல்க ! பராசக்தி வெல்க.

---

# STRAY THOUGHT

The wise play for victory, but feel no pain a defeat.
"L art pour l'art"—A play for its own sake.

## சில சங்கற்பங்கள்

இயன்றவரை தமிழே பேசுவேன், தமிழே எழுதுவேன். சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன். எப்போதும் பராசக்தி—முழு உலகின் முதற்பொருள்—அதனையே தியானஞ் செய்துகொண்டிருக்க முயல்வேன். அதனைக் குறித்தே ஓயாமல் எழுதிக்கொண்டிருக்க முயல்வேன்.

*　　　*　　　*

பொழுது வீணே கழிய இடங் கொடேன். லௌகிக காரியங்களை ஊக்கத்துடனும், மகிழ்ச்சியுடனும், அவை தோன்றும் பொழுதே பிழையறச் செய்து முடிக்கப் பழகுவேன்.

உடலை நல்ல காற்றாலும், இயன்றவரை சுலீப்பதாலும் தூய்மையுறச் செய்வேன்.

மறைத்தும் தற்புகழ்ச்சி பாராட்டுதல் விரும்பேன்.

மூடரின் உள்ளத்தில் என்னைப் பற்றிய பொய் மதிப்புண்டாக இடங் கொடேன்.

ஸர்வ சக்தியுடைய பரம்பொருளைத் தியானத்தால் என்னுள்ளே புகச்செய்து எனது தொழில்களெல்லாம் தேவர்களின் தொழில்போல் இயலுமாறு சூழ்வேன்.

பொய்மை, இரட்டுற மொழிதல், நயவஞ்சனை, நடிப்பு, இவற்றால் பொருளீட்டிப் பிழைத்தல் நாய்ப் பிழைப்பென்று கொள்வேன்.

இடையறாத தொழில் புரிந்து இவ்வுலகப் பெருமைகள் பெற முயல்வேன். இயலாவிடின் விதிவசமென்று மகிழ்ச்சியோடிருப்பேன்.

எப்போதும் மலர்ந்த முகம், இனிய சொல், தெளிந்த சித்தம், இவற்றோடிருப்பேன். ஓம்.

* * *

**ஓர் நல்ல கதை**

பக்தா—இதுதான் பூலோகமா ?

* * *

சங்கரச் செட்டியாரிடம் கேட்டவை :—

எலி பழைய எலியின் பாதையிலேயே வந்து பொறியில் விழும்.

நெடுந் தொலையினின்றும், ஈ காற்றுச் சுழற்சியின் வழியே வளைந்து வளைந்து வந்து உணவுப் பொருளில் விழும்.

சிலந்திப் பூச்சி முதலிலே நூல் செய்து, அதைக் காற்றில் விட்டு விடும். அந்த நூல் காற்றின் செய்கையால் எதிர்ப் புறத்திலே போய் ஒட்டிக்கொள்ளும். பூச்சி அதை அசைத்துப் பார்த்துப் பற்றியிருப்பது தெரிந்து கொண்டு, அதன் பிறகுதான் நூல்மீது நடந்து செல்லும். அப்பால் வலை பின்னும்.

* * *

பழைய பத்திரிகைகளிலிருந்து தக்க விஷயங்களெடுத்துக் கோத்தால் நல்ல வசன நூல் கட்டலாம்.

* * *

The Brahmin who cooked in a fisherman's house :— This despicable orthodoxy is willing to suffer a social inferiority, but wants a theological and ritual superiority, I suppose !

* * *

Not do what all I can, but do what all I ought.

முகத்தின் ஒளி :—What it means—I must write a long essay on this.

* * *

The young man's tune—Bhairava—Hindustani தோடி. Majority of love songs in N. India are in that tune.

The meaning of that raga:—Love and Despair. Despair reaches its depth in the பிரதிமத்தியமம்.

I must compose a song in Bhairava—in praise of that Raga.

* * *

பழைய கற்பனைகளைத் திரும்பிச் சொல்லுதல். தமிழ் நாடு சீர் கெட்டதின் காரணம். உவமைகள்.

சித்திர சாஸ்திரம், அவனீந்திரநாத டாகுர், தமிழ்க் கவிதை உவமைகளின் கருத்தை மறந்த விநோதம்.

* * *

தெலுங்கும், தமிழும் (ழ, ட)

| தமிழ் | | தெலுங்கு |
|---|---|---|
| நிழல் | — | நீட |
| ஏழு | — | ஏடு |
| நாள் | — | நாடு |
| கோழி | — | கோடி |

* * *

I must write a poem on "Darkness."

* * *

தீய கர்மங்களின் பயன் விடாது. இப்பிறப்பிலே பனி போலத் தொடரும். ஆதலால் இன்பத்தை விரும்புவோன் தீச்செயல்கள் செய்யா தொழிக. தீய சிந்தனைகளும் தீச் செயல்களே யாம்.

* * *

(To be revised)

The country man's comment on seeing the train running—பார்த்தால் மலைப்பு—ஏறினால் அலுப்பு.

*    *    *

ராஜாவுக்கு லஷ்மி மனைவி

செட்டிக்கு லக்ஷ்மி தாய்

The novelist can never give a true and complete reproduction of a real sentimental conversation.

Four women and an idle young fellow—subject.

An old domestic grievance.

Can we utilise a sound machine ?

For an essay :—

Formalisation in Art, in Grammar, in Sruthis, in Literature. Is it possible in music ?

The revolt of Europe against formalisation—The Renaissance.

The highest talent required for formalising—Shankaracharya.

*    *    *

Result, decay Make provision for the future. The forces of decay.

Adaytation to environments. சித்திர சாஸ்திரம்—அளவு கணக்கு. The danger of a copyist's mistake.

*    *    *

ஒளியிலும் ஒலியிலும் ஸ்தாயிகள்.

ஸ்வர ஸம்பந்தங்கள். புலங்களின் வரம்பு நிலை.

ப்ரதிபா, வரம்பற்றது.

ப்ரதிபா ஆத்மாவின் விழி.

*    *    *

சுக்கிராசார்யன், போர் முதல் சிற்பம் வரை அனைத்தையும் வகுத்தது.

*       *       *

Avocat, pessons an Delage !—Racin

*       *       *

ஐயங்கார் " ஆஹ்நிகம், சௌச விதி :"—பெரிய புஸ்தகம்.

*       *       *

• absolute need of physical exercise.

*       *       *